கல்விச் சிறப்பிதழ்

# தமிழரசு

1-6-1979 50 காசு.





## சிறைச் சீர்திருத்த
## ஆணைக் குழுவின் அறிக்கை!

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிக்கை, 28.4.79 அன்று அக் குழுவின் தலைவர் பாட்னா உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு ஆர். எல். நரசிம்மன் அவர்களால் மாண்புமிகு தமிழக முதல்வரிடம் அளிக்கப்பட்டது.

மூன்று தொகுப்புக்களைக் கொண்ட தனது அறிக்கையில் சிறைச் சீர்திருதத ஆணைக்குழு மொத்தம் 178 பரிந்துரைகளை வழங்கியுள்ளது மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு நாராயணசாமி அவர்களின் பொது அறிவுரைக்கிணங்க இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகளை நடத்துவது பற்றிய முதல்வரின் தாராள மனப்பான்மை மற்றும் முன்னேற்றக் கருத்துகளுக் கிணங்கவுள்ள தனது பரிந்துரைகளை விரைவில் செயலுக்குக் கொண்டுவருவதன் மூலம், சிறைக் கைதிகளை நடத்த வேண்டிய முறை, அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய இட வசதி முதலியவற்றில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் நிற்கும் மாநிலமாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் நன்னாளை எதிர்பார்ப்பதாகக்கூறி, குழுவின் தலைவர் தனது அறிக்கையை முதல்வரிடம் சமர்ப்பித்தார்.



# பிரதமர் வேண்டுகோள்

குழந்தைகளே நாட்டின் மிகச் சிறந்த செல்வங்கள், அச்செல்வங்களைப் பேணிப் பாதுகாத்து வருவதே நமது கடமை. இதுவே குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை என ஏற்றுக் கொள்வோம். இந்த மனிதச் செல்வங்களை வளர்ப்பதே அரசின் நோக்கமாகும். அந் நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு, பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

உலகக் குழந்தைகள் ஆண்டு, நமது ஆக்கப்பணிக்கு புதிய வேகத்தைக் கொடுத்துள்ளது. குழந்தைகளுக்குச் சத்துணவு, உடல்நலம், கல்வி ஆகியவற்றை அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசின் தேசிய செயல் திட்டம் எடுத்துக் காட்டியுள்ளது. இதில் அரசுத்துறை மட்டுமல்லாது சொந்த முயற்சியில் இயங்கும் தனியார் நிறுவனங்கள் ஆற்றவேண்டிய பங்கையும் செயல் திட்டம் சுட்டிக்காட்டுகிறது. பக்குவத்துடனும் பாசத்துடனும் உருவாக்கப்பட வேண்டிய குழந்தைகளின் நலத்திலும் வளர்ச்சியிலும், சொந்த முயற்சியில் நடத்தப்படும் தனியார் நிறுவனங்கள் சிறப்பான பங்கேற்றுச் செயல்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும். அவர்களுக்கு உதவ, தேசிய குழந்தைகள் நிதியை நாங்கள் துவக்கியுள்ளோம். குழந்தைகளின் நலனுக்காக-குறிப்பாக தாழ்த்தப்பட்ட மலைவாழ் வகுப்பினரின், குழந்தைகளுக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்கும், உதவிகளைச் செய்யவிருக்கிற சொந்த முயற்சியில் இயங்கும் தனியார் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிப்பது இதன் குறிக்கோளாகும்.

வருங்காலத் தலைமுறையினராக விளங்கப்போகும் குழந்தைகள், அவர்களது வளர்ச்சிக்குரிய முழுவசதிகளையும் பெறுகிறார்களா என்பதைக் கண்காணிப்பது சமுதாயத்தின் கடமை. வருங்கால மானிட சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்ய, ஒவ்வொருவருக்கும் அருமையான வாய்ப்பை இந்த தேசிய குழந்தைகள் நிதி வழங்குகிறது. இந்நிதிக்கு தாராளமாக வழங்குவதன்மூலம் இந்நிதிக்கான குறிக்கோளை அடைய உதவ வேண்டும் என்று தொழிலதிபர்களையும், வணிகப் பெரும்மக்களையும் கருணை உள்ளங்கொண்ட மக்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு வழங்கும் நிதிக்கு வருமான வரி சட்டப்பிரிவு 80 ஜியின் கீழ் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

"செயலாளர் மற்றும் பொருளாளர், தேசிய குழந்தைகள் நிதி, சாஸ்திரிபுவன் புதுடெல்லி-1" என்ற முகவரியில் நிதி நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(ஒ-ம்) மொரார்ஜி தேசாய.

புதுடெல்லி,
மார்ச் 16, 1979.

தமிழரசு

மலர்: 9 இதழ்: 23

1. 6. 1979

# பாருக்கு நல்ல பணிசெய்வோம்!

## மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர்.

எனக்கு மன நிறைவு தரக்கூடிய மூன்று நிகழ்ச்சிகள்இணைக்கப் பெற்றிருக்கின்றன. முதலாவது தமிழ் இசை விழா. தமிழ் இசைச் சங்கத்திற்கு மதுரையில் ஒரு நல்ல கட்டடம் கட்டப்பெற்றுப் பல்லோர் பாராட்டுகின்ற



வகையிலும், தமிழ் வளர்வதற்கும், காப்பதற்கும் உறுதுணையாக இருக்கின்ற இசையை இணைத்து அதன் மூலம் தமிழைக் காப்பாற்றுகின்ற கடமைக்கு ஒரு பாதுகாப்பு நல்குகின்ற வகையிலும் இந்தச் சிறந்த கட்டடத்தை உருவாக்கி அதனைச் செட்டிநாட்டு அரசர்பெயரால் ராஜா முத்தையா மன்றம் என இங்கு அமைத்திருப்பது என் மனத்திற்கு நிறைவு தரக்கூடிய நல்ல பணி என்று சொல்ல ஆசைப்படுகின்றேன். எனவே, ஐந்தாம் ஆண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற மதுரைத் தமிழ் இசைச் சங்கத்தினைப் பாராட்டுகின்றேன். அதன்பணி வளர்க என வாழ்த்துகின்றேன்.

முப்பெரும் விழாக்களில் ஒன்றாகச் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களுக்குப் பாராட்டு விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. செட்டி நாட்டு அரசர் அவர்களுக்குத் ''தமிழிசைக் காவலர்'' என்னும் சிறப்புப் பட்டத்தினை நான் வழங்குமாறு பெருமை தந்திருக்கின்றீர்கள். செட்டிநாட்டு அரசர் அவர்களைப் போன்றவர்களுக்குப் பட்டம் அளிக்கின்ற தகுதியோ, அறிவோ, ஆற்றலோ, அனுபவமோ இல்லாத என்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதனை அழைத்து அந்தப் பெருமையைத் தந்ததற்கு நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

முப்பெரும் விழாக்களில் மற்றொன்று பாவேந்தர் விழா. இங்கு மேலவைத் தலைவர் மாண்புமிகு ம.பொ.சி அவர்களும், என் தம்பி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் பாரதியாரைப் பற்றியும், பாரதிதாசனைப் பற்றியும் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். ஒருமொழியினுடைய தோற்றம், வளர்ச்சி, வாழ்வு இவைகளை எண்ணிப் பார்த்து அந்த மொழியினுடைய வயது என்ன என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்போது தான் அந்த மொழிக்கு உரிய மரியாதையும் உயர்வும் எல்லோருடைய உள்ளத்திலும் ஆழமாகப் பதிகின்றன என்பதனை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். தமிழைக் காப்பதற்காக யார் யார் பாடுபட்டிருக்கின்றார்கள்? தமிழை அழிப்பதற்காக யார் யார் முயன்றிருக்கின்றார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மதுரையை நெருப்புக்கூட அழிக்க முயன்றது என்று மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அவ்வாறு அழிக்கத் தொடங்கிய நிலையையும் மீறி, மதுரை காப்பாற்றப்பட்டிருக்கின்றது; தமிழ் காப்பற்றப்பட்டிருக்கின்றது. இந்தி என்று இப்போது பேசப்படுகின்ற மொழியும், வடமொழி என்று கூறப்படுகின்ற சமஸ்கிருதமும் அதனை ஒட்டிய தாய் அதற்கு முன்பிருந்த பிராகிருதமும் அதற்கும் முன்னால் இருந்த பாலிமொழியும் தமிழை அழிப்பதற்காக இங்கே அடியெடுத்து வைத்தனவாகும்.

பாலிமொழிக்குச் சொந்தக்காரர்கள் மதுரைமீது படையெடுத்து வந்து தமிழை அழிக்க முயன்றார்கள். அவர்கள் அரசோச்சும்போது தமிழுக்குச் சொந்தக்காரர்கள் ஒளிந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பாலிமொழிக்குச் சொந்தக்காரர்கள் முதலில் தமிழ் மொழியை அழித்துவிட்டால், தமிழர்களை அடிமைப் படுத்திவிடலாம் என்று எண்ணினார்கள். அப்போதெல்லாம் தமிழ் மக்கள் தமிழுக்கு மரியாதை தந்தார்கள். தமிழ் தங்களின் சொத்து. அதனை அழிக்கவிடமாட்டோம் என்று வீரமுழக்கம் செய்தார்கள்.

அயர்லாந்து விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் எத்தனையோ முறைகளைக் கையாண்டும் மக்களை ஒருங்குகூட்டி விடுதலை பெற முடியாமல் போனபின் அயர்லாந்து மொழியை முன்நிறுத்தி அந்த மொழிக்குத் தனி உரிமை வேண்டும் என்று போராடிய பின்னரே அந்த நாடு இன்றையதினம் விடுதலை பெற்ற நாடாக விளங்குகின்றது.



மதுரையை எத்தனையோ மொழிகள் முற்றுகையிட்டன. வேற்றரசர்கள் மதுரைமீது படையெடுத்தார்கள். அப்போதெல்லாம் மதுரை மாநகரம் தலை வணங்காமல் தலை நிமிர்ந்து நின்று தமிழால் நிலை பெற்றது. இவ்வகையில் அயர்லாந்து வரலாறும் மதுரை வரலாறும் ஒற்றுமையாக அமைந்திருப்பதனைக் காணலாம். இத்தகைய வரலாற்றுப் புகழ்பெற்ற மதுரையில் தமிழ் இசைச் சங்கத்திற்காகத் தனிக்கட்டடம் உருவாகியுள்ளது.

தமிழில் பாடினால் அவர்களைச் சங்கீத வித்துவான்களாக ஏற்றுக் கொள்வதில்லை என்ற நிலைமை, நம் தமிழ்நாட்டில் இருந்தது.

திருவாசகத்தை மதித்தார்கள். திருக்குறளை மதித்தார்கள். திருப்பாவையை-திருவெம்பாவையை மதித்தார்கள். ஆனால் அவற்றை இசையோடு பாடும்போது அவ்வாறு பாடிய சங்கீத வித்துவான்களை மதிக்காத காலம் ஒன்று இருந்தது, என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதும், தேவாரம் பாடும் ஓதுவராக வாழ்ந்தார்கள் என்பதும் நமக்கும் தெரியும். பின்னால் அவருக்கு எத்தனையோ சிறப்புப் பட்டங்கள் வழங்கப்பட்டன. அவையெல்லாம் செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் தமிழிசைச் சங்கம் தோற்றுவித்த பிறகு தேசிகர் அவர்களுக்குக் கிடைத்த பட்டங்கள் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே நாம் ஒவ்வொருவரும் செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையாருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவிக்காமல் இருந்திருந்தால், ஒரு புலவர் அம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால் புலவர் குழு அம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால் அந்தத் தமிழிசை இயக்கம் பணம், பதவி, சாதி உயர்வு இவைகளால் உறுதியாக அழிக்கப்பெற்றிருக்கும். செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் இவ்வியக்கத்தில் ஈடுப்பட்டமையால், பணத்தைக்கொண்டு யாராலும் அவரை விரட்டமுடியவில்லை. அவர் நெஞ்சுரத்தோடு இவ்வியக்கத்தில் ஈடுபட்டமையால் பதவியைக் கொண்டும் அதிகாரத்தைக் கொண்டும் விரட்டமுடியவில்லை. அச்சுறுத்தி. அடிமைப்படுத்தவும் முடியவில்லை. அண்ணாமலையார் அவர்கள் தமிழன் என்ற எண்ணத்துடனும், துணிவுடனும் தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்ட காரணத்தால் அவரை எதிர்த்து நின்றவர்கள் தம் கருத்தை எதிர்த்து வெளியிட முடியாது தோல்வியடைந்து புறங்கண்டார்கள். கடைசியில் அண்ணாமலையாருடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டார்கள்.

பாராட்டப் படுகின்றவர்கள் பணத்திற்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் புகழுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும், உழைக்கின்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் கண்களுக்கு விரோதிகளாகத் தெரிகின்ற அளவிற்கு வசதி படைத்தவர்களாக இருந்தாலும் அவர்களை அவர்கள் செய்த தொண்டுக்காக நாங்கள் பாராட்டுகின்றோம். செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள்,

> எதனையும் அறிய வேண்டும் என்னும் ஆசை, இசை நுகர்ச்சியின் மீதேற்படும் ஆசைபோல் ஆற்றல் மிக்கது. இளவயதில் இயல்பாய் அமைந்திருக்கும் இவ்வாசையில்லை என்றால் அறிவியலோ கணிதமோ இராது.
>
> —ஜஸ்டின்.

செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் போன்றவர்கள் தமிழிசை இயக்கம் என்ற தியாகத் திருப்பணியில் எதனைப் பற்றியும் கவலைப் படாமல் ஈடுபட்டார்கள்.

இவர்கள் செல்வமும், புகழும் பெருமையும் சுற்றமும் பெற்றவர்கள் எங்கு சென்றாலும் தனக்கென்று ஒரு தனி மரியாதை கொண்டவர்கள். இவ்வளவும் படைத்த இவர்கள் - இவற்றை நாம் ஏன் இழக்க வேண்டும்? எதிரிகளை எதற்காக உருவாக்க வேண்டும்? என்று கருதியிருந்தால் இந்தத் தமிழிசை இயக்கம் வளர்ந்திருக்கமுடியுமா? அவர்கள் வளர்க்காவிட்டால் வேறு யாராவது துணிந்து இந்த அளவிற்கு வளர்த்திருக்க முடியுமா?

ஒருவேளை அரசியல்வாதிகள் முயன்றிருக்கலாம். அவர்கள், அதனால்சிறைச்சாலைக்குச்சென்றிருக்க முடியும். தமிழைக் காப்பாற்ற முடிந்திருக்கும். ஆனால் இந்தத் தமிழிசையின் வளர்ச்சி இடையறாத தொடர்ச்சி எதிர்காலத்தை வெற்றிகொள்ளுமாறு நமக்குத் தந்திருக்கும் துணிவு, அத்தனையும் அரசியல் வாதிகளால் கிடைத்திருக்க முடியாது. இதனை நான் முதலமைச்சர் என்ற முறையிலும், சாதாரணக்குடிமகன்என்றமுறையிலும் துணிந்து மனநிறைவுடன் கூறிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களைப் பாராட்டும்போது எனக்கு உள்ள மனநிறைவே இதுதான்.

பிறரால் ஓரளவு செய்ய முடிந்ததை முழுமையாகச் செய்து வெற்றி கிடைக்கச் செய்தவர் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் என்று சொல்வதில் பெருமைப்படுகின்றேன்.

தமிழிசை விழாவில் கலந்து கொள்ளவேண்டும் என்று செட்டிநாட்டுஅரசர்முத்தையாஅவர்கள் பலமுறை என்னிடம் கேட்டார்கள். சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறுகிறது என்பதனை எடுத்துக்கூறி, அது முடிகின்ற நிலையில் நான் வந்து கலந்து கொள்கிறேன், என்று குறிப்பிட்டேன். அவ்வாறு குறிப்பிட்ட பின் நான் வரும்வரை இவ்விழாவினை நடத்தாமல் ஏன் காத்திருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் பாகவதர் அவர்களோடும், தண்டபாணி தேசிகர் அவர்களோடும், கலைவாணர் அண்ணன் என்.எஸ்.கே. அவர்களோடும்தொடர்புகொண்டிருந்தது பற்றி இப் பணியை எனக்களிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பியிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

முதலமைச்சர் என்பதற்காக என்னை அவர்கள் அழைக்கவில்லை. முதலமைச்சர் பதவி என்பது விரும்பினால் வரும்; விரும்பாவிட்டால் போய்விடும். ஆனால், அந்தப் பழைய காலத் தொடர்புகள் யாராலும் மாற்றவும் முடியாது. போக்கவும் முடியாது, ஆகவே, அந்த முறையில் என்னை இங்கே அழைத்திருக்கிறார்கள்.

ஒரு மொழிக்குச் சொந்தக்காரர்களாக யார் யார் இருக்க வேண்டும் என்பதனை முதலிலேயே நாம் புரிந்து கொள்வது சரியாக இருக்கும் என்று கருதுகின்றேன். வசதி படைத்தவர்கள், செட்டி நாட்டு அரசர் முத்தையா போன்றவர்கள் இதற்காக உழைத்தாலும்கூட உழைக்கும் வர்க்கம் தாய்மொழியைக் காக்கத் துணிந்து முன்வந்தாக வேண்டும். அந்த நினைப்பும் நம்பிக்கையும் அவர்களது உயிர்




மூச்சாக இருக்க வேண்டும். இங்கே தமிழிசைச் சங்கத்திற்காக பெரிய கட்டடம் உருவாகியுள்ளது. இது பணக்காரர்களுக்காக மட்டும் கட்டப்பெறவில்லை என்னும் உணர்வு அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஏற்படவேண்டும். அவ்வகையில் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் கலந்துகொண்டு தமிழிசையைக் கேட்டு அனுபவிக்கும் நல்ல வாய்ப்பு ஏற்படுமாறு இத் தமிழிசைச் சங்கம் பாடுபட்டு வருகிறது. அதற்காகத் தமிழிசைச் சங்கத்தைப் பாராட்ட விரும்புகிறேன்.

செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களுக்குத் 'தமிழிசைக் காவலர்' என்னும் சிறப்புப் பட்டம் பொறித்த பதக்கத்தை அவர் கழுத்திலே நான் அணிவிக்கும்பொழுது அப்பதக்கம் நன்றாகத் தெரிய வேண்டும் என்று விரும்பினேன். அதனால் அப்பதக்கத்தினை ஒழுங்காக அணிவித்து நன்றாகத் தெரியுமாறு செய்தேன். அப்பதக்கத்தின் விலை என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் செட்டிநாட்டு அரசர் முத்தையா செய்திருக்கின்ற தொண்டிற்கு விலை மதிக்க முடியாது.

அவர்களின் தொண்டிற்கு அடிப்படையாக அமைந்தவர்கள் உழைக்கின்ற வர்க்கத்தினர் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவ்வர்க்கத்தினர் இன்னிசையைக் கேட்க வேண்டும். இன்னிசை என்பது காதுக்கு இனிமையான ஒலியாக இருந்துவிட்டால் மட்டும் போதாது. அதில் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் மக்களுக்குப் புரிந்தாக வேண்டும். இசையைவிட்டு இறைவனையே பார்க்க முடியாது என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அத்தகைய நல்ல இசையைத் தாய்மொழியில் பாடும்போது ஒவ்வொருவனும் உள்ளம் உருகுகின்றான். அதன் விளைவாக உற்சாகம் பெறுகின்றான். அந்தக் கணத்திலிருந்து துணிவு பெறுகின்றான். ஆகவே மொழிப்பற்று உயிர் மூச்சாக மாறுகின்றது. பின் தன்மானம் பிறக்கின்றது. இறுதியில் தன்மானத்திற்குச் சொந்தக்காரன் தமிழன் என்ற உணர்வு மேலோங்கி நிற்கின்றது.

இத்தகைய மாபெரும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கின்ற செட்டிநாட்டு அரச குடும்பத்தாருக்கு ஒவ்வொருவரும் நன்றி காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தமிழ் வளர்ச்சிக்கு நகரத்தார்கள் மிகவும் பணி செய்திருக்கிறார்கள். நகரத்து மக்கள் என்று அழைக்கப்படுகின்ற நகரத்தார்கள், தமிழை வளர்ப்பதற்காக உழைத்தார்கள் என்பதனை எண்ணிப்பார்க்கும்போது அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ் வெறும் வழக்குமொழியாக, பேச்சுமொழியாக, மேடைப் பேச்சு மொழியாக இருந்துவிடாமல் கருத்துக்கும், இந்த நாட்டின் வாழ்வுக்கும், இந்த நாட்டு மக்களின் மறுமலர்ச்சிக்கும் வழி தேடித்தருகின்ற ஒரு மொழியாக அமைந்தாக வேண்டும். அந்தத் திறமையும் தகுதியும் தமிழ் மொழிக்கு உண்டு என்பதனை நான் இங்கே பெருமையுடன் சொல்ல விரும்புகின்றேன்.

நான் பாரதிதாசன் அவர்களோடு பல காலம் தொடர்ந்து பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவன். பாவேந்தர் அவர்கள் தமிழின் அருமை பெருமைகளை மிகத் தெளிவாக உலகுக்கு எடுத்து உணர்த்தியவர்கள். அவர்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களிடம் மிகவும் ஈடுபட்டவர்கள். பாவேந்தர் அவர்களின் உயர்ந்த வாழ்க்கையை நாம் ஒவ்வொருவரும் பாராட்ட வேண்டும்.

தமிழைப் பற்றி பேசுவதால் மட்டும் தமிழ் பாதுகாக்கப்பட்டுவிடும் என்று யாரும் தயவுசெய்து எண்ணி ஏமாந்து விடாதீர்கள். நம்முடைய உயிர் மூச்சாகத் தமிழ் கலந்திருக்க வேண்டும். தமிழ் தமிழ் என்ற சிந்தனை நம் உள்ளத்தில் ஊறவேண்டும். இதுவே என் வேண்டுகோள்.

எதையும் தாங்கும் இதயம் நமக்கு வேண்டும். இதனைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குத் தந்திருக்கின்றார்கள். ஆனால், தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் எதையும் தாங்கும் இதயம் நமக்கு வேண்டாம். தமிழைத் தாங்குவோம். தமிழை மட்டும் தாங்குவோம். தமிழ் வாழ்வதற்காக இந்த உலகைத் தாங்குவோம்.

தமிழிசைச் சங்கத்தில் தமிழ் வளர, தமிழிசை வளர ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன என்பதறிந்து மகிழ்கின்றேன். இவ்வியக்கத்தைக் கட்டிக் காத்து வரும் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து இந்தப் பாருக்கு நல்ல பணி செய்து தமிழுக்குத் தொண்டாற்றி, தமிழ் உள்ளங்களுக்குச் சொந்தக்காரராக வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். அண்ணா நாமம் வாழ்க. தமிழ் வாழ்க.

(மதுரையில் 29.4.79 அன்று தமிழ் இசைச்சங்கம் "ராஜா முத்தையா மன்றம்" இத்தாம் ஆண்டுத் தமிழிசை விழாவில், செட்டிநாட்டரசர் ராஜா சர் முத்தையா அவர்களுக்குத் தமிழிசைத் அன்பர்களின் சார்பாகத் 'தமிழிசைக் காவலர்' என்னும் சிறப்புப் பட்டம் பொறிக்கப் பெற்ற பொற் பதக்கத்தை அணிவித்து ஆற்றிய பாராட்டுரை)





# ஓங்கி உயரும் கல்வித் துறை

மாண்புமிகு கல்வியமைச்சர்
திரு. செ. அரங்கநாயகம்

தமிழ்நாட்டு மக்களின் ஆவல்களையும், தேவைகளையும் நிறைவேற்றும் நோக்குடன், சமுதாயத்தின் சிற்றூரைச் சார்ந்த கிராமப்புறத்து மக்கள் மற்றும் நலிந்த பிரிவினரின் தேவைகள் ஆவல்களை நிறைவேற்றும் கருத்துடன், கல்வியில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு மாநில அரசு ஆவல் கொண்டிருந்தது. அது தொடர்பாக இடையறாத முயற்சிகளையும் மேற்கொண்டது. இவற்றின் விளைவாக, 1978-ஆம் ஆண்டு ஜூலை திங்களில் இருந்து தமிழ்நாட்டில் 10+2+3 என்னும் புதிய கல்வி முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வி முறை பொதுப்பாடக் கல்வி, தொழிற் கல்வி என இரு பிரிவுகளைக் கொண்டதாக வகுக்கப்பட்டுள்ளது: அவை மாணவர்களில் பல்வேறு வகையினரின் தேவையை நிறைவு செய்வனவாகும்.

மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வுக்கூட வசதிகள் ரூ. 6.40 கோடி அளவில் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்களும் இரண்டு கோடி ரூபாய் மதிப்பில் அளிக்கப்படும்.

மேலும் எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் 37 இலட்சம் ரூபாய் அளவில் அளிக்கப்படும்.

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள கட்டட வசதிகள், நூலக வசதிகள், ஆய்வுக்கூட வசதிகள் ஆகியவை பற்றி விரிவான கணக்கு எடுக்கப்படும்.

பல உயர்நிலைப் பள்ளிகளில் கட்டடங்கள் இல்லை என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் கட்டடங்கள் இல்லை என்பதை மறுக்காத அதே நேரத்தில் கடந்த காலத்தில் இருந்துவந்த நடைமுறைகளை அரசு ஆராய்ந்து பார்த்ததில் ஒரு கட்டடம் கூட இல்லாத பள்ளிகளும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் நாம் அந்தப் பிரச்சினையை நியாயமான ரீதியில் அணுகவில்லை என்ற குறைபாடுதான். ஆகவே, இந்த அரசு எந்தவிதமான வேறுபாடும் காட்டாமல் பிரச்சினைகளை நியாயமான ரீதியில் அணுகி, ஒரு கட்டடம்கூட இல்லாத பள்ளிகளுக்கு முதல் வாய்ப்புத் தரும். அதன் பின் வசதிகள் குறைவாக இருக்கும் பள்ளிகளுக்கு உடனடியாக வசதிகள் செய்து தரும். பின்னர் படிப்படியாக எல்லாப் பள்ளிகளுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கும் வகையில் திட்டம் வகுக்கும்.

நிரந்தரக் கட்டடம் ஏதும் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளுக்கு



உடனடியாக, வரும் ஆண்டில் ஒரு நிரந்தர கட்டடமேனும் கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்படும்.

உள்ளூரில் கிடைக்கும் வசதிகளையும், கட்டடப் பொருட்களையும் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

கிராமப்புறங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஆங்காங்கே குடி இருக்க வசதிகள் செய்யும் வகையில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கடன் வழங்க சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியங்கள், கிராமப்புற வீட்டு வசதிக்காகச் செலவிடப்படும் தொகைகளும் வரும் ஆண்டில் அதிகப்படுத்தப்படும்.

## தலைமை ஆசிரியர் பணி

நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்கள் பணி இடம் நிரந்தரமாகக் காலி ஏற்படும்போது அந்தப் பணியிடங்கள் கீழ்க்கண்ட வகையில் நிரப்பப்படும் :—

குறிப்பிட்ட நடுநிலைப் பள்ளி அல்லது அந்தப் பள்ளியை நடத்தும் நிர்வாகத்தில் உள்ள மற்ற பள்ளிகள் இவற்றில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ, முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களோ இருந்தால், அவர்களில் பணி மூப்பு உடையவரை இந்தப் பள்ளியில் தலைமை ஆசிரியராக நியமித்து அவருக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும்.

பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ, முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களோ நடுநிலைப்

# நாங்கள் அவன் வயிற்றில் அடித்துவிட்டோம்!

பிச்சைப்பாத்திரத்தைப் பிடுங்கியதன் மூலம்.



ஆம். அவன் பிச்சைப் பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்து விட்டோம். நாங்கள் அவனைச் சந்திக்கும்முன்...அவன் மனிதர்களின் இறுதிச் சடங்குகளில் பாடுவான். ஒரு வறண்ட சொட்டிக்காக, அழுது கொண்டிருக்கும் உறவினர்களின் கால்களை முத்தமிடுவான்.

### தன் கையே தனக்குதவி:

உண்மைதான். ஆயின் ஒரு பிச்சைக்காரன், ஓடி முன் வைத்தால், மற்றவர்கள் ஓடி பின்வாங்குவார்கள்......பிச்சைக்காரனுடன் உறவு வைத்துக்கொள்ள யார்தான் விரும்புவார்கள்?

### நாங்கள் செய்வது என்ன:

கையில் காசில்லாத இந்த ஏழைகளில் சிலர், ஒவ்வொரு நாளும் எங்களிடமிருந்து பணவுதவி பெறுகின்றனர். ஒரு தொழிலைத் தொடங்க, வீடுகட்ட, புத்தகங்கள் வாங்க, சமுதாயத்தில் அவர்களும் மனிதர்களாய் தலைநிமிர்ந்து உலவ உதவுகிறோம்.

### புதுமையான பாங்கிங் முறை:

சமுதாயத்தில் கைவிடப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு உதவும் இத்தகைய தன்னிகரற்ற திட்டங்களை ஸ்டேட் பாங்கின் ஒரு விசேஷ அமைப்பு உருவாக்கித் தருகிறது.

நகர்ப்புறச் சேரிகள். பள்ளிகள். மருத்துவமனைகள். சிறைச்சாலைகள். துயரால் பாதிக்கப்பட்ட பகுதிகள். ஸ்டேட் பாங்கின் சேவைக் கரம் எட்டாத இடமே இல்லை.

### பண்ணைகளும் விவசாயிகளும்:

விவசாய அபிவிருத்திக் கிளைகள் கொண்ட ஒரே பாங்க் இதுதான். விவசாயத்தின் அன்றாடத் தேவைகள், புதுமையான விவசாயத் திட்டங்கள் ஆகியவற்றுக்கும் பொருளுதவி செய்ய விசேஷ பாங்குகள் உண்டு.

### ஒவ்வொரு கனவையும் நனவாக்கும திட்டம்:

உங்கள் மகனை மேற்படிப்புக்கு வெளி நாடு அனுப்ப, தொல்லையற்ற ஓய்வுகால வாழ்வுக்கு, சொந்த வீடு கட்ட, காய்கறித் தோட்டம் அமைக்க, புத்தம் புதிதாக மின்னும் வாடகைக்கார் வாங்கிவிட, நேர்மையான வியாபாரத்திற்கு நேர்மையான முதலீடு செய்ய......

### உலகிலேயே மிகப் பெருமளவு பாங்கிங் வசதி கொண்டது:

ஏறக்குறைய 5000 அலுவலகங்கள் கொண்ட ஸ்டேட் பாங்க், தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகப் பெருமளவு பொருளுதவி செய்கிறது. அதோடு சர்வதேச பாங்கிங் துறையில் பாரதத்தின் பிரதிநிதியாகப் பெரும்பங்கு வகிக்கிறது.

நாங்கள் வளர்கிறோம். அளவில் மட்டுமல்ல. எங்கள் கண்ணோட்டத்திலும்தான்.

**ஸ்டேட் பாங்க்**

சேவைக் கரம் நீட்டி நெருங்கியே வளர்வோம்

SS: 3965A


# படி! படி!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்



எடுப்பு

நூலைப்படி—சங்கத்தமிழ்
நூலைப்படி—முறைப்படி
நூலைப்படி

உடனெடுப்பு

காலையிற் படி கடும்பகல் படி
மாலை, இரவு பொருள்படும்படி
நூலைப் படி!

அடிகள்

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர்கள் வாழ்வ தெப்படி?
நூலைப் படி!

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ் நான்மறை
பிறந்த தென்று சொல்லும்படி
நூலைப் படி!

அகப்பொருள் படி அதன்படி,
புறப்பொருள் படி நல்லபடி,
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என் சொற்படி
நூலைப் படி!

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக் கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி
நூலைப் படி!

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி?
நூலைப் படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி
நூலைப் படி!

பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்த அவர் இடைநிலை ஆசிரியர் ஊதியம் தற்போது பெற்று வந்தால் அவர்கள் அனைவருக்கும் 1-9-79 முதல் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும். இந்த முறையில் தற்போது தலைமை ஆசிரியராக இருப்பவர்கள் இவ்வாறு வருங்காலத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியராகவோ, முதல் நிலைத் தமிழ் ஆசிரியராகவோ தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளும் பொழுது ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் முதல் தேதி இவ்வாறு அவர்களின் பதவி பட்டதாரி ஆசிரியர் நிலைக்கு உயர்த்தப்படும்.

நடுநிலைப் பள்ளியிலோ, அந்தப் பள்ளியின் நிர்வாகத்தின் கீழோ, பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் அல்லது முதல் நிலை தமிழ் ஆசிரியர் அங்கு பணியில் இல்லாதபோது காலி ஆகும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணி இடத்தை முதல்நிலை தமிழ் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பி அவருக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும்.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழாசிரியர்கள் தங்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டுமென்ற, கோரிக்கையை முன் வைத்து வருகிறார்கள். கடந்த பல்லாண்டுக் காலமாக அது ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆசிரியர் பெருமக்கள் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் உயர்தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியராகத் தமிழாசிரியர் வரலாம்.— வரவேண்டும் என்ற விருப்பத்தை இந்த முடிவின் மூலம் இந்த அரசு இன்றைய தினம் அறிவிக்கிறது.

இந்த நேரத்தில் தமிழாசிரியர்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு இந்தப் பொறுப்பைத் தருவதன் மூலம் உங்கள் கட்டுப்பாட்டில் படிக்கின்ற மாணவர்கள் ஒழுக்கம், நன்னடத்தையில் சிறந்து, தமிழ்ப் பண்பாடு மிக்கவர்களாக, இனப்பற்று மிக்கவராக, மொழிப்பற்று மிக்கவராக, எதிர்காலத்தில் அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு வந்தாலும், கல்லூரிக்கு வந்தாலும் சிறந்த மாணவர்களாக இருக்கக் கூடிய வகையில் அந்த மாணவர்கள் உங்களிடம் பயிற்சி பெறுவார்கள். நல்ல கல்வி பெறுவார்கள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறேன்.

## பள்ளி சாராக் கல்வி

அடுத்தபடியாக, பள்ளிசாராக் கல்வி வருகிற ஆண்டில் இருந்து முறையாகப் பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர்களின் நன்மைக்காக 8-வது வகுப்பு நிலையில் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு நடத்தப்படும். தேர்வு நடக்கும் மாதத்தில் முதல் தேதியன்று 14 வயது முடிந்தவர்கள் முறையான பள்ளிகளில் கீழ் வகுப்புக்குள் எதிலாவது படித்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் விரும்பினால் அவர்களும் இத்தேர்வு எழுதலாம். இப்பொதுத் தேர்வு 1979 டிசம்பர் மாதம் முதல் நடைபெறும். இச்சலுகையினால் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் பள்ளி சாராக் கல்வி வசதிகளின் முழுப் பயன் எய்த இத்தேர்வு உதவும்.

இன்றைக்கு நாம் கட்டாயமாகக் கல்வியைச் சொல்லித்தர வேண்டுமென்று சொன்னாலும், பல்வேறு பொருளாதாரக் காரணங்களாலும் பள்ளிக்கு வந்து பள்ளிக் கல்வியை முறைப்படி படிக்க முடியாத நிலையில் இருக்கின்றவர்கள் இதனைப் பயன்படுத்திக்கொண்டு நல்ல வாய்ப்புக்களை இதன் மூலமாகப் பெறுவதற்குரிய வாய்ப்பினைத் தருகிறோம்.

## கல்லூரிக் கல்வி

அடுத்து, கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுடைய பிரச்சினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1979-80 முதல், புகுமுக வகுப்பு நீக்கப்படுவதால் கல்லூரி ஆசிரியர் எவரும் பாதிக்கப்படாதபடி அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

கல்லூரி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர்க்குச் சலுகைகைகள் வழங்கி பிறப்பித்துள்ள ஆணைகளின் விவரம் வருமாறு:

தனியார் கல்லூரிகளில், முறை பிறழ்ந்த வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, நிர்வாகம் கல்வித் துறையின் ஆணைக்கு ஏற்பத் திரும்ப பணியிலமர்த்தாவிட்டால், சம்பந்தப்பட்டவர்களின் இசைவுடன் அந்த ஆசிரியரை அவருடைய பணி பதவியோடு வேறொரு கல்லூரிக்கு மாற்ற கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் 1-4-1978 முதல் நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப் படி ஆகியவைகளை மூன்றாம் ஊதியக் குழு விகிதத்தில் பெறுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதே சமயத்தில் பழைய விகிதங்கள் அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும் பட்சத்தில் தொடர்ந்து அந்த விகிதங்களைப் பெறவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்லூரிக் கல்வித் துறையைச் சார்ந்த பிற துறைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக்குழு ஊதிய விகிதங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

1975-76 முதல் தமிழ்க் கல்லூரிகளில் புலவர் படிப்பிற்குப் பதிலாக பி. லிட். பட்ட வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டப் படிப்பையும் மற்றும் இதற்குத் தேவையான கூடுதல் ஆசிரியர்களையும் அங்கீகரித்து மானியம் அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

1979-80-ல் கோயம்புத்தூரில் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக ஆக இரண்டு சட்டக் கல்லூரிகள் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சட்டப் படிப்பில் முதுகலைப் பட்டப் படிப்பு மதுரை சட்டக் கல்லூரியில் வருகிற ஆண்டிலிருந்து துவக்கப்படும். இப்போது படித்து வெளியேறுகின்ற மாணவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு இல்லை என்ற அடிப்படையில், நிறையப் பேர்களைத் தயார் செய்வதற்குப் பதிலாக நாட்டின் தேவைக் கேற்ப கல்வியின் தரத்தை உயர்த்தி, எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது.

## தன் விருப்ப ஓய்வு

20 ஆண்டு பணி முடித்தவர்கள் தாங்கள் விரும்பினால் ஓய்வூதியத்துடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்ற அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்ட சலுகை தனியார் மற்றும் உள்ளாட்சி





மன்றப் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் பொருந்துமெனத் தெளிவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



## தமிழ் வளர்ச்சி

விதி விலக்களித்த இனங்களைத் தவிர, மற்ற இனங்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழையே கையாள வேண்டும் என்பது அரசின் கொள்கை ஆகும். இதனைச் செயல்படுத்தச் தயக்கம் காட்டும் அதிகாரிகள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. தமிழை ஆட்சி மொழியாக்குவதிலே யாருக்கும் மாறுபாடான கருத்து இருக்காது.

## தொல்பொருள் ஆய்வு

ஏற்பளித்த நான்கு மாவட்டத் தொல்பொருள் ஆய்வு அலுவலர்கள் மூலம் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை இதுகாறும் 200-க்கும் மேற்பட்ட பண்டைய ஓலைச் சுவடிகளைச் சேமித்துள்ளது. இவற்றை, சுவடிகள் வைத்திருந்தவர் இலவசமாகக் கொடுத்துள்ளனர். பலர் கொடுக்கவும் முன்வருகின்றனர். பொருள் கொடுத்து வாங்கவும், அரசு அனுமதி அளித்துள்ளது. சேமித்துள்ள சுவடிகளில் பல சித்த, மருத்துவச் சுவடிகளாகும். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தளவாய் முதலியார் குடும்பத்தினர் திருநெல்வேலிப் பகுதியில் கட்டடங்கள் எழுப்பி கலைத்தொண்டு புரிந்ததைக் குறிக்கும் ஓலைச் சுவடி ஒன்றும் 18ஆம் நூற்றாண்டு 'கப்பல் இலக்கியம்' ஒன்றும் புதிதாகக் கிடைத்தவையாகும்.

இத்துறை இதுகாறும் பாண்டியர், பல்லவர், சோழர் காலத்தைச் சார்ந்த 130-க்கும் மேற்பட்ட சிலைகளைச் சேகரித்துள்ளது. இதுபோல் 100-க்கும் மேற்பட்ட சிலைகளைகண்டு அவற்றை எடுத்துப் பாதுகாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை இன்னும் விரிவுபடுத்துவதற்காக மேலும் 5 மாவட்டங்களில் மாவட்டத் தொல்பொருள் ஆய்வு அலுவலர்களை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப் பண்பாட்டு மையம்

உலக நாகரிகத்திற்குத் தமிழர் நாகரிகம் முன்னோடியாக அமைந்து தன் பெரும் பங்கையும் பணியையும் ஆற்றியுள்ளது. தமிழர் பண்பாட்டின் பல்வேறு சிறப்புக் கூறுகளை வெளிநாட்டினரும், உள்நாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் செயல்பட தமிழ்ப்பண்பாட்டு மையம் தோற்றி வைக்கப்பட்டுள்ளது. தமிழர் வாழ்வில் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் வாழ்க்கை மரபில் கையாளப் பெற்றுவரும் கருவிகள், இசை, நாட்டியம், நாடகத்துறை செய்திகள், வீர விளையாட்டுகள், முதலியவற்றைச் சித்திரிக்கும் நூல்கள், ஏடுகள், பண்டங்கள் போன்றவற்றைத் திரட்டி வெளிநாட்டவரும் கண்டு மகிழும் வண்ணம் நூலகம், கலை அரங்கம், காட்சிக் கூடங்கள் முதலியவை ஏற்படுத்தப்படும். இம் முயற்சியில் சில அரிய நூல்களும் சுவடிகளும், ஏடுகளும் அருக்கலைப் பொருள்களும் தற்பொழுது திரட்டி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பண்பாட்டினைப் பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் இலக்கியப் பாடல்கள்கொண்ட இசைத்தட்டுகள் வெளியிடப்படவுள்ளது. மேலும் நாட்டுப் பாடல்கள் தொகுப்பு நூல்களை வெளியிடவும் திரைப்படத்துறை வாயிலாகத் தமிழர் பண்பாட்டைக் காணவும் வகை செய்யப்பட்டும் வருகிறது.





# இலக்கியத்தில் கல்வி

* கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

—திருவள்ளுவர்.

* எண்ணெழுத் திகழேல் !
இளமையிற் கல் !
கேள்வி முயல் !
நூல் பல கல் !

—ஆத்திசூடி.

* கைப்பொருள் தன்னின்
மெய்ப்பொருள் கல்வி !

—கொன்றைவேந்தன்.

* ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டா !

—உலகநீதி.

* கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே !

—வெற்றிவேற்கை.

* கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பால்உண் குருகில் தெளிந்து !

—நாலடியார்.

* இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்--புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு !

—ஏலாதி.

* கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே !

—திருமந்திரம்.

* கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—உற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார் !

—நீதிநெறி விளக்கம்.

* கற்றது ஒழுகு !
நீதி நூல் பயில் !
நூலினைப் பகுத்துணர் !
உலோகநூல் கற்றுணர் !
வானநூற் பயிற்சிகொள் !
வேதம் புதுமை செய் !

—பாரதி புதிய ஆத்திசூடி.

* ஓவியம் பயில் !
கல்லார் நலிவர் !
கேட்டு விடையிறு !
நுண்ணிதின் நுண்மை தேர் !

—பாவேந்தர் ஆத்திசூடி.



## தமிழ் நாட்டில்

# கல்லூரிக் கல்வி

புதிய கல்லூரிகள் திறப்பதிலும், பெருமளவில் அவற்றில் மாண வர்கள் சேர்வதிலும் கடந்த இரு பது ஆண்டுகளாக வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வி வளர்ச்சியிலும் மேம்பாட் டிலும் கவனம் செலுத்தும் எண் ணத்தோடு, 1965-ல் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆளுகைக்கு உட்பட்ட தனித்ததொரு கல் லூரிக் கல்வி இயக்ககம் உருவாக் கப்பட்டது. இன்றைய க்ணக்குப் படி கல்லூரிக் கல்வி இயக்ககத் தின் கீழ் 235 கல்லூரிகள் உள் ளன; 1978-79 ஆம் கல்வியாண் டில் 2,06,051 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 1978-79-ல் கல்லூரிக் கல்விக்கான மொத்தச் செலவு ரூ. 18.67 கோடி.

தமிழ்நாட்டிலுள்ள 188 கலை அறிவியல் கல்லூரிகளில், 110 சென்னைப் பல்கலைக் கழகத் தோடும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தோடும், ஒன்று அண்ணாமலைப் பல்க லைக் கழகத்தோடும் இணைக் கப்பட்டுள்ளன. இம்மாநிலத் தில் 23 பயிற்சிக் கல்லூரிகளும், 16 கீழ்த்திசைக் கலைக் கல்லூரி களும், 3 உடற்பயிற்சிக் கல்லூரி களும், 2 இசைக் கல்லூரிகளும் ஒரு கிராம உயர் கல்வி நிலைய மும், இரு சமுதாயப் பணிப் பள்ளிகளும் உள்ளன. அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலும் ஒரு பயிற்சிக் கல்லூரி உள்ளது. மாநிலத்தில் உள்ள கல்லூரி களில் 62 பெண்களுக்கு மட்டுமே உள்ளவை. 51 கலைக் கல்லூரி களும் 7 பயிற்சிக் கல்லூரிகளும் அரசால் நடத்தப்படுபவை. அரசு மானியம் பெறும் தனியார் கல் லூரிகள் மாநிலத்தி உ மொத்தமுள்ள கல்லூரிகளில் 75 விழுக்காடாக அமையும். மாநிலத்தில் 10 கல்லூரிகளுக்கு, தன்னுரிமைத் தகுதி வழங்கப் பட்டுள்ளது.

**புதிய பல்கலைக் கழகங்களின் தேவை:**

ஒரு பல்கலைக் கழகத்திற்கு 30 அல்லது 40 கல்லூரிகளுக்கு மேல் இருத்தலாகாது என்ற நிலை யில், சென்னைப் பல்கலைக் கழ கத்துடன் 110 கல்லூரிகள் இணைந்துள்ளன. எனவே, சென்னைப் பல்கலைக் கழகத் தின் பணிப் பளுவைக் குறைக்கும் எண்ணத்துடன் மேலும் இரண்டு பல்கலைக் கழகங்களைத் துவங் கத் திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக் கழகப் பண உதவிக் குழுவின் இசைவினைப் பெற்ற பின், திருச்சிராப்பள்ளியிலும் கோயம்புத்தூரிலும் இருக்கும் விரிவு மையங்கள் கல்லூரிகளை இணைக்கும் தகுதியுடைய பல் கலைக் கழகங்களாக உயர்த்தப் படும். இப்புதிய பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ள வட்டா ரங்களுக்குத் தேவையான புதிய பாடத்துறைகளும் ஆராய்ச்சித் திட்டங்களும் வளர வழி வகுக் கும்.

**கல்லூரிகளின் வளர்ச்சி:**

பெரு நகரங்களில் மையங் கொண்டுள்ள பல கல்லூரிகளில் சில பாடத்துறைகளுக்கு, மாண வர் மிகுந்த எண்ணிக்கையில் சேர விழைந்தார்களென்றாலும் மாநில முழுமையிலுமான கல் லூரிகளில் பெரும் எண்ணிக்கை யில் இடங்கள் காலியாய் இருந் தமை கண்கூடு. மாநிலத்தில், கல்லூரிக் கல்வியின் தேவையைச் சரிகட்ட இப்போதுள்ள கல் லூரிகளே போதுமானவை எனும் உண்மையை உணர்த்தும் குறிப் பாகவே இதனைக் கொள்ள லாம். எனவே, சிறப்புச் சூழ் நிலை ஏதேனும் ஏற்பட்டாலே தவிர புதுக் கல்லூரிகளைத் திறக்க வேண்டிய தேவையிராது. கல்லூரிக் கல்வியின் கடந்தகால 'எண்ணிக்கைப் பெருக்கம்' பெற்ற வலிவினை, இக்காலத் 'தரமேம்பாடு' பெறும்படியாக மாற்றப்பட்டுள்ளது.

10+2+3 கல்விமுறை அமல் படுத்தப்படுவதால், நம் மாநிலத் திலுள்ள கலைக்கல்லூரிகளில் 1979-80லிருந்து புகுமுக வகுப்பு கள் கைவிடப்படுகின்றன. இத னால் கலைக் கல்லூரிகளின் மாணவர் எண்ணிக்கை குறையும். இப்போது வகுப்பறைகளுக்கும் பிறவற்றிற்கும் இடப்பற்றாக் குறை உள்ளது. புகுமுக வகுப் பைக் கைவிட்ட பிறகு இருக் கின்ற இட வசதிகளை ஆசிரியர் களும் மாணவர்களும் பெற்றுப் பயனடைவர். பெரும்பாலான கல்லூரிகள் புதிய பாடத்துறை களைத் தொடங்க, மற்ற கல் லூரிகள் மாணவர்களுக்கும் ஆசி ரியர்களுக்கும் மேலான வசதி களைச் செய்திடும்.

பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியால் கல்லூரி

**திருமதி ஸ்டெல்லா சௌந்தரராஜ்**
**இயக்குநர் :**
**கல்லூரிக் கல்வி**



களின் தரமேம்பாட்டுப் பெருக்கமும் ஏற்பட்டுள்ளது. அரசு கல்லூரிகளின் வளர்ச்சிக்கு மாநில அரசு 'இணை நிதி'கள் வழங்கியுள்ளது. அரசு கல்லூரி, தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக கழகப் பண உதவிக் குழுவின் 'பல்கலைக் கழகக் கலையியற்குழு மேம்பாட்டுத் திட்டத்தை' அமல்படுத்த அரசு இசைந்துள்ளது. 'பல்கலைக் கழகக் கலையியற் குழு மேம்பாட்டுத் திட்டத்தின்' அடிப்படையில் ஆசிரியர்கள் எம்ஃபில், பிஎச்.டி. பட்டம் பெற அனுப்பப்படுகின்றனர். நூலகங்கள், ஆய்வுக் கூடங்கள், கல்லூரிகளில் பெற்றுள்ள வளர்ச்சிகளே, தரமேம்பாட்டுக்கான வேறு கூறுகளாகும்.

**கல்லூரி முதல்வர்களின் கருத் தரங்கு:**

தற்காலப் புதிய முறைக் கல்வித் திட்டத்தின் ஆளுமைபற்றிக் கல்லூரி முதல்வர்களுக்கு வேண்டிய பயிற்சி தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, புதுடெல்லி கல்வித்திட்ட ஆளுநர் தேசிய ஆசிரியர் கல்லூரியின் ஒத்துழைப்போடு, தமிழ்நாட்டிலுள்ள கல்லூரி முதல்வர்களுக்குக் கல்லூரி கல்வி இயக்குநர் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்தார். 1978 அக்டோபர் - நவம்பரில், இக் கருத்தரங்குகள் 7 மையங்களில் நடைபெற்றன. ஒவ்வொரு மையத்திலும் மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அரசு, தனியார் கல்லூரி முதல்வர்கள் பங்கேற்றனர். கருத்தரங்குகளில் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவுகளும், கலந்துரையாடல்களும் உண்மையிலேயே பயன்தரக் கூடியவை என்றும் இக்கருத்தரங்கில் பரிந்துரைக்கப்பட்ட வழிவகையிலேயே மாற்றியமைக்கப்பட்ட வகுப்புக்களை வைத்துக் கொண்டு கல்லூரிக்கான திட்டங்களையும் வளர்ச்சிக்கான வழிகளையும் காண முடியும் என்றும் கல்லூரி முதல்வர்கள் கருதினர்.

ஆங்கில மொழித் திறமையைச் செறிவோடு கற்பிக்க, இளைய துணைப் பேராசிரியர்களுக்கும், பயிற்றுநர்களுக்கும் ஒரு புத்தொளிப் பயிற்சி தரப்பட்டது. குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று என்னவென்றால் அந்தக் கல்லூரி இணையங்களைச் சார்ந்துள்ள மேல் நிலைப் பள்ளிகளின் பல ஆசிரியர்கள் அந்தத் திட்டத்தால் பயன் பெற்றதாகும்.

சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சில் பிரிவின் ஒத்துழைப்போடும் பல்கலைக் கழகமானியக் குழுவின் உதவியோடும், 3.1.79 முதல் 16.1.79 முடிய 'நுண்ணி

> அறியாமையைவிடக் கேவலமான அடிமைத்தனம் வேறு எதுவுமில்லை; அறிவுத்தாய் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளின் பெயர் சுதந்திரம், விடுதலை, உரிமை என்பவைகளாகும்!
>
> —இங்கர்சால்.

தின் கற்பித்தல்' என்பதுபற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. மாநிலமெங்கணுமுள்ள பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து 27 ஆசிரியர்கள் கலந்துகொண்டு இந்தப் புதிய கருத்தால் பலன் பெற்றனர். ஸ்காட்லாந்தில் உள்ள ஸ்டர்லிங் பல்கலைக் கழகத்திற்கும் இயக்ககத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒரு மூன்றாண்டுத் திட்டத்தின் தொடக்கமே இக்கருத்தரங்காகும். பயிற்சிக் கல்லூரிகளில் திறம்பெற்ற ஆசிரியப் பயிற்சி முறைகள் எல்லாப் பாடங்களிலும் முயற்சிக்கப்பட்டு வருகின்றன.

**பணிப் பாதுகாப்பு**

31.1.1977-ல் பணியிலிருந் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணி பாதுகாப்பு வழங்கி(1978 மே): தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்தது. 1979-80 முதல் கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்புகள் கைவிடப்படுவதால், 31.3.77க்குப் பிறகு பணியில்சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் பணியின்றி அனுப்பப்படுவர் என்றதோர் ஐயம் கல்லூரி ஆசிரியர்களிடமிருந்தது. கல்லூரிகளில் நிலையான இடங்களில் 26.2.1979 அன்று தற்காலிகமாகப் பணிபுரிந்த ஆசிரியர்களும் பணியின்றி அனுப்பப் படமாட்டார் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

முறையான கல்லூரியில் சேர இயலாதோர்க்குக் கல்வியைத் தொடர்ந்திட வசதிகள் உள்ளன. மாலை வகுப்புகள் பல கல்லூரிகளில் மாநிலத்தில் நடத்தப்படுகின்றன. மதுரை- - காமராஜ் பல்கலைக் கழகம் பல்வேறு துறைகளுக்குரிய பாடங்களை அஞ்சல் வழியாகப் புகட்டுகின்றன. மேலும் அது, இறந்தவெளிப்பல்கலைக் கழகம் என்டதன் வழியாகப் படிப்பை இடையில் நிறுத்திய இளைஞன் ஒருவன் கல்வியைத் தொடர்ந்து ஒரு பட்டத்தைப் பெறும் வாய்ப்பையும் தந்துள்ளது. அடுத்த கல்வியாண்டு (1979-80) முதல் அண்ணா மலைப் பல்கலைக் கழகம் அஞ்சல் வழியாகப் பாடங்களை வழங்கும்.

**கல்லூரிகளில் தேசிய மாணவர் படை:**

தேசிய மாணவர் படை கல்லூரிகளில் சிறப்பான பங்குவகிக்கிறது. முறையான உடற்பயிற்சி போன்ற இராணுவப் பயிற்சி, கருவிப் பயிற்சி, கருவியில்லாப் போர்ப் பயிற்சி முதலியன மட்டுமின்றிக் குருதிக் கொடை, நிதியும் உடலுழைப்பும் நல்கும் வெள்ள நிவாரணப் பணி, சாலை இடுதல், போக்குவரத்தைக் கட்டுடுப்படுத்தல், கோயில் கலைக் கூடங்கள் புதுப்பித்தல், மருத்துவ மனைகளுக்குச் சென்று வயோதிகர்களுக்கும் ஊனமுற்றோருக்கும் உதவுதல் போன்ற சமுதாயப் பணித் திட்டங்களில் மனத்தை ஈடுபடச் செய்து இளைஞர் உள்ளத்தில் மனிதாபிமான உணர்ச்சிக்கு வித்திடவும் செய்கிறது.

1977-ல் கொண்டு வரப்பட்ட 'வீரசாதனைப் பயிற்சித் திட்டம்' உள்ள உரத்தையும், உடல்வலிமையையும் மேலோங்கச் செய்துள்ளது. சுமைதாங்கிச் செல்லல், மலை ஏறுதல், சைக்கிள் ஓட்டுதல், படகு செலுத்துதலும் இவ்வாண்டு இராணி மேரி கல்லூரி மாணவப் படையினருக்கான 'கடல் உலா'வும் இதில் அடங்கும்.

**தேசியச் சமுதாய நலத்திட்டமும் சமுதாயப் பணித் திட்டமும்:**

சமுதாயப் பணித்திட்டம் கொண்டு வரப்பட்டதால், அடித் தளத்தில் உள்ளவர்களையும், ஏழைகளையும் உயர்த்திடவேண்டும் என்ற மாணவர்களின் கூர்மையான ஆவல் வெளிப்படுகின்றது. திறமை மிக்க ஆர்வமிகுந்த வழிகாட்டலும் தலைமையும் கொண்ட தங்களின் ஆசிரியர்களின் கீழ்ப் பலவிடங்களிலும் மாணவச் சமுதாயம் சுறுசுறுப்புடன் துயர்துடைப்புப் பணிகளில் பங்கேற்ற காரணத்தால் தான் குடிசைப் பகுதிகள் பொலிவுறுகின்றன.

தேசிய சமூக நலத்திட்டம் மாநிலத்தினுடைய தேசிய வளர்ச்சியெனும் குறிக்கோளுக்காகப் பாடுபட்டு வருகிறது. கல்விப் படிப்பைத் தொடருகின்றபோதே, சமுதாயப் பண்பாட்டு மாற்றத்தில் தீவிரப் பங்கேற்றுப் பணியாற்றுமாறு பொதுமக்களைத் தயார்செய்ய, அறியாமைக்கும் வறுமைக்கும் எதிராகத் தெளிவாகத் திட்டமிட்டுத் தளராது போராடும் அரசுக்கு உதவுவதான மாபெரும் பணியில் மாணவர்கள் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேசிய நலத்திட்டம் சமுதாயப்





பணித்திட்டம் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க பணி, கல்லூரி மையங்கள் ஏற்றுக் கொண்டுள்ள கிராமங்களில் நடைபெற்ற 'கிராமப் புனரமைப்பு' பத்து நாள் இளைஞர் முகாம் ஆகும். மாணவர்கள் தங்களின் தனித்தநிலை நின்று இறங்கி ஏழ்மையில் தவிக்கும் மக்களோடு கூடி எளிதாகப் பழகி, அவர்களின் பிரச்னைகளை அறிந்து கொண்டு, ஒரு மேலான இந்தியாவை உருவாக்க உதவுகின்றனர். மாற்றத்திற்கான ஒரு விழிப்புணர்ச்சியை அவர்கள் உருவாக்குகிறார்கள்.

தேசிய சமூக நலத்திட்டம் சமுதாயப் பணித்திட்டம் ஆகியவற்றில் இடுபாடுடைய தொண்டர்கள் இப்போது 'முதியோர் கல்வி' என்ற மாபெரும் பணியை மேற்கொண்டுள்ளனர்.

இத்தகைய வளர்ச்சித் திட்டங்களினாலும், செம்மையாக உருவாக்கப்பட்ட கல்வித் திட்டங்களாலும் தமிழ்நாட்டுக் கல்லூரிக் கல்வியின் எதிர்காலம் உண்மையிலேயே ஒளிரும். இவ்வனைத்துச் சமுதாயப் பயன்தரும், பலன்தரு கல்வித் திட்டங்களால், பயனடைடையும் தமிழ்நாட்டு இளைய ஆடவரும் மகளிரும் ஒளிமிகுந்த எதிர்காலத்தைப் பெறுவர்.

ஆசிரியர்கள், இயற்கையாய், அவர்களைப் பற்றிப் பெருமைப் படுவர். புகுமுக வகுப்பினைக் கைவிடுத்தலால் கல்லூரிக் கல்வியில் இருந்து வந்த தேவையற்ற சுமை குறிப்பிடத் தக்க அளவிற்குக் குறைவது உறுதி. இதன் பயனாய்க் கற்பித்தலில் தர. மேம்பாட்டையும் ஆராய்ச்சியையும் உயர்கல்வித் துறைகள் அனைத்திலும் புதுமையையும் கொண்டு வர முடியும். காளையரும் கன்னியரும் இன்றைய நிலையிலிருந்து மேம்பட்டு மேலான எதிர்காலத்தை உறுதியாய்க் காண்பர்!

**ஆசிரியர்களுக்கான மாற்றுப்பணி விரிவாக்கம்.**

அடுத்த ஆண்டு புகுமுக வகுப்பு கைவிடப்படுவதால் தேவைக்கு மேல் உள்ளவர்களாகும் கல்லூரி ஆசிரியர்களை மாற்றுப் பணியில் அமர்த்திக் கொள்வதற்கான ஒரு திட்டம் செயல்படுத்துவதற்குத் தயாராக உள்ளது. மிகுதியாயுள்ள ஆசிரியர்களில் சிலருக்கு வேலைவாய்ப் பளிக்கத் தொடர்புடைய பல்கலைக் கழகத்தின் ஆலோசனையுடன் சில கல்லூரிகளில் முதற் பாடம் இணைப்பாடம் ஆகிய புதிய பாடத்துறைகள் தொடங்கப் பெறும். மிகுதியாக உள்ள ஆசிரியர்கள் எம்ஃபில் படிக்கவும் மாநில அரசால் அனுப்பப் பெறுவர். சமுதாயப் பணித் திட்ட வேலையும் கல்லூரி இணையங்களின் தொடர்புத் திட்டங்களும் எஞ்சிய ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பினைத் தரும்.

**பல்கலைக் கழக மானியக்குழு ஊதிய வீதங்கள் செயல்படுத்தல்:**

கல்லூரி ஆசிரியர்களுக்கு 1.1.1977 முதல் பணப்பயன் பெறும் வகையில், 1.1.1977 லிருந்து பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய வீதங்களை மாநில அரசு செயல்படுத்தியுள்ளது. கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் இப்போது பல்கலைக் கழக மானியக் குழு ஊதியம் பெற்று வருகின்றனர். கலைக் கல்லூரிகளில் பேராசிரியர்கள் ஆற்றிவரும் சீரிய பணியை அறிந்தேற்று, மாநில அரசு அவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தின் தொடக்கத்தை ரூ. 1,100-ஆக உயர்த்தி வழங்கியுள்ளது. கல்லூரி முதல்வர்கள் அனைவரும் ரூ. 1,200-1900 ஊதிய வீதம் பெறச் செய்யப்பட்டது. மூன்றாம் ஊதியக் குழு பரிந்துரைத்த, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவற்றின் பயன்கள் கல்லூரியில் பணிபுரிவோர்க்கும் பரிந்துரைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளால் மாநிலத்தில் கல்லூரி ஆசிரியர்கள் கணிசமான கூடுதலான மொத்த வருமானத்தைப் பெற முடிந்தது.

**பயிற்றுநர் விளக்குநர் பதவி நிலை உயர்த்துதல்:**

கல்லூரிகளிலுள்ள பயிற்றுநர் விளக்குநர் இனத்தை நீக்குவதென அரசு முடிவெடுத்துவிட்டது. தம்பாடத்தில் முதுநிலைப் பட்டம் பெற்ற, தகுதிவாய்ந்த மூன்றாண்டு பணிபுரிந்த பயிற்றுநர்களும், விளக்குநர்களும் 1.12.77 முதல் துணைப் பேராசிரியர்களாகப் பதவி நிலை உயர்வு பெற்றனர். இதுவரை 415 அரசுக் கல்லூரி ஆசிரியர்களும், 916 உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களும் உயர்த்தப் பட்டுள்ளனர்.

**உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கான விடுப்பும் ஓய்வுக்கால பயன்களும்:**

உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு இதுவரை கிட்டாதிருந்த விடுப்பு, ஓய்வுக் காலப் பயன்கள் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளன. தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் அவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

**கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியரல்லாதார்:**

உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் போலவே, ஆசிரியரல்லாதாருக்கும் பணிப்பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது. 1.4.1979 முதல் ஊதியமும் படிகளும் மூன்றாம்



ஊதியக் குழுவின் பரிந்துரையின் படி திருத்தியமைக்கப்பட்டுள்ளன. ஐந்து ஆண்டுப் பணி நிறைந்த சார்புநிலைப் பணியாளர்களின் பணிகள் 1.1.79 முதல் நிலைப்படுத்தப்பட்டன. விடுப்பு ஓய்வுகாலப் பலன்கள் ஆசிரியரல்லார்க்கும் நீட்டிக்கப்பட்டன.

**உதவிபெறும் கல்லூரிகளுக்கு நிதி வழங்கல் :**

உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதால் ஏற்படும் பணப்பற்றாக் குறையில் 100 விழுக்காடு 1.6.77 முதல் ஏற்றுக் கொள்வதற்கு அரசு முன்வந்துள்ளது. ஊதியங்களைக் குறித்த காலத்தில் முழுமையாகத் தருவதற்கு வசதியாக உதவிபெறும் கல்லூரிகளின் நிருவாகங்களுக்கு இவ்வாண்டில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் முன் நிதிகள் தடங்கலின்றித் தரப்பட்டன. கணக்குத் தணிக்கை முடிந்ததும் ஊதியச் சார்பில்லா நிதிகளும் விடுவிக்கப்பட்டன. உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரடிச் சம்பளம் வழங்கலுக்கான ஒரு திட்டம் ஆய்வில் உள்ளது.

**மாணவர்க்கான வசதிகள் :**

மாணவர்களின் வசதிகளைப் பெருக்குவதன் தேவையை உணர்ந்து சிற்றுண்டிச்சாலைகள், சைக்கிள் கொட்டகை, தண்ணீர் வழங்குதல், சுகாதாரச் சூழல் முதலிய மாணவர்க்கான வசதிகளைப் பெருக்கிட அரசு கல்லூரிகளுக்கும் உதவிபெறும் கல்லூரிகளுக்கும் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அரசு கல்லூரிகளில் விளையாட்டுத் திடல்களின் மேம்பாட்டுக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏழைமாணவர்கள் பாடப் புத்தகங்களை இரவலாகப் பெற்று ஆண்டு முழுமையும் பயன்படுத்திக்கொள்ளத்தக்க வகையில் நூலகங்களில் புத்தக வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன. நேரிய விலையில் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள் முதலியன விற்கும் மாணவர் கூட்டுறவுக் கடைகள், பல கல்லூரிகளில் உள்ளன. மாணவர் இல்லங்களில் மாணவர்களுக்கு வசதிகளைப் பெருக்க வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

**மாணவர்க்கான கட்டணச் சலுகைகளும், படிப்பு உதவித்தொகைகளும் :**

வருமான எல்லை இன்றித் தாழ்த்தப்பட்ட, மலைச்சாதியைச் சார்ந்த மாணவர்களுக்கு முழுக்கட்டணச் சலுகை உண்டு. பெற்றோரின் ஆண்டு வருவாய் ரூ 1,500-க்கு மிகாமல் இருந்தால் மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் முழுக் கட்டணச் சலுகை உண்டு. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 1,500க்கும் கீழிருந்தால், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும், மாணவ மகளிர்க்கும் அரைக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட - மலைச்சாதி, பிற்பட்ட வகுப்பு மாணவர்கள், மாநில அரசின் சமூக நலத்துறை வழங்கும் படிப்பு உதவித் தொகைகளைப் பெறத் தகுதியுள்ளவராவர். தேசிய படிப்பு உதவித் தொகை, பள்ளியாசிரியர் குழந்தைகளுக்கான தேசிய படிப்பு உதவித் தொகை, தேசிய கடன் படிப்பு உதவித்தொகை ஆகியவையும், தம் பெற்றோர்க்கான ஆண்டு வருமானம் ரூ. 6,000க்கு மிகாமல் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசியல் தியாகிகள், இராணுவப் பணியாளர், மறைந்த அரசு ஊழியர் ஆகியோரின் சந்ததியினருக்கும் சலுகைகளும் படிப்பு உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன. தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகைகளை மாநில அரசு அளிக்கிறது.

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மிகாமல் உள்ள தகுதி வாய்ந்த மாணவர்களுக்குப் புகுமுக வகுப்பு, பட்ட வகுப்பு ஆகிய கல்வி நிலைகளில் மாநிலப் படிப்பு உதவித்தொகை அளிக்கப்படுகிறது. பள்ளி இறுதித் தேர்வில் 60 விழுக்காடு மதிப்பெண்ணுக்கு மேலும் பெற்றுப் புகுமுக வகுப்பிலும், புகுமுக வகுப்புத் தேர்வில் 60 விழுக்காடு மதிப்பெண்ணுக்கு மேலும் பெற்றுப் பட்ட வகுப்பில் ‚ சேரும் தாழ்த்தப்பட்ட மலைச்சாதி மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கிய சிறப்பு நிதியாக ரூ 300 கொடுக்கப்படுகிறது.

**தனிப்பயிற்சித் திட்டம் :**

தாழ்த்தப்பட்ட - மலைச்சாதியைச் சார்ந்த தகுதி மிக்க மாணவர்கள் தங்களின் ஆற்றலை வளர்த்துக் கொள்ள தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. 1978-79-ல் இவ்வகுப்புக்களை நான்கு மையங்களில் நடத்துவதற்கு ஏறக்குறைய ரூ 58,000 செலவிடப்பட்டுள்ளது.

**பிற திட்டங்கள் :**

மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஆய்வுக்கூட வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு கல்லூரி இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 10 முதல் 15 கிலோ மீட்டர் தூரத்தில் சுற்றிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளின் தேவைக்கு உதவிட ஒவ்வொரு கல்லூரியும எதிர்பார்க்கப்படுகிறது. கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் - ஆசிரியரல்லாதார், கருவிகள், ஆய்வுக்கூடத்திலுள்ள வசதி ஆகியவற்றைக் கல்லூரி இணையங்கள் திறம்பட பயன்படுத்திக் கொள்ளும்.

## கல்விக்கே அதிகத் தொகை!

**த**மிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கையில் கல்விக்கான நிதி ஒதுக்கம் தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது.

கல்விக்காக 1979-80—ஆம் ஆண்டில் ரூபாய் 209 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை 1979-80—ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 849 கோடியில் 25 விழுக்காடாகும்.

வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

கல்வி மானியத்தின்கீழ் 1975-76-ல் ரூபாய் 123 கோடியும், 1976-77-ல் 143 கோடியும், 1977-78-ல் ரூபாய் 163 கோடியும், செலவாயின.

1979-80-க்கான திருத்த மதிப்பீடு ரூபாய் 191 கோடியாகும். கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதை இது காட்டும்.

** ** ** ** **

கல்விச் செலவில் பெரும் பகுதி பள்ளிக் கல்விக்குத்தான் ஆகிறது. 1979-80-ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 209 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூபாய் 160 கோடியாகும்.



| மாநிலம் | தொழிற் கல்வியில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| தமிழ்நாடு | 24,400 |
| குஜராத் | 3,516 |
| கர்நாடகம் | 2,412 |
| மேற்குவங்காளம் | 2,300 |
| மகாராஷ்டிரம் | 2,400 |
| டில்லி | 1,180 |

**''பயிலும்போதே ஊதியம் ஈட்டுதல்''- தொழிற்பயிற்சி- சட்டாம்பிள்ளைகள் திட்டம்.**

தலைமைக்கான தகுதிகளை வளர்க்கும் நோக்கத்துடன், சட்டாம்பிள்ளை முறை மீண்டும் மாணவரிடையே கொண்டு வரப்பட்டுள்ளது. அது புகழ்பெற்ற தொன்மையான முறை என்பதோடு ''சென்னைத் திட்டம்'' என்ற பெயரில் முன்னர் ஆங்கிலேயரும் அதைப் பார்த்துப் பின்பற்றிய சிறப்புடையதாகும். இத்திட்டத்தின் கீழ், பகுதி நேர ஆசிரியர்களுக்கு உதவி புரிய பாட வகுப்பு ஒன்றுக்கு ஒருமாணவர் சட்டாம்பிள்ளையாய் நியமிக்கப்படுகிறார். இவருக்கு வருடத்தில் 10 மாதங்களுக்கு, மாதம் ரூ20 -வீதம் ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த ஊதியம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு இந்த ஊக்கத் தொகை பேருதவியாக உள்ளது. அறிவியல் சோதனைக் கூடங்களுக்கும் இத் திட்டத்தை விரிவாக்குவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

**தொழிற்சாலைகளுடன் தொடர் :**

தொழிற்பயிற்சி குறித்து இந்திய அரசின் கல்வித்துறை செயலாளர் திரு. பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ். அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் பரிந்துரைக்கிணங்க, பள்ளிகளுக்கு அருகாமையில் உள்ள தொழிற்சாலைகள், வங்கிகள் பண்ணைகள், பணி நிறுவனங்கள் ஆகியவற்றுடன்தொழிற் பயிற்சிப் பாடக் குறைகள் இணைக்கப்பட்டுள்ளன.

தொழில், வணிக நிறுவனங்களுடன் தொழிற் பயிற்சிக் கல்வியை இணைப்பது குறித்து, பெருந்தொழிலதிபர்கள், வர்த்தகச் சபைத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியவர்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டது.

தொழிற்சாலை அலுவலர்களுடன் கல்வித்துறை அலுவலர்கள் இது பற்றிக்கொண்ட தொடர்பு பயனுள்ளதாக அமைந்தது. கல்வி அமைச்சர் சென்னையில் உள்ள அனைத்து வர்த்தகச் சபை அலுவலருடனும் கலந்துரையாடினார். கல்வித்துறைக்கும், தொழில் துறைக்கும் இடையே பயனுள்ள இணைப்புப் பாலம் உருவாகியுள்ளது.

**மாவட்ட தொழில் முறைப் பயிற்சிக் குழு :**

வருவாய் மாவட்டம் ஒவ்வொன்றிலும் தொழில் முறைப் பயிற்சி கல்வி குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், முதன்மைக் கல்வி அதிகாரியை அமைப்பாளராகவும் கொண்ட மாவட்டக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. மருத்துவம், பொது சுகாதாரம், தொழில் வணிகம், வேலை வாய்ப்புப் பயிற்சி ஆகிய துறைகளில் உள்ள மாவட்ட அதிகாரிகள் குழுவின் உறுப்பினர்களாக இருந்து குழுவிற்கு வழி காட்டுகின்றனர். இம்முறையின் மூலமாகக் கல்வியுடன் வேலையினையும் இணைக்கும் நோக்கம் நிறைவேறி வருகிறது. இதுவரையில் இந்தத் துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மனநிறைவடையலாம். ஆனால், கல்வியை வேலையோடு இணைக்கும் முறையை இன்னும் உறுதிபடுத்த வேண்டியுள்ளது. பொது நிறுவனங்களை முதன் முறையாகப் பள்ளிகளுக்குக் கொண்டு செல்லும் இப்பணி அதாவது இன்னும் சரியாகச் சொல்லப்போனால் பள்ளி மாணவர்களை அந்நிறுவனங்களுக்குக் கொண்டு செல்லும் பணி எளிதானதல்ல.

**தொழில்களை நேரடியாகத் தாமே செய்து கற்றல்**

**மாதிரி ஆய்வுகள்**

தொழில்களை நேரடியாக மாணவர்கள் தாமே செய்து பயிற்சி பெறச் செய்வதில் அரசு முனைப்பாக உள்ளது. அந்தந்த வேலையைச் செய்து நடைமுறைப் பயிற்சி பெறுவது என்பது தொழிற் பயிற்சித் திட்டத்தின் முக்கியமானதொரு அம்சமாகும். சான்றாக, ''செவிலியர் பணி'' யைத் தமது பாடமாக எடுத்துள்ள மாணவ மாணவியர் அருகாமையில் உள்ள மருந்தகங்களில் அல்லது மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு நடக்கும் மருத்துவப் பணிகளை நேரடியாகக் காணும் வாய்ப்பைப் பெறுகின்றனர். கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகள் ஊக்கமளிப்பவையாக உள்ளன.

அ. அவ்வை இல்லம் மேல்நிலைப்பள்ளி, அடையாறு சென்னை. இப்பள்ளியில் மாணவர்கள் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர் செவிலியர் பணியின் அடிப்படை வழிமுறைகள் கற்றுத் தரப்படுகின்றன.

ஆ. எம். என். வி. ஜெயராஜ் நாடார் மேல்நிலைப்பள்ளி, நாகமலை. சிறு பண்ணை நிருவாகம்என்னும் தொழிற் பாடம் இங்கு நடத்தப்படுகின்றது. மாணவர்க

ளுக்கு இப் பள்ளியின் பண்ணையில் தீவிரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மதுரையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலுள்ள உயிரியல், தாவரயியல் துறைகள், திருநகரிலுள்ள மண்வளச் சோதனை ஆய்வுக்கூடம், பசுமலையிலுள்ள விதைப் பண்ணை, ஆகியவை மாணவர்களுக்கு பண்ண்ணைப் பயிற்சி அளிப்பதற்குப் பேருதவியாக உள்ளன..

இ. சர்வஜன மேல்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர் இப்பள்ளி, மிக அதிகமான தொழிற்பாடங்களை (6 பல்வேறு தொழில் பாடங்களை) நடத்தி வருகிறது. இங்கு மாணவர்களுக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கப்படுவதால், இந்தப் பாட வகுப்பில் பயிலும் 180 மாணவர்களில் எவரும் பாதியில் விட்டுச் செல்வதில்லை.

ஈ. வெஸ்லி மேல் நிலைப் பள்ளி, சென்னை. இப்பள்ளியில் தொழிற் பாடங்கள் மட்டுமே நடத்தப்படுகின்றன. தொழிற் பயிற்சிப் பாடங்களில் உள்ள ஆர்வத்தை எடுத்துக் காட்டுவதாக இது அமைந்துள்ளது.

### தொழில் கல்வியில் பணிப்பயிற்சி:

### தலைமை ஆசிரியர்களுக்கு

நல்ல மாணவர்களைப் பள்ளிகளில் உருவாக்குவதில் தலைமை ஆசிரியரின் நிருவாகத் திறனுக்கு முக்கியமான பங்கு உண்டு. இதனைக் கருத்தில் கொண்டு, தொழிற் பயிற்சி வகுப்புகளைக் கொண்டுள்ள மேல்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியர்களுக்கு ஆறு மாவட்டங்களில் மறு பயிற்சி அளிக்கப்படுகிறது.

### தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்கான கோடைக்கால வகுப்பு

ஆசிரியர்களுக்குத் தொழிற் பயிற்சியில் மறு பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் புது டில்லியிலுள்ள கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி தேசிய நிறுவனம் ஆறு கோடைக் காலப் பயிற்சி வகுப்புகளை நடத்த முன்வந்துள்ளது. இப் பயிற்சிக் கால அளவு 21 நாட்கள். அந்நிறுவனத்தில் ''கல்வியைத் தொழில் மயமாக்குவதற்கான'' துறையின் பேராசிரியரும் தலைவருமான திரு சி.வி. கோவிந்தராவ் அவர்களின் முயற்சியாலும், ஒத்துழைப்புடனும்



இந்த வகுப்புகள் கோடை விடுமுறையின் போது நடத்தப்படும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வித்துறை அலுவலர்கள் ஆகியோரின் சிறந்த ஒத்துழைப்புடன், முக்கியமான இந்தக் கல்விச் சீர்திருத்தம் தமிழ்நாட்டில் வெற்றி பெறுவது உறுதி என்பது திண்ணம். 10+2+3 என்ற ஒரே மாதிரியான கல்வி அமைப்பு நாட்டு ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வலுபடுத்தும். இந்தியாவின் பல மாநிலங்களிலும் வழங்கப்படும் சான்றிதழ்களும் சமமானவையாகிவிடுமாதலால் மாணவரும் பெற்றோரும் ஒரு மாநிலத்தினின்று மற்றொன்றிற்குச்செல்ல இந்த அமைப்பு உதவும். படித்த இளைஞர்களிடையே தன்னம்பிக்கையையும் மனநிறைவையும், மகிழ்ச்சியையும் இப்புதிய திட்டம் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

### அரசுத் தேர்வுகள்:

தற்கால நிலைக்கேற்ப, தேர்வு முறையில் சில சீர்திருத்தங்கள்



செய்யப்பட்டுள்ளன. அவை வருமாறு:

### அ. பகுதி முறைத் தேர்வு:

மேல் வகுப்பில் சேருவதற்குத் தகுதி பெற வேண்டுமானால், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் ஒரே தடவையில் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை முன்பு இருந்தது. இப்பொழுது அதை மாற்றி, பகுதி முறைத் தேர்வு முறையை அரசு அமலுக்கு கொண்டு வந்துள்ளது. இம்முறையில், ஒரு மாணவன், தான் தவறியுள்ள பாடங்களை மட்டும் மீண்டும் எழுதி அதில் தேறினால்போதும். இது, தமிழக அரசு கல்வித்துறையில் கொணர்ந்துள்ள ஒரு முதன்மைவாய்ந்த சீர்திருத்தமாகும். இதனால் நலிந்த பிரிவைச் சார்ந்த மாணவர்கள் பெரிதும் பயன் பெறுவர் என்பது திண்ணம்.

### ஆ. அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் பள்ளித் தேர்வு:

### (Open School System)

14 வயது நிரம்பியவர்கள் எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வை எழுதலாம். ஆங்கிலத்துடன் எட்டாம்வகுப்புப்பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற 18 வயது நிரம்பியவர்கள், எஸ்.எஸ் எல்.சி தேர்வையும் தனிப்பட்ட முறையில் எழுத அனுமதிக்கப்படுவர். முறையாகப் பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர்களின் நன்மைக்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சீர்திருத்தங்களால் தமிழ்நாடு, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது.



# தமிழகத்தில் பள்ளிக் கல்வி

டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியம்
பள்ளிக் கல்வி இயக்குநர்

பிறவிகளுள் மிகச்சிறந்த பிறவி மனிதப்பிறவியேயாகும். கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியை மாண்புறச்செய்வது கல்வியேயெனில் அது மிகையாகாது.

அறம் பொருள் இன்பமும்
வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையும்
நாட்டும்;- உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும்;
கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை.

என்று நீதி நெறி விளக்கம், கல்வியின் பயனைப்பற்றிப் பேசுகின்றது. ஒருவனுக்கு நிலையான செல்வமாக அமைவது கல்வியேயாகும். இன்றைய குழந்தையை எதிர்காலத்தில் நல்ல குடிமகனாக வாழச் செய்வது கல்வியேயாகும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த கல்வியை நல்குவது, அனைவரது கடமையாகும். எனவேதான், நம்முடைய அரசு இலவசமாகக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. இதற்காக நம்முடைய அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அரசின் கருணைமிக்க இந்த ஏற்பாட்டினால், நலிந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகளும் கல்வி அறிவு பெற்று சமுதாயத்தில் சிறப்புற்று வாழ, வழி ஏற்படுவது திண்ணம். இதனால் நாட்டின் நிலை உயரும்.

பள்ளிக் கல்வியின் இன்றியமையாமையையுணர்ந்த நம் அரசு, கல்விச் செலவில் பெரும் பகுதியைப் பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியுள்ளது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். 1979-80ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 209 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூபாய் 160 கோடியாகும். தமிழ்நாட்டில் மொத்தம் 36,238 பள்ளிகள் உள்ளன. அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 27,425; உயர் தொடக்கப்பள்ளிகள் 5,705; உயர் நிலைப்பள்ளிகள் 3,108 எனத் தொகுத்துக்கூறலாம்.

இந்த உயர்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கையில் 912 மேல் நிலைப்பள்ளிகள் அடங்கும். மேற்குறித்த பள்ளிகள் அனைத்திலும் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2½ இலட்சம் ஆகும். கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 85.43 இலட்சமாகவுள்ளது.

### தொடக்கக் கல்வி:

6-11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94 விழுக்காட்டினரும், 11-14 வயது தொகுதிச் சிறுவரில் 58 விழுக்காட்டினரும் இது வரை பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1978-79 ஆம் ஆண்டில் இருந்த 33,130 தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 67.46 இலட்சமாகும். ஆசிரியர் மாணவர் விகிதம் 1:37 ஆகும். இப்பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,81,887 ஆகும்.

தொடக்கப்பள்ளியில் சேரும் மாணவ, மாணவியர் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்று விடும் நிலையினை மாற்ற பலநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிடைத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து, முதல் வகுப்பில் சேரும் மாணவர்களுள் 58 விழுக்காட்டினரே 5 ஆம் வகுப்புவரை தொடர்ந்து படிக்கின்றனர் என்றும், மீதி 42 விழுக்காட்டினரும் இடையிலேயே பள்ளியை விட்டு நின்று விடுகின்றனர் என்றும் அறிகின்றோம். தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத்திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ, மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய உதவுகின்றன. மேலும், தமிழகத்தில், 1 முதல் 3 வகுப்பு

களில் பயிலும் மாணவ, மாணவியர் அனைவரையும், மேல் வகுப்பிற்கு அனுப்பும் முறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**நண்பகல் உணவுத் திட்டம்:**

தொடக்க உயர் தொடக்கப் பள்ளிகளில் (1-8 பள்ளிகளில்) பயிலும் ஏறக்குறைய 20.25 இலட்சம் மாணவர்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறக்குறைய ரூ 5.37 கோடி செலவிடப்படும். 'கேர்' நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிடைக்கும் சுமார் 20,000 டன் உணவுப் பொருள்களைப் பள்ளி நண்பகல் உணவுத்திட்டம் பயன்படுத்துகிறது.

மைய சமையற்கூடத் திட்டம், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயற்பட்டு வருகிறது. அங்கு நவீன அடுப்புகளில், சுகாதார முறைப்படி சமைக்கப்பெற்ற உணவு, சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகட்கு மூடப்பட்ட வண்டிகளில் எடுத்துச் சென்று வழங்கப்படுகிறது.

இம்மாவட்டங்களில் இயங்கி வரும் 97 சமையற்கூடங்களும், 'கேர்' நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையர்கும். இம்மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். மைய சமையற் கூடங்களிலிருந்து, பள்ளிகட்கு உணவை எடுத்துச் சென்று வழங்க 224 உந்து வண்டிகளையும் 'கேர்' நிறுவனம் வழங்கியது. இந்தச் சீரிய திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக இந்தத் திட்டம் வரும் நிதி ஆண்டில் இராமநாதபுரம், தருமபுரி வருவாய் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப் பெற்று, அந்த மாவட்டங்களில் 42 மத்திய சமையற்கூடங்கள் நிறுவப் பெறும். நிறுவனச் செலவு ரூ. 144 இலட்சம் ஆகும். இதில் 45 விழுக்காட்டுச் செலவினை, 'கேர்' நிறுவனம் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினால் மாணவர்களுக்கு நன்முறையில் சமைக்கப்பெற்ற சத்துணவு கிடைப்பது மட்டுமின்றி ஆசிரியர்களுக்கு மதிய உணவு வழங்கும் பொறுப்பு வெகுவாகக் குறைக்கப்படுகிறது. உணவுப் பொருள்களைச் சேமித்துவைக்க 'கேர்' நிறுவன உதவியுடன், வட்டாரக் கிடங்குகள் ஒன்பதும் அடையாற்றில் மையக்கிடங்கு ஒன்றும் கட்டப்பட்டுள்ளன.

**இலவசப் புத்தகங்கள் வழங்குதல**

1 முதல் 3 வகுப்புக்களில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், கற்பலகைகளும் இரண்டு மூன்று வகுப்புகளில் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 13 இலட்சத்திற்கு அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். இலவசமாகப் புத்தகங்களை வழங்குவதற்கான செலவை, தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் ஏற்றுள்ளது.

**அறிவியல் சாதனங்கள்:**

தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் கற்பித்தலை மேம்படுத்தும் பொருட்டு, பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் சாதனங்களை வாங்கும் பொருட்டு, ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முந்நூறு ரூபாயும், ஒவ்வொரு உயர் தொடக்கப்பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதனால், 12,620 தொடக்கப்பள்ளிகளும், 3,980 உயர் தொடக்கப்பள்ளிகளும் பயனடைந்துள்ளன.

**தொடக்கப்பள்ளிக் கட்டடங்கள்**

பள்ளிக் கட்டடங்கள், கட்டுவதற்காக உள்ளாட்சி நிறுவனங்கட்கும், தனியார் நிறுவனங்கட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1979-80ல் நகராட்சி மற்றும்

**கல்வியின் நோக்கம் அறிவு தேடுவது ஆகும். எல்லாக் கல்வியின் நோக்கமும் நல்ல மனிதனை உருவாக்குவதாகவே இருக்கவேண்டும்!**

**—விவேகானந்தர்**

தனியார் தொடக்கப்பள்ளிகளுக்குக் கட்டட மான்யம் தர ரூ. 4 இலட்சமும் அரசுத் தொடக்கப்பள்ளிக் கட்டடங்களுக்காக ரூ 17 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1979-80ல் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கூடங்களுக்காக ரூ 1 கோடி சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு செலவுத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும்.

**உயர்நிலைப்பள்ளிக் கல்வி :**

1978-79ல் தமிழகத்தில் 3,108 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இப்பள்ளிகளில் 65,379 ஆசிரியர்களும், 16.83 இலட்சம் மாணவர்களும் இருந்தனர். 3108 உயர்நிலைப்பள்ளிகளில் 912ல் மேல்நிலைப் பள்ளி முதலாண்டு வகுப்பும் இருந்தன.

**அறிவியல் கல்வி:**

புதிய பாடத்திட்டத்தின்கீழ் ஆறாம் வகுப்பிலிருந்தே இயற்பியல், வேதியல், உயிரியல் ஆகியவை தனித்தனிப் பாடங்களாக கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக்கூடங்களை





**பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் தொழிற்சாலைகள் போன்றவை. அங்கே உயர்ந்த பண்புள்ள மனிதத் தன்மை என்ற அருமையான பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது!**

**—காந்தியடிகள்.**

அமைப்பதற்கான திட்டத்தின் கீழ், தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் ரூபாய் 55,000- செலவிடப்படுகிறது. (அறிவியல் ஆய்வகக் கட்டடத்திற்கு ரூ. 37,000- என்றும் அறிவியல் கருவிகளுக்கு ரூ. 18,000- என்றும் பிரிக்க வேண்டும்.) தனியார் மற்றும் நகராட்சி உயர் நிலைப்பள்ளிகள் பெறும் மானியம் ரூ 40,200- ஆகும். 1979-80ல் மேலும் 25 உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர் நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம், தற்போது 48 கல்வி மாவட்டங்களில், 42 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட ஊர்தி உள்ளது.

**நூலக வசதி :**

உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொருத்தமான நூல்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ 7 இலட்சம், இதற்காகச் செலவிடப்பட்டது. 1979-80ல் இப்பணிக்கு ரூ 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஒலி-ஒளிக்கல்வி :**

மக்கள் அளித்த நன்கொடை வாயிலாக, எல்லாப் பள்ளிகளிலும் வானொலிப் பெட்டிகள் இடம் பெற்றுள்ளன. 700 உயர்நிலைப்பள்ளிகளில் 16 மி.மீ திரைப்படம் காட்டும் கருவிகளும், 1250 பள்ளிகளில் துண்டுப் படம் காட்டும் கருவிகளும் உள்ளன. பள்ளிக்கல்வி இயக்குநரகத்திலுள்ள "மாநில திரைப் படச்சுருள் சேமிப்பகம்" பள்ளிகளுக்குத் திரைப்படங்களையும், துண்டுப்படங்களையும் கடனாக வழங்கி வருகிறது. சென்னையிலும், அதன் அண்மையிலும் (90 கி.மீ. வரை) உள்ள பள்ளிகள், சென்னைத் தொலைக் காட்சி நிலையத்தின் கல்வி ஒளி பரப்பின் மூலம் பயனடைகின்றன. இதற்கு உதவும் வகையில் 'கல்வித் தொழில் நுட்பப்பிரிவு' ஒன்று பள்ளிக்கல்வி இயக்ககத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**பள்ளி இணையங்கள் :**

2178 உயர்நிலைப்பள்ளிகளில் பள்ளி இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை, தொடக்கப் பள்ளிகளில், கல்வியின் தரத்தை உயர்த்த உதவுகின்றன. தொடக்கப்பள்ளிகளின் தேவைகளையும் நிறைவேற்றுகின்றன.

**உயர்நிலைப்பள்ளிக் கட்டடங்கள் :**

நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப்பள்ளிகளுக்கு கட்டடமானியம் அளிக்க 1979-80ல் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உயர்நிலைப்பள்ளிகளின் கட்டடப்பணிகளுக்காக 1979-80ல் ரூ 37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**நடமாடும் மருத்துவ ஊர்திகள் :**

சென்னை தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென, நடமாடும் மருத்துவ ஊர்திகள் இயங்கி வருகின்றன.

**மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் :**

தமிழ்நாட்டில் 31 மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் உள்ளன. இவை முன்னர், சென்னை மதுரைப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்திருந்தன. 1976-ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து இவை, பள்ளிக்கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டன.

**ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் :**

இப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடமிருந்து 1978-79ஆம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. ஆனால், ஆங்கிலோ- இந்தியரல்லாத பிற மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும். ஆங்கிலோ இந்தியப் பள்ளி நிருவாகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மானியம் தரப்படுகிறது.

**தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் :**

தமிழ்நாடு கல்வி நிறுவனம், தமிழ்நாடு அறிவியல் கல்வி நிறுவனம், மாணவர் கல்வித்தர மதிப்பீட்டிற்கான மாநிலப்பிரிவு ஆகிய மூன்றையும் இணைத்து, 1975-ல் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது. அது பள்ளிக் கல்வி நிலை ,ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது. 28.8.78ல் இருந்து இந்நிறுவனம், அரசுத் தேர்வு இயக்குநர் பொறுப்பிலிருந்து, பள்ளிக் கல்வி இயக்குநர் பொறுப்பிற்கு மாற்றப்பட்டது.



### மேல்நிலைப் பள்ளிக்கல்வி :

'கேடில் விழுச்செல்வம்' என்று கல்வியின் சிறப்பை, திருவள்ளுவர் எடுத்துக் கூறுகிறார். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை நாம் அறிவோம். 'வீதி தோறும் இரண்டொருபள்ளி' என்ற மகாகவி பாரதியாரின் கனவு நனவாகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். சீர்திருத்தம் சமுதாயத்தில் மட்டுந்தானா? கல்வியிலும் வேண்டுமன்றோ? அதனால் ஒரு புதிய திட்டம் உருவாகியது. இதைத்தான் 10+3+2 என்று கூறுகிறோம். இதனை 'மேல் நிலைப் பள்ளிக் கல்வி' என்று கூறுகிறோம்.

1978-79 முதல், தமிழ்நாட்டில், மேல் நிலைப் பள்ளிக்கல்வி தொடங்கப்பட்டுள்ளது. + 2 நிலையாகிய மேல்நிலைப் பள்ளிக் கல்வி இரண்டாண்டுகள் கொண்டது. அதன் முதலாண்டு வகுப்பு 1.7.1978 முதல் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒவ்வொரு நகராட்சியிலும் ஒரு மேல்நிலைப் பள்ளியாவது இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், மேல் நிலைக்கல்வி வசதி அளிப்பதற்கான பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. தொழில் சார்ந்த கல்விக்கு முதன்மை அளிக்கும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி வசதி கிராமப்புற மக்களுக்கெல்லாம் எளிதில் கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன், கிராமப்புற பகுதிகளின் தேவைக்கு முதன்மை அளித்து அப்பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. 912 பள்ளிகளில், மேல்நிலைப்பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேல்நிலைக் கல்வியின் முதலாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,14,000 ஆகும். புகுமுக வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 78,000 ஆகும். இவ்வாறாக மேல் நிலைக்கல்வியின் முதலாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை புகுமுக வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் 36,000 அதிகமாகவுள்ளது.



இதனைக் கீழே கொடுத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம். மேல்நிலைக் கல்வியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொத்த மாணவர்கள்.

| | |
|---|---|
| பொதுப்பாடக் கல்விப்படிப்பு: | 89,600 |
| தொழிற்க்கல்விப்படிப்பு | 24,400 |
| மொத்தம் | 1,14,000 |

| | |
|---|---|
| புகுமுக வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 78,000 |
| அதிகமாகச் சேர்க்கப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. | 36,000 |

இத்திட்டம், குறிப்பாக, கிராமப் புறத்திலுள்ள ஏழை, மற்றும் நலிந்த பிரிவினருக்கு ஒரு மகிழ்ச்சியான வரமாகும். ஒவ்வொரு அரசு மேல் நிலைப்பள்ளியிலும் பல்நோக்குச் சோதனைக்கூடத்துடன் வகுப்பறை ஒன்றும் கட்ட ரூ. 1.57 இலட்சம் செலவிடப்படும்.

1979-80ல் ஒவ்வொரு மேல் நிலைப்பள்ளிக்கும் ரூ. 6,000-மதிப்புள்ள நூல்கள் வழங்கப்படும். மேல் நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்விப் படிப்பில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 24,000 - என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். தொழிற் கூடங்களின் பட்டியலை 6 பெரும் பிரிவுகளாகப் பிரித்து அதனுள் 37 பாடங்களை அடக்கியுள்ளனர்.

பட்டினங்களிலும், பெரு நகர்களிலும் அமைந்துள்ள கல்லூரிகளில் தங்கிப் படிக்க, பிள்ளைகளைப் பெற்றோர்கள் அனுப்ப வேண்டியிருப்பதால் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்காக அதிகச் செலவு செய்கின்றனர். மேல் நிலைப் பள்ளிகளைக் கிராமப்புறங்களில் அமைப்பதன் வாயிலாக ஒரு புறம் பெற்றோர்களுக்குப் பணச் செலவு குறைகின்றது. மற்றொரு புறம் உயர் கல்வியால் பயனடையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. மேல்நிலைப் பள்ளிக் கல்வியால் மாணவர்கள் தொழில் திறமையுடன் தாமாக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

### முன்னணியில் தமிழகம் :

சீர்திருத்திய புதிய கல்வித் திட்டத்தின் காரணமாகதொழிற் கல்வி முறையைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு பிற மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் உள்ளது மனநிறைவைத் தருகிறது. நடப்பாண்டில் தொழிற் கல்வி பயிலச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:

## பயிற்று மொழி

மேல் நிலைப்பள்ளி மாணவர்களின் பயிற்று மொழி பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | தமிழும் சிறுபான்மை மொழிகளும் | ஆங்கிலம் | மொத்தம் |
|---|---|---|---|
| பொதுக் கல்வி | 65,300 | 24,300 | 89,600 |
| தொழில் கல்வி | 22,200 | 2,200 | 24,400 |
| மொத்தம் | 87,500 | 26,500 | 1,14,000 |

## முதற்பரிசுக்கவிதை

எஸ். சந்திரசேகரன் ஆரல்வாய்மொழி,
81/6, பெருமாள்புரம், கன்னியாகுமரி மாவட்டம்

# கண்ணான பாவேந்தர்

பாவேந்தர் கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற கவிதைகள்



சமுதாயம் புத்தமைப்பில்
சார்ந்துவிட வேண்டி,
அமுதாய நல்வாழ்வு
அமைத்துவிட வேண்டிமிக

வேட்கையுடன் பாவேந்தன்
வெற்றிப்பா நெய்தளித்தான்.
காட்சிப் புதுமையங்கே
காணுமிடம் எங்கெங்கும்

பூத்துக் குலுங்கிப்
பொதுமை மணங்கமழும்;
மூத்திருந்த வீண்பழைமை
மொய்த்திருந்த மக்களுளப்

பாங்கையவன் மாற்றிப்
படைத்த சமுதாயம்,
ஓங்கு புகழ்பெருக்கும்
ஒப்பில் சமுதாயம்;

நச்சரவாம் சாதிபல
நாட்டில் மதப்புற்றில்
அச்சுறுத்தும் வன்பல்லால்
அன்றாடம் தீண்டியதைக்

கண்டு துடித்தெழுந்தே
காய்ந்து கவிதைத்தீ
கொண்டழித்த கொள்கையினால்
கோலச் சமுதாயம்;

காலப் பழைமையிலே
கால்கொண்டு நல்லறிவுச்
சீலத்தை என்றென்றும்
சீரழித்து வாழ்ந்துவரும்

மூடப் பழக்கமெனும்
மூலக் கதையொன்று
நாடகமாய் நாட்டில்
நடப்பதையும், பார்த்ததனை

பாம்பு நிலாவிழுங்கும்
பாழ்மூடச் செய்தியெல்லாம்
ஓம்பித் திரிவதையும்
ஓட்டும் சமுதாயம்;

காட்டைக் கழனியாக்கிக்
காட்டும் உழைப்பீந்தும்
ஓட்டைக் குடிசையில்லா
ஓடப்பர் வாழ்வுயர்த்தி

வாட்டத்தை ஓட்டுகின்ற
வல்லதொரு சட்டத்தை
நீட்டி நிறைவேற்றும்
நிகர்நேர் சமுதாயம்;

ஏழ்மையென்றும், தாழ்மையென்றும்
ஏற்படுத்தும் கீழ்மைவிதி
வீழ்த்தியதால் வீறுகொண்டு
வென்ற சமுதாயம்;



பெண்பிறந்து தந்தைக்கும்,
பின்னர் கணவனுக்கும்,
மண்ணுலகில் தாயாய்
மகனுக்கும் மாறிமாறி

கொத்தடிமை பூணும்
கொடுமைகண்டு சாடுவதால்
ஒத்ததொரு பெண்ணுரிமை
ஊட்டும் சமுதாயம்

பெண்ணைத் திருமணத்தில்
பேசிவிலை போக்குகின்ற
எண்ணமழித்தே ஆண்பெண்
இருவரும் காதலித்து

நன்மணத்தை நாடி
நலம்பெறுக என்பதனால்,
வென்றிக் குடும்ப
விளக்குச் சமுதாயம்;

''மக்கட் பெருக்கம்,
மனிதர் துயர்பெருக்கும்;
தக்கமுறை தேர்ந்தால்,
தணியாது இன்பமெனக்''

காதல் வளர்ந்தும்
கருவளராச் சீர்வழியை
ஆதரித்துக் கட்டுக்குள்
ஆழ்த்தும் சமுதாயம்;

வெங்கொடுமை மன்னர்
வெறியாட்சி நீக்குதற்குப்
பொங்கியே மக்கள்
புரட்சிக் குடியாட்சி

உற்றமைத்து வாழும்
'உதார' நற்கருத்தால்
நற்புரட்சி நல்லாட்சி
நாடும் சமுதாயம்;

நாட்டும் பகுத்தறிவை,
நாட்டுணர்வை நல்கிநலம்
கூட்டுகின்ற இன்பமிகு
கொள்கைச் சமுதாயம்:

''போற்றும் மொழிப்பற்றைப்,
பொய்யகற்றும் தன்மதிப்பை
ஏற்றிடுதல் தன்மானம்''
என்னும் சமுதாயம்;

கல்வி கலையுணர்வுக்
காவியப் போக்கிலெல்லாம்
வெல்லும் மறுமலர்ச்சி
வேண்டும் சமுதாயம;

கண்ணான பாவேந்தன்
கண்ட சமுதாயம்
உண்டானால் பாருயரும்
உய்ந்து.

## இரண்டாம் பரிசுக் கவிதை

# பாட்டுத் தீக்கனல் பாவேந்தர்

பாவேந்தன் ஒரு பாட்டுத் தீக்கனல்!
காவியம் உயிர்த்திட்ட கவிதைப் பிரளயம்!
''மானிட சமுத்திரம் நானென்று கூவிய
வானப் பெருமிதம்! கவிதை வானில்
புரட்சி பாடிப் பறந்த பூங்குயில்,
சர மழை கொட்டிய பாட்டுக் கருமுகில்!
புதிய சமுதாயம் புலர்ந்திடக் கவிதை
விதி செய்திட்ட வித்தகச் சிற்பி;
சமத்துவப் பாட்டு சாற்றிக் கொள்கைச்
சமர்நடத் திட்ட சொல்லேர் வீரன்!
'உடைமை மக்களுக்குப் பொது' வாக்கி
மடமைகள் தவிர்த்த மறவன் அணையாக்
கருத்து விளக்கால் கண்கள் திறந்து
திராவிடக் கவிதைக்குச் சிகரம் ஆனவன்!
'மங்காத தமிழென்று சங்கே முழங்கி'
'எங்கெங்கு காணினும் சக்தி' யிழைத்துத்
தேய்நில வாக இருந்த சமுதாயத்தைப்
பாய்புலி ·யாக்கிய பாவலன்! அவன்தான்
இன்பக் கவிநிலா, எனினும் செம்பரிதி!
தென்றல் சிலபோது சீறி எழுந்த புயல்!

பாரதி தாசன் கண்ட சமுதாயம்
ஆர்த்தெழும் நாளே யார்க்கும் திருநாள்!
நாளை வருமோர் நாளில் சமத்துவம்
ஆள வருகின்ற அச்சமு தாயமே—

ஆலைச் சங்கொலி சங்கீ தத்தில்
காலை விடியும் புதிய சமுதாயம்!
'நித்தம் திருத்திய நேர்மை யினால் மிகு
சித்திரச் சோலைகள்' செய்த நன்னிலம்,
ஆக்க மாகி அனைத்து வளங்களும்
தேக்கிய உழைப்புச் செல்வப் பெட்டகம்!
ஒன்றே குலம் ஒருவனே தேவனென
ஒன்றில் ஒன்றாய் ஒன்றிய மானிடம்—

இடையில் வைத்த சுவரை இடித்து,
வீதிகள் இடையில் திரையை விலக்கி,
மூடப் பழக்கங்கள் முளையைக் கிள்ளி
கேடுகள் அகற்றிக் கீழ்மைக் கொடுமைச்
சாதிகள் தகர்த்தே எழுந்த சமத்துவ
நீதி மண்டபம்! நெறிக்கொரு கோபுரம்!
புரட்சி ஆலயம்! புதுமைப் பூங்கா!
உரிமை கீதம்! ஒலிக்கும் காவியம்!
பகுத்தறி வோடு கலைகள் ஆயிரம்
மிருத்துக் காக்கும் பல்கலைக் கழகம்!
மொழியெனும் தாயை உயிருக்கு நேராய்
விழித்துக் காக்கும் வீரர்தம் பாசறை!
புறநா னூறு புதுக்கி வைத்து
அறங்கள் வளர்க்கும் அமைதிச் சாசனம்!
'போரிடும் உலகை வேருடன் சாய்த்து
நேரிடும் அமைதித் தேரிடும் விதி!



—ஜி. ராஜாராமன்,
13-A, திரௌபதி அம்மன் கோவில் தெரு,
திருவில்லிபுத்தூர், இராமநாதபுர மாவட்டம்.



## மூன்றாம் பரிசுக் கவிதை

# சமுதாயச் சிற்பி பாவேந்தர்

சிங்கத்தின் பார்வை; சிறுத்தை நடைவேகம்;
வெங்கோப வேழம்; வெடிக்கும் இடிமுழக்கம்;
செங்கனற் கொப்பரை; சீறும் எரிமலை;
சங்கீத மேகம்; சலசலக்கும் காட்டாறு;
பொங்குமதுச் சாறு; புரட்சி விடிவெள்ளி;
இங்கிவைப்பா வேந்தர் எழிலுருவைச் சித்திரிக்க;
போதையினை யூட்டுகிற பொங்கு நுரைக்கள்ளோ?
மேதையரும் பாராட்டும் மேன்மை அறத்தொகுப்போ?
தித்திக்கும் தேனோ? திகட்டாச் சுவைவிருந்தோ?
முத்தமிழ் போலினிக்கும் முக்கனியோ? தீம்பாகோ?
கன்லல் பிழிசாறோ? கற்கண்டோ? பாலமுதோ?
என்று வியந்துரைக்க இன்கவிதை பாடியவர்!
பாரதிரப் பாடிப் பகைவென்று சீர்பெற்ற
பாரதிக்குத் தாசனெனப் பாரில் திகழ்ந்தகவி—
கண்ட சமுதாயக் காட்சிகளைப் பாடுதற்குக்
கொண்ட விழைவால் கொடுக்கும் கவிதைஇது!
பார்திருந்த வேண்டிப் பகுத்தறிவு மந்திரத்தால்
சீர்திருத்தப் பாட்டெழுதிச் சிவ்வென் றெழுந்தகுயில்!
வெங்கொடிய தீண்டாமை வீழ்ந்தொழிய நாத்திகத்துச்
சங்கொலித்த தந்தைவழி சார்ந்த கவிமுரசு!
''நான்தான் திராவிடன் என்று நவில்கையில்
தேன்தான் சுரக்குமென் நாவெலாம்'' என்றகவி;
''முத்தமிழும் நாடும் முழுநலமும் எய்துமெனில்
செத்தொழியும் நாளே திருநாளாம்'' என்றகவி;
பாடும் வரிப்பாட்டால் பாரோர்க்கு இனவுணர்வைக்
கூடும் படிசெய்த கொள்கைகளின் பாசறை!
தூங்கிக் கிடந்தாரைத் துள்ளி எழவைக்க
ஓங்கிக் குரல்கொடுத்த உன்னதப் போர்முரசு!
சண்டாள சாதிகளைச் சாய்க்கும் கலப்புமணம்
கொண்டு தமிழினமே கோதகற்ற வேண்டுமென்றும்
கண்ணீர் வரைந்த கவின்மிகு ஓவியமாய்
மண்ணில் கலங்கிதினம் மாண்டழியும் கைம்பெண்கள்
மீண்டும் மறுமணத்தால் மிக்கோங்க ஊக்குவித்தும்
தீண்டாமைத் தீங்கதனைத் தீய்த்தொழிக்கத் திட்டமிட்டும்
பாவேந்தர் கண்டுரைத்த பாட்டுச் சமுதாயம்
ஆவேசத் தோடின்று அகிலத்தில் தோன்றியது!
நற்றமிழைக் காக்கின்ற நல்லறிஞர்க்கு ஆதரவு!
கற்ற கலைவல்லார் களிப்புறப் பேருதவி!
ஏங்கும் தமிழ்மணக்க ஏக்கமுற்ற பாவேந்தர்
தங்கக் கவிதைகளால் தந்த கருத்துக்கள்
இன்று செயலாகி இன்பத் தமிழ்மணமே
மன்றிலெலாம் வீச மகிழ்வு பிறக்கிறது!
ஆசைக் கனவுகளில் ஆழ்ந்திருந்த பாவேந்தர்
ஓசைக் கவிதை ஒலித்த சமுதாயம்
தூயோரின் தொண்டாலே தோன்றிச் சிறக்கிறது!
தூய பகுத்தறிவுத் தொண்டு தொடர்கிறது!
சீரார் சமுதாயச் சிற்பியாம் பாவேந்தைப்
பாராட்டும் நான்தொடுக்கும் பாட்டு!

சண்முக தாயுமானவன்
87, மலையடிவாரம
பொன்மலை
திருச்சி



# அமைச்சரிடம் 10 கேள்விகள்



*சுற்றுலா பற்றிய பத்துக் கேள்விகளுக்கு மாண்புமிகு செய்தி-அற நிலையத் துறை அமைச்சர்*

**திரு. இராம வீரப்பன் அவர்கள்**

*அன்புடன் பதில் அளித்திருக்கிறார்.*

***கேள்வி :*** *மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதால், தமிழ் நாட்டுக்கு வரும் வெளி மாநில-வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறையக்கூடும் என்று சொல்லப்படுகிறதே, அது பற்றித் தங்கள் கருத்து என்ன ?*

***பதில் :*** *மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதால் தமிழ் நாட்டுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறையும் என்று சொல்வது தவறு. ஏனெனில் இந்தச் சட்டத்தால் அவர்களுக்கு எந்தவிதமான அசௌகரியமும் சிறிதும் ஏற்படாதவாறு எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தங்கள் பாஸ்போர்ட்டுகளைக் காண்பித்தால் போதும், எத்தனை நாட்களுக்குத் தமிழகத்தில் தங்குவதற்கு அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்களோ—அதைக் கணக்கிட்டு, அவர்களுக்கு மது அருந்துவதற்கான தற்காலிக 'அனுமதி' உடனடியாகத் தரப்படுகிறது. விமான நிலையத்தில் இந்த 'பர்மிட்'டைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் சென்னையில் வருவாய் வாரியத்திலும், மாவட்டத் தலை நகரங்களில் சுற்றுலா அதிகாரிகளிடத்திலும் 'அனுமதி' பெற்றுக் கொள்ளலாம்.*

*இந்த ஏற்பாட்டினால் வெளிநாட்டுப் பயணிகளுக்கு எந்தச் சிரமமும் இல்லை. இவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்படும் — அவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும்' என்பதெல்லாம் மதுவிற்கு அடிமையான சிலர் கிளப்பிவிடுகிற புரளிகள்!*

*கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழ் நாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளில் சராசரியாக முப்பது சதவீதம் பேர் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். 1975-ல் தமிழ்நாட்டுக்கு வந்த வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து நாற்பதாயிரம். இதுவே 1978-ல் இரண்டேகால் இலட்சமாக அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து வெளி நாட்டுப் பயணிகள் தமிழகத்துக்கு வருவதற்கும் — மதுவிலக்குச் சட்டத்துக்கும் எந்த சம்பந்தமுமில்லை. இந்தச் சட்டத்தால் பயணிகள் சிறிதளவும் பாதிக்கப்படுவதில்லை என்பது தெளிவாகும்.*

***கேள்வி:*** *மதுவிலக்கு அமலில் இல்லாத இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து வருகிற பயணிகள் நிலை என்ன?*

***பதில்:*** *இவர்களுக்கும் இத்தகைய தற்காலிக பர்மிட்கள் வழங்கப்படுகின்றன. இதில் சில நிபந்தனைகள் உண்டு. அவர்கள் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கும், மது அருந்தாவிட்டால் அவர்களது உடல் நலம் பாதிக்கப்படும் என்பதற்கும் டாக்டர்களிடமிருந்து அத்தாட்சி இதழ்கள் பெற்று அதற்குரிய கட்டணத் தொகையையும் செலுத்தினால் தற்காலிக 'அனுமதி' உடனடியாக வழங்கப்படுகிறது.*





# விவசாயிகளுக்கு தமிழக அரசின் ரூ. 40 கோடி சலுகைகள்



**த**மிழக விவசாயிகளுக்குள்ள பிரச்னைகளை ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து, அவற்றுக்கு நிலையான தீர்வு காண்பதற்கென அரசுக்குப் பரிந்துரைகள் சொல்வதற்கென்று தமிழக அரசானது, ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தது. இத்தகைய குழு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அமைக்கப்படவில்லை.

இந்தக் குழுவானது தனது அறிக்கையை 15.5.79 அன்று அரசுக்குச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையையும், அதன் பல்வேறு பரிந்துரைகளையும், அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதால் அரசுக்கு ஏற்படும் நிதிப் பொறுப்புகளை நிதானமாகவும்—முறையாகவும் ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரப் போதிய அவகாசம் வேண்டும்.

விவசாயிகள் நம் நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருப்பவர்கள். அவர்களுக்குள்ள பிரச்னைகள், நீண்ட நெடுங்காலமாக சங்கிலித் தொடர்போல் பெரும் சுமையாக இருந்து, அவர்களைத் துன்பத்திலாழ்த்தி வருவதை இனியும் அனுமதிக்கக் கூடாது என்ற உயரிய மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன், உடனடி நிவாரணம் வழங்கிட 40 கோடி ரூபாய் அளவுக்கு தமிழக அரசு சலுகைகள் வழங்கியுள்ளது.

மின்கட்டணத்தை 16 காசுகளிலிருந்து பெரும்விவசாயிகளுக்கு 14 காசுகளாகவும், சிறு விவசாயிகளுக்கு 12 காசுகளாகவும் குறைத்து அரசு ஏற்கெனவே அறிவித்த சலுகைகள் உள்பட பத்துகோடி ரூபாய் மதிப்புள்ள பிற சலுகைகள் இதில் அடங்கா.

விவசாயிகளுக்காக அரசு தன்னுடைய நிதி நிலைச் சக்திக்கும் மீறி, இந்தச் சலுகைகளை அறிவித்திருப்பதிலிருந்து, விவசாயிகள் நல்வாழ்விலும்-அவர்களது நலனிலும் அரசுக்குள்ள ஆர்வத்தையும்-அக்கறையையும் அறிந்து கொள்ள முடியும்.

## நெல்லின் கொள்முதல் விலை :

நெல்லின் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 120 ஆக நிர்ணயிக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டுமென்று உயர்மட்டக் குழு பரிந்துரைத்துள்ளது. குவிண்டாலுக்கு ரூ. 129 ஆக நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும், உடனடியாக அது சாத்தியமில்லையென்றால், கோதுமையின் கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது முதல் கட்டமாக நிர்ணயிக்க வேண்டுமென்றும், தமிழக அரசு வலியுறுத்தி வருகின்றது. 21-5-1979 அன்று நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலும் இக்கருத்து தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசின் முடிவு இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழகம் மட்டுமல்லாமல், நாட்டில் பல மாநிலங்களும் வற்புறுத்தியுள்ள இக்கோரிக்கைக்கு, மத்திய அரசு செவி சாய்க்கும் என்று எதிர்பார்க்கின்றோம். மத்திய அரசின் முடிவு நமக்கு மன நிறைவு அளிக்காத நிலை ஏற்பட்டால், சிறு விவசாயிகளுக்குக் கணிசமான நெல் விலை கிடைக்கச் செய்யத் தமிழக அரசு தன் சொந்தப் பொறுப்பிலேயே சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதிகொண்டுள்ளது. நெல் கொள்முதல் விலை பற்றி மத்திய அரசின் அதிகாரபூர்வமான அறிவிப்பு வந்ததற்குப் பின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

அதே நேரத்திலே, வெளிச்சந்தையில் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு மேலும் வசதி செய்யும் பொருட்டு, வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல்லுக்கும் அரிசிக்கும், இப்போது மிகக் குறைவாகவே விதிக்கப்பட்டு வரும் 20 விழுக்காடு லெவியைக்கூட ஜூன் முதல் தேதி முதற்கொண்டு அடியோடு நீக்கி விட அரசு முடிவு செய்துள்ளது.

## தக்காவிக் கடன்கள் :

அரசு வழங்கியுள்ள தக்காவிக் கடன்களைப் பொறுத்தவரையில், குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்று, உடனடியாக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

விவசாய இடுபொருள்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில் நிலமில்லாத விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள், முழுவதும் தள்ளுபடி செய்யப்படும். இந்த இனத்தில் மற்ற விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில், கடன் தொகையில் முதல் 500 ரூபாய் தள்ளுபடி செய்யப்படும். அடுத்த 5,000 ரூபாய் தொகை வரையில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும்.

விவசாயக் கடன்கள் சட்டத்தின் கீழும் நில மேம்பாட்டுச் சட்டத்தின் கீழும்




வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில், அசலாகவோ, வட்டியாகவோ, இரண்டும் சேர்ந்தோ, வாங்கிய கடனுக்குச் சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தால், கணக்கு தீர்ந்துவிட்டதாகக் கருதப்படும். அதுபோலவே, வாணிபப் பயிர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில், கடனுக்குச் சமமான தொகை, வட்டியாகவோ அசலாகவோ, இரண்டும் சேர்ந்தோ, செலுத்தப்பட்டிருந்தால், கணக்குத் தீர்க்கப்பட்டதாகக் கருதப்படும்.

மூலதன வசதிகளை உருவாக்க வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்தவரையில், அசலாகவோ, வட்டியாகவோ இரண்டும் சேர்ந்தோ, இதுவரை செலுத்தப்பட்டுள்ள தொகை, வாங்கிய கடனுக்கு இரு மடங்குக்குச் சமமாக இருந்தால் கணக்கு தீர்ந்ததாகக் கருதப்படும்.



அதுபோலவே, கிணறு தோண்ட அல்லது குழாய்க் கிணறு அமைக்க, வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில் வாங்கிய கடனுக்கு இரு மடங்குக்குச் சமமான தொகை, அசலாகவோ வட்டியாகவோ, இரண்டும் சேர்ந்தோ, செலுத்தப்பட்டிருந்தால் கணக்கு தீர்ந்ததாகக் கருதப்படும்.

கிணறு தோண்டக் கடன் வாங்கி, கிணறு பொய்த்து விட்டிருந்தால் வாங்கிய கடனில் முதல் 10,000 ரூபாய் வரை தள்ளுபடி செய்யப்படும். வாங்கிய கடனுக்குச் சமமான தொகையையேனும் கிணறு வெட்டச் செலவு செய்திருந்தவர்களுக்கே இச்சலுகை உரித்தாகும்.

விவசாயிகளுக்காக வேளாண்மைத் துறை மேற்கொண்ட வேலைகள் தொடர்பாக அளிக்கப்பட்ட கடன்களைப் பொறுத்த வரை, மண் வளப் பாதுகாப்பு, நிலத்தில் பூச்சி மருந்து அடித்தல் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களைத் தவிர, மற்ற கடன்களில் இனிமேல் வசூல் எதுவும் செய்ய வேண்டாம் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. மண் வள பாதுகாப்பு கடன்களைப் பொறுத்த வரையில், கடன் தொகையில் அசல் வகையில் 50 விழுக்காடு செலுத்தப்பட்டிருந்தால், கணக்கு முழுமையாக தீர்ந்ததாகக் கருதப்படும். நிலத்தில் பூச்சி மருந்து தெளிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்தவரையில், அசலுக்குச் சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தால், கணக்குத் தீர்ந்ததாகக் கருதப்படும்.

மேலே குறிப்பிட்ட இனங்களைத் தவிர மற்ற இனங்களில் வழங்கப்பட்ட தக்காவிக் கடன்களைப் பொறுத்தவரையில், கடன் தொகைக்குச் சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தால், கணக்குத் தீர்ந்ததாகக் கருதப்படும்.

இந்த சலுகைகளுக்குப் பின்பும், செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின், அதை வரும் இரண்டு ஆண்டுகளில் இரு தவணைகளாகச் செலுத்த வேண்டும்.

இச்சலுகைகளில் எதுவும் தமிழ் நாடு பொது வணிக வரிச் சட்டத்தின் கீழோ, இந்திய வருமான வரிச் சட்டத்தின் கீழோ, விவசாய வருமான வரிச் சட்டத்தின் கீழோ வரி செலுத்துவோருக்கு உரித்தாகாது.

தக்காவிக் கடன்களைப் பொறுத்த வரை அளிக்கப்படும் இச்சலுகைகளின் காரணமாக, ஏறத்தாழ 15 இலட்சம் விவசாயிகளுக்கு 13 கோடி ரூபாய் அளவில் நிவாரணம் கிட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## கூட்டுறவுக் கடன்கள் :

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையிலே, ரிசர்வ் வங்கி விதிக்கின்ற விதிமுறைகளுக்கும் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை நெறி முறைகளுக்கும் நாம் கட்டுப்பட வேண்டியுள்ளது. இருந்தபோதிலும், விவசாயிகளுக்குக் கணிசமான நிவாரணம் கிடைக்க வேண்டுமென்ற அக்கறையில் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக்கும் கூடுதலாகவே முக்கியமான பல சலுகைகளை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

## அபராத வட்டி தள்ளுபடி :

30-6-78 அன்று தவணை தவறி நிலுவையில் இருந்த குறுகிய கால, மத்திய கால, நீண்ட கால விவசாய கடன்களுக்கு 30-6-79 வரை உரிய அபராத வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும். 30-6-77-க்குப் பின் செலுத்தப்பட்ட அபராத வட்டியை உறுப்பினர்களுக்குத் திருப்பித் தரும் வகையில் அவர்களுடைய கணக்கில் அத்தொகை வரவு வைக்கப்படும்.



## சாதாரண வட்டி :

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் உற்பாதங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன்கள் ஏற்கெனவே மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட கடன்கள் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ, அதற்கு மேற்பட்டோ ஒரு விவசாயிக்கு இருந்தால், அக்கடன்களுக்கெல்லாம் 30-6-1978 அன்று உரிய வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது.

வணிக வரி, வருமான வரி, விவசாய வருமான வரி, ஆகியவற்றில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட வரியோ செலுத்த வேண்டியுள்ளவர்களுக்கு, அபராத, சாதாரண வட்டிச் சலுகைகள் உரித்தாகா.



இந்த வட்டித் தள்ளுபடி சலுகை அல்லாமல், மாற்றியமைக்கப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அவசாகம் நீட்டிக்கப்படும். ஒரு விவசாயிக்கு மாற்றி அமைக்கப்பட்ட இரண்டு கடன்கள் இருந்தால், அவை மொத்தமான ஒரு கடனாக்கப்பட்டு, அதை மூன்று ஆண்டுத் தவணைகளில் செலுத்த அவர் அனுமதிக்கப்படுவார். மாற்றியமைக்கப்பட்ட மூன்று கடன்கள் இருந்தால், அவை ஒரு கடனாக்கப்பட்டு, அதை ஐந்து ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த அனுமதிக்கப்படுவார். மாற்றியமைக்கப்பட்ட நான்கு கடன்கள் இருந்தால், அவை ஒரு கடனாக்கப்பட்டு ஆறு ஆண்டு தவணைகளில் திருப்பிச் செலுத்த அனுமதிக்கப்படுவார்.

இவ்வாறு ஒன்றாக்கப்பட்ட கடன்களில் முதல் தவணையை 30-6-80-க்குள் செலுத்த, வழக்கமான விளைச்சல் காலத்தைப் பொறுத்து உறுப்பினருக்கு உரிய தேதி நிர்ணயிக்கப்படும்.

இச்சலுகைகள் எல்லாம் 30-6-78ல் நிலுவையில் உள்ள கடன்களுக்குப் பொருந்தும். 30-6-78-க்குப் பின் செலுத்த வேண்டி ஏற்பட்ட கடன்கள் உரிய காலத்தில் செலுத்தப்பட வேண்டும்.





இச்சலுகைகளைத் தவிர, 1—1—79-க்கு முன் மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன்களாக நிலுவையில் உள்ள கடன்களுக்கும், ஒன்றாக்கப்பட்டுத் திருப்பிச் செலுத்துவதற்கான கால நீடிப்பு கொடுக்கப்படவிருக்கும் கடன்களுக்கும், வட்டி விகிதம் குறைக்கப்படும். மேற்படி கடன்களுக்குத் தற்போதுள்ள விதிகளின்படி, வட்டி விகிதம் 13.8 விழுக்காடு அல்லது 12.5 விழுக்காடாகும். இனி குறைக்கப்படவிருக்கும் விகிதத்தின்படி 1-1-79 முதல் சிறு விவசாயிகளின் கடன்களுக்கு 10.5 விழுக்காடு வட்டி விகிதமும், இதர விவசாயிகளுக்கு 12 விழுக்காடு வட்டி விகிதமும் நிர்ணயிக்கப்படும்.




கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் அளிக்கப்பட்டுள்ள இச்சலுகைகளின் காரணமாக; ஏறத்தாழ 16 இலட்சம் விவசாயிகளுக்கு 27 கோடி ரூபாய் அளவில் நிவாரணம் கிடைக்கும். தக்காவிக் கடன்களைப் பொறுத்தவரையில், அளிக்கப்பட்டுள்ள சலுகைகளின் காரணமாக 15 இலட்சம் விவசாயிகளுக்கு 13 கோடி ரூபாய் அளவில், நிவாரணம் கிடைக்கும். மொத்தமாக, விவசாயிகளுக்கு இப்போது அளிக்கப்பட்டுள்ள சலுகைகளின் காரணமாக 40 கோடி ரூபாய் அளவில் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

இது தவிர, ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு இணங்க, கூட்டுறவு நிறுவனங்கள், விவசாயிகளுக்குக் கடன் வழங்க ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் பெறுவதற்குச் சில நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டியுள்ளது. இப்போது அளிக்கப்பட்டுள்ள சலுகைகளின் காரணமாகக் கூட்டுறவு அமைப்புகளின் நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்படும். ரிசர்வ் வங்கியிலிருந்து தொடர்ந்து கடன் பெறுவதற்கு உரித்தான நிலையில் அவற்றை வைத்திருக்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு தன் நிதிப் பொறுப்பிலிருந்து பல கோடி ரூபாய்களை முன் பணமாக, இந்த ஆண்டும் அடுத்த சில ஆண்டுகளிலும், அளிக்க வேண்டியிருக்கும். இது, அரசின் நிதி வசதிகளைப் பெரிதும் சோதனைக்கு உள்ளாக்கும்.

## அரசின் வேண்டுகோள் :

இத்துணைச் சிரமங்களையும் பொருட்படுத்தாமல், தமிழக விவசாயிகளுக்குக் கணிசமான நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில், அரசு இந்த முடிவுகளை மேற்கொண்டுள்ளது. இச்சலுகைகளை விவசாயப் பெருமக்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்று அரசு நம்புகிறது. வாங்கிய கூட்டுறவுக் கடன்களை உரிய காலத்தில் செலுத்தினால்தான், விவசாயிகளுக்கு மேலும் கடன் வழங்கும் நிலையில் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட முடியும். கூட்டுறவு இயக்கம் மக்களுடைய இயக்கம் என்பதையும் அதன் நிதிப் பொறுப்புக்கள் மக்களுடைய நிதிப் பொறுப்புக்கள் என்பதையும், கூட்டுறவு அமைப்புகள் விவசாயிகளுக்குத் தொடர்ந்து சேவை செய்ய உதவும் வகையில், காலம் தவறாமல் கூட்டுறவுக் கடன்களைச் செலுத்துவது, தங்கள் தலையாய சமுதாயப் பொறுப்பு என்பதையும், விவசாயப் பெருமககள் நனகு அறிவார்கள். தன்னுடைய சக்திக்குப் பெரிதும் விஞ்சிய பல சலுகைகளை இந்த அரசு அளித்துள்ளது. இதற்கு அடிப்படையான நல்லெண்ணத்தையும், விவசாயிகளின்பால் அரசு கொண்டுள்ள பரிவையும், விவசாயப் பெருமக்கள் பெரிதும் போற்றி, அரசும், குறிப்பாகக் கூட்டுறவு அமைப்புகளும், விவசாயிகளுக்குத் தொடர்ந்து மேலும் பல தொண்டுகளை ஆற்ற உறுதுணையாய் நிற்க வேண்டுமென்று அரசு கேட்டுக் கொள்கிறது.





***கேள்வி:*** தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இங்குள்ள இயற்கை அழகு மிக்க இடங்களுக்காக மட்டுமல்லாமல், புகழ்மிக்க திருக்கோயில்கள் மற்றும் அற்புதமான சிற்பக்கலை அழகினைக் காண்பதற்காகவும் வருகிறார்கள். எனவே கோயில்களையும், அங்குள்ள கலையழகு மிக்க சிற்பங்களையும் நல்ல முறையில் போற்றிப் பாதுகாக்கும் முயற்சிகள் குறித்துத் தாங்கள் திருப்தி அடைகிறீர்களா?....

***பதில் :*** இதுதான் சுற்றுலாவின் முக்கியமான அம்சம். இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் நோக்கம் இங்குள்ள மலை வளம் போன்ற இயற்கையழகைக் கண்டு ரசிப்பது மட்டுமல்ல. இந்த நாட்டுக்கென, சிறப்பானதொரு கலாச்சார மரபு உண்டு. தொன்மையான வரலாற்றுப் பெருமை உண்டு. அதை ஆலயங்களில் காணலாம். அந்த ஆலயங்களின் வானளாவிய கோபுரங்களில் காணலாம். ஆலயத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிற்பங்களாகக் காணலாம். இந்த கலாச்சாரச் சிறப்புகள் இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட தமிழ்நாட்டில் அதிகம்— மிக அதிகம். இவைகளுடன் அழகிய நீண்ட கடற்கரைகளின் கண்ணைக் கவரும் இயற்கை வனப்புகள்.

தமிழ்நாட்டின் எல்லைகளைப் பாருங்கள். வடக்கே குன்றின் மேல் குமரன் குடிகொண்ட — திருத்தணி. தெற்கே — குமரி முனை. மூன்று கடல்களும் முத்தமிடும் அற்புதம். கையை நீட்டி எட்டிப் பிடிக்கிறாற்போல் கதிரவனின் உதயம்—கிழக்கில். அதே இடத்தில் மேற்கே—கதிரவன் கனல் மாறி, கடலில் குளிக்கும் கண்கொள்ளாக் காட்சி. இயற்கையின் இந்த விந்தையை வேறெங்கே காண முடியும்? கிழக்கு எல்லையாக நீண்டிருக்கும் அலைகடல். மேற்கு எல்லையோ பிரமிப்பான மலைத் தொடர். இப்படி, இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாததொரு எழில்மிகு எல்லைச் சிறப்புகளைப் பெற்றுள்ள தமிழகத்தின் திருக்கோயில்கள், நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற அழியாத கலைக் கருவூலங்கள். விண்முட்டும் கோபு

ரங்கள்—விதம் விதமான சிற்பங்கள்—குகைக் கோயில்கள்—கல்லெல்லாம் கதை சொல்லும் கலை வடிவங்கள்... இவையனைத்தும் உலகப் பயணிகளைக் கவரும் தமிழகத்து மண்ணின் காந்த சக்திகள்.

அதனை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. இந்த ஆலயங்களின் அழகும்—சிற்பங்களின் கலை நுணுக்கமும் பழுதுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டும், அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு அளவில்லாத அக்கறையும்—கவனமும் இருக்கிறது. அதற்குரிய எல்லாப் பணிககளையும் இந்து அற நிலையத் துறை மேற்கொண்டிருக்கிறது.

***கேள்வி:*** நமது தமிழ்நாட்டின் இயற்கை அழகும்—சிற்பக் கலையழகும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அதே சமயத்தில் இந்த இடங்களிலெல்லாம் பிச்சைக்காரர்களால் பயணிகளுக்கு ஏற்படும் அதிருப்தியை நீக்க அரசின் உடனடித் திட்டம் ஏதாவது உண்டா?

***பதில் :*** இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பொதுவானது. கன்னியா குமரியில் மட்டும்தான் பிச்சைக்காரர்களா என்றால், இல்லை! காஷ்மீரிலும் இருக்கிறார்கள். மாமல்லபுரத்தில் மட்டும்தான் கையேந்துகிறார்களா என்றால், கிடையாது; தாஜ்மகாலிலும் உண்டு! எனவே இந்தப் பிரச்சினையை தேசியக் கண்ணோட்டத்தில் அணுகி, மத்திய அரசும் — மாநில அரசும் இணைந்து ஒரு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன!

***கேள்வி :*** தற்போது அரசுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள் குறைந்த வருவாய் உள்ளவர்கள் தங்கும் அளவுக்கு குறைந்த வாடகையில் இல்லை என்றும், கோடைக் காலத்தில் குறைந்த வருவாய் உள்ளவர்கள் ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களுக்குப் போகவே முடியாத சூழ்நிலை உள்ளது என்றும் சொல்லப்படுகிறது. இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?

***பதில் :*** குறைந்த வருவாய் என்றால் எவ்வளவு? முந்நூறா? நானூறா—அல்லது அய்ந்நூறா? அதற்கு எப்படி வரம்பு நிர்ணயிக்க முடியும்? **'குறைந்த வருவாய் உள்ளவர்கள் சுற்றுலாப் போவது'** என்று சொல்வதைவிட, **'குறைந்த செலவில் சுற்றுலாப் போவது'** என்று சொல்வதுதான் பொருந்தும். அப்படிப் பார்த்தால் அரசின் சுற்றுலா மாளிகைகளில், எல்லாத் தரப்பினரும் தங்கும் அளவுக்கு மிக நியாயமான வாடகையே விதிக்கப்படுகிறது. என்றாலும் குடும்பத்தோடு அல்லது குழுவாகச் செல்லும் ஒரு நடுத்தர வருவாயுள்ளவர் தங்குவதற்கு 'டார்மிடரி' என்று சொல்லப்படும் பொது தங்குமிட வசதியைப் பயன்படுத்திக் கொண்டால் செலவு குறையும்.

ஊட்டி, கொடைக்கானல், குற்றாலம் ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட 'பொது தங்கும் வசதிகள்' ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

***கேள்வி:*** மாமல்லபுரம் போன்ற இடங்களில் மலிவான சங்குப் பொருட்களை தனி-



நபர்கள் அதிக விலைக்கு விற்று, கொள்ளை லாபம் சம்பாதிப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுபோன்ற முக்கியமான இடங்களில் எல்லாம் அரசின் விற்பனைக் கூடங்கள் வைப்பது வரவேற்கத் தக்கதல்லவா?

***பதில் :*** முக்கியமான இடங்களில் இது போன்ற அரசின் விற்பனைக் கூடங்கள் ஏற்கெனவே உள்ளன. ஒரு வேளை சுற்றுலாப் பயணிகள் அந்த விற்பனைக் கூடங்களைத் தேடிப் போக முடியாத நிலை இருக்கலாம்! அந்தச் சூழ்நிலையைச் சில தனியார்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதை ஓர் ஒழுங்கு முறைக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம்தான். அரசு இது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

***கேள்வி :*** அரசு ஊழியர்கள், கோடை விடுமுறை மாதங்களில் தம் குடும்பத்தினருடன் தமிழ்நாட்டுக்குள் சுற்றுலா சென்று வரப் பேருந்துக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டால் இப் பிரிவினருக்கு உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இது பற்றிய தங்கள் கருத்து என்ன?

***பதில் :*** எனக்கும் இது உடன்பாடுதான். அரசு ஊழியர்கள் மட்டுமல்ல. தனியார் தொழில் அமைப்புகளில் பணிபுரியும் தொழிலாளர்கள்கூடச் சுற்றுலா சென்று வர விடுமுறையும்-முடிந்தால் உதவி நிதியும் அந்தந்தத் தொழில் நிறுவனங்கள் தர வேண்டும் என்று பலமுறை நான் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். ஓரிரு தொழில் அமைப்புகளில் மிகக்



குறுகிய அளவில் இந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தப்படுவது பாராட்டத்தக்கது.

அரசு ஊழியர்களுக்குச் சுற்றுலா சென்று வரப் 'பேருந்துக் கட்டணச் சலுகை' வழங்குவது பற்றிப் போக்குவரத்துத் துறையுடன் கலந்தாலோசிக்கப்படும்.

***கேள்வி :*** 1980-ஆம் ஆண்டினை இந்திய அரசு சுற்றுலா ஆண்டாகக் கொண்டாடுகிறது. இதனையொட்டி, தமிழக அரசு ஏதேனும் சிறப்புத் திட்டங்களைத் தொடங்க நினைத்துள்ளதா?

***பதில் :*** 1980 ஜனவரியில் மதுரையில் அய்ந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடக்கப் போகிறது. உலகின் பல பகுதிகளிலிருந்து நூற்றுக் கணக்கில் மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் வரவிருக்கிறார்கள். இந்த மாநாட்டை ஒட்டி, மதுரை மாநகரமே புதுக் கோலம் கொள்ளப்போகிறது. இதற்கென முப்பது லட்சம் ரூபாய் செலவில் புதிதாக ஒரு சுற்றுலா மாளிகையும் கட்டுவதற்கு முயற்சி எடுத்திருக்கிறோம். இப்படி சுற்றுலா ஆண்டினை, தமிழ்நாடு மகிழ்ச்சியோடு தொடங்குகிறது. இது தவிர, மத்திய அரசு, சுற்றுலா ஆண்டுக்கான புதிய திட்டங்களையும்—செயல் முறைகளையும் அறிவித்த பிறகு அதற்கேற்பத் தமிழக அரசும் செயல் திட்டங்களை வகுக்கும்.

***கேள்வி :*** சுற்றுலாக் கழகம் நடத்தும் சிக்கனக் குழுச் சுற்றுலா (*Conducted Tours—Package Tours*) கட்டணம் அதிகம். தனியார் நடத்தும் குழுச் - சுற்றுலா செலவு குறைவு என்று சொல்லப்படுகிறதே...உண்மையா ?

***பதில் :*** நான் அப்படி நினைக்கவில்லை. அப்படியே இருந்தாலும் கூட வித்தியாசம் குறைந்த அளவே இருக்கலாம். அதற்குப் பல காரணங்கள். முதலாவதாக பேருந்து வசதி. சுற்றுலா என்றாலே அதில் கொஞ்சம் சுகம் இருக்க வேண்டும். நீண்ட தூரம் பயணம் செய்வதால் வசதியாக உட்கார்ந்துபோக வேண்டும். மக்களின் நலன் கருதி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் குழுச்-சுற்றுலாக்களுக்கு வசதியான பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. போகிற இடங்களில் சுற்றுலா மாளிகைகளில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த இரண்டுக்கும் சேர்த்துக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உணவு உட்கொள்வது அவரவர் விருப்பம். அதற்காக அங்குமிங்கும் அலைய வேண்டியதில்லை. எல்லாச் சுற்றுலா மாளிகைகளிலும் உணவு விடுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பேருந்திலும் ஒரு தேர்ந்த வழிகாட்டி உடன் செல்கிறார். இவ்வளவு வசதிகள் தருகிறபோது சிறிது கட்டணம் சேர்த்து வசூலிப்பது தவறாகாது.

***கேள்வி :*** நமது கிராமியக் கலை நிகழ்ச்சிகளை சுற்றுலாப் பயணிகள் பார்த்து மகிழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா ?

***பதில் :*** நம்முடைய சிறப்புகளில் ஒன்று இந்த கிராமியக் கலைகள். தற்போது ஓரிரு பெரிய ஓட்டல்களில் இந்த கிராமிய நாட்டிய நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

இது போதாது என்று நாங்கள் அறிவோம். தாய்லாந்து நாட்டில் குறிப்பிட்டதொரு இடத்தில் தினந்தோறும் அந்த நாட்டின் கலை நிகழ்ச்சிகளை நடத்தி, சுற்றுலாப் பயணிகள் பார்த்து மகிழ்வதற்கான வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். அதேபோல் சென்னை நகரில் மையமான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அரங்கம் அமைத்து, தினந்தோறும் ஒவ்வொரு கிராமியக் கலை நிகழ்ச்சியை நடத்துவதற்கான திட்டத்தினையும் சுற்றுலாத் துறை ஆய்வு செய்து வருகிறது.

—பேட்டி : டி. கே. டி.



# தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி

திரு சு. வையாபுரி,
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
தமிழ்நாடு.

தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சியில் இன்று முன்னணியில் இருக்கும் மாநிலங்களில் தமிழகம் ஒரு சிறந்த இடம் வகிக்கிறது. ஒரு நாட்டின் வளத்திற்கும், நல்வாழ்விற்கும் ஆதாரமாக அமைவது தொழில் நுட்பக் கல்வியாகும். நம் நாட்டில் கடந்த முப்பதாண்டுகளில் தொழில் நுட்பக் கல்வித் துறை பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது. உலகில் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களை அதிக அளவில் பெற்றிருக்கும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டில் தொழில் நுட்பக் கல்வித்துறை செயல்படத் துவங்கிய காலம் முதல் இது நாள் வரை தமிழகம் தொழில் நுட்பக் கல்வியில் பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

தற்போது தமிழ் நாட்டில் 13 பொறியியல் கல்லூரிகள், 44 பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள், 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவைகளில் 6 பொறியியல் கல்லூரிகள், 39 பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள் மற்றும் 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவை தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகின்றன. இதரத் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் தன்னாட்சி முறையிலும், பல்கலைக் கழகங்களின் ஆளுகையின் கீழும் இயங்கி வருகின்றன.

## மேல்நிலைப் பள்ளிகள் (தொழில் பாடங்கள்)

புதிய 10+2+3 கல்விமுறையை ஒட்டி, மேற்சொன்ன 14 பள்ளிகளையும் 1979-80 கல்வி ஆண்டு முதல் மேல் நிலைப்பள்ளிகளாக (தொழில் பாடங்கள்) மாற்றியமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இம் மேல் நிலைப் பள்ளிகள் மேல் நிலைக் கல்வி வாரியத்துடன் இணைக்கப் பட்டவைகளாகவும் தொழில் நுட்பக் கல்வித் துறையின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருபவைகளாகவும் விளங்கும். மேல் நிலைக் கல்வி வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட தொழில் பாடத் திட்டங்கள் தவிர, மேலும் சுமார் 20 புதிய தொழில் பாடத் திட்டங்களைத் தற்போதுள்ள தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளிலும் பல் துறைத் தொழில் பயிற்சிப் பயிலகங்களிலும் உள்ள வசதிகளைக்கொண்டு துவங்க தேவையான கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

புதிய 10+2+3 பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் மேல் நிலைப் பள்ளிகளுக்குத் தொழில் பாடங்கள் நடத்தத் தேவையான பணிமனை மற்றும் ஆய்வுக்கூட வசதிகளை பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள் வழங்குவது பற்றிய திட்டம் உருவாகி வருகிறது. பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் தொழில் பாடங்கள் நடத்தப் பெறும் மேல் நிலைப் பள்ளிகளில் பகுதிநேர விரிவுரையாற்றவும் தக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## பொறியியற் கல்லூரிகளில் நான்காண்டு பொறியியல் பட்டப் படிப்பு :

அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக்குழுவின் பரிந்துரைக்கேற்ப பொறியியல் பட்டப்படிப்பின் கால அளவினை ஐந்தாண்டிலிருந்து நான்காண்டாக குறைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இக் கருத்துருவின் மேல் முடிவு எடுக்கப்பட்டவுடன் பொறியியல் பட்டப் படிப்பின் கால அளவு ஐந்தாண்டிலிருந்து நான்காண்டாகக்குறைக்கப்படும்.

ஆனால் பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களைப்பொறுத்த அளவில் டிப்ளமா பாடத்தின் மூன்றாண்டு கால அளவில் மாற்றம் ஏதுமில்லை.

## பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் :

பொறியியல், தொழில் நுட்பவியல் தொடர்புள்ள அறிவியல்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகவும், பொறியியல், தொழில் நுட்பவியல் தொடர்புள்ள அறிவியல்கள் ஆகியவற்றில் மேற்படிப்பிற்காகவும், ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் 'பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்' என்ற பெயரில் பல்கலைக் கழகம் ஒன்று தமிழக அரசால் 4.9.1978 அன்று சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் தொழில் நுட்பக் கல்விக்கான ஒருமை வகை (Unitary type) பல்கலைக் கழகமாக இருக்கும். இப் பல்கலைக் கழகத்தில் சென்னை கிண்டி பொறியியல் கல்லூரி, சென்னை கிண்டி அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியின் அங்கங்களான வேதியல், தொழில் நுட்பவியல்துறை, தோல் தொழில் நுட்பவியல் துறை, நெசவுத் தொழில் நுட்பவியல் துறை, கட்டிடக்கலை மற்றும் நகர அமைப்புப் பள்ளி ஆகியவையும், குரோம் பேட்டையிலிருக்கும் சென்னை தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனமும் அடங்கும்.





## மண்டலப் பொறியியல் கல்லூரி (Regional Engineering College)

இந்தியாவில் கீழ்க்கண்ட 14 இடங்களில் மண்டலப் பொறியியல் கல்லூரிகள் உள்ளன.

1. வாரங்கல், ஆந்திரப் பிரதேசம்.
2. சூரத்கல், கர்நாடகம்.
3. நாகபுரி, மஹாராஷ்டிரம்.
4. போபால், மத்தியப் பிரதேசம்.
5. துர்க்காபூர், மேற்கு வங்காளம்.
6. ஜாம்ஷெட்பூர், பீஹார்.
7. ஸ்ரீ நகர், ஜம்மு காஷ்மீர்.
8. அலகாபாத், உத்திரப்பிரதேசம்.
9. சூரத், குஜராத்.
10. கோழிக்கோடு, கேரளா.
11. ரூர்க்கேலா, ஒரிசா
12. ஜெய்ப்பூர், ராஜஸ்தான்
13. குருஷேத்ரா, பஞ்சாப்
14. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

நம் மாநிலத்தில் திருச்சிராப்பள்ளியில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரியில் மாணவர்கள் சேர்ப்பு எண்ணிக்கை 200 ஆகும். அதில் 50 சதவீத இடங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்காகவும் மீதமுள்ள 50 சதவீத இடங்கள் பிற மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காகவும் ஒதுக்கப் பட்டுள்ளன.

இதே போன்று, தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்களும் மேற்கூறிய அடிப்படையிலேயே இயங்கிவரும் பிற மாநிலங்களில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரிகளுக்கும் விண்ணப்பித்து உரிய பயன் பெறலாம்.

## தொழில் நுட்பவியல் பயிலகங்கள் :

தற்போது தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழுள்ள 39 பயிலகங்களில் பல் துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள் 30ம், கலை மற்றும் கைத்திறன், கல்லூரிகள் 3ம், சிறப்புத்தொழில் நுட்பவியல் பயிலகங்கள் 6ம் ஆகும். அதில் மேற்குறிப்பிட்ட 30 பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களில் நடத்தப்படும் வழக்கமான கட்டிடவியல், இயந்திரவியல், மின்னியல், தொழில் நுட்பப் பாடங்கள் தவிர விவசாய உபகரணங்கள் தொழில் நுட்பவியல், அழகுச் சாதனங்கள் சார்பான நுட்பவியல், குளிர் சாதனம் மற்றும் குளிர் பதனம் நுட்பவியல், எலும்பு முறிவு, மற்றும் முடவியல் சாதனங்கள் நுட்பவியல் முதலான 22 சிறப்புப் பாடத் திட்டங்களும், டிப்ளமா அளவில் நடத்தப் பெற்று வருகின்றன. சென்னை கும்பகோணம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள மூன்று கலை மற்றும் கைத்திறன் கல்லூரிகளில் ஓவியம், சிற்பம், விளம்பரக்கலை முதலான பாடத்திட்டங்கள் டிப்ளமா அளவில் நடத்தப்பெற்று வருகின்றன. சென்னையில் உள்ள கலை மற்றும் கைத்திறன் கல்லூரியில் நடப்பு கல்வியாண்டு முதல் புதிய பட்டப்படிப்புவசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

> **மக்கள் தாங்கள் அறியாதகைளைத் தெரிந்து கொள்ளும் படி கற்பிப்பது கல்வியின் பொருளாகாது; அவர்கள் நடையை மாற்றிச் செம்மையாக நடந்துகொள்ளக் கற்பிப்பதே கல்வியாகும்!**
>
> **—ரஸ்கின்.**

ஆறு சிறப்புத் தொழில் நுட்பப் பயிலகங்களில் நடத்தப்படும் பாடத்திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழே விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. தோல் தொழில் நுட்பவியல் பயிலகம், சென்னை.
   - அ) தோல் தொழில் நுட்பவியல் டிப்ளமா.
   - ஆ) ஒரு சான்றிதழ் பாடத் திட்டம்.
2. நெசவுத் தொழில் நுட்பப் பயிலகம், சென்னை.
   - அ) நெசவுத் தொழில் நுட்பவியல் டிப்ளமா
3. வேதியல் தொழில் நுட்பவியல் பயிலகம், சென்னை.
   - அ) வேதியல் தொழில் நுட்பவியல் டிப்ளமா,
   - ஆ) சர்க்கரை தொழில் நுட்பவியல் டிப்ளமா
   - இ) ரப்பர் பிளாஸ்டிக் தொழில் நுட்பவியல் டிப்ளமா.
4. அச்சுத் தொழில் நுட்பவியல் பயிலகம், சென்னை.

   அச்சுத் தொழில் நுட்பவியல் டிப்ளமா அளவிலும் சான்றிதழ் அளவிலும் பயிற்றுவிக்கப்படுகின்றது.
5. மாநில வணிகவியல் பயிலகம், சென்னை.
   - அ) வணிகவியல் செயல் முறை டிப்ளமா
   - ஆ) விற்பனை முறைப் பாடத் திட்டம்-சான்றிதழ்.

பள்ளியிறுதி ஆண்டில் தேர்ச்சி பெற்றவர்களும், அல்லது அதற்கு இணையான படிப்பு பெற்றவர்களும் மேற்கூறிய டிப்ளமா பாடத்திட்டங்களில் சேருவதற்கு தகுதியுடையவர் ஆவார்கள்.

6. ஒட்டல் நிர்வாகமும் சமையற் கலையும் மற்றும் உணவியல் ஊட்டநெறிக் கல்லூரி, சென்னை,

இக்கல்லூரியில் ஓட்டல் நிர்வாகம், சமையற்கலை, உணவியல் ஊட்ட நெறிக்கலை சம்பந்தமாக டிப்ளமா மற்றும் சான்றிதழ் அளவுகளில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. டிப்ளமா பாடத் திட்டத்தில் சேருவதற்கு புகுமுக வகுப்புத்தேறியவர்களும் சான்றிதழ் வகுப்புகளில் சேருவதற்குப் பள்ளியிறுதி வகுப்பில் தேறியவர்களும் தகுதியுடையவர்களாவார்கள்.

மேற்கூறிய சிறப்புப் பயிலகங்கள் தவிர திரைப்படவியல் பயிலகம் ஒன்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்ககத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றது. அப்பயிலகத்தில் டிப்ளமா அளவிலும், சான்றிதழ் அளவிலும் திரைப்பட எடிட்டிங், நடிப்புக்கலை, இயக்குதல், மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல் முதலான படப்பிடிப்பு சம்பந்தமான பல பிரிவுகளில் வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல் டிப்ளமா பாடத்திட்டத்தில் சேருவதற்குப் பட்டப் படிப்பும், நடிப்புக்கலை சான்றிதழ் பாடத் திட்டத்தில் சேருவதற்குப் பள்ளியிறுதி ஆண்டிலும் தேறியிருத்தல் வேண்டும். மற்ற பாடத் திட்டங்களில் சேர விரும்புவோர் புகுமுக வகுப்பில் தேறியவர்களாக இருத்தல் வேண்டும்.

**படிப்பு உதவித் தொகை — கடன் வசதி**

கீழ்க்கண்ட வகையான படிப்பு உதவித் தொகை - கடன் வசதிகள் தொழில் நுட்பக் கல்விநிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் தேவை மற்றும் திறமையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

1. ராணுவச் சேவை படிப்பு உதவித் தொகை
2. அரசியல் தியாகிகள் படிப்பு உதவித் தொகை
3. பர்மா, இலங்கை அகதிகள் படிப்பு உதவித் தொகை.
4. தொழில் நுட்பக் கல்வித் துறை படிப்பு உதவித் தொகை.
5. ஷெட்யூல்டு வகுப்பினர், மலைச்சாதியினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கான மத்திய மாநில அரசுகளின் படிப்பு உதவித் தொகை.
6. உயிர் நீத்த அரசு ஊழியர்கள் படிப்பு, உதவிதொகை
7. இந்திய அரசாங்க தேசிய படிப்பு உதவித்தொகை.
8. கட்டண சலுகைகள்.
9. தமிழ்நாடு கல்விக் கடன் வசதிகள்.
10. பரிசுகள் மற்றும் கட்டளைகள்.

**மாணவர்கள் படிப்புக்காக ஆகும் அரசின் செலவு :**

தொழில் நுட்பக் கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவனுக்காகவும் அவனுடைய பயிற்சிக்காலம் முடிய அரசு செலவிடும் தொகை 1978-79 நிதியாண்டு கணக்கின் படி கீழ்வருமாறு:

பொறியியல் கல்லூரி மாணவர்க்கு —ரூ. 15,800 -



தொழில் நுட்பப் பயிலக மாணவர்க்கு —ரூ. 5,200

தொழில் நுட்ப உயர் நிலைப்பள்ளி மாணவர்க்கு —ரூ. 4,500

**தன்னாட்சி**

புதிய கல்வித் திட்டங்கள், புதிய தேர்வு முறைகள் இவைகளில் சுதந்திரமாக பல்துறை தொழில் நுட்பப பயிலகங்கள் செயலாற்ற உதவும் வகையில் பல உயர்மட்டக் குழுக்களின் பரிந்துரைக்கேற்ப சில பல் தொழில் நுட்பப் பயிலகங்களுக்குத் தன்னாட்சி வழஙகப்பட்டு வருகிறது. இதுவரை ஒருபல்துறை தொழில் நுட்பப் பயிலகத்திற்கு அனைத்துப் பாடத்திட்டங்களுக்கும், ஐந்து பல்துறை தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட பாடத் திட்டம்-துறைக்கு மட்டும் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது. இத் தன்னாட்சி வழங்கும் திட்டத்தை நன்கு இயங்கிவரும் வேறு சில பல்துறை தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும் விரிவாக்கும் திட்டம் ஆலோசனையில் உள்ளது.

**சமுதாய வளர்ச்சிக்கான தொழில் நுட்பப் பயிலகங்கள் :**

கிராமப்புற அபிவிருத்தி திட்டங்களாகிய வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், சாலைகள் மற்றும் கிராமப் புற போக்குவரத்து. குடிநீர் வழங்குதல் மற்றும் நீர்ப்பாசனம், விவசாயப் பண்ணைகளுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் மின்சாரவசதிகள் அளித்தல், விவசாயம் சார்ந்த தொழில் அபிவிருத்தி விவசாய உபகரணங்கள் பழுது பார்க்கும் பணிமனைகள் அமைந்தல் முதலான திட்டஙகளுக்கு உதவும் பணியில் தொழில் நுட்பத்துறை பயிலகங்கள் சிறப்பான பங்கு ஏற்கும் நோக்கத்தோடு அரசினால் செட்டிநாடு, கோவை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள மூன்று பல் தொழில் நுட்பப் பயிலகங்கள் சமுதாய வளர்ச்சி பல்துறை தொழில் நுட்ப பயிலகங்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இப் பயிலகங்களுக்கு இத்திட்டத்திற்காக, ஆகும் செலவினங்களை முதல் ஐந்தாண்டு காலத்திற்கு மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இப்பயிலகங்கள் விரைவில் செயல்பட உள்ளன.

**புதிய பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் :**

தற்போது தமிழ் நாட்டில் தர்மபுரி, நீலகிரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பல்துறை தொழில் நுட்பப் பயிலகங்கள் இல்லை. இதைக் கருத்திற்கொண்டு, அரசு முதலில் தர்மபுரி மாவட்டத்தில் 1979-80 நிதியாண்டில் ஒரு அரசு பல்துறைக் தொழில் நுட்பப் பயிலகம் நிறுவத் தீர்மானித்துள்ளது.

**சென்னையில் கொழும்பு திட்ட ஆசிரியர் கல்லூரியின் அங்கம் :**

சிங்கப்பூரிலுள்ள கொழும்பு திட்ட ஆசிரியர்கல்லூரி, தொழில் நுட்ப டிப்ளமா கல்வித்திட்டம், பாடத்திட்ட அமைப்பு, வளர்ச்சி மற்றும் கல்வி நிர்வாகம் ஆகிய பல்வேறு திட்டங்களை சிங்கப்பூர் மற்றும் வேறு பல மண்டல நாடுகள் சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுத்த உதவும் ஒரு நிறுவனமாக விளங்குகிறது. இக்கல்லூரி கீழ்க்காணும் நோக்கங்களுக்காக எல்லா உறுப்பினர் நாடுகளையும் தேர்ந்தெடுக்கப் பட்ட பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களை இக்கல்லூரியின் இணைந்த பயிலகங்களாக அமைக்க கருத்து தெரிவித்தது.

1. தொழில் நுட்ப டிப்ளமா கல்வி மற்றும் பயிற்சிமுறைகளில் உரிய நாடுகளின் புதிய கண்டுபிடிப்புகளை அறிவதில் அக்கல்லூரியுடன் ஒத்துழைத்தல், புதிய முறைகளைக் கண்டறிதல், அவைகளைப் பரப்ப அறிக்கை தயாரித்தல்.
2. அக்கல்லூரியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட துறைகளில் தொழில் நுட்பப்பணியாளர் நடவடிக்கை ஆராய்தல், பாடத்திட்ட அமைப்பு பயிற்றல் - கற்றல் - செயல் முறை சம்பந்தப்பட்டவற்றில் பிற நாடுகளுக்கு உதவும் வளர்ச்சிப்பணி மேற்கொள்ளுதல்.
3. அக்கல்லூரியின் பயிற்சி திட்டங்களுக்குப் பயன்படும் மாதிரி நிகழ்ச்சி அறிதல் மற்றும் இதர இணையான பொருள் பற்றி அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் பிற நோக்கங்கள்.

மேற் சொன்ன நோக்கங்களுக்காக இந்தியாவில் சில முன்னேற்றம் அடைந்துள்ள சில பயிலகங்களை அதன் இணைக் கல்லூரியாகத் தேர்ந்தெடுத்துள்ளது அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட



# தமிழ்நாடு தொழில்நுட்பப் பள்ளியின் சாதனை

மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான சாதனங்களை உருவாக்குவதில் மதுரையிலுள்ள தமிழ்நாடு பாலிடெக்னிக் முன்னணி நிற்கிறது. குறிப்பாக கிராமப்புற மக்களுக்குப் பயன்படும் சாதனங்களாகவும், மாணவர்களுக்கு இன்றியமையாத உபகரணங்களாகவும் இவை இருக்கின்றன.

தமிழ்நாடு பாலிடெக்னிக் 'மெதநே' வாயு உற்பத்திச் செய்யக் கூடிய சாதனம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. வாயு உற்பத்தி செய்ய காய்கறிக் கழிவுகள் சமயலறைக் கழிவுப் பொருட்கள், தோட்டத்திலுள்ள புல் பூண்டுகள் முதலியவை பயன்படுத்தப்படுகின்றன. இது எளிதாகவும் குறைந்த செலவில் செய்யக்கூடியதாகவும் உள்ளது.

தமிழ்நாடு பாலிடெக்னிக், சைக்கிளில் பொருத்தக்கூடிய மரக் கடைசல் இயந்திரத்தையும் உருவாக்கியிருக்கிறது. எளிதாக எடுத்துச் செல்லக்கூடியதாக இருப்பதால், கிராமக் கலைஞர்களிடம் இதற்குப் பெரும் வரவேற்பு இருக்கிறது.

மரவேலைகளைச் செய்வதோடு மட்டுமின்றிக் கருவிகளைக் கூர்மைப்படுத்தவும் இது பயன்படும். காந்தி கிராம கிராமீயப் பல்கலைக் கழகம், இந்த லேத்துக்களைப் பல்கலைக் கழகத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் பயன்படுத்தி வருகிறது.

மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதற்கு ஒரு புதிய முறையையும் பரீட்சார்த்தமாகத் தமிழ்நாடு பாலிடெக்னிக் கையாண்டு வருகிறது. இம்முறையில் செயல்முறை விளக்கமும் வாய்மொழிப் போதனா மொழி முறையும் ஒருங்கே கையாளப்படுகின்றன.

ஆசிரியர் உதவியின்றித் தாமே புரிந்து கொள்வதற்கு வசதியாக ஆய்வுக்கூட வசதியும் செயல் முறையை விளக்குவதற்காக டேப் ரிக்கார்டும், வரைபடங்களை விளக்குவதற்காக நவீன சாதனங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன...

## மேல் நிலைப் பள்ளிகளில்..!

சாதாரண மேல் நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு பயில்பவர்கள் மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வழக்கமாகவுள்ள கட்டணச் சலுகைகள் இங்கும் உண்டு.

மேல்நிலைப் பள்ளிகளில் எந்த மொழியைப் பாடமொழியாகக் கொண்டு பயின்றாலும், பின்வருமாறு ஆண்டுதோறும் சிறப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்:

| | | |
|---|---|---|
| சிறப்புக் கட்டணம் | ... | ரூ. 15 |
| வசதிக் கட்டணம் | ... | ரூ. 10 |
| ஆய்வகக் கட்டணம் | ... | ரூ. 20 |

கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைகள் ஆண்டுதோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 4 மாணவர்களுக்குப் புதியதாக வழங்கப்படுகிறது. இப்படிப்புதவித் தொகைகளைப் பெறுபவர்கள் தமது மேல்நிலைப் பள்ளிப் படிப்பு முடியும் வரை அத் தொகைகளைப் பெறலாம். தாங்கள் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பள்ளியிலேயே மேல் நிலைப் பள்ளி வகுப்பைப் படித்தாலும் சரி, வேறு பள்ளிகளில் படித்தாலும் சரி, அவர்களுக்கு இச் சலுகை உண்டு.

இணைக் கல்லூரிகளில் சென்னை அடையாறில் உள்ள மையப் பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



**கோள் இயல் கூடம் :**

கோள் இயல் கூடம் விண் ஆராய்ச்சியாளர்களுக்கும், பொறியியல் பயிலும் மாணவர்களுக்கும், பொதுவியல் மாணவர்களுக்கும் அவர்களின் பாடங்களை செவ்வனே கற்க மிகவும் உதவுகிறது. கோள் இயல் கூடம் பொது மக்களுக்குப் பொது அறிவை வளர்ப்பதோடு இளம் பள்ளி மாணவர்களை அறிவியலில் நாட்டமுறச் செய்து, பிற்காலத்தில் வானிலை ஆராய்ச்சியில் ஈடுபட ஊக்கம் ஊட்டுகிறது. ஆதலால் இதனின் சிறப்பையும் பயனையும் உணர்ந்த தமிழக அரசு சேலம் பொறியியற் கல்லூரியில் ரூ. 2.25 லட்சம் செலவில் கோள் இயல் கூடம் ஒன்றினை நிறுவியுள்ளது. இக்கூடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 6.2.1979 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இக்கோள் இயல் கூடம் தென்னிந்தியாவிலேயே இரண்டாவதும் ஆகும்.

தொழில் நுட்பக் கல்வியின் தரத்தையும் மேம்பாட்டையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஆசிரியர்களுக்கு மேற்படிப்பிற்கு வசதி செய்தல், தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி அளித்தல், தொழிற்கூட பயிற்சி அளித்தல், மாணவர்களுக்கான தொழில் நுட்பப் பாடப் புத்தகங்கள் உருவாக்குதல், குறுகிய கால வகுப்புகள் நடத்துதல், கருத்தரங்குகள் நடத்துதல், பல்தரப்பட்ட பாடத்திட்டங்கள் உருவாக்குதல், பணியாற்றும் பொறியாளர்களுக்கான தொடர் கல்விக்கான திட்டங்கள் தீட்டுதல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டில் தொழில் நுட்பக் கல்வி, வரும் ஆண்டுகளில் மேலும் வளமும், வலிவும் பெற்றுப் பொலிவுறும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.





# நட்புறவுப் பாலம்!

திரு ம. சிவதாணு பிள்ளை
செயலர்
தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்கம்

மாணவனை வளர்ப்பதில், புத்தகத்தில் அச்சடித்துள்ள எழுத்துக்கள் மாத்திரம் பங்கு கொள்வதில்லை. அவனுடைய அறிவையும் ஆற்றலையும் ஒழுக்கத்தையும், உள்ளத்தையும் வளர்ப்பதில், அவனைப் பெற்றெடுத்த தாய் தந்தையரும், கல்விபோதிக்கும் ஆசிரியரும் பெரும் பங்கு கொள்கின்றனர் என்பதில் ஐயமே இல்லை.

நவீன காலக் கல்விமுறைகளில் பெற்றோரின் அரவணைப்பில் இருந்து கொண்டே, மாணவன் கல்விக்கூடம் சென்றுகல்வி பெற வழி ஏற்பட்டபின், மாணவனைப் பற்றிய முழுப்பொறுப்பையும் ஆசிரியர்களின் மீதே சுமத்துவது நியாயமற்ற செயலாகும். ஆகவே, கல்வியாலும், பண்பாலும், பண்பட்ட நிலைக்கு உயர்ந்துள்ள இந்த நாகரிக யுகத்தில், அவரவர் பொறுப்பை அவரவர் புரிந்து கொண்டதற்கான அத்தாட்சியாக விளங்குகிறது, இன்று உலகெங்கணும் தன்கிளைகளைக் கொண்ட ''பெற்றோர் ஆசிரியர் கழகம்''

ஆசிரியர்களும், மாணவர்களும், இவர்களோடு தொண்டுள்ளம் கொண்டவர்களும், கல்வியில், கல்வி வளர்ச்சியில்அக்கறை கொண்ட நல்லவர்களும், ''பெற்றோர் ஆசிரியர் கழகத்தின்'' உறுப்பினர்கள் என்ற பட்டம் பெற்று இச் சமுதாயத்திற்கே நற்பணி புரிந்து வருகின்றனர்.

மாநில அளவிலான கழகமும் மாவட்ட அளவிலான கழகங்களும், ஒவ்வொரு பள்ளியிலும், இணைந்துள்ள கழகங்களுமாக, அருகு போல் வேரோடி, ஆல் போல் தழைத்துள்ள இக்கழகம், அகில உலகெங்கணும் பரவியுள்ள, சாதி, மத, இன, மொழி, அரசியல் வேற்றுமைகளைக் கடந்ததோர் சமூக அமைப்பாகும்.

தரமான பண்பட்ட கல்வியை அளிப்பதிலும், பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்வதிலும், பெற்றோர் ஆசிரியர்களிடையே கூட்டுறவையும், நட்பு நல்ல சமூகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதிலும் பெரும்பணி புரியும் இக்கழகத்தின் நோக்கங்களாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

குழந்தைகளின் உடல், உள்ளம், உயிர் ஆகியவற்றின் வளர்ச்சிக்குரிய தரமான கல்வியையும் ஒழுக்கத்தையும் அளிப்பது.

சமுதாய நலன்நாடும்சிறந்த் குடிமக்களை உருவாக்குவது பெற்றோர் ஆசிரியர்களிடையே நெருங்கிய உறவையும் கூட்டு மனப்பான்மையையும் வளர்த்து, குழந்தைகளை வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குதல்.

பள்ளிகட்கு அவ்வப்போது தேவைப்படும் கட்டடங்கள் விளையாட்டுத்திடல், தளவாடங்கள், அறிவியற் கருவிகள், கழிப்பிடங்கள், மற்றைய தேவைகள் இவற்றையெல்லாம் அவ்வப்போது அறிந்து அவற்றைப்பெற கூட்டு முயற்சி மேற்கொள்ளல்.

தொடக்கப்பள்ளியில் ஏற்படும் விரயத்தைத் தவிர்க்க. ஆக்க வழிகளைக் கையாளுதல்

மேல்நிலைப்படிப்பில், குறிப்பாகத் தொழிற்பிரிவில் வளர்ச்சிக்கான தனி முயற்சிகளை மேற்கொள்ளல்.

முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி ஆகியவற்றின்வெற்றிக்கு ஆக்கப் பூர்வமாக ஆவன செய்தல்

1895ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அலிஸ் மெக்லெள்ளன்

பெரினி' என்ற அம்மையாரால் (வழக்கறிஞரின் மனைவி) தோற்றுவிக்கப்பட்ட இக்கழகம், இன்று உலகம் முழுவதும் தனிக் கிளைகளைப் பரப்பி, நற்பணி புரிகிறது.

நமது இந்தியத் துணைக் கண்டத்தின் தலைநகராக விளங்கும் தில்லியில் 1952ம் ஆண்டில் பெற்றோர் ஆசிரியர் கழகம் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில், 1964 ஆம் ஆண்டில்தான் இக்கழகம் நிறுவப்பட்டிருப்பினும் குறுகிய கால அளவில் செய்துள்ள சாதனைகள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக் கனவாகும்.

*1978-79ஆம் ஆண்டில் ஏறக்குறைய 20,000 பள்ளிகள், மாநிலப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.*

இக்கழகத்தின் சாதனைகளை பட்டியலிட்டுக் கூறமுடியாதெனினும் குறிப்பாகவும், அதனினும் சிறப்பாகவும், கீழ்வரும் சாதனைகளைக் குறிப்பிடலாம்.

1. மாணவ, மாணவிகளின் பேச்சு, எழுத்து, கற்பனை, இசை ஆர்வத்தை ஊக்குவிக்க காந்தியடிகள் பிறந்தநாள்விழா, குழந்தைகள் தின விழா, பாரதியார் தினவிழா, தந்தை பெரியார் நூற்றாண்டு விழா, திருவள்ளுவர் தின விழா போன்ற நாட்களில் கட்டுரை, பேச்சு, இசை, ஓவியப் போட்டிகள் கல்வி மாவட்டவாரியாக நடத்துதல்

2. அரசுத் தேர்வகத்தில் இருந்து பெறப்பட்ட துணிகளை சீர்செய்து மாவட்டக் கிளைகளின் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு வழங்குதல்.

3. ஆசிரியர் திருநாளை முன்னிட்டு ஆசிரியர்களுக்குக்கட்டுரைப் போட்டி வருவாய் மாவட்ட அளவில் நடத்திப் பரிசு வழங்குதல்.

4. வருவாய் மாவட்ட அளவில் பெற்றோர் தினம் கொண்டாடுதல்.

5. 10, 11வது வகுப்புப் பொது தேர்வில் 100 சதம் தேர்ச்சி காட்டிய 93 பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்குதல்.

6. சிறந்த முறையில் அகமதிப்பீட்டுத் திட்டத்தைச்செயல்படுத்திய 48 பள்ளிகளுக்குப் பரிசுப் புத்தகங்கள் அளித்தல்.

7. பள்ளிகளில் சிறந்த முறையில் செயல்படும் பெற்றோர் ஆசிரியர் கழகங்களுக்குக் கேடயங்கள் வழங்குதல்



8. பள்ளிகளின் வளர்ச்சிக்காக கண்காட்சி, சீரமைப்பு மாநாடு நடத்துதல்.

9. கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 7 கிராமங்கள் வளர்ச்சியடைய நிதி உதவி அளித்தல்.

ஒவ்வொரு பள்ளியைச் சார்ந்த கழகங்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது, அவ்வூர்களின் அரிமா சங்கம் போன்ற பிற சங்கங்களின் துணை கொண்டோ பள்ளிக்கென குடிநீர்த் தொட்டி அமைத்தல், விலையாட்டு நிலம் பெறுதல், அதிகப்படியான வகுப்பறைகட்குக் கட்டடம் கட்டுதல், பாடபோதனைக்குரிய பொருள்கள், மின்விசிறி, ஒலிபெருக்கி, வானொலிப் பெட்டி, டேப் ரிக்கார்டர், தொலைக்காட்சி/கருவி, முதலுதவிப் பெட்டி, மரச்சாமான்கள் ஆகியவற்றை வாங்குதல் முதலிய ஆக்கப்பணிகளைச் செய்துள்ளன.

இவற்றையெல்லாம் காணும் போது மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதிலும், பள்ளியின் வசதிகளை அதிகரித்துக் கொடுப்பதிலும், மாணவர்களுக்குச் சத்துணவு அளித்தலிலும், மதிய உணவுத்திட்டத்தில் பங்கு கொள்வதிலும், ஓய்வுநேர விளையாட்டுக்கள் அமைப்பதிலும், தோட்டம் போடுவதிலும், உடற்பயிற்சி, உடல் நலக் கல்வி, விளையாட்டு விழாக்கள், இளைஞர் விழாக்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி, மாணவர்களை ஊக்குவிப்பதிலும், பள்ளியில் நூல் நிலையும் அமைப்பதிலும், பொருட்காட்சிச் சாலை ஏற்படுத்துவதிலும் பெற்றோர் ஆசிரியர் இடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் உண்டு பண்ணுவதிலும், இளைஞர்கள் கல்வி, சமூகம், பொருளியல் ஆகிய துறைகளில் ஆக்கம் பெறச் செய்தலிலும், சிறுவர்களை நல்ல குடிமக்களாகத் திகழச் செய்வதில் மாணவர்களின் சிந்தனை மற்றும செயல்திறனைப் பெருகச் செய்வதிலும், தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை இளைஞர்களிடையே ஏற்படுத்தி நாட்டை வளமுறச் செய்வதிலும் இளைஞர்களைக் கலையுணர்வு பெறச் செய்வதிலும், சமூகத் தொண்டாற்றச் செய்வதிலும், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் எடுத்துக் கொண்டுள்ள பங்கு மகத்தானது என்பது தெள்ளென விளங்கும்.

ஒரு காலத்தில், பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கட்கும், மாணவர்களின் பெற்றோர்க்கும் எவ்விதத் தொடர்புமே இல்லாமல் இருந்ததுண்டு.

குடும்பச் சூழ்நிலையின் காரணமாக மாணவர்களின் மனமும், நடத்தையும் மாறுபடுவதை ஆசியர்கள் அறியாமலும், பள்ளியில் நிலவும் சூழ்நிலையால் மாணவர்களின் குணங்கள் மாறுவதை பெற்றோர்கள் உணராமலும் (இவற்றின் உண்மையான காரணத்தை அறிய முற்படல்) ஆசிரியரிடம் திறமையில்லையெனப் பெற்றோரும், பெற்றோர்கள் வளர்க்கும் முறை சரியில்லையென ஆசிரியர்களும் ஒருவரையொருவர் குறைபட்டுக்கொண்ட காலமும் இருந்தது. ஆயினும் வீதிகள் தோறும் பள்ளிகள் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து எல்லா பள்ளிகளிலும், பெற்றோர் ஆசிரியர் கழகம் நிறுவப்பட்டபின், பெற்றோர் ஆசிரியர்களிடையே நட்புறவுப் பாலம் அமைக்கப்பட்டுவிட்டது. இரு தரப்பினர்க்குமிடையே நட்புறவு மேலோங்கி வளர்ந்துள்ளது. இரு சாரரும் தத்தம் கடமையைப் புரிந்து கொண்டதில் மாணவர்களின் வளர்ச்சி மெருகிட்ட பொன்னாக ஒளி வீசுகிறது.

தாய் தந்தையரின் சொத்துக்களான குழந்தைகளைச் சான்றோராக்கும் தெய்விகப்பணியை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் ஆசிரியர்கள். அத் தெய்விகப் பணிக்குமாணவச்செல்வங்களைக் காணிக்கையாக்கும் அற்புதப் பணிக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டவர்கள் பெற்றோர்கள். இவ்விருவரின் கூட்டு முயற்சியால் மாணவச் செல்வங்கள் நன்னெறிபடுத்தப்படும்போது, அவர்கள் பட்டை தீட்டிய வைரங்களாக ஒளிர்கின்றார்கள்!



# காலத்தில் மருந்தடித்து காத்திடுவோம் நெற்பயிரை!

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், காரக்கோட்டை கிராமத்தில் சமீபத்தில் வீசிய புயல் மற்றும் பலத்த மழைக்குப்பின் சுமார் 1000 ஏக்கர் நெல் பயிரில் குருத்துப் பூச்சி, இலை சுருட்டுப்புழு ஆகிய பூச்சிகள் தாக்கி, வயல்கள் எல்லாமே சாரி சாரியாகத் தீப்பிடித்தது போல் எரிந்து காணப்பட்டன. நாங்கள் பல்வேறு மருந்துகளை அடித்தும், பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், குடுமியான்மலை, வேளாண் ஆராய்வு நிறுவன இயக்குநர் அவர்களிடத்தில், நாங்கள் நேரிடையாகச் சென்று தெரியப்படுத்தினோம். உடனே அவர்கள் இந்த குடுமியான்மலை, அறந்தாங்கி ஆகிய இடங்களிலிருந்து விவசாய அலுவலர்கள் விரைந்து வந்து பாாவையிட்டு, தேவையான மருந்துகளையும், விசைத் தெளிப்பான்களையும் கொண்டு வந்து சேர்த்து, வயலுக்கு அன்றே போர்க்கால நடவடிக்கை போல் மருந்தடித்தார்கள்.

மருந்தடிக்கும்போது மருந்தடிப்பதைப் பார்வையிடவும் மருந்து அடிக்கப்பட்ட பகுதிகளைக் கணக்கிடவும் என்று தனித்தனியாக விவசாய அலுவலர்கள் பிரிந்து செயல்பட்டார்கள். மேலும் மருந்தடிக்கு முன்னரும் மருந்தடித்த பின்னரும் பூச்சிகள் எண்ணிக்கை, பூச்சிகளின் இறப்பு விகிதம் போன்றவைகளையும் கணக்கெடுத்தார்கள். எங்கள் வயல்களில் மிதைல் பாரத்தியான் மருந்தையும், டிடிடீ மருந்தையும் கலந்து விசைத் தெளிப்பான் மூலம் மருந்தடித்தார்கள். இவ்வாறு போர்க்கால நடவடிக்கை போல மருந்து அடித்ததன் பயனாக, எங்கள் வயல்களைக் காக்கிய பயங்கரமான பூச்சிகள் அழிக்கப்பட்டு, பயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இதே போல பயிர்களைத் தாக்கக்கூடிய பூச்சி, நோய்களுக்கு காலா காலத்தில் உரிய மருந்துகளை உரிய அளவு தக்கபடி அடித்தால் பயிர்களைக் காப்பாற்றலாம் என்பது நாங்கள் அனுபவ பூர்வமாக உணர்ந்த உண்மை.

**—சி. மாணிக்கத் தேவர்**
**சித. காளியப்ப செட்டியார்,**
**காரக்கோட்டை கிராமம்**
**அறந்தாங்கி ஒன்றியம்.**



## நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் பழங்குடி மக்கள்

நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகாவில் 3,403 குரும்பர்களும், 705 இருளர்களும், 5,178 பனியர்களும் வசிக்கிறார்கள்.

மத்திய அரசின் வழிமுறைகளின் பேரில் தமிழ்நாட்டில் நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப சில மாறுதல்கள் செய்து துணைத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினரின் மேம்பாட்டுப் பகுதிகள் வரையறுக்கப்பட்டன. அதாவது குறைந்தது, 10,000 மக்கள் வாழும் தொடர்ச்சியான கிராமங்களில் 50 விழுக்காடு, பழங்குடி மக்கள் வாழும் பகுதிகள் துணைத் திட்டப் பகுதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற பழங்குடியினர் பகுதிகள் மேற்சொன்ன விதிமுறைக்குட்படாததால், இம்மாவட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனினும், 1978-83-ம் ஆண்டிற்கான மத்திய கால திட்டத்தின்கீழ் பண்டைய பழங்குடியினருக்கான திட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய அரசின் ஒப்புதலுடன் இத்திட்டம் செயல்படும்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லாப் பண்டையப் பழங்குடியினரும், சமுதாயப் பொருளாதார முன்னேற்றம் பெறுவார்கள். இதற்கிடையில், அரிசனம் மற்றும் பழங்குடி நலத்துறையின் மூலமும், நீதித்துறையின் மூலமாகவும் செயல்படுத்தப்படுகிற மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும் கூடலூர் தாலுகாவிலுள்ள 917 ஆதிவாசிகளுக்கு 1,258 04 ஏக்கர் நிலங்கள விவசாயத்திற்கு ஒப்படைப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

[சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட தகவல்]




# விரைந்து செயலாற்றும்



# வீட்டு வசதி வாரியம்

தமிழ்நாடு முழுவதும் வீட்டு வசதித் திட்டங்களைச் செயலாற்றுவதில் திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்ளும் வகையில் சென்னையில் ஒரு பிரிவும், திருச்சிராப்பள்ளி, மதுரை கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டு வசதிப் பிரிவாக மூன்று வீட்டு வசதிப் பிரிவுகளுடன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 1961-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்டது.

பின்னர் வேலூர், சேலம், ஈரோடு ஆகிய இடங்களிலும் வீட்டு வசதிப் பிரிவுகள் அமைக்கப்பட்டன.

வீட்டு வசதி வாரியம், மாத வருமானம் ரூ. 350-க்கு மேற்படாது, பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டத்தின்கீழ், வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் உதவியுடனும், தனது சொந்த நிதியாதாரங்களிலிருந்தும் வீடுகளைக் கட்டித் தருகிறது. இவ்வீடுகளுக்குச் செலவு, வீடு ஒன்றுக்கு ரூ. 8,000. இவ்வீடுகள் ஒதுக்கப் பெற்றவர்கள் வீட்டின் செலவுத் தொகையில் 10 சதவீத அளவிற்கு முன்பணமாக அளிக்க வேண்டும். மீதமுள்ள தொகை 240 மாதத் தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இதற்கான தவணை முறை வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 5 சதவீதம். 1978-79-ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியத்தால் 1,643 வீடுகள் இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும். ரூ. 55.61 இலட்சம் செலவில் இவ்வீடுகள் கட்டப்படும். 1979-80-ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் 1,800 குடியிருப்புகளை ரூ. 83.28 இலட்ச செலவில் இத்திட்டத்தின்கீழ் கட்டும்.

**குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்:**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ஆண்டு வருவாய் ரூ. 4,200-க்கும் ரூ. 7,200-க்கும் இடைப்பட்ட வருவாயினரின் நலனுக்காக இத்திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற வீட்டின் தற்போதைய உச்சவரம்புச் செலவு ரூ. 18,000 வீட்டின் செலவினத்தில் 25 சதவீதத்தை உடனடியாக முன்பணமாகச் செலுத்தும்படியான விதி இத்திட்டத்தில் உள்ளது. மீதியுள்ள தொகை 20 ஆண்டுக் காலத்தில் மாதத் தவணைகளாக, ஆண்டொன்றுக்கு 8.5 சதவிகித வட்டியுடன் வசூலிக்கப்படும்.

1955-56-ஆம் ஆண்டு முதற்கொண்டு இதுவரை இத்திட்டத்தின் கீழ் 9,684 வீடுகளை, வீட்டு வசதி வாரியம் கட்டி முடித்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 337.02 இலட்ச மதிப்பில் 4,104 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80-ஆம் ஆண்டில், வீட்டு வசதி வாரியம் 4,500 வீடுகளைக் கட்ட ரூ. 396.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடம் பெறும் கடன் தொகையும், வீட்டு வசதி வாரியத்தின் சொந்த நிதியாதாரங்களும் இத்திட்டத்தைச் செயற்படுத்த பயன்படுத்தப்படும்.

**நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்**

இத்திட்டம் ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கும் ரூ. 18,000-க்கும் இடைப்பட்ட வருமானம் உள்ள நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்குப் பொருந்துவதாகும்.

நடுத்தர வருவாய்த் தொகுதியினரில் பயனடைவோரின் பண வசதியைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டுக்கான விலை உச்சவரம்பு ரூ. 42,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவினத்தில் 25 சதவீதம் முன்பணமாகவும், மீதமுள்ள தொகை மாதத் தவணையாகவும் 15 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டி விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது.

1959-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் முதற் கொண்டு, இதுவரை 6,383 வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1978-79-ஆம் ஆண்டில் 2,226 வீடுகள் ரூபாய் 363.60 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கிறது. 1979-80 ஆம் ஆண்டில், வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தின் கீழ், தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், மற்றும் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் உதவியுடனும், 2,400 வீடுகளைக் கட்ட ரூபாய் 432.35 இலட்சம் செலவிட உத்தேசித்துள்ளது.

**தொழிலாளர்களுக்கான மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், வீட்டு வசதி வாரியம், மாத வருமானம் ரூ. 350-க்கும் குறைவாக உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கென குடியிருப்புகளைக் கட்டி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறது. மதுரை மாவட்டம், பசுமலையில் ரூ. 20 இலட்சம் செலவில் 150 குடியிருப்புகளைக் கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான 1978-79-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 20 இலட்சம். 1979-80-ஆம் ஆண்டிற்கும் இதே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் 100 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். 1979-80 ஆம் ஆண்டில் 110 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை நகர்ப்புறப் பகுதிகளில் நிறைவேற்றப்படும் இத்திட்டம் "முழு வசதிகளடங்கிய மனைகள்" திட்டமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பணி வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் பொதுமக்களுக்கான வசதிகள், வாணிபக் காரியங்கள், சமுதாயக்கூடங்கள், சிறு கைத் தொழில்கள் ஆகியவைகளின் தேவைகளுக்கும் போதுமான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[தமிழ்நாடு சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட 'தமிழ்நாட்டில் வீட்டு வசதிக் குறித்த கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]

# வெண்பாப் போட்டி

## 'பெரியார் பெரும்புகழே பேசு'

'பெரியார் பெரும்புகழே பேசு' என்னும் ஈற்றடி கொண்ட வெண்பாப் போட்டிக்குக் கவிஞர்கள் எழுதியனுப்பிய நூற்றுக் கணக்கான வெண்பாக்களில், புலவர் திரு ந. கௌதமன் எழுதிய வெண்பா பரிசு பெறுகிறது. பரிசுபெற்ற வெண்பாவும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த சில வெண்பாக்களும் இங்கே இடம் பெறுகின்றன.

மூடவிருள் நீக்கும் முழுநிலவாய், செந்தமிழர்
வாடல் அகற்றும் வளமழையாய்,-தேடற்(கு)
உரியவற்றைக் காட்டும் ஒளிவிளக்காய் வாழ்ந்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் ந. கௌதமன், எம்.ஏ., செந்தலை.

பாழ்படுத்தும் சாத்திரத்தை பாங்கொழிக்கும் சாதியை
கீழ்படுத்தும் பெண்ணடிமை போன்றவற்றை - வீழ்த்தி
உரியவழி யெல்லாம்மேற் கொண்டுழைத்து யர்ந்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் வே. கோதண்டராமன், பி.ஏ.,
கணியம்பாடி.

தன்மானம் காத்துத் தமிழினத்தை வாழ்விக்கத்
தன்வாழ்வை, பேருழைப்பைத் தந்ததனால் - என்றும்
உரிய நெறிமுறையால் ஊர்தோறும் நெஞ்சே
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் கே. ஏ. இராசன்,
குமரேசபுரம்

வித்தாம் பகுத்தறிவை மேதினியெங்கும் விதைத்து
நித்தமும் தன்மான நீர்பாய்ச்சி-மெத்த
அறிவுப் பயிர்விளைத்த அப்சொல் உழவர்
பெரியார் பெரும்புகழே பேசு.

—தமிழ்மணி, கொண்டிசெட்டிபட்டி.

சான்றாண்மைத் தேரேறி சாதியெனும் நச்சரவம்
தான்வந்து தீண்டாது தீவிரமாய் - நின்ற
அரிமாவாம் எங்கள் அழகுத் தலைவர்
பெரியார் பெரும்புகழே பேசு.

— தி. சிவசுப்பிரமணியன்,
தென்காசி.

பொன்போற் புகழ்பெற்றார்; நம்பொருட்டுத் துன்புற்றார்;
அன்பால் அனைவரையும் ஆட்கொண்டார் - என்றும்
உரியார் தமிழர்தம் உள்ளத்தே; நெஞ்சே!
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் ப. வெள்ளை, பி.லிட்.,
திருவில்லிபுத்தூர்.

தங்கம்போல் மேனிவெள்ளிக் கம்பியைப்போல் தாடிமுகம்
சிங்கம்போல் சொல்முழக்கம் கொண்டவராய் - எங்கும்
சரிவாழ்வு நாம்வாழத் தன்வாழ்வு ஈந்த
பெரியார் பெரும்புகழே பேசு!

—க. தங்கமுத்து, கோம்பை.

பண்டைப் பழம்போக்கைப் பட்டெரித்த தீப்பிழம்பு,
தொண்டால் பழுத்தபழம்; தூய்மைஉரு-அண்டும்
வெறிப்பகையைச் சாய்த்தொழித்த வீறுடைய தந்தை
பெரியார் பெரும்புகழே பேசு!

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

தீண்டாமைத் தீங்கொழித்துத் தீதில் அறங்காத்து
வேண்டாத சாதியினை வேரறுத்து-மூண்ட
அறியாமைப் போக்கொழித்து ஆய்ந்துணரச் சொன்ன
பெரியார் பெரும்புகழே பேசு!

—கவிதாயுதன், பொன்மலை.

பரிசு பெற்ற வெண்பாவை எழுதியவர் :
புலவர் ந. கௌதமன், எம்.ஏ.,
செந்தலை, தஞ்சை மாவட்டம்.

சாதிப் பிரிவை சழக்கர்களின் தீங்கருத்தை
மோதித்தூ ளாக்கி முயன்றுழைத்து-நீதி
நெறிகாக்க வாழ்வெல்லாம் நின்றுழைத்த தந்தை
பெரியார் பெரும்புகழே பேசு.

—முல்லை நடவரசு, ஜி. தும்மலப்பட்டி.

பெண்ணினம் முன்னேற்றம் பெற்றிடவே, ஒய்விலாத்
தொண்டாற்றி ஓங்குபுகழ் தான்பெற்றார்-தென்றலே!
அறிவூட்டும் நற்பணியில் ஆன்ற முதல்வர்
பெரியார் பெரும்புகழே பேசு.

—பெமினா, மம்சாபுரம்.

தன்மானத் தேரோட்டித் தாயகத்தோர் வாழ்வுயர்த்தி
துன்புற்றோர் இன்புறவே தோன்றியவர்-என்றும்
அறியாமைப் பேயகற்றி அச்சத்தைக் கொன்ற
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் சு. செயராமன், இராசபாளையம்.

பெரிதுந் தமிழ்நாடு பீடு கொளவே,
அரிய செயல்க ளமைத்தார்! - விரித்தால்,
உரிய புகழ்க்கே யுரியார்நம் தந்தை!
பெரியார் பெரும்புகழே பேசு!

—செஞ்சடையான், திருக்கழுக்குன்றம்.

மூத்த பகுத்தறிவால் முன்னேற்றக் கொள்கைகளால்
வாய்த்த தமிழினத்தின் வாலறிவன்! - யாத்த
வரலாற்றில் மூட வழக்கொழித்த ஆசான்!
பெரியார் பெரும்புகழே பேசு!

—சின்னு. இராமசாமி, கொண்டிசெட்டிபட்டி.

சாதி சமய சழக்கர்தம் பொய்ம்மலையை
மோதி அழித்திட்ட மேதையவர் - ஆதி
அறியார் அகத்திருளைப் போக்கும் பகலவன்
பெரியார் பெரும்புகழே பேசு.

—ந. கயல்விழி, சென்னை-11.

மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
கேடதனை முற்றும் களைந்திடவே - சாட
அரியே (று) எனவெழுந்த ஆற்றல்சால் தந்தை
பெரியார் பெரும்புகழே பேசு

—சு. இலக்குமி, அருப்புக்கோட்டை.

சிந்தனை யின்றிச் சிறுத்திருந்த மானிடத்தின்
மந்தமதி நீக்க மணிக்கதிராய் வந்த
கிரிநிகர்த்த வல்லதொரு சீர்த்தி படைத்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—ரமணகுமார், சென்னை-1

சாதிக் கொடுமை சாக்காடாம் மூடமதி
வீதி வழிபோக்கி வென்றவரை - ஓதி
அறியார் இருந்தாலும் அன்னவரும் கேட்கப்
பெரியார் பெரும்புகழே பேசு!

—அ. காந்தி, எம்.ஏ. பி.எஸ்சி. பி.டி.
தேவத்தூர்.

மூடத் தனத்தின் முதுகெலும்பைத் தான்முறித்து
வாட வருஞ்சாதி வம்பழித்துத் -தேட
அரியபல தொண்டால் அனைத்துலகும் போற்றும்
பெரியார் பெரும்புகழே பேசு!

—புலவர். க. கோபண்ணன், பி.லிட்., வரகனேரி.

அஞ்சாமை நேர்மை அறிவுடைமை மாற்றாரை
எஞ்ஞான்றும் மதிக்கின்ற பேராண்மை-செஞ்சொல்லின்
அரிமாவாய் முழங்கி ஆர்ப்பரித்த போர்மறவர்
பெரியார் பெரும்புகழே பேசு!

—பெரும்பண்ணையூரான், தஞ்சாவூர்.

அறிவால் குணத்தால் அடக்கத்தால் கொள்கைச்
செறிவால் சிறந்த நெறியால்-சிறிதும்
பிறழா வழக்கால் புவியில் உயர்ந்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—பா. பாலகிருஷ்ணன், நாமக்கல்.

சாதியுயர் வகல சமுதாயம் முன்னேற
நீதிநெறி வகுத்த நெறியாளர்-மேதினியில்
உரிமை முழங்கி உயர்வாழ்வை அர்ப்பணித்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—சீனி திருவேங்கடம், சென்னை-15

பேரறிவுப் பெட்டகமாய் பேராண்மைச் சிங்கமாய்
யாரும் புகழ்ந்திடும் ஆற்றலொடு-பாரில்
அறியாமை நீங்க அருந்தொண்டு செய்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—பாலன், செந்துறை.

புல்லரைப் பேயரைப் போற்றிநீ என்கண்டாய்,
நல்லோராய்ச் சீறும் நயமிகு-சொல்லால்
புரட்சி குவித்தறிவு கொண்டிட்டார் நெஞ்சே!
பெரியார் பெரும்புகழே பேசு.

—தி. அ. இளங்கோ, ஆத்திகுளம்.

தீண்டாமை வைக்கமதைத் தீண்டாமல் தீய்த்துவிடப்
பூண்டாரே போர்க்கோலம் பூரித்தே! - ஆண்டு
சரிந்திடினும் மூப்பில் சரியாத ஆண்மை
பெரியார் பெரும்புகழே பேசு!

—வீ. பஞ்சவர்ணம், மேலக்கொண்டையம்பேட்டை.

பாதிப்பே இல்லாமல் பாரதத்தைப் பந்தாடும்
சாதிப்பேய் ஓட்டிய சாரதியே - வாதிட்(டு)
அரியே றெனநின்ற ஆசானாம் எங்கள்
பெரியார் பெரும்புகழே பேசு.
—எஸ்.பூவேந்த அரசு, பெரியமதியாக்
கூடலூர்

சாதிப் பேய்விரட்டிச் சரித்திரத்தில் இடம்பிடித்து
நீதிக்குத் தலைவணங்கி நின்றான்; -நீதில்லா
அரிமாவாய் அடுபுலியாய் ஆர்ப்பரித்துக் கருத்துரைத்த
பெரியார் பெரும்புகழே பேசு.
—ப. குமுருகேசபாண்டியன், கரப்பாடி.

மடமை இருள்சூழ்ந்த வண்ட மிழர் நாட்டில்
கடமை உணர்வூட்டிக் காத்தார் - நடவா
அரிய செயலெல்லாம் ஆற்றியமா வீரர்
பெரியார் பெரும்புகழே பேசு.
—இமயபாரதி, சென்னை-1

பாரினிலே சீர்திருத்தம் பலகோடி செய்வதற்கு
காரிருளைக் களையவந்த கதிரவனாய் - சீரியநற்
கருத்தாலே சிந்தனைக்கு விருந்தளித்த ஈரோட்டுப்
பெரியார் பெரும்புகழே பேசு.
—மு. மணிவாசகன், நல்லாலம்.

கூனிக் குமைந்தநம்மை கோலோச்ச வைத்தந்தை
தேனியாய் சுற்றித் திருத்தியவர் - மானி!
அரிமா எனச்சாடி ஆணவத்தை வென்ற
பெரியார் பெரும்புகழே பேசு.
—இராயகிரி-இளம் தமிழிறை, சென்னை-17

தாழ்ந்த குமுகாயம் தன்மானம் பெற்றோங்கி
வாழ்ந்த(து) எனவையம் மாண்புகள் - சூழ்ந்தே
அரசாளப் பொல்லா அறியாமை சாய்த்த
பெரியார் பெரும்புகழே பேசு.
—புலவர். அ. மோகனன், வங்கனூர்.

மொழியில் சீர்திருத்தம்! மூடத் தளத்தின்
வழியிலே சீர்திருத்தம்! வாழ்வில் - அழியா
நெறிபல கண்டுநம் நெஞ்சில் நிறைந்த
பெரியார் பெரும்புகழே பேசு!
—புலவர் சி. கண்ணப்பன், எம்.ஏ.,
அம்மையார்குப்பம்.

பேராற் பெரியார், பிறங்கிநின்ற கொள்கையினால்,
பேராப் பெரியார்; பெரிதுவந்தே - நேராய்
உரிய சமூகத்தொண் டுண்மையாய்ச் செய்த
பெரியார் பெரும்புகழே பேசு.
—வித்துவான் நா. சிவராமமுத்துக் குமரவேல், தேனி.

சாதிமத பேதமதை சாய்த்தமகன், தீய
போதனைகள் தீர்த்தமகன் புத்துலக - நீதிச்
சரித்திரத்தின் நாயகனாம் சிந்தனைச் சிற்பி
பெரியார் பெரும்புகழே பேசு.
—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

பெண்ணடிமைப் பேயகற்றி பித்தர்தம் நாவகற்றி
மண்ணடிமை போக்குவித்த மாவீரன்! -மண்டும்
அறியாமைச் சாக்காட்டை மூழ்கடித்த சிங்கம்!
பெரியார் பெரும்புகழே பேசு.
—வெட்டிவயல்வளவன், முப்பையூர்.

வெண்தாடி வேந்தரிந்த வையமதில் வாழ்ந்ததால்
கண்மூடிக் கொள்கை கலைந்ததுகாண்-மண்ணில்
தெரியார் உளரோ, தமிழ்த்தலைவர் தந்தை
பெரியார் பெரும்புகழே பேசு.
— தி. நீலகண்டன், மன்னார்குடி.

எப்பாரும் போற்றுகிற ஈ. வே. ரா. அய்யாவை
ஒப்பான சான்றோரும் உண்டோசொல்? - தப்பா
அரியசெயல் செய்தோர் அறிவுநலம் ஓங்கப்
பெரியார் பெரும்புகழே பேசு.
—இரா.சித்தார்த்தான்,
அருப்புக்கோட்டை.

சாதிக் கொடுமையெனும் சாக்காடு போக்கிடவே;
போதித் தலைவனாய்ப் புறப்பட்டே - ஏதும்
அறியார் நிலைமாற்ற அலைந்திட்ட நம்தம்
பெரியார் பெரும்புகழே பேசு!
—எம். கலியமூர்த்தி,
தென்சேரனூர்.

சிந்திக்க வைத்திட்டார் சீர்திருத்தச் செம்மலவர்
முந்தை விதிசாய்த்த முன்னோடி! - விந்தைக்
குரியார் எவர்க்கும் படியார் அதனால்
பெரியார் பெரும்புகழே பேசு.
—சக்திதாசன்,
பெண்ணாடம்

புன்மையிருள் மாய்வதற்காய்ப் பாடிவந்த பொற்கோழி;
தன்னலத்தை வேரறுத்த செங்கதிரோன்; - ஒன்னார்
எரிந்துவிழப் போர்புரிந்த ஈரோட்டு ஏந்தல்;
பெரியார் பெரும்புகழே பேசு!
—வீரபாண்டியன்,
திருத்துறைபூண்டி.



# படிப்பு உதவித் தொகைகள்!

தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும் கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு, 1971-72-முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் புதியதாக நான்கு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இந்த உதவித் தொகையைப் பெறுவார்.

இத்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகளில் மாணவர் படிப்பதாய் இருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1000-மும், விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படிக்கின்ற மாணவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித் தொகை வழங்கப்படும்.

இந்த உதவித் தொகை பெறும் மாணவர்களுள் தம் விருப்பப்படி சாதாரண பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150 மட்டும் வழங்கப்படுகிறது.

இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை 1979-80-ல் (புதியதாகப் பெறுவோர் உட்பட) சுமார் 3,000 ஆக இருக்கும். 1978-79-லிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப்படிப்பு உதவித் தொகையைப் புதிதாகப் பெறும் மாணவர் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது—அதாவது 2-லிருந்து 4-ஆக உயர்த்தப்பட்டது.

இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமாகக் கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.



# படமும் செய்தியும்



நீலகிரி மாவட்டத்திலுள்ள வெலிங்டன் இராணுவப் பயிற்சி முகாம் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 14.5.79 அன்று இராணுவ மரியாதையை ஏற்றுக் கொண்டார்.



உதவி அட்மிரல் காமத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4-5-79 அன்று கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்.



மதுரை மாநகராட்சியின் சிறப்பங்காடி கட்டடக் கால்கோள் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்றார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து, மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சி., மதுரை மேயர் திரு எஸ். முத்து ஆகியோர் உடனுள்ளனர் (29.4.79).



ஈராக் நாட்டில், பாக்தாத் நகரில் நடைபெற்ற அனைத்துலக மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு, 15-5-79 அன்று சென்னை திரும்பிய மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்களைவிமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்றார்.



ஒலிம்பிக் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பரிசுகள் வழங்கும் விழாவிற்குத் தலைமை யேற்று, 6-5-79 அன்று மாண்புமிகு முதலவர் அவர்கள் வெற்றி பெற்றோருக்குக் கேடயம் வழங்கினார்..



செம்பரம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள மீன் இனப் பெருக்க நிலையத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் துவக்கி வைத்தார் (6-5-79).



கேரளத்தில் நிகழ்ந்த பயங்கர பஸ் விபத்தில் உயிர்நீத்தோரின் சடலங்கள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டபோது (11-5-79) அரசு பொது மருத்துவ மனைக்குச் சென்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் இறந்தோர் உடல்மீது மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.



குளுமை-விரைவு-திரைப்படப் பேருந்து போக்குவரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் (9-5-79) துவக்கி வைத்தார். மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன், மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.



# சங்கு குளிப்பு

பண்டை மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து தமிழ்நாட்டில் சங்கு குளித்தல் மாநிலத்தின் முழு உரிமையாக இருந்து வந்திருக்கிறது.

மக்களாட்சி ஏற்பட்ட பின்னரும் இவ்வுரிமை மாநிலத்தின் முழு உரிமையாக இருந்து வருகிறது. 1907-ஆம் ஆண்டு மீன் துறை ஏற்பட்டதிலிருந்து சங்கு குளிப்பு மீன்துறையால் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் கடற் பகுதிகளில் கிடைக்கும் சங்குகள் அவற்றின் தோற்றம், தொழிற்தேவை மற்றும் தரம் இவற்றின் அடிப்படையில் (1) ஜாதி (2) பட்டி (3) இரு பிறவி என பிரிக்கப்படுகின்றன. இவற்றில் திருநெல்வேலி மாவட்டக் கடற்பகுதியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியிலும் மட்டுமே கிடைக்கும் ஜாதிச் சங்குகளில் திருநெல்வேலி மாவட்டக் கடற்பகுதியில் கிடைக்கும் ஜாதிச் சங்குகளே மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

திருநெல்வேலி மாவட்டக் கடற்பகுதியில் சங்குகுளி ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒன்றாகும். இச்சங்கு குளிப்பு, கடல் அமைதியாகவும், தெளிவாகவும் இருக்கும் மாதங்களாகிய அக்டோபர் முதல் மே முடிய உள்ள காலத்தில் நடத்தப்படுகிறது. காற்றுக் குறைவாய் உள்ள நேரங்களில் துறைப்படகுகளின் உதவியுடன் சங்கு குளி வள்ளங்கள் இழுத்துச் செல்லப்படுகின்றன.

திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் கடலோரப் பகுதியில் வாழும் சுமார் 1,000 குளியாட்கள் இச்சங்கு குளியில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். 1978-79-ஆம் ஆண்டு பருவ காலச் சங்கு குளிப்பு சுமார் 5,00 முதல் 600 குளியாட்களுடன் கடந்த நவம்பர் திங்களிலிருந்து துவங்கப் பெற்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சங்கு குளியில், ஒரு குளியாளின் தினசரி சராசரி வருமானம் ரூ. 50லிருந்து ரூ. 100 வரை உள்ளது. தாம் குளிக்கும் சங்குகளை ஒவ்வொரு நாளும் அரசு சங்குக் கிடங்கில் ஒப்புவித்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதப்படி சங்குகளுக்குரிய கிரயத்தினைக் குளியாட்கள் பெற்றுச் செல்கின்றனர். 2¾" விட்டமுள்ள முழு அளவு சங்கு ஒன்றிற்கு ரூ. 2.60 வழங்கப்படுகிறது. 2¾" அதற்கு மேலும் (2¾" விட்டத்திற்கு உட்பட்ட) அடங்கிய முழு அளவு சங்கு ஒன்றிற்கு ரூ. 2.25 வழங்கப்படுகிறது. முழு அளவு கூத்தைச் சங்கு ஒன்றிற்கு ரூ. 0.20 வழங்கப்படுகிறது.

குழாய்ச் சங்குகள் பறிமுதல் செய்யப்பட்டு அவற்றின் உயிருள்ள சங்குகள் மீண்டும் கடலில் கொண்டுபோய் விடப்படுகின்றன. 6 பாகம் முதல் 12 பாகம் வரையுள்ள ஆழங்களில் இருக்கும் சங்குப் படுகைகளில் சங்குகள் பிடிக்கப்படுகின்றன. இச்சங்குகள் கைவினைஞர்களால் வளையல்கள் மற்றும் இதர ஆபரணங்கள் செய்ய மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுவதால், மேற்கு வங்கத்தில் இச் சங்குகளுக்கு நல்ல கிராக்கி உள்ளது. மேற்கு வங்காளத்திலுள்ள இந்து மகளிர் தங்கள் கைகளைச் சங்கு வளையல்களால் அலங்கரித்துக் கொள்கின்றனர்.

1978-79-ஆம் பருவ காலச் சங்குகள் துவங்கப் பெற்ற 3½ திங்களுக்குள்ளேயே 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட முழு அளவு சங்குகள் குளியாட்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, அரசு சங்குக் கிடங்குகளில் இருப்பு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தந்த ஆண்டு சங்குகளைக் கொள்முதல் விலையிலிருந்து 15 சதவிதம் கூடுதல் செய்து சங்குகளின் விற்பனை விலை மாநிலக் கணக்காய்வுத் தலைவரால் நிர்ணயிக்கப்படுகிறது.

''வலம்புரி'' என்று பிரபலமாக அழைக்கப்படும் அபூர்வப் பிறவி சங்கு கிடைக்கப் பெறும்போது, அவற்றின் விசித்திரத் தோற்றத்தாலும், மிகவும் அபூர்வமாகக் கிடைக்கப் பெறுதலாலும் இந்து மதக் கோட்பாடுகளுக்கு உட்பட்ட மத நம்பிக்கைக்கு உரியதாக இருப்பதாலும் இச்சங்கு அதிக விலையைப் பெற்றுத் தருகிறது!







## முதல்வரின் முத்துக்கள்

* எளிமையாக வாழ்வதை வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும்; அடக்கமும் அன்பும்தான் வாழ்வில் பெருமை சேர்ப்பதாகும்! உள்ளத்து அன்பு வழியினால் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காணலாம்!

* ஒரு விளையாட்டு வீரன் உடல்வலிமை பெற்றவனாக இருந்து விட்டால் மட்டும் போதாது. அவனுக்குச் சிறந்த மனநலம், பண்பாடு, துணிச்சல், தோழமை உணர்வு, நாட்டுப்பற்று ஆகிய குணநலங்களும் இருக்கவேண்டும்!

* நல்லவன் என்ற பெயரை எடுப்பதற்கு ஒருவனுக்குப் பல ஆண்டுகள் ஆகலாம்; ஆனால், கெட்டவன் என்ற பெயரெடுப்பதற்கு ஒரு வினாடி போதும்!

* மனிதனுக்குச் சங்கடம் தோன்றும் போது நிம்மதி வேண்டுமென்றால், 'அவன் தன் மனச்சாட்சிக்குக் கேள்விபோட்டு, அந்த மனச்சாட்சியின் பதிலைப் பெற்று எதுசரி-எது நியாயம் என்று படுகிறதோ அதன்படி செயல்பட்டால்தான் மன நிம்மதி அடையமுடியும்!

* சோதனையைக் கண்டு துவண்டு விடக் கூடாது. சோதனைகளுக்கு இடையே மனிதன் உணர்ச்சி வயப்படுவது தடுக்க முடியாது. ஆனால், மறுகணம் கடமை என்ன என்பதை அறிந்து அந்தப் பாதையில் சென்றால், சோதனைகள் நீங்கும். மனம் நிம்மதி பெறும்!

* பிரச்சினைகள் ஏற்பட்டால, அதற்காகக் கவலைப்பட்டுச் சிந்தித்துக் கொண்டு இருக்கக்கூடாது. அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து அதன்படி நடக்கவேண்டும். 'ஐயோ, இப்படி ஆகி விட்டதே' என்று கவலை கொண்டு இருக்கக்கூடாது. இந்த உறுதி மனிதனுக்கு என்றும் இருக்க வேண்டும்.

## மாநில கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிலையம்

''மாநிலக் கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிறுவனம்'' புகுமுக வகுப்பு தேறிய மாணவர்களுக்குத் தொழில் கல்வி பயிற்றுவிப்பதற்காக 1975-76 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் துவங்கப்பட்டது. அது தன்னுரிமை உள்ளது.

கல்வி அமைச்சர் இந்நிறுவனத்தின் ஆளுகைக் குழுவிற்குத் தலைவராவார். திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அதன் துணைத் தலைவராவார். அது 42 மாதங்கள் கொண்ட (27 மாதங்கள் நிலையப் பயிற்சியும், 15 மாதங்கள் வேலை அனுபவமும் உடைய) கல்வித் திட்டங்களை நடத்தி வருகிறது.



(1) கட்டடக் கலையும் உள் அமைப்பும், (2) மின் கருவிகளும் முறைகளும் (3) கெசவுவினை அழகு வேலைப்பாடும் என்ற மூன்று பாடத்திட்டங்கள் அங்கு உள்ளன.

ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாநில அரசு இந்நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 2½ இலட்சம் மானியம் அளிக்கின்றது.

10—5—79

பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பிரிவு சென்னை-பெங்களூர் வழித் தடத்தில் குளுமை-விரைவு திரைப்பட வசதியோடு கூடிய பேருந்து ஒன்றையும், சாய்வு இருக்கை, சொகுசு விரைவுப் பேருந்துகள் சென்னை-சேலம், சென்னை-தஞ்சாவூர் வழித்தடத்திலும், புதிய விரைவுப் பேருந்துகளைச் சென்னை-சென்னை-போடிநாயக்கனூர், பரமக்குடி சென்னை-பாபநாசம் வழித்தடங்களிலும், சென்னை நகரில் தானியங்கு கதவு கொண்ட 11 விரைவுப் பேருந்துகளையும் விட்டுள்ளது. இவற்றின் வெள்ளோட்டத்தை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் துவக்கி வைத்தார்.

தொழில் அமைதிக்காகவும், தொழிலாளர் பிரச்சினைகளில் தொழிலாளர்களின் கருத்தினை அறிய இரகசிய வாக்கெடுப்பு நடத்தி – வழிசெய்யும் வகையிலும் விரைவில் புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

11—5—79

பால்வள நிறுவனம் சீரிய முறையில் பால் வழங்குவதற்குப் புதிய முறையினைக் கொண்டுவரும். இதன் மூலம் தற்போதுள்ளதைப்போல பால் வழங்கும் முறையில் உள்ள முறைகேடுகள் அறவே நீக்கப்படும் என்று மாண்புமிகு கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு கே. ராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்.

கொச்சி அருகில் ஏற்பட்ட பயங்கர பஸ் விபத்தில் மாண்டவர்களின் குடும்பத்திற்குத் தமிழக அரசு தலா ரூ. 500ஐ அவர்களது சடலங்கள் சென்னை வந்த அன்றே வழங்கியது.

12—5—79

வறுமையில் வாடும் தமிழ்ப் புலவர்கள் 33 பேர்களுக்குத் தமிழக அரசு உதவித் தொகையாக மாதம் ரூ. 100 வழங்கி வருகிறதல்லவா? அத்தொகை அளவு ரூ. 250 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

* சென்னை நகரில், காற்றழுத்த மண்டலம் காரணமாக ஏற்பட்ட சூறைக் காற்றால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உதவும் வகையில் 8 இடங்களில் மாநகராட்சி நிவாரண முகாம்கள் அமைக்கப் பட்டன. ஒரு இலட்சத்திற்கும் மேலான உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

* தமிழகத்தில் 470 பஞ்சாயத்துக்களைத் தொட்டுச் செல்லும் வகையில் புதிதாக 486 பஸ் வழித்தடங்கள் ஜுன் மாதத்திற்குள் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

3—5—79

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள 15 ஆயிரம் மக்களுக்காக, விமானத்தின் மூலம் உணவுப் பொட்டலங்கள் அவ்வப்பகுதிகளில் வழங்கப்பட்டன. அந்தந்தப் பகுதிகளில் அரசின் நிவாரணப் பணிகள் தீவிரமாக்கப்பட்டன.

4—5—79

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆனந்த நல்லூர், பாலையூர், அசிக்காடு ஆகிய கிராமங்களில், ரூ. 57 இலட்சம் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார்.

* சென்னையில் புயலால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளிலெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரிலேயே சென்று நிவாரணப் பணிகளைத் துரிதப் படுத்தினார்.

15—5—79

லால்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெரிஞ்சலக்குடி ஊராட்சியில் ரூ. 25 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார்.

ரேஷன் கார்டுகளுக்குத் தரப்படும் மண்ணெண்ணெய்யின் அளவை ஆறு லிட்டராக உயர்த்தித் தரும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

* மழையாலும், சூறாவளிக் காற்றாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களை நேரில்கண்டு அவர்கள் மருத்துவ உதவி பெறச் செய்தார் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சவுந்திரராசன் அவர்கள்.

* நீலகிரி மாவட்டம் வெலிங்டனில்உள்ள இராணுவப் பயிற்சி முகாமின் பெயர் 'மதராஸ் ரெஜிமெண்ட்' என்றிருப்பதை 'தமிழ்நாடு ரெஜிமெண்ட்' என மாற்ற வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

* சென்னை நகரில் குற்றங்களைத் தடுக்க முன்னாள் இராணுவ வீரர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து இரவு-பகலாக ரோந்து சுற்ற ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



# செய்தித்தாள் காகித ஆலைத்திட்டம்

கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு 250 டன் செய்தித்தாள் மற்றும் 50 டன் காகிதம் உற்பத்தி செய்யும் செய்தித்தாள் காகித ஆலை ஒன்றை நிறுவ தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் திட்ட முதலீடு ரூ. 132 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆலை மூலம் சுமார் 4,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும் இத்திட்டத்தில் உள்ள முக்கிய அனுகூலம் என்னவென்றால் தமிழ்நாட்டில் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய மூலப் பொருளான கரும்புச் சக்கையைப் பயன்படுத்துதல்தான்.

சாதாரணமாக இதுபோன்ற திட்டங்களுக்கு மூலப் பொருளாகப் பயன்படும் மரத்துண்டுகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இரண்டாவதாக செய்தித்தாள் விநியோகம் மற்றும் தேவைக்கு இடையிலே உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு இத்திட்டம் உதவுகிறது.

இதன் மூலம் செய்தித்தாள் இறக்குமதி செய்வதற்கான அந்நியச் செலாவணி மிச்சமாகிறது. இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக ரூ. 50 கோடி அங்கீகாரம் பெற்ற மூலதனத்தில் ''தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்'' என்ற பெயரில் தனியாக ஒரு நிறுவனத்தைநிறுவுவதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதுவரை இத்திட்டத்திற்கான ஆரம்பக் கட்ட வேலைகளை டிட்கோ செய்து வருகிறது.

இத் திட்டத்திற்குத் தேவையான தொழில் உரிமம், அந்நிய நாட்டு முதலீடு, வாரிய அனுமதி மற்றும் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுவதற்கான ஒருங்கிணைந்த விண்ணப்பங்கள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது தவிர இத்திட்டத்திற்குத் தேவையான கரும்புச் சக்கை, நிலக்கரி ஆகியவைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் இறுதியாக்குவதற்கான நடவடிக்கை ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூன்று ஆண்டுக் காலத்திற்குள் முடிவுறும். இத்திட்டத்தில் அரசு போட வேண்டிய மொத்த பங்கு மூலதனம் ரூ. 11 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு அரசு ரூ. 5 கோடி அளவில் பங்கு மூலதனம் அளிக்க வேண்டியதிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் சேஷசாயி பேப்பர் நிறுவனத்தார் அளித்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தீட்டப்பட்டுள்ளது.


தந்தி
''கோமில்ஸ்''

தொலை பேசி
ஆலை அலுவலகம் : 214
நிர்வாக இயக்குநர் : 215

## கோவை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை
(வரையறுக்கப்பட்டது)
### தபால் பெட்டி எண். 8, தாராபுரம்—638656.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | : | 100 இலட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் | : | 88.15 இலட்சம் |
| தமிழ்காடு அரசு பங்கு | : | 71.65 இலட்சம் |
| துவக்கத்தில் கதிர்கள் | : | 12,420 |
| 1978-ல் அதிகரிக்கப்பட்ட கதிர்கள் | : | 12,600 |
| 1978-ஆம் ஆண்டு நிகர லாபம் | : | 16.23 இலட்சம் |
| கடந்த ஆண்டுகளில் நூல் ஏற்றுமதி | : | 39.00 இலட்சம் |

நூல் ரகங்கள்

| சிட்டம் | கோன் |
|---|---|
| 20S, 40S, 60S, 80S.<br>2/17S, 2/17 (சூப்பர் டீலக்ஸ்) | 34S, 40S, 60S, 80S. |

ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதியாகும் துண்டுகளுக்கான 2/17S சூப்பர் டீலக்ஸ் நூல் கோ-ஆப்டெக்ஸ்-க்காக உற்பத்தி செய்யப்படுகிறது.

சிறப்புடன் வளர்ந்து வரும் இவ்வாலையில் மதிப்புள்ள பங்குதாரராகச் சேர்ந்து கைத்தறித் தொழிலுக்கு ஊக்கமளிக்குமாறு பொதுமக்களையும், கூட்டுறவு நிறுவனங்களையும் கனிவுடன் வேண்டுகின்றோம்.

கே. எச். மொய்னுதீன், ஐ.ஏ.எஸ்.,
தலைவர்,
(மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை)

மா. சத்தியமூர்த்தி, எம்.ஏ.,
துணை ஆட்சியர்/
நிர்வாக இயக்குநர்




# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

(1-5-79 முதல் 16-5-79 முடிய)

2—5—79

தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டங்களில் 31 புதிய விதிகளை இணைத்து விரைவில் ஒரு சட்டத் திருத்தம் வரவிருக்கிறது. அது தற்சமயம் பொறுக்குக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது என மேலவையில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

4—5—79

தமிழ்நாடு அரசு சமூகநலத்துறை சார்பில் ஏழை விதவைகளின் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படவிருக்கின்றன என்று அரசு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களிடம் இடைத்தரகர்கள் கொள்ளையடிப்பதைத் தடுத்து நிறுத்தவேண்டி, நெசவாளர்களுக்குச் சங்க அடையாளக் அட்டை மூலம் நூல் விநியோகிக்கப்படும் என மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் அறிவித்தார்.

எல்லாருக்கும் வேலை என்ற திட்டத்தைச் செயல்படுத்த 40 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளை இந்த ஆண்டிலேயே துவக்க அரசு ஆணையிட்டுள்ளதாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. காளிமுத்து அவர்கள் அறிவித்தார்.

5—5—79

சாலை விபத்துக்களில் உயிர்ப் பலியாவதைத் தடுக்கும் வகையில் விபத்துக்குக் காரணமான ஓட்டுநர்களுக்குக் கடுமையான தண்டனையளிக்கும் புதிய சட்டம் கொண்டுவரப்படுமென மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

6—5—79

தென் மாநிலங்களில் ஏற்பட்டுள்ள ஃபிலிம் பற்றாக்குறையைத் தீர்க்க இரண்டுமாதக் காலத்திற்கு ஃபிலிம் இறக்குமதிக்கு அனுமதி தரக்கோரி, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய அரசுக்குத் தந்தி அனுப்பினார்.

சேராக்குப்பம் கிராம விவசாய சேவை கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் வடலூரில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், ஏழை விவசாயிகளுக்குக் கறவை மாடுகளும், மருந்து தெளிக்கும் கருவிகளும் வழங்கினார்.

8—5—79

கடல் ஓரப் பகுதிகளில் இறால் மீன் வளர்க்கும் புதிய திட்டத்தினை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் அறிவித்தார். இத்திட்டத்தால் ஏக்கருக்கு ரூ. 35 ஆயிரம் வரை இலாபம் கிடைக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

தஞ்சை மாவட்டம் நாகூர் பேருந்து நிலையத்தில் ரூ. 25 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள பயணிகள் தங்கும் விடுதியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில் நிலமற்ற 30 ஏழைகளுக்கு நிலப் பட்டாக்களையும் வழங்கினார் அமைச்சர். தஞ்சை மாவட்டத்தில், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 4.5 இலட்சத்தைக் கடனாகவும் மானியமாகவும் வழங்கினார் அமைச்சர். திருவோணத்தில் ரூ. 18 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைக் கிடங்கு துணைக் கட்டடம் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

9—5—79

தமிழக எடைகள் அளவுச் சட்டத்தின் கீழ் இனிமேல் எடைக் கணக்கிலேதான் பூ வியாபாரம் நடத்தவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பதிவு எண். M. 8676

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்ட முறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை—சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!



# தமிழரசு

ஜூன் 16 - ஜூலை 1
1979





50 காசு





1—7—1979
மலர் : 10 - இதழ் : 1
[16—6—79 இதழ் இத்துடன்
ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது]



# அண்ணா வழியில்...

நாம் யாருக்கும் அடிமை இல்லை. யாருக்கும் அஞ்சப் போவதில்லை. தனித்தன்மையுடன் இருக்கிறோம். நமக்கு என்று ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு இருக்கிறோம்.

தமிழகம் யாரையும் வெறுக்கவில்லை. யாருக்கும் அடிமையாகவும் விரும்பவில்லை. யாருக்கும் மண்டியிடத் தயாரில்லை.

மக்கள் தரும் வரிப்பணம் சரியான வழியில் மக்களுக்குப் பயன்படவேண்டும். மக்களை ஏமாற்றி, அதற்கு அதிகாரிகள் உடந்தையாய் இருந்து, திட்டங்களைப் பாழாக்குவது எங்கள் நோக்கமல்ல. நாங்கள் அதைப் பின்பற்றத் தயாரில்லை.

இந்த அரசு தனித் தன்மை கொண்டு செயல்படுகிறது. அந்த இலட்சியத்தைத் திட்டமாக்கி, சமதர்ம சமத்துவத் திட்டத்தை அமரர் அண்ணாவின் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியே தீரும். அண்ணா காட்டிய பாதையிலிருந்து வழுவமாட்டோம் !

—மாண்புமிகு முதல்வர்

**எம். ஜி. ஆர்.**

[31.5.79 அன்று நெய்வேலியில் நடைபெற்ற இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பத்தார்க்கு வீடு கட்டும் திட்டக் கால்கோள் விழாவில் பேசியது.]




அழகுமோகினி கொலுவீற்றிருக்கும் கன்னித் தமிழ்நாடு; சுற்றுலாப் பயணிகளுக்கு ஓர் உல்லாசபுரியாகும். கடந்த இரு ஆண்டுகளில் சுற்றுலாத்துறையில் இந்த அரசு தனி அக்கறை காட்டி அபிவிருத்தி வேலைகளை முனைப்பாக இயக்கி, அதனை முன்னேற்றப் பாதையில் பீடு நடைபோடச் செய்துவருகிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் ஒவ்வொரு பிரிவிலும் தனிக் கவனம் செலுத்தி, அதன் வளர்ச்சியை ஊக்குவித்து வருவதன் மூலம் பலநாட்டு வித்தகர்களின் பாராட்டைப் பெற்று வருகிறார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் விரிவாக்கப்பட்டு முனைப்பாகச் செயல்பட்டு வந்துள்ளது என்பதை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள புள்ளி விவரங்கள் பிரதிபலிக்கின்றன. 1975-'76 ஆம் ஆண்டில் செலவு இனம் 22.70 இலட்சம் ரூபாயாக மட்டுமே இருந்தது. அது, 1977-'78ஆம் ஆண்டில் 46.10 இலட்சம் ரூபாயாக உயர்ந்து, 1978-'79ஆம் ஆண்டில் 93.55 இலட்சம் ரூபாயாக மேலும் உயர்ந்துள்ளது.

முதன் முறையாக, சுற்றுலா வளர்ச்சிப்பணிக்கான முழுவாய்ப்புக்களை ஆய்ந்து கணக்கிட்டுப் பலன் அளிக்கும் 20 கோடி ரூபாய் செலவுத் திட்டத்தை வகுத்து, 6வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு-இறுதி வடிவம் கொடுக்கும் பொழுது, இத்திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன் தமிழக அரசு இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

இந்திய அரசு, மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இரு இடங்களை மத்திய அரசின் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளுவதாகக் குறித்துக் காட்டியுள்ளது. மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களைப்பற்றி முழு வடிவப் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கோவை ரயில் நிலையத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காகச் செய்தி நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குத் துணைபுரியும் வகையில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலும், திருநெல்வேலி ரயில் நிலையத்திலும், டெல்லி மாநகரிலும் செய்தி நிலையங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதகமண்டலம், கொடைக்கானல், குற்றாலம் ஒகேனக்கல் ஆகிய இடங்களில் ரூ. 29 இலட்சம் செலவில் குறைந்த வருவாய்க்கான சுற்றுலாப் பயணிகளுக்குத் துயிலக விடுதிகள் (Dormitories) கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டடப் பணிகள் துவக்கப்படும்.

மலைவாழ் இடங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 15 இலட்சம் செலவில் உதகமண்டலத்திலுள்ள ஏரியின் சுற்றுப்புறங்கள் அழகுபடுத்தப்பட்டுள்ளன. அங்கு, சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. ஏரிக்கரையில் எழில் குலுங்கும் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் மலையில் அமைக்கப்பட்ட தொலைநோக்கி நிலையம், உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்த வெற்றித் திட்டமாக அமைந்துவிட்டதால், உதகமண்டலத்திலும், கூனூரிலும், ஏர்க்காட்டிலும் இத்தகைய தொலைநோக்கி நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏர்க்காடு மலையில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. ஏரிக்கரை உணவு விடுதியுடன் கூடிய படகுத்துறை ஒன்று கட்டப்பட்டு, பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

சுற்றுலா வளர்ச்சி-வாய்ப்புகள் உள்ள இடங்களைத் திட்டமிட்ட முறையில் ஆராய்ந்து அதற்குரிய வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டன. ஏலகிரிமலை, பிச்சாவரம், மண்டபம், விராலிமலை ஆகிய இடங்களில் வளர்ச்சித் திட்ட வேலைகள் விரைவில் துவக்கப்படும்.



ராணிப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள 'மோட்டல்'

மாநில அரசின் முயற்சியின் விளைவாக, மத்திய அரசு, சென்னை மாநகரில் 3 கோடி ரூபாய் செலவில் மக்கள் மோட்டல் (Motel) எனப்படும் நெடுஞ்சாலை விடுதி ஒன்றை கட்டவுள்ளது. கட்டடத்திறகான மிக்க மதிப்புள்ள நிலத்தை மாநில அரசு, இந்திய அரசுக்கு அடையாள விலையில் வழங்கியுள்ளது.

சுற்றுலாத்துறை, சென்னையில் நடத்தும் இளைஞர் விடுதி வெற்றிகரமாக நடந்து வருகின்றது. அதன் வருவாய் பெருகியுள்ளது. இந்திய அரசின் மதிப்பீட்டுக் குழு, இந்த 'இளைஞர் விடுதி'யை நம் நாட்டிலுள்ள சிறந்த விடுதிகளில் ஒன்று என ஏற்றுக் கொண்டுள்ளது.

கடந்த செபடம்பர் திங்களில பெரியார் பிறந்த ஊரான ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற்ற போது, மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் ''மாவட்டந்தோறும் அரசின் சார்பில் பெரியார் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படும்'' என்று குறிப்பிட்டார். அதற்கிணங்க அக்டோபர் திங்களில் மதுரையிலும், டிசம்பர் திங்களில் வட ஆர்க்காடு வேலூரிலும், சனவரி (79) திங்களில் திருநெல்வேலியிலும், மார்ச் திங்களில் காஞ்சிபுரத்திலும், மே திங்களில் திருச்சியிலும் பெரியார் நூற்றாண்டு விழாவினை அரசு, மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

தொடர்ந்து, ஜூன் மாதம் 30-ஆம் நாளன்று தருமபுரியிலும், ஜூலை மாதம் 1-ஆம் நாளன்று சேலத்திலும், ஜூலை 7-ஆம் நாளன்று நாகர்கோவிலிலும் (கன்னியாகுமரி மாவட்டம்), ஜூலை 8-ஆம் நாளன்று விருதுநகரிலும் (இராமநாதபுரம் மாவட்டம்) பெரியாரின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

ஈரோட்டில் நடைபெற்ற விழாவில், தந்தை பெரியாருக்குத் தமிழக அரசின் காணிக்கையாக 10 திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார். அவை வருமாறு:

(1) கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஈரோட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் அமைக்கப்படும். இந்தப் புதிய மாவட்டத்திற்குப் 'பெரியார் மாவட்டம்' என்று பெயர் சூட்டப்படும்.

(2) கோவையில் புதிதாக ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படும் அந்தப் பல்கலைக் கழகத்திற்குப் 'பெரியார் பல்கலைக் கழகம்' என்று பெயரிடப்படும்.

(3) வீதிகள் அல்லது முக்கிய சாலைகளின் பெயரோடு உள்ள சாதிப் பெயர்களை நீக்கிவிட தமிழக அரசு முயற்சி எடுக்கும்.

(4) தமிழ் எழுத்துக்களில் பெரியார் செய்த சீர்திருத்தத்தை ஏற்று, அதை அமல் நடத்த அரசு உத்தரவிடும்.

(5) ஈரோட்டில் கோர்ட்டு வீதிக்குப் 'பெரியார் வீதி' என்று பெயரிடப்படும். இதற்கான நடவடிக்கையைத் தமிழக அரசு எடுக்கும். இந்த வீதியில்தான் பெரியார்-அண்ணா-அவர்களின் நினைவகம் இருக்கின்றது.

(6) பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிட வகை செய்வதற்காகப் பல கோடி ரூபாய் செலவில் 'அறிவியல் அரும் பொருட்காட்சி நிலையம்' ஏற்படுத்தப்படும். உலக வங்கி, மத்திய அரசு ஆகியவைகளிடமிருந்து இதற்கான நிதி உதவி பெறப்படும்.

(7) கலப்பு மணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும், விதவைகளை மறுமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளும் வழங்கப்படும்.

(8) பெரியாரின் கொள்கைகளைச் சட்டமாக்கி யாரையும் துன்புறுத்தாமல், யாருக்கும் தொல்லை கொடுக்காமல் அவைகளைச் சட்டபூர்வமாக நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

(9) பெரியாரின் நூல்களையெல்லாம் தொகுத்துத் தமிழ்நாட்டில் உள்ள எல்லா நூலகங்களும் வாங்க உத்தரவு பிறப்பிக்கப்படும்.

(10) பெரியாரின் கொள்கைகளைக் கிராமங்கள்தோறும் பரப்புவதற்கு 15 ஆயிரம் படித்த இளைஞர்கள் திரட்டப்படுவார்கள்.

இந்த 10 அம்சத் திட்டத்தில், நான்காவது திட்டமான எழுத்துச் சீர்திருத்தத்தை அரசு ஏற்று, அரசு அலுவலகங்களிலும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ளாட்சித்துறை வரம்பிற்குட்பட்ட நகராட்சி, மாநகராட்சி ஒன்றியங்களிலும் அரசின் வரம்பிற்குட்பட்ட வாரியங்கள், கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிலும் சீர்திருத்திய தமிழ் எழுத்து பின்பற்றப்பட வேண்டும் என 19-10-'78 அன்று அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்து எளிமைப்படுத்த வல்லுநர் குழு ஒன்றை 30-3-'79 அன்று, அரசு அமைத்திருக்கிறது.

ஐந்தாவது திட்டம் சம்பந்தமாக-ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறையில் ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது.

மூன்றாவது திட்ட சம்பந்தமாக - நகராட்சி மன்றங்களிலும், மாநகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் அரசின் முடிவைச் செயல்படுத்த வழி செய்யும் பொருட்டு, மன்றங்களிலிருந்து தக்க தீர்மானங்கள் பெற்று மேல் நடவடிக்கை எடுக்குமாறு ஊரக-உள்ளாட்சித் துறையினரால் 3-10'78 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அயல்நாட்டுப் பயணிகளுக்குத் தென் இந்தியாவை, குறிப்பாக தமிழ்நாட்டை அதிகமாகத் தெரியாது. இக்குறையின் காரணமாக ஒரு சில அயல்நாட்டுப் பயணிகள் மட்டுமே தமிழகத்திற்கு இதுவரை வருகை தந்தார்கள் இந்த நிலையை மாற்ற, ஏர் இந்தியா நிறுவனம் மத்திய அரசு ஆகியவற்றுடன் இணைந்து, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து 40 சுற்றுலாப்பயண எழுத்தாளர்களைத் தமிழகத்திற்கு அழைத்து வந்து 'தென்னாட்டையும் பாருங்கள்' என்ற திட்டத்தின் வாயிலாக, தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்பம்சங்களை அரசு, அவர்களுக்கு எடுத்துக் காட்டியது. அந்த எழுத்தாளர்கள் அயல்நாட்டு ஏடுகளில், வரைந்த கட்டுரைகளின் விளைவாக, அயல்நாட்டுப் பயணிகளின் தமிழக-வருகை ஏறுமுகத்தில் பெருகியுள்ளது. வந்து கொண்டிருக்கும் அயல்நாட்டுப் பயணிகளைச் சமாளிக்க, அதிக அளவில் சர்வதேச விமானங்களைச் சென்னை வழியாக விடுமாறும், சென்னை விமான நிலையத்தில் வசதிகளைப் பெருக்குமாறும், இந்திய அரசையும், ஏர் இந்தியா நிறுவனத்தையும் தமிழகச் சுற்றுலாத் துறை வலியுறுத்தி வருகின்றது.

டெல்லி, பெங்களூர் ஆகிய இரு இடங்களில் நடைபெற்ற 'அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்துதரும் சர்வதேச பயண ஏஜண்டுகள் மாநாடுகளில்' நமது சுற்றுலாத் துறை சிறப்பாகக் கலந்துகொண்டது. இந்த மாநாடுகளுக்கு வருகை தந்த பிரதிநிதிகள் நமது மாநிலத்தின் விருந்தாளிகளாக அழைத்து வரப் பெற்றனர். இதன் விளைவாக-அயல் நாட்டுப் பயணிகள் தமிழ்நாட்டுக்குவரும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த இரு ஆண்டுகளில், துண்டு வெளியீடுகள், அஞ்சல் அட்டைகள், சுவரொட்டிகள் ஆகிய விளம்பர வெளியீடுகள் பொலிவுடன், வலிவுடன், புதிய கண்ணோட்டத்தில் வெளியிடப் பெற்றன. நமது சுற்றுலாத் துறை வெளியிட்ட உயர்ந்த ரகமான பயண வெளியீடுகள், ஏர் இந்தியா நிறுவனத்தின் வாயிலாகவும், இந்திய அரசின் சுற்றுலாத்துறை வாயிலாகவும், இதர மாநில சுற்றுலாத்துறைகளின் வாயிலாகவும் சிறப்பாக வழங்கப் பட்டன.

சுற்றுலாத்துறை வளர்ச்சியைத் துரிதப்படுத்த, சிதம்பரத்தில் சுற்றுலா அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டது.

அண்மைக் காலத்தில், சுற்றுலாத்துறையின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்ட, பூம்புகார்-கட்டபொம்மன் கோட்டை ஆகிய இரு சுற்றுலா மையங்களைத் திருத்தியமைத்து இங்கு சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளைப் பெருக்கி புதுப்பொலிவு ஊட்டத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மாநில அளவில், உள்நாட்டுச் சுற்றுலாவை விருத்தி செய்ய அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் பயண நிலையங்களைக் கட்டும் திட்டம், பல்வேறு துறைகளுடன் இணைந்து படிப்படியாகச் செயலாக்கப்படும்.

சுற்றுலாத்துறையின் சாதனைகளை, சுற்றுலா வாரியத்தின் பணிகளை, இந்திய அரசின் சுற்றுலாத்துறைச் செயலாளர் மெச்சிப் பாராட்டியுள்ளனர்.

எனவே, மேலே குறித்துக்காட்டிய பல்வேறு ஆக்கப்பணிகளின் விளைவாக நமது மாநில சுற்றுலாத்துறை தலைநிமிர்ந்து நின்று -வளர்ச்சிப் பாதையில் ஓங்கி உயர்ந்து வருவதைக் கண்கூடாகக் காணலாம்.



ஒன்பதாவது திட்டம் தொடர்பாக — டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் தலைமையில் அறிஞர்கள் ஒன்பதுபேர் கொண்ட வல்லுநர் குழுவொன்று அமைக்கப் பெற்றுள்ளது. இக்குழு, பெரியாரின் நூல்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

பெரியாரின் பொன்மொழிகளைக் கல்வெட்டுக்களாக்கும் பணியிலும் அரசு முனைந்து வருவதுடன்-பெரியாரின் வாழ்க்கை நூலை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

பத்தாவது திட்டம் சம்பந்தமாக— 'பெரியார் நினைவு ட்ரஸ்ட்' என்ற பெயரில் தன்னுரிமை நிறுவனத்தை அரசு மானியத்துடன் அமைத்து, அதன் வாயிலாக இந்தப் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

8-6-'79 அன்று திறந்து வைக்கப்பட்ட காவிரி ஆற்றின் குறுக்கே குளித்தலையையும் முசிறியையும் இணைக்கும்-தமிழ்நாட்டிலேயே மிக நீளமான பெரிய பாலத்துக்குத் தந்தை பெரியாரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்களின் "பொன் மொழிகள்" என்ற புத்தகத்திற்கு 1950-ல் விதிக்கப்பட்டிருந்த தடையை, தமிழக அரசு நீக்கியுள்ளது.

சுயமரியாதைச் சுடரொளியாம் தந்தை பெரியாரின் இலட்சியங்களை-சாதி, மதமற்ற, சமத்துவ சமுதாயத்தை, சமதர்மச் சமுதாயத்தை-உருவாக்கும் முயற்சியில் தமிழக அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

உழவுக்கு அடுத்ததாகச் சிறப்பிக்கப்பெறுவது தொழில் துறை. அதன் வளர்ச்சிப் பாதைக்கு அரசு ஆற்றிவரும் அரிய பணிகள் ஏராளம், ஏராளம்!

தொழில் வளம் ஒரு மாநிலப் பொருளாதார வலிமைக்கு அடையாளமாகும். தொன்று தொட்டு, உழவுத் தொழிலையே நம்பி வாழ்ந்த நம் நாட்டு மக்களைத் தொழில் துறையில் ஈடுபடுத்தி, உற்பத்தித் திறனைப் பெருக்கி, வேலை வாய்ப்பினை அதிகரித்து மக்களுக்கு நிலையான வரு-வாயைத்தருபவைதொழில் துறைகளாகும். கடந்த இரண்டாண்டுகளில் பல்வேறு தொழில் துறைகளையும் வேகமாக இயக்கி நமது மாநிலத்தைத் தொழில் மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்பொழுது, தமிழ்நாட்டில், சிறு தொழில் துறையில் மட்டும் 450-க்கும் அதிகமான மின்சாரம் மற்றும் மின்னணுவியல் தொழில்கள் உள்ளன.

சிறு தொழில் துறையில் உள்ள 235 மின்சாரத் தொழிற்சாலைகள் 3,500 பேருக்கு வேலை அளிக்கின்றன. இவர்களுள் 1600 பேர் மகளிராவர்.

மிகப் பெரிய அளவில் வளர்ச்சி பெற வாய்ப்புகளைக் கொண்டு விளங்கும் மற்றொரு தொழில் ஊதுவத்தித் தொழிலாகும். (அகர்பத்தி). ஏனெனில், இப்பொருளைப் பரந்த அளவில் குறிப்பாக ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் உள்ளன.

இப்பொழுது மாநிலத்தில் 20 ஊதுவத்தித் தொழில் நிலையங்கள் உள்ளன. மேலும், பல தொழில் நிலையங்கள் தோன்ற வாய்ப்புள்ளன.

சிறுதொழில் துறையில் தயாரிப்பதற்குத் தகுதியான மற்றுமொன்று பிளாஸ்டிக் செய்முறைத் தொழிலாகும். இந்தியாவிலுள்ள 6,000 தொழில் நிலையங்களில் தமிழ்நாட்டில் சுமார் 300 உள்ளன. ஆதலால், ''எல்டிபிஇ'' ( L.D.P.E. ) மற்றும் ''பாலிபுரோலின்'' அடிப்படையில் அமையும் தொழில்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

தமிழ் நாட்டில் 120 இரப்பர் 'புராசசிங்' சிறு தொழில் நிலையங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் சிறுதொழில் துறையில் 75 வர்ணத் தயாரிப்புத் தொழில் நிலையங்கள் உள்ளன.

முந்திரிப் பருப்பைப் பக்குவப்படுத்தும் தொழிலானது முக்கியமாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இத் தொழில் நிலையங்கள் உள்ளன. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பண்ருட்டியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் 15 தொழிற்சாலைகள் உள்ளன.

கைத்தறித் துணிகளைத் தயாரிப்பதில் முன்னணியில் உள்ள மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். எனவே, இது சாயப் பொருள்களைப் பயன்படுத்தும் ஒரு முக்கிய மாநிலமுமாகும்.

தமிழ் நாட்டில் சாயப்பொருள்களைத் தயாரிப்பதற்கு நல்ல வாய்ப்பிருப்பதால் தொழில் வணிக இயக்குநரகமும், தொழில் முனைவர்களை ஊக்குவித்துள்ளது. இதுவரை சுமார் 15 தொழில் நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன.

பூச்சி கொல்லி மருந்துகளைத் தயாரிப்பது பெரும்பாலும் சிறுதொழில் துறையில் தான் நடைபெற்று வருகிறது. தமிழ் நாட்டில் சுமார் 40 சிறு தொழில் நிலையங்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளன.

நாட்டிலேயே சவ்வரிசி ''ஸ்டார்ச்சு'' மாவு தயாரிக்கும் பெருமை பெரும்பாலும் சேலம் மாவட்டத்திற்கே உரியதாகும். தரக்கட்டுப்பாட்டோடு கூடிய நல்ல பொருள்களைத் தயாரிக்க வசதிகள் அளிப்பதற்காக, சேலத்தில் சவ்வரிசி ஆராய்ச்சி ஆய்வுக் கூடத்தை தொழில் துறை நிறுவியுள்ளது.

தமிழ் நாட்டில் பட்டுத்தொழிலானது, சமீப காலம் வரை கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ள தர்மபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மேட்டுப் பாங்கான பகுதிகளில் மட்டுமே நடைபெற்று வந்தது.






தற்பொழுது மாநிலத்தின், அனைத்துப் பகுதிகளிலும், இத் தொழில் நடைபெற்று வருகிறது. தமிழ் நாட்டில் 18 இலட்சம் கிலோ பட்டுப் புழுக்கூடுகள் உற்பத்தியாகிறதென மதிப்பிடப் பட்டுள்ளது. இவற்றில் மூன்றில் ஒரு பகுதியை இங்கேயே நூலாக்கி ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் கிலோ பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தொழிலானது, தமிழ் நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளில் சுமார் ஒரு இலட்சம் பேருக்கு வேலை அளிக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள பட்டுப் புழுக்கூடு தயாரிப்பவர்கள் பட்டு நூல் எடுப்பவர்கள், கைத்தறி நெசவாளர் ஆகியவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் சுலபமான வகையில் விற்பனை வசதிகளை அமைத்துத் தரவும் இடையில் இலாபமடையும் இடைத்தரகர்களை அறவே நீக்கிவிடவும் தொழில் கூட்டுறவுப் பட்டுநூல் விற்பனைக் கூட்டமைப்பு ஒன்று அண்மையில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

நாட்டில் தென்னை பயிரிடுவதில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும், தேங்காய் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. இங்கு 83,000 எக்டேர் நிலப்பரப்பில் தென்னை மரங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்கு 867 மில்லியன் தேங்காய் உற்பத்தியாகிற தென்று மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்பொழுது 10 தென்னை நார் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை நேரடியாக 1,600 கயிறு தொழில் பணியாளர்களுக்கும், அதைச்சார்ந்து 1,500 லிருந்து 2, 000 பணியாளர்களுக்கும், வேலை அளிக்கின்றன.

தமிழ் நாட்டில் இயந்திர ரீதியில் கயிறு தயாரிப்பதற்கு, 112 நிலையங்களுக்கு நிதியுதவி மற்றும் இதர உதவிகள் அளித்து ஊக்கமளிக்கப்படுகிறது. இவற்றின் மொத்த மூலதன முதலீடு ரூ. 220 இலட்சமாகும். இவை ஆண்டொன்றுக்கு 18,000 மெட்ரிக் டன் கயிறைத் தயாரிக்கின்றன. இவை, ஆண்டு முழுவதற்கும், தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களில் சுமார் 3,000 பேருக்கு வேலையளிக்கின்றன. முன்பு, கிராமப்பகுதியில் பெரிய வியாபாரிகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரால் சுரண்டப்பட்டு வந்த சுமார் 30,000 பேருக்கு, இப்பொழுது குடிசைத் தொழில் துறையில் தென்னை நார் எடுத்தல், மற்றும் கயிறு தயாரிப்பது ஆகிய நிலைகளில் சுய வேலை வாய்ப்பினை அளித்திருப்பது என்பது அவர்களுக்குக் கிடைத்த ஒரு பேறாகும்.

செங்கற்பட்டு, தர்மபுரி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தென்னார்க்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில மாதங்களுக்குள் மாநிலம் முழுவதிலும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

மாவட்டத் தொழில் மையங்கள் துவங்கப்பட்ட ஐந்து மாதங்களில் சிறு தொழில் துறையில் சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பினைத் தோற்றுவித்ததும், 2,500 கைவினைஞர்களுக்கு நிலையான ஊதியம் தரத்தக்க வேலை வாய்ப்புக்களை அமைத்துக் கொடுத்ததும் திருப்திப் படக்கூடியதாகும்.

## திரு.வி.க. விருது

தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நன்னோக்கத்தோடு தமிழ்த் தென்றல்' திரு.வி.க. அவர்களின் பெயரால் சிறந்த எழுத்தாளருக்கு விருதும், பத்தாயிரம் ரூபாய் பொற்கிழியும் வழங்கப்படும்'

டான்சி நிறுவனமும் அதைச் சார்ந்த வெவ்வேறு தொழிலகங்களும் சுமார் 6000-க்கும் அதிகமான நபர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன.

அம்பத்தூரில் வார்னிஷ் உற்பத்தி செய்வதற்கென ஒரு தொழிற்சாலை ரூ. 11.26 இலட்சம் செலவில் டான்சியால் நிறுவப்பட்டுள்ளது.

சிட்கோவின் தொடக்கம் முதல் 1979ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாள் முடிய ரூபாய் 373.26 இலட்சங்கள் செலவில் சுமார் 397 தொழிற் கூடங்களை, அம்பத்தூர், குறிச்சி இராணிப்பேட்டை, ஓசூர், திருச்சிராப்பள்ளி, மாத்தூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், கும்பகோணம், பிள்ளையார்பட்டி முதலிய இடங்களில் கட்டி வழங்கப்பட்டு சுமார் 4000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

விருத்தாசலத்திலுள்ள 'டாசல்' பீங்கான் தொழிற்சாலை துப்புரவுக் கருவிகள், பீங்கான் பொருட்கள் மற்றும் மின் காப்புகளைச் சிறப்பாக உற்பத்தி செய்கிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 'டிட்கோ' பொதுத்துறையிலும், கூட்டுத் துறையிலும் செயல்படுத்தி வரும் 47 திட்டங்கள் வாயிலாக, சுமார் 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டுவதோடு மற்றும் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு சார்பு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது.

1970ஆம் ஆண்டு ஆலங்குளம் சிமெண்டு ஆலை உற்பத்தினைத் துவங்கி கடந்த 8 ஆண்டுகளாக சிமிண்டு உற்பத்தி செய்து வருகிறது. பின்தங்கிய மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த ஆலை சுமார் 1,450 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

டி. ஐ. ஐ. சி வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்கி தாங்களே சிறந்த வருமானத்துடன் சுகமாக தொழில்நடத்துவதற்கும் தாராளமான நிதி உதவி அளிப்பதற்குத் திட்டம் தயாரித்திருக்கின்றது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) 1978ஆம் ஆண்டுடிசம்பர் 31 வரை பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ. 2,784.21 இலட்சம் உதவி வழங்க ஒப்புதலளித்துள்ளதுடன், இதன் மூலம் ரூபாய் 185 கோடி மொத்த முதலீட்டை ஊக்குவித்து 33,000 பேருக்கு மேல் நேரடி வேலைவாய்ப்பை நல்கியுள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. உப்பு உற்பத்திப் பணிகளிலும் வளர்ச்சி வேலைகளிலும் சுமார் 1,500 பேருக்கு மேல் வேலை அளிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 5566 ஏக்கர் சதுப்பு, நிலப், பரப்பில் மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு ரூ. 50 இலட்சம் அதிகாரமளிக்கப்பட்டது

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையில் அரசு ''1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெருகிற நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின்' விதிகளின் கீழ் அந்நிறுவனங்களுக்கு உதவிகளை அளித்து வருகிறது.

இவ்வாறு தொழில் துறை துரிதமாகச் செயலாற்றி தமிழகத் தொழில் வளத்துக்கு வழி கோலிவருகின்றது.

# சமுதாய நலங் காப்போம்

சமூக நலத் துறை மகளிர் நலப் பணிகளை கவனிப்பதுடன் முன்னாதாரப் பள்ளிச் சிறார்கள், பாலூட்டும் தாய்மார்கள், கருவுற்றிருக்கும் மகளிர் ஆகியோருக்கு சத்துணவு வழங்குதல், நீதி மன்றங்களால் தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்கென விடுதி நடத்துதல், மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு நலம் பயக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

எல்லா பஞ்சாயத்துக்களிலும் பாலர் பள்ளிகள் அமையத் தக்கவகையில் சர்வதேச குழந்தைகள் ஆண்டில் தொடங்கி 5 ஆண்டுகளில் 9,000 பாலர் பள்ளிகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் பயன்பெறத்தக்க அளவில் 79 பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1979-80இல் இதுபோன்று மேலும் 30 பாலர் பள்ளிகள் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 1978-83-றகான இடைக்கால துணைத் திட்டத்தின்கீழ் 250 பாலர் பள்ளிகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை 3,729 இரண்டு கால்களையும் இழந்த உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகளும் 1,384 காது கேளாத பள்ளி குழந்தைகளுக்கு கேட்பு உதவிச் சாதனமும் வழங்கப்பட்டுள்ளது.

1978-79இல் 300 கேட்பு உதவிச் சாதனங்கள் வழங்கப் பட்டன. 1979-80ஆம் ஆண்டில் 700 கேட்பு உதவிச் சாதனங்கள் வழங்கப்படவிருக்கிறது.

உடல் ஊனமுற்ற மாணவ மாணவிகளுக்கு படிப்பு உதவித் திட்டத்தின்கீழ் 1977-78ம் ஆண்டு 631 உடல் ஊனமுற்ற மாணவர்கள்/மாணவியர்/பயிற்சியாளர்களுக்கு ரூ. 3.38 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. 1978-79ஆம் ஆண்டில் உதவித் தொகைக்காக ரூ. 6 இலட்சம் தேவைப்படும் அளவில் மொத்தம் 1,047 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

உடல் ஊனமுற்ற மாணவ/மாணவியருக்கு இலவச பஸ் போக்குவரத்து சலுகை.

எல்லா உடல் ஊனமுற்ற மாணவர்/மாணவியர்/பயிற்சியாளர்களுக்கும் அவரவர் இருப்பிடத்திலிருந்து பள்ளி/பயிற்சி நிலையத்திற்கு சென்று திரும்ப இலவச பஸ் பிரயாண வசதி செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது.

செயற்கை உறுப்புகள்.

முடக்கு வாதத்தின் காரணமாக உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு 1979-80ஆம் ஆண்டில் 1,000 செயற்கை உறுப்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கான ஓய்வு ஊதியத் திட்டத்தின்கீழ் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை 6,376 உடல் ஊனமுற்ற அனாதைகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு அடைய வேண்டிய இலக்கு 10,000 பேர்களாகும். இத்திட்டம் வருவாய் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆதரவற்ற பெண்களுக்கு மறுவாழ்வு.

முதியோர் ஓய்வூதியம்.—இத்திட்டத்தின்கீழ் 40 வயதுக்கு குறைவில்லாத ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகள் மாதம் ரூ. 20 விதம் முதியோர் உதவித் தொகை பெற தகுதியுடையவராவர். முதியோர் உதவித் தொகை வழங்கப் படுவதற்கு பொருந்தும் விதிகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்தினால் இதுநாள்வரை 15,000 பெண்கள் பயனடைந் துள்ளனர்.

இருபது முதல் 40 வயதுவரையுள்ள விதவைகள், ஆதரவற்ற பெண்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்கள் தையற்கலையில் பயிற்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனால் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான வருவாயினை ஈட்டிக்கொள்ள இயலும். இத்திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 500 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 1978-79இல் 1,000 தையல் இயந்திரங்கள் வழங்க ஆணை வழங்கப் பட்டுள்ளது. 1979-80ஆம் ஆண்டிலும் 1,000 தையல் இயந்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இளம் விதவைகள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில் மறுமணம் செய்து கொள்ளும் மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக முதலீடு செய்யப்படு கின்ற வகையில் ரூ. 5,000-க்கான ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 233 மணமக்கள் பயனடைந்துள்ளனர். 1978-79இல் மேலும் 100 பேர் பயனடைவர். 1979-80ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்கள்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தில் மகளிர் மன்றங்கள் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றன. கிராமப் புறங்களிலுள்ள மக்கள் ஒன்று கூடி பயனுள்ள சில கைத்தொழில்களை கற்பதன் மூலம் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும், அதன் மூலம் ஓரளவு கூலி பெற்று தங்கள் குடும்ப வருவாயை பெருக்கிக் கொள்ளவும் இத்திட்டம் வழி வகுக்கிறது. மாநிலமெங்கும் 11,120 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியம் ஒன்றிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4,000 விதம் இவ்வகைக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மகளிர் மன்றம் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மகளிர் மன்றங்களை ஊக்குவிப் பதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடு பட்டுள்ள சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மகளிர் மன்றங்கள் மூன்று வகையாக தரம் பிரிக்கப்பட்டு ரொக்கப்பரிசாக முறையே ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 ரொக்கப்பரிசு வழங்கப்படுகிறது. இத்திட்டத் தின் கீழ் 1979-80இல் 62 ரொக்கப் பரிசுகள் வழங்குவதற்காக ரூ. 34,400 ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு தொழில்கள் செய்வதற்காக நிதியுதவி கேட்டு ஆதரவற்ற ஏழைப் பெண்கள் மற்றும் விதவைகளிடமிருந்து பெருமளவில் விண்ணப்பங்கள் வரப் பெறுவதை கருத்தில் கொண்டு விதவைகளுக்கு அல்லது அவர்களது குடும்பத்தை சேர்ந்த 15 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் உற்பத்தி நிலையம் ஒன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. சமையலுக்குத் தேவையான அத்தியாவசிய பண்டங்கள் தயாரிக்கும் இவ்வுற்பத்தி நிலையம் லாப நட்ட நோக்கம் இல்லாமல் செயற்படும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 60,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.



# இவ்வாண்டு பல்லவன் பயணிகளுக்கு தமிழக அரசு நல்கிய அரும்பெரும் சலுகைகள்




- ★ குழந்தைகளின் ஆண்டையொட்டி 5 வயது வரை இலவச பயண அனுமதி.
- ★ கண்ணொளி இழந்தோருக்கு மருத்துவமனை, தொழிற்கூடம், பள்ளிக்கூடம் சென்றிட இலவச அனுமதி.

மேலும் சிறுவர், மாணவர், அன்றாடம் பயணம் செய்வோர், மகளிர், இரவில் பணிபுரிவோர் ஆகிய அனைத்துப் பயணிகளுக்கும் சிறப்பான வசதிகளை செவ்வனே அமைத்துத் தருகிறோம்.




**பல்லவன் போக்குவரத்துக் கழகம்**
(இது ஒரு தமிழக அரசு நிறுவனம்) (பெருநகர்)
சென்னை-600 002.

Sobhagya PTC-254


தஞ்சாவூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு சீரிய திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் எண்ணற்ற திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்பட உள்ளன!

# வளர்ச்சிப்பாதையில் தஞ்சை

தமிழ்நாட்டிலேயே நீர்வளமும், இயற்கை அழகும் மிகுந்த பகுதி தஞ்சை மாவட்டம். புனல்நாடு எனவும் பொன்னிநாடு எனவும் சோழ வளநாடு எனவும் வரலாற்றுப் புகழேந்திய சோழ மண்டலத்தில் அமைந்துள்ளது தஞ்சை மாவட்டம்.




''வான் பொய்ப்பினுந் தான் பொய்யா
மலைத்தலைய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்
விளைவரு வியன் கழனி.....''

என்று பட்டினப்பாலையில் வருணிக்கப்பட்டுள்ளது.

தென்புலத்தின் நெற்களஞ்சியம் எனப் போற்றப்படுவது தஞ்சை மாவட்டம். இங்கு இயற்கையின் சேர்க்கையினால் காணுமிடமெல்லாம் விளைந்து காட்சியளிக்கின்றன.

தமிழ்நாட்டின் தனிப்பெருங் கலையான கர்நாடக இசை வளர்ந்து ஓங்கியது தஞ்சைத் தரணியின் காவிரிக் கரையில்தான்! மேலும் நாதசுர இசைக்கு மகத்துவம் ஈட்டியது, பரதக் கலைகளைப் பாதுகாத்து வளர்த்தது, சிற்ப சித்திரக் கலைகளை உலக மக்கள் உணரவும் உய்யவும் நிலை நாட்டியது ஆகிய அத்தனை பெருமைகளும் தஞ்சை மாவட்டத்திற்கு உண்டு. சுருங்கக் கூறினால், தஞ்சை மாவட்டம் தமிழ்ப் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் விளைநிலமாக விளங்கி வந்திருப்பது நமக்குப் பெருமையாகும்.

வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத சில தனிச் சிறப்புகள் தஞ்சை மாவட்டத்திற்கு உண்டு. இம்மாவட்டத்தில் சுமார் 1420 கோயில்கள் உள்ளன. இவ்வளவு கோவில்கள் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லை. 'ஆலயங்கள் நிறைந்த அழகுத் தமிழ்நாடு (Tamilnadu Land of temples) என்ற வாக்குக்கு அடிப்படையாக விளங்குவதே தஞ்சைத் தரணியாகும். தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், குடந்தை சாரங்கபாணி கோயில், சுவாமிமலை, சுவாமிநாத சுவாமி கோயில், சிக்கல் சிங்காரவேலர் கோயில், வேளாங்கண்ணி மாதா கோயில், நாகூர் ஆண்டவர் தர்கா ஆகியவை மக்கள்மனத்தில் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றன.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு சிற்பிகள் நமது கோயில்களில் தெய்விகத் தன்மை பொருந்திய பல சிலைகளைச் செதுக்கி அமைத்தார்கள். அற்புதமான அந்தச் சிலைகளைப் போலவே பித்தளைப் படிமங்கள் தயாரிக்கும் உயரிய கலையைத் தஞ்சை மாவட்டத்தின் சுவாமிமலையில் காணலாம்.

கண்ணைக் கவரும் கலை அழகோடு—உருவங்கள் செதுக்கிய சித்திரத்தட்டுக்களை உருவாக்கும் சிறந்த கலையைத் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் காணலாம். இவ்வாறு தஞ்சை பொன்போன்ற பழைமையைப் பாதுகாத்து வருகிறது.

இனி, இம்மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகளையும், ஆக்கப்பணிகளையும் புள்ளி விவரங்களுடன் ஆராய்வோம்.

1977-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் துவங்கி தஞ்சை மாவட்டத்தில் அரசுத் துறையினரால் நிறைவேற்றப்பட்ட பல்வேறு சாதனைகள், வளர்ச்சிப் பணிகள் பற்றிய முழுவிவரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

புயல் மற்றும் பெருவெள்ளம் காரணமாகவும், இயற்கையின் சீற்றத்தின் காரணமாகவும் பலப்பல இன்னல்களும், இடர்பாடுகளும் ஏற்பட்ட நெருக்கடியான நேரங்களிலும் இம்மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் ஆணைப்படி பல்வேறு துறையினரும் கடுமையாக உழைத்து பணிகள் பல ஆற்றியிருக்கிறார்கள். குறிப்பாக, 1977ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் புயல், வெள்ளம் தாக்கிய குடியிருப்புக்களைச் சார்ந்த மக்களுக்கு இதுவரை அளித்திராத அளவு நிவாரணத் தொகை, உணவுப் பொருள் மற்றும் உடைகளும் வழங்கப்பட்டதும், அண்மையில் வந்திட்ட பெரு வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் இலவசமாக 50 கிலோ அரிசி வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

தஞ்சை மாவட்டத்தில் மட்டும் புயல்-வெள்ளத்தினால் வீடு இழந்தவர்களுக்காக தமிழ்நாடு அரசு நிவாரணத் தொகையாக ரூ. 5.64 கோடி அளித்துள்ளது. மேலும் ரூ. 1.59 கோடி மதிப்புள்ள புடவைகளும் வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவையல்லாது, இனாமாக வழங்கப்பட்ட அரிசி 1617 டன்; பாதுகாப்பு முகாமில் சமைத்து வழங்கப்பட்டது 263 டன்; உணவுப் பொட்டலங்களாக வழங்கப்பட்டது 5 டன்; திக்கற்றோர்க்கு இலவசமாக வழங்கப்பட்டது 25 டன்.

மற்றும் புயலால் உயிரிழந்தோரின் குடும்பப் பாதுகாப்பாளர் என்ற முறையில் 49 பேர்களின் குடும்பத்திற்கு நிவாரணத்தொகையாக ரூ. 49,000 வழங்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு சேதத்தையும் முன்கூட்டியே திட்டமிட்டுச் செயலாற்றுவதால் தவிர்த்து விடலாம். இந்த அடிப்படையில் கீழ்க்கண்ட இடங்களில் புயல்-பாதுகாப்பு இல்லங்கள் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது.

1. கொடியாம்பாளையம்-சீர்காழிதாலுகா
2. வடக்குப் பொய்யூர்—நாகப்பட்டினம் தாலுகா



3. பிரதாபராமபுரம் ,,
4. விழுந்த மாவடி ,,
5. அக்கரைப்பேட்டை ,,
6. வெள்ளப்பள்ளம்—திருத்துறைப்பூண்டி தாலுகா.
7. ஏரிபரக்கரை—பட்டுக்கோட்டை தாலுகா

இவை ஒவ்வொன்றும் ரூபாய் 2 இலட்சம் செலவில், தமிழ்நாடு அரசு பாதியும் இந்திய செஞ்சிலுவை சங்கம் பாதியுமாக நிதி உதவி அளித்து கட்டி முடிக்கப்படும்.

இனி, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவினருக்காகவும் அளிக்கப்பட்டுள்ள நிவாரணம் பற்றிய விவரங்களை ஆராய்வோம்.

**விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட நிவாரணம் :**

வாழை, கரும்பு, வெற்றிலைக் கொடிக்கால், நாற்றுகள், விதைநெல், உரவகைகள், ஆகியவைகளுக்காக சுமார் 85,000 விவசாயிகளுக்கு மேல் பயனடையும் வகையில் ரூபாய் 41.01 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம் :**

கூட்டுறவு சார்பு நெசவுத் தொழிலாளர்களுக்கும் அச்சார்பற்ற தொழிலாளர்களுக்குமாக உதவித் தொகையாக ரூ. 7650-ம், வீடுகட்ட உதவித் தொகையாக ரூ. 1,21,500-ம் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், தறிக்கான கடன் தொகையாக ரூ. 28,500 வழங்கப்பட்டுள்ளது.

**மீனவருக்கு நிவாரணம் :**

வலைகளை இழந்த மீனவருக்கு நைலான் இழைகள் வழங்கியதன் மூலம் ரூ. 4.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவர்களுக்கும் கட்டுமரம் இழந்தவர்களுக்குமாகச் சேர்த்து 255 டன் அரிசி வழங்கியதன் மூலமாக ரூபாய் 3.71 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1977-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தினால் ஏற்பட்ட பெரும் பாதிப்புகளுக்கும், சேதங்களுக்கும் பிறகு மீண்டும் 1978-ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர்த் திங்களில் வெள்ளம், பெருமழை மற்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக தஞ்சாவூர் மாவட்டம் பாதிக்கப்பட்டது. இப்படி மாறி மாறி வந்த சோதனையான காலங்களிலும் அரசுத் துறைகள் முனைப்புடன் செயலாற்றி நிவாரணப் பணிகளை மேற்கொண்டன.

1978-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் பெருமழையின்பொழுது மொத்தம் 274 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன. 1,08,801 நபர்கள் ஆபத்தான இடங்களில் இருந்து உடனடியாக வெளியேற்றப்பட்டு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 33.09 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மேலும் 58,262 வேட்டிகளும், புடவைகளும் வழங்கப்பட்டன. இவையல்லாது, இலவசமாக 1264 டன்கள் அரிசியும் நிவாரண முகாம்களில் செலவிடப்பட்டதன் மூலம் 104 டன்கள் அரிசியும் வழங்கப்பட்டுள்ளன.

பொருள் ஈட்டுபவர்களை இழந்த குடும்பம் ஒன்றிற்கு ரூபாய் 1000- வீதம் 12 குடும்பங்களுக்கு ரூபாய் 12000- உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**பொதுப்பணித்துறை :**

1977-ஆம் நவம்பர் திங்கள் தஞ்சை மாவட்டத்தில் புயலினால் பாதிக்கப்பட்ட பாசன ஆதாரங்களைச் சீரமைக்கும் பணிக்காக ரூ. 81.53 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. அடுத்து, கட்டடங்களைச் சீரமைக்க ரூ.18.76 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

1978-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த பாசன ஆதாரங்களைச் சீரமைப்பதற்காக ரூ. 17.59 இலட்சமும், கட்டடங்களைச் சீரமைப்பதற்காக ரூ.8.35 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளன.





**அறிவும் ஆற்றலும்!**

*அறிவினாலும், ஆற்றவாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்!*

*—பேரறிஞர் அண்ணா.*

பொதுப்பணித்துறையின் மற்ற திட்டப் பணிகளுக்காக மட்டும் 1.7.77 முதல் 31.3.79 வரையில் ரூ. 81.39 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில், தனிச் சிறுபாசனம் விரைவு சிறு பாசனம், ரெகுலெட்டர் மற்றும் வாய்க்கால் சீரமைப்பு, அரசுத் துறை கட்டடங்கள் கட்டுதல் ஆகியவைகளுக்கானச் செலவுகள் அடங்கும்.

**காவிரி டெல்டா முறை நவீனப்படுத்துதல் :**

தஞ்சை மாவட்டத்திற்கு உயிரோட்டமாக விளங்கும் காவிரியாற்றின் ஓட்டத்தினை முறைப்படுத்தி கரையின் இருமருங்கினையும் நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் வகுப்பு வாய்க்கால்கள் சீரமைப்பு வடிகால் திட்டங்கள், இறைவைப் பாசனத் திட்டம் ஆகியவை செயலாக்கப்படுகின்றன.

1.7.77 முதல் 31.12.78 வரையில் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட 411 வேலைகளில் 244 வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன; இதனால் 2.25 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 414.67 இலட்சமாகும்

**தீவிர வேளாண்மை சாகுபடித் திட்டம் :**

தீவிர வேளாண்மை திட்டத்தின்கீழ் பணப்பயிர்கள் அதிக அளவில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பருத்தி 30,000 ஏக்கரிலும் கடலை 1,25,000 ஏக்கரிலும், எள் 30,000 ஏக்கரிலும் மஞ்சள் 1250 ஏக்கரிலும் மிளகாய் 7900 ஏக்கரிலும் வெங்காயம் 3060 ஏக்கரிலும் சேனைக் கிழங்கு 670 ஏக்கரிலும் பயிரிட ஆவன செய்யப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மையில் தீவிர முன்னேற்றம் காண்பதற்கு அரசு, திட்டங்களை நிறைவேற்றிவரும் நேரத்தில், நிலமில்லாத ஏழைகளுக்கு குடியிருப்பு மனைகள்

**வீட்டு மனைப்பட்டா வழங்குதல்:**

சென்ற இரண்டு ஆண்டுகளில் மட்டும் 7212 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் 3253 பேர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களும் 3959 பேர் இதர நிலமில்லாத ஏழைகளும் ஆவர்.

**விவசாய நிலம் ஒப்படைப்புத் திட்டம்:**

தனியார் நிலங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் 2963 பேருக்குப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 1659 பேர் அரிசன விவசாயிகள், 1034 பேர் இதர விவசாயிகளாவர்.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அவர்கள் ஆக்கிரமித்துள்ள ஆட்சேபகரமற்ற நிலங்களை ஒப்படைப்பு செய்யும் திட்டத்தின்கீழ் 1.7.77ல் இருந்து 1978-79-ம் ஆண்டில் ஜனவரி'79 வரையிலும் 28862.96 ஏக்கர் நிலம் 5312 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவையல்லாமல் தஞ்சை மாவட்டத்தில் ஆட்சேபகரமில்லாத 9700.00 ஏக்கர் நிலங்களை ஒழுங்குபடுத்தி ஒப்படைப்பு செய்யும் திட்டத்திற்காக விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் 20,476 பேர் பயனடைவார்கள்.

**நிலவருவாய் ஆய்வாளர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள்:**

கிராம மக்களின் குறைகளை நேரிடையாகக் கவனித்து நடவடிக்கை எடுத்து வரும் நிலவருவாய் ஆய்வாளர்களுக்குப் போதுமான

குடியிருப்பு வசதிகள் இல்லை. எனவே, தமிழ்நாட்டில் உள்ள எல்லா சரகத் தலைமை இடங்களிலும் நிலவருவாய் ஆய்வாளர்களுக்குக் குடியிருப்பு இல்லம் கட்டித்தரத் தமிழ்நாடு அரசு

இத்திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 1978-79-ல் 30 குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு சரகத் தலைமையிடத்திலும் புறம்போக்கு நிலங்களில் 5 சென்ட் பரப்பளவில் வீடுகட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தப் பணியினை மாநில வீட்டு வசதி வாரியம் கீழ்க்கண்டவாறு இல்லங்கள் அமைக்க முடிவாகியுள்ளது:

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் | 8 | இல்லங்கள் |
| பட்டுக்கோட்டை | 5 | ,, |
| ஒரத்தநாடு | 5 | ,, |
| பாபநாசம் | 5 | ,, |
| கும்பகோணம் | 5 | ,, |
| மன்னார்குடி | 2 | ,, |
| | 30 | ,, |

**சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டம் தஞ்சை மாவட்டத்தில் 16 வட்டாரங்களில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,12,341 ஆகும். இதில் சிறு விவசாயிகள் 69,629; விவசாயத் தொழிலாளர்கள் 13,863.

கீழ்க்காணும் அட்டவணையின் மூலம் இத்திட்டத்தின் ஏற்பட்டிருக்கும் விரைவான முன்னேற்றத்தினைக் காணலாம்.

| ஆண்டு | பயனடைந்த சிறு விவசாயிகளின் எண்ணிக்கை. | அளிக்கப்பட்ட மான்யத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1975—76 | 7,477 | 9.84 |
| 1976—77 | 8,397 | 14.90 |
| 1977—78 | 7,356 | 19.88 |
| 1978—79 (ஜனவரித் திங்கள் வரையில்) | 15,664 | 38.98 |

இத்திட்டத்தின் கீழ் 1.7.77 முதல் 31.12.78 முடிய உள்ள காலத்தில் சிறு விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்புக்காக 204 விசைத் தெளிப்பான்களும், 977 கைத்தெளிப்பான்களும் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர தார்ப்பாலின்கள் 617 அளிக்கப்பட்டுள்ளன. இதற்காக சிறு விவசாயிகளுக்கு மான்யமாக அளித்த தொகை ரூ. 3.13 இலட்சமாகும்.

திருந்திய விவசாய முறைகளை மேற்கொள்ள சிறு விவசாயிகளுக்கு தழை மிதிக்கு கருவிகள் 1,369 வழங்கப்பட்டுள்ளன. தானியங்களை எடுத்துச் செல்ல 69 வண்டிகளும், வண்டிமாடுகள் இல்லாத சிறு விவசாயிகளுக்கு 1596 வண்டி மாடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தானியங்களைச் சேமித்து வைத்துக் கொள்ள உலோகப் பத்தாயங்கள் 282 வழங்கப்பட்டுள்ளன. இதற்







காகச் சிறு விவசாயிகளுக்கு மானியமாக அளிக்கப்பட்ட தொகை ரூ. 6.13 இலட்சமாகும்.

மேலும், சிறு விவசாயிகளுக்கு பயிர் செய்யும் முறையினை விளக்குவதற்காக 943 நீருபணப் பாத்திகள் ரூ. 1,80,952- செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தென்னை மற்றும் பழமரங்களை அதிகம் வளர்க்கும் நோக்கத்தில் 4023 தென்னை மற்றும் பழக் கன்றுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தங்களது பாசனமுறைகளை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக 144 ஆயில் எஞ்சின்களும் 42 பாசனக் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 2.17 இலட்சம் ஆகும். சிறு விவசாயிகளின் பொருளாதார நிலையினை மேம்படுத்த 2714 கறவைமாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 12.50 இலட்சம் மானியம் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த கிராம முன்னேற்றத் திட்டம்:**

இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராம முன்னேற்ற திட்டத்தைச் செயல்படுத்த சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் அமலில் உள்ள 10 வட்டாரங்களையும், சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டம் அமலில் இல்லாத 3 வட்டாரங்களையும் சேர்த்து 13 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.




இத்திட்டம் அமலில் உள்ள வட்டாரங்களுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் மான்யம் இந்த நிதியாண்டு இறுதிக்குள் செலவிடப்பட உள்ளது. இதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு இந்த நிதியாண்டு இறுதிக்குள் ரூ. 65 இலட்சம் மான்யமாக விரைவில் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரையில் 6673 சிறுவிவசாயிகள், 6119 மிகச் சிறுவிவசாயிகள் மற்றும் 5834 விவசாயத் தொழிலாளர்கள் ஆக 18,626 குடும்பத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் தேவைகளை ஆராய்ந்து அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடன் மனுக்களை மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டு கடன் மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் சில மாதங்களுக்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட போதிலும் மிகக் குறுகிய காலத்தில் தீவிரமாகப் பணியாற்றப்பட்டு இதுவரை 1214 கடன் மனுக்கள் அனுமதியாகி ரூ. 14 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**பிற்பட்டோர் நலம்:**

தமிழ்நாடு அரசு பின்தங்கிய மக்களின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காக

வும் பல்வேறு திட்டங்களைச் செயலாக்கி வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் பிற்பட்டோரின் பட்ட மேற்படிப்பு மற்றும் பள்ளிப் படிப்புக்காகவும் 1.7.78 முதல் 31.1.79 வரையில் ரூ. 42.36 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய மாணவரின் விடுதிகள் பராமரிப்புக்காக ரூபாய் 7.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. விடுதியில் தங்கியிருப்போருக்கு சீருடை வழங்குவதற்காகவும் தனியார் விடுதிகளுக்கு மான்யமாகவும் ரூபாய் 3.61 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் ஆகியோர்கள் பயன்படுத்தும் கருவிகளை

வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 1.12 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**அரிசன நலன்:**

அரிசன மக்களின் சீரிய முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு 1.7.77 முதல் 31.1.79 முடிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் சுமார் ரூபாய் 1 கோடியே 68 இலட்சத்திற்குமேல் தமிழ்நாடு அரசு செலவிட்டுள்ளது. இதில் அரிசன மாணவருக்கான கல்வி உதவித்தொகை, அவர்கள் தங்கும் விடுதிகளின் பராமரிப்புச் செலவு, புதிய பள்ளிகளைக் கட்டுதல், உழவு மாடுகள், கிணறுகள் மான்யம், வீட்டு மனைகள் வழங்குதல், கிராமவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரிசனநலத்துறையிலிருந்து மான்யம் வழங்குதல், குடிநீர் வசதிகள், ஆதிவாசிகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குதல் மற்றும் அரிசன நலனுக்கான பல்வேறு பணிகள் ஆகியவை அடங்கும்.

**சமூகநலன்:**

1978 ஜனவரி 1ந் தேதி முதல் தஞ்சை மாவட்டத்தில் வழிகாட்டும் பணி இல்லம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் சமூகத்தில் மிக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சேவை செய்வதாகும்.

விதவையர் திருமணத்திற்கு ஊக்கமளிக்கும் இதுவரை மணமாகியுள்ள 30 தம்பதிகளுக்கு ஒவ்வொரு தம்பதிகளுக்கும் உதவித் தொகை ரூ. 5,000/- வீதம் வழங்கப்பட்டது. இதுவரை ரூபாய் 1.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விதவையின் குழந்தைகளுக்குப் படிப்புதற்கு புத்தகங்கள் முதலியன வழங்கும் திட்டத்தின் கீழ் 190 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபாய் 5,900ஆகும்.

ஏழை மாணவ மாணவியருக்கு தட்டெழுத்துப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 70 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் அளிக்கப்படும் உதவித் தொகை மாதம் ரூ. 15- ஆகும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 10,500. பெண்கள் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சீருடை தைப்பதன் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் 1000 பேர்.

**பொது சுகாதாரம்:**

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில், நடமாடும் மருத்துவ வசதித் திட்டத்தின்கீழ் 1978-ல் பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை 401 ஆகும். இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை 1,20,150 ஆகும்.

**கல்வி:**

கல்வி வளர்ச்சியில் இந்தியாவில் குறிப்பிடத்தக்க ஒரு மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்தப் பெருமையை மேலும் உயர்த்துதும்படியாகத் தமிழ்நாடு அரசு பல்வேறு கல்வி வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் புதிதாக 5 உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் 68 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. கூடுதல் ஆசிரியர் நியமனங்களும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

**போக்குவரத்து வசதிகள்:**

சோழன் போக்குவரத்துக் கழகத்திடம் 1.7.77ல் இருந்த வழித்தடங்கள் 307 ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் மேலும் 29 வழித்தடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெடுநாட்களாகப் போக்குவரத்து வசதி இல்லாமலிருந்த கிராமங்கள் பயன்பெறும் வகையில் புதிதாக 11 வழித்தடங்கள் துவக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புதிதாகப் பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை 112 ஆகும். பயன் பெறும் மக்கள் தொகை 1.35 இலட்சம் ஆகும். இவையன்றி, ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் கூடுதலாக 18 பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

இவ்வாறாக, தஞ்சாவூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு சீரிய திட்டங்களைச் செயலாக்கி வருகிறது தமிழ்நாடு அரசு. கூடிய விரைவில் நமது மாநிலம் ஆக்கப்பணிகளிலும், முன்னேற்றத்திலும் இந்தியாவில் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.



# விரைந்து பணியாற்றும் வேலை வாய்ப்பகங்கள்!

**வேலை வாய்ப்பகங்களின் பணிகள் துரிதப்பட, கம்ப்யூட்டர்கள் இயங்குமளவில் கடந்த இரண்டு ஆண்டுகள் இணையற்றுத் திகழ்ந்தன!**



தமிழகத்தில் 32 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. 17 வேலை வாய்ப்பகங்களும், தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகமும், ஊன முற்றோர்க்கான தனி வேலை வாய்ப்பகமும்; சென்னை, மதுரை அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்-வழி காட்டும் நிலையங்களும், திண்டுக்கல், ஈரோடு காஞ்சிபுரம், கரூர், அம்பத்தூர், தூத்துக்குடி, நாகப்பட்டினம், மண்டபம், சங்கராபுரம், ஆலங்காயம் ஆகிய இடங்களில் முறையே 10 துணை வேலை வாய்ப்பகங்களும் இதில் அடங்கும்.

1977-78ஆம் ஆண்டிலும் 1978-79-ஆம் ஆண்டிலும் வேலையில் அமர்த்தப்பட்டோர்களின் புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

1977-78, 1978-79 ஆகிய ஆண்டுகளில் கீழ்க்கண்ட முக்கிய திட்டங்கள் செயலாக்கப்பட்டன.

பழங்குடி மக்களை வேலையில் அமர்த்துவதில் மேலும் கவனம் செலுத்துவதற்காக, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சங்கராபுரத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆலங்காயத்திலும், துணை வேலைவாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு விகிதாச்சாரப்படி வேலையளிப்பதற்கு (Centralised Rosters for Communal Reservation) ஒரு புதுத்திட்டம் தற்பொழுது சேலம் மாவட்டத்தில் பரிசோதனைத் திட்டமாகச் செயலாக்கப்படுகிறது. இதற்கென்று ஒரு தனிப்பிரிவு சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள ஒன்பது வேலை வாய்ப்பகங்களின் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் செய்வதற்கு அரசு அனுமதித்துள்ளது. அதன்படி வேலை வாய்ப்பகங்களின் வேலைகளைத் துரிதப்படுத்திச் செவ்வனே செய்யவும், முக்கியமாக வேலை வாய்ப்பகங்கள் மீது வரும் புகார்களைக் களைவதற்கும் மேலும் தனியார் துறையில் வேலை அளிப்போரை ஊக்குவிப்பதற்கும், சரியான விவரங்களை நிலைப்படுத்துவதற்கும் ஏதுவாகிறது. இத்திட்டத்தின் கீழ் மனுதாரர்களின் படிப்பு, வயது ஆகிய உண்மை விவரங்களை மனுதாரர்களின் பதிவட்டைகளிலிருந்து ஏற்கெனவே வகுக்கப்பட்ட 'இன்புட்' படிவங்களில் பலவித குறியீட்டு எண்களைக் கொண்டு மாற்றப்படும்.

இவ்விதம் இன்புட் படிவங்களில் மாற்றப்பட்ட மனுதாரர்களின் விவரங்களை 'அரசு 'டேட்டா சென்டரில்' கம்ப்யூட்டர் நாடாவில் பதிவு செய்யப்பட்டு அங்குப் பாதுகாப்பில் வைக்கப்படும். இவ்விதம் தயாரிக்கப்பட்ட நாடாக்கள் பிறகு வேலை வாய்ப்பகங்களில் அறிவிக்கப்பட்ட காலியிடங்களைப் பூர்த்தி செய்ய கம்ப்யூட்டர் மூலம் மனுதாரர்களைத் தேர்ந்தெடுக்க உபயோகப்படும் கம்ப்யூட்டர் முறையில் உள்ள ஒன்பது வேலை வாய்ப்பகங்களில் உள்ள 2,50,000 மனுதாரர்களைச் சார்ந்த இன்புட் படிவங்கள் தயாரிக்கப்பட்டன. முதலில் சென்னையில் உள்ள தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகத்தைச் சார்ந்த இன்புட் படிவங்கள் கம்ப்யூட்டர் முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதன்படி 2,000 மாதிரி இன்புட் படிவங்கள் வேலை வாய்ப்பகங்களின் பல பணிகள் கம்ப்யூட்டர் மூலம் பரிசோதிக்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஊனமுற்றோரைப் பணியிலமர்த்துவதை அதிகப்படுத்துவது மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்புக்களை அறிவதற்காகவும், சேலம், திருச்சி மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் ஒவ்வொன்றிலும் ஓர் இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் பதவியுடன் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. இதே போல் ஏற்கெனவே கோவை மற்றும் மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தனிப் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவுகள் ஊனமுற்றோர்க்கான மத்திய அரசின் ஒதுக்கீடான 3 சதவீதத்தைச் சரியாகச் செயல்படுத்த உதவுவதுடன் இம்மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றோர்களைப் பணியில் அமர்த்த உதவுகிறது.

கிராமப்புறங்களிலுள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும், திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பகத்திலுள்ள அதிகப்படியான வேலைப் பளுவைக் குறைக்கவும், கரூரில் துணை வேலை வாய்ப்பகம் 1978-79 இல் துவக்கப்பட்டு, இயங்கி வருகிறது.

முதல் குழந்தை இப்பொழுது வேண்டாம்

இரண்டாவதுக்கு இடைவெளி இருக்கட்டும்

பிள்ளை பெற விரும்புவோர்க்கு ஓர் ஆலோசனை

மூன்றாவது வேண்டாம்! வேண்டாம்!

அருகிலுள்ள குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தினரும் ஆரம்ப சுகாதார நிலையத்தினரும் ஆலோசனை சொல்வதுடன் சேவை வசதிகளையும் செய்து கொடுக்கின்றனர்.

இன்றே அவர்களை சந்தியுங்கள்

விளம் 79/62

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல்வேறு திட்டங்களைச் செயலாற்றி வருகின்றது. நகர அழகுக்கு மெருகூட்டும் வகையில் புதிய புதிய திட்டங்களை அது உருவாக்கி வருகிறது.



# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

தன்னிறைவு பெற்ற குடியிருப்பு மனைகள், அடிப்படை வீடு அமைப்புகள், தாமே வீடமைத்துக் கொள்ளும் கட்டடப் பொருள்கள் மற்றும் சமுதாய நல வசதிகளுடன் குறைந்த வருவாய் உள்ள 13,500 குடும்பங்களுக்கு (74,000 நபர்கள்) உதவும் இத்திட்டம், சுமார் 175 எக்டேர் மொத்தப் பரப்பில் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய மூன்று இடங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. தொழில் மற்றும் வணிகத்திற்கான வசதியுடன் கூடிய மனைகள் வழங்கும் திட்டமும் இதில் அடங்கும்.

அரும்பாக்கத்தில் இதுவரை 2202 தன்னிறைவு பெற்ற குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 157 அடிப்படை வீடு அமைப்புகள் கட்டப்பட்டு அவற்றிற்கு உரியவரிடம் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 966 அடிப்படை விட்டமைப்புகள் முடியும் தறுவாயில் உள்ளன. மருத்துவமனை, சமூகக்கூடம் முதலியன முழுதாய் முடிந்துள்ளன. 8 இலட்ச லிட்டர் நிறையளவுள்ள உயர்நிலை நீர்த்தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர், வடிகால் வசதிகள் முதலியன அமைக்கப்பட்டு வருகின்றன.

வில்லிவாக்கத்தில் சமூகக்கூடம் துவக்கப்பள்ளி, மருத்துவமனை முதலிய கட்டடப் பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றம் கண்டு வருகின்றன. கொடுங்கையூரில் முன்னேற்றப்பணிகள் கூடிய விரைவில் துவக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மேம்பாடு: (தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்)**

சுமார் 30,000 குடிசைப்பகுதி வாழ் குடும்பங்கள் பயனடையும் வகையில் குடிசைப் பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள், சாலைகள், தெருவிளக்குகள், கழிவுக் கால்வாய்கள், வடிகால் வசதிகள், கழிவிடங்கள் முதலிய அடிப்படை வசதிகளும், சமூக நல வசதிகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

3,300 குடும்பங்கள் பயனடையும் வகையில் 14 குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன. 800 குடும்பங்கள் கொண்ட வேறு ஐந்து குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப்பணிகள் முடிவடையும் கட்டத்தில் உள்ளன. இன்னும் ஐந்து இடங்களில் 10,600 குடும்பங்கள் நலன் பெறும் வகையில், ஆக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வியாசர்பாடி வீட்டுவசதி, மேம்பாட்டுத் திட்டம்**

180 ஏக்கர் நிலப்பரப்புடைய வியாசர்பாடி ஏரிப் பகுதியில் 5,709 குடும்பங்கள் குடியேறி ஆக்கிரமித்துள்ளனர். அவர்களுள் 3,132 குடும்பங்கள் பர்மாவிலிருந்து குடிபெயர்ந்தோர். இந்த ஏரிப் பகுதியை மழைக் காலங்களிலும் நீர் தேங்காதவாடு மேம்படுத்தி, நல்ல சாலைகள், போதிய குடிநீர்க் குழாய்கள், நவீன பொதுக் கழிவறைகள், குளியலறைகள், தெருவிளக்குகள், மழைநீர்க் கால்வாய்கள் போன்ற அடிப்படை வசதிகளை அமைத்து மழலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மருத்துவமனை, சிறு தொழிற்கூடம் போன்ற கட்டடங்களை ரூபாய் 149.89 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சிறுதொழில்கள் (சிறுதொழில் நிறுவனம்-சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்)**

தன்னிறைவு பெற்ற மனைகள் தொழிற்கூடங்கள், இயந்திரங்கள், நிதியுதவி, பயிற்சி ஆகியவற்றை வைத்து, 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், தன்னிறைவு வீட்டு மனைத்திட்டம் மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைத்தொழில் வகையில் 5,000 பேர்களுக்கு வேலை தருதல் முதலியன இத்திட்டத்தின் அம்சங்களாகும்.

இதுவரை அரும்பாக்கத்தில் பூர்த்தியடைந்த 200 தொழிற் கூடங்களில் 13 தொழிற்கூடங்கள் உற்பத்தி செய்யும் நிலையில் உள்ளன. மேலும் 22 தொழிற் கூடங்களில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. வில்லிவாக்கத்திலும், கொடுங்கையூரிலும் இப்பணி விரைவில் துவக்கம் ஆகும்.

**தாய் சேய் நலம்: (சமூக நலத் துறை):**

பயிற்சி, கருவிகள், கட்டடங்கள் முதலிய வசதிகளுடன்

ஆறு வயதிற்குட்பட்ட 17,000 குழந்தைகளுக்கும் 7,000 தாய்மார்களுக்கும் சத்துணவும், மருத்துவ வசதியும் அளித்தல், மற்றும் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம், குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயனடையும் குடும்பங்களிலிருந்து வயது வந்த 20,000 பெண்களுக்குச் சத்துணவு, மருத்துவ வசதிகளுடன் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கல்வியும், எழுத்தறிவுக் கல்வியும் அளித்தல் முதலியன இத்திட்டத்தின் கீழ் வருவனவாகும்.

இதுகாறும் 58 குழந்தை நல விடுதிகள் துவக்கப்பட்டு மேற்கூறிய பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. 3,641 குழந்தைகள் ஆதார, ஆரம்பக் கல்விகளில் சேர்ந்து பலனடைந்து வருகிறார்கள். மேலும் 2.5 வயதிற்குட்பட்ட 295 சிறு குழந்தைகள் 9 குழந்தைக் காப்பகங்களில் சேர்க்கப்பட்டு நன்மையடைந்து வருகிறார்கள்: சத்துணவுத் திட்டம் 30 குழந்தை நல விடுதிகளில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினால் 1,246 குழந்தைகளும், 149 சிறு குழந்தைகளும் பலனடைந்து வருகிறார்கள். எழுத்தறிவுக் கல்வித் திட்டத்தினால் 2,231 பெண்கள் தற்போது பலனடைந்து வருகிறார்கள்.

**குடிநீர் வசதி மற்றும் கழிவுக் கால்வாய்கள் (சென்னைப் பெருநகர் குடிநீர்க் கழிவுக் கால்வாய் வாரியம்)**

முன்னமே இருந்து வரும் அமைப்புகளை புலரமைத்தலும் பொதுக் குழாயை நம்பி வாழும் மக்கள் மற்றும் குடிசைப் பகுதி ஏழைகளுக்கு விரைவான உதவிகளைச் செய்தலும் இத்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

இத்திட்டத்தின் பணிகள் சமீபத்தில் ஆரம்பித்து முன்னேற்றம் கண்டு வருகின்றன.

**சாலைகள் மற்றும சாலைப் போக்குவரத்துச் சீரமைப்பு: நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை-சென்னை மாநகராட்சி (காவல்துறை)**

உள் வட்டச் சாலையின் ஒரு பகுதியை அமைத்தல், நடைபாதைகளைச் சீரமைத்தல், புதியனவற்றைக் கட்டுதல், சைக்கிள் தடங்கள், சுரங்க நடைபாதைகள், ஆற்றின் இடைவழிகள், சாலைச் சந்திப்புகளில் ஒளி விளக்குகள், போக்குவரத்துப் பொறியியல் முறைகள் ஆகியன ஏற்படுத்துதல் முதலியன இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

உள் வட்டச் சாலையின் மூன்று வெவ்வேறு பகுதியில் சாலை அமைப்புப் பணி முழுமையடைந்து வருகின்றது. 9 சுரங்க நடைபாதைகளில் 5 முழுவதும் பூர்த்தியாகி பாதசாரிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அண்ணா சாலையிலும், பூந்தமல்லி சாலையிலும் நடைபாதை சீரமைப்பு, சைக்கிள் தடங்கள் முதலிய பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. 7 சிறு பாலங்கள் கட்டும் பணியில் 5 முழுவதுமாய் கட்டப்பட்டுச் சாலைப் போக்குவரத்துக்குப் பயன்பட்டு வருகின்றன.

**பேருந்து போக்குவரத்து: (பல்லவன் போக்குவரத்துக்கழகம்)**

பழைய பேருந்துகளை மாற்றுதல், புதிதாகப் பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்கள், பயணிகள் தங்கும் நிழற்குடைகள் ஆகியன எழுப்புதல் முதலியனவே இத்திட்டமாகும்.

புதியதாக வாங்கவிருந்த 285 பேருந்துகளும் வாங்கப்பட்டு பயணிகளின் உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளன. பேசின் பிரிட்ஜ் பணிமனை கட்டடப்பணி முற்றிலும் பூர்த்தியாகி விரைவில் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட உள்ளது. பெரம்பூரிலும் பணிமனை வேலைகள் நடைபெற்று வருகின்றன. நான்கு பேருந்து நிலையங்கள் முடிவடைந்து பேருந்துப் போக்குவரத்துக்கு பயன்பட்டு வருகின்றன.

**மறைமலை நகர்: (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்)**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முக்கிய பொறுப்பேற்றுள்ள பணிகளில் மறைமலை நகர் எனும் ஒரு புதிய நகரை நிறுவுவது குறிப்பிடத்தக்கதாகும். சென்னையிலிருந்து 43 கி.மீ. தொலைவில் சுமார் 160 எக்டர் பரப்பில் அரும்பி வரும் இப் புதுநகரம் தாம்பரத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையில் அமைந்துள்ளது.

இதுவரை 305 வீட்டு மனைகளும், 23 தொழிற் மனைகளும் விற்பனையாகி உள்ளன. குறைந்த ஊதியப் பிரிவினருக்காக (ஹட்கோ) உதவியுடன் இக்குழுமம் அமைத்துவரும் 144 வீடுகளில், 48 வீடுகள் முழுமையடைந்தும், மற்றவை முன்னேற்றம் கண்டும் வருகின்றன. மேலும், மத்திய ஊதியப் பிரிவினருக்காக, 30 வீடுகளும், குறைந்த ஊதியப் பிரிவினருக்காக 504 வீடுகளும் 'ஹட்கோ' நிதியுதவியுடன் கட்டுவதாக ஓர் திட்டம் உள்ளது.

**மணலி: (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்)**

இக் குழுமத்தின் இன்னொரு திட்டம் மணலியின் 190 எக்டர் நிலத்தில் வீடுகளைக் கட்டிக் குடியிருப்புப் பற்றாக் குறையை ஈடுசெய்வதாகும். முதல் கட்டத்தில் 'ஹட்கோ' உதவியுடன் குறைந்த ஊதியப் பிரிவினருக்காகக் கட்டப்பட்டு வரும் 543 வீடுகளில், 192 வீடுகள் முழுதாகக் கட்டி முடிககப்பட்டுள்ளன. மற்றவை கட்டப்பட்டு வருகின்றன. இரண்டாம் கட்டத்தில் 417 குறைந்த ஊதியப் பிரிவினருக்கான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 59 வீட்டு மனைகள் விற்பனையாகியுள்ளன. நிலத்தடி நீர்த் தொட்டியுடன் கூடிய உயர்நிலை நீர்த்தொட்டி ஒன்றும் முடிவடைந்துள்ளது. மேலும், ஒரு நிலத்தடி நீர்த்தொட்டி கட்டப்பட்டு வருகிறது. 28 தெரு



விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கழிவுக் கால்வாய் வசதியும் பூர்த்தி அடைந்துள்ளது. சாலை அமைப்பு. குடிநீர் வடிகால் வசதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

**கோயம்பேடு புதிய மொத்த விற்பனைக் கூடம்: (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்)**

சென்னை நகரில் மைய வியாபாரத் தலத்தில் குறிப்பாகக் கொத்தவால் சாவடிப் பகுதியில் ஏற்படும் இட நெருக்கடியையும், இடர்ப்பாடுகளையும் குறைக்கும் வகையில், அங்கு மேற்கொள்ளப்படும் விற்பனைப் பேரங்கள், கோயம்பேடு பகுதிக்கு மாற்ற இத்திட்டம் உதவுகிறது. தவிரவும் சுமை வாகனங்களுக்கெனத் தனி நிலையமும் அங்கு இல்லை. இதனால் அந்த ஊர்திகள் பொருட்களை ஏற்றி இறக்கும் பணிகளுக்காகச் சாலைகளிலேயே நிறுத்தப்படுகின்றன. இதனால் சாலைகளை ஏனையோர் சரிவரப் பயன்படுத்த முடியவில்லை. இத்தயை இடர்களை நீக்கும் பொருட்டு, கோயமபேடு என்ற இடத்தில் 120 எக்டர் நிலப்பரப்பில் 3,000 கடைகளை அமர்த்தும் வசதியுடன் ஒரு புதிய மொத்த விற்பனைக் கூடம் அமைக்க ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் இக்குழுமம் சென்னை வாழ் ஏழை, எளிய மக்களுக்காக வீடு, வேலைவாய்ப்பு, பொதுச் சுகாதாரம், போக்குவரத்து போன்ற பல துறைகளில் மூலம் பெரும் பணியாற்றி உள்ளது.

# சின்கோனா

தமிழ்நாடு அரசு சின்கோனாத் துறை, 1860-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுவரும் தொழிலாளர் கூட்டமைந்த ஒரு வர்த்தக நிறுவனமாகும்.

இத்துறையில் 3,000 தொழிலாளர்கள் வேலையில் உள்ளனர். இவர்களுக்கு இலவச வீட்டு வசதிகளும், சுத்தமான குடிநீர் மற்றும் பல்வேறு அடிப்படைத் தேவைகளும் தோட்டத் தொழிலாளர் சட்டப்படி வழங்கப்படுகின்றன. தற்போது, தினக்கூலி சட்டப்படி ரூ. 6.50 என்ற விகிதத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. ஆண், பெண் இருபாலார்க்கும் சம ஊதியம் வழங்கப்படுகிறது.

சமுதாயத்தில் நலிவுற்றோருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கத்தில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் இத்துறையின் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மதுரை மாவட்டம் மேல் பழனி மலைகளில் ரூபாய் 52.57 இலட்ச மதிப்பீட்டில் 400 ஏக்கரா பரப்பளவில் ஜிரேனியம் பயிரிடும் திட்டம் கடந்த மார்ச்சு 79-ல் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 220 தொழிலாளர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள். மதுரை மாவட்டத்தில் ''ஹைவேவிஸ்'' (Highwayvis Group of Estates) தோட்டங்களில் ரூ. 146.26 இலட்சம் செலவில் 1,000 ஏக்கரா பரப்பில் சின்கோனா பயிரிடும் திட்டம் தமிழ்நாடு அரசால் இசைவளிக்கப்பட்டுள்ளது. தேவையான நிலம் இத்துறைக்குக் கிடைத்தவுடன் இத்திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது. இத்திட்டம் 1,100 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். 150 இலங்கை அகதிக் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் கொடைக்கானல், கூக்கல் பகுதியில் 700 ஏக்கரா நிலத்தில் ஜிரேனியம் பயிரிடும் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழக அரசின் உள்ளூர் மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட குழுவினரின் பரிந்துரையின்படி கீழ்க்காணும் திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன:

(1) 400 ஏக்கராவில் ஜாவா சிட்ரோனெல்லா பயிரிடும் திட்டம்.

(2) ஆண்டொன்றுக்கு 1500 கிலோ காபின் என்ற மருந்து பொருள் தயாரிக்கும் திட்டம்.

டயஸ்கோரியா பயிரிடவும் 'டயஸ்ஜெனின்' (Diosgenin) என்னும் மருந்துப்பொருள் தயாரிக்கவும் பெரியதொரு திட்டம் 1978-79-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. டயஸ்ஜெனின் மருந்துப் பொருள் தயாரிப்பதற்காக வால்பாறை சின்கோனாப் பகுதியில் தொழிற்சாலை ஒன்று கட்டப்படும். இந்தத் தொழிற்சாலைக்கு, ''தமிழ்நாடு ஸ்டிராய்ட்ஸ்'' (Tamil Nadu Steroids) என்று பெயரிடப்பட்டு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களால் 9-1-1979-ல் அடிக்கல் நாட்டப்பட்டது. 1979-80-ல் இந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எண்பது இலட்ச ரூபாய் அளவிலான இந்தத் திட்டம் முழுமையடையும் தருவாயில் சுமார் 400 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். மேலும், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் கிராமப்புற மக்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்குமாக ஏறத்தாழ 1,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசின் வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான இந்தத் துறை கணிசமான அளவில் தொடர்ந்து வருவாய் ஈட்டி வருகிறது. 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 37.33 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசு, கொய்னாப் பொருள் ஏற்றுமதிக்குக் கட்டுப்பாடு விதித்தமையால் 1978-79-ஆம் ஆண்டில் கொய்னாப் பொருள் ஏற்றுமதி குறைந்து ரூ. 23.67 இலட்ச அளவில் மட்டுமே ஏற்றுமதி செய்ய முடிந்தது. இந்தத்துறையின் 1977-78-ஆம் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 18.17 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1978-79 மற்றும் 1979-80-ம் ஆண்டுகளில் நிகர இலாபம் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 18 இலட்சம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொடிய நோயான மலேரியாவை நம் நாட்டிலிருந்து ஒழிப்பதற்காக ஆண்டுதோறும் 1,000 கிலோ கொய்னா சல்பேட் (Quinine Sulphate) என்ற மருந்தை இத்துறை, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்கு வழங்கி சேவை செய்வதுடன், சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மக்கள் பிரிவினருக்கும் கணிசமான அளவில் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் செயல்படுகிறது.

நீங்களே கண்டுகொள்ளுங்கள்

# மின்னலடிக்கும், ஸூப்பர் ரின் வெண்மை.. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை




வேளை தவறாமல் உபயோகியுங்கள் ஸூப்பர் ரின். எத்தகைய வெள்ளைவெளேர் சலவை கிடைக்கிறது பாருங்கள்—இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை அது. காரணம், மேம்பட்ட வெளுப்பூட்டும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின். நீங்களே கண்டுகொள்ளுங்கள்.




**இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி.**

லின்டாஸ்-RIN 34-2317 TH (RR)

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

தொழிலாளர்க்கும், நிர்வாகிகளுக்கும் சுமுக உறவு ஏற்படவும் - தொழிலாளர் நலன் காக்கவும் சட்டங்களையே மாற்றிச் சமூகப் பாதுகாப்பளித்த அரசு இது!

# தொழிலாளர் நலன் சட்டத்திருத்தங்கள்

தமிழ்நாட்டில் கடந்த இரண்டாண்டுகளாகத் தொழிலாளர் நிலைமையும், தொழில் அபிவிருத்தியும் முன்னேற்றமடைந்து வந்துள்ளது. தொழிலாளர்களின் நலனுக்கென உள்ள சட்டங்களைச் செவ்வனே நிர்வகித்தல், தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்துதல், தொழிலாளர்களின் நலனுக்கான சட்டங்களை மாற்றுதல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் ஆகியவை இவ்வரசின் தலையாய கொள்கைகளாகும்.

தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்வதற்கு உள்ள உரிமையை அரசு ஏற்றுக் கொள்ளும். அதே சமயத்தில் வேலை நிறுத்தங்கள் அடிக்கடி நிகழ்வதைத் தடுக்க அத்தகைய வேலை நிறுத்தங்கள் நீடித்துக் கொண்டே போகும்போது அவற்றிற்கு முடிவு காண வேண்டி தொழில் தகராறுகளில் தலையிட்டுச் செவ்விய முறையில் இணக்கம் செய்வதன் மூலமும் சுமுகமாக அவற்றிற்குத் தீர்வு காண்பதன் மூலமும் அரசு உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொண்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரங்கள் பின்வருமாறு :—

| | 1977 | 1978 |
|---|---|---|
| (அ) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | 298 | 378 |
| (ஆ) இழந்த உழைப்பு நாட்கள் | 26,16,963 | 21,55,675 |

(பணியாற்றிய மொத்த உழைப்பு நாட்களில் 1 சதவீதத்திற்கும் குறைவு.)

இத்துறையின் செவ்விய நடைமுறைகளால் 1977-ஆம் ஆண்டு, 1978 தகராறுகளும், 1978-ஆம் ஆண்டு 2184 தகராறுகளும் இணக்க முறையில் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டன.

**தேவையான சட்ட-விதித் திருத்தங்கள்**

தொழிலாளர்களின் நன்மைகளை உத்தேசித்துக் கீழ்க்கண்ட சட்டங்கள் விதிகளுக்கான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

(1) பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள்) சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு பயன்களைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு தங்களுடைய வேலையைப் பற்றிய செல்திறனுள்ள அத்தாட்சியை பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் பெற்றிராததால் தொழிலதிபர்கள் பீடி, சுருட்டுத் தொழிலாளர் அனைவருக்கும் பணிப்புத்தகங்கள் கொடுக்க வேண்டும் என்று கருதப்பட்டு, தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள்) விதிகள் 36 (2) ஆவது விதிக்கு வரைவுத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. இப்பணிப் புத்தகம் தொழிலாளர்களின் முழுச்சொத்தாகும். அதில் பதிவுகளைச் செய்வதற்காக மட்டுமே தொழிலதிபர்கள் வாங்கிப் பதிவு செய்த பின்னர் தொழிலாளரிடம் திரும்ப அளிக்கவேண்டும்.

(2) தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகளின் 31 (5) விதிகளின் கீழ், மேல் முறையீடு செய்பவர் என்ற முறையில், தொழிலாளரில் ஒருவர் தேவையான நகல் முத்திரைத் தாள்களுக்குக் கட்டணம் செலுத்துவதின் பேரிலேயே, மேல் முறையீட்டு அதிகாரியின் ஆணைகளைப் பெற இயலும், முத்திரைத் தாள்களை வழங்க வேண்டும் என்னும் நிபந்தனையிலிருந்து, தொழிலாளர்களுக்கு விதி விலக்கு அளிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு இருந்த இந்த இடர்ப்பாட்டை அரசு அகற்றியது. இப்போதுள்ள நிலவரத்தின்படி தொழிலாளர்கள் ஆணை நகலை இலவசமாகப் பெற இயலும்.

(3) 100 அல்லது அதற்கு மேல் தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே தொழில் நியமனச் (நிலை ஆணைகள்) சட்டம் பொருந்தும் என்பதை மாற்றி, ஐம்பது தொழிலாளர்கள் பணி புரியும் தொழிற்சாலைகளுக்கும் நியமன (நிலை ஆணைகள்) பொருந்துமாறும் அதன் பயன் தொழிலாளர்களுக்குக் கிடைக்குமாறும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(4) ''தொழிலாளர் ஒருவர் தொடர்ச்சியாக 8 நாட்களுக்கு மேல் வேலைக்கு வராதிருந்தால் அவரை வேலையிலிருந்து நீக்கிவிடுவதற்கான மாதிரி நிலையாணைகள் அல்லது




சான்றிட்ட நிலையாணைகளில் உள்ள விதித்துறை நீக்கப்பட வேண்டும் என்றும், அவர் வேலைக்கு வராதிருந்த நாட்கள் தவறான நடத்தை என்று மட்டுமே கருதப்பட்டு, தன்னிலை விளக்கம் அளிக்க அவருக்குப் போதிய வாய்ப்பு அளித்த பிறகு விசாரிக்கப்பட வேண்டும். இக்கருத்துக்குச் செயல் வடிவம் அளிக்கும் வகையில் அரசு மாதிரி நிலையாணைகளைத் திருத்தி, வெளியிட்டுள்ளது.

(5) தமிழ்நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையோர் ஊதியக் கொடைப் பயனைப் பெறும் வண்ணம் ஊதியக் கொடை வழங்குவதை கடைகள், நிறுவனங்கள், மோட்டார்ப் போக்குவரத்து, நிறுவனங்கள், சிறு தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் சட்டப்படி நீட்டிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தீர்மானித்தது, 20 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும் ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறையாமலும் உள்ள நிறுவனங்களுக்கு ஊதியக்கொடை வழங்கல் சட்டத்தின் விதித் துறைகள் பொருந்தத் செய்யப்பட்டுள்ளன.

(6) தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய பணி விவரங்களைப் பதிந்து கொடுக்க (டயம் கார்டு—பணி சீட்டு அல்லது அடையாள அட்டை) கொடுப்பதற்காகத் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. இந்த அட்டையைக் காண்பித்துத் தற்காலிக மற்றும் காஷுவல் தொழிலாளர்கள் பணிக்கொடை மற்றும் வைப்பு நிதிச் சட்டங்களின் கீழ், தங்களுடைய சலுகைகளையும் உரிமைகளையும் பெற முடியும்.

(7) குறைந்த பட்ச ஊதியம் மட்டுமே கொடுக்கக் கூடிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குத் தேசிய விடுமுறைகள் பண்டிகை விடுமுறைகள் ஊதியத்துடன் வழங்குவதற்கான ஆணை பிறப்பித்துள்ளது.

**குறைந்தபட்ச ஊதியம்**

(8) இந்த அரசு முதல் முறையாகக் கீழ்க்கண்ட தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்துள்ளது.

(அ) அச்சகங்கள்,

(ஆ) சந்தைகள், அங்காடிகள் மற்றும் விற்பனை நிலையங்களில் வேலை செய்யும் பாரம் தூக்கும் தொழிலாளர்கள்.

(இ) மோட்டார் வாகனத் தொழில்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் (ஆட்டோமொபைல் ஒர்க் ஷாப்)

கீழ்க்காணும் வேலை நியமனங்களுக்குக் குறைந்தளவு ஊதிய வீதங்களை இவ்வரசு திருத்தியமைத்துள்ளது:

(அ) தீப்பெட்டி, பட்டாசுத் தயாரிப்புத் தொழிலில் வேலை.

(ஆ) செங்கல் - ஓடுகள் தயாரிப்புத் தொழிலில் வேலை.

(இ) சவ்வரிசித் தொழிலில் வேலை.

(ஈ) உப்பளங்களில் வேலை.

(உ) மோட்டார் போக்குவரத்தில் வேலைவாய்ப்பு.

(ஊ) பீடி சுற்றும் வேலை.

கீழ்க்காணும் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்ய அரசுக்கு இயலும் வகையில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன:

(அ) தேயிலை வாங்கி, தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை.

(ஆ) அரசு மருத்துவமனைகள், தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள்,



மருந்தகங்கள் அல்லாத ஏனைய மருத்துவ மனைகள், தனியார் மருத்துவமனைகளில் வேலை.

(இ) வீட்டிற்கு வேண்டிய தட்டுமுட்டுப் பாத்திரங்கள் செய்தல்.

(ஈ) வெளுத்தல், சாயம் தோய்த்தல் முதலிய பணிகள்.

(உ) தையல் தொழில்.

(9) தமிழ்நாட்டில் மிகப் பெருமளவில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு அளிப்பதற்காக ஒரு சிறப்புக்குழுவை அமைத்துள்ளது.

(10) இவ்வரசு கைத்தறித் தொழிலாளர்களுக்கான தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) என்கின்ற சட்ட முன்வடிவு ஒன்றினைத் தயாரித்துள்ளது. இச்சட்டத்தில் சரத்துக்கள் சட்டமன்ற மற்றும் மேலவையின் உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

(11) கடைகள், நிறுவனங்கள், உணவு விடுதிகளின் பெயர்ப் பலகைகள் தமிழில் எழுதிவைக்க உத்தரவிடப்பட்டு, சம்பந்தப் பட்ட சட்ட விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

(12) தமிழ்நாடு உணவுவிடுதிகள் சட்டத்தின் கீழ், வழக்குகளில் அழைப்பாணை இடும் அதிகாரம் உரிய அதிகாரிக்கு வழங்கச் சட்டத் திருத்தம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**உயர்மட்டக் குழு அமைப்பு**

(13). இந்தியாவிலேயே முதல்முறையாகத் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் சட்டமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்றினை அமைத்து, தொழிலாளர் சட்டங்களைத் திருத்தி அமைக்க உள்ளது. அந்தக் குழு கீழ்க்கண்ட சட்டங்களில் திருத்தம் வேண்டிப் பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அப் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.





(அ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்.

(ஆ) தமிழ்நாடு உணவு விடுதிகள் சட்டம்.

(இ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம்.

(ஈ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம்.

(உ) ஊதியம் பட்டுவாடாச் சட்டம், மற்றும்—

தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் தகுதி வழங்குவது பற்றிய சட்டமுன் வரைவு

பெருமளவில் பாதிப்புகள் ஏற்படும் தொழில் தகராறுகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கு ஆலோசனை கூறும் வகையில் இவ்வரசு தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக்குழு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது.

**துணைக் குழுக்கள்**

மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் காகிதம் சிமெண்ட் துணி ஆலை மற்றும் பொறியியல் ஆகிய தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையைப் பற்றி ஆராய்வதற்காகத் துணைக் குழுக்களை ஏற்படுத்தி உள்ளது.

1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சட்டமன்றப் பேரவையில் தொழிலாளர் நல அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க தொழில்துறை அலுவலர்கள் தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தொழில் நடுவர் நீதிமன்றங்கள் முன்னிலையில் தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர்சார்பாகத் தொழிலாளர் சட்டங்களின்படி, தாக்கல் செய்யப்படும் மனுக்களில் நீதிமன்ற கட்ட முத்திரைத்தாள்

# 58-க்கு வாழ்த்து

தலைமைச் செயலகப் பணியிலிருந்து, 55-வயது ஒய்வு பெறும் காலக்கட்டத்தைத் தொட்டுவிட்டதால், நான் 30.4.79-ல் பதவியிலிருந்து விலகி ஒய்வு பெற்றிருக்க வேண்டும், கடந்த 34 ஆண்டுக் காலத்தில் நான் 6 ஆண்டுக்காலம் சார்புச் செயலாளராகவும் 3 ஆண்டுக்காலம் துணைச் செயலாளராகவும் பணியாற்றி வந்தேன்.

அன்புக் கடலாகத் திகழும் முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு அரசு, 25.4.79 முதல், ஒய்வு பெறும் வயதை 55லிருந்து 58ஆக உயர்த்தியது எனக்கு விண்ணிலிருந்து என் மடியில் விழுந்த பொற்குவையாகும்.

ஒய்வுபெறும் வயதின் விளிம்பிலே தொங்கிக் கொண்டிருந்த என்போன்ற அரசு அலுவலர்களுக்கு இந்த ஆணை பெரிதும் பயன் தரக்கூடியதாகும். எங்களைப் போன்ற அலுவலர்கள் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்திலே, திருமணம் போன்ற பல குடும்ப பாரங்களினால நெருக்குண்டிருந்தோம்.

இந்தக் கருணை வடிவான முடிவை என்னைப் போன்ற எல்லா அலுவலர்களும் மகிழ்வுடன் வரவேற்பார்கள். மீண்டும் 3 ஆண்டுகளுக்குப் பணியாற்றும் வாய்ப்பினைத் தந்து அதன் வாயிலாக அரசு அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும், பணியாளர்களுக்கும் இந்த நன்மையைச் செய்த முதல்வர் அவர்களுக்கு நெஞ்சு நிறைந்த பெரு மிதத்துடன் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—என். பி. சதாசிவம்,
அரசு துணைச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும்
வேலைவாய்ப்புத் துறை,
சென்னை-600 009.

ஒட்ட வேண்டியதில்லை என்று, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**நிர்வாகிகள் — தொழிலாளர் சிறப்புப் பரிசுகள்**

நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம், நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில் உறவைப் பராமரிக்கவும் அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் அரசு சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் 1978-ஆம் ஆண்டிலிருந்து பரிசு பெறுவதற்கான திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

தொழிலாளர் நல ஆணையரின் பொறுப்பின் கீழ் இயங்கி வந்த தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனத்தை, அரசு, ஒரு தனித் துறையாக அமைத்து, அதன் தரத்தை உயர்த்தியுள்ளது. இந்நிறுவனம் தற்போது ஆற்றிவரும் பணிகளுடன், தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் தொழிலாளர் சட்ட நூலை தமிழில் வெளியிடும் பணியையும், பல்வேறு தொழிலாளர் சட்டங்களையும் நீதிமன்ற முடிவுகளின் மீதான குறிப்புரையுடன் தமிழில் வெளியிடும் பொறுப்பையும் இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. தொழிலாளர் சட்ட நூல் 'உழைப்பவர் உலகம்' என்கின்ற பெயரில் தமிழில் மாதம் இருமுறையாக வெளியிடப்படுகின்றது.

தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம் ஏற்பாட்டில் தொழிலாளர்கள் தங்குவதற்கான விடுமுறை ஒய்வு இல்லம் ஒன்றினை நிறுவியுள்ளது. இவ்வாரியம் இதேபோன்று மாமல்லபுரம், குற்றாலம் போன்ற இடங்களிலும் ஒய்வு இல்லங்கள் நிறுவத் தீர்மானித்துள்ளது. இவ்வாரியம் தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்குத் தனியாக 26 படுக்கைகள் கொண்ட காச நோய்ப் பகுதியைக் கட்டியுள்ளது. இவ் வாரியம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்களை நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காகச் செய்தித்தாள்கள், வார, மாதாந்திர இதழ்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் இவ் வாரியம் தொழிலாளர்களுக்காக மாவட்ட மண்டல மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசினை அளிக்கின்றது.

**கல்விச் செல்வம்' அனைவருக்கும் கிடைப்பதற்காகப் பல்வேறு பயனுள்ள பணிகளை ஆற்றி, பெருந்தொகையைச் செலவிட்டு, புதிய வரலாற்றை உருவாக்கி வருகிறது அரசு.**

தமிழ்நாட்டில் தற்போது 36,000 பள்ளிகள் உள்ளன. ஆசிரியர்கள் எண்ணிக்கை 2.5 இலட்சமாகும். பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 85 இலட்சம் ஆகும்.

தமிழ்நாட்டு அரசு பட்ஜெட்டில் 25 விழுக்காடு கல்விக்குத்தான் ஒதுக்கப்படுகிறது. 1960 ஆம் ஆண்டிலிருந்து கல்விக்காகச் செலவிடப்பட்டு வந்துள்ள தொகை எந்த ஆண்டிலும் 22 சதவிகிதத்திற்கு மிகவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் கல்விச் செலவு 25 விழுக்காட்டை எட்டியது. 1979-80 பட்ஜெட்டில் மொத்தம் ரூ. 849 கோடியில், கல்விக்கு மட்டும் ரூ. 209 கோடி செலவாகும்.

**பள்ளிக்கல்வி**

1977-78லிருந்து பள்ளிகளுக்காக ஆண்டுதோறும் தோராயமாக 1500 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பள்ளிகளில் பல்வேறு வகுப்புகளில் உள்ள பாடச்சுமை கல்வி வல்லுநர்களைக் கலந்து மாணவர்களின் தகுதிக்கு ஏற்ற வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் இடையில் நின்றுவிடாமல் படிக்க வகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் 1977-78 முதல் 1-3 வகுப்புகளில் மாணவர்கள் எவரும் தோல்வியுறச் செய்யப்படாமல் அனைவரும் மேல்வகுப்பிற்கு அனுப்பப்படுகின்றனர்.

அறிவியல் கல்வி போதனையின் தரத்தை உயர்த்த ஆண்டுதோறும் சில உயர்நிலைப் பள்ளிகளுக்கு, பள்ளிக்கு ரூபாய் 55 ஆயிரம் வீதம் அறிவியல் ஆய்வுக் கூட மானியம் வழங்கும் திட்டம் செயல்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 75 பள்ளிகள் பயன் பெற்றன. 1979-80ல் 25 பள்ளிகள் பயன்பெறும். 77-78ல் 'இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகள்' 6 வாங்கப்பட்டன. உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்கள் வழங்கவும் மானியம் தரப்படுகிறது.

பள்ளிகளுக்குக் கட்டட வசதி செய்ய, கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தற்போது அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள கட்டட வசதிகள், நூலக வசதிகள், ஆய்வுக் கூட வசதிகள் ஆகியவை பற்றி விரிவான கணக்கு எடுக்கப்படும். இதனடிப்படையில் வசதிகள் மிகக் குறைவாக உள்ள பள்ளிகளுக்கு உடனடி



# வளரும் கல்வித் துறை



யாக வசதிகள் செய்து தரவும் படிப்படியாகமற்றஎல்லாப்பள்ளி களுக்கும் எல்லா வசதிகள் பெறு மாறு திட்டங்கள் வகுக்கவும் இயலும். நிரந்தரக் கட்டடம் ஏதும் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளுக்கு வரும் ஆண்டில் உட னடியாக ஒரு நிரந்தரக்கட்டடம் மேலும் கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்படும்.

### மாணவர் நலன்

எஸ்.எஸ்.எல்.சி. பயிலும் மாணவர்கள், மேல் வகுப்புக்குச் செல்ல வேண்டுமென்றால் எஸ். எஸ்.எல்.சி. தேர்வுக்குரிய எல் லாப் பாடங்களிலும் ஏககாலத் தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை முன்னர் இருந்தது. இவ்வரசு இதனைப் பரிவோடு ஆய்வு செய்து 'கம்பார்ட்மென் டல்' முறையை அமல் செய் துள்ளது. இம்முறையின் கீழ், பாடம் பாடமாக எஸ்.எஸ். எல்.சி. யில் தேர்வு பெறுபவர் களும் மேற்படிப்புக்குச் செல்ல லாம்.

முறையாகப் பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர் நன்மைக் காக ஈ.எஸ்.எல்.சி. தேர்வை 79 டிசம்பர் முதல் மீண்டும் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. 14 வயது முடிந்தவர்கள் இத் தேர்வை எழுதலாம்.

16 வயது முடிந்தவர்கள் ஏற் கெனவே எட்டாவது தேறியி ருந்தால் தனிப்பட்ட முறையில் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

கிராமப்புற மாணவர்களுக் கான படிப்புதவித் திட்டத்தின் கீழ் இதுவரை தமிழ்நாட்டி லுள்ள 374 ஊராட்சி ஒன்றியங் களிலும் ஒன்றியத்துக்கு ஆண் டுக்கு 2 மாணவர்களுக்கு மட் டுமே புதியதாகப் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வந் தன. 1978-79 லிருந்து ஒவ் வொரு ஒன்றியத்திலும் இப் படிப்புதவித் தொகையைப் புதி தாகப் பெறும் மாணவர் என் ணிக்கை இரட்டிக்கப்பட்டது. அதாவது 2லிருந்து 4 ஆக உயர்த் தப்பட்டது.

பள்ளிப்பாடப் புத்தகங்கள் தவக்கமில்லாமலும் தடங்கலில் லாமலும் எல்லா மாணவர்களுக் கும் உரிய காலத்தில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மலிவு விலைக் காகிதத்தால் செய் யப்பட்ட நோட்டுப் புத்தகங்கள் நல்ல முறையில் மாணவர்களுக் குக் கிடைக்கும் வண்ணம் தற் போதுள்ள முறையினை மாற்றி பாடநூல் நிறுவனத்தின் மூலம் கிடைக்க வகை செய்யப்படு கிறது.

ஆங்கிலோ-இந்தியப் பள்ளி களில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்க வேண்டாம் என்ற புதிய சலு கையை இவ்வரசு அமல் படுத்தி உள்ளது.

மைய சமையற்கூடத் திட்டம் இராமநாதபுரம், தர்மபுரி மாவட் டங்களுக்கும் விரிவாக்கப்பட்டு அம் மாவட்டங்களிலும் தொடக் கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் மேம்படுத்தப்படும்.

### பள்ளி ஆசிரியர் நலன்

1973ல் ஊதிய உயர்வு கேட் டுப் போராட்டம் நடத்திய ஆசிரி யர்களிடத்தில் முந்தைய அரசு கொடுமையாக நடந்ததுடன் மன்னிப்புக் கடிதங்கள் தருமாறு ஆசிரியர்களை வற்புறுத்தியது. இந்த அரசோ அந்த ஆசிரியர் களின் மன்னிப்புக் கடிதங்களை ரத்து செய்து ஆணையிட் டுள்ளது.

செகண்டரி கிரேடு தகுதி பெற் றிருந்தும் ஹையர் கிரேடு ஆசிரி யர் பதவிகளில் பணி செய்து வந்த ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் 3,000 ஹையர் கிரேடு பதவிகள் செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. இனி இவ்வாறு இத்தகைய பதவி களை செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தும் சலு கையை ஆண்டுதோறும் செப் டம்பர் முதல் தேதி முதல் வழங் கிட நிலையான ஆணை வெளி யிடப்பட்டுள்ளது.

நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நிரந்தரமாகக் காலி ஏற்படும் போது அந்தப் பணியிடங்கள் கீழ்க்கண்ட வகையில் நிரப்பப் படும் என ஆணையிடப்பட்டுள் ளது.





குறிப்பிட்ட நடுநிலைப் பள்ளி அல்லது அந்தப் பள்ளியை நடத்தும் நிர்வாகத்தில் உள்ள மற்ற பள்ளிகள் இவற்றில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் களோ அல்லது முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களோ இருந்தால் அவர்களில் பணி மூப்பு உடைய வரை இந்தப் பள்ளியில் தலைமை ஆசிரியராக நியமித்து அவ ருக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதி யம் வழங்கப்படும்.

பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ முதல் நிலைத் தமிழாசிரியர்களோ நடு நிலைப்பள்ளித் தலைமை ஆசிரிய ராகப் பணிபுரிந்து அவர் இடை நிலை ஆசிரியர் ஊதியம் தற் போது பெற்று வந்தால் அவர்கள் அனைவருக்கும் 1.9.79 முதல் பட்டதாரி ஆசிரியர் ஊதி யம் வழங்கப்படும். இந்த முறை யில் தற்போது தலைமை ஆசிரி யராக இருப்பவர்கள் இவ்வாறு வருங்காலத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியராகவோ முதல்நிலைத் தமிழ் ஆசிரியரா கவோ தங்கள் தகுதியை உயர்த் திக் கொள்ளும்பொழுது ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் முதல் தேதி இவ்வாறு அவர் களின் பதவி பட்டதாரி ஆசிரியர் நிலைக்கு உயர்த்தப்படும்.

நடுநிலைப் பள்ளியிலோ அந்தப் பள்ளியின் நிர் வாகத்தின் கீழோ பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் அல்லது முதல் நிலைத் தமிழாசிரியர் அங்கு பணியில் இல்லாதபோது காலியா கும் நடுநிலைப்பள்ளித் தலைமை யாசிரியர் பணியிடத்தை முதல்நிலைத் தமிழ் ஆசிரியர் களைக் கொண்டு நிரப்பி அவ ருக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும்.

ஆண்டுதோறும் பள்ளிகள் வேலை செய்ய வேண்டிய மொத்த வேலை நாட்களைக் கணக்கிடும்போது தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களையும் பள்ளி வேலை நாட்களாகக் கருத வேண்டும் என ஆணை யிடப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் பள் ளிக்கு 750-ம் அதற்கு மேலும் மாணவர் எண்ணிக்கை உள்ள பள்ளிகள் அனைத்திலும் அந் தந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர் களில் பி.டி. சம்பளம் பெறும் ஆசிரியர்களுள் பணி மூப்பு மிகுதி யாக உடையவர் உதவித் தலை மையாசிரியர் என அறிவிக்கப் பட்டு அவருக்கு மாதம் ரூ 25 சிறப்பூதியம் வழங்கப்படும். ஒரு பள்ளியில் உதவித் தலைமை ஆசிரியராகப் பணி செய்யும் கார ணத்தை மட்டுமே அடிப்படை யாகக் கொண்டு உதவித் தலை மையாசிரியர் எவரும் தலைமை ஆசிரியராக நியமனம் பெற உரிமை கொண்டாட இயலாது.

அரசு ஊழியர்களைப் போல இனி ஆசிரியர்களும் பள்ளிக் கல் வித் துறையின் கீழ் உள்ள பிற அலுவலர்களும் தங்களுடைய பணிப்பதிவேட்டின் மறுபிரதி ஒன்றைத் தாங்களே வைத்து வர அனுமதிக்கப்படுவார்கள். அதி காரப் பூர்வமான பணிப்பதிவேட் டில் பதிவுகள் செய்யும் அதி காரியே பணிப் பதிவேட்டின் மறு பிரதியிலும் பல்வேறு பதிவு களுக்குக் கையொப்பம் இட்டுத் தருவார். எந்தக் காரணத்தி னாலாவது மூலப் பணிப் பதிவேடு காணாமல் போய்விட்டால் பணிப்பதிவேட்டின் மறு பிரதி யின் அடிப்படையில் ஓய்வு ஊதி யம் வழங்கப்படும்.

ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதி யம் வழங்குவதில் ஏற்படும் கால தாமதங்களைத் தவிர்ப்பதற்காக நடைமுறைகள் திருத்தி அமைக் கப்படும். ஓய்வு ஊதியம் அனு மதிப்பதோடு அதைப் பெறுவதற் கான ஆணைகளையும் மாவட்டக் கல்வி அலுவலர்களே வழங்கிட வகை செய்யப்படும்.

20 ஆண்டுப்பணி முடித்தவர்கள் தாங்கள் விரும்பினால் ஓய் வூதியத்துடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்ட சலுகை தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகள், கல்லூரிகள் போன்ற வற்றில்பணி ஆற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் பொருந்து மெனத் தெளிவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையில் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என இரண்டு பிரிவுகள் பல ஆண்டுகளாக இருந்து வந்தன. அவற்றை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை முந் தைய அரசு கவனிக்கவில்லை. இவ்வரசு இப்பிரச்சனையை நன்கு ஆராய்ந்து இரண்டு பிரிவு களையும் நியாயமான முறையில் ஒருங்கிணைக்க ஆணை வெளியிட் டுள்ளது.

**நாவடக்கம்**

**தேவை!**

*பலாத்காரமான பேச்சே பல சமயங்களில் பலாத் காரச் செயல்களைவிட அதிகமான தீமைகளை விளைவித்துவிடக்கூடும்!*

—அண்ணல் காந்தி

அரசுப் பள்ளிகளில் முந்தைய அரசுக்காலத்தில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி.டி. ஆசிரியர்கள் முதல் நிலைத் தமிழாசிரியர்கள் ஆகியோர் பல ஆண்டுகளாகப் பணி வரன்முறை செய்யுமாறு கோரிவந்துள்ளனர். அவர்களுக்காகத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு மூலம் தனியாக ஒரு சிறப்புத் தேர்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தேர்வு முடிந்ததும் அவர்களுடைய பணியை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1.4.70க்குப் பின் நியமிக்கப் பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுள் முழுத் தகுதி பெற்றவர்கள் அனைவருடைய நியமனங்களும் அவரவர் நியமன நாள் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு, ஊதிய உயர்வு நிலுவைத் தொகைகளும் வழங்கப்படும்.

சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்து எடுத்து நியமனம் செய்ய வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளைத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச் சாதியினருக்கு ஒதுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

தனியார் பள்ளி நிர்வாகங்கள் சிலவற்றால் முறைகேடான வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரை மீண்டும் பணியில் சேர்க்குமாறு பள்ளிக் கல்வித் துறை ஆணையிடும் பொழுது அவ்வாணைகளைச் சில நிர்வாகங்கள் செயல்படுத்த மறுக்கும் வருந்தத்தக்க நிலை இருந்து வந்துள்ளது. இனி அவ்வாறு மறுத்தால் அத்தகைய பள்ளிகளில் உள்ள பணியாளர்களுக்கு அரசே நேரடியாகச் சம்பளம் வழங்க வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிற பணியாளரை அவர் பள்ளியிலிருந்து, கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிற பள்ளிகளுக்கு அவர் பதவியோடு சேர்த்து மாற்றிவிடவும், ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தனியார் பள்ளி ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்பில் அரசு இடையறாத நாட்டம் செலுத்தி வருகிறது.

சென்னையில் ரூ. 10 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் கட்ட அனுமதி தரப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் குழந்தைகளுக்குத் தொழில் படிப்புப் படிக்க ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் வழங்கும் திட்டம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அத்தொகையின் மதிப்பு ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 500ஆகும்.

<u>மேல் நிலைப் பள்ளிக் கல்வி:—</u>

பத்தாண்டுக் கல்வி முறையைப் பள்ளிகளில், அமலாக்குவதற்கு முந்தைய அரசு 1972-73-ல் ஆணையிட்டு இருந்தாலும் கூட 10+2+3 என்ற கல்வி முறையில் இந்த அரசு, முக்கியமான தீர்வு கான தனிக் கவனம் செலுத்தியதோடு நிலையான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. கிராமப்புற வளர்ச்சியை மனத்தில் கொண்டு, கல்வித் துறை நிபுணர்களைக் கலந்து ஆலோசித்து— 10+2+3 முறைக் கல்வியில் 2 வது நிலை, பள்ளிகளிலேயே இருக்க வேண்டும் என அரசு ஆணையிட்டது. 1978-79ல் 912 உயர்நிலைப் பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டன. அவ்வகுப்புகளில் 1,14,000 மாணவ மாணவியர் பயின்றனர். 1978 மார்ச்சில் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய 1,08,000 மாணவர்களில் 78,000 பேர் மட்டுமே கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 1978-79ல்சேர்ந்தார்கள். ஆனால் 1978-மார்ச்சில் நடந்த 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சியில் தேறிய 1,16,000 மாணவர்களுள் 1,14,000 பேர்கள் மேல் நிலைப்பள்ளிவகுப்பில்1978-79ல் சேர்ந்தனர். உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கு மேலான தரத்திலுள்ள கல்வி வசதியானது, மேல் நிலைப் பள்ளிக் கல்விமுறை அமலுக்கு வந்ததன் காரணமாகச் சமுதாயத்தின் பல பிரிவினருக்கும் மிகப் பரவலாகக் கிடைத்திருக்கிறது. என்பது இதிலிருந்து தெளிவாகும். மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 1,14,000 பேர்களுள் 24,400 பேர் தொழில் படிப்புப் படிக்கின்றனர் என்பது மேலும் மன நிறைவு அளிப்பதாகும். மேல்நிலைப் பள்ளிகளில் தமிழிலோ சிறுபான்மை மொழிகளிலோ பயிலும் மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை என்ற சலுகையையும் இவ்வரசு தந்துள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளுக்கான பல்வேறு வசதிகளைச் செய்ய இவ்வரசு மிகத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. 1978-79-ல் மேல்நிலைப் பள்ளிகளுக்காகச் சுமார் 1,400 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 1979-80ல் 1740 பதவிகள் ஏற்படுத்தப்படும். அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகளும் ஆய்வுக் கூடங்களும் மொத்தம் சுமார் 6.40 கோடி ரூபாய் செலவில் கட்டித் தரப்படுகின்றன. அப்பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்களுக்காக ரூ2 கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது. தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வுக் கூடம் ஆகியவற்றிற்கு 40 விழுக்காடு அரசு மானியம் வழங்கும செலவுக்காக 79-80 பட்ஜெட்டில் ரூ. 1.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் ரூ. 37 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.





மேல் நிலைப் பள்ளிகளில் பல்வேறு தொழிற்பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன. 709 பள்ளிகளில் தொழிற்பாட வகுப்புகள் உள்ளன. 24,400 பேர் தொழிற்பாடங்களை பயிலுகின்றனர். அனைத்திந்தியாவிலேயே மேல்நிலைப்பள்ளி நிலையில் தொழிற்பாடங்களைக் கற்றுத் தருவதில் தமிழ்நாடு முதன்மை பெற்றுள்ளது. இதனை மைய அரசு கல்வி அமைச்சர் உட்பட அனைவரும் பாராட்டி உள்ளனர்.

## முதியோர் கல்வியும் பள்ளிசாராக் கல்வியும்

முதியோர் கல்வி வளர்ச்சிக்கு முந்தைய அரசு சரியான அக்கறை காட்டவில்லை. இவ்வரசு முதியோர் கல்விக்கும், பள்ளி சாராக் கல்விக்கும் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

6 - 14 வயதுச் சிறுவர் சிறுமியருள் பள்ளியிலேயே சேராதவர்களும், சேர்ந்து ஓரிரு ஆண்டு படித்துவிட்டு நின்று விட்டவர்களும் சமுதாயத்தில் மிகுந்த வறுமையால் வாடும் பிரிவினைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் முறையான பள்ளிகளில் உள்ள வசதிகளை நன்கு பயன்படுத்த இயலாது. எனவே, 11-14 வயதினர் அனைவரையும் பள்ளிகளில் சேர்க்க வேண்டுமாயின் அவர்களுக்கு இசைந்த மாற்றங்களைக் கொண்ட முறை தேவை. அதாவது பாடத்திட்டம், பயிற்சி முறை, படிக்க வேண்டிய மொத்தக் காலவரம்பு, நாள்தோறும் பயிற்றுவிக்கும் நேரம் ஆகிய அனைத்திலும் மாற்றங்களைக் கொண்ட முறை தேவை. பள்ளி சாராக் கல்வி மையங்கள் அவர்களுக்கு இவ்வசதிகளைச் செய்கின்றன. அம்மையங்களைப் பள்ளி சாராக் கல்வித் துறை 76-77ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்துக்கு ஒன்று வீதம் முதலில் தொடங்கியது. இம் மையங்களில் எண்ணிக்கை 1977-78ல் 2 ஆகவும், 1978-79ல் 4 ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்பொழுது 1496 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையம் ஒவ்வொன்றும் 3 ஆண்டு வேலை செய்யும் 10 மாத வகுப்புகள் மூன்றை நடத்தும். ஒவ்வொரு 10 மாத வகுப்பிலும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்குப் பயிற்விக்கப்படும். இம் மையங்கள் அனைத்திலும் இப்பொழுது பயில்வோர் சுமார் 45,000 பேர் ஆவர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்கள் பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் நாள்தோறும் சுமார் 2 மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 மதிப்பூதியம் பெறுகின்றனர்.

மேற்சொன்னவாறு அரசு நடத்தும் பள்ளி சாராக் கல்வி மையங்கள் தவிர, ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து சுமார் 780 பிற ஊர்களில் பள்ளி சாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன.

முதியோர்களுக்கு எழுத்தறிவிப்பதற்காக 780 முதல் கிராமப்புறங்களில் சுமார் 5,000க்கு மேற்பட்ட முதியோர் கல்வி மையங்கள் பல்வேறு அமைப்புகளின் கீழ் தொடங்கி நடத்தப்படும். அரசுக்கு முதியோர் கல்வி பற்றி ஆலோசனை கூற முதியோர் கல்விக்கான மாநில வாரியம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## கல்லூரிக் கல்வி

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கல்லூரிக் கல்விக்குச் செலவிடும் தொகை இருமடங்காகி உள்ளது. கல்லூரிக் கல்விக்கு செலவான தொகை 1975-76ல் ரூ 10 கோடி, 76-77ல் ரூ. 12 கோடி, 77-78ல் ரூ. 19கோடி 78-79ல் ரூ.24 கோடி, 79-80ல் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 22 கோடி.

பல்கலைக் கழக மானியக் குழு 1974 ஆம் ஆண்டிலேயே கல்லூரி ஆசிரியர் சம்பளங்களை உயர்த்த அப்போதைய அரசை அணுகியிருந்த போதிலும் அவ்வரசு அப்பிரச்சனையை, கவனிக்காமல், ஆசிரியர்களின் கிளர்ச்சிக்கு வழிவகுத்து வந்தது. இவ்வரசு பொறுப்பெற்றவுடன் பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய விகிதங்களை 1.4.1974 முதல் அமல் படுத்தியும் 1.1.1977 முதல் பணப்பயன் வழங்கியும் ஆணைகளை வெளியிட்டு அமல் படுத்தியுள்ளது.

திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயமுத்தூரில் ஒன்றுமாக இரண்டு புதிய பல்கலைக் கழகங்களைத் தொடங்க இவ்வரசு முனைப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது.

1979-80 முதல் கோயமுத்தூரில் ஒன்றும் திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக இரண்டு புதிய சட்டக் கல்லூரிகள் தொடங்கப்படும்.

கல்லூரிகளுக்கு சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ் நாடுதான். சென்னைப் பல்கலைக் கழகத்

தின் கீழ் உள்ள 6 கல்லூரிகளும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள 4 கல்லூரி களும் ஆக மொத்தம் 10 கல்லூரி களுக்கு இவ்வுரிமை தரப்பட்டுள் ளது. இதன் மூலம் அக்கல்லூரி கள் கல்வித் தரத்தை உயர்த்த பாடுபட வகை செய்யப்பட்டுள் ளது.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங் குடி மாணவர்களுள் பள்ளிஇறுதி வகுப்புத் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப் பெண் பெறுபவர்களுக்கும், புகு முக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெறுபவர்களுக்கும் ரூ. 300 உதவிப் பணம் வழங்கப் படுகிறது. அப்பிரிவினரைச் சார்ந்த கிறித்தவர்களுக்கும் இவ் வுதவிப்பணம் உண்டு. பெற்றோர் வருமானம் எவ்வளவாயிருப் பினும் இவ்வுதவிப்பணம் உண்டு. அவர்கள் தாம் விரும்பும் மேற் படிப்பை மேற்கொள்ள இது அவர்களுக்கு உதவும். தாழ்த்தப் பட்ட சாதியினர், பழங்குடிகள் என்ற வகையில் அவர்களுக்குக் கிட்டும் மற்ற எல்லாச் சலுகை களுக்கும் புண உதவிகளுக்கும் மேலாக இந்த ரூ. 300 உதவி கிட்டும்.

1977-78-ஆம் ஆண்டிலிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் அரிசன வகுப்பினர், மலைச் சாதியினர் ஆகியோருக்கு (அவர் களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் பற்றிக் கருதாமல) முழுச் சம்பளச் சலுகை அளிக் கப்பட்டு வருகிறது.

கல்லூரிகளில் பட்டப்படிப்பு முதலாண்டு வகுப்பில் சேர்ந்து விட்ட மாணவர்கள் பின், பொறி யியல், மருத்துவம் முதலிய கல் லூரிகளில் சேருவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக் காகவோ கலைக் கல்லூரியை விட்டு முதல் பருவம்/முதல் 6 மாதம் முடிவதற்குள் விலகிச் சென்றால் அவர்கள் கலைக் கல் லூரியில் கட்டிய கட்டணத்தில் முதல் பருவம்/6 மாதக் கட்டணம் தவிர மீதியை அவர்களுக்குத் திருப்பித் தந்துவிட வேண்டு மென கல்லூரிகளுக்கு ஆணையி டப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக மானியக்குழு சம்பள வீதங்களை அமல் படுத் தியதோடு அல்லாமல் கல்லூரி ஆசிரியர் நலனுக்காக அரசு வேறு பல நடவடிக்கைகளையும் எடுத் துள்ளது.

1.12.1977 அன்று மூன்றாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள், பயிற்றுநர்கள் ஆகியோருள் அவ ரவர் துறையில் பட்ட மேற் படிப்பு (எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம். காம் போன்றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல் லாம் 1.12.77 முதல் துணைப் பேராசிரியர்கள், பதவி அளிக்கப் பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது. இனிமேல் இந்தத் தகுதிகளை (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும், பட்ட மேற்படிப்புத் தகுதியும்) பெறுபவர்களுக்கும் இந்தச் சலுகை அவரவர் அத் தகுதியை அடையும் நாள் முதல் கிடைத்துவரும்.

## நல்வழி!

*மக்களை நல்வழிப்படுத்த இயக்கம் நடத்துகிறவர் கள், முதலில் நாம் நலவழி யில் நடக்கிறோமா என் பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும்!*

—பேரறிஞர் அண்ணா



பட்ட மேற்படிப்புக் கல்லூரி முதல்வருக்கு ரூ. 1200 -1900 என்ற சம்பள விகிதம் அளிக்கப் பட்டுள்ளது.

கலைக் கல்லூரிப் பேராசிரியர் களுக்கும் பொறியியற் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் ரூ.700 -40 - 1100-50-1300 இ.பி 50- 1600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1100 தொடக்க அடிப்படைச் சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள் ளது.

தனியார் கல்லூரி ஆசிரியர் கள் முழுமையாகவும் காலத்தாழ் வின்றியும் சம்பளம் பெற்று வர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கு மானி யம் வழங்கும் புதிய முறையை 1.6.77 முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. சம்பளம் வழங்கும் வகையில் அக் கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகர பற் றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது.

பணியிலிருக்கும் பொழுது ஒரு வர் இறந்து விட்டால் அவர் குடும்பத்திற்கு ரூ. 10,000 தர வகை செய்யும் குழு காப்புறுதித் திட்டம் தனியார் கல்லூரிகளுக் கும் விரிவாக்கப்படும். தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு விடுப்பு வசதிகளும் தாராளமாக் கப்பட்டுள்ளன. மருத்துவ விடுப்பு முன்னர் 12 மாதங்கள் எடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது 18 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

10+2+3 கல்வி முறையினால் கல்லூரி ஆசிரியர்கள் எவரும் பணி இழக்காதபடி அரசு நட வடிக்கை எடுத்துள்ளது.

கல்லூரிகளில் 31.3.77 அன்று பணியிலிருந்த எந்த ஆசிரியராயி னும் சரி அல்லது ஆசிரியரல்லாத பணியாளர் ஆயினும் சரி, பின் வரும் காரணங்களினால் அதா வது:—

(1) 1979-80ஆம் ஆண்டு முதல் புகுமுக வகுப்பு நீங்கி விடுவதால்

அல்லது

(2) கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர் வேலைப் பளு குறைவதால் பதவி இழக்க நேராதபடி பாதுகாப்பு அளிப்பதாக இவ்வரசு ஏற் கெனவே அறிவித்து இருந்தது. இதனை மேலும் விரிவாக்கி, பாட வகுப்புகள் மூடப்படுவதாலும் புதிய கல்வித் திட்டத்தை அமுல் படுத்துவதாலும் ஏற்படக்கூடிய வேலை நீக்கத்துக்கும் பாதுகாப்பு உண்டு என 1979 மார்சில் அறி விக்கப்பட்டுள்ளது. 31.3.1977 முதல் 26.2.1979 வரையுள்ள காலத்தில், கல்லூரிகளில் நிரந் தரமான பணியிடங்களில் நிய மிக்கப்பட்டவர்களுக்கும் இப் பாதுகாப்பு விரிவாக்கப்பட் டுள்ளது. இப்பாதுகாப்பைச் செயல்படுத்த பல்கலைக் கழகங் களுடன் கலந்து புதிய பாடவகுப் புகள் தொடங்குவது, சிறப்புப் பயிற்றுவிப்பு, வகுப்பில் மாண வர் எண்ணிக்கை குறைப்பு, கல் லூரி மையத்திட்டம், மேல் படிப் புக்குக் கல்லூரி ஆசிரியர்களை அனுப்புதல் முதலிய பல வழி முறைகளிலும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

தனியார் கல்லூரிகளில் முறை யின்றி வேலை நீக்கம் செய்யப் பட்ட ஆசிரியர்களை நிர்வாகம் கல்வித் துறையின் ஆணைக்கு ஏற்ப திரும்ப பணியில் அமர்த்தா விட்டால், சம்பந்தப்பட்டவர் களின் இசைவுடன் அந்த ஆசிரி யரை அவருடைய பதவியோடு வேறு ஒரு கல்லூரிக்கு மாற்ற கல்வி இயக்குநருக்கு அரசு அனு மதி வழங்கியுள்ளது.

### தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று தமிழ்நாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என்று முந்தையஅரசு பலமுறைசொல்லி வந்த போதிலும், இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயேஇந்தப் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்தி - சென்னையில் 'பேரறி ஞர் அண்ணா தொழிற் நுட்பப் பல்கலைக் கழக''த்தைத் தொடங்கியுள்ளது. கிண்டியி லுள்ள பொறியியல் கல்லூரி யில் இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. கீழ்க் கண்ட நிறுவனங்களும் அந்தப் பல்கலைக் கழகத்தின் அங்கங் களாகும்.



(1) சென்னை பொறியியற் கல்லூரி நிறுவனம், குரோம்பேட்டை.
(2) கட்டடக் கலை - நகர அமைப்புப்பள்ளி, சென்னை.
(3) சென்னையிலுள்ள அழகப் பச் செட்டியார் பொறியியற் கல்லூரியைச் சார்ந்த நெசவுத்தொழில் நுட்பம், தோல் தொழில் நுட்பம், ரசாயனப் பொறி யியல் ஆகிய துறைகள்.

1979-80ல் தருமபுரி மாவட் டத்தில் ஒரு பல்தொழில் நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) புதிய தாக நிறுவப்படும்.

திருச்சிராப்பள்ளியில் மைய அரசு உதவியுடன் ஜூலை 79 லிருந்து உணவுத் தொழில் கை வினைஞர்களைப் பயிற்றுவிப்ப தற்கான கல்வி நிலையம் ஒன்று (புட் கிராப்ட் இன்ஸ்டியூட்) தொடங்கப்பட இருக்கிறது.

பல்தொழில் நுட்பப் பயிலகங் கள் மூன்று, வரும் 1979-80ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புற விரி வுப் பணியைத் தொடங்க இருக் கின்றன.

### விளையாட்டு

பள்ளிகளிலும் கல்லூரிகளி லும் விளையாட்டு வசதிகளைப் பெருக்குவதில் இவ்வரசு நாட்டம் செலுத்தி வருகிறது. 1978-79- லிருந்து உயர்நிலைப் பள்ளிஉடற் பயிற்சி ஆசிரியர் ஒவ்வொரு வருக்கும் அந்தந்தப் பள்ளி விளை யாட்டுக் கட்டண நிதியிலிருந்து ஆண்டு தோறும் சீருடைப் படி யாக ரூ. 50 வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிப்பதற்கு என உடற்பயிற் சிக் களரிகளை சுமார் பதினைந்து பள்ளிகளில் தொடங்க ஏற்பளிக் கப்பட்டிருக்கிறது.

60 வயதிற்கு மேற்பட்டவர் களும் வறுமையில் வாடுபவர் களுமான விளையாட்டு வீரர்க களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கு வதற்கான திட்டத்தை இவ் வரசு முதன்முதலாக ஏற்படுத்தி யுள்ளது. அத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 75 வீதம் 1.4.1979 முதல் ஓய்வூதியம் பெறுவதற் குரிய 25 விளையாட்டு வீரர் கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள னர்:

1979 சனவரியில் முதன் முத லாக பாரத சாரண சாரணியர் அமைப்பின் தேசிய சம்போரி சென்னையை அடுத்த மறை மலை நகரில் கொண்டாடப் பட்டது. இந்த தேசிய விழா முதன்முதலாகத் தமிழ்நாட்டில் நடைபெற்றது. இதற்கு இவ் வரசு செய்திருந்த ஏற்பாடுகளை அனைவரும் பாராட்டினர்.

### தமிழ் வளர்ச்சி

மாநில அரசுத் துறைகள், அலு வலகங்கள் அனைத்தும் முழுவ தும் தமிழிலேயே செயல்படும் நிலையை வெகு விரைவில் கொண்டுவர வேண்டும் என்பது இவ்வரசின் கொள்கை. விதி விலக்களித்த இனங்களைத் தவிர மற்ற இனங்களுக்கு அரசு அலு வலகங்களில் தமிழையே வழக்கு யான வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இதனைச் செயல்படுத்த கணக்கம் காட்டும் அதிகாரிகள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

வறுமையில் உழலும் தமிழறிஞர்களுக்கு மாதந் தோறும் உதவித்தொகை வழங்கும் திட்டம் இவ்வரசால் தொடங்கப்பட்டது. முதலில் மாதம் ரூ. 100 வீதம் வழங்கப்பட்ட இவ்வுதவித் தொகை இப்பொழுது மாதம் ரூ.250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழில் பகுதி நேர வகுப்புக்களைத் தொடங்கும் பிறமாநில பல்கலைக் கழகங்கள், பிற கல்வி நிலையங்கள் ஆகியவற்றுள் 15க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 15,000 வீதம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்களுடைய எழுத்துச் சீர்திருத்தத்தை அவர் நூற்றாண்டு விழாவையொட்டி இவ்வரசு செயல்படுத்தியுள்ளது.

தமிழ் நூல்களை பிற மொழிகளில் பெயர்த்து வெளியிடவும் பிற மொழி நூல்களை தமிழாக்கம் செய்து வெளியிடவும் திட்டம் வகுத்துச் செயல் படுத்த ஒரு வல்லுநர் குழுவின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கம்பன், வள்ளலார் போன்ற தமிழ்ச்சான்றோர்கள் நினைவாக சென்னையில் தமிழ்க் கலை மையம் ஒன்று நூலகம், படிப்பகம், கருத்தரங்கு மன்றம் போன்ற வசதிகளுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காகத் தனித்துறை ஒன்று ''தமிழ்ப் பண்பாட்டு இயக்குநரின்'' கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

உமறுப்புலவர் பெயரில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்காக மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று தொடங்க ரூ 2 இலட்சத்தை அறக்கட்டளைத் தொகையாக இவ்வரசு கொடுத்துள்ளது.

பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக சென்னைப் பல்கலை கழகத்தில் ரூ. 25,000 அறக்கட்டளை ஒன்றை அரசு நிறுவியுள்ளது. அத்தொகையின் வட்டியைக் கொண்டு ஆண்டுதோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும்.

பாவேந்தர் பாரதிதாசன் ''விருது'' ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு, அவருக்குப் பதக்கம் ஒன்றும் ரூ. 10,000 ரொக்கப்பரிசும் அளிக்கப்படும். 78-க்கான விருது கவிஞர் சுரதாவுக்கு அளிக்கப்பட்டது. 1979-க் விருது மறைந்த கவிஞர்கள் வாணிதாசன் குடும்பத்துக்கும், எஸ். டி. சுந்தரம் குடும்பத்துக்கும் வழங்கப்பட்டது.

தமிழறிஞர்களையும் தமிழ்ச் சான்றோர்களையும் போற்றும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் திருவாளர்கள் கா. அப்பாத்துரை, தி.சு. அவினாசிலிங்கம், ஞா.தேவநேயப் பாவாணர், மு.ப. பெரியசாமித் தூரன், வ. சுப்பையா ஆகியோருக்கு 1979-திருவள்ளுவர் நாளன்று ''செந்தமிழ்ச் செல்வர்'' என்னும் விருது வழங்கப்பட்டது.

ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு - கருத்தரங்கு 1980 சனவரியில் மதுரை மாநகரில் நடைபெறும். 1978ல் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய அரசு செய்தது போல, இந்த ஐந்தாவது மாநாட்டுக்கும் இவ்வரசு அனைத்து உதவிகளையும் செய்யும்.

### கலைப்பணிகள்

**நூலகங்கள் :**

தகுந்த நூலகக் கட்டடங்கள் உள்ள இடங்கள் போக சென்னை நகரிலுள்ள 150 வட்டங்களிலும் நூலகக் கட்டடங்கள் நல்லமுறையில் அதற்கெனத் தனியாகக் கட்டப்படும்.

சேலம் நகரில் மாவட்ட மைய நூலகத்திற்கு நவீன வசதிகள் கொண்ட ரூ. 5 லட்சம் மதிப்புள்ள கட்டிடம் கட்டப்படும்.

மாநில அரசு அலுவலர்கள் பெற்று வரும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலச் சலுகைகள் போன்றவற்றை மாவட்ட நூலகக் குழுக்களின் கீழ் பணி செய்பவர்களுக்கும் விரிவாக்குவது பற்றி ஆய்வு செய்யபடுகிறது.

**தொல்பொருள் ஆய்வு:**

ஆங்காங்கு பல ஊர்களிலும் சிதறிக் கிடக்கும் சிற்பங்களையும், மதிப்புமிக்க பழைய ஓலைச் சுவடிகளையும் சேகரித்துப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றை 4 மாவட்டங்களில் மேற்கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1979-80ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அத்தகைய சிற்பங்கள் முதலியவற்றைச் சேகரித்து, தருமபுரியில் ஒரு நிலையான அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஓலைச் சுவடிகளையும் உதிரிச் சிற்பங்களையும் சேகரிக்கும் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது.

**அருங்காட்சியகங்கள் :**

மாவட்டத் தலைமை இடங்கள் ஒவ்வொன்றிலும் அருங்காட்சியகம் நிறுவிட அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாண்டு சேலத்தில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வசதிகளும் மேம்படுத்தப்படும். அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டை (1979) ஒட்டி சென்னையில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க 1979-80ல் ரூ. 6 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



**இசை, நடனம், நாடகம்:**

1979 ஜனவரியில் மதுரையில் ஓர் இசைக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. (இதுவரை சென்னையில் மட்டுமே இசைக் கல்லூரி இருந்து வந்தது)

1978-79ல் தொடங்கிய ஒரு புதிய திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் தொழில் மரபுக் கேற்ப தமிழில் புதிய இசைப் பாடல்களை எழுதும் கவிஞர் ஒருவருக்கு ரூ. 5 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும். தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைந்த வகையிலும் இசை நுணுக்கங்களுக்கேற்ற வகையிலும் புதிய மெட்டுக்களை புகுத்தும் இசைவாணர் ஒருவருக்கும் இத்தகைய ரொக்கப் பரிசு ஒன்று வழங்கப்படும்.

1979ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாளன்று சிறந்த கலைஞர்கள் 8 பேருக்கு 'அரசவைக் கலைஞர் என்ற விருது வழங்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 1,000 வீதம் 5 ஆண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப் பெறும்.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் மேலும் மேலும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 1979-80ல் கூடுதலாக 175 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும்.

வளர்ச்சிக்கு வழிகாட்டும் வகையிலும் திருவாகப் பணிகளில் சீரிய முறை உருவாகும் நிலையிலும் அரிய பணிகளை ஆற்றி வருகிறது வருவாய்த்துறை. அதன் வகைவகையான பணிகளில் சில :

# வளம் பெருக்கும் வருவாய்த் துறை



தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை கடந்த இரண்டாண்டுகளில், ஆற்றியுள்ள பணிகள் பெரிதும் பாராட்டத்தக்கன. அப்பணிகளில் சில இங்கே விவரிக்கப் படுகின்றன.

இவ்வரசு பதவியேற்றபின் 560 அறிக்கைகள், நில உச்சவரம்புச் சட்டத்தின் 18 (1) பிரிவின் கீழ் சுமார் 12,200 ஏக்கர்களை உபரி நிலமாக அரசுடைமையாக்கி வெளியிடப்பட்டுள்ளன.

உபரி நிலம் ஒப்படை பெறும் ஏழை மக்கள் சந்தை விலையை விட அதிக நிலக் கிரயம் கொடுக்க வேண்டிய நிலையினைத் தவிர்க்க, உபரி நிலங்களுக்கு அளிக்க வேண்டிய தொகை நிலவரி அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு, அதன்படி மிகச்சிறந்த நிலத்துக்கும் தொகை ஏக்கருக்கு ரூபாய் 3,500-க்கு மேற்படாமலிருக்கு மாறு சட்ட விதிகள் 27-10-78 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

**நிர்வாக அமைப்புகள்**

கிராமங்களிலிருந்து மாவட்டம் வரை எல்லா நிலைகளிலுமே நிர்வாகம் செம்மையாக நடைபெற ஏதுவாக அவற்றின் பரப்பளவும், எல்லைகளும் கச்சிதமாகச் சீரமைக்கப்பட வேண்டுமென இவ்வரசு கருதுகிறது. இதைச் செயற்படுத்தும் வகையில் வருவாய் ஆய்வாளர்களின் நிர்வாகத்திலுள்ள பிர்க்காக்களைச் சீரமைக்கவுள்ள அரசின் முடிவு ஏற்கெனவே நிதிஅமைச்சரின் 1979-80-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சுமார் 350 பிர்க்காக்கள் புதிதாக ஏற்படுத்தப்படவுள்ளன. 1979-80-ஆம் ஆண்டில் சுமார் 200 புதிய பிர்க்காக்கள் முதற்கட்டமாக எல்லா மாவட்டங்களிலும் மக்கள் தொகை, பரப்பு, நிலவரித் தொகை, முதலியவற்றைக் கருத்திற் கொண்டு ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

கிராமங்களையும் சீரமைக்கும் கருத்து, வருவாய் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

1979-80-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதான நிதி அமைச்சரின் உரையில் 14 துணை வட்டங்கள் - வட்டங்களாக 1979-80-ல் தரமுயர்த்தப் படுமென அறிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம் வட்டத்தினை அம்பாசமுத்திரம் - சேரன்மகாதேவி என்ற இரு வட்டங்களாக, முறையே அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கவும் இவ்வரசு முடிவு செய்துள்ளது.

பெரிய வருவாய்க் கோட்டங்களைச் சீரமைக்கும் திட்டத்தில் தற்போதுள்ள 49 கோட்டங்களில் . இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள, மாநிலத்திலேயே

மிகப் பெரிய கோட்டமான சிவகாசிக் கோட்டம், சிவகாசி, அருப்புக்கோட்டை என இரு கோட்டங்களாகப் பிரித்தமைக்கப்படும். இதனால் மொத்தம் தமிழ்நாட்டில் 50 கோட்டங்கள் இருக்கும். புதிய சிவகாசிக் கோட்டம், சிவகாசியைத் தலைமையிடமாகக்கொண்டு சாத்தூர், இராசபாளையம், திருவில்லிபுத்தூர்ஆகிய வட்டங்கள் அடங்கியதாகவிருக்கும். புதிய அருப்புக்கோட்டைக் கோட்டம் அருப்புக் கோட்டையினைத் தலைமையிடமாகக் கொண்ட அருப்புக்கோட்டை, விருதுநகர் வட்டங்களும், திருச்சுழி துணை வட்டமும் (இதுவும் வட்டமாகத் தரமுயாத்தப்படவுள்ளது) அடங்கியதாகவிருக்கும்.

பெரிய மாவட்டங்களைச் சீரமைப்பதில் கோயம்புத்தூர் மாவட்டத்தினை கோயம்புத்தூர், பெரியார் என இரு மாவட்டங்களாகப் பிரித்தமைக்கும் அரசின் முடிவு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர், அவினாசி, பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை ஆகிய வட்டங்களும், புதிய பெரியார் மாவட்டத்தில் ஈரோடு, பவானி, கோபிச்செட்டி பாளையம், சத்தியமங்கலம், தாராபுரம் ஆகிய வட்டங்களும் இருக்கும். கோயம்புத்தூர் அப்பெயருடைய மாவட்டத்திற்கும் ஈரோடு பெரியார் மாவட்டத்திற்கும் தலைமையிடங்களாக அமையும். இம்முடிவுகளை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க ஒரு தனி அதிகாரியும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## அலுவலர்களின் வசதிகள்

ஒரு பக்கம் நிர்வாக எல்லைகள் சீரமைக்கப்படுகையில் அதிகாரிகளின் மற்றும் அலுவலர்களின் அடிப்படை வசதிகளும் கவனிக்கப்படவேண்டுமெனும் கருத்தினையும் இவ்வரசு தீவிரமாகச் செயல்படுத்த முனைந்துள்ளது. இதன்முதற்படியாக, பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கு பிர்க்காத் தலைமையிடங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்க இவ்வரசு முடிவு செய்து, 1978-79ம் ஆண்டு முதல் இத்திட்டம் ஆக்கபூர்வமாகச் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 1978-79-ல் 200 வீடுகளும், 1979-80ல் 150 வீடுகளும், 1980-81ல் 150 வீடுகளும் ஆக மூன்றாண்டுகளில் 500 வீடுகள் கட்டும் திட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ரூ. 110 இலட்சம் முதலீட்டுச் செலவில் நிறைவேற்



றப்பட்டு வருகின்றது. இவ்வீடுகள் வருவாய் ஆய்வாளர்களின் நிரந்தர அலுவலகங்களாகவும் செயல்படும்.

மாவட்ட நிர்வாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தற்போதுள்ள வழிமுறைகளை ஆய்ந்து அரசுக்கு, தக்க அறிவுரைகளை வழங்குவதற்காக வருவாய் வாரிய உறுப்பினர் திரு எஸ். பி. அம்புரோஸ், ஐ.ஏ.எஸ். நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## அரசு நிலங்கள் ஒப்படை

நில ஒப்படையில் உள்ள முறைகேடுகளையும், ஒப்படை செய்யப்பட்ட பின் ஏற்பட்ட விளைவுகளால் தகுதியற்றவர்களிடம் சென்றடைந்த நிலங்களையும் கண்டுபிடிக்கவும், ஏழைகளும், தகுதியுள்ளவர்களும் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களைப் பெறத் தேவையான நடவடிக்கை எடுக்கவும், இதுவரை கொடுக்கப்பட்ட ஒப்படைகளை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று 25-7-78 ஆம் நாளில் வருவாய்த்துறை ஆணை வெளியிட்டது.

அரசின் கொள்கையின்படி விலை மதிப்பீடு செய்யப்படாத நிலம், நேரடி சாகுபடியில் ஈடுபடும் நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளில் ஒப்படை செய்யும் பணியைத் துரிதப்படுத்த அரசு எடுத்துக்கொண்ட தனி முயற்சியின் காரணமாக 1967-68 ஆம் ஆண்டிலிருந்து 31-1-79 முடிய 8,61,858 ஏக்கர் பரப்புள்ள அரசு நிலம் 4,91,964 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிகால் நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதற்காக திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள சில கிராமங்கள், சாகுபடி செய்யும் நோக்கத்துடன் ஒப்படைக்கப்படுவது 1967-ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்டிருந்தது. மேற்சொன்ன வட்டத்தில் 8 கிராமங்களில் இந்தத் தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையுத்தரவு நீக்கப்பட்டதன் விளைவாக, நிலமில்லா ஏழைகளுக்கு நிலங்கள் ஒப்படைப்பதற்காக சுமார் 3,000 ஏக்கர் மொத்தப் பரப்புள்ள நிலங்கள் தற்போது கிடைக்கும்.

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஜாம்பவான் ஓடை கிராமத்தில் முன்னாள் இராணுவத்தினர் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட 742.65 ஏக்கர் நிலத்தை அரசு திரும்பப் பெற்று, பின்பு அந்நிலத்தை, சங்கத்தின் அங்கத்தினர் நிலமில்லாத ஏழையா என்றும், அவரோ அவரது குடும்பத்தினரோ நிலத்தைச் சீர்படுத்தி சாகுபடி செய்தனரா என்றும் விசாரணை செய்து ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 5 ஏக்கர் வீதம் இனாமாக ஒப்படை செய்யலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

## நகர்ப்புற நில உச்சவரம்பு

நகர்ப்புறங்களில் ஒரு சில நபர்களிடம் நிலங்கள் குவிந்திருப்பதைத் தடுத்து, குறைவாக உள்ள நகர்ப்புறப் பரப்புகளை ஒழுங்குபடுத்தி அவற்றை முறையாக மேம்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்துடனும், நகர நிலங்களையும் நகரமாக ஆவதற்கு வாய்ப்புள்ள பகுதிகளில் இருக்கிற நிலங்களையும் சமூக மயமாக்கும் நோக்கத்துடன் 1976-ல் குடியரசுத் தலைவரால் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது.

இச்சட்டத்தைச் செயல்படுத்துகையில் நடைமுறையில் கணக்கிலடங்காத சங்கடங்கள் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அரசுக்கு எண்ணற்ற முறையீடுகள் வந்தன. பத்திரிகை வாயிலாகவும் இது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இச்சட்டங்களை நீக்கவும், நகர்ப்புற நிலங்களின் மீதான சமூக சீர்திருத்தத்தைக் கவனத்தில் கொண்டும் அரசு தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல் — முறைப்படுத்துதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978)க் கொண்டு வந்தது.

புதிதாக இயற்றப்பட்ட சட்டத்தின்படி சென்னை நகர கூட்டுப் பகுதியின் பரப்பு 1,400 சதுர கிலோ மீட்டரிலிருந்து 575 சதுர கிலோ மீட்டராகவும் மற்ற நகர்ப்புற கூட்டுப் பகுதிகளைப் பொறுத்தவரையில் அவற்றின் பரப்பு, மூலப் பரப்பளவில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

## கிராமப் பணியாளர் நிர்வாகம்

அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களும், பழங்குடியினரைச் சேர்ந்தவர்களும், கிராம அதிகாரிகள் பதவிக்குப் போட்டியிட இயலும் வகையில், அரிசன வகுப்பு, பழங்குடியைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் 'கிராம அதிகாரிகளுக்கான சிறப்புத் தேர்வில்' தேர்ச்சியுறும் பொருட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. அரிசன வகுப்பு, பழங்குடியைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென்று, 2-1-1978 முதல் 3 திங்கள் காலத்திற்கு தஞ்சாவூர், மதுரை, சேலம், கடலூர் ஆகிய நான்கு இடங்களில் சிறப்புத் தேர்வுப் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு பயிற்சிக்கால உதவித் தொகை ரூ. 50 கொடுக்கப்பட்டது. கிராம அதிகாரிகள் பதவிக்குத் தகுதிவாய்ந்த அரிசன, பழங்குடியைச் சேர்ந்தவர்கள் இல்லாத குறையை இத்திட்டம் அகற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இப்பயிற்சி, கிராம அதிகாரிகள் பதவிக்காக தேர்வில் வெற்றி பெறுவதற்கு பயிற்சியாளர்களுக்குச் சிறந்த முறையில் உதவி புரியும். இதுகாறும், அரிசன பழங்குடி வகுப்பைச் சேர்ந்த 94 பேர் கிராமக் கர்ணம் பதவிக்குப் பயிற்சி அளிக்கப்பட்டனர். 82 பேர் கிராம அதிகாரி பதவிக்கு பயிற்சி அளிக்கப்பட்டனர். 1978-79-ஆம் ஆண்டில் ஐந்து இடங்களில் பயிற்சி தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வறட்சி நிவாரணம் (1977-78, 1978-79)

1977-78-ஆம் ஆண்டு தொடக்கத்தில் இராமநாதபுர மாவட்டத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளில் வறட்சி நிலை நிலவியது. சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, கன்னியாகுமரி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் எந்தப் பகுதியும் வறட்சியால் பாதிக்கப்படவில்லை.

வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு 1977-78-ல் ரூ. 862.59 இலட்சம் அனுமதியளித்தது. நிவாரணப் பணிகள் தொடங்கப்பட்டு பல கட்டங்களில் வேலைகள் நடந்து வந்தபோது 1977 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரு மழையினால் வெள்ளமும், புயலும் ஏற்பட்டது. இதன் காரணமாக வறட்சி எந்தப் பகுதியிலும் இல்லாத நிலைமை உருவாகியது.

1978-79-ஆம் ஆண்டிலும் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்ததால் வறட்சி நிலை இல்லை. ஆனாலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் சில பகுதிகளில் போதுமான மழையின்மையால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அப்பகுதிகளுக்கு நிலவரி முதலானவற்றை தள்ளுபடி செய்தும் கடன்களை ஒத்தி போட்டும், சலுகை அளிக்கக்கோரி அம்மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து கோரிக்கை வந்தது. வருவாய்த்துறை வாரியத்தின் பரிந்துரையை ஏற்று, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1388-ஆம் பசலியில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசு கீழ்க்கண்ட சலுகைகளை அறிவித்தது.

1388-ஆம் பசலி ஆண்டில் ஒரு வயலில் 37 காசுவும (50 சதவீதம்) அதற்குக் குறைவாகவும் விளைந்தால் நிலவரியையும், உள்ளூர் வரியையும் தள்ளுபடி செய்வது; 37 காசுவும் அதற்குக் குறைவாகவும் விளைந்த நிலங்களுக்குக் கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, தனித்தீர்வை தனித் தண்ணீர்த் தீர்வை, பணப் பயிர்களுக்கான தீர்வை ஆகியவற்றைத் தள்ளுபடி செய்வது:

37 —காசவும் அதற்குக் குறைவாகவும் விளைந்த புஞ்சை நிலங்களுக்கு உள்ளூர் வரி தள்ளுபடி செய்வது.

ஊராட்சி ஒன்றியங்களை இம்மாதிரியான நிலங்களுக்கு உள்ளூர் செஸ் மேல்வரி விதிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்வது.

உள்ளூர் மேல்வரி இழப்புக்கு ஈடாக முன்பசலிகளில் பின்பற்றிய முறைப்படி மானியம் அளிப்பது.

உழவருக்குச் சொந்தமான நிலங்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலங்களில் நிலவரி தள்ளுபடி பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தால் நிலுவை நிலவரி உள்ளூர் வரி பாக்கிகள், அரசுக் கடன்கள் ஆகியவற்றின் வசூலை அடுத்த பசலிக்கு ஒத்தி போடுவது.

## இயற்கையின் சீற்றங்கள் :

1978 நவம்பர் மாதப் புயல் மழையின் மொத்த சேத மதிப்பீடு ரூ. 59.3 கோடி. நிவாரணப் பணிகளுக்கான மதிப்பீடு ரூ. 22.84 கோடி. மத்திய அரசு அளித்த திட்ட முன்பண உதவி ரூ. 10.11 கோடி. தமிழக அரசு அனுமதித்துள்ள தொகை ரூ. 13.14 கோடி. செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் கடற்கரை ஓரங்களில் 25 புகலிடங்கள் கட்ட முடிவு எடுக்கப்பட்டு 2 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மீதமுள்ள 23 கட்டடங்கள் இவ்வாண்டு மாரிக் காலத்துக்குள் கட்டி முடிக்கப்படும்.

உயர்மட்டக்குழுவின் கோரிக்கைகளை ஏற்று, விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்கி, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது.

## அன்புடைமை!

*அன்பு என்பது தர்க்கத்திற்குக் கட்டுப்படாது. அதனை அளக்கும் கோல் கிடையாது. நிறுத்திடும் துலாக்கோலும் இல்லை!*

—பேரறிஞர் அண்ணா



# பொங்கியெழும் வண்ணம் புதுமை அதை அணிபவர் ஆவார் பதுமை வண்ணவண்ண அசல் பட்டு சரிகை சேலைகளை தேர்ந்தெடுக்க

கதர் கிராமத் தொழில் அங்காடிகள்
சென்னை மற்றும் தமிழகமெங்கும்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்






இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இலட்சோப லட்சம் மக்கள் நல்வாழ்வு பெற இன்றைய அரசு தாய்ப் பாசத்தோடு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# தாயகம் திரும்புவோர் நல்வாழ்வுக்கு...

பர்மா, வியட்நாம் முதலிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புவோர்களைத் தவிர, சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் ஆறு இலட்சம் மக்களில் பெரும்பகுதியினருக்கு மறுவாழ்வு அளிக்கும் பொறுப்பினை இவ்வரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த அமைச்சரவை பொறுப்பேற்ற பிறகு இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களில் 19,703 குடும்பங்கள் தேயிலைத் தோட்டங்களிலும், விவசாயம் மற்றும் விவசாயத் தொடர்புள்ள பண்ணைகளிலும், வேலைக்கு அமர்த்தப்பட்டு உள்ளனர். பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய 526 குடும்பங்களுக்கும், வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பிய 191 குடும்பங்களுக்கும் வியாபாரக் கடன் உதவி செய்யப்பட்டுள்ளது. இந்த மறுவாழ்வுத் திட்டங்கள் மத்திய அரசினால் மானியமாகவும், கடனாகவும் வழங்கப்படும் நிதி உதவிகளுடன் செயல்படுத்தப்படுகின்றன. இவ்விதமாகக் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு ரூ. 72.67 இலட்சம் மானியமாகவும் செலவிடப்பட்டுள்ளது. இதைத் தவிர ரூபாய் 1,453.46 இலட்சம் வியாபாரக் கடன் போன்ற இதர திட்டங்களை அமல்படுத்துவதற்காகக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, நடைமுறையில் இருந்துவரும் திட்டங்கள் தவிர, தாயகம் திரும்பும் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்க மேலே குறிப்பிட்ட திட்டங்களும் இந்த அமைச்சரவை பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

மண்டபம் முகாமில் குழாய்கள் பழுதடைந்ததால் குடிநீரும், கழிவு நீரும் கலந்து மருத்துவ மற்றும் சுகாதார நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. எனவே, அக்குழாய்களைச் செப்பனிட்டு மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளைப் பெருக்க ரூபாய் 88,000 செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

நெய்வேலி மாநிலப் பண்ணைக் கழகத்தில் குடியமர்த்தப்பட்ட இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரின் நலனுக்காக ரூ. 28,000 செலவில் ஒரு தனி மருத்துவ மனை அமைக்கப்பட்டது.

ஏற்கெனவே ஒரு கிலோ அரிசி ரூ. 0.57 வீதம் மலிவு விலையில் வழங்கப்படும் திட்டத்தை, தாயகம் திரும்பியோருக்கான கூட்டுறவு வங்கி மூலம் அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் குடியமர்த்தப்படுவோருக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டங்களின்படி குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்கள் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளும்வரை தற்காலிகமாகக் குடியிருப்பதற்காக ரூ. 250 மானியமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரைக் குடியமர்த்த, நீலகிரி மாவட்டத்தில் ஜென்மம் நிலத்தில் 4,000 ஏக்கர் நிலப் பரப்பில் தமிழ்நாடு தேயிலைக் கழகத்தின் மூலம் தேயிலை பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர் தங்கள் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை பெற, இதுவரையில் இருந்து வந்த மாதாந்திர உச்ச வருமானத்தை ரூ. 250-லிருந்து ரூ. 400-ஆக உயர்த்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

இலங்கையில் இருந்து தாயகம் திரும்புவோருக்குத் திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டு என்னுமிடத்தில் ரூபாய் 26.46 இலட்சம் செலவில் ஒரு புதிய இடைத்தங்கல் முகாம் ஏற்படுத்தியது.

இராணிப்பேட்டையில் தமிழ்நாடு க்ரோமேட் மற்றும் ரசாயன தொழிற்சாலையில் பணிபுரியும் தாயகம் திரும்பியோருக்காக வீடு ஒன்றுக்கு ரூ. 5,805 வீதமும் தண்ணீர் வசதிக்காக ரூ. 47,200 மாக ரூ. 9,81,045 செலவில் 159 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு 28-9-'78 அன்று மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

வியாசர்பாடி ஏரியைச் சார்ந்த இடத்தைச் செம்மைப்படுத்தி ரூ. 177.63 இலட்சம் செலவில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய 3132 குடும்பங்களுக்கு வீடு கட்டும் திட்டம் அனுமதிக்கப்பட்டது. அதற்கான அடிக்கல் தமிழக முதல்வரின் தலைமையில் மத்திய அரசு வீட்டு வசதித் துறை அமைச்சரால் 28-9-'78 அன்று நாட்டப்பட்டது.

மத்தியப் பிரதேசத்தில் மாணா என்னுமிடத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கனரக தொழில் நுட்பம் மற்றும் ஓட்டுநர் பயிற்சி நிலையம், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கும்மிடிப்பூண்டி முகாமிற்கு மாற்றப்பட்டு ரூபாய் 25.41 இலட்சம் செலவில் புதிய நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையத்தினை 29-9-'78ல் மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் திறந்து வை த்தார்.

நெய்வேலி மாநிலப் பண்ணைக் கழகத்தில் பணியாற்றிய தாயகம் திரும்பியோருக்காக ரூ. 28.50 இலட்சம் செலவில் 600 வீடுகளைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்களில் சுமார் 56,000 குடும்பங்களுக்கு மறுவாழ்வு உதவி அளிக்கப்பட வேண்டியிருயிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 42,000 குடும்பங்களுக்குத் தமிழ்நாட்டிலும், 14,000 குடும்பங்களுக்கு இதர மாநிலங்களிலும், குறிப்பாக தென்மண்டல மாநிலங்களிலும் மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது.

இதுவரை தாயகம் திரும்பியோர்களில் 75 சதவிகிதத்தினர் வணிகக் கடன் அளிக்கப்பட்டும், மற்ற 25 சதவிகிதத்தினர் இதர திட்டங்களிலும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். வணிகக் கடன் பெற்றுத் தாயகம் திரும்பியோர்களில் பெரும்பாலோர் அக்கடனைச் சரியாக உபயோகப்படுத்தாததால், அவர்களை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் குடியமர்த்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**போக்குவரத்துத் துறையில் பணியாற்றிடும் தொழிலாளர் வாழ்வு வளம்பெற இந்த அரசு திட்டமிட்டுச் செயல்படுத்தியுள்ளவை எண்ணற்றவை !**

# புதுப்பொலிவுபெறும் போக்குவரத்துத்துறை

தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டு, அவர்கள் ஊக்கமுடன் செயல்பட எல்லாக் கழகங்களிலும் செயலுள்ள நீண்ட காலச் சம்பளத் திட்டம், ஒரே மாதிரியான சம்பள அமைப்பு, அகவிலைப்படி, விடுப்பு விதிகள், மருத்துவ வசதிகள் முதலியன இருப்பதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. நீண்ட காலச் சம்பளத் திட்டம் 30 ஆண்டுகள் பணி செய்த தொழிலாளி, பணிக் காலம் முழுவதும் படிப்படியாக ஊதிய உயர்வு பெற்று குறிப்பிட்ட பதவிக்கு உயர வசதி செய்கிறது.

1978 மே மாதத்தில் ஏற்பட்ட இறுதி உடன்படிக்கையின்படி, சொற்ப ஆதாயங்களில் ஏற்பட்ட உயர்வுகளைச் சேர்த்து ஒவ்வொரு போக்குவரத்துப் பணியாளருக்கும் ரூ. 61 முதல் ரூ 69 வரை கிடைக்குமாறு வழி செய்யப்பட்டது.

1978 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல், மருத்துவ விடுப்பு 6 நாட்களிலிருந்து 8 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் வசதியை மனத்திற் கொண்டு 1978-79-ல் 51 இடங்களில் சிற்றுண்டிச் சாலைகளையும், பொழுது போக்குக்கான வசதிகளுடன் கூடிய ஓய்வு அறைகளையும் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்தியுள்ளன.

போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகள், பள்ளி-கல்லூரிக்குச் சென்று வர இலவச அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

போக்குவரத்துக் கழகத்தில் பணியிலிருக்கும் ஒரு தொழிலாளி இறந்து விட்டால், அவருடைய குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு இறந்தவரின் ஆதரவில் இருந்த ஒருவருக்கு வேலை தேடித்தரும் அலுவலகத்தை அணுகாமலேயே போக்குவரத்துக் கழகத்தில் அவரது தகுதியைப் பொருத்து வேலை தர வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இலவச உட்புற நோயாளி மருத்துவ வசதி, 1978 ஏப்ரல் திங்களிலிருந்து போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் கிடைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திலும் குடும்ப நிதித் திட்டம் என்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பலகைகள், உதவித் தொகை முதலியன வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

எல்லாக் கழகங்களும் தங்கள் தொழிலாளர்களுக்கு மிகக்குறைவான வட்டி விதத்தில் எளிய தவணையில் திரும்ப வசூலிக்கும் வகையில் திருமணக்கடன் அளிக்கின்றன.



எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் தங்களது பணியாளர்களுக்கு முறையாகத் தைக்கப்பட்ட சீருடைகளையும், காலணிகளையும் அளிக்கின்றன. மேலும் எல்லாக் கழகங்களும் தங்கள் ஓட்டுநர்களுக்கு குளுமைக் கண்ணாடிகள் இலவசமாக வழங்குகின்றன. அத்துடன் நடப்பு ஆண்டிலிருந்து இரவு நேரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரொட்டியும் (பன்), தேநீரும் இலவசமாக அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1979-80 ஆண்டில் தொழிலாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அட்கோ, எல்.ஐ.சி. மூலமாக ரூ. 634.43 இலட்சம் மதிப்புள்ள 3000 வீடுகள் தொழிலாளர்களுக்குக் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகங்கள் தங்கள் பணியாளர்களும், அவர்களின் குடும்பத்தினரும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1500 கி.மீ. வரை கட்டணமின்றி விரைவுப் பேருந்துகள் தவிர்த்து மற்றப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.




## பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள்

சென்ற ஆண்டில் பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகளில் 1 கி. மீட்டருக்கு 6 காசு என இருந்த பயணக் கட்டணம் 5 காசாகக் குறைக்கப்பட்டது.

நீண்ட தூரப்பயணிகள் வசதியைக் கருதிப் பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பிரிவு, மேலும் 8 குளுமைப் பேருந்துகளை விடுவதற்கும், 70 டீலக்ஸ் வண்டிகளை விடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

பயணிகளின் வசதியைக் கருதிப் பத்து நாட்களுக்கு முன்னரே இருக்கைகளுக்கு ரிசர்வ் செய்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டில் பயணிகளின் வசதிகளை மனத்திற் கொண்டு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள் 402 நிழற்குடைகள் கட்டியுள்ளன. மேலும் நடப்பு ஆண்டில் (1979-80) 600 நிழற்குடைகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

பண்டிகை நாட்களிலும், விழாக் காலங்களிலும் பொது மக்களின் வசதியை முன்னிட்டு இட நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டும் போக்குவரத்துக் கழகங்கள் தனிப் பேருந்துகள் விடுகின்றன. போக்குவரத்துக் கழகங்கள் இதுபோன்ற நாட்களில் பந்தல்கள் அமைத்தும், குடிதண்ணீர் வசதிகள் செய்தும், கழிவிடம் அமைத்தும் பொது மக்களுக்குச் சேவை செய்கின்றன.

நகரப் பேருந்துகளில் தற்போது மாணவர்களுக்கு அளித்து வரும் கட்டணச் சலுகைகள் போன்று இராமப்புற மாணவர்களும் பயனடையும் வகையில் 33.1/3 கட்டணச் சலுகை, வரும் கல்வி ஆண்டிலிருந்து அளிக்க அரசு உத்தேசித்துள்ளது.

இவ்வாண்டிலிருந்து, பார்வையற்றோர்க்கு வீட்டிலிருந்து மருத்துவமனை, பணிபுரியும் இடம், மற்றும் பள்ளி முதலிய இடங்களுக்குச் சென்று வர இலவசப் பயணச் சீட்டுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

"குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு இதுவரை மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட இலவசப் பயணச் சலுகையை ஐந்து ஆண்டுகளாக உயர்த்தியுள்ளது.

தற்போது தனியார்களால் பராமரிக்கப்பட்டு வரும் பேருந்து நிலையங்களைப் படிப்படியாகத் தாமே குத்தகைக்கு எடுத்துப் (Bus Stands) பராமரிக்க முடிவு செய்துள்ளது. இதன் மூலம் பேருந்து நிலையங்களில் ஓய்வறைகள், சிற்றுண்டி நிலையங்கள், கழிப்பிடங்கள் முதலிய வசதிகளை நல்ல முறையில் அளிக்க இயலும்.

இராமப் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் மாநில முழுவதற்கும் முதலமைச்சர், நிவாரண நிதியிலிருந்தும், போக்குவரத்துக் கழக நிதியிலிருந்தும், நடப்பு ஆண்டில் 50 ஆம்புலன்ஸ் வண்டிகளும், வரும் ஆண்டுகளில் 100 ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ●

### நிலையும் நினைப்பும்!

நிலை உயர்ந்திருந்தால்
நினைப்பு உயர்ந்திருக்கும்;
நிலை தாழ்ந்திருந்தால்
நினைப்புத் தாழ்ந்திருக்கும்.
நிலைக்குத் தகுந்தாற்
போல் தான் நினைப்பும்
இருக்கும்!

—பேரறிஞர் அண்ணா.



இந்த இரண்டாண்டுகளில், அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் அளவற்றவைகளாகும். அகம் மகிழத் தக்கவையாகும்

# அலுவலர்க்கு சலுகைகள்

தமிழ்நாடு அரசு, கடந்த இரண்டாண்டுகளில், மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் மீதும், அரசு ஊழியர்களின் கோரிக்கைகளின் மீதும் ஊழியர்களுக்கு முன்னில்லா முறையில் பல்வேறு சலுகைகளையும் வழங்கியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய சலுகைகளை வழங்கியதால், உடனடியாக அரசுக்கு 37 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. இது நாளாவட்டத்தில் 67 கோடி ரூபாயாக உயரும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

அரசு, ஊழியர்களுக்கு வழங்கியுள்ள சலுகைகளின் விவரம் பின்வருமாறு;

### ஊதிய விகிதங்கள் சீரமைப்பு

தமிழகத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் பணிபுரியும் ஊதியக் குழுவை இந்த அரசுதான் நியமித்தது.

இந்த மூன்றாவது ஊதியக் குழு, 76 வகையாக இருந்த ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்துச் சீரமைத்தது.

### பதவி உயர்வு ஊதியம்

ஒருவர் ஒரே பதவியில் பத்தாண்டுக் காலம் பணிபுரிந்தால், அந்த அலுவலருக்குத் தானாகவே பதவி உயர்வு ஊதியம் வழங்கப் படும்.

### அகவிலைப்படி

மத்திய அரசு கைக்கொள்ளும் முறையினை ஒட்டியும் மாநில அரசின் நிதி நிலையினைக் கருத்திலே கொண்டும் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு 1—4—'79 முதல் அகவிலைப்படி அளிக்க முடிவு செய்தது. அதன்படி, ரூ. 650 வரை சம்பளம் பெறுவோருக்கு 2.5 விழுக்காடு அகவிலைப் படியும் 650 முதல் ரூ. 1600ம் அதற்கு மேலும் பெறுகிறவர்களுக்கு 1.875 விழுக்காடு அகவிலைப் படியும் வழங்க ஆணையிட்டுள்ளது. இதன்படி குறைந்த அளவு மாத அகவிலைப்படி ரூ.6 ஆகவும், அதிகப்படி அகவிலைப்படி ரூ. 30 ஆகவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 12 கோடி ரூபாய் செலவாகும். ஓய்வூதியம் பெறுவோர்க்கு ரூ. 3 முதல் 12 வரை அகவிலைப்படி வழங்கப்படுகிறது.



"வம்புலாம் சோலை மாமதில் தஞ்சை மாமணிக் கோயிலே".....





பேரறிஞர் அண்ணாவின் துயிலகம்

வரம்பற்ற நீர்ப்பரப்பு வரம்பெற்ற பிச்சாவரம்
வருஞ்சுற்றுப் பயணியர்க்கு அருங்காட்சி விருந்துதரும்



துள்ளிக் குதித்துவரும் மான்கூட்டம்—அழகை
அள்ளிக் குவித்துவந்து மகிழ்வூட்டும்





### காலக்கெடு நீட்டிப்பு

பழைய அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவிகிதம் உயர்வு பெற்றுப் புதிய சம்பளம் நிர்ணயம் செய்து கொள்வதற்கான வாய்ப்பு 1—4—'78 அன்று மட்டுமே அளிக்கப்பட்டு வந்தது. அது, அலுவலர்களின் வேண்டு கோளுக்கு இணங்க 31—3—'79 வரை நீட்டிக்கப்பட்டது.

### மிதிவண்டி-முன்பணம்

அரசு ஊழியர்களுக்கு மிதிவண்டி (Cycle) வாங்குவதற்காக. வழக்கமாகக் கொடுக்கப் பட்டு வந்த முன்பணம் ரூ. 400லிருந்து ரூ. 600க்கு உயர்த்தப்பட்டுள்ளது

### பண்டிகை முன்பணம்

அரசு அலுவலர்களுக்கு பண்டிகை முன் பணமாக வழங்கப்பட்டுவந்த ரூ. 250ஐ இவ்வாண்டு முதல் ரூ. 300 ஆக உயர்த்தியுள்ளது.

### ஓய்வுபெறும் வயது உயர்த்தப்பட்டது!

அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 55 லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டுள்ளது..

### உயர் கல்லூரிக் கல்விக்கு வட்டியில்லாக்கடன்

அரசு அலுவலர்களின் பிள்ளைகள் உயர் கல்லூரிக் கல்வி பெறுவதற்கு வட்டியிலாக் கடன் முன்பணம் வழங்கும் திட்டம் அமல் செய்யப்பட்டுள்ளது.

### கிராமப்புறங்களில் வீட்டு வாடகை குறைப்பு

கிராமப்புறங்களில அரசுச் சார்புடைய வீடுகளில் வசிக்கும் ஊழியர்களின் ஊதியத்தி லிருந்து வீட்டு வாடகைக்காக 10 சதவிகிதம் பிடிக்கப்பட்டு வந்ததை 5 சதவிகிதமாகக் குறைத்துள்ளனர்.

### கட்டப்பட்ட வீடுவாங்கவும் முன்பணம்

அரசு அலுவலர்களுக்கு வீடுகட்டவும், வீட்டுமனைகள் வாங்கி அதில் வீடு கட்டவும், முன்னரே கட்டப்பட்ட வீடுகளை வாங்கவும் முன் பணம் வழங்கப்படுகிறது.

எட்டு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற் றிய அலுவலர்கள் இக்கடன் உதவி பெறத் தகுதியுடையவர் ஆவர். அரசு அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் அகவிலைப் படியுடன் கூடிய அடிப்படைச் சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது 70,000 இவற்றில் ஏது குறைவாக உள்ளதோ அத்தொகை முன்பணமாக வழங்கப்படுகிறது.

### ஓய்வூதியம் வழங்கிட மாவட்ட மட்டத்திலேயே அதிகாரம்

ஓய்வூதியம் வழங்கும் முன் அக்கவுண்டண்ட் ஜெனரல் சரிபார்க்க வேண்டும் என்ற முறையில் ஏற்படுகிற கால தாமதத்தைத் தவிர்க்க, பொதுவாக மாவட்ட மட்டத்தி லேயே ஓய்வு ஊதியம் வழங்க அதிகாரம் அளிக்கப்படும். இதன் வாயிலாக அலுவலர் ஓய்வு பெறும் அதே நாளில் ஓய்வு ஊதிய உத்தரவுகளை அவர் பெற வகை செய்யப் படும்.



**சுத்த வீரன்!**

*மூடநம்பிக்கைகளைச் சாடி, பகுத்தறிவுக் கதி ரொளியைப் பரப்புபவனே சுத்தவீரன் ஆவான்!*

*—தந்தை பெரியார்*

### குடும்ப ஓய்வூதியம்

அரசு ஊழியர்களின் குறைந்த அளவு மாதாந்தர குடும்ப ஓய்வூதியத் தொகையை ரூ. 50லிருந்து ரூ. 100 ஆக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. இது, கடந்த ஏப்ரல் முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

அதிக அளவு மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ. 300 லிருந்து ரூ. 500 ஆக உயர்த் தப்படும்.

பணியில் இருக்கும்போதோ அல்லது ஓய்வு பெற்ற பிறகோ அரசு ஊழியர் ஒருவர் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்தின ருக்கு ஓய்வூதியத் தொகை ரூ. 50 லிருந்து ரூ. 300 வரை வழங்க, தற்போதுள்ள திட்டம் வகை செய்கிறது. இதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு, ஊழியர் இறப்பதற்கு முன் அல்லது ஓய்வு பெறுவதற்குமுன் வாங்கிய சம்பளத்தில் 30 சதவிகிதம் தொகையை ஓய்வூதியமாக வழங்க வகை செய்யப்பட் டுள்ளது.

1964-ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதிக்கு முன் ஓய்வு பெற்ற ஊழியர்களின் குடும்பத்தினருக்கும் இத்திட்டத்தை விரிவு படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

1964ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதிய விதிகளின் கீழ் வராதவர்களுக்கு இது பொருந்தும். இந்த விதிகளின் கீழ் இறந்தவர்கள் குடும்பத்திற்கு மாதம் ரூ. 100 ஓய்வூதியமாக வழங்கப்படும்.

# கூட்டுறவுத் துறையில் புதிய வரலாறு

**கூட்டுறவுத் துறையின் மூலம் நாட்டு மக்களுக்கு நல்ல வகையில் தொண்டாற்றி, அவர்களுக்கு நல்வாழ்வு அளித்து வருவதில் புதிய வரலாற்றைப் படைத்துள்ளது இந்த அரசு.**

தமிழ்நாட்டில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்தும் பணியில் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து பெரும் பங்கு வகித்து வருகிறது. குறிப்பாக விவசாயக் கடன் வழங்குதல், விவசாய இடுபொருட்கள் வழங்குதல், விளை பொருட்களை விற்பதற்கு வசதி செய்தல், நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றில் இவ்வியக்கம் பெரிதும் உதவுகின்றது.

## விவசாயக் கடன் வழங்குதல்

### குறுகிய காலக் கடன்கள்

தமிழ்நாட்டில் சாகுபடியின் கீழ் உள்ள நில உடைமைகள் 53.14 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் 76 சதவீதம், அதாவது 40.48 இலட்சம் நில உடைமைகளை வைத்துள்ளவர்கள் மாநிலத்தில் உள்ள சுமார் 4740 கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் 30-4-'79 அன்றைய நிலவரப்படி உறுப்பினர்கள் ஆகியுள்ளனர். இச் சங்கங்கள், பயிர்ச் செலவிற்காகக் குறுகிய காலக் கடன்களைத் தொடர்ந்து வழங்கி வந்துள்ளன.

### மத்திய காலக் கடன்கள்

விவசாயிகளுக்குக் கூடுதலான வருவாய் கிடைக்கும் பொருட்டு, கறவை மாடு வாங்குதல், உழவு மாடு வாங்குதல், ஆடு வளர்த்தல், கட்டை வண்டி வாங்குதல் போன்ற காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களையும் இச் சங்கங்கள் வழங்கி வந்துள்ளன.

### நகைக் கடன்கள்

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக நிறுவன அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது குறைந்ததால் ஏற்பட்டுள்ள நிதி வசதிக் குறைவை முடிந்த அளவு தீர்ப்பதிலும் கடன் வழங்கும், கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்கள் வழங்குவது மூலம் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளன. 911 விவசாயக் கடன் சங்கங்களும், மத்திய மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் 339 கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும் ஆக 1378 கூட்டுறவு



அமைப்புகள் நகைக் கடன்களை வழங்குகின்றன. இவ்வாறு நகைக் கடன்களை வழங்கிய கூட்டுறவு அமைப்புகளின் எண்ணிக்கை 1976-'77-ல் 919 ஆக மட்டுமே இருந்தது. சவரன் (பவுன்) ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் நகைக் கடன் கொடுத்து வந்த கூட்டுறவுச் சங்கங்கள், சென்ற ஆண்டுக்கு 320 ரூபாய் வீதம் கொடுத்து வந்தது. தற்பொழுது 400 ரூபாய் வீதம் கொடுத்து வருகின்றன. ஒரு நபர் பெறக் கூடிய நகை யீட்டுக் கடனின் உச்ச அளவு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

### நீண்டகாலக் கடன்கள்

சிறுபாசனம், நிலச் சீர்திருத்தம் டிராக்டர்கள் வாங்குவது, நிலம் வாங்குவது, காபி, தேயிலை, தென்னை, திராட்சை, மா முதலிய தோட்டப் பயிர்களுக்கும், கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற காரியங்களுக்காகவும் கூட்டுறவு நிலவள வங்கிகள் தொடர்ந்து நீண்டகாலக் கடன்களை வழங்கி வந்துள்ளன. வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பகுதி வாரியான வளர்ச்சிக்கான திட்டங்கள் இயற்றப்பட்டு, கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 42.86 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 67 சிறுபாசனத் திட்டங்களும், 14.44 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 54 இதர திட்டங்களும் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலஉச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் உபரி நிலம் ஒப்படை பெற்றவர்கள் தங்கள் நிலத்தை நிலவள வங்கிளிடம் அடைமானம் வைத்து அரசு உத்தரவாதத்துடன் கிணறு வெட்டுதல், பம்பு செட்டு வைத்தல் போன்ற காரியங்களுக்காகக் கடன்கள் பெற அரசு அனுமதி அளித்துள்ளது.

### வழங்கப்பட்ட கடன்களின் அளவு

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய கால, மத்திய கால, நீண்டகால மற்றும் நகைக் கடன்களின் அளவு 1976-'77-ல் சுமார் 184 கோடி ரூபாயாக இருந்தது; அது 1978-'79-ல் சுமார் 193 கோடி ரூபாயாக அதிகரித்தது. இது பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| கடன் வகை | வழங்கப்பட்ட கடன்கள் (கோடி ரூபாயில்) | | |
|---|---|---|---|
| | 1976-77 | 1977-78 | 1978-79 |
| குறுகியகாலக் கடன்கள் | 119.33 | 120.69 | 90.23 |
| மத்தியகாலக் கடன்கள் | 5.79 | 6.44 | 12.42 |
| நகைக் கடன்கள் | 40.10 | 50.77 | 79.17 |
| நீண்டகாலக் கடன்கள் | 19.14 | 12.28 | 11.24 |
| கூடுதல் | 184.36 | 190.18 | 193.06 |

விவசாயிகள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையைத் திருப்பிக் கொடுக்காமல் இருந்ததன் விளைவாகக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தவணை கடந்த கடன்கள் அதிகரித்ததால் 1978-79-ல் குறுகிய காலக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் வழங்கியதில் குறைவு ஏற்பட்டது. நடப்பு ஆண்டில் குறுகிய கால, மத்திய காலக் கடன்களாக சுமார் 160 கோடி ரூபாயும் நகைக் கடன்களாக சுமார் 90 கோடி ரூபாயும் நீண்ட காலக் கடன்களாக சுமார் 17 கோடி ரூபாயும் மொத்தம் சுமார் 267 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சிறுவிவசாயிகளுக்கு உதவி :

சமுதாயத்தின் நலிந்த பிரிவைச் சார்ந்தவர்களுக்கு அதாவது சிறு விவசாயிகளுக்கும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் உதவுவதில் விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தனி அக்கறை செலுத்தி வந்துள்ளன. இவ்வகை விவசாயிகள் சாகுபடி செய்யும் நிலஉடைமைகளின் எண்ணிக்கை 42.05 இலட்சம் ஆகும். அதில் 73 சதவீதம் அதாவது30.75 இலட்சம் நில உடைமைகள் வைத்துள்ளவர்கள் விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் ஆகியுள்ளனர். கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய கால,மத்திய கால மொத்தக் கடன் தொகையில் 47 சதவீதம் 1976-'77-ல் நலிந்த பிரிவைச் சார்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இது 1977-'78-ல் 49 சதவீத அளவிற்கும் 1978-'79-ல் 53 சதவீத அளவிற்குமாக உயர்ந்துள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மத்திய காலக் கடன்கள் பெரும்பாலும் நலிந்த பிரிவைச் சார்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

புதுக் கிணறு வெட்டும் சிறு விவசாயிகளுக்கு கிணறு ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மானியம் வழங்கிவரும் திட்டத்தின் கீழ் 1977-78 மற்றும் 1978-'79-ஆம் ஆண்டுகளில் 2,000 சிறு விவசாயிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டது. மலைவாழ் வகுப்பினருக்கு, மலைப் பிரதேசங்களில் புதிய கிணறுகள்



வெட்டுவதற்காக, கிணறு ஒன்றுக்கு 3,500 ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மானியம் வழங்கும் புதுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டு 1977-'78-ல் 54 கிணறுகளுக்காக 1.27 இலட்சம் ரூபாயும் 1978-'79-ல் 40 கிணறுகளுக்காக 1.40 இலட்சம் ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டது.

### வட்டி வீதம் குறைப்பு

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதம் அவ்வப்போது குறைக்கப்பட்டுள்ளது.

### இயற்கைப் பேரிடர்களிலிருந்து நிவாரணம்

1977-'78 மற்றும் 1978-'79 ஆம் ஆண்டுகளில் வறட்சி, வெள்ளம், புயல் ஆகியவற்றால் ஏற்பட்ட மிகப் பெரிய சேதம் காரணமாக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் 28.85 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய காலக் கடன்கள்,மத்தியகாலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டன. இதைத் தவிர 1976-'77-ஆம் ஆண்டில் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்ட கடன்களில் 19.25 கோடி ரூபாய் அளவிற்குத் தவணைகள் நீட்டித்துத் தரப்பட்டன. நிலவள வங்கிகள் வழங்கிய நீண்ட காலக் கடன்களில் 2.19 கோடி ரூபாய் அளவிற்கான தவணைகள் மாற்றியமைக்கப்பட்டன.

விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில் அரசு கீழ்க்கண்ட சலுகைகளை அறிவித்துள்ளது.

1. **அபராத வட்டி தள்ளுபடி :**

30-6-'78-ல் தவணை தவறியிருந்த எல்லா விவசாயக் கடன்கள் மீதும் அந்தத் தேதியில் செலுத்த வேண்டியிருந்த அபராத வட்டியும் அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துகிற தேதி அல்லது 30-6-'79 இவற்றில் எது முன்னதோ அத்தேதி வரை அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.

1-7-'77 முதல் 30-6-'78 வரை செலுத்தப்பட்ட அபராத வட்டியும்,30-6-'78-ல் தவணை

தவறிய கடன்கள் மீது செலுத்த வேண்டியிருந்த அபராத வட்டியை 30-6-78-க்குப் பிறகு செலுத்தியிருந்தால் அந்த அபராத வட்டியும் திருப்பித் தரப்படும்.

**2. சாதாரண வட்டி தள்ளுபடி :**

குறுகிய காலக் கடன்கள் ஏற்கெனவே மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டு, 30-6-78-ல் நிலுவை நின்ற தொகையின் பேரில் அந்தத் தேதியில் செலுத்த வேண்டியிருந்த சாதாரண வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

மேற்படி வட்டி 30-6-78-க்குப் பிறகு செலுத்தப்பட்டிருந்தால், அந்தத் தொகை திருப்பித் தரப்படும்.

**3. வட்டி விகிதம் குறைப்பு :**

30-6-78-ல் நிலுவையிலிருந்த மாற்றியமைக்கப்பட்ட கடன்களுக்கும், ஒருங்கிணைக்கப்பட்ட கடன்களுக்கும் 1-1-79 முதல் வட்டி விகிதம் சிறு விவசாயிகளுக்கு 10.5 சதவீதமாகவும், இதர விவசாயிகளுக்கு 12 சதவீதமாகவும் குறைக்கப்படும்.

**4. கடன்களைத் திருப்பிச் செலுத்தும் கால நீட்டிப்பு :**

ஒரு விவசாயிக்கு மாற்றியமைக்கப்பட்ட கடன்கள் 2 இருந்தால் 3 ஆண்டுகளிலும், 3 இருந்தால் 5 ஆண்டுகளிலும், 4 இருந்தால் 6 ஆண்டுகளிலும் அவற்றைத் திருப்பிச் செலுத்தும் வகையில் அக்கடன்கள் ஒருங்கிணைக்கப்படும். அவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் கடன்களின் ஆண்டுத் தவணைகள் 30-6-80-ல் முடியும் கூட்டுறவு ஆண்டில் தொடங்கும்.

**இரசாயன உர விற்பனை**

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும்கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும்விவசாயத்திற்குத் தேவையான உரங்களையும் இதர பொருட்களையும் சுமார் 4,500 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் உறுப்பினர்களுக்கும் இதர விவசாயிகளுக்கும் விற்பனை செய்து வருகின்றன. 1976-77-ல் 49.20 கோடி ரூபாய் மதிப்புள்ள 3.03 இலட்சம் டன் இரசாயன உரங்கள் விற்கப்பட்டிருக்க, 1977-78-ல் 56.34 கோடி ரூபாய் மதிப்புள்ள 3.48 இலட்சம் டன் உரங்களும், 1978-79-ல் 38.83 கோடி ரூபாய் மதிப்புள்ள 2.53 இலட்சம் டன் உரங்களும் விற்கப்பட்டன. கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் தவணை கடந்த பாக்கிகள் காரணமாக 1978-79-ல் பயிர்க் கடன்களைக் குறியீட்டு அளவிற்குக் கொடுக்க முடியாமல் போனதன் காரணமாக, அவ்வாண்டில் இரசாயன உர விற்பனையின் அளவும் குறைய நேரிட்டது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிச் சங்கமும் 9 கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து 170.50 இலட்சம் ரூபாய் செலவில் நெல், பருத்தி, வேர்க்கடலை, தானியங்கள், பயிறு வகைகளின் தரமான விதைகளைப் பெருக்குவதற்கான விதை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துகின்றன. 11 இடங்களில் 23,000 ஏக்கர் நிலத்தில் 25,000 டன் விதைகள் இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்தின் 93.50 இலட்சம் ரூபாய் செலவிலான முதற்கட்டம் விரைவில் நிறைவு பெற உள்ளது. இதற்காக இத்திட்டத்தை நிறைவேற்றும் சங்கங்களுக்கு அரசு 71.21 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.


*கண்ணைக் கவரும் வண்ணப் புடவைகள் !*
*கருத்திற் கிசைந்த அழகிய டிசைன்கள் !*
*அத்தனையும் ஒருங்கே அமைந்த கைத்தறி ஆடைகளை*
*வாங்கச் சிறந்த இடம் !*

**அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி &**
**விற்பனை சங்கம் லிமிடெட்,**

எண். 532, அம்மாப்பேட்டை : : சேலம்-636003.

அனைவரும் வாரீர் ! ஆதரவு தாரீர் !!

*எங்கள் கிளைகள்*

1. தேர் நிலையம், சேலம்-1.
2. 118, ராஜ வீதி, கோவை-1.
3. 292, அக்ரஹார வீதி, ஈரோடு.
4. 257, மெயின் பஜார், ஆத்தூர்.
5. கடை வீதி, அரூர்.
6. உஸ்மான் ரோட், தி. நகர், சென்னை-17.
7. மல்லேஸ்வரம், பெங்களூர்-3.
8. செவ்வாய்பேட்டை, சேலம்-2.
9. சின்னக்கடை வீதி, திருச்சி.
10. மேல ரத வீதி, திருநெல்வேலி டவுன்.
11. ஆலங்காயம் ரோடு, திருப்பத்தூர்.
12. செண்ட்ரல் பஜார், நெய்வேலி டவுன் ஷிப்.
13. தலைமை அலுவலக சில்லறை விற்பனை நிலையம்.

மொத்த விற்பனை நிலையங்கள் :—தலைமை அலுவலகம் மற்றும் சேலம்-1.

எங்கள் சங்க தயாரிப்புகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

போ. வெ. சுப்பிரமணியன்,
துணிநூல் கட்டுப்பாடு அலுவலர்/துணைச் செயலாளர்.

கொ. அ. சின்னசாமி,
துணை இயக்குநர்/தனி அலுவலர்.


**நுகர் பொருட்கள் விற்பனை :**

பொதுமக்களுக்கு, குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கும் நலிந்த பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் இன்றியமையாத நுகர்பொருட்கள் தரமானவையாகவும், நியாய விலையிலும் சரியான எடையுடனும் கிடைக்கச் செய்யும் பொருட்டு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பாடுபடுகின்றன. இச்சங்கங்கள் 1977-78-லும், 1978-79-லும் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு முறையே 139 கோடி ரூபாயும் 155 கோடி ரூபாயும் ஆகும்.

**கிராமக் கடைத் திட்டம் :**

அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், மிளகாய், புளி, தனியா, கடலைஎண்ணெய் ஆகியவை கொண்ட கடைகள் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் திறக்கப்படும். சில்லறைக் கடை மூலம் விநியோகம் செய்து கிராமப்புறப் பகுதிகளில், அத்தியாவசியப்பண்டங்கள் நியாயமான விலையில் தாராளமாகக் கிடைக்க மாநிலம் முழுவதிலும், பொது விநியோக முறையை அரசு கொண்டு வந்துள்ளது. செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை சேலம், கோயமுத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் கிராமக் கடைகள் திறக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், தர்மபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இக்கடைகள் திறக்கும் பொறுப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை, கூட்டுறவுச் சங்கங்கள் மேற்சொன்ன 10 மாவட்டங்களில், 6,009 ரெவின்யூ கிராமங்களில் புதுக்கடைகளைத் திறந்துள்ளன. இது தவிர, எல்லா மாவட்டங்களிலும், 4,369 நியாய விலைக் கடைகள் முழு அளவு நுகர்பொருள் விற்பனைக் கடைகளாக மாற்றப்பட்டு எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும், கிராமப்புற மக்களுக்கு வழங்கி வருகின்றன. இந்த 10,378 கிராமக் கடைகள், அத்தியாவசியப் பண்டங்களை, நியாய விலைகளில் விநியோகம் செய்வதன் மூலம் கிராமப் புறங்களில் ஒரு சாதனையைச் செய்துள்ளன. அரசு ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும், புதுக் கடைகள் திறப்பதற்கு, ஒவ்வொரு கடைக்கும் தளவாட மற்றும் இதர சாதனங்கள் வாங்குவதற்கென மூலதன மானியமாக ரூ. 1,250-ம் சிப்பந்தி மானியமாக ரூ. 2,400 நிதி உதவியாக வழங்கியுள்ளது.

**சிமெண்ட் விநியோகம் :**

1-1-79 முதல் சிமெண்ட் விநியோகத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய அளவில் ஏற்று நடத்தி வருகின்றன. எல்லா கூட்டுறவுக் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம விற்பனைச் சங்கங்கள், பிரதம பண்டகசாலைகள், பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் ஆகியவையும் சிமெண்ட் விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் 1979 ஜனவரி முதல் மூன்று மாதங்களில் மட்டும் 38,000 டன் சிமெண்டை விநியோகித்துள்ளன. கிராமப் புறங்களில் தேவையுள்ளோருக்கு சிமெண்ட் கிடைக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் உதவுகின்றன.

**சிறப்பு அங்காடிகள் திறத்தல்**

1977-78 மற்றும் 1978-79 ஆண்டுகளில் மூன்று சிறப்பங்காடிகளும் 39 சிறப்புச் சிற்றங்காடிகளும் நிறுவிட அரசு நிதி உதவி வழங்கியது.

**சிறு கிளைகள், மக்களங்காடிகள் திறத்தல் :**

சமூகத்தில் நலிந்த பிரிவினருக்குச்சேவை செய்வதற்காக, மத்திய அரசு நிதியுதவியுடன்



பின்தங்கிய பகுதிகளில், சிறு கிளைகளும், மிகவும் பின்தங்கிய பகுதிகளில் மக்களங்காடிகளும் நிறுவ நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், ஒரு சிறு கிளை ஆரம்பிக்க, 25,000 ரூபாயும் ஒரு மக்களங்காடி ஆரம்பிக்க 14,000 ரூபாயும் நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஈராண்டுகளில் 50 சிறு கிளைகளும் 85 மக்களங்காடிகளும் நிறுவிட நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**பொதுச் சமையல் நிலையங்கள்**

விடுதியில் தங்கிப் பயில வசதி இல்லாமல் கிராமப் பகுதிகளில் இருந்து வந்து கல்லூரிகளில் பயிலும் வசதியற்ற மாணவர்களுக்குக் குறைந்த விலையில் மதிய உணவு வழங்கும் பொருட்டு பொதுச் சமையல் நிலையங்களை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு நிதி உதவியுடன் மாநில அரசு கல்லூரிக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு நிதி உதவி அளித்துள்ளது. கடந்த ஈராண்டுகளில் 27 கல்லூரிகளில் பொதுச் சமையல் நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**மண்டல நுகர்பொருள் விநியோக நிலையம்**

சென்னை, செங்கற்பட்டு வடஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்

# நாங்கள் அவன் வயிற்றில் அடித்துவிட்டோம்!

## பிச்சைப்பாத்திரத்தைப் பிடுங்கியதன் மூலம்.



ஆம், அவன் பிச்சைப் பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்து விட்டோம். நாங்கள் அவனைச் சந்திக்கும்முன்...அவன் மனிதர்களின் இறுதிச் சடங்குகளில் பாடுவான். ஒரு வறண்ட ரொட்டிக்காக, அழுது கொண்டிருக்கும் உறவினர்களின் கால்களை முத்தமிடுவான்.

### தன் கையே தனக்குதவி:

உண்மைதான். ஆயின் ஒரு பிச்சைக்காரன், ஓடி முன் வைத்தால், மற்றவர்கள் ஓடி பின்வாங்குவார்கள்......பிச்சைக்காரனுடன் உறவு வைத்துக்கொள்ள யார்தான் விரும்புவார்கள்!

### நாங்கள் செய்வது என்ன:

கையில் காசில்லாத இந்த ஏழைகளில் சிலர், ஒவ்வொரு நாளும் எங்களிடமிருந்து பணவுதவி பெறுகின்றனர். ஒரு தொழிலைத் தொடங்க, வீடுகட்ட, புத்தகங்கள் வாங்க, சமுதாயத்தில் அவர்களும் மனிதர்களாய் தலைநிமிர்ந்து உலவ உதவுகிறோம்.

### புதுமையான பாங்கிங் முறை:

சமுதாயத்தில் நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு உதவும் இத்தகைய தன்னிகரற்ற திட்டங்களை ஸ்டேட் பாங்கின் ஒரு விசேஷ அமைப்பு உருவாக்கித் தருகிறது.

நகர்ப்புறச் சேரிகள். பள்ளிகள். மருத்துவமனைகள். சிறைச்சாலைகள். புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள். ஸ்டேட் பாங்கின் சேவைக் கரம் எட்டாத இடமே இல்லை.

### பண்ணைகளும் விவசாயிகளும்:

விவசாய அபிவிருத்திக் கிளைகள் கொண்ட ஒரே பாங்க் இதுதான். விவசாயத்தின் அன்றாடத் தேவைகள், புதுமையான விவசாயத் திட்டங்கள் ஆகியவற்றுக்குப் பொருளுதவி செய்ய விசேஷ பாங்குகள் உண்டு.

### ஒவ்வொரு கனவையும் நனவாக்கும் திட்டம்:

உங்கள் மகனை மேற்படிப்புக்கு வெளி நாடு அனுப்ப, தொல்லையற்ற ஓய்வுகால வாழ்வுக்கு, சொந்த வீடு கட்ட, காய்கறித் தோட்டம் அமைக்க, புத்தம் புதிதாக மின்னும் வாடகைக்கார் வாங்கிவிட, நேர்மையான வியாபாரத்திற்கு நேர்மையான முதலீடு செய்ய......

### உலகிலேயே மிகப் பெருமளவு பாங்கிங் வசதி கொண்டது:

ஏறக்குறைய 5000 அலுவலகங்கள் கொண்ட ஸ்டேட் பாங்க், தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகப் பெருமளவு பொருளுதவி செய்கிறது. அதோடு சர்வதேச பாங்கிங் துறையில் பாரதத்தின் பிரதிநிதியாகப் பெரும்பங்கு வகிக்கிறது.

நாங்கள் வளர்கிறோம். அளவில் மட்டுமல்ல. எங்கள் ஈடுபாட்டிலும்தான்.

**ஸ்டேட் பாங்க்**

சேவைக் கரம் நீட்டி நெருங்கியே வளர்வோம்

SB: 3955A


**வீட்டு பிரச்சினை இன்றைய பிரச்சினைகளுள் முக்கிய அங்கம் வகிக்கின்றது. எல்லாருக்கும் வீடுகள் என்ற நோக்கத்துடன் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகக் கிராமங்களில் உள்ளோர் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்கள் இன்று செயல் வடிவம் பெறுகின்றன.**

தமிழ்நாட்டில் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 1950-ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன.

இத்திட்டம் 73-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தோடு நிறுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலமாக ரூ. 1.30 கோடி கடனாகக் கொடுக்கப்பட்டு 1960 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

**கிராம வீடுகட்டும் திட்டம்**

'கிராம வீடு கட்டும் திட்டம்' என்று ஒரு திட்டம் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) மூலமாக 1966-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்தது. இத்திட்டத்திற்கு அரசே வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து வந்தது.

இத்திட்டத்தின் மூலமாக 1966-ஆம் ஆண்டிலிருந்து 31-3-1976 வரை 8,584 வீடுகள் ரூ. 3.59 கோடி மதிப்பிற்குக் கட்டப்பட்டு இருக்கின்றன.

மேற்படி கிராம வீடு கட்டும் திட்டத்தை, நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று அரசு முடிவெடுத்தது. 1976 ஏப்ரலில் அதற்கான உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவுப்படி 10 வட்ட கிராமியக்கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 1976-77ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. இதை மேலும் விரிவாக்கித் தமிழ்நாட்டிலுள்ள அத்தனைக் கிராம மக்களும் வீடு கட்டிக் கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், 50 கிராமிய கோட்ட அளவிலான கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 77-78-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. 10 கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகவும், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் வீடு கட்டுவதற்கான கடன் தொகையைத் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் வழங்குகிறது.

ஒன்றரை செண்ட் நிலம் வைத்திருப்பவர்கள் இந்தச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ந்து வீடு கட்டக் கடன் பெறலாம்.

ஒரு நபர் ரூ. 5,000 வரை கடன் பெறலாம். இந்தக் கடனை 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். மாத வருமானம் ரூ. 300 வரை உள்ளவர்களுக்கு $9\frac{1}{4}$ வட்டியும், ரூ. 300-லிருந்து 600 வரை உள்ளவர்களுக்கு $10\frac{3}{4}$ சதம் வட்டியும் வசூலிக்கப்படுகிறது. அரிசனங்களுக்குவட்டி கிடையாது. உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வீடு கட்டலாம். இந்தச் சங்கங்களின் மூலமாக 78-79-ஆம் ஆண்டிற்கு 20,000 கடன்கள் ரூ. 10 கோடி மதிப்பிற்கு அனுமதி வழங்கி 10,000 வீடுகள் 5 கோடி மதிப்பிற்கு 30-6-79 முடிய முடிக்கப்பட வேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

**அரசு உத்தரவு**

தவிரவும், தமிழ்நாடு அரசு தனது 16-2-79 தேதியிட்ட ஆணையில், வருகின்ற 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 3000-க்குள் வீடு கட்டும் அரிசனங்களுக்கும், பெருவாரியான அரிசனங்கள் குடியிருக்கும் பகுதிகளில் ரூ. 3000-க்கு மேற்படாமல் வீடு கட்டிக் கொள்ள விரும்பும் மற்ற வகுப்பினர்களுக்கும் கடன் தொகையில் 20 சதம் அல்லது ரூ. 600 இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்கப்படும். மற்றும் ரூ. 5,000 வரை வீடு கட்டிக் கொள்ளக் கடனாகப் பெறும் எல்லா அரிசனங்களும் செலுத்த




இதுவரை 2511 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. 6580 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. சுமார் ரூ. 8 கோடி மதிப்பிற்கு 16,800 கடன் மனுக்கள் மத்திய சங்கத்திற்கு அங்கீகாரத்திற்காகப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கின்றன.

வேண்டிய வட்டியை அரசு செலுத்த இசைந்துள்ளது.

அரசு ஆணைப்படி 1979-80, 80-81 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 20,000 வீடுகளும், 1981-82, 1982-83 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 25,000 வீடுகள் வீதம் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வரிசையிலும்
இரண்டு முதற்பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூபாய்
50,000
3 இரண்டாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூபாய்
10,000.
5 மூன்றாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூபாய் 5,000.
மேலும் ஏராளமான இதர பரிசுகள்.
மொத்த பரிசுகள்: 7,965.
மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 11,70,000.
குலுக்கல் நாள்: 20.6.79.
பரிசுச் சீட்டின் விலை ரூ. 1/-
வெளியிடுவோர்:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
சென்னை 600 002.





கோடையிலே இளைப்பாற
குளிர் தருவும்
தரு நிழலும் போல
—வறுமை
கோடையிலே இளைப்பாற
தமிழக அரசு
பரிசுச் சீட்டும்
அது தரும்
பரிசுத் தொகையும்.
ELEGANT


களுக்கு நுகர்பொருட்களை விநியோகிக்க சென்னையில் 72.50 இலட்சம் ரூபாய்மொத்த மதிப்பீட்டு செலவில், மண்டல நுகர்பொருள் விநியோக நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்காக முதல் தவணையாக 25 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கம்**

கிராமப் பகுதிகளில் மின்சாரத்தைப் பரவலாக வழங்குவதற்கும், மின் இணைப்புக் கொடுப்பதை விரைவுபடுத்தவும், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவும் பொருட்டும், தமிழ்நாட்டில் முதன்முதலாக கும்பகோணத்தில் ஒரு கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இச் சங்கம் சுமார் 150 இலட்சம் ரூபாய் முதலீடு கொண்டிருக்கும்.

**நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள்**

நலிந்த பிரிவினருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், அவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தம் பணிகளைப் பெருக்கிடும் பொருட்டு அவற்றிற்கு உதவி செய்தல் ஆகியவற்றிலும் அரசு அக்கறை கொண்டுள்ளது.

**மலைக் குடியினருக்கான பெரிய அளவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்**

மலைச் சாதியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒரே இடத்தில் கடன் மற்றும் விற்பனை வசதிகளுக்கும் ஏனைய ஒருங்கிணைந்த பணிகளுக்கும் வகை செய்யும் பொருட்டு (Lamps) என அழைக்கப்படும் பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் இரண்டு 1977-'78-ல் அமைக்கப்பட்டன. இவை வட ஆர்க்காடு மாவட்டத்தில் புதூர் நாட்டில் ஒன்றும் சேலம் மாவட்டத்தில் அருநூத்து மலையில் மற்றொன்றுமாக அமைக்கப்பட்டன. சேலம், தர்மபுரி, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள மலைச்சாதியினருக்காக ஏற்கெனவே 1976-'77-ல் அமைக்கப்பட்டு இயங்கி வரும் 7 சங்கங்கள் உட்பட இவ்வகைச் சங்கங்கள் ஒன்பது உள்ளன. இவையன்றி, தென்ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்றுகளில், மலைச் சாதியினர் வசிக்கும் பகுதிகளில் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூன்று செயல்பட்டு வருகின்றன. மலைச் சாதியினரின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு இச் சங்கங்கள் கிடங்கு கட்டுவது, வாகனங்கள் வாங்குவது போன்ற காரியங்களுக்கு அரசு தாராளமாக நிதி உதவி வழங்கியுள்ளது. இச் சங்கங்களிலிருந்து மலைச் சாதி உறுப்பினர்கள் பெறும் குறுகிய கால, மத்திய காலக் கடன்களுக்கு மிகக் குறைந்த வட்டியே, அதாவது 4 சதவீத வட்டியே வசூலிக்கப்படுகிறது. சாதாரணமாக வசூலிக்கப்படும் வட்டி வீதங்களுக்கும், இந்த வட்டி வீதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு ஈடு செய்கிறது. இதுவரை 15,062 பழங்குடியினரை உறுப்பினர்களாகச் சேர்த்துள்ள இச் சங்கங்கள் ஆற்றிய பணிகள் வருமாறு:—

**சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கம்**

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களை, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களுக்காக நியாயமற்ற முறையில் வாடகை வாங்கும் தனி முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவேண்டி, அவர்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து எளிதான வகையில் அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் தரத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்படியாக மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லில் ஐம்பது சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்க ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முப்பது சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இச்சங்கத்திற்கு அரசு 80,500 ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் இது போன்ற இன்னொரு சங்கம் ஆரம்பித்து 30 உறுப்பினர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்:**

நவீன உலர் சலவைப் பிரிவுகளை அமைத்து உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்காக சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் 33,000 ரூபாய் வீதம் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இவ்வகையில் 1977-'78-ல் இரு சங்கங்களுக்கும் 1978-'79-ல் இன்னும் இரு சங்கங்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள்**

நவீன முடிதிருத்தும் நிலையங்களை அமைப்பதற்காக முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள், ஒவ்வொன்றுக்கும் 21,000 ரூபாய் வீதம் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. 1977-'78-ல் இரு சங்கங்களுக்கும் 1978-'79-ல் இன்னும் இரு சங்கங்களுக்கும் இவ்வகை நிதியுதவி அளிக்கப்பட்டது.

**தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

நலிந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியை தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன. இவ்வகைச் சங்கங்களுக்கு வேலை ஒப்பந்தங்களைத் தந்தும், நிதியுதவி செய்தும், கூட்டுறவு மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களின் சேவைகளைத் தந்தும் அரசு உதவி வருகிறது. 1977-'78-ல் ஐந்து சங்கங்களுக்கும் 1978-'79-ல் மூன்று மலை வாழ் மக்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசு உதவியது.

**கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்**

சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி சுமார் 40 இலட்ச ரூபாய் செலவில் கல்லூரிக்காகவும், விடுதிக்காகவும், கட்டடம் கட்டி வருகிறது. இதற்காக மத்திய அரசும், மாநில அரசும் ஒவ்வொன்றும் பத்து இலட்சம் ரூபாய் மானியம் வழங்கியுள்ளன.

**கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு உதவி வழங்கும் புதிய திட்டங்கள்**

கூட்டுறவுச் சங்கங்கள் தமது பணிகளைச் செம்மையாக நிறைவேற்ற உதவும் பொருட்டு அவற்றிற்கு மானியமாகவும், கடனாகவும், அவற்றின் பங்குத் தொகையில் முதலீடு செய்தும், அவற்றிற்கு; துறைப்பணியாளர்களின் சேவைகளைத் தந்தும் அரசு தொடர்ந்து உதவி புரிந்து வந்துள்ளது.

மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
மேலுரமிட மேன்மையான உரம்
ஸ்பிக் யூரியா





...கிய
...ண்முத்து
...வங்கள்
...திகத் தழைச்சத்து
...6.2%
...மிகக் குறைவான
...பையூரெட்-0.3% தான்
ஆசியாவிலேயே மிகப்
...ரிய, ஸ்பிக் தொழிற்
...லையில் தயாராகிறது.

சிறப்பான
யூரியா வேண்டுமா? ஸ்பிக் யூரியா என்று கேட்டு வாங்குங்கள்.

CAS SPIC 4 TM 77


**இந்த இரண்டாண்டில், பொதுப்பணித்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் புதிய சகாப்தம் படைப்பதாக அமைந்தன!**



# பொதுப் பணித் துறையின் புதிய சகாப்தம்

**பொ**துப்பணித்துறையின் கட்டடப் பிரிவு, பெரும்பாலான அரசுத்துறைகளின் கட்டடங்களின் கட்டுமானம், பராமரிப்பு போன்றவற்றிற்குப் பொறுப்புடையதாக இருந்து வருகிறது. இவற்றின் மிகுதியான வேலைகள் மருத்துவம், கல்வி, காவல், சிறை, வேளாண்மை, கால்நடைத் துறைகளுக்குச் செய்யப்படுகின்றன. மேலும், உள்ளாட்சி அகங்கள், அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் கட்டடங்கள் கட்டுவதில் முகமை ஏற்றுச் (Agency Basis) செயல்பட்டு வருகிறது.

கடலரிப்புத் தடுப்பு வேலைகளும், கட்டடப் பிரிவின் பொறுப்பில் உள்ளது. மேற்குக் கரையில் கன்னியாகுமரியிலும், கிழக்குக் கரையின் சில இடங்களில் முக்கியமாகச் சென்னையிலும், அதனைச் சார்ந்துள்ள பகுதியிலும் கடலரிப்பு தொடர்ந்து ஏற்படும் ஒரு பிரச்சினையாகும். கன்னியாகுமரி கடலோரப்பகுதியில் ரூபாய் 250 இலட்சம் செலவில் பாறையினால் ஆகிய தடுப்புச்சுவர் கட்டுவதற்கான திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் இம்மாதிரியான கடலரிப்புத் தடுப்புத்திட்டங்களை அடிக்கடி பாதிக்கக்கூடிய இடங்களில் நிறைவேற்றுவது பற்றியும் அரசின் பரிசீலனையில் உள்ளது. வெள்ளத் தடுப்பு மற்றும் கடலரிப்புத் தடுப்பு வேலைகளுக்காக நீர்ப்பாசன வரவு-செலவு (1979-80) திட்டத்தில் ரூ. 150 இலட்சத்திற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மெரினா கடற்கரையை மேலும் அழகு படுத்துவதற்காக இக்கடற்கரையின் பாதுகாப்பு, பராமரிப்பு போன்ற பொறுப்புகளை பொதுப்பணித்துறையின் கட்டடப் பிரிவின் வசம் ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேவையான துணைப் பணியாளர்களுடன் ஒரு சிறப்புக் கோட்டத்தையும் அரசு இதற்காக அனுமதித்துள்ளது.

## மின்சாரம்

### நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் :

பன்முறை மாநில அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க மைய அரசு, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கான அனுமதியை 22.2.78-அன்று வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட இருக்கும் அனல் மின் திட்டம் 630 மெகா வாட்டுகள் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். இதற்காகும் செலவு ரூ. 214 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

### தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் :

மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் 210 மெகா வாட் திறன் கொண்ட மூன்றாவது மின் நிலையத்தை நிறுவுவதற்கான அனுமதியை 14.9.77 அன்று மைய அரசு வழங்கியது.

**காடம்பாறை நீரேற்றுச் சேமிப்பு புனல் மின் திட்டம் :**

400 மெகாவாட் திறன் கொண்ட காடம்பாறை நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டத்திற்கு மைய திட்டக்குழு 1973-ஆம் ஆண்டு அனுமதி அளித்தது. என்றாலும் இத்திட்டத்தின் தொழில் நுட்பங்கள் குறித்து மேலும் விவாதிக்கப்பட்டதால், இத்திட்ட வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. டிசம்பர் 1977-ல் இத் திட்டப்பணிகளை மேற்கொள்ளுமாறு மின்வாரியத்திற்கு அரசு அனுமதி அளித்தது. மின்வாரியமும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளை எடுத்துக்கொண்டுள்ளது.

**விவசாயக் காரியங்களுக்கான மின் கட்டணக் குறைப்பு :**

செப்டம்பர் 1975-ஆம் ஆண்டில் முந்தைய அரசு வேளாண்மைக் காரியங்களுக்கான மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 12 காசிலிருந்து 16 காசாக உயர்த்தியது. விவசாயிகளின் இன்னல்களைக் குறைக்கும் பொருட்டு, இவ்வரசு பெரிய விவசாயிகளுக்கு விவசாய மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து, 14 காசாகவும், சிறு விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து 12 காசாகவும் குறைத்துள்ளது. 5 ஏக்கர் வரை புன்செய் நிலமோ அல்லது 2½ ஏக்கர் நன்செய் நிலமோ வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகள் எனக் கருதப்படுவார்கள். விவசாயிகளுக்கு மீட்டர் வாடகை மாதம் ஒன்றுக்கு ரூ 5-லிருந்து ரூ 4-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

**பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு விதி முறை:**

தமிழ்நாட்டில் 12 இலட்சம் வேளாண்மைக் கிணறுகளுக்கு உரிய மின்சார விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குதல் என்று திட்டமிட்டதில் சுமார் 8.43 இலட்சம் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரி வந்த விண்ணப்பங்களில் 2.5 இலட்சம் விண்ணப்பங்கள் குறித்து இன்னும் மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. இத்தேக்கத்தை விரைவாகப் போக்கும் நோக்கோடு, விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்த கொள்கைகள், நடைமுறைகளை வாரியம் திருத்தி அமைத்துள்ளது. இதுவரையில், மின் இணைப்பு வழங்குவதற்கான திட்டங்களின் பேரில் 10 சதவித வருவாய் கிடைக்க வேண்டும் என்று வாரியம் வலியுறுத்தி வந்தது. நடைமுறையில் கண்ட சில சிக்கல்களைக் களையும் பொருட்டும், வேளாண்மைத் துறைக்கு இயன்றவரை எல்லா வகையான ஊக்கத்தையும் அளிக்கும் நோக்கத்துடனும், மேற்சொன்ன இந்த வரையறையை வருங்காலத்தில் வலியுறுத்துவதில்லை என்று மின்வாரியம் தற்போது தீர்மானித்துள்ளது. 1978-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் உள்ள விண்ணப்பங்கள் அனைத்தும், திறுவன நிதி உதவி பெற்ற விண்ணப்பங்கள், வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களின் கீழ்வரும் விண்ணப்பங்கள் ஆகியவற்றிற்கு, உயர் முன் உரிமை வழங்கப்படுவதற்கு உட்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முடிவு செய்யப்படும்.



1978-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து புதிய விண்ணப்பங்கள் அனைத்தும் மனுச் செய்த நாளின் அடிப்படையில் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு முடிவு செய்யப்படுகின்றது. இருப்பினும், கம்பம் நடுதல், மின் மாற்றிகளின் திறனை அதிகரித்தல், ஃபீடர்களை இரட்டித்தல், கண்டக்டர்களை வலுப்படுத்துதல், கம்பித் தொடரை விரிவாக்குதல், முதலிய பணிகள் இல்லாமல் இருக்கும் மனுக்கள் தனியாகப் பதிவு செய்யப்பட்டு மின் இணைப்பு நேரடியாக வழங்கப்படும்.

**குடிசைவாசிகளுக்கு மின் இணைப்பு :**

200 சதுர அடிக்கு அதிகப்படாமல் மண் சுவரும், கீற்றுக்கூரையும் கொண்ட கிராமப்புற குடிசைகளுக்கு ஒரு விளக்கு மட்டும், மீட்டர் வைக்காமல் மின்சாரம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மின் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 2.50 ஆகும். வைப்புத்தொகை ரூ. 2.50. குடிசைவாசிகள் விரும்பினால் ரூ. 10- வசூலித்து-குடிசையில் ஒரு விளக்குக்கான ஒரு முனை வயரிங் செய்து ஒரு பல்பும் (40 வாட்டு) மின்வாரியம் வழங்கும்.

**இடப்பட்டியல் முறை :**

உயர் அழுத்த மின் பயனீட்டாளர்களுக்கு, அந்தந்த இடத்திலேயே மின் கட்டணப்பட்டியல்கள், கொடுக்கும் முறை பற்றி உத்தரவு இடப்பட்டுள்ளது. மேலும், சென்னை நகர மின் துய்ப்பாளர்களுக்கு அந்தந்த இடத்திலேயே மின் கட்டணப் பட்டியல் தயார் செய்து கொடுக்கவும், பாங்குகள் மூலம் கட்டணம் செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. உயர் அழுத்த மின்சாரப் பயனீட்டாளர்களிடம் முந்தைய 12 மாத கால அளவில் 3 திங்கள் உயரளவு மின்பயனுக்கான கட்டணத்தொகையை பிணையமாகக் கேட்பதற்குப் பதிலாக 1½ திங்கள் உயரளவு மின் பயனுக்கான தொகையைப் பிணைய வைப்பீட்டுத் தொகையாக வசூலிக்கலாம் என்றுநவம்பர் 1978-ல் ஆணையிடப்பட்டது.



**நாமே முன் வந்து தகவல் தந்தால்...**

பயனீட்டாளர்கள் ஒப்பந்தப்படி பயன்படுத்த வேண்டிய மின் சுமைக்குக் கூடுதலாகவும், அங்கீகாரமில்லாமல் பயன்படுத்துகிறார்கள். இவற்றால் மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது. இதற்கு, பயனீட்டாளர்களுக்குத் தண்டனை அளிக்க மின்வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது. அப்படி அதிகாரத்தைப் பயன்படுத்தினால், பயனீட்டாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக 31.7.79-க்கு முன் தாங்கள் உண்மையாகப் பயன்படுத்தும் மின்சுமை பற்றிய விவரங்களை அவர்களாகவே மின் வாரியத்திற்கு அளித்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அவற்றைச் சரிசெய்து உண்மையான மின்சுமைக்கு அங்கீகாரம் அளிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**வீடுகளுக்கு மின் இணைப்பு :**

வீடுகளுக்கு மின் இணைப்பு கேட்டு வரும் மனுக்கள், ஏற்கெனவே இருக்கும் கம்பித் தொடரிலிருந்து மின்சாரம் பெறுதல், மற்றொன்று புதிதாக கம்பித் தொடர் போட்ட பின் மின்சாரம் பெறுதல் ஆகிய இரண்டு வகையில் பரிசீலனை செய்து மனுக்கள் கிடைக்கப்பெற்ற தேதியின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியலின்படி மின் இணைப்பு வழங்கப்படும். இதற்கு 10 சதவீதம் வருவாய் வற்புறுத்தப்படமாட்டாது.

**சிறுதொழில்களுக்கு ஊக்களித்தல் :**

குறைவழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழில்கள் அனைத்திற்கும், 10 சதவீத வருவாய் வற்புறுத்தாமல், மின் இணைப்புகள் மனுக்கள் பெற்ற தேதியின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து மின்சாரம் வழங்கப்படும். இம் மின் இணைப்புக்களுக்கு உள்ளாட்சி மன்றங்களிலிருந்து அல்லது இதர அதிகாரிகளிடமிருந்து உரிமங்கள் தரப்பட வேண்டும் என்ற விதியையும் ரத்து செய்ய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**தெருவிளக்கு மற்றும் குடிநீர் பம்புசெட்டுகளுக்கு மின் வழங்கல் :**

வீதிகளுக்கு, புதிதாக விளக்குப் போடுவதற்கும், குடிநீர் பம்பு செட்டுகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு இதுவரை உள்ள 10 சதவீத வருவாய் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின் கட்டணம் :**

130 குதிரை சக்தித் திறனுக்கு அதிகமான மின் பளு கொண்ட நீரேற்றுப் பாசன கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1.6.1978 முதல் 35 காசு முதல், 37 காசுவரை இருந்த கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 14 காசு என்று குறைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெருவிளக்குகளைப் பராமரிப்பது பற்றிய சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்து புதிய வழிமுறைகளை அரசு வகுத்துள்ளது. இதன்படி பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான பல்புகள் மற்றும் குழல் விளக்குகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் வாங்கி வழங்கும். நகராட்சிகளுக்குத் தேவையானவற்றை அவையே வாங்கிக் கொள்ளும். பழுதடைந்த பல்புகளை மாற்றியமைக்க ஒரு பல்புக்கு 50 காசு வீதமும், குழல் விளக்கு ஒன்றுக்கு ரூ. 1-வீதமும் பெற மின்வாரியத் தொழிலாளிகள் தகுதியுடையவராவர். இந்தத் தொகையை மின் வாரியம் ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து வசூல் செய்யும்.

**ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள புதிய திட்டங்கள் :**

**பெரியாறு வைகை பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துதல் :**

பெரியாறு வைகைப் பாசனத் திட்டத்திற்கு 41.04 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், முக்கிய கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள், துணைக் கால்வாய்கள் கண்ணி வாய்க்கால்கள் ஆகியவற்றின் இரு கரைகளையும் 10 ஹெக்டேர் பகுதி வரையில் சிமிட்டிக்





கற்கலவை கொண்டு கட்டுவதன் மூலம் பெரியாறு-வைகைப் பாசனத்திட்டத்தின் தற்போதுள்ள முறையை முழுவதும் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 21 கோடி ரூபாயை வழங்க உலக வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. தற்போதுள்ள பாசனத்திற்கு நீர்கொண்டு செல்லும் முறையில் ஏற்படும் நீர் இழப்பைக் குறைக்கும் வண்ணமும், பாசனம் பெறும் பகுதியை 35 சதவீதம் அதிகரிக்கவும், அதாவது சுமார் 56,000 ஏக்கர் பரப்பளவில் அதிகரிக்கவும் இந்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய ஐந்து கூறுகள் பின் வருமாறு:—

(1) வைகை ஆற்றுக்குக் குறுக்கே தற்போதுள்ள வைகை அணைக்குக் கீழே சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சிற்றணையிலிருந்து தற்போதுள்ள பேரணை ரெகுலேட்டர் வரை காரை பூசப்பட்ட, இணைப்புக் கால்வாய் அமைத்தல்.

(2) தற்போதுள்ள பெரியாறு முக்கியக்கால் வாய்க்குக் கரை பூசுதல்.

(3) பெரியாறு முக்கியக் கால்வாய்த் திட்டத்தின் கீழ் விரிவாக்கக் கால்வாயைத் தோண்டுதலும், காரை பூசுதலும்.

(4) தற்போதுள்ள காரை பூசப்பட்ட திருமங்கலம் முக்கியக் கால்வாயை மேம்படுத்துதல், தற்போதுள்ள கிளைக் கால்வாய்கள், துணைக் கால்வாய்கள், தற்போது செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள விரிவாக்கக் கால்வாய்கள் ஆகியவற்றிற்குக் காரை பூசுதல்.

(5) பெரியாறு-வைகைப் பாசனத் திட்டத்தின் கீழ் வரும் சுமார் 600 ஏரிகளை மேம்படுத்துதல் முதலியன.

### 1979-80-ம் ஆண்டிற்கான் திட்டம் :

இணைப்புக் கால்வாயில் 33 கிலோ மீட்டரில் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கும், அதன் கிளைக் கால்வாய்களில் 40 கிலோ மீட்டரில் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கும் பணியைச் செய்து முடிப்பது என்று திட்டமிடப்பட்டுள்ளது.

பெரியாறு முக்கியக் கால்வாயில் 1.50 கிலோ மீட்டர் தூரத்திற்கு இப்பணி முடிக்கப்பட்டுவிடும். இத்துடன் முக்கியக் கால்வாயின் நீளம் 58 கி.மீ. முழுவதும் முடிக்கப்படும். பெரியாறு கிளைக் கால்வாய்களில் மொத்தமுள்ள 109 கிலோ மீட்டர் தூரத்தில் 43 கிலோ மீட்டர் தூரம் வரையிலும், அதன் துணைக் கால்வாய்களில் 583 கிலோ மீட்டர் தூரத்தில் 113 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் இப்பணி முடிக்கப்படும்.

பெரியாறு விரிவாக்கக் கால்வாயில் 6.8 கிலோ மீட்டர் தூரம் வரையில் இப்பணியை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விரிவாக்கக் கால்வாயின் மொத்தத் தூரமான 59 கிலோ மீட்டரில் 25 கிலோ மீட்டர் தூரம் வரையிலும், துணைக் கால்வாய்களில் 103 கிலோ மீட்டர் தூரத்தில் 40 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் இப்பணி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருமங்கலம் முக்கிய கால்வாய்க்கு 1978-79-ல் மேம்பாடுகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கிளைக் கால்வாய்களில் மொத்தமுள்ள 23 கிலோ மீட்டர் தூரத்தில் 12 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் விரிவாக்கக் கால்வாயில் மொத்தமுள்ள 16 கிலோ மீட்டர் தூரத்தில் 6 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 230 ஏரிகளையும், 290 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலைகளையும் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979-80-ல் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ள தொகை குறித்த விவரங்கள் பின் வருமாறு:

| | ரூபாய் (கோடியில்) |
|---|---|
| 1. இணைப்புக் கால்வாய் | 2.00 |
| 2. பெரியாறு முக்கியக் கால்வாய் | 2 95 |
| 3. விரிவாக்கக் கால்வாய் | 1.16 |
| 4. திருமங்கலம் முக்கியக் கால்வாய் | 0.37 |
| 5. ஏரிகளும் சாலைகளும் | 1.22 |
| 6. வேளாண்மை விரிவாக்கத் திட்டம் முதலியவைபோன்ற பல்வேறு பணிகள் | 2.85 |



இத்திட்டம் 1976-77-ல் தொடங்கப்பட்டது. இது 1981-82-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### காவிரி நீர்ப்பிரச்சினை :

கருநாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பாய்கின்ற அனைத்து மாநில ஆறு காவிரியாறு. காவிரி நீரைப் பயன்படுத்துவது குறித்து 1892-ஆம் ஆண்டு 1924-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு, மைசூர் மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப் பட்டன. தமிழ்நாட்டில் இந்த ஆற்றின் மூலம் பாசனம் பெறும் ஆயக்கட்டுகளுக்கு தொன்று தொட்டே பாசன உரிமைகள் இருந்ததால், இந்த ஒப்பந்தங்கள் அந்தப் பாசன உரிமைகளைப் பாதுகாக்கும் முறையில் இருந்தன.

கருநாடக அரசு, இந்த ஒப்பந்தங்களுக்குப் புறம்பாக காவிரியிலும், அதன் கிளை ஆறுகளிலும் பாசனத் திட்டங்களைத் நிறைவேற்றுகின்ற நடவடிக்கையினால் தமிழ்நாட்டுக்கும், கருநாடக மாநிலத்திற்கும் இடையே தகராறு எழுந்தது.

1977-ஆம் ஆண்டு மக்களாட்சி அமைக்கப்பட்ட பின்னர் தமிழக அரசால் இப்பிரச்சினை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. காவிரி நதி நீர்ப்பிரச்சினையில், தமிழ்நாட்டின் நிலையைப் பற்றி முடிவுசெய்ய முதலமைச்சர் . தலைமையில் 29.8.78-ல் சட்டமன்ற சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கொப்ப இப்பிரச்சினையில் தமிழ்நாட்டின் கொள்கை என்ன என்பதைப் பற்றிய விவரமான குறிப்பு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. 3.9.1978-ல் டில்லியிலும், 9.10.78-ல் பெங்களூரிலும், மத்திய விவசாய அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் வழிமுறை சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் மாநாட்டில் இது குறித்து விவாதிக்கப்பட்டது. ஆனால் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. தமிழ்நாட்டிலுள்ள காவிரி ஆற்றின் ஆயக்கட்டினுடைய நலன்களை முழுமையாகப் பாதுகாக்கின்ற வகையில் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண, மேல் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு ஆய்ந்து வருகின்றது.

### சென்னை நகருக்குக் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு வருதல்:

ஸ்ரீ சைலம் நீர்த்தேக்கத்திலிருந்து சென்னை மாநகருக்குக் குடிதண்ணீருக்காக 15 ஆயிரம் மில்லியன் கனஅடி கிருஷ்ணா ஆற்று நீரைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் குறித்து 1978-ஆம் ஆண்டு ஜூன்



திங்கள் 15-ஆம் நாளன்று ஆந்திர மாநில முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வினை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. ஆந்திர அரசு தனது பகுதியில் ஆய்வினை மேற்கொள்வதற்கென நான்கு கோட்டங்களைக் கொண்ட ஒரு வட்டத்தினை அமைத்துள்ளது. அதே போன்று தமிழ்நாட்டு எல்லைக்குள் ஆய்வினை மேற்கொள்ளுவதற்கென ஒரு சிறப்புக் கோட்டம் இவ்வரசினால் அமைக்கப்பட்டுள்ளது. இரு மாநிலங்களிலும் ஆய்வு வேலைகள் மிக வேகமாக நடந்து வருகின்றன. இவ்வேலையின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்வதற்கென இரு மாநிலங்களின் அரசு அதிகாரிகளைக் கொண்ட ஒரு தொடர்புக் குழு (Liaison Committee) அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு அவ்வப்பொழுது, வேலைகளில் ஏற்படும் முன்னேற்றம் குறித்துப் பரிசீலிக்கறது.

### கடந்த இரண்டு ஆண்டு (1977-79) நீர்ப் பாசனத்திட்ட முன்னேற்றம் :

கடந்த இரண்டு ஆண்டுகளில் பருவ மழை சாதகமாக இருந்ததன் பொருட்டு எல்லா நீர்த்தேக்கங்களும் முழுமையான நீரைப் பெற்றன. உண்மையில் சில இடங்களில் வெள்ளமும், வெள்ளச் சேதமும் பிரச்சினையாகவே இருந்தது. 1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தை ஈடுகட்டவும் நீர்ப்பாசன அமைப்புக்களைப் பலப்படுத்தவும் எல்லாவிதமான நிவாரணப் பணிகளும் சிறந்த முறையில் செய்யப்பட்டன.

பயிர்களுக்காக பயிர்க்காலங்கள் முழுவதும் எல்லா நீர்ப்பாசன முறைகளும் குறித்த காலத்தில் திறந்துவிடப்பட்டன. நீர்த் தேக்கங்களில் கூடுதலாகச் சேமிக்கப்பட்ட நீரினால் சில முறைகளில் கூடுதல் பயிர் விளைவிக்கப்பட்டன.

பெரிய மற்றும மத்திய நீர்ப்பாசனத் திட்டங்களில் முன்னேற்றம் பொதுவாக வழக்கம் போலவே இருந்தது. இந்த ஆண்டுகளில் கூடுதலா உள்ளடங்கிய 15.46 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு பாசனத்திற்காக ஏற்பளிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் ஓசூர் அருகில் தென்பெண்ணையாற்றின் குறுக்காக அமைந்துள்ள கிளவரப்பள்ளி அணைத் திட்டமும் 41 கோடி ரூபாய் செலவில் பெரியாறு-வைகை நவீன மேம்பாட்டுத் திட்டமும் நல்ல முன்னேற்றத்தில் இருக்கின்றன. முக்கிய கால்வாய் முழுவதும காரை பூசப்பட்டு, உடைந்த கரைகளிலும் காரை பூச எடுத்துக்கொள்ளப்பட இத்திட்டம் உலக வங்கியின் உதவியுடன் கூடியதாகும்.

வறட்சிப் பகுதிகளான தருமபுரி மாவட்டத்துக்கும் இராமநாதபுர மாவட்டத்திற்கும் முறையே இரண்டு திட்டங்கள் வீதம் மொத்தம் 4 புதிய திட்டங்களுக்கு சமீபத்தில் அரசு ஒப்புதல் அளித்தது. . அவை கீழ்வருமாறு:—

(1) திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்)

(2) பயனடையும் பரப்பளவு (ஏக்கர்களில்)

**உரிமை!**

என் அபிப்பிராயத்தை மறுக்க உங்களுக்கு உரிமை உண்டு. அதே நேரத்தில்—என் அபிப்பிராயத்தை வெளியிடவும் எனக்கு உரிமை உண்டு!

—தந்தை பெரியார்.





| | | | |
|---|---|---|---|
| 1. | தும்பலஹள்ளி நீர்த் தேக்கத் திட்டம், தருமபுரி மாவட்டம் | 112.70 | 2280 |
| 2. | வாணியார் நீர்த்தேக்கத்திட்டம், தருமபுரி மாவட்டம் | 560.00 | 8550 |
| 3. | குன்னூர் சந்தை நீர்த் தேக்கத்திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் | 127.00 | 2556 |
| 4. | வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத் திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் | 296.00 | 8100 |

பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த போதுமான அளவு தொகை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. இதன் நோக்கம் புது வேலைகளை எடுப்பதற்கு முன் கையில் உள்ள வேலைகளை முடிப்பதாகும்.

மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளைக் கிழக்கு திசையில் திருப்பிவிடுவதற்கான திட்டங்கள் குறித்துப் பரிசீலனை செய்ய மத்திய அரசு அமைத்த குழு ஐந்து தடவை கூடிப் பரிசீலனை செய்தது.

சென்னை மாநகருக்குக் குடிதண்ணீருக்காக கிருஷ்ணா ஆற்றில் இருந்து நீரைக் கொண்டு வரும் திட்டத்திற்கு சென்னை மாநகர எல்லைக்குள் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாதிரி ஆந்திரப்பிரதேச அரசும் அதன் எல்லைக்குள் இதற்கான ஆய்வு வேலைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வேலைகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்யவும், மற்றும் பல நோக்கங்களுக்காகவும் நீரைக்கொண்டு வருவதற்கு, அவ்வப்போது கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சிறப்புச் சிறுபாசனம் மற்றும் தூர்வாரி நில மீட்புத் திட்டம் சிறுபாசனத் திட்டத்தில் அடங்கும். இங்கும் தொடர்ந்துவரும் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இந்த இரண்டு வருடங்களிலும் 209 திட்டங்கள் முடிக்கப்பட்டு, 7127 ஹெக்டேர் நிலங்கள் பயனடைந்துள்ளன. விரைவு செய்யப்பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 875 வேலைகள் ரூ. 185 இலட்சத்தில் இந்த இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்பட்டுள்ளன.

பொது மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டும், தொழில் நுட்ப முன்னேற்றம் மற்றும் எல்லா வகைகளிலும் ஒருங்கிணைக்கப்பட்டு இந்த அரசு பொதுப்பணித் துறைக்கு ஒரு புதிய சகாப்தம் அளிக்கும் நோக்கத்தில் உறுதியாக உள்ளது. பொதுப்பணித்துறை கட்டடம் மற்றும் நீர்ப்பாசனம் என்ற துறைகளாகப் பிரிக்கும் திட்டமும் அரசின் ஆய்வில் உள்ளது.

இந்த இரண்டாண்டுக் காலத்தில்-உணவுப் பொருள் உற்பத்தியில் நிறைவும், நிம்மதியும், ஆக்கமும் ஊக்கமும் கண்ட பெருமையுடையது தமிழக அரசு!

# உணவுத் துறையில் உயரிய பணிகள்



இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் உணவு முனையில் மத்திய அரசின் கொள்கை முடிவுகளின் காரணமாக, எதிர்பாராத பல திருப்பங்களும் மாறுதல்களும் ஏற்பட்டன.

1976 அக்டோபர் முதற்கொண்டு, கேரளம் நீங்கலாக, ஆந்திரம், கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகள் உள்ளடங்கிய தென் உணவு மண்டலத்தில், தமிழ்நாடு இணைக்கப்பட்டிருந்தது. 1977ஆம் ஆண்டில் கேரளத்தையும் தென் உணவு மண்டலத்துடன் சேர்த்துக்கொள்ளலாமா என்பது குறித்து மாநில அரசுகளின் கருத்து கோரப்பட்டது.

தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பெரிதும் புழங்கப்படுவது புழுங்கல் அரிசியே. ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலும் தயாரிக்கப்படுவதும் புழங்கப்படுவதும் பச்சரிசியே. இந்நிலையில் கேரளத்தைத் தென் உணவு மண்டலத்துடன் இணைத்து விட்டால், தமிழகத்தின் நலன்கள் பாதிக்கப்படும் என்று இந்த அரசு அஞ்சியது. தமிழ்நாட்டிலிருந்து புழுங்கல் அரிசி பெருமளவு கேரளத்திற்குச் சென்றுவிட்டால், அதற்கு ஈடுசெய்யும் அளவுக்கு ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து புழுங்கல் அரிசி வருவதற்கு வாய்ப்பு இராது என்பதையும், ஆகவே தமிழகத்தின் உணவு நிலைமை பாதிக்கப்படும் என்பதையும் எடுத்துக்காட்டி, அதுவரை இருந்ததுபோலவே, தென் உணவு மண்டல ஏற்பாடு தொடர்ந்து இயங்கலாம் என்ற கருத்தை இந்த அரசு, மத்திய அரசிடம் வற்புறுத்தியது.

**சீரிய வெற்றி**

இக்கருத்துப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே, மாநில அரசைக் கலக்காமலும், மாநில அரசுக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமலும் நாடு முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக அமைத்து மத்திய அரசு 1977 அக்டோபரில் ஆணையிட்டது. சாதாரண பருவ காலத்தில் தன்னுடைய அரிசித் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவுக்கு உற்பத்தியைப் பெற்றிருந்த தமிழ்நாடு, இந்த ஏற்பாட்டினால் பற்றாக்குறை மாநிலமாக ஆகிவிடுமோ என்ற அச்சத்தையும், இதன் விளைவுகள் தமிழகத்திற்குப் பாதகமாக அமையக்கூடும் என்ற கவலையையும், தமிழக அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்தது. ஆயினும், அகில இந்திய உணவுக் கொள்கை அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கை முடிவைத் தமிழகமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் காட்டி, இதனால் தமிழகத்திற்குப் பாதிப்பு வராமல் பார்த்துக்கொள்ள மத்திய அரசும் உதவும் என்ற உறுதிமொழி கூறப்பட்டதன்பேரில், மத்திய அரசு முடிவெடுத்து அறிவித்த இந்தப் புதிய ஏற்பாட்டினை முழு மனத்துடன் செயல்படுத்தத் தமிழக அரசு முன்வந்தது. பல ஆண்டுகளாகத் தனி உணவு மண்டலமாகவும், 1976 அக்டோபருக்குப் பின்பு கேரளம் நீங்கலாகத் தென் மண்டலத்தின் ஒரு பகுதியாகவும் இயங்கி வந்த தமிழ்நாட்டில், நாடு முழுவதையும் பொது உணவு மண்டலமாக அறிவித்ததனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாத நிலை இருந்தது.

இருந்தும் கூடத் தமிழகத்தின் உணவு நிலையைச் சீராகச் சமாளிக்க முடிந்துள்ளது. இது, இந்த அரசு முன்னெச்சரிக்கையாக மேற்கொண்ட பல நடவடிக்கைகளுக்கும், நிலைமைக்கும் ஏற்றவாறு நெறிமுறைகள் வகுத்து நிர்வகித்த தமிழக அரசின் கொள்கைகளுக்கும், சீரிய வெற்றியாகும்.

உணவுக் கொள்கையில் எற்பட்ட இந்த அடிப்படை மாறுதலுக்கு ஈடு கொடுப்பதில் தமிழக அரசு முனைந்திருந்த நேரத்திலேயே








1977ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளமும் புயலும் மேலும் ஒரு பயங்கரச் சோதனையை உருவாக்கின. அந்த அறைகூவலையும் ஏற்று, அமைதியாகவும் ஆக்க பூர்வமாகவும் அவசியமான நடவடிக்கைகளைத் துணிவுடன் மேற்கொண்டதன் பயனாக, சோதனையையும் சாதனைக்கு ஒரு வாய்ப்பாக மாற்றி, தமிழக அரசு உணவு முனையில் மகத்தான வெற்றியைக் கண்டுள்ளது. 1977ஆம் ஆண்டு இறுதியில்' வெள்ளத்தாலும் புயலினாலும் ஏற்பட்ட பாதிப்பிற்குப் பின்பும் தமிழகத்தில் அரிசியைப் பொறுத்தவரையில், எந்தவிதத் தட்டுப்பாடு இல்லாமலும், விலை உயர்வு இல்லாமலும், வெளிச்சந்தையில் அரிசிப் புழக்கம் இயல்பாகவும், பொது விநியோக முறையின் கீழ் அரிசி வழங்குதல் சீராகவும், நடந்து வருகின்றன. உணவு நிலைமை கவலைக்கிடமாக இருந்த நிலையை மாற்றிப் பொதுமக்களுக்குப் பிரச்சினையே எழாதவாறு உணவு நிலைமையை நிர்வகித்து வந்துள்ளது இந்த அரசின் அரிய சாதனைகளில் ஒன்றாகும்.

**சீரான உணவு நிலைமை**

உணவு உற்பத்தியைப் பெருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் பயனாக, 1978-79ஆம் பசலி ஆண்டில் 64 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. இது நமது மாநிலத்தின் தேவைகளுக்குப் போதுமானதாகும். வெளிச்சந்தையில் அரிசியின் விலைவாசிகள் உயர்ந்துவிடாமல் காக்கும் பொருட்டும், வெளிச்சந்தை வியாபார மாற்றங்களுக்கும் விலை ஏற்றங்களுக்கும் உட்படாமல், ஆண்டு முழுவதும் தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட நியாயமான விலைகளில் அரிசி மக்களுக்குக் கிடைக்க வழி செய்வதற்காக, பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்த இந்த அரசு முடிவு செய்தது.

இந்த அரசு நிர்வாகப் பொறுப்பேற்ற இரண்டாண்டு நிறைவு பெறும் இக்கட்டத்திலே உணவு நிலைமை சீராக அமைந்துள்ளது. என்பது குறித்தும், அறுவடை இல்லாத நேரங்களிலும் தட்டுப்பாடு ஏற்படாமலும், விலை ஏறாமலும், பொதுமக்களுக்குப் பொது விநியோக முறையின் கீழ் நிர்ணய விலைகளில் அரிசி வழங்குவதற்கு அரசிடம் கணிசமான கையிருப்பு உள்ளது என்பது குறித்தும் அரசு மட்டுமல்ல, தமிழக மக்களும் மன நிறைவு கொள்ளலாம்.

பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று முடிவு செய்யப்பட்ட அதே நேரத்தில், வெளிச்சந்தை வர்த்தகம் சுதந்திரமாகவும் சுமுகமாகவும் செயல்படுவதற்குச் சாதகமான சூழ்நிலைகளையும் இந்த அரசு உருவாக்கியுள்ளது. விவசாயப் பெருமக்களுக்கு இடர்ப்பாடு ஏற்படாத வகையிலும் தன்னுடைய கொள்முதல் கொள்கையிலும் மாற்றங்கள் செய்துள்ளது.

1979க்கு முந்தைய ஆண்டுகளில் விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் எதுவும செய்யப்படுவதில்லை. முன்பு ஒவ்வொரு மாவட்டமும் ஒரு தனித்தொகுதியாகப் பாவிக்கப்பட்டு அந்த மாவட்டத்தை விட்டு அரிசியையும் நெல்லையும் வெளியே எடுத்துச் செல்வதற்குத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இன்றோ மாவட்டத்திற்கு மாவட்டம் நெல், அரிசிக்கு இது போன்ற நடமாட்டத் தடைகள் எதுவும் கிடையாது. 1978 மே மாதம் 11ஆம் தேதி முதற்கொண்டு எல்லாக் கட்டுப்பாடுகளும் அடியோடு நீக்கப்பட்டு, தமிழகம் முழுவதிலும் நெல்லும் அரிசியும் தாராளமாகப் புழங்குவதற்கு வகை செய்யப்பட்டது. முன்பு கட்டாயக் கொள்முதல் நடந்து கொண்டிருந்ததையொட்டி தனியார் வியாபாரிகள் நெல்லிலும் அரிசியிலும் மொத்த வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. அந்நிலையில் கொள்முதலுக்கு நெல்லை அளந்த பின்பு தங்களது உபரி நெல்லை, மாவட்டங்களுக்குள்ளாகவே, அரசுக்கே விவசாயிகள் விற்க வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலை உருவாக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நெல்லிலும் அரிசியிலும் தனியார் மொத்த வியாபாரம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு விட்டது. மொத்த வியாபார உரிமங்களும் தாராளமாக வழங்கப்படுகின்றன. ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த மொத்த வியாபாரி மற்றொரு மாவட்டத்திற்குச் சென்று நெல்லையும் அரிசியையும் தாராளமாக வாங்கித் தமிழகத்திற்குள்ளாக எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லும் நிலை இப்பொழுது நிலவி வருகிறது. முன்பு சில்லறை வர்த்தகர்கள் கூட, விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்குவதில், பல நிபந்தனைகளும் தடைகளும் விதிக்கப்பட்டிருந்தன.





இப்பொழுது அத்தடையும் நீக்கப்பட்டுச் சில்லறை வியாபாரிகளும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகவே நெல்லையும் அரிசியையும் வாங்குவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. சொந்தத் தேவைக்கு எடுத்துச் செல்லப்படும் நெல்லையும் அரிசியையும் பொறுத்தவரையிலே அதிகாரிகளிடமிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே அவற்றை எடுத்துச் செல்ல வேண்டுமென்ற நிபந்தனை முன்பு விதிக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது அந்த நிபந்தனைகளும் நீக்கபபட்டு விட்டன. இவற்றின் காரணமாகத் தமிழகத்தில் நெல்லும் அரிசியும், தாராளமாகவும் தடை எதுவுமின்றியும் மாநிலம் முழுவதும் புழங்குவதற்கும் விவசாயிகள் தங்கள் நெல்லை இலாபகரமான விலைக்கு வெளிச்சந்தையில் விற்பதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

**தட்டுப்பாடும் கட்டுப்பாடும்**

தட்டுப்பாடு உள்ள நேரத்தில்தான் கட்டுப்பாடுகள் அவசியம். கட்டுப்பாடுகளினால் பொதுமக்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுவதும் தவிர்க்கமுடியாது. தட்டுப்பாடுகளும் கட்டுபபாடுகளும் இடர்பாடுகளும் தான் முந்தைய ஆண்டுகளின் உணவு நிர்வாகத்தின் அம்சங்களாக அமைந்திருந்தன. தட்டுப்பாடு இல்லாத நிலையை உருவாக்கி, கட்டுப்பாடுகளைத் தேவையற்றதாக்கி, அவற்றை நீக்கி, அவற்றால் ஏற்புட்டு வந்த இடர்ப்பாடுகளிலிருந்து பொது மக்களை விடுவித்து, செழிப்பும் செம்மையும் இணைந்த - வளமும் வசதியும் ஒன்று சேர்ந்த, இயல்பான இங்கிதமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது, இந்த அரசின் சிறப்பான சாதனைகளில் ஒன்றாகும்.

நெல்லின் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. மத்திய விவசாய விளைபொருள்கள் விலைவாசி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு இந்த விலைகளை நிர்ணயிக்கின்றது.

1977-78ஆம் ஆண்டுக்கு விலை நிர்ணயப்பிரச்சினை எழுந்தபோது நெல் கொள்முதல் விலைகளைக் கணிசமாக உயத்தவேண்டுமென்று தமிழக அரசு வன்மையாக வற்புறுத்யதிது. தற்போது மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 74 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த கொள்முதல் விலையை ரூ. 85 என்ற அளவில் உயர்த்தி மத்திய அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அனைத்திந்திய அடிப்படையில் மத்திய அரசு நிர்ணயிக்கும் இந்தக் கொள்முதல் விலைகள் எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். தங்கள் சொந்த நிதிப் பொறுப்பிலிருந்துகூட மாநில அரசுகள் இந்தக் கொள்முதல் விலைக்கு மேலாக போனஸாகவோ வேறு எந்த இனத்திலோ கூடுதல் தொகை வழங்கக் கூடாது என்பதும் மத்திய அரசால் தெளிவாக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு மனநிறைவு**

1977-78ஆம் ஆண்டுக்கு நெல் கொள்முதல் விலை நிர்ணயப் பிரச்னை 1978 செப்டம்பரில் ஆய்வுக்கு வந்தது. அக்கூட்டத்தில் விவசாயிகளுக்கு மனநிறைவு ஏற்படும் வகையில் கொள்முதல் விலைகளை உயர்த்த வேண்டுமென்ற கருத்தைத் தமிழக அரசு மீண்டும் மத்திய அரசிடம் வலியுறுத்தியது. நெல்லின் கொள்முதல் விலையை உற்பத்திச் செலவின் அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டுமென்று மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. குறைந்த பட்சம் கோதுமைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலையானது நெல்லுக்கு நிர்ணயிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்ற நிலையில், வெளிச்சந்தையில் விவசாயிகள் நெல்லை இலாபகரமாக விற்றுக்கொள்ள வசதியான சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கித் தந்துள்ளது. 1975ஆம் ஆண்டு சம்பாப் பட்டம் வரை, கட்டாயக் கொள்



முதல் நடத்தப்பட்டு வந்ததை அனைவரும் அறிவார்கள். இப்பொழுது கட்டாயக்கொள் முதல் இல்லை, மாவட்டங்களை விட்டு நெல்லையும் அரிசியையும் எடுத்துச் செல்லக் கூடாதென்று ஒரு மட்டத்தில் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இப்போது அந்தத் தடைகளும் நீக்கப்பட்டுவிட்டன. 1977ஆம் ஆண்டு குறுவைப்பட்டத்தில் உபரி மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நெல்லுக்கு 10 விழுக்காடும், அரிசிக்கு 20 விழுக்காடும் வர்த்தக லெவி விதிக்கப்பட்டிருந்தது. ஆலைகள் லெவியும் விதிக்கப்பட்டிருந்தது. 11.5.1978 முதல் தமிழகத்திற்குள் வர்த்தக லெவி, ஆலை லெவி அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. ஆகவே இப்போதுள்ள நிலைமைப்படி, தமிழகத்திற்குள் அரிசி, நெல் நடமாட்டத்திற்கு எந்தவிதத் தடையும் இல்லை. இதனால் பற்றாக்குறை மாவட்டங்களிலிருந்து வர்த்தகர்கள் உபரி மாவட்டங்களுக்குச் சென்று. விவசாயிகளிடமிருந்து நெல்லை நேரடியாக வாங்குவதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. தமிழகத்திற்குள்ளாக எந்தவித நடமாட்டக் கட்டுப்பாடோ தடையோ, லெவி நிபந்தனையோ இல்லாமல் உணவு வர்த்தகம் சுமுகமாகவும், சுதந்திரமாகவும் இயங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

## அரசின் கொள்கை

வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசியில் மட்டுமே லெவி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த லெவியும் முன்பிருந்த 50 சதவீதத்திலிருந்து 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாள்முதற்கொண்டு, 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டுக் குறுவையின் போது தஞ்சைக் குறுவை வெளி மாநிலங்களுக்கு எந்தவித லெவியும் செலுத்தாமல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. வெளிச் சந்தையில் விவசாயிகள் இலாபகரமான விலைக்கு நெல்லை விற்றுக்கொள்ள வசதி செய்யும்பொருட்டே இந்த அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. தமிழகத்தின் உணவு நிலைமையைப் பாதுகாப்பதற்கும், நுகர்வோர் நலனை முன்னிட்டும், அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு ,அதே சமயத்தில் நெல், அரிசி வர்த்தகம் சுதந்திரமாகவும் தடைகளின்றியும் இயங்குவதற்கு எல்லா வசதிகளையும் செய்து தருவதும், விவசாயிகள் இலாபகரமான விலையில் நெல்லை விற்க வாய்ப்புகள் அளிப்பதுமே தான் இந்த அரசின் கொள்கையாகும்.

இந்த அடிப்படையில்தான் அரிசி அரைவை ஆலையாளர்கள், நெல், அரிசி மொத்த வியாபாரிகள் ஆகியோர் ஒரே சமயத்தில் வியாபாரத்திற்காக வைத்துக் கொள்ளக் கூடிய நெல், அரிசி உச்சவரம்பும் அக்டோபர் 1978க்குப் பின்பு, மிகக் கணிசமாக, உயர்த்தப்பட்டுள்ளது. அரிசி அரவை ஆலையுள்ள மொத்த வியாபாரிகள் ஒரே சமயத்தில் 2,400 குவிண்டால் நெல்லும் மற்ற மொத்த வியாபாரிகள் 750 குவிண்டால் நெல்லும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும் நிலையை உறுதிப்படுத்துவதற்காகவே, இந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

கொள்முதல் விலைகளை உயர்த்த மாநில அரசுக்கு வழியில்லை என்ற போதிலும் இலாபகரமான விலைக்கு விவசாயிகள் நெல்லை விற்றுக்கொள்ள செய்துதரக்கூடிய வசதிகளை யெல்லாம் தமிழக அரசு செய்துள்ளது என்பது இதிலிருந்து தெள்ளத் தெளிவாகும்.

இயல்பான சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதே நேரத்தில், நுகர்வோரின் நலனுக்கு ஒவ்வாத முறையில் விலைவாசிகள் ஏறிவிடாமல் காக்கவும், கண்காணிக்கவும் விழிப்பான பல நடவடிக்கைகளைத் தமிழக அரசு இந்த இரண்டாண்டுக் காலத்தில் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை சர்க்கரைக் கட்டுப்பாட்டுக் கொள்கையை மத்திய அரசு பின்பற்றி வந்தது. அதன்படி நாட்டிலே உற்பத்தியான சர்க்கரையில் 65 விழுக்காடு லெவி முறையின்கீழ் விநியோகத்திற்கும், 35 விழுக்காடு சர்க்கரை வெளிச்சந்தை விற்பனைக்காகவும் ஒதுக்கப்பட்டு வந்தது. அத்திட்டத்தின் கீழ் சுமார் 19,000 டன்கள் லெவி சர்க்கரை ஒவ்வொரு மாதமும் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டு வந்தது. லெவி சர்க்கரையின் விலை கிலோ ரூ. 2.30 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சர்க்கரை விநியோகக் கொள்கையில் மத்திய அரசு மாற்றம் செய்து லெவி முறையை நீக்கிவிட்டது. இதையொட்டி சர்க்கரை ஆலைகளுக்குப் பெரும் பிரச்சினைகள் எழுந்துள்ள போதிலும் விவசாயிகள் கரும்புக்குப் பெற்று வந்த விலை குறைந்துவிட்ட போதிலும், நுகர்வோரைப் பொறுத்தவரையில் வெளிச் சந்தையில் சர்க்கரை கிலோ ரூ. 2.10 முதல் ரூ. 2.60 அளவில் தாராளமாகக் கிடைத்து வருகிறது. சர்க்கரையில் விலை ஏறிவிட்டால் விலையைக் கட்டுப்படுத்துவதற்காகத் தமிழக அரசிடம் சர்க்கரை கையிருப்பும் கணிசமாக உள்ளது.

## அரிசியின் விலை

அரிசியைப் பொறுத்தவரையிலே பெரும்பாலான மக்கள் பயன்படுத்தும் நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை 1975ஆம் ஆண்டில் கிலோ ரூ. 2.40 முதல் ரூ. 3.90 வரை இருந்ததற்கு மாறாக, இப்போது கிலோ ரூ.1.40 முதல் ரூ. 1.90 வரை உள்ளது. சன்ன ரகப் புழுங்கல் அரிசியின் விலையும் இப்போது ரூ. 1.50 முதல் ரூ. 1.90 வரை உள்ளது. சென்ற நான்கு ஆண்டுகளின் விலைகளுடன் ஒப்பிடும்போது தற்போதைய



விலை மிகக் குறைவானது. அரிசியின் பிற வகைகளிலும் இத்தகைய விலை இறக்கப் போக்கேகாணப்படுகிறது.

கேழ்வரகு, கம்பு, சோளம், முதலிய சிறு தானியங்களின் விலைகளும் கிலோ ரூ.0.80 முதல் கிலோ ரூ. 1.20 வரை அமைந்துள்ளன. சென்ற ஐந்து ஆண்டுக் காலத்தில் நிலவிய விலைகளைவிட, தற்போதைய விலை குறைவானதே.

பருப்பு வகைகளைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாகும். தமிழ்நாட்டில் துவரம் பருப்பின் தேவை 2 இலட்சம் டன்களுக்கும் அதிகம். தமிழ்நாட்டின் அதன் உற்பத்தியோ 35,000 டன்கள்தான். கடலைப் பருப்பின் தேவையும் 2 இலட்சம் டன்களுக்கும் அதிகம். அதன் உற்பத்தியோ இங்கு 5,000 டன்கள்தான். பாசிப்பருப்பின் தேவை 50,000 டன்களுக்கும் மேற்பட்டது. தமிழ்நாட்டில் அதன் உற்பத்தியோ 22,000 டன்கள்தான். உளுத்தம் பருப்பின் தேவை ஒன்றரை இலட்சம் டன்களுக்கும் அதிகம். இங்கு அதன் உற்பத்தியோ 32,000 டன்கள்தான். மொத்தத்தில் பருப்பு வகைகளின் தேவை, தமிழ்நாட்டில் ஆறு இலட்சம் டன்கள் என்று மதிப்பிட்டால், இங்கு அவற்றின் உற்பத்தி ஒரு இலட்சம் டன்களுக்கும் குறைவாகவே உள்ளது. ஏறக்குறைய ஐந்து இலட்சம் டன்கள் பற்றாக்குறையை ஈடு செய்ய பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஆந்திரம் முதலிய மாநிலங்களிலிருந்து பருப்பு தமிழகத்திற்கு வரவேண்டியுள்ளது. துவரம்பருப்பின் விலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கிலோ ரூபாய் 4.20 முதல் ரூபாய் 5.20 வரை இருந்ததற்கு மாறாக, இப்போது கிலோ ரூபாய் 3.65முதல் ரூபாய் 5.00 வரை உள்ளது. கடலைப் பருப்பின் விலை சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 2.70 முதல் ரூபாய் 3.10 வரை விற்றது. இப்பருப்பின் விலையில் இந்த ஆண்டு சற்று ஏற்றம் காணப்பட்டு, கிலோ ரூபாய் 2.80 முதல் ரூபாய் 3.20 வரை உள்ளது. பருப்பு வகைகளின் விலைகளைச் சீர்படுத்தும் நோக்கத்துடன், கூட்டுறவு அமைப்புகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், உற்பத்தியாகும் உபரிமாநிலங்களிலிருந்து விளைச்சல் காலத்தில் அதிக அளவில் வாங்கி இங்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

## எண்ணெய் விலைகள்

கடலை எண்ணெய்யைப் பொறுத்தவரையில், கிலோ ரூபாய் 10.10 முதல் ரூபாய் 11.65 வரை 1977ஆம்-ஆண்டில் விற்று வந்ததற்கு மாறாக இப்போது கிலோவிற்கு ரூபாய் 6.60 முதல் ரூபாய் 7.60 வரை விலை குறைந்துள்ளது. இந்த விலையில் தாராளமாகக் கடலை எண்ணெய் கிடைத்து வருகிறது. அயல் நாடுகளிலிருந்து எண்ணெய்களைத் தாராளமாக இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு வசதி செய்துள்ள காரணத்தால் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயின் விலைகளும் இப்போது நிதானமாகவே உள்ளன. நல்லெண்ணெய்யின் விலை சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 9.00முதல் ரூபாய் 10.40க்கு விற்று வந்ததற்கு மாறாக இப்போது கிலோ ரூபாய் 7.15 முதல் 8.80 வரை விற்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய்யின் பழக்கம் தமிழ்நாட்டில் குறைவாய் உள்ளது.



மாநிலத்தின் தேவைகளுக்கான தேங்காய் எண்ணெய்யைக் கேரளத்திலிருந்தே பெரும் அளவிற்கு நாம் பெற்று வருகின்றோம். சென்ற ஆண்டிலிருந்த விலைகளைவிட இந்த ஆண்டில் விலை ஏற்றம் காணப்படவில்லை.

மிளகாய் வற்றல் சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 8 முதல் ரூபாய் 11 வரை விற்கப்பட்டு வந்ததற்கு மாறாக இப்போது ரூபாய் 7முதல் ரூபாய் 10 அளவில் விற்கப்பட்டு வருகிறது. புளியின் விலையில் சென்ற ஆண்டு விலையைவிட ஏற்றம் காணப்படுகிறது. சென்ற ஆண்டு கிலோ ரூ.2.80 முதல் ரூ. 4.50 வரை விற்கப்பட்டு வந்த புளி, இந்த ஆண்டு ரூ. 3.50 முதல் ரூ. 5.50 வரை விற்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் புளியைப் பொறுத்தவரையிலும் பற்றாக்குறை உண்டு. நமது தேவையில் பெருமளவு கர்நாடகம், ஆந்திரம், பீகார் ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களிலிருந்தும் புளியை வரவழைத்துப் பொது விநியோக அமைப்பில் குறைந்த விலையில் விற்பதற்கான நடவடிக்கைகளில் கூட்டுறவு அமைப்புகளும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தனியாவின் தற்போதைய விலை கிலோ ரூபாய் 2.40 முதல் ரூபாய் 3.50 வரை உள்ளது. இந்த விலை சென்ற ஐந்து ஆண்டுகளில் காணப்பட்ட விலைகளைவிட மிகக் குறைவானதாகும்.

## வர்த்தக சுதந்தரம் நுகர்வோர் நலன்

பதுக்கல், நடுத்தரகர்கள், கொள்ளை இலாபம் அடித்தல், வியாபாரச் சூதாட்டம் ஆகிய சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த பல வர்த்தக ஒழுங்குமுறை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் பயனாக வர்த்தகர்களின் சுதந்திரத்தில் தேவைக்கு மீறி குறுக்கிடாத அதே நேரத்தில் நுகர்வோரின் நலனையும் பாதுகாக்கக்கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.



## "டாமின்"

"டோலிரைட்" என அழைக்கப்படும் கருப்பு கிரானைட் கற்களை வெட்டியெடுக்கும் உரிமங்களை அரசே மேற்கொண்டிருந்தது. எனினும் இக்கற்களை ஏற்றுமதி செய்வதில் ஏராளமான இலாபம் கிடைப்பதை அறிந்து கொண்ட தொழில் அதிபர்கள் கள்ளத்தனமாக இக்கற்களை வெட்டி எடுக்க முனைந்தனர். ஆகவே, அரசே இத் தொழிலை மேற்கொள்ள முடிவு செய்தது. இதன்படி "டாமின்" எனப்படும் தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனத்தை 1978 ஏப்ரல் திங்களில் அரசு துவங்கியது. இந்நிறுவனத்தின் வரையறை செய்யப்பட்ட மூலதனம் ஒரு கோடி ரூபாயாகும்.

மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இவ்வரசு பொறுப்பேற்றவுடன் கிராமந்தோறும் ஒரு நியாயவிலைக்கடை திறக்கப்பட வேண்டுமென்று முடிவெடுத்து, அத்திட்டத்தினைச் செயல் படுத்தி வருகிறது. கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் பெரிதும் பயன்படுத்தும் பல இன்றியமையாப் பொருட்களை நயமான விலைகளில் கிடைக்க வழிவகை செய்வதே அரசின் எண்ணமாகும். தமிழ்நாட்டில் 16,660 வருவாய் கிராமங்கள் உள்ளன. இவற்றில் குடியிருப்புகள் இல்லாத கிராமங்கள் 925. அவை நீங்கலாக 15735 குடியிருப்புகள் உள்ள வருவாய்க் கிராமங்கள். இவற்றில் ஏற்கனவே சுமார் 5800 கடைகள் இயங்கி வந்தன. இக்கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு இன்றியமையாத மற்றப் பொருள்களையும் இக்கடைகளில் விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 5800 கடைகளில் 5600 க்கு மேற்பட்ட உணவுப் பங்கீட்டுக் கடைகள் பல பொருள் நியாயவிலைக் கடைகளாக மாற்றப் பட்டு விட்டன. கடைகள் இல்லாத கிராமங்களில் புதியதான கடைகளைத் திறப்பது என்பது அடுத்த முக்கியப் பணியாகும். இத்திட்டத்தின் படி சுமார் 10,000 கிராமங்களில் புதிய நியாய விலைக்கடைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு தஞ்சை, தென்னார்க்காடு, நெல்லை, தர்மபுரி மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் எஞ்சிய மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதியதாகத் திறக்கப்பட வேண்டிய 10,000 கிராமங்களில் 9381 கிராமங்களில் இப்போது கடைகள் திறக்கப்பட்டுவிட்டன. ஓரிரு மாதங்களில் இப்பணி நிறைவு பெற்றுவிடும். அறுவடைக் காலத்தில் உற்பத்தியாகும் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களிலேயே வாங்கி, தரயானவற்றை நயமான விலைகளில் விற்க இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவு அமைப்புகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.





### மண்ணெண்ணெய்

மண்ணெண்ணெய்யைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. 1979ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் சனவரித் திங்களில் நமது மாநிலத்துக்குச் செய்யப்பட்ட ஒதுக்கீட்டைவிட பிப்ரவரி-மார்ச் மாதங்களில் ஒதுக்கீடு குறைவாகவும் ஏப்ரல் மாத ஒதுக்கீடு மார்ச்சு மாத ஒதுக்கீட்டைவிட மேலும் குறைவாகவும் இருந்தன. இவ்வாறு ஒதுக்கீடுகள் நமது தேவைக்குப் பெரிதும் குறைவாக இருந்தமையால், கிடைக்கும் மண்ணெண்ணெய்யைச் சீராக விநியோகிப்பது அவசியமாகியது. ஆகவே, ஏப்ரல் மாதம் முதல் வாரம் முதற்கொண்டு மண்ணெண்ணெய்யைக் குடும்ப அட்டைகளின் பேரில் வழங்க முடிவு செய்து, அவ்வாறே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் ஆகியயவற்றின் மூலம் சென்னையிலும் அதன் புறநகர்ப்பகுதியிலும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஓரளவு நீங்கி, எல்லோருக்கும் சமமான முறையில் தற்போது கிடைக்கிறது.

விவசாயிகள், வர்த்தகர்கள், நுகர்வோர்; ஆகிய பல்வேறு சாராரின் நலன்களையும் பாதுகாக்கும் முறையில், ஒருங்கிணைந்த உணவுக் கொள்கையைத் தமிழக அரசு பின்பற்றி வருகிறது.

அமைதிக்கு உலை வைக்கக்கூடிய பிரச்சினையாக உணவுப் பிரச்சினை இருந்த ஒரு காலம் மாறி உணவு முறையில் நிறைவும் நிம்மதியும், ஆக்கமும் ஊக்கமும் நிலவும் சூழ்நிலையை விவசாயிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் ஒத்துழைப்புடன் இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் உருவாக்க முடிந்தது பற்றித் தமிழக அரசும் மக்களும் பெருமிதம் கொள்ளலாம்.

தமிழ்நாட்டிலுள்ள ஊர்ப்பகுதிகளும், நகர்ப் பகுதிகளும் ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சி பெறத் தேவையான திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்திவரும், நகர் ஊரமைப்புத்துறை இந்த இரண்டாண்டில், முக்கியமான சில புதிய திட்டங்களை உருவாக்கியுள்ளது.

# நகர் ஊரமைப்புத் துறையின் நற்பணிகள்

மதுரை, கோயம்புத்தூர் போன்ற தமிழகத்தின் முக்கிய நகர் மையங்களுக்கு 'ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களையும், தமிழ்நாட்டில் புயலும் வெள்ளமும் பாதிக்கும் பகுதிகளுக்குப் பேரழிவுத் தடுப்புத் திட்டத்தையும் உருவாக்கியுள்ளது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பணியாகும்.

### நோக்கமென்ன ?

நகர மக்களுக்குத் தேவையான இன்றியமையா வசதிகளின் பற்றாக் குறைகளை நீக்கி, தொழிலாளர் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் வாழ்வுச் சூழலை மேம்படுத்துதலே முதலில் குறிப்பிட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

புயல், பெரு வெள்ளம் போன்றவை நிகழ்வதற்கு முன்பும், பின்பும் அறிவியல் அடிப்படையாக மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளையும் எச்சரிக்கைகளையும் திட்டமிட்டுச் செயற்படுத்துதல் மூலம் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் இயற்கை இழைக்கும் பெருங்கேட்டின் விளைவுகளைக் குறைப்பதே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பேரழிவுத் தடுப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

மதுரை, கோயம்புத்தூர் மாநகரங்களுக்காக இத்துறை உருவாக்கிய தனி அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்ட திட்டங்களை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை போன்ற அரசு நிறுவனங்கள் ஊக்கத்துடன் மதுரையிலும், கோயம்புத்தூரிலும் செயற்படுத்தி வருகின்றன.

### ஒருங்கிணைந்த திட்டம்

மதுரை மாநகருக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 7.76 கோடி. கோயம்புத்தூருக்குரிய திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூபாய் 7.86 கோடி. இந்த மொத்த மதிப்பீட்டின் பாதித் தொகையை மத்திய அரசு. 5.5 சதவிகித குறைந்த வட்டிக்குக் கடனாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்துடன்தொகை, முன் தவணையாக 5 ஆண்டுகள் கழித்து, இருபது ஆண்டுகளில் மத்திய அரசுக்குத் திருப்பித் தரப்பட வேண்டும். திட்டத்தினைச் செயற்படுத்த முதல் தவணையாக மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் ரூ. 3.56 கோடிக்கும், இரண்டாவது தவணையாக ரூ. 1.54 கோடிக்கும் என்று மொத்தம் ரூ. 5.10 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

மதுரையில் ஏழை நெசவாளர்கள் வாழும் இஸ்மாயில்புரத்தில் நிலமட்டத்தின் கீழ் வடிகால் அமைத்தல் - சந்தைப்பேட்டையில் கூடுதலாக மூன்றாவது பம்பு செட் அமைத்தல்-அவனியாபுரத்தில் மாநகராட்சியின் கீழ் கழிவு நீர்ப் பண்ணையில் கூடுதலாகக் கழிவு நீரைத் தூய்மையாக்கும் குளங்களை அமைத்தல்-மதுரையில் வடபகுதிக்குக் குடிநீர் வசதியை மேம்படுத்துதல் — மதுரையில் மத்தியப் பகுதியிலுள்ள சாலைகளின் நடைபாதைகளைச் சீராக்குதல் - மத்தியப் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள சாலைகளில் மக்கள் நடமாட்டமும், ஊர்திகளின் போக்குவரத்தும் மிகுதியாக உள்ளதால், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கச் சாலைச் சந்திப்பில் சுரங்கப்பாதை அமைத்தல், பேருந்து நிலையத்தை மேம்படுத்துதல், திருப்பரங்குன்றம் சாலையை ஒட்டிய பழைய மாநகராட்சி அலுவலக இடத்தில், நன்கு திட்டமிடப்பட்ட பன்மாடிக் கட்டடம் (அங்காடி) அமைத்தல்-புதிய எல்லிஸ் நகர்ப் பகுதியில் குடியிருப்பு வசதிகள் செய்தல் ஆகியன மதுரை ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

கோயம்புத்தூரில் சிங்காநல்லூர், குறிஞ்சிப் பகுதிகளில் தொழிலாளர்களுக்கான, வீட்டு வசதி மற்றும் குடிநீர்த் திட்டங்கள்-பேரூர் சாலையின் வடக்கிலும் தெற்கிலும் குறைந்த வருவாய் உள்ள மக்களுக்காகக் குடியிருப்புகள் கட்டுதல்-காவல் துறையினர் தற்போது குடியுள்ள பகுதிகளில், நவீனமான பன்மாடி அங்காடிக் கட்டடங்களும், குடியிருப்புக் கட்டடமும் அமைத்தல் ஆகியன கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் அடங்கியுள்ளன.



### சமநீதி!

**ஒரு பொறுப்பை நிர்வகிப்பது என்றால், எல்லா மக்களுக்கும் சரிசமமாக உரிமை கொடுத்து அது பறிபோகாமல் [illegible] படி நிர்வகிப்பதேயாகும்!**

**—தந்தை பெரியார்**

## உறுதுணையான பணி

இத்துறை, சேலம் நகர்ப்புற நிலையை மேம்படுத்த அப்பகுதிக்காக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்றையும் தயாரித்துள்ளது. மேலும், இதுபோன்ற திட்டங்களைத் தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி போன்ற நகரங்களுக்கும் தயாரித்து வருகிறது.

புயலும் வெள்ளமும் பாதிக்கும் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் மக்களைக் காக்க ஏறத்தாழ ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்பீடுள்ள பாதுகாப்பான காப்புக்கூடங்களை அமைக்கும் திட்டத்தை உருவாக்கியது இத்துறையின் குறிப்பிடத்தக்கப் பணியாகும்.

பேரழிவு ஏற்படும் சமயங்களில் ஏறத்தாழ 500 பேர்களுக்கு இக் காப்புக்கூடம் இடமளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சமையலறை, இன்றியமையாத மருத்துவ வசதி, உணவுப்பொருள் சேமித்து வைக்கத் தேவையான இட வசதி ஆகியன இக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

### காப்புக் கூடங்கள் :

மாநில அரசின் பண உதவியில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு காப்புக் கூடமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மற்றுமொரு கூடமும், மகாராஷ்டிர மாநிலத்தின் புயல் நிவாரண மக்கள் குழு மனமுவந்தளித்த நன்கொடைப் பணத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஐந்து காப்புக் கூடங்களும் அமைக்கப்படும்.

தமிழகக் கடலோரப் பகுதிகளில் இத்துறை தேர்ந்தெடுத்துள்ள 25 இடங்களில் உலக நாடுகளின் செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில், 25 காப்புக் கூடங்களையும், அக்கூடங்களைச் சுற்றித் தேவையான வசதிகளையும் அமைக்கும் திட்டத்திற்கு, தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மாமல்லபுரத்திற்கு அருகில் சாலவான் குப்பத்தில் அரிசனக் குடியிருப்புகளுக்காக வலுவுள்ள வீடுகள், தொடக்கப் பள்ளி ஆகியவற்றைக் கட்டி அப்பகுதியை மறுசீரமைக்கும் பணிக்கு உலக நாடுகளின் ரோட்டரி (Rotary International) நிறுவனத்தின் உதவி கிடைத்துள்ளது.

### எச்சரிக்கை கருவி :

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் நிவாரணப் பணிகளை நிர்வாகம் செய்யும் மையங்களுக்கும், தலைமையிடங்களுக்கும் இடையே விரைவான செய்திப் போக்குவரத்து ஏற்படுத்த நவீனமான கருவிகளைப் பயன்படுத்தவும், புயல் கடலோரப் பகுதியை நெருங்கியதை எடுத்துக் காட்டி எச்சரிக்கை செய்யும் எளிய கருவி ஒன்றை, கடலோரப் பகுதியில் ஒவ்வோர் ஊரிலும் அமைக்கும் திட்டத்தையும் இத்துறை தயாரித்துள்ளது.

சென்னைப் பெருநகர் எல்லைக்குத் தெற்கிலும், பாலாற்றின் கரைக்கு வடக்கிலும் புகழ் பெற்ற மாமல்லபுரத்தைச் சுற்றிய பகுதியில் திட்டமிடப்பட்ட முறையான வளர்ச்சியை ஏற்படுத்த மாமல்லபுரம் உள்ளூர்த் திட்டக் குழுமத்தை ஏற்படுத்தியிருப்பது இத்துறையின் சிறப்பான பணியாகும்.

மேலும் மதுரை, கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகரங்களின் எதிர்காலத் திட்ட அமைப்பிற்காக நிலப் பயன்பாடு வரைபடம் (Land use maps) தயாரிக்க வேண்டி, தமிழ்நாடு அரசு ஒப்புதலுடன் தேசிய தொலைபுலனுணர்வு செயலாண்மை நிலையத்தின் (National Remote Sensing Agency) ஒத்துழைப்புடனும், அப்பகுதிகளின் வான் வெளிப் படங்களுக்கு (Aerial Photos) ஏற்பாடு செய்து அப்படங்களை அடிப்படையாகக் கொண்டு, நிலப் பயன்பாடு விளக்கப்படங்களைத் தயாரிக்க இத்துறைப் பணியாளர்களுக்கு டேராடூனிலும் ஐதராபாத்திலும் உள்ள பயிற்சிக் கூடங்களில் சிறப்புப் பயிற்சி பெறச் செய்துள்ளது இவ்வியக்கத்தின் புதிய முயற்சியாகும்.




### சிறப்புப் பயிற்சி :

அடிக்கடி, புயலின் தாக்குதலுக்குள்ளாகும் தன் எல்லைக்குள் உள்ள கடற்கரைப் பகுதி முழுவதையும் புயல் பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும், மறுசீரமைப்புச் செய்து, வாழ்வு நல வசதிகளை ஏற்படுத்தவும், சுற்றுலா வளர்ச்சி நோக்கில் பாதுகாப்பான ஒரு சூழ்நிலையை இப்பகுதியில் உருவாக்கவும் மாமல்லபுரம் உள்ளூர்த் திட்டக் குழுமம் பல்வேறு திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

இந்நாட்டிலேயே முதலாவதாக ஏற்படுத்தப்பட்ட ஊரமைப்புத் துறைகளில் ஒன்றாக, 1920-ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றிவரும் இத்துறை, மீண்டும் பல நல்ல திட்டங்களை உருவாக்கி தமிழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயல்பட்டு வருகிறது என்று பெருமையோடு சொல்ல வேண்டும்.

**ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ், தொழிலாளர் நலன் காக்கப்பட இந்த இரண்டாண்டில் நடந்த ஆக்கப்பணிகள் அளவற்றவை !**

சேலம், வடஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதிகளிலுள்ள உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கடைகள், திரையரங்குகள், பத்திரிக்கை நிறுவனங்கள் ஆகிய புதிய பிரிவுகளைச் சேர்ந்த 30,900 ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு முறையே 12-2-'78 மற்றும் 14-5-'78 நாட்களிலிருந்து தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன 30,900 ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்குத் தேவையான பணியாளர்களை நியமனம் செய்வதற்கும் மருந்துச் செலவிற்குமாக மொத்த வருடச் செலவு தொகை ரூ. 19,54,700. இந்தத் தொகையைச் செலவு செய்ய இந்த அரசு 1978 அக்டோபர் மாதத்தில் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் சித்தமுறைப்படி மருத்துவ வசதி அளிப்பதற்கு சித்த மருந்தகங்களை, சென்னையிலுள்ள தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையிலும் கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் ஈட்டுறுதி மனையிலும். திறப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான பணியாளர்களை இந்திய மருத்துவத் தில்பட்டம் பெற்ற மருத்துவரின் தலைமையில் நியமனம் செய்வதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கூறிய இரண்டு சித்த மருந்தகங்களும் செயல்படத் தேவையான மருந்துகளுக்காக 20,000 ரூபாயையும் மரச் சாமான்கள் வாங்குவதற்காக 5,000 ரூபாயையும் செலவு செய்வதற்கு இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்கூறிய செலவினங்களைத் தவிரப் பணியாளர்களை நியமனம் செய்யத் தேவைப்படும் செலவுத் தொகை வருடத்திற்கு ரூபாய் 58,000 ஆகிறது.

தற்போது காப்பீடு (Insure) செய்து கொண்டுள்ள உறுப்பினர்களின் குடும்பத்ினர் அனைவரும் மருத்துவ மனையில் தங்கி முழு மருத்துவ வசதி எடுத்துக் கொள்ள நான்கு இடங்களில் தொழிலாளர் காப்பீடு நிறுவனத்தின் மூலம் வசதி செய்யப்பட்டு உள்ளது. அமல் செய்யப்பட்ட எஞ்சிய 40 இடங்களில் காப்பீடு செய்து கொண்டுள்ள உறுப்பி





## முதல்வரின் முத்துக்கள்

* சட்டம் என்பது தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளவும், அறிவாற்றல் பெறவும் உறுதுணையாக இருக்கவேண்டும். யாரையாவது எதற்காவது கட்டுப்படுத்தி, சுதந்திரத்தைப் பறித்து, ஆடும் பொம்மையாக மாற்றுவதற்கு ஒரு கருவி என்ற வகையில் சட்டங்கள் இருக்கக்கூடாது! சட்டங்கள், காலத்திற்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும்!

* யார் எதிர்த்தாலும், தாக்கினாலும் அதுவும் நம் நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ள வேண்டும். சிரித்துச் சிரித்துப் பேசுபவர்களை விட, நமது முன்னேற்றத்திற்காகவும், நல்வாழ்விற்காகவும் இடித்துக் கூறுபவர்களே நல்ல நண்பர்கள்!

* சில நேரங்களில் எந்தத் தொழிலாக இருந்தாலும் தொடர்ந்து சோதனைகள் வருவதுண்டு. அவைகளை அச்சத்தோடு சந்திக்கக்கூடாது. அதிர்ச்சியடையக்கூடாது. சிலர் ஒன்று சேர்ந்து தாக்கும் நிலை ஏன் ஏற்பட்டது? எதற்காக அவர்கள் நம்மைத் தாக்குகிறார்கள்?- என்று ஆராய்ச்சி செய்யவேண்டும். பதட்டத்தோடு எந்த முடிவுக்கும் வராமல், ஆராய்ச்சி அறிவோடு ஆழ்ந்து அமைதியாகச் சிந்தித்தால் என்றும் வெற்றி கிட்டும்!

* அன்பினால் ஒருவரோடு ஒருவர் கட்டுப்பட வேண்டும். அதிகாரத்தினாலும், பயமுறுத்தலாலும் கட்டுப்படுத்த முடியாது. சட்டத்தின் மூலம் தண்டனை தரமுடியுமே தவிர திருத்த முடியாது!

* நடிகர்கள், வாழ்க்கையிலும் நடிக்க வேண்டுமா என்ற கேள்வி எழலாம். நல்ல மனிதனாக நடிப்பவர்கள் நல்லவிதமாக நடந்து கொள்ளவும் வேண்டும். அதைத் தெளிவாகச் செய்து காட்டும்போதுதான் நல்ல மனிதன் என்ற பெயரும் புகழும் வந்து சேருகிறது!

---

ளர்களின் குடும்பம் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை செய்து கொள்வதைத் தவிர ஏனைய அனைத்து மருத்துவ வசதிகளும் பெற்று வந்தனர்.

தற்போது இந்த 40 மருத்துவமனைகளில் காப்பீடு செய்து கொண்ட உறுப்பினர்களின் குடும்பத்தினர் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறலாம் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் 1979-ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வந்துள்ளது. மேற்குறிப்பிட்ட 40 மருத்துவமனைகளில் முழு மருத்துவ வசதி அளிப்பதால் சுமார் 22.75 இலட்சம் ரூபாய் வரை அரசுக்குச் செலவாகும். இதனால் 2,51,335 குடும்ப உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

அரக்கோணம், தஞ்சாவூர், சங்கரி ஆகிய மூன்று பகுதிகளுக்கும் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் இந்த வருடத்தில் நீட்டிக்கப்படும்.

மொத்தமுள்ள 4 மருத்துவமனைகள், 104 மருந்தகங்களில், 4 மருத்துவமனைகளும், 46 மருந்தகங்களும் கழகத்திற்குச் சொந்தமான கட்டடங்களிலும் ஏனையவைகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்குகின்றன. தாம்பரம், வேலூர் மணப்பாறை திண்டுக்கல் ஆகிய இடங்களில் தனியார் வாடகைக் கட்டடங்களில் தற்போது இயங்கி வரும் மருந்தகங்கள் புதிய கட்டடங்களில் இயங்குவதற்கான அரசாங்க ஒப்புதல் பெற்று, மேற்படி கட்டுமான வேலைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 206 படுக்கை வசதிகள் கொண்ட சென்னை, கே. கே. நகர் மருத்துவமனையில் 500 படுக்கைகள் வசதியுடன் மற்றொரு தளம் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்படி கட்டட வேலைகளின் வளர்ச்சி, முன்னேற்றத்தில் உள்ளது. தனியார் வாடகைக் கட்டடங்களில் தற்போது இயங்கும் இரண்டு மருத்துவர்களும் அதற்கு மேலும் உள்ள 51 மருந்தகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கக் கழகம் ஒத்துக் கொண்டுள்ளது.

தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் மருந்தகங்களுக்கான நிலையங்களை நில ஒப்படை செய்து கட்டடம் கட்டுவதற்கான வேலையைத் துரிதப்படுத்த தனி துணை மாவட்ட ஆட்சியர் ஒருவரையும் அவருக்குத் துணை புரிய இதர பணியாளர்களையும் அமர்த்த அரசு அனுமதி அளித்துள்ளது.

---

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றார் வள்ளுவர். அத்தகு சிறப்புடைய வேளாண்மையின் மேம்பாட்டுக்குச் சீரிய திட்டங்கள் பல இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

# வேளாண்மை வளர்ச்சி



வேளாண்மைக்குத் தமிழகத்தில் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு வேளாண் பெருமக்களின் வாழ்வு மலர, விவசாயிகளிடம் அதிக அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் எண்ணிலடங்காத திட்டங்களை செயலாற்றியதோடு விவசாயிகளின் துயர் துடைத்திடப் பல சலுகைகளையும் அளித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு சோதனையாகப் புயலும், மழையும் பெருத்த சேதத்தை விளைவித்துள்ளது அனைவரும் அறிந்ததே. எனினும் உடனுக்குடன் அரசு மேற்கொண்ட மீட்பு நடவடிக்கைகளால், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சேதமும், உற்பத்தியில் ஏற்படவிருந்த பெருமளவு இழப்பும் தவிக்கப்பட்டன. தேவையான நிவாரண நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொண்டது.

புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட பயிர் உற்பத்தி இழப்புகளை ஈடுசெய்ய கோடைப் பருவத்தில் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் ஏரிகளிலும் கிணறுகளிலும் உள்ள தண்ணீர் வசதியைக் கொண்டு கூடுதலாக உணவுப் பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டதோடல்லாமல், அரசின் உதவிகளும் காலத்தே வழங்கப்பட்டன.

விவசாயிகளுக்கு அரசு அளித்துள்ள குறிப்பிடத்தக்க சலுகைகளையும் வேளாண்மை உற்பத்தியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் செய்துள்ள சாதனைகளையும் கோடிட்டுக் காட்டுவது சாலப் பொருத்தமுடையதாகும்.

### அரசு வழங்கிய சலுகைகள்

விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் அளவு சலுகைகள்

இதுவரை எந்த அரசும் முனைந்து வேளாண் மக்களின் நீண்ட காலப் பிரச்சனைகளை ஆய்ந்து அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவில்லை. இந்த அரசு அமைத்த உயர் மட்டக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் உடனடியாக விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் கீழ்க்கண்ட சலுகைகளை அளித்துள்ளது.

## லெவி நீக்கம்

வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல்லுக்கும், அரிசிக்கும் இப்போது மிகக் குறைவாகவே விதிக்கப்பட்டு வரும் 20 சதவிகித லெவியைக் கூட ஜூன் மாதம் முதல் தேதி முதற்கொண்டு அடியோடு நீக்கி விட அரசு முடிவு செய்துள்ளது.

## அரசுக் கடன்கள் ரத்து

அரசு வழங்கியுள்ள தக்காவிக் கடன்கள், விவசாயக் கடன்கள் சட்டத்தில் கீழும், மேம்பாட்டு சட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட கடன்கள், கிணறு வெட்ட வழங்கிய கடன்கள், மற்றும் கூட்டுறவுக் கடன்கள் ஆகியவற்றில் பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில் சலுகைகள் காரணமாக ஏறத்தாழ 16 இலட்சம் விவசாயிகளுக்கு 27 கோடி ரூபாயும், தக்காவிகக் கடன்களைப் பொறுத்த வரையில் 15 இலட்சம் விவசாயிகளுக்கு 13 கோடி ரூபாய் அளவிலும் பல நிவாரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

## தக்காவிக் கடன்கள்

நிலமில்லாத விவசாயிகளுக்கு விவசாயப் பொருள்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

மற்ற விவசாயிகளுக்கு முதல் 500 ரூபாய் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அடுத்த 5000 ரூபாய் தொகை வரையில் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

விவசாயக் கடன்கள் சட்டத்தில் கீழும் மேம்பாட்டுச் சட்டத்தின் கீழும் வழங்கப்பட்டுள்ள கடன்கள் அசலாகவோ, வட்டியாகவோ இரண்டும் சேர்ந்தோ வாங்கிய கடனுக்கு சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தால் கணக்குத் தீர்ந்து விட்டதாக கருதப்படும். இதில் வணிகப் பயிர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களும் அடங்கும்.

மூலதன வசதிகளை உருவாக்க வழங்கப்பட்ட கடன்கள் அசலாகவோ வட்டியாகவோ இரண்டும் சேர்ந்தோ கடன் வழங்கப்பட்ட தொகைக்கு இரு மடங்கு செலுத்தப்பட்டிருந்தால் கணக்குத்தீர்ந்ததாக கருதப்படும்.



கிணறு தோண்டவும், குழாய்க் கிணறு அமைக்கவும் வழங்கப்பட்ட கடன்களுக்கும் இரு மடங்கு தொகை அசலாகவோ வட்டியாகவோ இரண்டும் சேர்ந்தோ செலுத்தியிருந்தால் கணக்குத் தீர்ந்ததாக கருதப்படும்.

கிணறு தோண்டக் கடன் வாங்கி அத்தொகைக்கு ஈடான தொகையை கிணறு வெட்ட செலவு செய்தபின் அக்கிணறு பொய்த்துவிட்டிருந்தால் முதல் ரூபாய் 10000வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறை மூலம், மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு வழங்கப்பட்ட கடன்களில் மண்வளப் பாதுகாப்பு, நிலத்தில் பூச்சி மருந்து அடித்தல் ஆகியவை தவிர மற்ற இனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் அனைத்தும் வசூல் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

மண்வளப் பாதுகாப்பிற்கான கடனில், அசலில் 50 சதமும் நிலத்திற்குப் பூச்சிமருந்து அடித்தலுக்கான கடனில் அசலுக்குச் சமமான தொகையும் செலுத்தப்பட்டு இருந்தால் கணக்குத் தீர்ந்ததாக கருதப்படும்.

மேலே குறிப்பிட்ட இனங்களைத் தவிர மற்ற இனங்ளில் கடன் தொகைக்கு சமமாகச் செலுத்தப்பட்டிருந்தால் கணக்கு தீர்ந்ததாக கருதப்படும்.

இச்சலுகைகளுக்குப் பின்பும் செலுத்த வேண்டிய தொகை இருப்பின் அதை இரு தவணைகளாகச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுக்கடன்கள்:

30.6.1978 அன்று தவணை தவறி நிலுவையில் இருந்த குறுகிய கால, மத்திய கால, நீண்ட கால விவசாயக் கடன்களுக்கு 30.6.1979 வரை உரிய அபராத வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. 30.6.1977 க்குப் பின் செலுத்தப் பட்ட அபராத வட்டி உறுப்பினர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட கடன்கள் ஒன்றோ அதற்கு மேற்பட்டோ இருப்பின் அக்கடன்களுக்கு 30.6.1978 வரை உரிய வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.

மாற்றி அமைக்கப்பட்ட கடன்கள் மொத்தமாக ஒரே கடனாக்கப்பட்டு அவைகளைத் திருப்பி செலுத்துவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இச்சலுகைகள் தவிர 1.1.1979-க்கு முன் மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன்களாக நிலுவையில் உள்ள கடன்களும் ஒன்றாக்கப்பட்டுத் திருப்பிச் செலுத்துவதற்



கான கால நீடிப்பு கொடுக்கப்பட இருக்கும் கடன்களுக்கும் வட்டி விகிதம் குறைக்கப்படும். மேற்படி கடன்களுக்குத் தற்போதுள்ள விதிகளின்படி 1.1.1979 முதல் சிறு விவசாயிகளின் கடன்களுக்கு 10.5 சதவிகித வட்டியும் இதர விவசாயிகளுக்கு 12 சதவிகித வட்டியும் நிர்ணயிக்கப்படும்.

## மிகக் குறைவான மின்சாரக் கட்டணம் :

முன்பு யூனிட்டிற்கு 16 காசாக இருந்ததை 14 காசாக குறைத்திட்ட அரசு, சிறு உழவர்களுக்கு யூனிட்டிற்கு 12 காசாகவும் இதர உழவர்களுக்கு 14 காசு என்றும் மாற்றி அமைத்தது. இதனால் ஆண்டுக்கு 6 கோடி ரூபாய் அளவு அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும் இந்தச் சலுகை 1.6.1978 முதல் செயலாக்கப் பட்டு வருகிறது.

மீட்டர் கட்டணம் ரூ. 5-லிருந்து ரூ. 4-ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அளவு இழப்பு ஏற்படுகிறது.

## புயலும் நிவாரணமும் :

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டு விவசாயிகள் புயலினாலும் வெள்ளத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர், எனினும் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு.உடன் எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகளால் அப் பயிர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சேதமும், உற்பத்தியில் ஏற்படவிருந்த பெருமளவு இழப்பும் தவிர்க்கப்பட்டன. கீழ்கண்ட நிவாரண நடவடிக்கைகளை அரசு உடனடியாகச் செயல்படுத்தியது.

## 1977-ஆம் ஆண்டில் நிவாரண நடவடிக்கைகள் :

### இலவச விதை விநியோகம் :

தாளடி, சம்பா பயிர் செய்வதற்காக தரமான நெல் விதைகள் சிறு உழவர்களுக்கும், குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் 30 இலட்சம் ரூபாய் அளவிற்கு இலவசமாக வழங்கப்பட்டது.

### சிறு விவசாயிகளுக்கு மானியம் :

கரும்பு பயிரிட்டிருந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகை சாகுபடியாளர்களுக்கு ரூபாய் 87,300- மானியமாக வழங்கப் பட்டது.

வாழை சாகுபடியாளர்களில் சிறு உழவர்களுக்கும் மற்றும் குத்தகை சாகுபடியாளர்களுக்கும் ரூ. 5,43,600- மானியமாக வழங்கப்பட்டது.

வெற்றிலை பயிரிட்டிருந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகை சாகுபடியாளர்களுக்கும் ரூ. 10,27,000- மானியமாக வழங்கப்பட்டது.

எல்லா பயிர்களுக்கும் எல்லா விவசாயிகளுக்கும் ரூ. 100 இலட்சம் அளவிற்கு பூச்சி மருந்துகள் 25% மானிய விலையில் வழங்கப் பட்டன.

98200 தென்னங் கன்றுகள் இலவசமாக சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மண் மேடிட்டுப்போன நிலங்களில் 7,064 ஹெக்டேரில் சிறு உழவர்கள் மற்றும் குத்தகை சாகுபடியாளர்களுக்கு இலவசமாகவும் ஏனைய உழவர்களுக்கு 50 சதவீத மானியச் செலவிலும் நிலச் சீர்திருத்தம் செய்து தரப் பட்டது.

## 1978-ஆம் ஆண்டில் எடுக்கப் பட்ட நிவாரண நடவடிக்கைகள் :

தாளடி, சம்பா பயிர் செய்வதற்காகச் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூ. 2,11,770 பெறுமான தரமான நெல் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட வாழை மற்றும் கரும்புப் பயிர்களை புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் உதவித் தொகையாக ஏக்கருக்கு ரூபாய் 100 வீதம் ரூ. 79,400-வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வெற்றிலை கொடிக்கால்களைப் புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் உதவித் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500- வீதம் ரூ. 3,51, 370- அளிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக சிறுவிவசாயிகளுக்கு இலவசமாக 10042 தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

நீலகிரியில் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு 25 சதவிகித மானிய விலையில் ஏக்கருக்கு ரூ 250- வீதம் ஒரு நபருக்கு ரூ. 1000- வரை உருளைக் கிழங்கு விதைகள் வழங்கப்பட்டன. இந்த வகையில் ரூ. 38,600 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இலவசமாக ரூ. 54,000- பெருமான காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.

மண் மேடிட்ட நிலங்களையும், கிணறுகளையும் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இலவசமாகவும் மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்திலும் ரூபாய் ஆயிரம் உச்சவரம்பிற்கு உட்பட்டு வேளாண்மைத்துறை மூலம் சீர்திருத்தம் செய்து கொடுக்கப்பட்டது. இந்தவகையில் 35.53 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

## வரி விலக்கு:

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி, நிலத்தீர்வை, இதர நீர்வரிகள் வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## கரும்புக்கு அதிக விலை :

மத்திய அரசு கரும்பின் விலையை டன்னுக்கு ரூ.35- ஆக நிர்ணயித்திருந்தாலும், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் மூலம் டன்னுக்கு ரூ. 100- முதல் ரூ. 125- வரை விவசாயிகளுக்கு விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

## உற்பத்தியில் உயரி :

இவ்விரு ஆண்டுகளில் விளை பொருட்களின் உற்பத்தியில் கணி

சமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1977இல் 62 இலட்சம் டன் அரிசியும், 19 இலட்சம் டன் சிறு தானியங்களும் 3 இலட்சம் டன் பயறு வகைகளும் 14 இலட்சம் டன் வெல்லமும் 4.04 இலட்சம் பேல் பருத்தியும் 12.29 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டு 64 இலட்சம் டன்கள் அரிசியும் 20 இலட்சம் டன்கள் சிறு தானியங்களும் 3.25 இலட்சம் டன்கள் பயறு வகைகளும் 14.07 இலட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்களும் 19.50 இலட்சம் டன்கள் வெல்லமும், 4.96 இலட்சம் பேல்கள் பருத்தியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1976 - 77இல் 1277 கிலோ என்று இருந்தது ஏக்கருக்கு சராசரி நெல் உற்பத்தி 1978-79 ஆம் ஆண்டு 1350 கிலோ என்ற அளவிற்கு உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிறப்புக் கோடை சாகுபடி திட்டம் :

புயலினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட பயிர் உற்பத்தி இழப்புகளை ஈடு செய்ய ஏரிகளிலும், கிணறுகளிலும் உள்ள தண்ணீர் வசதிகளைக் கொண்டு 1977-78 ஆம் ஆண்டில் கூடுதலாக 1.00 இலட்சம் ஹெக்டேர் நெல்லும், 0.41 இலட்சம் ஹெக்டேர் சிறு தானியங்களும், 1.55 லட்சம் ஹெக்டேர் நிலக்கடலையும் கோடையில் பயிரிடப்பட்டன.

இந்த ஆண்டும் கூடுதலாக 0.40 இலட்சம் ஹெக்டேர் நெற் பயிரும் 0.32 இலட்சம் ஹெக்டேர் சிறு தானியங்களும், 0.10 இலட்சம் ஹெக்டேர் பயறுவகைகளும் 0.35 இலட்சம் ஹெக்டேர் நிலக்கடலையும் 0.05 இலட்சம் ஹெக்டேர் எள்ளும் 0.42 இலட்சம் ஹெக்டேர் பருத்தியும் சாகுபடிக்கு கொண்டுவரத்திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

## குறைந்த செலவில் அதிகத் திறன் வாய்ந்த தொழில் நுட்பங்கள் :

சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு சாகுபடிச் செலவைக் குறைத்து உற்பத்தித் திறனை உயர்த்தவல்ல குறைந்த செலவுள்ள உற்பத்தி நுணுக்கங்கள் உள்ள நவீன சாகுபடி முறைகள் விவசாயிகளிடையே பரவலாக்கப்பட்டுள்ளன.

உற்பத்திச் செலவைக் குறைக்கும் கருவிகளாக நஞ்சைக்கு 'கிராவிடர் அப்ளிகேட்டர்' மற்றும் மானாவாரி சாகுபடிக்கு புஞ்சைக்கேற்ற பலநோக்குக் கருவியும் விவசாயிகளுக்குச் சலுகை விலையில் அளிக்கப்படுகின்றன.

## பயறுவகைகள் விதை உற்பத்தி :

பயறுவகைகளின் விதைகள் உற்பத்தியை அதிகப்படுத்த 5 விதை உற்பத்தி நிலையங்கள், வட ஆர்க்காடு, திருநெல்வேலி மதுரை புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் துவக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவியுடன் கோவையில் மேலும் ஒரு விதை உற்பத்தி நிலையப் துவங்கப்பட்டுள்ளது.

## எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி:

நீர்த் தேக்கத்திலுள்ள சாதகமான தண்ணீர் வசதியைப் பயன்படுத்தி முதன்முறையாக பெருமளவு எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வகையில் இவ்வாண்டு கீழ் பவானி திட்டத்தின் கீழ் கூடுதலாக 32,000 ஹெக்டேரில் எள் பயிரிடப்பட்டுள்ளது.

## தென்னங்கன்றுகள் விநியோகம்:

ஆண்டுக்கு 12 இலட்சம் தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகித்து வந்ததை அதிகப்படுத்தி 1978-79 — ஆம் ஆண்டில் 14,30,000 தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது ஒரு சிறந்த சாதனையாகும்.

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க கோயம்புத்தூர், கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்னை தீவிர அபிவிருத்தி சாகுபடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குட்டை நெட்டை ஒட்டுத் தென்னங் கன்றுகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டையில் ஆண்டுக்கு ஒரு இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## இரசாயன உர விநியோகம் :

1976-1977 ஆம் ஆண்டு 2 இலட்சம் டன் தழைச் சத்தும் 0.45 இலட்சம் டன் மணிச்சத்தும், 0.57 இலட்சம் டன் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

1978-79-ஆம் ஆண்டு 2.90 இலட்சம் டன்கள் தழைச்சத்தும் 0.94 இலட்சம் டன்கள் மணிச்சத்தும், 1.07 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்களை விநியோகம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பயிர்ப் பாதுகாப்பு :

நெற்பயிரைத் தாக்குகிற புகையான், தண்டுத் துளைப்பான் மற்றும் நிலக்கடலையில் தோன்றும் சிகப்பு கம்பளிப் புழுவினை ஒழிக்க ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் 1977-78இல் நெற் பயிரில் 34,000 ஹெக்டேர் பரப்பிலும், மணிலாவில் 53,000 ஹெக்டேர் பரப்பிலும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 மானியம் அளிக்கப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

1978-79-ஆம் ஆண்டு நெற் பயிரில் 41,000 ஹெக்டேர் பரப்பிலும், மணிலாவில் 88,000 ஹெக்டேர் பரப்பிலும் பயறு





வகையில் 38,400 ஹெக்டேர் பரப்பிலும் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

உடுமலை, பொள்ளாச்சி மற்றும் பெரியகுளம் பகுதிகளில் பெருமளவில் தோன்றி சேதம் விளைவித்து வரும் 'புரோடீனியா' புழுக்களை ஒழிக்க 1977-78 ஆண்டு 25 சதம் மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வகையில் மானியமாக ரூ. 53,148 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 4378 ஹெக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆண்டு புதிய முறையில் 'புரொடீனியா'வைக் கட்டுப்படுத்த முதன் முறையாக வைரசு வினியோகம் செய்து எந்தவித செலவுமில்லாமல் அறவே ஒழித்து மிகச் சிறந்த ஒரு செயலாகும்.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் 10,500 ஹெக்டேரில் கையாளப்பட்டு பருத்தியில் அதிக சேதத்தை விளைவிக்கும் கார்ப்புழுக்களை திறமையாக கட்டுப்படுத்தியதோடு மருந்து தெளிக்கும் செலவினை பாதி அளவிற்கு குறைக்கச் செய்தது ஒரு சிறந்த சாதனையாகும்.

நெல்லைத் தாக்கி பெருமளவில் சேதப்படுத்தும் புகையான் பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக 1977 - 78—ஆம் ஆண்டு 20,000 ஹெக்டேரில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1978-79-ஆம் ஆண்டு 48,000 ஹெக்டேரில் இப்பூச்சிகளை ஒழிக்க குறிப்பாக மதுரை மாவட்டத்தில் சோழவந்தான் பகுதியிலும் தஞ்சை மாவட்டம் முழுவதிலும் கோவை மாவட்டத்தில் கோபிச் செட்டி பாளையம் பகுதியிலும் 8 இலட்சம் ரூபாய் மானியத்தில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

## தோட்டக் கலை வளர்ச்சி :

தோட்டக் கலை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி, பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்த தோட்டக் கலை இயக்ககம் ஒன்று தனியே அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

பழ உற்பத்தியை அதிகரிக்கவும், மாதிரி பழப் பண்ணையாக விளங்கவும், புதுக்கோட்டையில் 1,000 ஏக்கர் அளவில் ஒரு மாபெரும் பழப்பண்ணை துவக்கப்பட்டுள்ளது.



திருச்சி மாவட்டம் முதலைப் பட்டியிலும் வடஆர்க்காடு மாவட்டத்தில் நவ்லாக்கிலும் இரண்டு வாழை நாற்றங்கால்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.

## புதிய ரகங்கள் :

பயிர்களின் உற்பத்தியை உயர்த்தவல்ல 16 புதிய ரகங்களை விவசாயிகளுக்காக வேளாண்மைத் துறை 1977-78 இல் வெளியிட்டது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் 8 புதிய ரகங்களை வெளியிட்டது.

1978-79-இல் வேளாண்மைத் துறை 12 புதிய ரகங்களையும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் 13 புதிய ரகங்களையும் விவசாயிகளுக்காக வெளியிட்டுள்ளது.

## விதை சான்றிதழ் திட்டம் :

1978-79 ஆம் ஆண்டில் 4600 ஹெக்டேரில் நெல்லும் 1600 ஹெக்டேரில் வீரிய ஒட்டுச் சிறு தானிய ரகங்களும், 390 ஹெக்டேரில் வீரிய ஒட்டு பருத்தி ரகங்களும் சான்றிதழ் விதைத் திட்டத்தின் கீழ் சான்றிதழ் வழங்கப்பட்டன. இதன் மூலம் விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் இந்த அரசு விதைச் சான்றிதழ் திட்டத்தை ஒரு தனி இயக்கமாகச் செயல்படுத்துகிறது.

தமிழ்நாட்டிலிருந்து சான்றிதழ் பெற்ற விதைகளை வெளி மாநிலங்களிலுள்ள விவசாயிகள் விரும்பி வாங்குகிறார்கள். இதன் மூலம் தமிழ்நாட்டில் விதை உற்பத்தியை அதிகப்படுத்தவும் விவசாயிகளுக்கு அதிக வேலை




வாய்ப்புகள் பெருகவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

### விதை சுத்திகரிப்பு நிலையங்கள் :

தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கோவை மாவட்டத்திலுள்ள பவானியிலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளத்திலும், திருச்சி மாவட்டத்திலுள்ள இறுங்கூரிலும் மூன்று புதிய பெரிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வருடத்திற்கு சுமார் 4,000 டன் விதைகள் அதிகப்படியாகச் சுத்தம் செய்து விநியோகிக்கப்படுகின்றன.

### பரிசோதனை நிலையங்கள் :

1978-79ஆம் ஆண்டு விவசாயிகளுக்குத் தரமான விதை கிடைக்க வழி செய்யும் வகையில் புதுக்கோட்டையில் மேலுமொரு விதைப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

உரங்களைப் பரிசோதனைச் செய்ய கோயில்பட்டியிலும், பூச்சி மருந்துகளை பரிசோதனை செய்ய காஞ்சிபுரத்திலும் புதிய பரிசோதனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### உழவர்களுக்குப் பயிற்சி :

1977-78 ஆம் ஆண்டு புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலும் 1978-79 ஆம் ஆண்டில் சேலம், இராமநாதபுரம், நீலகிரி மாவட்டங்களிலும், உழவர் பயிற்சி நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழ் நாட்டின் 14 மாவட்டங்களிலும் உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### விற்பனையும் தரக் கட்டுப்பாடும்:

வேளாண்மை விளை பொருள் விற்பனை இயக்ககம் ஒன்றை தனியான 1977-ஆம் ஆண்டு அக்டோபர் 14-ஆம் தேதி அரசு ஏற்படுத்தியுள்ளது. விற்பனைக் குழுக்கள் தங்களது பணிகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும் விற்பனை வசதிகளை அதிகப்படுத்தவும் விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நல்ல விலையைப் பெறுவதற்கும் இந்த தனித்துறை மிக உதவியாக இருக்கும்.

### ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டம்:

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளின் வாழ்வு மலர 1978-79 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் சுமார் 50 சதவிகித வட்டாரங்களில் செயல்படத் தொடங்கியது. இத்திட்டம் படிப்படியாக எல்லா வட்டாரங்களுக்கும் விரிவாக்கப்படும்.

### வறட்சிச் சார்புப் பகுதி திட்டம் :

வறட்சிச் சார்பு மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்ட நலனுக்கெனச் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 1978-79ஆம் ஆண்டு 342 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டிற்கு 464 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிதி ஒதுக்கீடு குறிப்பாக அம்மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகள் மிகச் சிறு விவசாயிகள் நிலமற்ற விவசாயிகள் வாழ்வு மலரச் செலவிடப்படும்.

### பெரிய விளக்கப் பண்ணைகள் :

மானாவாரி விவசாய மக்களின் வருமானத்தைப் பெருக்க மண் வளப் பாதுகாப்பு, மற்றும் நீர் பராமரிப்பு முறைகள் 400 ஹெக்டேர் ஒருங்கிணைந்த தளைகளில் புதிய முறையில் முதல் முறையாக செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த விளக்கப் பண்ணைகள் 100-க்கும் மேற்பட்ட இடங்களின் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பொறியியல் பிரிவு

### கசிவுநீர்க் குட்டைகள் :

நில நீர் வளத்தை பெருக்க 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளில் 257 கசிவு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### காற்றரிப்புத் தடை திட்டம் :

மதுரை மாவட்டம் போடி நாயக்கனூர் பகுதிகளில் காற்றரிப்புத் தடை அமைக்கும் திட்டம் 1977-78 ஆம் ஆண்டில் 1633 ஹெக்டேர் நிலத்திலும் 1978-79-ஆம் ஆண்டில் 1632 ஹெக்டேர் நிலத்திலும் மேற்கொள்ளப்பட்டது.

### மண்வளப் பாதுகாப்பு :

சமவெளிப் பகுதிகளிலும் மலைப் பகுதிகளிலும் 1977-78-ம் ஆண்டு 39620 ஹெக்டேரிலும், 1978-79 ஆம் ஆண்டு 42820 ஹெக்டேரிலும் மண்வளம் பாதுகாப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

### சிறு பாசனம் :

1977-78-ஆம் ஆண்டு 4172 குழாய்க் கிணறுகளும் 2689 வடிமுனைகுழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டன. 1978-79 ஆம் ஆண்டு 4692 குழாய்க் கிணறுகளும் 2587 வடிமுனைக்குழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டன. மேலும் 1977-78 ஆம் ஆண்டு 2215 கிணறுகளும் 1978-79 ஆம் ஆண்டு 2573 கிணறுகளும் ஆழப்படுத்தப்பட்டன.

**அரிசன பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகவும் நல்வாழ்வுக்காகவும் அரசு ஆற்றி வரும் அரும்பணிகள் பல.**

# அரிசனமக்கள்-பழங்குடியினர் நல்வாழ்வுக்கு

தமிழகத்திலுள்ள அரிசன-பழங்குடியினரின் எண்ணிக்கை 76 இலட்சமாகும். இது, நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில், 18 சதவீதமாகும்.

அரிசன, பழங்குடியினர் சிறு தொழில்கள் நடத்துவதற்கு வட்டியில்லாக் கடன் தொகை வழங்க அரசு அனுமதித்துள்ளது.

### பாசனக் கிணறுகள் வெட்ட உதவித்தொகை

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் அரிசன, பழங்குடி மக்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு உதவித் தொகை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு நிதி உதவி அளித்து அவர்களை மேம்படுத்த அரசு முயன்று வருகிறது. இதற்காக, பாசனக் கிணறு வெட்டுவதற்குரிய உதவித் தொகைத் திட்டத்தைத் திருத்தி அமைத்துள்ளது. இதன் விளைவாக கிணறு வெட்டப்படுவதற்குரிய மொத்தச் செலவில் 1/3 பாகம் உதவித் தொகையாகவும் 2/3 பாகம் நிலவள வங்கிகளின் மூலம் கடனாகவும் வழங்கப்படுகிறது. 1979-80ல் அரிசனங்களுக்கு ரூபாய் 7.50 இலட்சமும், பழங்குடியினருக்கு ரூபாய் 1.9 இலட்சமும் இந்த வகையில் செலவிடப்பட்டது. கிறித்துவராக மாறிய அரிசன மக்களுக்கும் இதே வகைச் செலவுக்காக ரூபாய் 1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது

### பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் :

ஏழை அரிசன மக்களுக்கு உதவுவதற்காகவும் அவர்களுக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பால் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களை அரசு உருவாக்கி உள்ளது. இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு அரிசன உறுப்பினருக்கும் கால்நடை ஒன்றுக்கு 1500 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. நபர் ஒருவருக்கு 500 ரூபாய் அரிசன நிதியிலிருந்து மான்யமாக வழங்கப்படுகிறது. நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 1000 ரூபாய் கடனாகவும் வழங்கப்படுகிறது. இப்பணிக்கு 1979-80ஆம் ஆண்டிற்கு ரூபாய் 10.55 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தனிப்பயிற்சித் திட்டம்

அரசுக் கல்லூரிகளிலும் அரசின் உதவி பெறும் கல்லூரிகளிலும், புகுமுக வகுப்பு-மூன்றாண்டுப் பட்ட வகுப்பு ஆகியவற்றில் பயிலும் அரிசன பழங்குடி மாணவ, மாணவியர்க்குத் தனிப் பயிற்சி அளிப்பதற்கு 1978-79 ஆம் ஆண்டிற்கு ஒரு இலட்ச ரூபாயை அரசு செலவிட்டு உள்ளது. இந்தத் தனிப் பயிற்சி அவர்கள் பயிலும் கல்லூரிகளிலேயே - கல்லூரி நேரத்திற்குப் பின்னர் அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் உள்ள 189 கல்லூரிகளில் இந்தத் திட்டம் அமல் செய்யப்படுகிறது.

20 அரிசன, பழங்குடி இனப் பெண்களுக்கு வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி பெட்டி சம்பந்தப்பட்ட தொழில் நுட்பப் பயிற்சி அளிப்பதற்காக அரசு 1978-79 ஆம் ஆண்டுக்கு 17,000 ரூபாய் செலவிட்டது.

### தீண்டாமை ஒழிப்பு

தற்போது குடிஉரிமைகளைப் பாதுகாக்கும் பணியை மாநிலம் முழுவதும் முனைப்பாகவும், வலுவாகவும் நடத்துவதற்குரிய வகையில் சுற்றும் காவல் படைகள் மேலும் 7 அமைக்க 1979 ஜனவரியில் அரசு அனுமதியளித்துள்ளது.

1977-78ஆம் ஆண்டில், தமிழ் நாடு முழுதும் அரிசனங்களுக்கு 5000 வீடுகளை தமிழ்நாடு அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் அரசு கட்டித் தரும். 79ஆம் ஆண்டிற்கு 1000 வீடுகள் கட்டப்படும்,

1977-78ல் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலையில் பழங்குடியினருக்கு 42 வீடுகளைக் கட்டித் தந்துள்ளது.

1978-79ல் சேலம் மாவட்டத்தில் உள்ள சின்ன கல்ராயன் மலையில், பழங்குடியினருக்கு 22 வீடுகளைக் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

### பழங்குடியினர் நலன்

பழங்குடியினர் 1.45 இலட்சம்பேர்கள் வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வருகிறார்கள்!

வேளாண்மை - கால் நடை வளர்ப்பு-மண்வளப் பாதுகாப்பு-சிறு பாசனம்- சாலை அமைப்பு-வேளாண்மை இடுபொருள்கள் விநியோகம், புதுவாழ்வுப் பணிகள், பள்ளிகள், அரசு மருத்துவமனை உருவாக்கல், மகப்பேறு நிலையங்கள், உரங்கள், கோழி வளர்ப்பு - தேனீ வளர்த்தல் ஆகிய திட்டங்களுக்காக 1977-78க்கு ரூ. 153 இலட்சம் செலவிடப்பட்டது. 1978-79ல் ரூ. 200 இலட்சம்செலவிடப்பட்டது.

1977-78ஆம் ஆண்டு வரை அரிசன -பழங்குடி மாணவர்களுக்கும் மதம் மாறிய அரிசன மாணவர்களுக்கும், மெட்ரிக்படிப்புக்கு முந்திய படிப்புக்கும், புத்தகச் செலவுக்கும், சிறப்புக் கட்டணத்துக்கும்தேர்வுக்கட்டணத்துக்கும், படிப்புதவித் தொகை பணமாக வழங்கப்பட்டது. இந்த உதவித் தொகையை வழங்குவதற்கு பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு உச்ச அளவு வருமான வரையறை 3000 ரூபாயாக இருந்தது. 1978-78ஆம் ஆண்டிலிருந்து பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கருத்தில் கொள்ளும் அளவுகோல் முறை ஒழிக்கப்பட்டு விட்டது.

உடற் பயிற்சிக் கல்லூரி, பி.லிட் வகுப்பு உள்ள கல்லூரி, சமையற் கலைக் கல்லூரி, மையபோதகர் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் பயிலும் அரிசன, பழங்குடி- மாணவர்களும் கிறித்துவராக மதம் மாறியவர்களும் படிப்புக் கட்டணங்கள் செலுத்த வேண்டியதில்லை.

### இறுதிச் சடங்குகளுக்குத் தொகை கொடுத்தல்

மிக ஏழையாக உள்ள அரிசன பழங்குடி மக்கள்,குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட்டால்-இறுதிச் சடங்கிற்காக ரூ. 50 நிதியுதவியை 1978ஆம் ஆண்டிலிருந்து அரசு வழங்கி வருகிறது. 1978-79ஆம் ஆண்டில் 3857 பேருக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 4.33 இலட்சம் வழங்கப்பட்டது. 1979-80ஆம் ஆண்டுக்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# ஸ்டாண்டர்ட்-20 டீஸல் வண்டி



## செலவு குறைவு தரமான வண்டி

நீங்கள் வாங்கும் டிரக் நன்றாக உழைக்கவேண்டும், அதற்கு டீஸல் அதிகமாகச் செலவழியக்கூடாது. எஞ்சின் அருமையானதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கிறீர்கள் அல்லவா? உங்கள் எண்ணப்படியே அமைந்த வண்டிதான் ஸ்டாண்டர்ட்-20 டீஸல் வண்டி.

ஒரு லிட்டர் டீஸலுக்கு ஸ்டாண்டர்ட்-20 டீஸல் வண்டி 11 கிலோமீட்டருக்கும் அதிகமாக ஓடுகிறது. எனவே ஒவ்வொரு முறை டீஸல் போடும்போதும் உங்களுக்கு எவ்வளவு பணம் மிச்சமாகும் என்று யோசித்துப் பாருங்கள்.

மேல்நாட்டு தரங்களுக்கேற்றபடி எஞ்சின் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனால் வண்டியில் அனாவசியக் குலுக்கல்கள் இருக்காது. அதிர்வுகளும் இருக்காது. அதிக ஓசையும் கிடையாது. குளிர்ந்த நிலையிலிருந்தும் சட்டென்று வண்டியை ஸ்டார்ட் செய்யலாம்.

## திறமை அதிகம்

ஸ்டாண்டர்ட்-20 டீஸல் வண்டியில் ஒரு டன் சுமையை ஏற்றலாம். அல்லது 12 ஆட்களுக்கு மேல் பிரயாணம் செய்யலாம். உங்கள் விருப்பப்படி டெலிவரி வேன், மினி பஸ், பிக்கப் வேன் அல்லது ஆம்புலன்ஸ் வண்டியாகப் பயன்படுத்துங்கள். கண்ணைக் கவரும் அழகான பாடியுடன் கிடைக்கிறது இந்த வண்டி.

இப்போது இந்த வண்டி டி.ஜி.எஸ். & டி. ரேட் காண்ட்ராக்ட்படியும் கிடைக்கிறது.

**ஸ்டாண்டர்ட்-20 டீஸல்**

**சிக்கனமான வண்டி!**

ஸ்டாண்டர்ட் மோட்டார் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்
மவுண்ட் ரோடு, சென்னை 600 002.


**ஊரகப்பகுதிகள் வளர்ச்சிதான் சமுதாயத்தின் உண்மையான மறுமலர்ச்சிக்கு அடித்தளமாக அமையும், எனவே, ஊரகப் பகுதிகள் முன்னேற்றத்தில் இந்த அரசு பெருங்கவனம் செலுத்தி வருகிறது.**

# ஓங்கி வளரும் ஊரகப் பகுதிகள்

ஊர்ப்புற மக்கள் வாழ்வில் அனைத்து முன்னேற்றங்களையும் ஏற்படுத்தும் உயர்ந்த நோக்குடன் சமுதாய வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தகைய திட்டம், வாழ்க்கையில் உயர் நிலைகளை எய்துவதற்காக மக்களை விழித்தெழச் செய்து, ஊக்குவித்து, உழைக்கத் தூண்டும் ஒரு திட்டமாகும்.

தனி மனிதன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளும் திட்டம்தான் இது எனினும், மக்களின் ஆக்கங்களிலும் ஊக்கங்களிலும், அரசு பெரும் பங்கேற்று அம்மக்களின் வருவாயைப் பெருக்குவதற்கு வழி வகுக்குகிறது.

பொருளாதார சமூக மற்றும் பண்பாட்டு நிலைகளில் சமுதாயம் மேம்பட்டுத் திகழச் செய்வதே இதன் இன்றியமையா நோக்கம். எனினும், ஆண்டுகள் உருண்டோடும்போது, பலவகையாகப் பிரிவு பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாய நீரோடைகள், நாட்டு முன்னேற்றம் என்ற ஆற்றில் ஒன்று சேர்ந்து கலக்க, அந்த நாட்டின் வளத்திற்கு அவைகள் இறுதியில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொள்கின்றன.

மக்கள் தமக்குரிய திட்டங்களைத் தாமே வகுத்து தாமே நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தைச்செயலில் காட்டும் முன்னேற்றப் பாதையைத்தான் ''சமுதாய வளர்ச்சி'' என்ற கைகாட்டி காட்டுகிறது. எனவே, அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியில் அவர்களையே ஈடுபடுத்தினால் தேவைப்படும் நேரத்தில் தேவைக்கும் அதிகமான முன்னேற்றம் ஏற்படும் என்ற எண்ணம், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் இதயமாகும். மேலும், இத்திட்டம், ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை மக்கள் மனமுவந்து அளிக்கின்ற திட்டமாகவும் அமைவதால், வளர்ச்சிப் பணிகளில் தளர்ச்சியின்றித் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள சமுதாயம் முழுவதுமே தூண்டி விடப்படுவதற்கான வாய்ப்பு அப்போது உருவாகிறது. இத்தகைய சாதனை எல்லைகளை அடைய உறுதி அளிக்கும் சட்டபூர்வமான அமைப்புகளாக ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் திகழ்கின்றன.

ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்கு இந்த இரண்டு ஆண்டுகளில் நிதி முதலீடுகளின் அளவு சுமார் ரூ. 276 கோடி ஆகும்.

**நிதிநிலை மற்றும் திட்டங்களின் சாதனைகள்**

ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்காகும் நிதிச் செலவு படிப்படியாக உயர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. 1974-75 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் வட்டாரத்திற்கென வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | ஒரு வட்டாரத்திற்கு வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | |
| 74—75 | 1,04,22,05 | 27.87 |
| 75—76 | 1,11,23.87 | 29.74 |
| 76—77 | 1,16,25.40 | 31.08 |
| 77—78 | 1,32,55.30 | 35.44 |
| 78—79 | 1,43,07.36 | 38.25 |
| 79—80 | 1,81,56.90 | 48.55 |

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஊரக வளர்ச்சிக்கென அரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்றுகளாகும்.





# உங்களுடைய மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் அடிக்கடி பெட்ரோல் பங்கிற்கு போக வேண்டியிருந்தால்

ஐபெக்ஸ் கார்புரேட்டர் பொருத்துவது உங்கள் வண்டியை புதியதாக்குவதற்கு ஒப்பாகும்.

விஜய் டீலக்ஸ், விஜய் புஷ்பக், லாம்பி, சுவேகா, சுஜாதா, வினய் வண்டிகளுக்கு ஐபெக்ஸ் கார்புரேட்டர்கள் ஒரிஜினலாகப் பொருத்தப்படுகின்றன.

ஆகவே உங்கள் கார்புரேட்டரை மாற்றும் நேரம் வரும் போது ஐபெக்ஸ் கார்புரேட்டரையே தேர்ந்தெடுங்கள்—ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், மொபெட் தயாரிப்பாளர்கள் புதிய வண்டிகளில் பொருத்த அதையே தேர்ந்தெடுக்கிறார்கள்.




'ஐபெக்ஸ்' கார்புரேட்டர்— சிக்கனத்துக்கு மறு பெயர்.



உடனே அதற்குத் தேவை 'ஐபெக்ஸ்' கார்புரேட்டர்.

IBEX

கார்புரேட்டர்ஸ் லிமிடெட்,
118, மவுண்ட் ரோடு, சென்னை 600 002

FDS/C/2772/TAM


''உள்ளூர் செஸ் மேல்வரி''யின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ளத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதை ஊக்குவிக்கும் வகையில் உள்ளூர் செஸ்மேல் வரி இணை மானியமாக அரசு அளிக்கும் ஊக்குவிப்புத் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவது இதற்குச் சான்றாகும். 1979-80 ஆம் ஆண்டில் மட்டும் உள்ளூர் செஸ்மேல் வரி இணை மானியத்திற்காக மட்டும் ரூபாய் 1,700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் வரி விதிக்கின்றன. 1979-80ஆம் ஆண்டு அத்தகைய வரி மட்டும் ரூ. 115 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**குடிநீர் வசதி :**

இந்த அரசினுடைய முதல் தலையாய குறிக்கோளான் கிராமப் புறங்களில் இருக்கின்ற மக்களுக்கு நல்ல பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் எல்லாருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளிற்கிணங்க (இது வரை) முடிவடைகின்ற கடந்த இரண்டாண்டில் கீழ்க்கண்டுள்ளதுபோல் வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

1. தரை மட்ட நீர் தேக்கத் தொட்டிகள்: 454
2. மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள்: 440
3. தானியங்கு அழுத்தத் தொட்டி 91
4. கைப் பம்புகள்: 3034
5. திறந்த கிணறுகள்: 1488
6. ஆழ் குழாய்க் கிணறுகள் 602
7. முன்பே உள்ள கிணறுகளை ஆழப் படுத்தியது [illegible]2

**இணைப்புச் சாலைகள் :**

இணைப்புச் சாலைகள் இல்லாத இன்னும் சில கிராமங்கள் உள்ளதால் அக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப் படவேண்டும். அப்போதுதான் மக்கள் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு வாய்ப்பு வசதி ஏற்படும் என்கிற அடிப்படையில் மாநில, மற்றும் மத்திய அரசு, மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் இணைந்து 1978-ஆம் ஆண்டு சுமார் 80 இலட்சம் ரூபாயும், 79ஆம் ஆண்டுரூ 80 இலட்சம் இணைப்பு மதிப்புள்ள சாலைகள் எல்லா மாவட்டங்களில் உள்ள எல்லா ஒன்றியங்களில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இணைப்புச் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டினைப் புதிய சாலைகளை அமைப்பதற்குப் பயன்படுத்தாமல், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கடந்த இரண்டாண்டுகளில் கீழ்வருமாறு சாலைகள் அமைத்துப் பராமரித்து வருகிறது:

1. மண் சாலை சரல்போட்ட சாலையாக மாற்றியமைக்கப் பட்டுள்ளது 436 கி. மீ.
2. சரல்போட்டசாலை சல்லி போட்ட சாலையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது 348 கி. மீ
3. சல்லி போட்ட சாலை தார் போட்ட சாலையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 22கி. மீ.
4. சிறு பாலங்கள் 69 கி.மீ.
5. தாம்போகிகள்: 7 கி. மீ.

**பள்ளிக் கட்டடங்கள் :**

தொடக்க, முதல் தொடக்கப்பள்ளிக் கட்டடங்கள், உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றிற்கு முறையே ரூ. 20,000 ரூ. 30,000-த்தை உயர் மதிப்பீடாகக் கொண்டு அரசு மான்யம் வழங்கப்பட்டுவருகின்றது. இது தவிர கீழ்வரும் பள்ளிக் கட்டடங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சொந்தக் கட்டடம் இல்லாப் பள்ளிகள் (தொடக்கப்பள்ளி) 436

சொந்தமாகக் கட்டப்பட்ட புதுப் பள்ளிக் கட்டடங்கள் (உயர்தர தொடக்கப்பள்ளிகள்) 31

**புயல் மற்றும் வெள்ள நிவாரண வேலைகள் :**

எதிர்பாராத பயங்கரமான புயல், வெள்ளத் தாக்குதல்களின் காரணமாக ஏற்பட்ட சிறுபாசன வசதிகள், ஏரிகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டடங்கள் ஆகியவைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மொத்தமாக பலகோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சேதங்களுக்குட்பட்டவைகளைப் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு அரசு ரூ.36.8 இலட்சம் மான்யமாக வழங்கியுள்ளது. செப்பனிடும் வேலைகள் தொடங்கி விட்டன.

**முறைசாரக் கல்வி:**

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி சேர்கின்ற குழந்தைகள் தொடர்ந்து படிப்பினை மேற்கொள்ளாமல் நடுவில் தங்களால் இயன்ற வருமானம் ஏற்படும் என்கின்ற வேலைகளைச் செய்ய வேண்டுமென்று பள்ளியிலிருந்து விடுபட்டுச் சென்று விடுகின்றனர். சுமார் 20 முதல் 30 சதவிகிதம் இப்படி பிள்ளைகள் ஒவ்வொரு ஆண்டும் பள்ளிகளிலிருந்து கல்வி பெறாமல் விடுபடுகின்றனர். இவர்களுடைய அறிவு செம்மைப்பட முறைசாராக் கல்வித் திட்டத்தை அமல்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் ஒவ்வொரு கல்வி நிலையம் நிறுவ வேண்டும் என்ற அரசு ஆணையின்படி 780 முறை சாராக் கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. இதனால் பல மாணவர்கள் பெரும் பயனை அடைந்து வருகின்றனர். மேற்படி நிலையங்களைப் பராமரிக்க ரூ.4.68 இலட்சம் செலவழிக்கப்படுகிறது. இன்னும் 220 நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

ஊராட்சி உள்ளாட்சித்துறையின் மூலமாக ஆக்கப்பணிகளுக்குத் தேவையான மேம்பாட்டுத் திட்டங்கள், நலப்பணித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நடைபெற்று வருகின்றன

# மக்கள் நலங்காக்கும் மகத்தான பணி!

**நாடு நலம் பெற வேண்டுமெனின், நாட்டு மக்களின் நலம் காக்கப்பட வேண்டுமெனப் பாடுபட்டுவருவது மக்கள் நல்வாழ்வுத் துறை!**

வலிமையான உடல்நலத்துடன் ஒவ்வொரு குடிமகனும் சுக வாழ்வு நடத்தி, ஒளிமயமான நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகக் கடந்த இரு ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வுத் துறை, பல்வேறு திட்டங்களைத் துரித கதியில் இயக்கிக் கொண்டிருக்கிறது.

தற்போது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டு ஒன்றிற்கு மருந்துகள் வாங்குவதற்கென ரூ. 14,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**நடமாடும் மருத்துவப் பணிகள்**

கிராம மக்களுக்கு அவர்கள் இருப்பிடங்களிலேயே மருத்துவ வசதிகள் அளிக்கும் நோக்குடனும், இந்நாட்டிலேயே முதன்மையான புதிய ''நடமாடும் மருத்துவக் குழுத்'' திட்டத்தை, 1977-'78-ஆம் ஆண்டில் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இவ்வரசு துவக்கியுள்ளது. 1978-'79-ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது, 1979-'80-ஆம் ஆண்டில் ரூபாய் 62.43 இலட்சம் செலவில் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது.

ஒன்றியத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மருத்துவ அலுவலர்கள் ஒரு வார காலத்தில் ஒரு முறை சென்று வருவார்கள். சிக்கலான நோயாளிகளை அருகிலுள்ள மருத்துவ மனைகளுக்கு சிறப்புச் சிகிச்சைக்கு அனுப்பி வைப்பார்கள்.

**பலநோக்கு நல்வாழ்வுப் பணியாளர் திட்டம்**

மத்திய அரசு உதவித் திட்டமான பலநோக்கு நல்வாழ்வுப் பணியாளர் திட்டத்தின்கீழ், செயல்முறைகளில் அடிமட்ட அளவில் ஒருங்கிணைப்பு இருக்கும். இத் திட்டம் கன்னியாகுமரி, மதுரை, தென்னார்க்காடு, சேலம், செங்கற்பட்டு ஆகிய



ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**தாய்-சேய் நல நிலையங்கள் :**

தாய்-சேய் நலத் திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களால் ஏற்படுத்தப்பட்டுப் பராமரிக்கப்படும் பல மகப்பேறு நிலையங்கள் மூலமாக இப்பணி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் 2,983 மகப்பேற்று நிலையங்கள் உள்ளன. மானிய உதவித் திட்டங்களின் கீழ், ஊராட்சி ஒன்றியங்களால் ஏற்படுத்தப்பட்ட 2880 நிலையங்களும் இதில் அடங்கும்.

**மக்கள் நிலையை உயர்த்துதல் :**

நல்ல சத்துணவு இல்லாமல் நோய்க்கு ஆளாகின்ற மக்களுக்கு இந்தச் சத்துணவுத் திட்டத்தின் கீழ், நல்ல சத்துணவு அளிக்கப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாய்-சேய் நல நிலையங்கள், குழந்தைகள் காப்பகங்கள், பள்ளிகள் ஆகியவற்றிலும் குறிப்பாகத் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும், சத்துணவு பற்றிக் கற்பிப்பது இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் பின்வரும் சத்துணவுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன :—

1. குழந்தைகள் வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம்.

2. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்றுகளில் மலைச் சாதியினர் மேம்பாட்டுத் திட்டம்.

3. குழந்தைகளுக்கு சத்துணவின்மை, வைட்டமின் 'ஏ' குறைவு காரணமாகக் கண் பார்வை யற்றுப் போவதைக் கட்டுப்படுத்துதல் அல்லது தடுத்தல்.

4. சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

5. சத்துணவுச் செயல் திட்டம்.

**குழந்தைகள் வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம்**

இத் திட்டம் தளி வட்டாரத்திலும் (மக்கள் தொகை 1.13 இலட்சம்), நிலக்கோட்டை வட்டாரத்திலும் (மக்கள் தொகை 1.14 இலட்சம்), சென்னை நகரில் சில குடிசைப் பகுதிகளிலும் 1976-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது.

**இத்திட்டத்தின் நோக்கங்கள்**

(1) பிரசவமான குழந்தையிலிருந்து 6 வயதில் உள்ள குழந்தைகளின் சத்துணவு பெறும் நிலையையும் உடல் நலத்தையும் மேம்படுத்துதல்.

(2) குழந்தையின் உள்ளம், உடல், சமூக வளர்ச்சிக்கு ஏற்ற அடிப்படைச் சூழ்நிலையை உருவாக்குதல்.

(3) குழந்தைகள் இறந்து போதல், உடல் உறுப்புகளில் நோய் பற்றுதல், சத்துணவின்மை, தொடக்கப் பள்ளிக் கல்வியை இடையிலேயே விட்டுவிடுதல் ஆகியவற்றைக் குறைத்தல்.

**சிறப்புச் சத்துணவுத் திட்டம் :**

இத்திட்டம் இரு மாநகராட்சிகளிலும், 33 நகராட்சிகளிலும், 25 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகரக் குடிசைப் பகுதிகளிலும், பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும், கருவுற்றிருக்கும் மகளிருக்கும், பிள்ளைத் தாய்ச்சிகளுக்கும், ஆறு மாதம் முதல் ஆறு வயது வரை உள்ள, பள்ளி செல்லும் வயதடையாக் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்துணவு அளிப்பதே இதன் நோக்கமாகும்.



இத்திட்டத்தின் கீழ் 1,46,530 பேர் பயனடைகின்றனர். இத்திட்டம் முழுவதற்கும் இப்போது தமிழ்நாடு அரசு, நிதி உதவி அளிக்கிறது.

**வைட்டமின் A மற்றும் ஊட்டச் சத்துக் குறைபாடுத் திட்டம்**

இத்திட்டம் (நடைமுறைச் சத்துணவுத் திட்டம் செயல்படாத) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் சமூக நலத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்படுகிறது. தாய்மார்கள் குழந்தைகளிடையே ஊட்டச் சத்துணவு தொடர்ந்து இருப்பதற்கு தேவைப்படும் கல்வி விளக்கத்தை அளிப்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

**மருத்துவக் கல்வி :**

தமிழ்நாட்டில் 8 அரசு மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. எட்டுக் கல்லூரிகளில் மூன்று கல்லூரிகள் சென்னை மாநகரிலும், ஏனைய 5 கல்லூரிகள் மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. எட்டு மருத்துவக் கல்லூரிகளில் எம். பி. பி. எஸ். வகுப்புகளில் ஆண்டுதோறும் மொத்தம் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதில் 30 இடங்கள் வேறு மாநிலத்தைச் சார்ந்தோருக்காக ஒதுக்கப்படுகின்றன. மூன்று இடங்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கும், பத்து இடங்கள் விதவைகளுக்கும் ஒதுக்கப்படுகின்றன.

**புறநகர் மருத்துவ மனைகள் :**

சென்னை கே. கே. நகரில் உள்ள புறநகர் மருத்துவமனை ஏற்கெனவே முடிக்கப்பட்டு அக மற்றும் புற நோயாளி சிகிச்சை வசதியுடன் செயல்படத் தொடங்கியுள்ளது. அறிஞர் அண்ணா நகரிலும், தண்டையார்ப் பேட்டையிலும் புறநகர் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இவை சீக்கிரம் செயல்படும்.

**1978-'79-ஆம் ஆண்டு சாதனைகள் :**

இம்மாநிலத்தில் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் இருக்கின்றன. 1977-'78-ஆம் ஆண்டில் இம் மருத்துவ மனைகளின் படுக்கைகளின் எண்ணிக்கை 4,054 ஆக இருந்தது. 1978-'79-ஆம் ஆண்டில் இம் மருத்துவ மனைகளில் பொதுப் பிரிவுகளில் 281 படுக்கைகளும், தொழுநோயாளிகளுக்கான தற்காலிக சிகிச்சை அளிக்கக்கூடிய பிரிவுகளில் 120 படுக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 4,455 ஆக உயர்ந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் 108 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் இருக்கின்றன. 1977-'78-ஆம் ஆண்டு வரை இம் மருத்துவமனைகளில் மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 5653. இம்மருத்துவ மனைகளில் 31-12-'78 வரை 130 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மொத்த எண்ணிக்கை 5,783 ஆக் உயர்ந்துள்ளது.

1978-'79 ஆம் ஆண்டில் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு 2,76,700 கருத்தடை அறுவைச் சிகிச்சைகளைச் செய்ய வேண்டுமென்று இந்திய அரசு நிர்ணயித்தது. 15-3-'79 வரை 1,89,464 கருத்தடை அறுவைகள் செய்யப்பட்டன.

14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடம் அல்லாத ஊர்களிலுள்ள 59 மருத்துவ மனைகளிலுமாக தற்போது மொத்தம் 73 சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இதில் 1978 '79-ல் தொடங்கப்பட்ட 10 சித்த மருத்துவப் பிரிவுகளும் அடங்கும்.

இவ்வாறு மக்கள் நல்வாழ்வுத் துறை மகத்தான பணிகளை ஆற்றி வருகின்றது.

ஸ்பென்ஸர்ஸ்
டீ வாங்கினல் பழரசத்தில் லாபம்

ஒரு 500 கிராம் ஸ்பென்ஸர் தேநீர் பாக்கெட் வாங்கி ஸ்பென்ஸர் பழரச பாட்டில் வாங்கும்போது ஒரு ரூபாய் லாபம் பெறுங்கள்.

முக்கியமாக இந்த இரண்டு பண்டங்களிலும் முதல் தரத்தை பெறுகிறீர்கள். ஒரு 500 கிராம் ஸ்பென்ஸரின் கிரீன் லேபல், ரெட்பாண்ட் அல்லது பீகோ டஸ்ட் தேயிலை பாக்கெட் வாங்கினல், நீங்கள் பெறுவது நீலகிரி மலையின் உயர்ந்த சாரலில் பயிராகும் தேயிலையை மட்டுமல்ல, ஒரு ரூபாய் பெறுமான தள்ளுபடி கூப்பன் ஒன்றும் பெறுவீர்கள்.

இந்த கூப்பனைக் கொண்டு நீங்கள் ஸ்பென்ஸரின் தரமான பழரசங்களை வாங்கும்போது பாட்டிலின் விலையில் ஒரு ரூபாய் தள்ளுபடி பெறுவீர்கள்.

இப்பொழுதே முந்திக் கொண்டு டீ மற்றும் பழரச லாபகர பேரத்தில் பங்கு கொள்ளுங்கள்.

ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்

இந்த சலுகையை சென்னை, பெங்களூர் மற்றும் ஹைதராபாத் நகரங்களில் மட்டுமே பெறலாம்.

ST-2832 TM

# இமய மாப்புகழ்ச் சின்னங்கள்

புலவர் புலமைப்பித்தன் எம்.எல்.சி.

இயற்கையின் உற்பா தங்கள்
எத்துணை; வஞ்ச கத்தால்
செயற்கையாய்ப் போராட் டத்தைத்
தூண்டியே மக்கள் ஆட்சி
இயக்கத்தைத் தடுப்போர் சூழ்ச்சி
எத்துணை! இவற்றைத் தாங்கி
வியத்தகு வண்ணம் நல்ல
வெற்றிகள் குவித்தோம், இங்கே!

பெரியார்க்கு விழாவெ டுத்த
பெருமையும் செந்த மிழ்ச்சீர்
உரியார்க்குக் கொடைகொ டுத்த
உயர்தனிச் சிறப்பும் அண்ணா
இருமொழிக் கொள்கை தன்னை
இடைவிடாத் திறமும், இந்த
இரண்டாண்டில் ஆட்சி செய்த
இமயமாப் புகழ்ச்சின் னங்கள்!

சோற்றினுக் கில்லை என்னும்
சோகங்கள் இல்லை; அண்ணா
ஆற்றினை விலகிச் செல்லும்
அவலமும் இல்லை; மக்கள்
பேற்றினும் பேறாய் இன்று
பிறங்கிடும் ஆட்சி, தென்றல்
காற்றினைப் போல்எல் லோர்க்கும்
கனிவான இனிய ஆட்சி.

கல்வியை வளர்ப்ப தற்கும்
கலைகளைப் பேணு தற்கும்
தில்லியின் மொழித்தி ணிப்பால்
தீந்தமிழ் விழாத வண்ணம்
வல்லமை யாகக் காக்கும்
மாட்சியும், மக்கள் மன்றில்
சொல்லுமே இரண்டாண் டாட்சி
தோற்காத சரித்தி ரத்தை!

எழுத்துச்சீர் திருத்தம் தன்னை
ஏற்றதும் செயற்ப டுத்த
அழுத்தமாய் முனைந்து நிற்கும்
ஆற்றலும், இந்த ஆட்சி
முழுமையாய்ப் பெரியார் பாட்டை
விலகாத ஆட்சி என்று
வழுத்துமே! குறைசொல் வோர்கள்
மறுப்பாரா? வரட்டும் இங்கே!




வழக்கமாகப் பண்டிகைக்
காலங்களில் மட்டுமே கைத்தறித்
துணிக்கு வழங்கப்பட்டு வந்த
சிறப்புத் தள்ளுபடி பெரியார்,
அண்ணா, காமராசர் ஆகிய தலைவர்களின் பிறந்த நாட்களை
முன்னிட்டும் இப்போது வழங்கப்பட்டு வருகிறது.
ஓய்வு பெறும் வயது!
55
58
ஓய்வு பெறும் வயதை அதிகரிக்க
வேண்டும் என்ற அரசு ஊழியர்களின்
நீண்ட நாள் கோரிக்கையை அரசு
ஏற்று, அரசு ஊழியர்கள்
ஓய்வு பெறும் வயதை 55-
லிருந்து 58 ஆக உயர்த்தியது.
தென் மாநிலங்களிலேயே
தமிழ் நாட்டில்தான் ஓய்வு
பெறும் வயது உயர்த்தப்பட்
டுள்ளது.


தலைமை
ஆசிரியர்
தமிழாசிரியர்கள்
உயர் துவக்கப் பள்ளித்
தலைமையாசிரியர்களாக
நியமனம் பெற
வாய்ப்பு வழங்கப்
பட்டுள்ளது.
அரிசி நடமாட்டத்தைக்
கண்காணிக்கும்
சோதனைச் சாவடிகள்
(செக்-போஸ்ட்)
அனைத்தும் 1-6-79
முதல் நீக்கப்பட்டன.
கிராம மக்களுக்கு
மருத்துவ வசதிகள்
எளிதில் கிட்டும்
வகையில் நடமாடும்
மருத்துவக் குழுக்கள்
என்ற புதிய திட்டம்
உருவாக்கப்பட்டது.


கோ ஆப்டெக்ஸ்
பாலியஸ்டர், பட்டு ஆடைக
புத்துலகப் படைப்பு...!
புதுமைகளின் முன்னறிவிப்பு...!
ஆப்டெக்ஸ்
கைத்தறி



காவிரி ஆற்றின் குறுக்கே குளித்தலையையும் முசிறியையும் இணைக்கும் வகையில், ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட—தமிழ்நாட்டிலேயே மிக நீளமான பாலம் (1,473 மீட்டர்) மாண்புமிகு முதலவர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில், 8.6.79 அன்று திறந்து வைக்கப் பெற்றது. வருவாய்த்துறை அமைச்சரின் பேரவைச் செயலர் திரு முசிறிப்புத்தன் உடன் உள்ளார்.

1978 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு, மாநிலம் முழுதும் 50 கிலோ அரிசி வீதம் மொத்தம் 2,10,800 பேருக்கு அரிசி வழங்கப் பட்டது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி, பாதிக்கப் பட்டவர்களுக்கு அரிசி வழங்குகிறார்.





**இரண்டாண்டுகளில்—**
**இன்றைய அரசு ஆற்றிய**
**பணிகள் ஏராளம், ஏராளம்!**
**அவற்றில்—**
**இந்தத் தொகுப்பு மலரில்**
**இடம் பெற்றிருப்பவை பிடியளவு!**
**[illegible] வெளிவர இருப்பவை**
**கடலளவு!**

ஆக்கமும் வெளியீடும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

பதிவு எண். M. 8676

13/7/79




# தமிழரசு

16-7-1979 50 காசு.



## ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது. நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை—சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!

---

## பத்தாவது ஆண்டில்...

ஒன்பது ஆண்டு நிறைவு பெற்று
1979 ஜூலை முதல் நாள் பத்தாவது
ஆண்டில் தனது பணியினைத் தொடரு
கிறது 'தமிழரசு' புதிய பகுதிகளுடன்
புதுமை மிளிரும் பொலிவுடன் 85367
எல்லாரும் போற்றும் வகையில்
எங்கள் பணி தொடர்ந்திடும்.
'தமிழரசு' தழைத்
தோங்கி வளர
உதவும் தூய உள்
ளங்களுக்கு
எங்கள்
நன்றி!
வணக்கம்!




# தமிழரசு
மலர்: 10 இதழ்: 2
16-7-1979



# முதல்வரின் முத்துக்கள்

அரசியல்வாதிகள் தொழிலாளர்களைத் தனியாகப் பிரித்து இலாபம் சம்பாதிக்கத் தொழிலாளர்கள் அனுமதிக்கக் கூடாது. தொழிலாளர்களை வழிநடத்திச் செல்பவர், தொழிலாளர்களில் ஒருவராகவே இருக்க வேண்டும்.

*சட்டத்திற்கு உணர்ச்சி இல்லை; அதைப் பயன்படுத்துகிறவர்களுக்கும், அதை இயற்றியவர்களுக்கும் தான் உணர்ச்சி உள்ளது. அப்படிப்பட்ட சட்டம் மனிதனை மனிதனாக வாழச் செய்கிறது. ஒழுக்கம் மனிதனை நேர்மைக்குச் சொந்தக்காரனாக்குகிறது!*

*குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட மனிதனைப் பார்த்துக் "குடிகாரன்" என்று குறிப்பிட்டால் கோபம் வருவதில் இருந்து ஒரு பகிரங்க உண்மை தெரிகிறது. அதாவது, மது அருந்துவது பொதுப்பண்பாட்டிற்கு ஒவ்வாத ஒன்று என்பதைக் குடிகாரனும் ஒப்புக் கொள்கிறான்; உணர்கிறான். இது ஒன்றே போதும் குடிப்பழக்கத் தீமையை விளக்கிட—மதுவிலக்கின் அத்தியாவசியத்தை உணர்ந்திட!*





கீடு செய்தல் போன்ற பணிகளுடன் மக்களுக்குத் தேவையான பல பணிகளையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது.

சேமிப்பு முறையிருப்பில்உள்ள அரிசியைத் தரம் கெடாமல்பாதுகாத்துப் பொது விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு வசதியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தன்னுடைய சொந்த வருவாயிலிருந்து 1.25 இலட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட, சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது. மேலும் 50,000 டன்கள் கொள்ளளவு கொண்ட 26 கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. அரிசி மட்டுமல்லாமல், கோதுமை, சர்க்கரை கடலை எண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருள்களையும் இக் கழகம் சேமித்து வைத்து, விலைவாசிகள் ஏறும் நேரத்திலோ, பொருள்களின் தட்டுப்பாடு ஏற்படும் கட்டத்திலோ நியாய விலையில் விநியோகத்தை மேற்கொள்கிறது. கடலை எண்ணெயில் கடுமையான நெருக்கடி ஏற்பட்ட காலத்தில், நியாயமான விலையில் கடலை எண்ணெய்யையும், சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்யையும் விற்க இக்கழகம் மேற்கொண்ட முயற்சிகள், விலைகளை நிதானப் படுத்துவதற்குப் பெரிதும் உதவின.

13 நவீன மயமான அரிசி ஆலைகளை இக்கழகம் நடத்தி வருகிறது. இந்த ஆலைகளின் அரைவைத் திறன் 93 விழுக்காடு அளவுக்குச் சென்ற ஆண்டு பயன்படுத்தப்பட்டது. இவையனைத்தும் இலாபகரமாகவே இயங்கி வருகின்றன. பொதுமக்களுக்கு நியாயமான விலையில் சிமெண்ட் விநியோகத்தையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது. கிராம மக்களுக்கும், நகர்வாழ் மக்களுக்கும் அரசு நிர்ணயித்த விலைகளில் தடையின்றி சிமெண்ட் கிடைக்க வசதியான சூழ்நிலையை இக்கழகம் உருவாக்கியுள்ளது பாராட்டுவதற்குரியதாகும்.

விவசாயப் பெருங்குடி மக்களின் குறைகளைப் போக்குகின்ற வகையில் 40 கோடி ரூபாய் அளவிற்கு இப்போது நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்க்க, தமிழக அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் இத்தகைய சலுகைகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளின் வரலாற்றிலே இது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடியதாகும்.




# சமுதாய நன்மையையே சிந்தித்த தலைவர்


ஜி. ஆர். தாமோதரன்,
துணை வேந்தர்,
சென்னைப் பல்கலைக் கழகம்


தலைவர் காமராஜ் அவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். அவர் நல்ல நண்பர். மிகப் பெரிய தலைவர்.

நாட்டு வளர்ச்சியிலேயே எப்பொழுதும் அக்கறை கொண்டவர்; தனக்கு என்று வாழாத மனப்பாங்கு உடையவர். காமராஜ், சமுதாய நன்மையைப்பற்றியே எப்பொழுதும் சிந்தித்துச் செயல்பட்டவர்.

1951-ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக தலைவர் காமராஜ் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

1952-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நின்று பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஐந்தாண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பிறகு, இங்குள்ள கல்வி நிறுவனங்களின் தொடர்பின் காரணமாகவும் இங்கு கவனிக்க வேண்டிய வேலைகள் அதிகமாக இருந்ததாலும் மீண்டும் பாராளுமன்றத்திற்குப் போட்டியிடவில்லை. 'சட்டமன்ற மேலவைக்கு, சுயேச்சை உறுப்பினராகப் போட்டியிடப்' போகிறேன் என்றுகாமராஜ் அவர்களிடம் சொல்லிவிட்டு, அவருடைய அனுமதியுடனேயே மேலவைக்குப் போட்டியிட்டேன்.

"நீங்கள் எல்லாருக்கும் பொதுவாக இருக்க வேண்டியவர்; சுயேச்சையாகவே இருங்கள்" என்று சொல்லிய காமராஜ் அவர்கள், என்னை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் யாரும் போட்டியிட வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள்.

என்னிடம் நிரம்ப நம்பிக்கை கொண்டிருந்தார். என்னோடு தொடர்புடைய கல்வி நிறுவனங்கள் வளர்ந்து முன்னேற்றம் அடைவதைக் கண்டு மகிழ்ந்தார்.



காமராஜ் அவர்களிடம் யாராவது பகைமை—விரோதம் பாராட்டினாலும், அவரைப் பற்றித் தவறாகப் பேசியிருந்தாலும் அதை அவர் பொருட்படுத்தியது கிடையாது. கொஞ்சம்கூடத் தனிப்பட்ட முறையில் கோபம் கொண்டது கிடையாது. இதை நான் நன்கு அறிவேன்.

கல்வி வளர்ச்சியிலே காமராஜ் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். பொது அறிவுமிக்கவர். High degree of common sense உடையவர்; எதிலும் நல்ல முடிவைக் காண்பவர்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்காக தீவிரமாக வேலை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். பெரிய பெரிய இயந்திரங்கள் எல்லாம் வந்துகொண்டிருந்தன.

# உணவு உற்பத்தியில் ஒரு சாதனை!

மாண்புமிகு உணவு அமைச்சர்

திரு ஜி. ஆர். எட்மண்ட்



தமிழக மக்களின் தலையாய உணவுப் பொருளான அரிசி, தாராளமாகவும், நியாயமான விலைகளிலும் இப்போது கிடைக்கின்றது. அரசிடமும் கணிசமான அளவில் கையிருப்பு உள்ளது. அரிசி கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையும், அரிசியின் விலைகள் பயங்கரமாக ஏறிவிட்டிருந்த நிலையும், பழங்கால நிகழ்வுகளாக மாறி, இப்போது உணவு நிலைமையைப் பொறுத்தவரை, பிரச்சினையே இல்லாத அளவுக்கு, நிலைமை சுமுகமாக இருப்பது, நமக்கு மிகுந்த மன நிறைவு அளிக்கக் கூடியதாகும்.

தமிழகத்தில் உணவு நிலைமை வசதியாகவும், சுமுகமாகவும் இன்று இருப்பதைப் போல், சென்ற பத்து பதினைந்து ஆண்டுகளில் என்றுமே இருந்ததில்லை என்று நாம் துணிந்து கூறலாம். உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயப் பெருமக்கள் எடுத்துக்கொண்டுள்ள பெருமுயற்சியின் காரணமாகவும், அரசின் விழிப்பான நடவடிக்கைகளின் காரணமாகவும், இந்த நிலைமை தமிழகத்தில் உருவாகியுள்ளது. நம் அனைவருக்கும் பெருமை அளிக்கும் ஒரு சாதனையாகும்.

1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல், நாடு முழுவதும் அரிசியைப் பொறுத்தவரையில், ஒரே உணவு மண்டலம் என்று இந்திய அரசு அறிவித்தது. அதனையொட்டி, நமது மாநிலத்தின் நலன்கள் பாதுகாக்கப்பட, முன்னெச்சரிக்கையாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அந்த முன்னேற்பாடுகளின் பலனாக இன்று நிலைமை சீராக உள்ளது என்பதே, தமிழக அரசின் துணிவான நடவடிக்கைகளுக்கும், தெளிவான கொள்கைகளுக்கும் சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

1978-79ஆம் ஆண்டில் தமிழகத்தின் நெல் விளைச்சல் 60 இலட்சம் டன்கள் அளவில் அமைந்து இருந்தது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆதரவான பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதன் பயனாகவும், தங்கள் உழைப்பை வித்தாக இட்டு, தங்கள் உறுதியை உரமாகப் பயன்படுத்தி வேளாண் பெருமக்கள் பாடுபட்டதன் பயனாகவும், தன்னுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவுக்குத் தமிழகம் இன்று நெல்லை உற்பத்தி செய்து வருகிறது. விவசாயிகளின் உற்சாகம் குறையாமல் இருக்க வேண்டுமானால், நெல்லுக்கு நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதில் இந்த அரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது.

உணவு உற்பத்தியும், அரிசி விலையும், நெல் கொள் முதல் விலையும் ஒன்றையொன்றுதழுவி நிற்கின்றன. நெல் கொள்முதல் விலையைப் பொறுத்து,வேளாண்மைப் பெருங்குடி மக்கள், நெல் பயிரிடும் பரப்பினையும்,வெளிச் சந்தையில் நெல் விற்பனையையும் நிர்ணயம் செய்து கொள்கிறார்கள். இதனால் தமிழ்நாட்டு மக்கள் அதிக அளவு பயன்படுத்துகின்ற அரிசியின் விலையும் பாதுகாக்கப்படுகிறது. இந்த நோக்கத்தில்தான் கொள்முதல் விலையை இந்திய அரசு உயர்த்த வேண்டுமென்று தமிழ்நாடு அரசு பல்வேறு கட்டங்களில் வலியுறுத்தி வருகிறது.

நெல் கொள்முதல் விலை, ஆண்டுதோறும் மத்திய அரசினால் விவசாய விளைபொருள்கள் விலைவாசிகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின்பேரில் நிர்ணயிக்கப்படுகிறது. 1978-79ம் ஆண்டிற்கு மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ.85 என்ற விலை மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோதுமைக்கு, சாகுபடிச் செலவை அடிப்படையாகக் கொண்டு, குவிண்டாலுக்கு ரூ. 112.50 என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டி கோதுமையின் சாகுபடிச் செலவைவிட நெல்லின் சாகுபடிச் செலவுஎந்த வகையிலும் குறைந்ததாகஇருக்க முடியாது-மாறாக கூடுதலாகத்தான் இருக்கின்றது என்பதையும் ஆதாரப்பூர்வமாக நிலைநாட்டி, நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்தியது. வேளாண்மை விளை பொருள்கள் விலைவாசி ஆணைக்குழுவிடமும் இக்கருத்து பலமாக வலியுறுத்தப்பட்டது. முதலமைச்சர்கள் மாநாட்டிலும் இந்தக் கருத்தைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் வன்மையாக வற்புறுத்தினார்கள். இது குறித்து தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தியப்பிரதமருக்கும் ஒரு கடிதம் எழுதினார்கள். ஆயினும் சென்ற ஆண்டு மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ.77 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்ததை எட்டு ரூபாய் அளவில் மட்டுமே உயர்த்தி நெல் விலையை ரூ.85 என்று மத்திய அரசு நிர்ணயித்தது, தமிழக அரசுக்கு மட்டுமல்ல, தென் மாநில விவசாயப் பெருமக்களுக்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது..

மத்திய அரசு அறிவிக்கும் நெல் விலை மாநில அரசுக்குத் திருப்தி அளிக்காவிட்டால், தமிழக விவசாயிகளின் நலனைக் கருதி மத்திய அரசு அறிவிக்கும் விலைக்குமேல் கூடுதலாக குவிண்டாலுக்கு ரூ. 20 அதிகமாகக் கொடுத்து நெல்லை வாங்கிக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. இந்த விலை உயர்வு வருகிற குருவை பட்டத்திலிருந்து செயல்படுத்தப்படும்.



பொது விநியோக முறைகளின் கீழ் அரிசி வழங்குவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகவும், நியாயமான விலையிலும் கிடைத்து வருவதால், பொது விநியோக முறையின் கீழ் அரிசி விற்பனை,சென்ற ஆண்டில் மிகக் கணிசமாகக் குறைந்தது. 1976ஆம் ஆண்டில் 6 இலட்சம் டன்கள் விற்பனைக்கு எதிராக, 1978ஆம் ஆண்டில் 1 இலட்சம் டன்கள் அரிசிதான் விற்பனை யாயிற்று. இவ்வாறு பொது விநியோக முறையில் விற்பனை குறைந்துள்ளது, வெளிச் சந்தையில் தாராளமாக அரிசி கிடைத்து வருவதால்தான்.அதே சமயத்தில், விலைகள் ஏறிவிடாமல் தடுப்பதற்குப் பாதுகாப்பு நடவடிக்கையாகப் பொது விநியோக முறையும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை திறக்கப்படும் என்று இந்த அரசுபொறுப் பேற்றவுடன் அறிவிப்புச் செய்தது. தமிழ்நாட்டில் 16,660 தாய் கிராமங்கள் உள்ளன. இவற்றில் குடியிருப்புகள் இல்லாத கிராமங்கள் 925. இவை நீங்கலாக 15,735 குடியிருப்புகள் உள்ள வருவாய்க் கிராமங்கள். இவற்றில் ஏறக்குறைய 5,800 கடைகள் இயங்கி வந்தன. இக்கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு இன்றியமையாத மற்ற பொருள்களையும் இக்கடைகளில் விற்பதற்கு ஏற்பாடு செய்து, அவற்றைப் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றும் நடவடிக்கையை அரசு பின் பற்றியது. ஏற்கெனவே இயங்கி வந்த உணவுப் பங்கீட்டுக் கடைகளைப் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றுவது ஓர் அம்சம். கடைகள் இல்லாத கிராமங்களில் புதிதாகக் கடைகளைத் திறப்பது மற்றோர் அம்சம். இந்த இரண்டு அம்சங்களையும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு தஞ்சை, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் எஞ்சிய மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இயங்கி வந்த ஏறக்குறைய 5,800 கடைகளில், 5,600க்கு மேற்பட்ட உணவுப் பங்கீட்டுக் கடைகள் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டு விட்டன. புதிதாகக் கடைகள் திறக்கப்பட வேண்டிய சுமார் 10,000 கிராமங்களில் 8,000 கிராமங்களில் கடைகள் இப்போது திறக்கப்பட்டு விட்டன.



சர்க்கரை இப்போது வெளிச் சந்தையில் தாராளமாக பொது மக்களுக்குக் கிடைக்கிறது. பருப்பு வகைகளைப் பொறுத்த வரையில் தமிழகம் பற்றாக்குறை மாநிலமாகும். மொத்தத்தில் பருப்பு வகைகளின் தேவை தமிழ்நாட்டில் 6 இலட்சம் டன்கள் என்று மதிப்பிட்டால் இங்கு அவற்றின் உற்பத்தி ஒரு இலட்சம் டன்களுக்கும் குறைவாக உள்ளது. பருப்பு வகைகளின் விலைகளை சீர்படுத்தும் நோக்கத்துடன் கூட்டுறவு அமைப்புகளும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், பருப்பு உற்பத்தியாகும் உபரி மாநிலங்களிலிருந்து, விளைச்சல் காலத்தில் அதிக அளவில் வாங்கி, இங்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளோம். கடலை எண்ணெய் விலையும் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு ஏறவில்லை.

மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான இன்றியமையாப் பொருள்களில் வாணிபத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன், 7 வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள் அமலில் உள்ளன.

உணவுத் துறையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஒரு சிறந்த சாதனையைச் செய்துள்ளது என்று சொன்னால், அது மிகையாகாது. கொள்முதல்செய்தல், அரிசியைச் சேமித்துவைத்து பொது விநியோகத்திற்கு ஒதுக்

அப்பொழுது இருந்த தலைமைப் பொறியாளர் அவர்களோ, ''இவ்வளவு பெரிய இயந்திரங்களை எடுத்துச் சென்றால் சாலையிலுள்ள பாலங்கள் தாங்காது'' என்று கூறினார்.

இதையறிந்த முதலமைச்சர் காமராஜ் அவர்கள், ''நெய்வேலித் திட்டம் மிகப் பெரிய திட்டம்; பழுப்பு நிலக்கரி வேண்டும் என்று நினைக்கிறோம். இதனால் மின்சாரமும் கிடைக்க வேண்டும். தொழிலும் பெருகவேண்டும் என்று நினைக்கிறோம். அப்படியிருக்கும்போது இயந்திரங்களை எப்படியாவது கொண்டு போய்ச் சேர்க்க வழி செய்யணும். அதைப் பாருங்கள்'' என்றார்.

அதற்குப் பிறகு, சாலையிலுள்ள பாலங்களை வலிவுப்படுத்தினார்கள்.. இதனை, காமராஜ் அவர்கள் எடுத்துரைத்த பிறகுதான் புரிந்து கொண்டு செயல்பட்டார்கள். அப்பொழுது நான் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் டைரக்டராக இருந்தேன். இது எனக்கு நன்றாகத் தெரியும்.

காமராஜ் அவர்கள் சிறந்த முதல்தரமான இலட்சியவாதி. எங்கள் கல்லூரியான பி.எஸ்.ஜி. கல்லூரியில் வந்து பேசும் பொழுது எல்லாம், ''இங்குள்ள மாணவர்கள் பெரிதும் முன்னேற வேண்டும். இவர்களால்தான் நாடு முன்னேற வேண்டும்'' என்பார்.

இப்பொழுது அமல்படுத்தப்பட்டு வரும் + 2 கல்விமுறை மிகச் சிறந்த ஒன்றாகும். கிராமத்திலுள்ள மாணவர்கள் அங்குள்ள பள்ளிகளிலேயே மேல்நிலைக் கல்வியைப் பயில வாய்ப்பு உள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திய தமிழகக் கல்வி அமைச்சர் அவர்களும் பாராட்டுக்குரியவர் ஆவார்.

வெளிமாநிலங்களிலுள்ளவர்கள் எல்லாம் + 2 கல்விமுறை நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும் முறையை அறிந்து கொள்ள வருகிறார்கள். நாம் செயல்படுத்திவரும் திட்டத்தைப் பாராட்டுகிறார்கள்.

காமராஜ் அவர்கள் இப்பொழுது இருந்தால் + 2 கல்வி முறை அமல்செய்யப்படுவது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள் - பாராட்டுவார்கள் என்பது எனது நம்பிக்கை!



மனமாரப் பாராட்டுகிறேன்!

''காமராசர் ஏழைகளின் வாழ்விற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். அவருடைய தூய தொண்டுள்ளத்தை நான் மதிக்கிறேன். அரசாங்க நிர்வாகத்திலுள்ள தாமதத் தன்மையைப் போக்குவதற்காக அவர் கொண்டு வந்துள்ள இந்த 'சிவப்பு நாடா முறை ஒழிப்புத்திட்டத்தை' நான் பூரணமாக ஆதரிக்கிறேன். என் வேண்டுகோளை ஏற்று இந்த தண்டலம் பகுதிக்கு வந்து மக்கள் குறைகளை நேரில் கேட்க இசைந்து இங்கு விஜயம் செய்திருக்கும் காமராசர் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.''

—பேரறிஞர் அண்ணா

( காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பேரறிஞர் அண்ணா கூட்டிய 'தண்டலம்' மாநாட்டில் பேசியது.)





# உரைகல்

கு. ராஜவேலு, எம்.ஏ.,

ஒரு மனிதனுடைய பெருமையை அறிவதற்கும் அவனுடைய சிறுமையைத் தெளிவதற்கும் உரைகல்லாக இருப்பது, அவரவர்கள் ஆற்றும் செயல்களேயாகும். தங்கத்தின் மாற்றை-தூய தன்மையைத் தெரிந்து கொள்வதற்கு அதை உரைத்துப் பார்ப்பார்கள். அக்கல்லைக் ''கட்டளைக்கல்'' என்றும் கூறுவார்கள். ஒரு மனிதனின் ஒழுக்கம், குணம், அறிவு ஆகிய பண்பு நலன்களை-அவனுடைய செயல்களை ஆராய்ந்து பார்த்தாலே, அம்மனிதனிடம் உயர்ந்த பண்புகள் மிகுதியா அல்லது தாழ்ந்த குணங்கள் மிகுதியா என்பதை ஐயமறத் தெளிந்து கொள்ளலாம்.

உயர்ந்த பண்புடையவர்கள் மக்களால் போற்றப்படுகிறார்கள். தாழ்ந்தவர்கள் மக்களால் ஒதுக்கப்படுகிறார்கள். இக் கருத்தைத்தான் — பொய்யாமையை, அரசியலிலும் வற்புறுத்திய வள்ளுவர்,

'பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.'

என்னும் குறளிலே கூறியுள்ளார். இந்த அளவுகோலை வைத்து நாம் மறைந்த காமராஜரை அளந்து பார்த்தால் அவர் மிகப் பெரியவர்-தனிமிகப் பெரியவர்-செயற்கரிய செய்த பெரியவர் என்பதை எவரும் எளிதில் ஏற்றுக் கொள்வர். அவர் தன்னலம் அற்றவர். தாய்நாட்டின் பால் தணியாத அன்பு பூண்டவர். அடிமைத் தனத்தை எண்ணி எண்ணி வெட்கத்தால் உள்ளம் சிறுத்தவர். 'உயிரைக் கொடுத்தும் விடுதலையைப் பெறவேண்டும் என்று உடல் சிலிர்த்துப் பொங்கியெழுந்தவர். தனக்கும் தன் மக்களுக்கும் இடையே வேற்றுமையைக் காணாதவர், வித்தகர். தன்னுடைய நண்பர்களை உடலாலும் உள்ளத்தாலும் ஒரு சேர அணைத்துக் கொண்ட உத்தமர். ஏழையென்றும் செல்வனென்றும் பாகுபாடு காட்டாத பண்பாளர். பிறருடைய துன்பக் கதையைக் கேட்டால் அவருடைய பெரிய கண்கள் கலங்கி விடும். அதை, அவர் பிறருக்குக் காட்டாமல் இருப்பதற்காக உடனே அவ்விடத்திலிருந்து எழுந்து சென்று விடுவார். சிறிது நேரங் கழித்து-தம் உள்ளம் சமநிலையை அடைந்த பின் மீண்டும் வந்து - அவருடைய துன்பத்தைத் தணித்து வழி அனுப்புவார். தக்கவரிடம் சொல்லி அவருடைய துன்பத்தையும் தீர்த்து வைப்பார்.

இப் பரிவு நிறைந்த உள்ளத்தை நான் 1954 வரை நேரிலே பல முறை கண்டிருக்கிறேன். ஒருவர் தலைவராவதற்கு இதை விட வேறென்ன தகுதி வேண்டும்? வேறென்ன பண்பு வேண்டும்? எங்கெலாம் துன்பங் காணினும் அங்கெலாம் அங்கம் கரைய நின்று அழுதவர் அவர். அவருடைய அரசியல் அறிவு உலகத்தைத் தழுவிய ஒப்பற்ற அறிவு. தமிழ் நாட்டின் அரசியல் போக்கை எவ்வளவு தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தாரோ அதே அளவிற்கு உலக அரசியலையும் தெரிந்து வைத்திருந்த செம்மல் அவர். அவருடைய நெருங்கிய நண்பர்களுக்கு இது நன்கு தெரியும்.



தன்னைப் பற்றிய எண்ணமில்லாது இருப்பது தான் தன்னல மறுப்பு என்று சிலர் நினைக்கிறார்கள். தன்னைப் பற்றிச் சிந்திக்காதவன்-தன் மேன்மையைப் பற்றி எண்ணாதவன் எப்படிச் சிறந்த மனிதனாக முடியும்? பிறர் நலத்தைப் புறக்கணித்துத் தன்னலத்தை, யார் பேணிக் கொள்கிறார்களோ அவர்கள் தான் சுயநலவாதிகள். இத்தகைய தன்னலம் காமராஜரிடம் எவ்வளவு தேடினாலும் அணுவளவு கூடக் கிடைக்காது. அவருடைய தலைமை தொடர்ந்து நீடித்ததற்கு இவ்விரண்டு நலமும் கலந்த பண்பே அடிப்படைக் காரணமாகும்.

குறிப்பிட்டுப் பாராட்டக் கூடிய அவருடைய மற்றொரு பெருந்தன்மை தன்னுடைய எதிராளிகளிடம் அவர் பகைமை பாராட்ட மாட்டார். எதிர்த்தவர்கள் தம்மைத் தேடி வந்தால் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று அளவளா

வழி அனுப்புவார். காலஞ்சென்ற அரசியல் ஞானி ராஜாஜி அவருடைய இல்லத்தைத் தேடிவருகிறார் என்றால், தன்னுடைய நண்பர்களிடம் அதைச் சொல்லி அவர்களை வேறொரு அறையில் உட்கார்த்தி விடுவார். வெளியே நின்று, ராஜாஜி வந்ததும் அவருடைய காரின் கதவைத் திறந்து அன்புடனும் பணிவுடனும் சிரித்த முகத்தோடு அழைத்துச் செல்வார். பேசி முடித்தவுடன்- பெரும்பாலும் அவர்களுடைய பேச்சில் ஒற்றுமை இருக்காது- அதே அன்புடனும் மலர்ந்த முகத்துடனும் கதவைத் திறந்து அவரை ஏற்றிவிட்டு- காரின் கதவை மூடி அவரை வழி அனுப்புவார்.

அவர்களுடைய பேச்சு இரகசியமாகவே இருக்கும். ஏதோ சிலவற்றைத் தன் நண்பர்களிடம் கூறுவார். ஆனால் அதிலே உப்பு சப்பு இருக்காது. அவரிடம் யார் வேண்டுமானாலும் அவருடைய நெருங்கிய நண்பர்களைப் பற்றிக் கூடப் புகார் சொல்லலாம். அமைதியாகக் கேட்பார். அதைப்பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்பதை அவருடைய முகத்திலிருந்து யாராலும் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் கிணற்றில் போட்ட கல்லைப் போல் அந்தப் புகார் அவருடைய உள்ளத்தின் ஆழத்திலேயே கிடக்கும். யாருக்கும் தெரியாமல் நண்பரைக் கண்காணிப்பார்.

இங்ஙனம் அவருடைய அரும் பெருங் குணங்களை அலை அலையாக ஓய்வில்லாமல் கூறிக் கொண்டே போகலாம். நாட்டின் தலைவருக்கு வேண்டிய முதற் தகுதி அஞ்சாமை என்பது என் எண்ணம். இத் தகுதி அவருக்குப் பிறவியிலேயே அமைந்து கிடந்தது. சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன்.

என்னுடைய நினைவு சரியாக இருந்தால்-அந்த ஆண்டு 1939. இரண்டாவது உலகப் போர் தொடங்கவில்லை. ராஜாஜி அவர்கள் சென்னை மாகாண முதல்வராக இருந்த காலம்; காமராஜருடைய நெருங்கிய துணைவர் காலஞ் சென்ற நாடிமுத்துப்பிள்ளை. காமராஜின் அன்புத் துணைவர் அன்மையில் காலஞ் சென்ற பெருந்தகை கிருஷ்ணசாமி வாண்டையார். தஞ்சையை நோக்கிக் காமராஜரும் அவருடைய இரண்டு நண்பர்களும் காரில் சென்று கொண்டிருந்தனர். அந்தி மாலையின் மெல்லிய இருள் மறைந்து விட்டது. இரவின் கனத்த இருள் பரவிக்கொண்டிருந்தது. வானுற ஓங்கிய சவுக்கு மரங்கள் இருபுறமும் வளர்ந்திருந்த ஒரு சாலையின் வழியே கார் ஓடிக்கொண்டிருந்தது. சவுக்கு மரங்களின் நிழலால் இருட்டு மேலும் முதிர்ச்சியடைந்து காணப்பட்டது. காற்றால் அசைந்த சவுக்கு மரங்கள் பேய்களைப் போல் ஓலமிட்டு ஆடிக்கொண்டிருந்தன.

சட்டெனக் கார் நின்றது. எதிரே கட்டைகளைக் கொண்டு தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருந்தது. கண் மூடிக் கண் திறப்பதற்குள் இருபது அல்லது இருபத்தைந்து பேர் கையில் கம்புடனும் பட்டாக் கத்தியுடனும் சவுக்குத் தோப்பிலிருந்து பாய்ந்து வந்தனர். அவர்களைக் கண்ட காமராஜர் அதே வேகத்துடன் காரின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

''என்ன உங்களை யெல்லாம் .........அவர் தானே அனுப்பினார்? (அவருடைய பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை) மரியாதையாகப் போய் விடுங்கள். அவரை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்றார். மகுடியால் கட்டுப்பட்ட நச்சரவங்கள் போல் அவர்கள் அனைவரும் வாய் மூடி மௌனிகளாய்த் திரும்பினர்.

'எங்கே போகிறீர்கள்? அந்த அடைப்பை யெல்லாம் அகற்றி விட்டுச் செல்லுங்கள்'' என்று மீண்டும் ஆவேசத்தோடு உரக்கப் பேசினார். தடை அகற்றப்பட்டது. தடையின்றிக் கார் சென்றது. நடந்த நிகழ்ச்சியைக் கேட்ட கிருஷ்ணசாமி வாண்டையார் மிகவும் வருத்தப்பட்டார். ஆனாலும் நாங்கள் சிரிக்கும் பொழுது அவராலும் சிரிப்பை அடக்க முடியாது வாய்விட்டுச் சிரித்தார்.

காந்தியடிகளிடம் காமராஜருக்கு அளவற்ற பக்தி. ஆனால் ஆண்டவன் பல சமயங்களில் தன் உண்மையான பக்தர்களை அறிந்து கொள்வதில்லை. அது போல் காந்தியடிகள் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்த போது, காமராஜரையும் அவருடைய துணைவர்களையும் கும்பல் - அல்லது சிறுகுழு என்று பொருள் படும் Clique என்ற ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தினார். காமராஜ் தன்னுடைய தேர்தல் குழு பதவியை ராஜினாமாச் செய்தார். என்னைச் சோதித்துக் கொள்வதற்காகவே நான் ராஜிநாமாச் செய்தேன் என்று இக்கட்டுரையாளரிடம் அவர் கூறியது இன்னும் பசுமையாக உள்ளது. இச்சமயத்தில் அவர் விடுத்த அறிக்கை அரசியல் ஆவணமாகப் போற்றத் தக்க ஒன்று. இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்ட வல்லபாய் பட்டேல், காமராஜரைத் தம்மைக் காணவருமாறு அழைத்தார். ஆனால் அவர் அழைப்பை மறுத்து, தானும் ஓர் இரும்பு மனிதன் தான் என்பதை நாடறியக் காட்டினார். இதற்குப் பின்னர் வல்லபாய் படேலுக்கும்-காமராஜருக்கும் இனிய உறவு ஏற்பட்டது.

இவ்வாறு அஞ்சாமையும் ஆண்மையும் பணிவும் கட்டுப்பாடும் கடமையுணர்வும் கொண்ட ஒருவர் பெருந்தலைவரானதிலே யாருக்கு என்ன வியப்பிருக்கமுடியும்?

இரக்கம் நிறைந்த உள்ளம். ஆனால் வைரம் பாய்ந்த உள்ளம். தவறு செய்தவர்கள், தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டால் மனதார மன்னித்து விடுவார். மிகவும் நாணயமானவர் என்று பெயர் பெற்ற ஒரு பெரிய அலுவலரை அவர் ஓய்வு பெற்ற பின் ஒரு வேலையிலே அமர்த்தினார். ஆனால் அவரோ அவருடைய நம்பிக்கையைப் பொய்யாக்கி விட்டார். கையூட்டுப் பெற்றார். முதல் அமைச்சராக இருந்த காமராஜர், அவரை உடனே வரச்சொன்னார்; அவ்வதிகாரியோ, சற்றும் எதிர்பாராமல் நெடுஞ்சாண் கிடையாக வந்து விழுந்து அவரது கால்களைப் பற்றிக் கொண்டு, மன்னிப்பை வேண்டினார். பெருந்தன்மையாக அவரை மன்னித்து விட்டார் காமராஜர்.

மற்றுமொரு ஊழல் மன்னன் தன்னைக் காப்பாற்றா விட்டால் அவருடைய வீட்டிலேயே உயிரை விடுவேன் என்று மிரட்டினான். "தாராளமாக உயிரைவிடு" என்று சொல்லி மேல் மாடிக்குப் போய் விட்டார். மிரட்டியா அவரைப் பணியவைக்க முடியும்? அதுவும் தவறு செய்தவனிடமா அவர் பணிவார்? அவருடைய ரத்தத்தில் அச்சமென்பதை அணுவளவு கூடக் காணமுடியாது.

தேசத் தொண்டனாக வாழ்க்கையைத் தொடங்கிய காமராஜருக்குத் தொடக்கத்தில் காந்தியடிகளின் ஆசியோ, ஜவகர்லால் நேருவின் துணையோ வல்லபாயின் ஒத்துழைப்போ ஏனைய பெருந்தலைவர்களின் அரவணைப்போ ஏதும் இல்லை. அதற்கு மாறாக அவர்கள் வேறொரு தலைவரை முழு மனத்தோடு ஆதரித்து நின்றனர். அங்ஙனமிருந்தும் காமராஜர் தன்னிகர் இல்லாத் தலைவராய்-மாபெருந்தலைவராய் மலர்ந்தார் என்றால் அவருடைய பெருமைக்கும், ஆற்றலுக்கும், அணி வகுக்கும் திறமைக்கும், மக்களிடையே அவருக்கிருந்த செல்வாக்கின் பெருமைக்கும் வேறென்ன சான்று காட்டிப் பேச வேண்டும்? இவ்வகையில் எளிய குடும்பத்தில் பிறந்து உயர்ந்த நெப்போலியனைத்தான் அவருக்கு இணையாகக் கூற முடியும்.



# ஓவியக்கலை வளர்ச்சிக்கு

# ஒரு நுண்கலைக் குழு

ஆய கலைகள் என்று சொல்லப்பட்டு வரும் அறுபத்து நான்கு கலைகளுள் ஓவியக் கலையும் ஒன்று.

நமது நாட்டில், ஓவியத்தை, அனைவரும் கண்டு வியந்து பாராட்டி வருகிறார்கள்.

இந்த நவீன காலத்தில், கடற்கரைச் சாலையிலும், ஏனைய முதன்மைச் சாலைகளிலும் நடைபாதைகளிலும் கரித்துண்டு, சாக்பீஸ் கட்டி ஆகியவற்றின் துணை கொண்டு ஓவியம் தீட்டும் ஓவியர்கள் பலர் பெருகியுள்ளனர்.

தமிழகத்தில் வெளிவரும் பல புதிய ஏடுகள் 'இந்த இந்த ஓவியர்களின் ஓவியங்களுடன் எமது இதழ் வெளிவருகிறது' என்று விளம்பரம் செய்யும் சூழ்நிலை உருவாகியுள்ளது. பல ஏடுகள், கதைக்குரிய ஓவியங்களை மிகச் சிறப்பாக வெளியிட்டு வருகின்றன.

நெடுங்காலமாகவே உயர் நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு ஓவியம் கற்பிக்கப்பட்டு வருகிறது. வாரத்துக்கு இரண்டு முறையாவது ஓவிய வகுப்பு நடைபெறுகிறது. ஓவியத்தைக் கற்பிக்க ஓவிய ஆசிரியர்கள் (Art Masters) உள்ளனர். மாணவர்களில் பெரும்பான்மையோருக்கு ஓவிய வகுப்பு எட்டிக் காயாகக் கசந்தாலும், ஒரு சிலருக்குக் கற்கண்டாக இனிப்பதுண்டு.

தமிழ்நாட்டில் ஓவியம், கைத்திறன் ஆகியவற்றைப் பயிற்றுவிக்கச் சென்னையிலும் கும்பகோணத்திலும் ஓவியக் கல்லூரிகள் உள்ளன. இவை ஓவியக்கலையைக் கற்கும் மாணவர்களுக்கு ஓவிய வகுப்புகளை நடத்தி அவர்களது தேர்ச்சியை ஆய்வு செய்து அவர்களை ஓவியக் கலைஞர்களாக்கி உலா வரச் செய்கின்றன.

## ஓவியம் நுண்கலைக்குழு

அவ்வாறு பயிற்சி பெற்ற ஓவியர்களின் கலைத் திறமையையும், சொந்த முயற்சியால் ஓவியம் தீட்டுவோரின் ஆற்றலையும் ஊக்குவிப்பதற்குத் தமிழ்நாட்டில் ஒரு குழு உள்ளது. அதுதான் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு ஆகும்.

சென்னை எழும்பூரில் உள்ள அரும்பொருட் காட்சியக எல்லைக்குள் உள்ளது இக்குழுவின் அலுவலகம். இக்குழு தன்னுரிமை பெற்ற நிறுவனமாகும். இது 1975-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் துவக்கம் செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கும் இக்குழுவில் திரு சி. ஆர். பட்டாபிராமன் துணைத் தலைவராகவும், கல்வித் துறையின் துணைச் செயலர் திரு ஆளுடைய பிள்ளை பொருளாளராகவும், அரசுத் துறையைச் சார்ந்த திரு சுந்தர பாபு உறுப்பினர் செயலாளராகவும் உள்ளனர். குழுவின் பொதுக்குழு பதினோரு உறுப்பினர்களைக் கொண்டது. எழு பேர் கொண்ட நிருவாகக் குழு ஒன்றும் உள்ளது.

ஓவியம் நுண்கலைக் குழு ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக உள்ளது. இக்குழு மத்திய குழுவான லலித கலா அகாடமியுடன் இணைந்து செயல் புரிகிறது. ஆண்டொன்றிற்குத் தமிழக அரசிடமிருந்து சுமார் 1.5 இலட்ச ரூபாய் நிதி உதவி பெற்று, ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் ஓவியக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப் பெறும் சிறந்த ஓவியங்களுக்கு ரொக்கப் பரிசும் வழங்குகிறது இக்குழு.



ஓவியர் கே. மாதவன்



ஓவியர் எச். வி. ராம்கோபால்

### ஆண்டுக் கண்காட்சி

1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாளன்று முதலாவது ஓவியக் கண்காட்சியையும், 1978-ஆம் ஆண்டு இரண்டாவது கண்காட்சியையும் 1979-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மூன்றாவது கண்காட்சியையும் இக்குழு சென்னையில் நடத்தியது. 1976-ல் 6 ஓவியர்களுக்கு ஆயிரம் ரூபாய் விதமும், 6 ஓவியர்களுக்கு 500 ரூபாய் விதமும் பரிசளித்துச்சிறப்பித்தது. 1978ல் நடைபெற்ற கண்காட்சியின் போது 10 ஓவியர்களுக்கு 1000 ரூபாய் விதம் பரிசளித்தது. 1979-ல் நடைபெற்ற கண்காட்சியின் போது 7 ஓவியர்களுக்கு 1500 ரூபாய் விதம் ரொக்கப் பரிசு அளித்தது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.




ஓவியர் திரு கே. மாதவனின் மனைவி திருமதி பங்கஜாக்சி அம்மாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து பரிசுத் தொகை பெறுகிறார்.

போட்டிக்கு வரும் ஓவியங்களையும், சிற்பங்களையும் நியமிக்கப்பெற்ற நீதிபதிகளின் குழு ஆய்வு செய்து, கண்காட்சியில் இடம் பெறுவதற்குரிய ஓவியங்களையும் அவற்றுள் பரிசுக்குரிய தகுதி பெற்ற ஓவியங்களையும் தேர்ந்தெடுக்கிறது. மாநில அளவில் நடத்தப் பெறும் இந்தக் கண்காட்சியில் பங்குபெறும் ஓவியர்களின் எண்ணிக்கையும் ஓவியங்களின் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன.

### புயல் நிதிக்கு ஓவியர்கள் வழங்கிய நன்கொடை

சென்ற ஆண்டு (1978) தமிழகத்தில் புயலும் வெள்ளமும் பெருஞ்சேதத்தை ஏற்படுத்திய போது நாடே முனைந்து வந்து பல்வேறு வகை நிவாரண உதவிகளைச் செய்து வந்தது. அந்த மாபெரும் பணிக்கு, ஓவியம் நுண்கலைக்குழுவும் தன்னால் இயன்ற பொருளாதார உதவியை வழங்கியது. சென்னை நகரிலும், உதகமண்டலத்திலும் சிறப்பு ஓவியக் கண்காட்சியை ஏற்பாடுசெய்தது. கண்காட்சியில் பங்கு பெற்ற திரு எஸ்.பி. ஜெயகர், திரு வி. ஜெயராமன், திருமதி ராஜகுமாரி முத்தையா, திரு சோமசுந்தரம், திரு கே. அடையாறு ஸ்ரீனிவாசலு, திரு விஜயவேலு ஆகிய ஓவியர்களின் ஓவியங்களை விற்றதால் கிடைத்த தொகையான 2080 ரூபாயை முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கியது.

### ஓவியர் முகாம்

ஆண்டுதோறும் ஓவியர்களின் முகாம் ஒன்றை இக்குழு நடத்தி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஓவியர்களும் பிற மாநிலத்து ஓவியர்களும், ஓவியக் கலைத் திறன் ஆய்வாளர்களும் இந்த முகாமில் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர். முதல் முகாம் உதகமண்டலத்தில் 1978-ஆம் ஆண்டில் நடைபெற்றது. கர்நாடக மாநிலத்திலிருந்தும் கேரள மாநிலத்திருந்தும் ஓவியர்கள் இந்த முகாமிற்கு வந்திருந்தனர். இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் இரண்டாவது முகாம் நடைபெற்றது. இதில் பங்கு பெற்ற பிற மாநிலங்கள்; மேற்கு வங்காளம், டில்லி.

முதலாவது முகாமைப் பார்வையிட்ட தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு மனோகரன் அவர்கள் பதிவேட்டில் புகழ்ந்து குறிப்பிட்டிருக்கிறார். அது வருமாறு:

" ஓவியக் கண்காட்சியைப் பார்த்தேன். ஓவியக்கலை நிபுணர்களின்-கலை வல்லுனர்களின் தனித்தன்மை மிக்க - மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்திடும் திறமை மிக்கவர்களை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணி மகிழ்ச்சி கொண்டேன்.

"திறமை மிக்க இந்த ஓவியங்களுக்கு அரசுத் தரப்பின் ஆதரவு பெரிதும் தேவை. ஊக்கமும் ஆக்கமும் அரசு அளிக்க வேண்டும். அப்படியானால்தான் புதையுண்டு கிடக்கும் கலையுணர்வு முழுமை பெறும்"

### ஓவியர்களுக்கு உதவித்தொகை

ஓவிய நிறுவனங்களை நடத்தி வருபவர்களுக்கு இக்குழு உதவி அளித்து வருகிறது. திறமை மிக்க ஓவியக் கலைஞர்களுக்கு- அவர்கள் ஓவிய நிறுவனங்களில் பயிற்சி பெறும் காலத்தில் மாதம் ஒன்றிற்கு 150 ரூபாய் விதம் 10 மாதத்திற்கு நிதி உதவி தருகிறது. 1976-77ல் 6 பயிற்சியாளருக்கும், 1977-78ல் 10 பயிற்சியாளருக்கும், 1978-79ல் 10 பயிற்சியாளருக்கும் இக்குழு உதவித்தொகை வழங்கியிருக்கிறது. ஓவியக்கலை மாணவர்கள் ராஜஸ்தான் சென்று அங்குள்ள ஒரு வகை வண்ண ஓவியம் தீட்டும் பயிற்சி பெறுவதற்கும் பண உதவி செய்கிறது.

### மாவட்டங்களில் ஓவியக் குழு

மாவட்டங்களில் ஓவியக் கலை இயக்கத்தை வளர்க்கும் வகையில் மாவட்டங்களில் உள்ள மையங்களை இக் குழு ஊக்குவித்து வருகிறது.

திருச்சி, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள ஓவிய மையங்கள், இக்குழுவின் நிதி உதவியுடன் வளர்ந்து வருகின்றன. கோயம்புத்தூரிலும் ஓவியக் கலை மையம் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையங்கள் எல்லாம் ஓவியக் கலையைக் கற்றுக் கொள்ள வாய்ப்புகளையும் வசதிகளையும் செய்து தருகின்றன.

### ஓவிய ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சிக் கூடங்கள்

பள்ளிக் கல்வி இயக்நகத்தைச் சேர்ந்த தொழிற்கல்விப் பிரிவின் ஒத்துழைப்புடன், குறிப்பிட்ட சில நகரங்களில் 15நாட்களுக்குத் தனிப் பயிற்சிக் கூடங்களைத் துவக்கலாம் என இக்குழு திட்டமிட்டுள்ளது. பள்ளிகளில் பணி புரியும் ஓவியக் கலை ஆசிரியர்களுக்கு இந்தத் தொழிற்கூடத் திட்டம் தக்க பயிற்சி வழங்க உத்தேசித்துள்ளது. இங்கு பயிற்சி பெறும் ஓவிய ஆசிரியர்கள் தாங்கள் பெறுகின்ற அனுபவ அறிவின் உதவியால், ஓவியக்கலையின் நவீன அணுகு முறைகளையும், நுணுக்கங்களையும் மாணவர்களிடையே தக்க வகையில் பரப்புவார்கள் என்று இக்குழு கருதுகிறது.



### ஓவிய விற்பன்னர்களுக்குப் பாராட்டுப் பரிசுகள்

நமது மாநிலத்தில் ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் புகழ்மிக்க ஓவியர்களைப் பாராட்டும் வகையில் அவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தை இக்குழு மேற்கொண்டுள்ளது. இந்த ஆண்டு (1979) ஓவியக் கண்காட்சியின் துவக்க விழாவில் மறைந்த மாபெரும் ஓவிய விற்பன்னர்களான திரு கே. மாதவன், திரு எச்.வி. ராம்கோபால் இருவரையும் சிறப்பிக்கும் வகையில் அவர்களின் குடும்பத்தாருக்கு செப்புப் பட்டயமும் 5000 ரூபாயும் இக்குழு வழங்கியது.




ஓவியர் திரு எச். வி. ராம் கோபாலின் மனைவி திருமதி சாந்தா, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து பரிசுத் தொகை பெறுகிறார்.

### "ஓவியர் சிற்றூர்"

ஓவியர்களுக்கு என ஒரு சிற்றூர் அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை இக்குழு உணர்ந்திருப்பதால், அந்த முயற்சியில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள நஞ்சை நாடு என்னும் கிராமத்தில் ஏறக்குறைய 68 ஏக்கர் நிலப்பரப்பில் ஓவியர்களின் சிற்றூரை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் உள்ளங்களைக் கவரும் உதகமண்டலத்தில் கோடை விழாவின் போதும் மாமல்லபுரத்தில் பொங்கல் விழாவின் போதும் ஓவியக் கண்காட்சிகளை ஆண்டுதோறும் நடத்திப் பொது மக்களின் பாராட்டை அதிக அளவில் பெற்று வருகிறது இக்குழு.

### இடைமாநில ஓவியக்கலைக் கண்காட்சி (Inter State Exchange of Art Exhibition)

இடைமாநிலக் கண்காட்சித் திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு ஆந்திர மாநிலத்துத் தலைநகரான ஐதராபாத் நகரில் இக் குழு 'ஆண்டு ஓவியக் கண்காட்சியை' நடத்திப் பெரும் பாராட்டைப் பெற்றது.



### இடைமாவட்ட ஓவியக்கலைக் கண்காட்சி (Inter District Exchange of Art Exhibition)

மாவட்டம் தோறும் உள்ள ஓவியக் கலைஞர்களுக்கு மேலும் ஊக்கமூட்டும் வகையில் இடைமாவட்ட ஓவியக்கலைக் கண்காட்சிகளை மாவட்டத் தலை நகரங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பிறநாட்டு ஓவியக் கண்காட்சி

வெளிநாட்டுக் கலாச்சாரக் குழுக்களின் கலை நிகழ்ச்சிகள் நமது தமிழகத்தில் நடைபெறுவதற்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எவ்வாறு உதவி செய்து வருகிறதோ, அதைப் போலவே, வெளிநாட்டு ஓவியர்களின் ஓவியக் கண்காட்சி அவ்வப்போது சென்னையில் நடைபெறுவதற்கு இக்குழு தன்னால் இயன்ற ஒத்துழைப்பை நல்கி வருகிறது. 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அங்கேரி நாட்டுக் கலைக்கண்காட்சி (Tapestry Exhibition) ஒன்றை நடத்தியது. 1977 ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டு ஓவியர்களின் "வாஸ்ரேலியும் அவரது நண்பர்களும்" (Vasarely and his friends) என்ற ஓவியக் கண்காட்சியைத் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு மிகச் சிறப்பாக நடத்திக் காட்டியது.

இவ்வாறு ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு அடக்கத்துடனும் ஆர்வத்துடனும் தொண்டாற்றுவதன் மூலம் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு, ஒப்பற்ற பணியைப் புரிந்து வருகிறது என்பது 'உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை'.

—தமிழ்ப்பித்தன்



# சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள்

**த**மிழ்நாடு அரசு, மத்திய அரசு நிதி உதவியின் கீழ் இம்மாநிலத்தி லுள்ள சிறைகளைச் சீர்படுத்து வதில் அக்கறைகாட்டி வருகின் றது. நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்தல், உணவறை கட்டுதல் மின் இணைப்புப் பொருத்துதல், சிறைக் கட்டடங்களைச் நவீன காற்றோட்ட முறையில் அமைத் தல், தண்ணீர் விநியோகம், பழைய கட்டடங்களை சீர் படுத்துதல் முதலியவற்றிற்கு இவ் வரசு முக்கியத்துவம் கொடுத் துள்ளது.

1977-78-ஆம் ஆண்டில் கூனூர், திருமயம், அறந்தாங்கி, பவானி, முதுகுளத்தூர், தாராபுரம், ஜெயம்கொண்டம், பாபநாசம், பொள்ளாச்சி, ஆரணி, வாலாசாப் பேட்டை, மன்னார்குடி, இராசி புரம், நாங்குநேரி, பொன்னேரி, போளூர், செங்கம், சிதம்பரம், சங்ககிரி, பொறையார், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, திருக்கோயி லூர், பரமக்குடி, திருப்பத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்), இராமநாதபுரம் ஆகிய 26 கிளை சிறைச்சாலைகளுக்கும், கொக்கி ரக்குளம் தனிச் சிறைச்சாலைக் கும் நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இதற்கு ரூபாய் பத்து இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட் டத்திற்கு மத்திய அரசு 50 சத விதம் மானியமாகவும், கடனாக வும் வழங்கியுள்ளது.

1978-79ஆம் ஆண்டிலும் ரூ. 10,82,100 மேற்கண்ட இனங் களுக்காக அனுமதித்துள்ளது.

இவ்வரசு எல்லாச்சிறைச்சாலை களிலும் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும் பொருட்டு சீரிய திட்டங்களைத் தீட்டியுள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் சுகா தாரம், தண்ணீர் விநியோகம் ஆகியவற்றிற்காக ரூ. 19,47,700 செலவழிக்க அனுமதித்துள்ளது.

**சிறைத் தொழில்களின் முன்னேற்றம்:**

இம்மாநிலத்திலுள்ள சிறைச் சாலைகளிலுள்ள தொழிற்கூடங் களைச் சீரமைக்கவும நவீனப் படுத்தவும் மத்திய அரசின் நிதி உதவியின் கீழ் 1977 ஆண்டி லிருந்து 1978 வரை கணிசமான தொகையை இவ்வரசு செல வழித்து வந்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மத்தியசிறைச்சாலைக்கு தொழில் இயந்திரங்கள் வாங்க ரூபாய் 12 இலட்சம் அனுமதித்துள்ளது.

1978-79-ஆம் ஆண்டில் கோவை மத்திய சிறையில் உள்ள தொழிற்சாலைக்குப் புதிதாக விசைத்தறிகள் வாங்கவும், தற் போது இருக்கும் விசைத்தறி களைச் செப்பனிடவும், மற்றச் சிறைகளில் தற்போதுள்ள கைத் தறிகளைப் பழுதுபார்க்கவும் ரூ. 8.50 இலட்சம் நிதி அளித்துள் ளது. இதற்காக மத்திய அரசு ரூ. 4.25 இலட்சம் கடன் வழங்கி யுள்ளது.

**சிறைச் சாலைகள் சீர்திருத்த ஆணைக்குழு:**

சிறைகள் சீரிய முறையில் செயல்படவும், சிறைவாசிகளுக் குத் தேவையான வசதிகளைப் பெருக்கவும், சிறைச்சாலைக் கட்டடங்களைச் சீர்படுத்தவும் அரசியல் கைதிகளை நடத்தும் விதம் போன்றவற்றை ஆய்ந்து அரசுக்குப் பரிந்துரை கூறவும், பாட்னா உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. ஆர். எல். நரசிம்மன் அவர்களின் தலைமையில் சிறைச் சீர்திருத்த ஆணைக்குழுவினை ஏற்படுத்தி யது. அக்குழு தனது பரிந்துரை களை 28-4-79 அன்று அரசுக்கு வழங்கி உள்ளது. பரிந்துரை களை அரசு ஆராய்ந்து நடை முறைப்படுத்தும்.

## காவல் நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்பு

தமிழ்நாட்டில் 872 காவல் நிலையங்களும் 181 புறக்காவல் நிலையங்களும் (1053) உள்ளன. இவை களில் 760 காவல் நிலையங் களுக்கும் 87 புறக் காவல் நிலையங்களுக்கும் தொலை பேசி இணைப்புகள் அமைக் கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் 112 காவல் நிலை யங்களுக்கும் 94 புறக்காவல் நிலையங்களுக்கும் (206) தொலைபேசி இணைப்பு அமைக்க ஆணைகள் பிறப் பிக்கப்பட்டுள்ளன.







# விரிவாகும் வீட்டு வசதி வாரியம்

**வீ**ட்டு வசதி வாரியம் 1946-ஆம் ஆண்டு நகர வளர்ச்சிக் கழ கம் என்று ஒரு சிறு வீடுகட்டும் நிறுவனமாகச் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1961-ஆம் ஆண்டு ஆண்டொன்றிற்கு ரூ. 20 கோடிக்கு மேல் செலவு செய்து மாநிலம் முழுவதிலும் செயல்படும் ஒரு பொது நிறுவன மாக மலர்ந்தது.

வீடுகள் கட்டுதல் மட்டுமின்றி வீட்டு வசதி வாரியம், வீடுகள் கட்டும் திட்டங்கள் மூலம் கட்ட டச் செலவைக் குறைப்பதற் காகத் தொன்றுதொட்டு உப யோகிக்கும் பல்வேறு கட்டடப் பொருள்களுக்குப் பதில் புதிய உத்திகளைக் கடைப்பிடித்து மாற்றுப் பொருட்களை உப யோகிப்பதில் தனியார் நிறுவ னங்களுக்கு ஒரு முன்மாதிரி யாகச் செயல்பட வேண்டும். இதுவே வீட்டு வசதி வாரியத் தின் குறிக்கோள் ஆகும்.

சென்னை நகரம் மட்டுமல்லா மல் மற்ற மாவட்டங்களிலும் வீட்டு வசதி வாரியம் அதன் செயல்களை மதுரை, திருச்சி, கோவை, சேலம், ஈரோடு மற்றும் வேலூர் போன்ற நகரங் களில் வாரியத்தின் கிளைகளை அமைத்து விரிவாக்கியுள்ளது. சென்னை நகரத்திலும் வட்டார முறையில் 13 கோட்டங்களாகப் பிரித்து வேலைகள் பகிர்ந்தளிக் கப்படுகின்றன.

**நிலம் மேம்படுத்தும் திட்டம்.**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரி யத்தின் முக்கிய பணி, நகரங் களில் அருகாமையிலுள்ள நிலங் களைக் கையகப்படுத்தி, அவ் வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மேம்படுத்தி, நகர அமைப்பு விதிகளின்படி பொரு ளாதாரத்தில் பின்தங்கியவர்க ளுக்காகவும், குறைந்த வருமா னம் உள்ளவர்களுக்காகவும், நடுத் தர வருமானம் உள்ளவர்களுக் காகவும் வீட்டு மனைகளாக ஒதுக்கீடு செய்வதேயாகும்.

வீட்டு வசதி வாரியம் சென்னை நகரத்திலுள்ள அறி ஞர் அண்ணாநகர், கே.கே. நகர், அசோக் நகர், தென் சென்னைப் புற நகர், திருவான்மியூர், கொரட்டூர், வியாசர்பாடி ஆகிய இடங்களிலும் மற்றும் கோயம் புத்தூர், திருச்சி, மதுரை, வேலூர் ஆகிய இடங்களிலும் புறநகர் திட்டத்தை மேம்படுத்தி உள்ளது. நடப்பு ஆண்டில் (1979-80) நிலத்தைக் கையகப் படுத்தி மேம்படுத்தும் திட்டத் திற்காகச் சுமார் ரூபாய் 249.90 இலட்சங்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு இருக் கிறது. இதுவரை வாரியம் 4586 ஏக்கர் நிலப்பரப்பை மேம்படுத்தி உள்ளது.

**பின் தங்கியவர்களுக்கு வீட்டு வசதி**

இந்தத் திட்டம் முக்கியமாக, பொருளாதாரத்தில் பின்தங்கிய வர்களுக்கு மட்டும் கொடுக்கப் படுகிறது. இவர்களுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 4200க்கு அதிகமாக இருக்கக் கூடாது. மொத்தமாக நிலத் தைக் கையகப்படுத்தி வீட்டு மனைகளாகப் பிரித்து வைத்து இருப்பவர்கள், வீட்டு வசதி வாரி யத்தின் மூலம் வீடு கட்ட விரும் பினால், அம்மாதிரி திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வீட் டின் மொத்த விலையில், ஒதுக் கீடுதாரர்கள், வீடு ஒதுக்கீடு செய்யும் சமயத்தில், மொத்த விலையில் 10 சதவீதம் முன் வைப்புத் தொகையாகவும், மீதியை 20 ஆண்டு மாதத் தவணையாகவும் கட்ட வேண் டும்.

இந்தத் திட்டம் செயல்படுத் துவதற்குச் சொற்பமான நிபந் தனைகளில் வீட்டு வசதி புற நகர் வளர்ச்சிக் கழகத்திட மிருந்து முதலீடு பெறப்படுகிறது.

இந்தத் திட்டத்தில் இதுவரை 7622 வீடுகள் கட்டப்பட்டு, ரூ. 690.34 இலட்சங்கள் செல விடப்பட்டுள்ளது. நடப்பு ஆண் டான 1979-80ல் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 68.11 இலட்சங் கள் இத்திட்டத்திற்காக ஒதுக்கப் பட்டு, 1800 வீடுகள் எல்லா இடங்களிலும் தேவைகளின் அடிப்படையில் கட்டப்படவிருக் கின்றன.

மாநில அரசு ஊழியர்களுக் காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மாநிலத்தின் எல்லா இடங்களிலும் அடுக்கு வீடுகள் கட்டியுள்ளது. இம்மாதிரி வீட்டு வசதி அளிக்கப்பட்டவர்களிட மிருந்து அவர்களது வீட்டு வாட கைப்படி போகக் குறைந்த வாடகை வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக இதுவரை ரூ. 1384.55 இலட்சங்கள் செல விடப்பட்டுள்ளது. நடப்பு ஆண் டான 1979-80ல் 1400 வீடுகள் கட்டப்பட உத்தேசிக்கப்பட்டு, இதற்காக ரூ. 250 இலட்சங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**குறைந்த வருமானம் உள்ளவர் களுக்கு வீட்டு வசதி**

இத்திட்டம் ஆண்டு வரு மானம் ரூ. 7200க்கு மேற்படாத குறைந்த வருவாயிலுள்ளவர்க ளுக்காகத் திட்டப்பட்ட திட்ட மாகும்.

இத்திட்டத்தில் இதுவரை 11956 வீடுகள் கட்டப்பட்டு, ரூபாய் 2078.10 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1979-80ல் 4,500 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு அதற்காக ரூ. 54.12 இலட்சங் கள் இந்நடப்பு ஆண்டு வரவு

செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ளன.

**தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித்திட்டம்**

தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் விரைவான தொழில் வளர்ச்சி ஏற்பட்டதன் விளைவாக, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களில் பெரும்பாலோருக்குச் சொந்த வீடு இல்லை. மேலும், அவர்கள் வேலை செய்யும் இடத்திற்கு வெகு தூரத்திலிருந்து வருகின்றார்கள். எனவே, வேலை செய்யும் இடங்களுக்கு அருகிலேயே தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் பொருட்டு இத்திட்டம் கொண்டு வரப்பட்டது.



இதுவரை இத்திட்டத்தில் 2494 குடியிருப்புக்கள் கட்டப்பட்டு, ரூ. 52.03 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1979-80ம் 100 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு, அதற்காக ரூ. 20 இலட்சங்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி**

ஆண்டு வருமானம் ரூ.7200க்கு மேல், ரூ.18,000க்குட்பட்டு இருப்பவர்களுக்கு வீட்டு வசதியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். வாரியத்தால் ஒதுக்கப்பட்ட மனைகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. மேலும் வாரியத்தால் கட்டும் அடுக்கு வீடுகளும் தவணை முறையில் விற்கப்படுகிறது.

இதுவரை இத்திட்டத்தில் 7322 வீடுகள் கட்டப்பட்டு, இதற்கான ரூ. 2558.20 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1979-80ல் 2400 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு ரூ. 4.94 இலட்சங்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் :**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 500 ஏக்கர் நில பரப்பளவில் ரூ. 255 இலட்ச மதிப்பீட்டில் மறைமலைநகர் என்ற இடத்தில் மேம்படுத்தும் திட்டங்களைத் துவக்கியுள்ளது. வீட்டு வசதி வாரியத்தினிடம் சாலை போடுதல், மழைநீர் வடிகால் அமைத்தல், சிறுபாலம் அமைத்தல் போன்ற மேம்படுத்தும் வேலைகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தால் 490 ஏக்கர்நிலப் பரப்பில் திட்டமிடப்பட்டுள்ள மற்றொரு மேம்படுத்தும் திட்டம், மணலி என்ற இடத்திலாகும். இதற்கான 212 ஏக்கர் நிலத்தில் மேம்படுத்தும் திட்ட வேலைகள் வீட்டு வசதி வாரியத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக வீட்டு வசதி வாரியம்



543 வீடுகள் கட்டும் வேலையை எடுத்துக் கொண்டுள்ளது.

வீட்டு வசதி வாரியம் கட்டடச் செலவை உயராமல் பார்த்துக் கொள்கிறது. இம்முயற்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமானது, மத்திய அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம், மத்திய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அமைப்புகளுடனும், தேசிய கட்டட நிறுவனம், இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் போன்ற அமைப்புகளுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு உழைத்து வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முன்னேற்றத்தைப் புரிந்து கொண்டு நாடு முழுவதிலுள்ள ஆராய்ச்சியாளர்களும், தொழில் நுட்பறிவாளர்களும் பெரும் பாராட்டுதல்களை வழங்கியுள்ளனர்.

வாரியம் கட்டடம் கட்டுவது மட்டுமல்லாமல், நிர்வாகத்திலும், உற்பத்தியிலும் புதிய நடை போட்டுத் திறமையைக் காட்டியுள்ளது. எண்ணூரிலுள்ள 'செல்கிரீட்' உற்பத்தியிலும், மர வேலையிலும் உச்ச நிலைமையை அடைந்துள்ளது.






தமிழ்த் திரைப்படத் துறை, ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னடப் படங்களின் கடுமையான போட்டியால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை நலிந்துபோன நிலையில் இருந்ததால், அதற்கு வலிவு ஊட்டி வளர்க்க தமிழ்நாடு அரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்தியுள்ளது. இதனால் தமிழ்த் திரைப்பட உலகம் புத்துணர்ச்சியும், புது வேகமும் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளது.

தமிழ்த் திரைப்படங்களுக்குப் போதிய நல்ல திரையரங்குகள் கிடைக்க வழி செய்யும் நோக்குடன் எப்போதும் பிறமொழிப் படங்களையே திரையிட்டு வரும் திரையரங்குகளில், கட்டாயமாக ஆண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்ப்படங்களைத் திரையிட்டாக வேண்டுமென்று புதிய திருத்தம் கொண்டுவரப்பட்டது.

தற்போது, தமிழ்த் திரைப் படங்களின் வெளியீட்டு எண்ணிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதிய அளவு திரையரங்குகள் இல்லாத நிலையைப் போக்க, குறைந்த முதலீட்டில் திறந்த வெளித் திரையரங்குகளும், டூரிங் திரையரங்குகளும், செமி பர்மனென்ட் திரையரங்குகளும் அமைக்கச் சட்டப்படி அனுமதி வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்த்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகரக்காவல்துறை ஆணையர் ஆகியோர் இதுபோன்ற அனுமதி மனுக்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப் பட்டது.

திரையரங்குகளுக்கு, கட்டட உறுதிச் சான்றிதழ் மற்றும் மின் சான்றிதழ் ஆகியவைகளை வழங்குவதில் உள்ள கால தாமதங்களையும் சிரமங்களையும் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதுடன், நடைமுறை உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

'டூரிங்' திரையரங்குகளின் உரிமக் காலத்தை $2\frac{1}{2}$ ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளாகவும், ஓரளவு நிலையான (Semi Permanent) திரையரங்குகளை நிறைவான திரையரங்குகளாக மாற்றுவதற்கான கால அளவை 5 ஆண்டிலிருந்து 7 ஆண்டாகவும், கால நீட்டிப்புச்செய்துள்ளது. மேலும், கிராமப் புறங்களிலுள்ள ஓரளவு நிலையான திரையரங்குகளுக்கு, நிலையாக இயங்க அனுமதி வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

பெரும்பாலும் கிராமப் புறங்களில் அமைந்துள்ள 'டூரிங்' திரையரங்குகளில் சில, நிபந்தனைக்குட்பட்டு, சில நாட்களில் பகல் காட்சிகள் நடத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குளுமைத் திரையரங்குகள், மின்சார வெட்டுக் காலங்களில் குளிர்சாதன வசதி செய்யாவிடில் அவை சாதாரணத் திரையரங்குகளைப் போலவே குறைந்த அனுமதிக் கட்டணங்களைத்தான் வசூலிக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்தகு நல்ல முடிவுகளினால், திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அரசுக்கு வருவாயும், ஏழை எளிய மக்களுக்குப் பொழுதுபோக்கு வசதியும் பெருகியுள்ளது.

திரையரங்குகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் 1957-ஆம் ஆண்டின் தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குபடுத்தல்) விதிகள் நடைமுறைத் தேவைக்குத் தக்கவாறு திருத்தப்படுவதுடன், பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு திரைப்பட அரங்குகள் சுத்தமாகவும், விதிகளில் கண்டவாறு வசதிகள் கொண்டதாகவும் இருக்கவேண்டுமென்பதற்காக அடிக்கடி நேரில் பார்வையிட்டு எச்சரிக்கப்பட்டுள்ளன.

சென்னை போன்ற மாநகரங்களில் ஒரே பகுதிகளில் திரையரங்குகள் நெருக்கமாக உருவாவதைத் தடுக்கவும், பரவலாகப் பொதுமக்கள் தாங்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே திரைப்படங்களைக் காணும் வசதிகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலும், புதிதாக அமையும் நகர்ப் பகுதிகளில் வசதிமிக்க சிறிய திரை அரங்குகள் அமைப்பதை அங்கீகரிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

தமிழ்த்திரைப்படத் தணிக்கை முறையில் சென்னையிலுள்ள தணிக்கைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் திரைப்படத் துறை பற்றிப் போதிய அறிவும் அனுபவமும் இல்லாதவர்களாக அமையக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டி, மாநில அரசைக் கலந்தாலோசித்து அக்குழுவை மாற்றியமைக்க வேண்டும் என மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

தமிழ்த் திரைப்படங்களில் வெறுக்கத்தக்க, பண்பாடற்ற, ஆபாசக் காட்சிகள் இடம்பெற அனுமதிக்கக் கூடாது என்றவகையில் இவ்வரசின் கருத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை மற்றும் பிற நகரங்களில் ஆபாசத் திரைப்படச் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடை செய்யவும், திரைப்படச் சுவரொட்டிகளைத் தணிக்கை செய்யவும் சட்டமியற்றும் கருத்து அரசின் ஆய்வில் உள்ளது.

# வனவளம் பெருக்குவோம்!

வனத்துறையின் காடு வளர்ப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் கிராமப்புறப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு விறகுகளை வழங்குவதுடன் தொடர்ந்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதையும் குறிக்கோள்களாகக் கொண்டுள்ளன. மேலும், காட்டிலும் காட்டைச் சுற்றிலும்வாழும் பழங்குடி இன மற்றும் மலை வாழ் மக்களுக்கு இடைவிடாமல். வேலைகளை அளிக்கவும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

காடுகளிலிருந்து 1977–78ஆம் ஆண்டில் ரூ. 1,051.59 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இதில், ரூ. 434.79 இலட்சம் வருவாயை சந்தன மரங்கள் தந்து, வனத்துறையின் வருவாயில் பெரும் பங்கு பெற்றுள்ளன. மரமும் விறகும் 204.42 இலட்ச ரூபாயை வருவாயாகத் தந்துள்ளன. 1978–79-ல் காடுகளிலிருந்து ரூ. 868.49 இலட்சமும், 1979–80-ல் ரூ. 925.48 இலட்சமும் வருவாயாகக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பண்ணைக்காடுகள்.**

சிற்றூர்களில், அரசாங்க புறம்போக்கு நிலங்களிலும், தரிசாகக் கிடக்கும் நிலங்களிலும் பொருத்தமாகவுள்ள இடங்களில் காடு வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978–79-ல் 9,000 ஹெக்டேர் பரப்பில் ரூ. 48.30 இலட்சம் செலவில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 1979–80-ம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 44.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 18,040 ஹெக்டேர் பரப்பில் கிராமக் காடுகள் வளர்க்கப்படும்.

1978–79 ஆம் ஆண்டில் ரூ. 6.21 இலட்சம் செலவில் 560 ஹெக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டன. 1979–80-ம் ஆண்டில் ரூ. 4.67 இலட்சம் செலவில் இத்திட்டத்தினை மேலும் விரிவு படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 405 ஹெக்டேர் பரப்பில் தேக்கு மற்றும் கடின வகை மரத் தோப்புகள் வளர்க்கப்படும்.

**சந்தனத் தோட்டங்கள்.**

வனத்துறையின் வருவாயில் 40 சதவீதத்திற்கும் மேல் சந்தன மர விற்பனை மூலமே கிடைக்கிறது. சந்தன மர வளத்தை பெருக்கிட வாய்ப்பான இடங்களில், செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது.

1978–79 ஆம் ஆண்டில் 10.32 இலட்சம் ரூபாய் செலவில் 169 ஹெக்டேர் பரப்பில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்ப்பும் மற்றும் இயற்கை சந்தனக் காடுகளில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1979–80 ஆம் ஆண்டில் 170 ஹெக்டேர் பரப்பில் சந்தன மரம் வளர்ப்பும் மற்றும் 665 ஹெக்டேரில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுவதற்கு, ரூ. 19.03 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

1978–79 ஆம் ஆண்டில் 32.84 இலட்சம் ரூபாய் செலவில் 3,700 ஹெக்டேர் பரப்பில் மரம் வளர்க்கும் பணிகள் செய்யப்பட்டன. மேலும், சாலை ஓரங்களில் மரம் நடுதலும், பொது மக்களுக்குக் கிட்டும் வகையில் மரக்கன்றுகளை வளர்த்து வழங்குதலும் இத்திட்டத்தில் அடங்கும். 1979–80 ஆம் ஆண்டில் 365 கி.மீ. நீளத்திற்குச் சாலை ஓரங்களில் மரங்கள் வளர்க்கவும், 10 ஹெக்டேர் பரப்பில் சாலை ஓரங்களில் பூங்காக்கள் அமைக்கவும் பொது மக்களுக்கு விற்பனைக்காக 10 இலட்சம் செடிக் கன்றுகளை வளர்க்கவும், ரூ. 36.36 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.



**வண்டலூரில் வன விலங்குப் பூங்கா அமைத்தல் :**

இந்திய இரயில்வேத் துறையின் வேண்டுகோளுக் கிணங்க சென்னை நகரிலுள்ள மத்திய இரயில் நிலையத்தை விரிவு படுத்துவதற்காகத் தற்போது மிருகக் காட்சி சாலை அமைத்துள்ள இடத்தை இரயில்வேத் துறைக்குக் கொடுத்திட இருப்பதால் சென்னையிலிருந்து 30 கி. மீ. தொலைவில் 350 ஏக்கர் நிலப் பரப்பில் வண்டலூரில் ஒரு வன விலங்குப் பூங்கா நிறுவவும், தற்போது மிருகக் காட்சி சாலையில் உள்ள மிருகங்களை வண்டலூருக்கு கொண்டு செல்லவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 300 இலட்சம் செலவுள்ள இத்திட்டத்தின்கீழ் திட்டத்தின் முதற் பகுதிப் பணிக்கு ரூ. 165 இலட்சம் அளிக்கப் பட்டுள்ளது. இந்தப் பூங்கா வனத்துறையின் நிர்வாகத்தில் இருக்கும்.



# தமிழிசை மரபு

'இசைப் பேரரசி'
**சேலம் எஸ். ஜெயலட்சுமி**

சங்க இலக்கியத்தில் இசையைப் பற்றியும் யாழ்க்கருவிகளைப் பற்றியும் இசைக் கலைஞர்களாகிய பாணர், பாடினி, விறலி ஆகியோரைப் பற்றியும் பல செய்திகள் உள்ளன. தமிழிலக்கியங்களில் சிறப்பாகக் கூறப்படுவன ஐவகை நிலங்கள், அவைகளின் இயற்கை, சூழ்நிலை, நிலங்களுக்குரிய தெய்வம், இசை, கூத்து, கருவிகள் ஆகியவை-மிகத் திறமையாக அவர்கள் வகுத்துக் கொடுத்த பிரிவுகள், அளித்த பெயர்கள் ஆகியவற்றை ஆராயுங்கால், அவை பல உண்மைகளை நமக்குப் புலப்படுத்துகின்றன.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களுக்குரிய சூழ்நிலை, பருவம், காலம், தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறு கருவிகளையும் பண்களாகிய இராகங்களையும் கூத்து வகைகளையும் வகுத்து வைத்துள்ளனர். பாடல்களும் இலக்கியங்களும் அவ்வாறே படைக்கப்பட்டன. சங்க இலக்கியத்தில் ஒவ்வொரு பாடலும் எந்த நிலத்திற்குரியது எனக் குறிக்கப்படும். இன்ன நிலத்திற்குரியது எனக் கேட்டதும் நம் மனக்கண் முன்னே அதற்குரிய சூழ்நிலைகளும், தோற்றங்களும், இயற்கை நலன்களும் தோன்றுவது எத்துணை வியப்பிற்குரியது!

**குறிஞ்சி :**

மலைகளும் மலை வளமும் கொண்ட இந்நிலத்திற்குரிய இசைக் கருவி குறிஞ்சியாழ்; தோற்கருவி—பறையெனப்படும். இதற்குரிய சிறப்பான பண் குறிஞ்சிப் பண். இந்நிலத்தின் தெய்வம் குறிஞ்சிக் கடவுள்-முருகன். இங்கு குறமகளிர் ஆடும் கூத்து குரவைக் கூத்து எனப்படும்.

**பாலை :**

இயற்கை வளங்கள் குன்றிய வனப்பிரதேசம் பாலை. இந்நிலத்திற்குரிய தெய்வம் கொற்றவை. இசைக் கருவி, பாலை யாழ் எனப்படும். பாலை நிலத்தின் சிறப்பான பண் பஞ்சுரம். தோற்கருவி துடியெனப்படும். வேடுவர்களும் மறவர்களுமாகிய இந்நில மக்கள் கொற்றவை தெய்வத்தை வழிபட்டுக் கூத்தியற்றினர்.

**முல்லை :**

காடும் காடு சார்ந்த பகுதிகளும், புல்வெளிகளும் இந் நிலத்திற்குரியவை. இங்கு காட்டாறுகள், நீர் ஊற்றுகள் இவற்றைக் கொண்டு மக்கள் வாழ்ந்தனர். இவர்கள் தொழில் ஆடு மாடு மேய்த்தல் ஆகும். யாதவ குலத்தினர். இவர்களுடைய கடவுள் திருமால். இந்நிலத்திற்குரிய இசைக்கருவி முல்லையாழ். பண் சாதாரி. தோற்கருவி ஏறுகோட்பறை; ஆயர் குலப் பெண்கள் ஆய்ச்சியர் குரவை என்னும் கூத்து ஆடினர். காற்று வாத்தியமாகிய புல்லாங்குழலும் சிறப்பாக இந்நிலத்திற்குரியதே.

**மருதம் :**

வற்றாத ஜீவ நதிகளின் கரைகளில் அமைந்த வயல்களும், வயல்கள் சூழ்ந்த கிராமங்களும் மருத நிலம் என அழைக்கப்பட்டன. இந்நிலத்தின் தெய்வம் இந்திரன். இசைக் கருவி மருதயாழ்; தாளக் கருவி முழவு. மருதப்பண் இந்நிலத்தின் சிறப்பான பண். பயிர்த் தொழில் செய்து வாழ்ந்த மக்கள் திருவிழாக்கள் கொண்டாடுவதிலும், புது நீராடுதலிலும் தனிச் சிறப்புப் பெற்று விளங்கினர்.

**நெய்தல் :**

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப் பெயர் பெற்றன. வருணன் இந்நிலத்தின் தெய்வம். பரதவர் குடியிருப்புகள் பாக்கம் என்றும், பட்டினம் என்றும் அழைக்கப் பட்டன. இந்நிலத்திற்குரிய இசைக் கருவிகள் நாவாய்ப் பம்பையும் விளரியாழுமாகும். செவ்வழிப்பண் இந்நிலத்திற்குரிய பண்ணா



கும். பரதவர் மீன் பிடிக்கும் தொழில் செய்வதும் கடலாடுவதுமாக வாழ்ந்தனர்.

ஐவகை நிலத்திற்குரிய பல பொருள்கள் குறிக்கப்பட்டிருப்பினும், இங்கு இசை மரபிற்கு எடுத்துக்காட்டான கருவி, பண், கூத்து வகைகளை மட்டும் குறிப்பிட்டுள்ளோம்.

**பாணர் வரன்முறை**

சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பரிபாடல் ஆகிய சங்க இலக்கிய நூல்கள் யாழ்க்கருவிகளைப் பற்றியும், யாழ் இசைத்த பாணர்களைப் பற்றியும் பல அரிய செய்திகளைப் பேசுகின்றன. இசைக்கலைஞர்கள் ஒரு வகுப்பினராகவே திகழ்ந்தனர். அவரவர் கையாண்ட கருவிகளுக்குத் தக்கவாறு பெயரிட்டு அழைக்கப்பட்டனர். ஆண் இசைக்கலை வல்லுநர்கள் 'பாணர்' என அழைக்கப்பட்டனர். பெண் இசைக் கலைஞர் 'பாடினி' என்றும் ஆடல் பாடல்களில் வல்ல இளமங்கை 'விறலி' எனவும் அழைக்கப்பட்டனர்.

'பாணன், பறையன், துடியன், கடம்பனென்றிந் நான்கல்லது குடியுமில்லை' என்று வரும் வரியில் கடம்பு, பாறை, துடி ஆகியவை இசைக்கருவிகளின் பெயர்கள். பறையினை முழக்குவோன் பறையன்; துடியினை முழக்குவோன் துடியன்; ''தோற்றந் துடியதனில்' என்றமையினால் நடராசப் பெருமானின் திருக்கரத்தில் இலங்குவதே துடியென்றாகிறது. கடம்பு என்ற வாத்தியத்தை இசைத்தவன் 'கடம்பன்' என அழைக்கப்பட்டான். கடம்பு என்ற கருவி இக்காலத்தும் நீலகிரி மலையின் சில பகுதிகளில் காணப்படுவதாகத் தெரிய வருகிறது. பண் இசைத்துப் பாடுவோர் பாணர் எனப் பெயர் பெற்றனர்.

யாழ்க்கருவி பலவகைப் பட்டதாக இருந்ததென்று தெரிய வருகிறது. மகரயாழ், செங்கோட்டுயாழ், சீறியாழ், பேரியாழ் என எழ் நரம்புகள், பதினான்கு நரம்புகள் இருபத்தியோரு நரம்புகள் இவ்விதம் பூட்டப்பெற்றுப் பலவகை யாழ்க்கருவிகளாக விளங்கின. பாணர்களுள் சிறு பாணர், பெரும்பாணர் என இரு வகைக் கலைஞர்கள் இருந்தார்களெனத் தெரிகிறது. சிறுபாணாற்றுப்படை சீறியாழைப் பற்றியும், பெரும்பாணாற்றுப்படை பேரியாழைப் பற்றியும் பேசுகின்றன.

''பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க''

**—34-37 சிறுபாணாற்றுப்படை**

'இனிய நாதத்தைக் கொண்ட பொன் போன்ற நரம்புகளை உடைய சீறியாழை இடப்புறம் தழுவி நைவளம் என்னும் பண்ணை வெளிப்படுத்தும் பாலையைத் திறம்பட இசைத்தான் கைதேர்ந்த யாழ்ப்பாணன்' என்று கூறுகிறது சிறுபாணாற்றுப்படை.

பெரும்பாணாற்றுப்படை பேரியாழைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

''.........நெடிதென
இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி...''

**—461-463 பெரும்பாணாற்றுப்படை**



'பெரிய யாழை இடப்புறம் வைத்துக் கொண்டு இசை மரபிற்கும் இலக்கணத்திற்கும் ஏற்றவாறு நரம்புகளை மீட்டி, சுருதி கூட்டி இசைத்தான் பாணன்' என்று கூறப்படுகிறது. இசைக்கலையை முறையாகப் பயின்றவர்களால் மட்டுமே யாழைக் கையாள முடியும் எனக் கூறப்படுகிறது.

பாணர், பாடினி, விறலியர் ஆகியோர் ஊர் ஊராகச் சென்று தம் கலைத்திறனை வெளிப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். பெண் கலைஞர்களும் பாணர்களும் இணையான தேர்ச்சி பெற்று நாடுதோறும் சென்று கலைகளைப் பரப்புவதில் ஈடுபட்டனர் என்று தெரிகிறது. பாண்குடியினர் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி அமைதியான வாழ்க்கை நடத்துவதைக் காட்டிலும் கலையை விரும்பி ஆதரித்துப் போற்றிய அரசவைகளையும் செல்வந்தர்களையும் நாடிச் சென்று அவர்களுடைய ரசனையையும் ஆதரவையும் பெறுவதிலேயே மட்டற்ற மகிழ்வடைந்தனர். கலைஞனுக்கு ரசிகர்களின் ரசனையைக் காட்டிலும் வேறு எது மகிழ்வூட்ட முடியும்? ஊர் ஊராகத் திரியும் நாடோடி வாழ்க்கையில்



பல இன்னல்களும் இடையூறுகளும் ஏறபட்டாலும், பாணர்களும் புலவர்களும் கட்டுப்பாடின்றி, சுதந்தரமான வாழ்க்கை நடத்துவதையே விரும்பினர் எனத் தெரிகிறது. ஆகவேதான், ஆற்றுப்படை இலக்கியங்களிலே ஒரு புலவர் அல்லது கலைஞர் மற்றொருவருக்கு இன்ன இடத்திற்குப் போனால் கலைக்கு மரியாதையும், ரசனையும், பரிசுகளும் நிறையக் கிடைக்கும் என ஆற்றுப்படுத்தும் காட்சிகளை நாம் காண்கிறோம்.



பாணர் முதலியோர் வெறும் கலைஞர்களாக மட்டுமின்றி, அரசவைத் தூதுவர்களாகவும் பிரதிநிதிகளாகவும் கூடப் பங்கேற்றனர் என்று கூறலாம். புலவர், பாணர்-சில சமயம் இருதிறனும் ஒருங்கே அமைந்த கற்றோர்—பெருமக்கள் இக்காலத்துப் பத்திரிகை நிருபர்களைப்போலவும் பணியாற்றினர் என்று சொன்னால் மிகையாகாது. அவர்கள் போர்க்களத்தில் தோன்றினர், அரசவைகளுக்குப் போந்தனர். ஏன், எளிய மக்கள் இல்லங்களுக்கும்கூடச் சென்று அன்றாடச் செய்திகளையும் நடப்புகளையும் ஊருக்குள் பரவச் செய்தனர். போர்க் காலத்திலும் மற்ற நாட்களிலும் எக்காலத்தும் இவர்கள் பணி நடந்து கொண்டிருந்தது. தக்கோர் எவரும் ஓர் அரிய செயலைச் செய்தால் உடனே அவ்வரிய செயலைச் செந்தமிழ்ப் பாக்களாக இயற்றிச் சரித்திரமாக்கினர். ஊர்களிலும், மலைகளிலும், காடுகளிலும் திரிந்த இவர்களுக்கு இயற்கை, பூகோளம், சரித்திரம், வனவிலங்கியல், தாவர இயல் ஆகிய பல சாத்திரங்களைப் பற்றியும் நல்ல அறிவு இருந்தது. சங்க இலக்கியங்களில் காணப்படும் செய்திகள் பௌதிகம், மருத்துவம், வனவிலங்கியல் போன்ற பல தற்கால ஆய்வுகளுக்கு



மிகவும் பயன்படும் என்று கூறினால் மிகையாகாது.

சங்க காலத்தில் பல பெண் புலவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது மிக்க வியப்பிற்குரியது. இவர்கள் பல்வேறு குலத்தொழில் உடையவர்களாகவும், சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் இருந்தவர்களாகவும் இருப்பது அதனினும் அதிசயத்திற்குரியது. அக்காலத்தில் தொழிலையொட்டியே சமுதாயம் வகுக்கப்பட்டிருந்தது என்றும், பிற்காலத்தில் சாதி வேறுபாடுகள் தோன்றின என்றும் தோன்றுகிறது. இயற்புலவர்கள், இசைக் கலைஞர்கள், நடனப் பெண்கள் ஆகியோர் அரச குடும்பத்திலும் இருந்தனர்— எளிய தொழிலாளிகளின் இல்லத்திலும் தோன்றினர். பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு என்ற சங்க காலப் பெண் புலவர் பாண்டியனின் அரசமாதேவி. ஆதிமந்தி என்பாள் சோழ மன்னனின் திருமகள். நடனத்தில் வல்லவளான அவள் தன்னை 'ஆடுகள மகள்' எனத் தன் பாடலில் குறிப்பிடுகிறாள். பாரி மகளிர், பாரி என்ற சிற்றரசனின் செல்வமக்கள் குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி என்னும் பெண் புலவர்கள் வேட்டுவ குலத்தில் தோன்றியவர்கள். வெண்ணிக்குயத்தியார் என்பவர் குயவர் குலத்தில் பிறந்தவர். பிற்காலத்தில் இக் குலத்தைச் சேர்ந்தவர்கள் தாழ்ந்த குலத்தவர் என்று இந்து சமயம் இழிக்க நேர்ந்தது நம் நாடு செய்த தவக்குறைவேயாம். இக்காலத்தில் இந்நிலை மாறும் பொருட்டு அரசாங்கம் பெருமுயற்சி எடுத்து அக் குலத்தவர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் கொடுத்து ஊக்கி வருதல் பாராட்டுக்குரியதாகும். காக்கை பாடினியார், ஔவையார் ஆகியோர் இயற்றமிழில் மிக்க புகழ் வாய்ந்தவர்களாக இருந்தனர். இயலும் இசையும் ஒன்றோடொன்று இணைந்து விளங்கியதாகத் தெரிகிறது.

இசையைப் பற்றிய குறிப்புகள் இல்லாத சங்கப் பாடல்களைக் காண்பது அரிது. அஞ்சியத்தை மகள் நாகையார் என்ற பெண்புலவர் குறிஞ்சி நிலத்தில் இசை நயத்தோடு கூடிய காட்சி ஒன்றை எவ்வளவு அழகாகவும் நகைச் சுவையுடனும் வருணிக்கிறார் பாருங்கள்!

''முடவுமுதிர் பலவின்குட மருள்பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமி ழருவிப் பாறை மருங்கின்
ஆடுமயின் முன்ன தாகக் கோடியர்
விழவுகொண் மூதூர் விறலி பின்றை
முழவன் போல வகப்படத் தழீஇ..''

**—அகநானூறு-பாடல் 352**

மலை நாட்டில் பலாப்பழத்திற்குக் குறைவேது? பல்கிளைக்குத் தலைவனாகிய ஒரு பெரிய மந்திக் குரங்கு, ஒரு நீர்வீழ்ச்சியின் அருகே பெரியபாறையின் மீது அமர்ந்திருக்கிறதாம்! அக்குரங்கு ஒரு பெரிய பலாப்பழத்தைத் தன் முன் வைத்துக்கொண்டிருக்கிறதாம். ஓர் அழகிய மயில் தன் தோகையை விரித்து ஆடுகிறதாம். இதற்கு மலையருவியின் இனிய ஒலி பின்னணி கூட்டுகிறதாம். இக்காட்சியைக் கண்ணுற்ற கற்பனை மிகு புலவர் ஓர் அழகிய நாட்டிய நாடகத்தையே தன் கண்முன் காண்கிறார். அழகிய மயில் ஆடும் விறலியாக, பாடிமிழருவிப் பின்னணியாக, மந்திக்கடுவன் முழவன்போல், அதாவது மத்தளம் வாசிக்கும் வித்துவானைப் போல் அமர்ந்திருக்கிறதாம். என்ன அழகிய கற்பனை! குறிஞ்சி நிலத்தின் செல்வக் கொழிப்

பின் பெருமையை ஆசிரியர் என்ன திறமையுடன் எடுத்தியம்புகிறார் என்று பாருங்கள்!

இப்பாடலின் பிற்பகுதி இசை நுணுக்கத்தின் ஒப்பற்ற தன்மையை உவமையாகக் கொண்டு மேலும் சுவையூட்டுகிறது.

''நல்லிசை நிறுத்த நயவரு பனுவற்
றொல்லிசை நிறீஇய வுரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினு மினியனா லெமக்கே''

தலைவி, தனக்கும் தலைவனுக்கும் இடையே உள்ள அன்பு எத்தகையது என்று உவமைகளுடன் கூறுகிறாள். நல்லிசைப் புலமை வாய்ந்த பாண்மகன் இசை மரபில் துறை போகியவன்; தக்க பண்ணிலே அமைத்துப்பாடவல்லவன்; நுட்பமான இசைநயத்தைக் கையாளும் போது ஏற்படும் இன்பத்தைக்காட்டிலும் அதிகமாகவும், மணம் முடிந்து தன் கணவனுடன் முதன்முதல் அனுபவித்த இன்பத்தைக் காட்டிலும் அதிகமாகவும், இன்று மேலும் புதியதான சுவையோடு தங்கள் அன்பு இருக்கிறது என்று நயம்படக் கூறுகிறாள்.

மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர் இசைவாணர்களைப் பற்றிய அரிய காட்சி ஒன்றை நமக்கு முன் தோற்றுவிக்கிறார். சங்க காலத்தில் சிற்றரசர்கள் போன்றோர் தங்களுடைய மெய்க்காவல் படையினருடன் இசைவாணர்களையும் தங்கள் பரிவாரங்களில் ஒரு பகுதியாகப் பேணிப் பராமரித்து வந்தனர் என்று தெரிகிறது. ஒரு பெரும்போரில் வீரத்துடன் போரிட்டுப் புண்பட்டு விழுந்த ஒரு சிற்றரசனின் இல்லத்திற்கு நப்பசலையார் சென்றார். அவ்வீட்டின் தலைவி தன்னைச் சுற்றிலும் தீய சகுனங்கள் ஏற்படுவதைக் கண்டு மனம் கலங்கியவளாய்த் தன் தலைவனின் உடல் நிலையையும் கவனிக்கிறாள். அவள் தாங்கொணாத துயரத்துடன் பின் வரும் சொற்களைப் பேசுகிறாள்.



''என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்
அஞ்சுவரு குராஅர் குரலுந் தூற்றும்
நெல் நீ ரெறிந்து விரிச்சி ஓர்க்குஞ்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
என்னா குவிர்கொல் அளியிர் நுமக்கும்
இவணுறை வாழ்க்கையோ அரிதே யானும்
மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாராத்
தொன்றுதாம் உடுத்த அம்பகைத் தெரியற்
சிறுவெள் ளாம்பல் அல்லி புண்ணுங்
கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்தல் அதனினும் அரிதே

—புறநானூறு 280

தலைவியானவள் பாணன், துடியன், விறலி இவர்களை விளித்துக் கூறுகிறாள்: 'எம் தலைவனின் மார்பில் புண்கள் ஆழமாகவும் பெரியவையாகவும் இருக்கின்றன. இப்பகல் வேளையில் தும்பிகள் வந்து ரீங்காரமிடுகின்றன. எத்தனை முறை ஏற்றி வைத்தும் விளக்குகள் மீண்டும் மீண்டும் அணைந்து போகின்றன! என்னையறியாமல் துயில் என்னை ஆட்கொள்கிறது! கூரையில் ஆந்தை ஓலமிடுகிறது! முது பெண்டிர் வாய்குழறிப் பேசுகின்றனர். இத்தனை துர்ச்சகுனங்களையும் காணும் போது நம் தலைவன் பிழைப்பது அரிது என்று தோன்றுகிறது. துடியா! பாணா! விறலி! உங்கள் தலைவிதி என்னாகுமோ நான் அறியேன்! இத்தகைய சுகவாழ்வு இனி உங்களுக்கு நீடித்திருக்கும் என்று என்னால் நினைக்கமுடியவில்லை! யானும் வெள்ளாம்பல், அல்லிக் கிழங்குகளை உண்டு ஒரு விதவையின் கோலத்தில் அதிக நாள் வாழ்ந்திருப்பேன் என்று தோன்றவில்லை!' என்று கூறுகிறாள்.

அங்கு நிலைமையை நேரில் கண்டறிய வந்த புலவர் இந்த நெஞ்சுருக்கும் காட்சியையும் சொற்களையும் கேட்டு மனம் நெகிழ்ந்தவராய் உடனே அச்செய்திகளை அழியாப் பாக்களாகப் புனைந்து அக்காட்சியினை அமரத்துவம் பெற்றதாகச் செய்துவிட்டார்.

சங்க இலக்கியத்தில் மற்றுமொரு அரிய காட்சி, போரில் புண் பட்டு வீழ்ந்த வீரனுக்குப் பெண்கள் பணிவிடை செய்யும் காட்சி—ஒரு வீரன் அரசனைக் காப்பாற்றும் பொருட்டு, தான் முன்வீழ்ந்து பகைவனின் தாக்குதலை ஏற்றுக் கொண்டான். நேரில் விவரங்களைக் கண்டறிய வந்த புலவர், வீரனின் மனைவி தன் பெண் ஏவலாளிடம் கூறிக்கொண்டிருக்கும் இவ்வார்த்தைகளைச் செவிமடுத்தார்.



''தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்க
கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி யாம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே

—புறநானூறு 281

'வாராய் தோழி! இரவம், வேம்பு ஆகிய இலைக்கொத்துக்களை முன்வாசற்படியில் செருகி வைப்போம். யாழும் மற்ற கருவிகளும் மெல்ல இனிய இசையை இசைக்கட்டும். குழலும் இனிய மணி ஓசையும் பின்னணி கூட்ட நாம் காஞ்சிப் பண்ணைப் பாடுவோம். நறுமணம் பொருந்திய சந்தனம், அகில் இவைகளின் புகை, வீடு முழுவதும் பரவட்டும். காதலந்தோழி வாராய்! வேந்தனின் உயிரைப் போரில் காப்பாற்றிய தீரனை நமது பணிவிடைகளால் மீண்டும் உயிர்பிழைக்கச் செய்வோம்'' என்று கூறுகிறாள்.

இதன் மூலம், துன்புற்று வருந்திய நோயாளிகளை இசை மூலமாகக் குணப்படுத்தவும் உற்சாக மூட்டவும் முயன்றனர் என்று தெரிய வருகிறது. சங்க காலத்துப் பெண்டிர்கள் பல கலைகளிலும் வல்லவர்களாகவும் அறிவு மிக்கவர்களாகவும் இருந்தனர் என்று தெரிகிறது. அரிசிற்கிழார் என்னும் புலவர் மேற்கண்ட காட்சியைத் தேனினும் இனிய தமிழ்ச்சொற்களில் வடித்துள்ள விந்தையைக் கண்டோம்.



### காலத்திற்கும் பருவத்திற்கும் ஏற்ற பண்கள்



இசைத் துறையில் காலத்திற்கேற்ற பண்களைப் பாடும் வழக்கம் தமிழிசையில் முன்பு இருந்திருக்கிறது. தேவாரங்களின் பண்களில் பகற் பண், இராப்பண் எனக் குறிக்கப்பட்டிருக்கும். இன்றும் வடநாட்டு இசையில் இப்பழக்கம் இருந்து வருகிறது. இராகங்களில் வரும் சுரங்களுக்கேற்ற உணர்வுகளோடு அவற்றைப் பாடும் காலங்களும் பருவங்களும் அமைக்கப்பட்டன. பண்களின் மூலம் உணர்ச்சி பாவங்களை நன்கு வெளிப்படுத்தும் தன்மை வடநாட்டு இசையில் இன்றும் உள்ளது. இவ்வழக்குத் தமிழ்நாட்டில் கர்நாடக சங்கீதத்தில் அடியோடு வீழ்ந்துபோய் விட்டது.

மருதப்பண் என்ற இராகம் மருதயாழின் முதன்மையான இராகமாக் வாசிக்கப்பட்டது. இப் பண் காலைக்குரியது என்று கூறப்படுகிறது.

''சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாமேழார் மருதம் பண்ண.......
புலர்ந்துவிரி விடியல்..........

என்று மதுரைக் காஞ்சியில் சொல்லப்படுகிறது. புலர்ந்து விடியும் காலத்திற்கு ஏற்ற இப்பண் வேனிற்காலத்திற்குரியது என்று சிலப்பதிகாரம் வேனிற்காதையில் கூறப்படுகிறது.

கானற்கடல் விளையாட்டினுள் கோவலன் கோபித்துச் சென்றபின் தனியே தன் மாளிகை திரும்பிய மாதவி தனிமையால் வாடியவளாய்ப் பிறிதொரு நாள் காலை நேரத்தில் ''வானுற சிவந்த மேனிலை மருங்கின் வேனிற்பள்ளி ஏறி'' ''அதிரா மரபின் யாழ்கை வாங்கி......'' என்றும் பின்னர்,

''அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி
மூவகை இயக்கமும் முறையுளிக் கழிப்பித்
திறந்து வழிப்படுஉந் தெள்ளிசைக் கரணத்து
புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கி''

எனவும் கூறப்படுகிறது. மருதப்பண்ணை பழம்பஞ்சுரம் எனும் சங்கராபரண இராகம் என்று ஆபிரஹாம் பண்டிதர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தேவாரப்பண்களில் பழம்பஞ்சுரம் பகற்பண்ணாகவே குறிப்பிடப்படுகிறது.

செவ்வழிப்பண் செவ்வழியாழில் இட்டு வாசிக்கப்பட்டது. இது மாலைக் காலத்திற்குரியதாகும்.

''திவவு மெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணி
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுட
னொண்சுடர் விளக்க முந்துற.....
...................................
முந்தை யாமஞ் சென்ற பின்றை''

—மதுரைக்காஞ்சி

என்றும்,

''அருளா யாதலோ கொடிதே யிருள்வரச்
சீறியாம் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக''

—புறநானூறு

என்றும் கூறப்பட்டது. செவ்வழிப் பண் மாலை நேரத்திற்கும், கார்காலத்திற்கும் முல்லை நிலத்திற்கும் உரியதாகும். ஆகவே செவ்வழி யாழ் முல்லை நிலத்திற்கும் உரியதாகும். ஆகவே செவ்வழி யாழ் முல்லை யாழ் என்றே அழைக்கப்பட்டது.

'யாம யாழ்ப்பெயர்க் குறிஞ்சி யாழும்
செவ்வழி யாழ்ப்பெயர் முல்லை யாழும்..''

—சேந்தன் திவாகரம்

எனவரும் நூற்பாவினால் அறிகிறோம்.

செவ்வழிப்பண் இரங்கற்பண்ணாகும். விளரிப் பண்ணும் இரங்கற்றன்மை உடைத்து என அறிகிறோம்.

## இளங்கவிஞன்



'கவிஞர் பழநி பாரதி, வருங்காலத்தில் ஒரு மகாகவியாக வருவான்' என்று சின்னஞ்சிறு வயதிலேயே, உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் அன்பான வாழ்த்துக்களைப் பெற்ற இளங்கவிஞன் பழநி பாரதி, கோடம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 10+2 வகுப்பில் முதலாண்டு பயிலும் மாணவன், இன்னும் 16 ஆண்டுகள் நிரம்பப் பெறாத அந்த மாணவன் எளிய இனிய தமிழில் கருத்தூட்டமிக்க பல கவிதைகளை ஆக்கித் தருகிறான். அனைத்துலக குழந்தைகள் ஆண்டினையொட்டி, அந்த இளங்கவிஞனின் பாடல் ஒன்றினை இங்கே மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்:

புத்தகங்கள் படிக்கலாம்
புதுமைகளை அறியலாம்
நித்தம்கற்ற வழியிலே
நின்றுவாழ்வில் உயரலாம்!

நல்லறிவை நமக்கெல்லாம்
நல்கிக்காக்கும் புத்தகம்!
தொல்லையின்றி நாளுமே
துணையாய் நிற்கும்புத்தகம்!

அரியஉண்மை பலவற்றை
அறியவைக்கும் புத்தகம்!
புரிந்திடாத விந்தையைப்
புரியவைக்கும் புத்தகம்!

நல்லநல்ல புத்தகம்
நாளும்தேர்ந்து படிப்பவர்
வெல்லற்கரிய மனிதராய்
மேதினியில் வாழலாம்!

''வளரத் தொடினும் வௌவுபு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சம்.....''

—புறநானூறு

விளரிப்பண் நெஞ்சை உருக்கும் வல்லமை யுடையது. நெய்தல் நிலத்திற்குரிய விளரி யாழ், திறனில் யாழ் எனக் கூறப்படுகிறது.

''திறனில் யாழே நெய்தல் யாழாகும்''.
திறனில்யாழ் விளரி நெய்தனிலஞ் சிவனும்

—சேந்தன் திவாகரம்



நெய்தற்குரிய சிறுபொழுது விளரிப்பண் பாடுவதற்குரிய காலமாகும். செவ்வழிக்கு உரிமை மாலைக்காலமாகும். விளரிப் பண்ணையுடைய நெய்தல் யாழ், திறனில் யாழாயிருந்தமையின் செவ்வழிப் பண்ணைக் கொண்ட செவ்வழி யாழை மாலைக்கு உரியதாகவும் ஏற்பாட்டிற்குரியதாகவும் இசை வல்லோர் வகுத்தனர் என்று தெரிகிறது.

சிலப்பதிகாரத்தில் கானல்வரியில் செவ்வழிப் பாலை, விளரிப்பாலை என்ற இரங்கற் பண்கள் இரண்டையும் மாதவி யாழிலே இசைக்கும் நேரம் மாலைக் காலமாகவே இருக்கின்றது.

''இளையிருள் பரந்ததுவே எற்செய்வான்
மறைந்தனனே
வளைநெகிழ எரிசிந்தி வந்தவிம்
மருண்மாலை''
''கதிரவன் மறைந்தனனே காரிருள்
பரந்ததுவே
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தஇம்
மருள்மாலை''
''பறவைபாட் டடங்கினவேபகல் செய்வான்
மறைந்தனனே
மறவையாய் என்னுயிர்மேல் வந்தஇம்
மருள்மாலை''

என்று பரந்து வரும் இருளை நோக்கிப் பாடுகின்றாள் மாதவி. அவள் பாடிய பண்ணைச் சித்திரிக்கின்றார் இளங்கோ அடிகள்.

''ஆங்ஙனம் பாடிய ஆயிழை பின்னரும்
காந்தள் மெல்விரற் கைக்கிளை சேர்குரல்
தீந்தொடைச் செவ்வழிப் பாலை
இசைஎழீஇப்
பாங்கினிற் பாடியோர் பண்ணுப்
பெயர்த்தாள்''

குரல் குரலாக வரும் செம்பாலைப் பண்ணில் கைக்கிளையைக் குரலாகக் கொள்ள எழும் செவ்வழிப் பாலையை விரைந்து வரும் மாலை நேரத்தைக் கருதி மாதவி இசைக்கத் தொடங்கினள் போலும்! செம்பாலைப்பண் சங்கராபரணம் என்று வைத்துக்கொண்டால் இதன் கைக்கிளை குரலாகும் போது செவ்வழிப்பண் தோடி இராகமாக ஆகிறது. ஏழ்பெரும் பாலையில் செம்பாலையென்றும், நாற்பெரும் பண்களில் மருதயாழ் மருதப் பண் என்றும் தேவாரப்பண்ணில் பழயபஞ்சுரம் என்றும் தற்காலத்து சங்கராபரண இராகம் குறிக்கப்படுகிறது. நான்கு குறைச்சுரங்கள் (Four Flats) உள்ள தோடி ராகத்தை இரங்கற்பண் என்றும் நெஞ்சை உருக்க வல்லது என்றும் சொல்வது பொருத்தமே. அடுத்து விளரிப்பண்ணைப் பற்றி வரும் செய்யுளும் இக்கூற்றையே மெய்ப்பிக்கின்றது.

''நுளையர் விளரி நொடிதருந் தீம்பாலை
இளிகிளையிற்கொள்ளஇறுத்தாயால்மாலை
இளிகிளையிற் கொள்ள இறுத்தாய்
மன்நீயேல்
கொலை வல்லாய்என் னாவிகொள்
வாழிமாலை''

(கானல்வரி-சிலப்பதிகாரம்)





## பட்டதாரிகளின் பணி!

ஏழை மக்களின் வாழ்வெனும் பாலைவனம் சோலைவனமாகிட வேண்டும்; வருங்காலச் சந்ததிகளாவது வளமெலாம் பெற்று வாழ்ந்திட வகை செய்திட வேண்டும். அதுதான் பட்டதாரிகளின் முதற்கடமையாகிறது!

## பாராட்டு

பாராட்டுதல் என்பது ஜனநாயகத்திலே சாதாரணம் தான். ஆனால், அது அளவிற்கு அதிகமாகப் போய்விட்டால் ஆபத்து!

## இசைத் தமிழே!

சேர நன்னாட்டின் மங்கையர் வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது, தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பைத் தமிழில்தான் பாடினார்கள்.

பாண்டியனின் குமாரிகளுக்கு பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள்தான்.

கதிரவன் காய்வதை அடக்கிக்கொண்டு. மேனி சிவந்து மறையும் நேரத்தில் கடலோரத்தில், பட்டுக் கூடாரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது தமிழில்தான்!

—பேரறிஞர் அண்ணா.

செம்பாலையின் விளரிசுரத்தைச் சட்ஜமாக வைத்துக் கைக்கிளை இளியாக மாறும். இளி கிளையிற் கொள்ள எனும் சொற்றொடர் இதை விளக்குகின்றது. நெய்தல் நிலத்து நுளையர் விரும்பும் இசை விளரிப்பண். இரங்கற்பண்ணாகிய விளரி மூன்று குறைச்சுரங்களை (Three Flats) உடையதாக இருக்கின்றது. விளரிப்பண் இக்காலத்து நடபைரவியாக ஆகிறது.



குறிஞ்சி யாழ் யாமத்திற்கு—இரவுநேரத்திற்கு உரியது என்று சொல்லப்படுகிறது.

''யாம யாழ்ப்பெயர் குறிஞ்சி யாழ்''

எனச் சேந்தன் திவாகரம் கூறும்

''............கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங்கொள்ளாது நிலையிலும்பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும்....''

—அகநானூறு 102

சங்க இலக்கியத்தில் வேடுவப் பெண் ஒங்கு தினைப் பெரும்புனத்து இரவில் காவல் செய்த பொழுது, குறிஞ்சிப்பண் பாடினமையும், பயிர்களைத் தின்னத் திருட்டுத்தனமாக வந்த களிறு குறிஞ்சிப் பண்ணைக் கேட்டு மெய்ம்மறந்து உறங்கினமையும் கூறக் காண்கிறோம்.

பாலையாழ் நண்பகலுக்கு உரியது எனக் கூறப்பட்டுள்ளது. பாலையாழும் பாலைப் பண்ணுமாகிய இது பிரிதல் என்னும்உணர்வை உரிப்பொருளாக உடையது.

'பாய்கலைப் பாவை பாடற்பாணி,ஆசான் திறனமைவரக்கேட்டு' எனப்புறஞ்சேரியிறுத்த காதையினுள்ளே நண்பகலும் வேனிற்பெரும் பொழுதும் கொற்றவையாகிய பாலைத் திணைத் தெய்வம் பாலைப் பெரும் பண்ணோடு சார்த்திக் கூறப்பட்டன.

''நாற்பெரும் பண்களும் நால்வகைச் சாதிகளும் இருபத்தியொரு திறங்களும்'' என்று நூற்று மூன்று பண்களைப் பற்றி இசைநூல்கள் பேசுகின்றன. தமிழிசையைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்குச் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், தேவாரம், திவ்வியப் பிரபந்தம் ஆகிய நூல்களிலும், ஏராளமான செய்திகளும் சான்றுகளும் காணக்கிடக்கின்றன. தக்க முறையில் இப்பணியை மேற்கொண்டால் தமிழர் பண்பாடுகலை வளர்ச்சி, இசை மரபு ஆகியவை பறறிய பல உண்மைகளை உலகிற்கு அறிவிக்கக்கூடும் என்பதில் யாதும் ஐயமில்லை.

# பளபளக்கும் கருங்கல் ஏற்றுமதி!



உலகத்துத் தொன்மையான நிலப்பரப்புகளில் தமிழகமும் ஒன்று. தமிழகத்தின் பல்வேறு காலங்களில் பல்வேறு கனிமங்களை உள்ளடக்கிய பாறைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று இரும்பு, மக்னீசியப் பொருட்களை உள்ளடக்கிய கருமையான ''டோலரைட்'' என்னும் பாறையாகும். இப்பாறைகள்தான் இன்று வணிகச் சிறப்புப் பெற்று கரும்பாறைகள் (Black Granites) என அழைக்கப்படுகின்றன.

இதுநாள்வரை இக்கருமபாறைகளைத் தனிப்பட்ட வியாபாரிகளும் தனிநபர்களும் வெட்டியெடுத்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இலாபம் ஈட்டி வந்தார்கள். இன்றைய தமிழக அரசு இத்தொழிலை அரசுடைமையாக்கி அதன் விளைவாகக் கிடைக்கும் வருவாயை நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த டாமின் (Tamin) நிறுவனத்தை உருவாக்கியுள்ளது.

'டாமின்' நிறுவன கரும்பாறை ஏற்றுமதி துவக்க விழா 16-6-1979 அன்று சென்னைத் துறைமுகத்தில் நடைபெற்றது.

விழாவில் தொழில் வணிகத் துறை இயக்குநர் திரு சி. இராமச்சந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்கள் வரவேற்புரையாற்றினார். சென்னைத் துறைமுக வாரியத் தலைவர் திரு வி. செல்வராஜ், ஐ.ஏ.எஸ் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

திரு எம். கல்யாணசுந்தரம் எம். பி. அவர்கள் சிறப்புரையாற்றினார்.

'டாமின்' நிறுவனத்தைச் சார்ந்த தலைவர் டாக்டர் ச. சரவணன் அவர்கள், முதல் ஏற்றுமதிக்கான நினைவுப் பொருளை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கட்கு வழங்கி நிறுவனத்தைப் பற்றிய விவரங்களை எடுத்துரைத்தார்கள்.

முதல் கல்லை, கப்பலில் ஏற்றி வைத்துப் பேசுகையில் முதல்வர் குறிப்பிட்டதாவது:

'இந்த நிகழ்ச்சி தமிழகத்தில் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாக நடந்திருக்க வேண்டும். தாமதமாக இப்போது நடைபெறுகிறது.

''கனிம வளங்கள் நாட்டுக்குச் சொந்தமாக இருக்க வேண்டிய நிலையை விட்டு, தனிப்பட்டவர்கள் சிலர் இதனைத் தங்களுக்கு என்று ஆக்கிக் கொண்டு, இதன் மூலம் கிடைக்கும் இலாபத்தால் தாங்கள் மேம்பாடு அடையவும், தாங்கள் மட்டும் பயன்பெறும் அளவிலும் ஆக்கி இருந்தார்கள்.

''நான் முதல்-அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சிலர் என்னிடம் வந்து, ''கறுப்புக் கற்களை வெட்டியெடுக்கும் உரிமங்கள் சில நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இதே உரிமங்களை எங்களுக்கும் கொடுத்தால் நாங்கள் நல்ல முறையில் செயல்பட முடியும்'' என்று கேட்டனர்.

''இந்தக் கறுப்புக் கல்லால் என்ன இலாபம் வந்துவிடப் போகிறது என்று நான் அவர்களிடம் சாதாரணமாகக் கேட்டேன். அவர்கள் என்னிடம் ''நீங்கள் 2, 3 ஏக்கருக்கு எங்களுக்கு அனுமதி தந்தால் மாதம் ரூ. 3 இலட்சம், 4 இலட்சம் என்று வீட்டில் உட்கார்ந்து சம்பாதிப்போம்'' என்று கூறினர்.

''நான் உடனே அதிகாரிகளை அழைத்து ''எத்தனை ஏக்கர்கள் இவ்வாறு யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?'' என்று குறிப்புக் கொண்டு வாருங்கள் என்று கூறினேன்.

அந்தக் குறிப்புகளை ஆழ்ந்து பார்த்தபின், இத்தகைய உரிமங்களை என்ன காரணத்தைக் கொண்டும் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்றும் அரசே இந்தப் பணிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவு போட்டேன்.

''சிலர் உரிமை வாங்கிய நிலத்துக்கு மேலாக அதிக நிலத்தில் கற்களை வெட்டி எடுத்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

''ஒரு மனிதன், தான் வாழ்வதற்காக ஏதாவது ஒரு வகையில் தொழில் செய்வது அவனது உரிமை. அதைத் தடுக்க முடியாது. ஆனால் மற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டியதைத் தான் ஒருவனே எடுத்துக் கொள்வதை அனுமதிக்க முடியாது.

'' நான் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த நேரம், இலண்டன் நகரில் கறுப்புக் கல்லால் ஆன ஒரு கட்டடத்தைப் பார்த்தேன். விரும்பத்தகாத - கோடுகளைக் கிழித்துப் பாழாக்க முடியாத கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன.

''இந்தக் கற்கள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்று கேட்ட போது, இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டன என்றார்கள். நான் மறுபடியும் ''இந்தியாவின் எந்தப் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டன?' என்று கேட்டேன்.

''அவர்கள் என்னிடம் இந்தியாவில் பல பகுதிகளில் இருந்து வந்தாலும் தமிழ்நாட்டிலிருந்து தான் பெருமளவில் வருகிறது என்றார்கள்.

"இதனால் அரசுக்குக் கிடைத்த பலன் என்ன என்று எண்ணிப் பார்க்கத் தோன்றியது.



"இந்த நிறுவனத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யும் பணிகளை இடைத்தரகர்கள் மூலமாகச் செய்ய வேண்டாம் என்று சொல்லி இருக்கிறேன். அதன்படி இன்று நேரடியாக ஒப்பந்தம் செய்து இருக்கிறார்கள்.

"வெளிநாடுகளில் இந்தக் கற்கள்குறித்து விளம்பரம் செய்ய வேண்டும் என்று சொன்னேன். அதன் படி விளம்பரம் செய்யப்பட்டது.

''இதன் மூலமாகப் பலர் இந்தக் கற்களைக் கேட்டு இருக்கிறார்கள் இதனால் எத்தனையோ கோடி டாலர் கிடைக்கவும், அதனால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவும் வழி இருக்கிறது.



''இந்த நிறுவனத்துக்காக ஓர் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க வேண்டும் எனறு அண்ணன கல்யாணசுந்தரம் கூறினார். அப்படிப்பட்ட நிறுவனத்தைத் தமிழக அரசு நிச்சயமாக அமைக்கும்.

''ஆக்கபூர்வமான யோசனைகளை அனுபவமிக்கவர்கள் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளத் தமிழக அரசு தயாராக இருக்கிறது.

''இதில் தவறு இருந்தால் அதற்கு யார் காரணமோ அவர்கள் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

''தமிழ்நாட்டில் உள்ள சிவப்பு மண்ணைத் தேடி வெளிநாட்டினர் பலர் வருகிறார்கள். இந்த மண்ணை வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஆனால் அவர்கள் வெறும் மண்ணுக்காக வரவில்லை என்றும், அந்த மண்ணில் இருந்து இரசாயனப் பொருள் எடுக்கலாம் என்றும் என்னிடம் சொல்லிய போது, அந்த மண்ணை யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டு இருக்கிறேன்.''

தமிழக முதல்வர் அவர்கள், இத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்குத் துணிகள் வழங்கினார்கள். சப்பான் நிறுவனங்களுக்கு உரிமைப் பத்திரங்களை முதல்வர் அவர்கள் வழங்கினார்கள். ''தமிழ்நாடு 'டாமின்' நிறுவனம் ஆயிரங்காலத்துப் பயிர் போல தழைத்தோங்கட்டும்'' என்று முதல்வர் வாழ்த்தினார்.

விழா இறுதியில் பொது மேலாளர் திரு ஆர். சீனுவாசன் நன்றி கூறினார். தேசியக் கீதம் இசைக்க.விழா இனிது முடிந்தது.

-மருதம்

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111




# பட்டுப் புழு வளர்ப்போம்

—கே. நடராஜன்.
மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர்.
தொடர்பு செய்தி-மக்கள்
திருச்சி

பட்டுப் புழு வளர்ப்பு ஒரு சிறந்த குடிசைத் தொழில். வீட்டில் இருந்தபடியே ஆண்டுக்குச் சுமார் ரூபாய் 5,000 முதல் ரூபாய் 10,000 வரை இதன் மூலம் வருவாய் பெறமுடியும்!

''ரூபாய் பத்தாயிரம் மட்டும் அல்ல, பன்னிரண்டாயிரம்கூட வருவாய் பெற முடியும்'' என்று சவால் விடுகிறார் நங்கவரத்தைச் சேர்ந்த திரு கே. பிச்சு சுப்பிரமணியம்.

நங்கவரம், காவிரி ஆற்றின் படுகையிலுள்ள எழிலார்ந்த கிராமம். சுற்றிலும் நெல்வயல்களும், வாழைத் தோட்டங்களும் கரும்புக் கொல்லைகளும் சூழ்ந்த பசுமையான சிற்றூர். அங்குள்ள உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக வேலை பார்ப்பவர்தான் திரு பிச்சு சுப்பிரமணியம்.

வரலாற்று ஆசிரியரான இவருக்குப் பட்டுப் புழு வளர்ப்பில் ஆர்வம் ஏற்பட்டதே ஒரு கதை!

ஒரு நாள், தனது மாமா மகன் திருமணத்திற்காகத் தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டிக்குச் சென்றிருந்தார் பிச்சு சுப்பிரமணியம். அங்கே பட்டுப் புழுக் கூடு வாங்கும் நிலையத்தைப் பார்த்தார். மாணவர்களுக்கு அது குறித்து எடுத்துச் சொல்லலாமே என்ற ஆர்வம் அவருக்குப் பிறந்தது. எனவே பட்டு வளர்ப்புப் பற்றி விசாரித்தார். ஏன், நாமே வளர்த்தால் என்ன? என்ற ஆர்வமும் அவருக்கு ஏற்பட்டது. இன்று பட்டு வளர்ப்பில் முன்னணி விவசாயியாக மாறி, கருத்தரங்கங்களில் ஆணித்தரமாக, ஆதாரப்பூர்வமாக, அனுபவவாயிலாகப் பட்டு வளர்ப்புப் பற்றிக் கூறக் கூடிய அளவில் அவர் வளர்ந்துள்ளார்.

திரு பிச்சு சுப்பிரமணியத்தைப் பேட்டி கண்டபோது பட்டுவளர்ப்பில் தவது வெற்றி குறித்துப் பெருமிதத்தோடு பேசினார். தன்னைப்போல் பிறரும் பட்டு வளர்ப்பில் ஈடுபட்டு, இந்தியத் துணைக்கண்டத்தில் பட்டுவளர்ப்பில் தமிழகம் முன் நிற்க வேண்டும் என மிகுந்த ஆசையுள்ளவராக அவர் காணப்பட்டார்.

*ஆசிரியரான தங்களுக்குப் பட்டுப் புழு வளர்ப்பில் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?

Δஇந்த வினாவுக்கு அவரது பதில்:

நான் பாப்பாரப்பட்டியில் முசுக்கட்டை செடி வளர்ப்பைப் பார்த்தேன். ஒரு தடவை நட்ட செடியை 15 ஆண்டு பயன் படுத்தலாம் என்றார்கள். கரும்பு அல்லது வாழை பயிரிட்டால்கூட இரண்டுமுறை அதாவது சுமார் 2 ஆண்டுகளுக்குத்தான் வைத்திருக்க முடியும். 15 ஆண்டு என்றால் தொல்லை இல்லையே என்று ஓர் ஈடுபாடு ஏற்பட்டது. அத்துடன் நெல், வாழை, கரும்பு எந்தப் பயிரானாலும் ஆறு மாதம் அல்லது ஓராண்டிற்கு ஒரு மகசூல்தான் பெறமுடியும். இதில் மாதந்தோறும் வருமானம் கிடைக்க வழி இருக்கிறது என்று தெரிந்ததும் துணிந்து இறங்கினேன்.

*எப்போது துவங்கினீர்கள்? இப்போது அனுபவம் எப்படி?

Δநான் சென்ற ஆண்டிலேயே துவங்கி விட்டேன். ஆனால் சென்ற ஆண்டில் புயல் - மழை காரணமாக உடனடியாக நான் பலனடைய முடியவில்லை. முசுக் கட்டை செடி 3 மாதத்திற்கு மேல் தண்ணீரில் மூழ்கிக் கிடந்தது. நல்லவேளை பயிர் அழுகி விடவில்லை. எனவே, கடந்த மூன்று மாதமாகப் பட்டுப் புழு வளர்த்து மாதந்தோறும் வருவாய் பெறுகிறேன்.

*எவ்வளவு இடத்தில் முசுக் கட்டை பயிரிட்டிருக்கிறீர்கள்?

Δ1 ஏக்கர் 40 சென்ட் இடத்தில் பயிரிட்டிருக்கிறேன்.

*அதில் பிற பயிர்களிட்டால் என்ன வருமானம் கிடைக்கும் ? பட்டு வளர்ப்பில் எவ்வளவு கிடைக்கிறது.?

Δநல்லகேள்வி! வாழை போட்டால் ஆண்டுக்கு ரூ. 3000 முதல் ரூ. 3500 வரை கிடைக்கும். புயலடித்தால் சொல்ல முடியாது. கரும்பு நட்டால் ஆண்டுக்கு ரூ. 2,500 வரை கிடைக்கலாம். அதில் ஆலையின் ஆணையை எதிர் நோக்கியிருக்க வேண்டும். நெல் பயிரிட்டால் ஆண்டுக்கு ரூ.2,000 அல்லது ரூ. 2500 கிடைக்கும். ஆனால் பட்டுப்புழு வளர்ப்பில் ஆண்டிற்கு ரூ.12000முதல் ரூபாய் 15000 வரை நிச்சயம் கிடைக்கும். என்னால் குறைந்தது மாதம் ரூ. 1,000 நிகர வருமானம் இதன் மூலம் பெற முடியும்.

*கடந்த மூன்று மாதத்தில் பட்டு வளர்ப்பில் உங்கள் வருவாய் எவ்வளவு?

Δகடந்த பிப்ரவரி மாதத்தில் ரூ. 1050 கிடைத்தது. மார்ச் மாதத்தில் ரூ. 1,300 கிடைத்தது. ஏப்ரல் மாதம் புழுவிற்கு ஒரு நோய் ஏற்பட்டது. அதன் காரணமாக ரூ. 500தான் கிடைத்தது. ஆனால் இப்போதுநோய்க்கு மருந்து தெரிந்து கொண்டேன். எனவே, சராசரி சுமார் 60கிலோ அளவில் பட்டுக் கூடு உற்பத்தி செய்வேன். ஒரு கிலோ சுமார்

ரூ. 20 முதல் ரூ. 30 வரை பெங்களூரில் விற்பனை ஆகிறது. எனவே, எல்லாச் செலவும்போக மாதம் நிச்சயம் ரூ. 1,000 வருவாய் கிடைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.

*ஆரம்பச் செலவு எவ்வளவு ஆயிற்று?

Δநிலத்தை உழுது, கொத்தி, வயலைப் பக்குவப்படுத்த ரூபாய் 1,500 ஆயிற்று. பொருட்களுக்கு அதாவது புழு வளர்க்கும் தட்டுகள்-100, கூடு கட்டும் சந்திரிகை 50, இரும்பு ஸ்டாண்ட் - 2 ஆகியவற்றிற்கு ரூ. 2,500 ஆயிற்று. இனி அவ்வப்போது புது தட்டுகள் செய்வது, நிலத்துக்கு உரம் போடுவதுபோன்ற சாதாரண செலவுதான் ஆகும். வேலையாட்கள் கூலி எல்லாம் சேர்த்தால்கூட மாதம் ரூ. 200 முதல் ரூ. 250-க்குத் தாண்டாது. அதையெல்லாம் கழித்துத்தான் மாதம் ரூ. 1,000 என்றேன்.

*அப்படியிருக்க பட்டு வளர்ப்பில் ஏன் இன்னும் அதிகம் பேர் ஈடுபடவில்லை?

Δஉண்மைதான். இந்தியாவில் பட்டு வளர்ப்பில் தமிழ்நாடு 4-வது இடத்தில் உள்ளது. 1978-ஆம் ஆண்டுக் கணக்குப்படி இந்தியாவில் ஆண்டுக்கு மொத்தம் 2700 டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. அதில் 80 சதவீதம் கர்நாடக மாநிலத்திலிருந்து உற்பத்தியானது. அதாவது 2,240 டன். வங்காள மாநிலத்தில் சுமார் 300 டன் உற்பத்தி, ஜம்மு-காஷ்மீரில் 80 டன். அதற்கு அடுத்து தமிழ்நாட்டில்.

பொதுவாக, குளிர்ச்சியான பிரதேசத்தில்தான் பட்டுப்புழு வளர்க்க முடியும் என்ற தப்பான கருத்து இதுவரை இருந்து வந்தது. இப்போதுகூட பல விவசாயிகள் முசுக்கட்டைச் செடி நம்ம ஊரில் பயிராகாது. பட்டுப் புழு இந்த வெய்யிலைத் தாங்காது என்று நினைக்கிறார்கள். இது தவறு. பொதுவாக முசுக்கட்டை ஒரு தோட்டப் பயிர்தான். நஞ்சை தேவையில்லை. தண்ணீர் வசதியிருந்தால்போதும் நான்கூட நஞ்சையில் வடிகால் வசதி செய்தபின்தான் முசுக்கட்டை பயிரிட்டிருக்கிறேன்.

அதேபோல் புழுவையும் சாதாரண ஓலைக்கூரை வேய்ந்து தாழ்வாரத்தில் வளர்க்கலாம். வெய்யில் காலத்தில் ஈரச்சாக்கைக் கட்டித் தொங்கவிட்டால் வெய்யில் பாதிக்காது.

மற்றொரு முக்கியமான அம்சம். இது பலருக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடிய தொழில். எனது வீட்டில் புழு வளர்ச்சியின் 3-வது, 4-வது பருவத்தில் செடியில் இலை கிள்ளுவதற்காக நாள்தோறும் 10 பேருக்கு வேலையிருக்கும். அத்துடன் வீட்டிலுள்ளவர்கள் வீண் அரட்டையில் பொழுது போக்காமல், பட்டு வளர்ப்பு என்ற ஆக்கப் பணியில் ஈடுபட முடியும். வீட்டிலுள்ள அனைவருக்குமே இதில் வேலையிருக்கும். புழுவினை வளரும் பருவத்தில் நன்றாகக் கவனித்தால் நல்ல தரமான கூடு கிடைக்கும்.



## தமிழன் வாழ்வு

தமிழன் வாழவேண்டிய நல்வாழ்வு தன்னை மட்டுமே வாழ்வித்துக்கொள்ளக்கூடியதல்ல; தமிழன் நல்வாழ்வு வாழவேண்டும் என்பது, மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என்பதுதான்!

—பேரறிஞர் அண்ணா

*எல்லோரும் இதில் ஈடுபடலாம் என்று சொல்லுகிறீர்கள் இல்லையா?

Δஆமாம். நெல் விற்பனை தேக்கமடைந்துள்ள இந்நாளில் பணப்பயிர் பயிரிடுங்கள் என்று விவசாயிகளுக்கு அறிவுரை வழங்குகிறோம். இது பணப்பயிர்தான். பட்டு வளர்ப்பு ஒரு விவசாயம்; அத்துடன் ஒரு கைத்தொழிலுங்கூட, பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் இலாபகரமான தொழில். இதில் ஈடுபட்டால் விவசாயிகள் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றங்காண முடியும்.

இவ்வாறு திரு பிச்சு சுப்பிரமணியம் தனது பேட்டியில் தெரிவித்தார்.

முசுக்கட்டை (மல்பரிச்) செடி வளர்ப்பவர்களுக்கு அருகிலுள்ள அரசு பட்டு வளர்ப்பு வித்தகங்களிலிருந்து முட்டைகள் கிடைக்கும். அவற்றைக் கொண்டு வந்து வீட்டிலேயே பட்டுப் புழு வளர்ப்பைத் தொடங்கலாம். பத்துநாட்களில். முட்டையிலிருந்து புழுக்கள் வெளித்தோன்றும். பிறந்தவுடன் சிற்றெறும்பு அளவு இருக்கும். வயதிற்கேற்றபடி-அதாவது சிறு புழுவுக்குச் சிறு தளிரும் (சிறிது சிறிதாகக் கிள்ளிப் போட வேண்டும்) பெரிதாக, பெரிதாக அதற்கேற்ற இலையும் போட வேண்டும்.

பெரிதாகப் புழுக்கள் பருத்துக் கூடுகட்டும் நிலையை அடைய 21 நாட்களாகும். 24 மணி நேரத்தில் புழு கூடு கட்டிவிடும். கூடு கட்டிய 4 நாளில் கூடுகளை அறுவடை செய்யவேண்டும். அவ்வாறு அறுவடை செய்த கூடுகளைப் பக்கத்திலுள்ள பட்டுக்கூடு அங்காடிகளில் விற்பனை செய்யலாம்.

பொதுவாக ஒரு கிலோ கூடுகள் ரூ. 20 முதல் ரூ. 25 வரை விற்பனையாகும்.

நல்ல வருமானம் வருவதோடு, ஒரு ஏக்கரில் மல்பரி பயிரிடுவதன் மூலம் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பல பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இந்தியத் துணைக்கண்டத்தில் சுமார் 32 இலட்சம் பேருக்கு இத்தொழில் மூலம் வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது. கைத்தறிக்கு அடுத்து இதுவே மிகப் பெரிய தொழிலாகும்.

எனவே, திருச்சி மாவட்டத்தில் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. தற்போது 148 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 170 விவசாயிகள் இத்தொழிலை மேற்கொண்டுள்ளனர். உப்பிலியாபுரம், குளித்தலைப் பகுதிகளில் அவர்கள் உள்ளனர். இவர்களுக்கு உதவ, துறையூர் வட்டத்தைச் சேர்ந்த உப்பிலியாபுரத்தில் பட்டு வளர்ப்பு ஆய்வாளர் அலுவலகம் உள்ளது. அவரது மேற்பார்வையின் கீழ் ஒரு முன்னோடிப் பட்டுப்பண்ணையில் (2.50 ஏக்கர்) மல்பரிச் செடி பயிரிடப்பட்டு, பட்டுப் புழுக்கள் வளர்க்கப்படுகின்றன.

இவ்வாண்டில் (1979-80) திருச்சி மாவட்டத்தில் மேலும் சுமார் 400 ஏக்கர் நிலத்தில் மல்பரி பயிரிடப்படும். இதற்காக விவசாயிகளுக்கு மானியமாகவும் பயிற்சி உதவித் தொகையாகவும் ரூ. 2,70,000 (இரண்டு லட்சத்து எழுபதாயிரம் ரூபாய்) செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேறும்போது திருச்சி மாவட்டத்தில் மட்டும் 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பட்டு நூல் உற்பத்தியாகும்.

மேலும் பட்டுப்புழு வளர்ப்போருக்கு உதவுவதற்காக உப்பிலியாபுரம், குளித்தலை, கிருஷ்ணராயபுரம் ஆகிய பகுதிகளில் விற்பனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகப்பணிகள்

உலகிலேயே நீலகிரி மாவட்டம் தான் மிகவும் அருமையான தேயிலைச் செடி வளரும் நிலவளத்திற்குப் பெயர் பெற்றதாகும். இம்மாவட்டம் முழுவதிலும் நிலவும் தட்பவெப்ப நிலை, தேயிலை வளர்ப்புக்கு மிகவும் பொருத்தமானது. மலைப்பகுதியில் 762 மீட்டர் (2500 அடி) முதல் 1219 மீட்டர் (4000 அடி) வரையுள்ள உயரத்தில் அமைந்துள்ள நிலப்பகுதியான கூடலூர் வட்டம் ஆண்டின் இரு பருவ மழையால் 3250 மில்லி மீட்டர் (130 அங்குலம்) கன மழை பெறுகின்றது. 1219 மீட்டர் (4000 அடி) முதல் 2438 மீட்டர் (8000 அடி) வரை உயரமுள்ள பீடபூமியில் இருக்கும் குன்னூர், உதகை வட்டங்கள் ஆண்டில் வட கிழக்குப் பருவக் காற்று மூலம் சுமார் 2,000 மில்லி மீட்டர் மழையைப் பெறுகின்றது. இது உலகிலேயே உயர்ரகத் தேயிலை வளர்ப்புக்குப் பக்கபலமாக அமைந்துள்ளது.

### திட்டத்தின் நோக்கம் என்ன?

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் ஏற்பட்ட சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தப்படி தாயகம் திரும்பும் 5.25,000 இலங்கை வாழ் இந்தியர்களை 15 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் குடியமர்த்த வேண்டியுள்ளது. இவ்வாறு குடியமர்த்த இருக்கும் இலங்கை வாழ் இந்தியர்களில் பெரும்பாலோர், தேயிலை மற்றும் இதர தோட்டங்களில் வேலை செய்பவர்களாக இருப்பதால், இங்கு அவர்களை அதைப் போன்ற வேலைக்கு அமர்த்துவது மிகப் பொருத்தமானது என்று மத்திய அரசு கருதியது. இதனைக் கருத்தில் கொண்டு நீலகிரி மாவட்டத்தில் தேயிலை வளர்ப்புப் பணியினை மேற்கொள்ள மத்திய அரசால் திட்டம் வகுக்கப்பட்டு முதன் முதலில் 1968-ஆம் ஆண்டு சோதனை முறையில் துவக்கப்பட்டது. இதன்படி 1969-ஆம் ஆண்டு ஓர் அடிப்படைத்திட்டம் (Master Plan) தேயிலை வளர்ப்புக்காகத் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 1500 எக்டர் நிலத்தில் தேயிலை பயிரிடவும், இதனால் 3750 தோட்டத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தவும் 5 கோட்டங்கள் (Divisions) ஆரம்பிக்கப்பட்டன.

முதன் முதலில் தேயிலை நாற்றுகள் உருவாக்க குன்னூர் கோத்தகிரி உயர் மலைப்பகுதிக்குக் கிரேக்மோர் 6017 என்ற வகை தேயிலை கழிகளும் இடைமலைப்பகுதியான சேரம்பாடி, சேரங்கோடு, நெல்லியாளம் ஆகிய இடங்களுக்கு அத்திகுன்னா (எ. டி. கே) என்னும் தாய்க்கழிகள் (Clones) பெருமளவு உபயோகப்படுத்தப்பட்டன. இதுவுமல்லாமல் கோத்தகிரி, குன்னூர் ஆகிய பிரிவுகளில் பெருமளவு, சுந்தரம் (பி 5/63) ஸ்பிரிங்பீல்டு (எஸ். பி. 4/5) ஆத்ரே (பி 6/61) பாண்டியன் (பி. 6/62) கோல்கொண்டா (பி.6 36) புரூக்லேண்ட்ஸ் (பி. 6/24) ஜெயராம் (பி. 4/142) முதலான தாய்கழிகள் (க்ளோன்ஸ்) உபயோகப்படுத்தப்பட்டன. ஆகவே இத்திட்டம் முழுமையாக நிறைவேறும்போது இந்தியாவிலேயே மிகப் பெரிய தனித் தாய்க்கழித் தோட்டமாக (Biggest Single Clonal Estate) விளங்கும்.

நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்று திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு முன்னர், இயங்கிக் கொண்டிருந்த அரசு தேயிலைத் தோட்டத் திட்டமானது ஓர் அரசு நிறுவனக் கழகமாக 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்திற்குட்பட்டு 22-8-1975-இல் இணைக்கப்பட்டது. 1-4-1976 முதல் இத்தேயிலைத் தோட்டக் கழகம் இயங்கி வருகிறது.

வேளாண்மை மறு நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தினர் யுனைடெட் கமர்ஷியல், கனரா வங்கி இந்தியன் வங்கி மூலமாக இத்திட்டத்திற்கு ரூ. 302 இலட்சத்து 79 ஆயிரம் நிதி உதவி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர்.

இக்கழகம், பயிர் செய்யப்பட்டதும், செய்யப்படாததுமான 1517 எக்டர் நிலப்பரப்பை, நீண்ட காலக் குத்தகையில் ஒரு எக்டருக்கு ரூ. 500 விதம் குத்தகை வரி வழங்கி தமிழ்நாடு அரசு வனத்துறையிலிருந்து நிலத்தைப் பெற்று இயங்கி வருகிறது. இதுவரை 1462.05 எக்டர் நிலப்பரப்பில் தேயிலை பயிர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1979-ஆம் ஆண்டு இத்திட்டம் முழுமை பெற்று விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள காடுகள் பொது ஏலத்தில் விற்கப்பட்டு குத்தகைதாரர்கள் மூலமாகத் துப்புரவாக அகற்றப்பட்டு, பின்னர் பண்படுத்தப்பட்ட நிலத்தில் 15 முதல் 18 மாதம் வயதுள்ள தேயிலை நாற்றுகள் மொத்தமாக ஒரு எக்டருக்கு 11,000 நாற்றுகள் விதம் நடப்படுகின்றன. விதைப்பதன் மூலம் அல்லாமல் தாய்க் கழியினால் உற்பத்தியாகும் நாற்றுகளே நடுவதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. செடி நட்ட



நான்கு ஆண்டுகளிலேயே முறையாக 10 நாட்களுக்கு ஒரு முறை தேயிலை கொழுந்து பறிக்கப்பட்டு வருகிறது. இந்த முதல் நான்கு ஆண்டுகளுக்கிடையே செடிகளுக்கு நிலத்திருத்தம்; களைபிடுங்குதல், பூச்சி மருந்து அடித்தல், தொற்று நோய்த்தடுப்பு, மருந்தடித்தல் போன்ற பண்ணை வளர்ப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர் மட்ட மலைப் பகுதியில் உள்ள செடிகளுக்கு நான்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் கீழ்ச்சமவெளி மலைப்பகுதியில் உள்ள செடிகளுக்கு 6 முதல் 7 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தலைவெட்டும் (Pruning) வேலை செய்யப்படுகிறது.

### இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோருக்கு

இக்கழகத்தில் 1780 இலங்கை குடிபெயர்ந்தோர் குடும்பங்





# பல்கிப்பெருகும் பால் வளம்

**மக்கள் நல்வாழ்வுக்கு வலிவூட்டும் வகையில் பால் வளம் பல்கிப்பெருக அரசு பல்வேறு முனைப்புத் திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. அப்பணிகள் பற்றிய விவரங்களில் சில :**

தமிழ்நாடு பால்வள நிறுவனம், பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக, 4—5—1972ல் பதிவு செய்யப்பட்டு அதே ஆண்டின் ஜூலை முதல் நாளிலிருந்து பணி புரிந்து வருகிறது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் குறித்த விவரங்கள் வருமாறு:

பால்வளத்தையும், பால் உற்பத்தி நிறுவனங்களையும் மேம்படுத்துதல், அதற்குரிய தேவைகளுக்கு உதவுதல்.

பாலைச் சேகரிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் உரிய வழிமுறைகளை நிர்ணயிப்பது, உதவுவது.

கிராமப் புறங்களில் பால் பண்ணைகளின் உற்பத்தியை அதிகரித்தல், அதன் மூலம் நாளடைவில் பால் உற்பத்தியில் தன்னிறைவு காணுதல்.

நகர்ப்புற மக்களுக்கு நியாயமான விலையில் தரமான பால் கிடைக்கச் செய்தல்.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் துவங்கிய நாளிலிருந்து பல்வேறு துறைகளில் வளர்ச்சியும், சாதனைகளையும் பெற்றுள்ளது; இதன் வளர்ச்சியைக் கீழ்க்கண்ட அட்டவணைமூலம் அறியலாம்.

| | 1972-'73 | 1978-79 | சத விகித வளர்ச்சி |
|---|---|---|---|
| | (இலட்சம் லிட்டரில்) | | |
| பால் கொள்முதல் | 125.50 | 740.39 | 490 |
| பால் விற்பனை | 221.16 | 988.85 | 347 |
| விற்பனை (ரூ.இலட்சத்தில்) | 282.00 | 2606.00 | 824 |

**பால் கொள்முதல்-விற்பனை !**

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களாகிய கோயம்புத்தூர், சேலம், நீலகிரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, மதுரை, செங்கல்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பால், இருபது குளிர்பதன நிலையங்களில் குளிர வைக்கப்படுகிறது. பின்னர் இந்தப்பால், நிறுவனத்தின் பால் சேகரித்துச் செல்லும் வண்டிகள் மூலமும், ஒரு பகுதி ஈரோடிலிருந்து இரயிலோடு இணைத்த பாதுகாப்புத் தொட்டிகளின் மூலமும், அம்பத்தூர், மாதவரம் மற்றும் மதுரை பால் பண்ணைகளுக்குத் தருவிக்கப்படுகிறது. இவ்வாறு தருவிக்கப்பட்ட பால், ஆடை நீக்கிய பால் பொடி (Skim Milk Powder) மற்றும் வெண்ணெய்க் கொழுப்பு (Butter Oil) முதலியன சேர்த்துத் தரப்படுத்தப்பட்ட பாலாக (Standardised Milk) மாற்றப்படுகிறது.

இப்படித் தரப்படுத்தப்பட்ட பால், சென்னை மற்றும் மதுரை மாநகர்களில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் பால் மொத்த விற்பனை நிலையங்கள், பாலகங்கள் ஆகியன மூலமும் சென்னையில் மொத்த விற்பனை 'பிரிவுகள் மூலமும் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது.



களுக்கு (1469 + 311—ஜென்மம் பிரிவு) இதுவரை மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. அதுவுமல்லாமல் 24 இலங்கை குடிபெயர்ந்தோர் அல்லாதவர்கள், தற்காலிகமாகச் சேரம்பாடி கோட்டத்தில் ஆரம்பம் முதல் பணியாற்றிய குடும்பங்களையும் நிரந்தரப்பணியாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

இக் கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 1905 தொழிலாளர்கள் குடியிருப்புகளில், இதுவரை 1379 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதம் உள்ள வீடுகளைக் கட்டி முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இக்கழகத்தில் நிர்வாக இயக்குநர் முதல், பலதரப்பட்ட ஊழியர்களுக்கும் இலவசக் குடியிருப்பு மனைகள் கட்டப்பட்டுள்ளன. அனைத்துப் பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் அளிப்பதற்கான திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்படும்.

ஒரு நாளுக்கு 8 மணி நேரம் வீதம் வாரத்தில் 6 நாட்கள் தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே செய்து கொண்ட உடன்பாட்டின்படி அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் ஊதியத்துடன்



கூடிய ஒன்பது விடுமுறைநாட்கள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் அவர்கள் பணி புரிகின்றார்கள். இந்நிறுவனத்தில் உள்ள எல்லா வேலைகளும் நிரந்தரத் தொழிலாளர்களால் செய்யப்பட்டு வருகின்றன.

**தொழிலாளர்கள் அடையும் பயன்கள் :**

இத்தோட்டக் கழகத்தில் பணி புரியும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவச வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. தவிரவும் இலவச மின்வசதி, தண்ணீர் வசதி, மருத்துவ வசதிகள் முதலியனவும் செய்து கொடுக்கப்படுகிறது. ஒரு குடும்பத்திலுள்ள இரண்டு நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. மற்றும் ஒவ்வொரு நிரந்தரத் தொழிலாளிக்கும் ஆண்டுக்கு ஒரு முறை மழைப் பாதுகாப்பு கம்பளியும் (Field Cumbly), இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வீட்டு உபயோகத்திற்கான கம்பளியும் (Rugs) இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தோட்டத் தொழிலாளர்கள் விதிகளின்படி கிடைக்கும் விடுப்பு வசதிகளும் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பெண் தொழிலாளிக்கும் 12 வாரம் ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, தரப்படுவதுடன் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளுக்கு தலா ரூ. 15 வீதமாகப் பயணப்படி அளிக்கப்படுகிறது. 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பராமரிப்பிற்கென குழந்தைக் காப்பகம் (Creche) அமைத்து நிரந்தரமாக ஒரு பெண் காப்பாளர் அமர்த்தப்பட்டு குழந்தைகள் பேணி காக்கப்பட்டு வருகின்றனர்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர் குடும்பம் பெரிய குடும்பமாகவுள்ளது குறைந்தது 6 நபர்களாவது ஒவ்வொரு குடும்பத்திலும் அடங்கியுள்ளனர். இவர்கள் குடும்ப நலத் திட்டங்களைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பதை ஊக்குவிப்பதற்காக, நிரந்தரப் பெண் தொழிலாளிகள் கருத்தடைக்கான அறுவைச் சிகிச்சை மேற்கொண்டால் பின் வரும் ஊக்கப் பணம் அளிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்
# சென்னை-600 017.

| திட்டங்கள் | திட்டத்தின் மதிப்பீடு | திட்டத்தின் பரப்பளவு | திட்டம் முழுமையாக உருவாகிய பின்பு உப்பு உற்பத்தி | திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு |
|---|---|---|---|---|
| 1. மாரியூர் வாலிநோக்கம் உப்பு கூட்டுத் திட்டங்கள் வாலி நோக்கம் முதுகுளத்தூர் (வட்டம்) இராமநாதபுரம் (மாவட்டம்) | ரூ. 145 லட்சம் | 5566 ஏக்கர் | 2.4 லட்சம் டன் | 1500 நபர்கள் |
| 2. மரவக்காடு வடகாடு உப்புத் திட்டம் பட்டுக் கோட்டை (வட்டம்) தஞ்சாவூர் (மாவட்டம்) | ரூ. 2 கோடி (சுமார்) | 5400 ஏக்கர் | 1.5 லட்சம் டன் | 1000 நபர்கள் |


DIPR/29692/79-11/AAB

இரண்டு குழந்தைகள் உள்ள பெண்ணுக்கு—ரூபாய் 500.

மூன்று குழந்தைகள் உள்ள பெண்ணுக்கு ரூபாய் 350.

நான்கு அல்லது அதற்கு அதிகமான குழந்தைகள் உள்ள பெண்ணுக்கு, ரூபாய் 200.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் (Vasectomy) ஒவ்வொரு ஆண் தொழிலாளர்களுக்கும் ரூ. 100 வீதம் உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

**சேரங்கோடு தேயிலைத் தொழிற்சாலை :**

தயாரிக்கப்பட்ட பெரும் செயல் திட்டத்தில் (Master Plan) சேரம்பாடி, சேரங்கோடு, நெல்லியாளம் ஆகிய மூன்று கீழ் பிரதேசத்திலுள்ள கோட்டங்களிலிருந்து பறிக்கப்படும் தேயிலைக்கென ஒரு தொழிற்சாலையும், குன்னூர், கோத்தகிரி ஆகிய கோட்டங்களுக்கென ஒவ்வொரு தொழிற்சாலையும் கட்ட முன்மொழியப்பட்டுள்ளது. முதல் கட்டமாக கீழ்ப் பிரதேசத்திலுள்ள மூன்று கோட்டங்களில் கிடைக்கும் தேயிலைக் கொளுந்திலிருந்து ஆண்டொன்றுக்கு 1.5 மில்லியன் கிலோ (15 இலட்சம்) தேயிலை தயாரிக்கும் திறனற்ற சி. டி. சி. தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூ. 87 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. மிகப் பெரியதும் நவீன இயந்திரங்களைக் கொண்டதுமான இத் தொழிற்சாலைதான் தமிழ்நாடு அரசு நிறுவனத்தால் கட்டப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளில் மிகப் பெரிய ஒன்றாகும்.



**பங்காளிகள**

ஒரு தொழிற்சாலையில் வேலை செய்வோர் அதன் பங்காளிகளாக இருந்து செயல்பட வேண்டுமேயல்லாமல் கூலிக்காரர்களாக இருந்து குறைபட்டுக் கொண்டே இருக்கக்கூடாது!

—தந்தை பெரியார்

**குன்னூர் தொழிற்சாலை :**

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பி. ஓ. பி. தேயிலை விலையைக் கணக்கிட்டுப் பார்த்ததில் பல வகையான க்ளோனில் வரும் தேயிலையானது சாதாரணமான பி. ஓ. பி. தேயிலையைக் காட்டிலும் ஒரு ரூபாயாவது அதிகம் விலை நிச்சயமாகக் கிடைக்கும். க்ளோன் முறையில் உற்பத்தியாகும் தேயிலைச் செடியிலிருந்து கிடைக்கும் கொழுந்துகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டு குன்னூரில் ஆண்டு ஒன்றுக்கு 0.75 மில்லியன் கிலோ உற்பத்தித் திறனுள்ள (ஆர்தோடக்ஸ்) தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது.

**மிளகு உற்பத்தி :**

இக்கழகத்தின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்தோடும், அந்நியச் செலாவணியை ஈட்டுவதையும் குறிக்கோளாகக் கொண்டு தேயிலைச் செடிகளின் இடையிடையே மிளகைப் பயிரிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைத் தொடங்கும் பொருட்டு நெல்லியாளம் தேயிலை வளர்ப்புக் கோட்டத்தில் தேயிலைச் செடிகளின் இடையில் 60 மிளகு நாற்றுகளும், சேரங்கோடு 1971 தேயிலை வளர்ப்பு கோட்டத்தில் 90 மிளகு நாற்றுகளும், சேரம்பாடி தேயிலை வளர்ப்புக் கோட்டத்தில் 150 மிளகு நாற்றுகளும் பயிரிடப்பட்டுள்ளன.

**தேயிலை உற்பத்தியை அதிகரித்தல் :**

சமீப காலத்தில் இலங்கையில் நடைபெற்ற கலவரத்தின் காரணமாக அதிகமான இலங்கை வாழ் இந்தியர்கள், ஏற்கெனவே உள்ள மறுவாழ்வு வளர்ச்சித் திட்டங்களிலும், புதியதாகத் திட்டங்கள் எங்கெங்கு வகுக்க முடியுமோ அதற்கேற்ப வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பெருக்குவதெனத் தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்துள்ளது. அதன்படி இக் குறிக்கோளைக் கொண்டு கூடலூர் வட்டத்தில் 600 எக்டர் நிலப்பரப்பில் 2 புதுக் கோட்டங்கள் அமைத்து 389. 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேயிலை பயிரிடும் வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் ஏழு ஆண்டுக் காலத்தில் சுமார் 750 குடும்பங்களுக்கு அல்லது 1500 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வழங்க தன்னுடைய தீவிரப் பணியை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது.



**ஆர்ப்பாட்டக்காரர்கள்**

ஆர்ப்பரித்துக்கிடப்பவன் ஒரு நாள் அழுதுதான் தீர வேண்டும். மக்களைக் கசக்கிப் பிழிபவன் ஒருநாள் கண் கலங்கித்தான் நிற்க வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

1979-80, 1980-81 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 300 எக்டர் நிலப்பரப்பில் தேயிலை பயிர் செய்யத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2500 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடும் திட்டமும் தீட்டப்பட்டுள்ளது. இதன்படி மேலும் 1250 இலங்கை வாழ் இந்திய குடும்பங்களுக்கு வேலை வழங்க வாய்ப்பு ஏற்படும்.

**சிறு விவசாயிகளுக்கு நாற்றுகள் வழங்குதல் :**

சிறு விவசாயிகளுக்கு நாற்றுகள் வழங்கும் திட்டத்தை மேலும் அமல் படுத்தும் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில் 300 ஏக்கர் நிலப் பரப்பில் தேயிலை நாற்றங்கால் உருவாக்கி இதன் மூலமாக சிறு விவசாயிகளுக்கு ஒரு நாற்று 65 காசு வீதம் குறைந்த விலையில் நில வளர்ச்சி வங்கி மூலமாக வழங்கி சிறு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். 1975-76ல் உற்பத்தி செய்த 20 இலட்சம் செடியின் கழியினால் உற்பத்தியாகும். நாற்றுகளில் (V. P. Plants) 1976-77-ல் சுமார் 9.30 இலட்சம் நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 1978-ஆம் ஆண்டில் 9.35 இலட்சம் நாற்றுகள் சிறு விவசாயிகளுக்கும் 2.97 இலட்சம் நாற்றுகள் பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன.

அதுவுமல்லாமல் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையில் அங்கம் வகிக்கும் சிறு விவசாயிகளுக்கும் புத்தூக்கமளிப்பதற்காகவும் இடையிடையே உள்ள காலி இடங்களைத் தப்பு நாற்றுகள் நட்டு நிரப்புவதற்காகவும் 2.10 இலட்சம் வி. பி. க்ளோன்ஸ் 1978-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.



பால் கொள்முதல் மற்றும் பால் விற்பனையில் தமிழ்நாடு பால்வள நிறுவனம் அடைந்துள்ள சாதனை விவரம் வருமாறு:

| ஆண்டு | பெறப்பட்ட பாலின் மொத்த அளவு | விநியோகிக்கப் பட்ட பாலின் மொத்த அளவு |
|---|---|---|
| | (இலட்சம் லிட்டரில்) | |
| 1976—77 | 610.38 | 849.86 |
| 1977—78 | 740.39 | 988.85 |
| 1978—79 (முன் மதிப்பீடு) | 760.00 | 1050.00 |
| 1979—80 (முன் மதிப்பீடு) | 825.00 | 1113.25 |

### தீவன உற்பத்தி ஆலை

மாதவரம் பால் பண்ணையில் மணிக்கு நான்கு முதல் ஐந்து டன் வரை உற்பத்தித் திறனுள்ள ஒரு கால் நடைத் தீவன உற்பத்தி ஆலை தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாலையின் உற்பத்தி சிறிது சிறிதாக அதிகப்படுத்தப் பட்டு தற்போது மாதமொன்றுக்குச் சராசரி 1200 டன் விதம் தீவனம் உற்பத்தி செய்யப் படுகின்றது.

ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள, கால்நடை தீவன உற்பத்தி ஆலை, தீவன உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிப்பதற்காகக் குத்தகையில் எடுக்கப்பட்டுள்ளது. இந்த இரு ஆலைகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடைத் தீவனம் விவசாயிகளுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையிலுள்ள கால்நடைப் பண்ணைகளுக்கும் விற்கப்படுகின்றது.

### வளர்ச்சிக்கழக நிதியுதவி

பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் கீழ் இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தால், இந்நிறுவனத்திற்கு நிதி உதவி செய்யப் பட்டு வருகிறது.

இவ்வாறு அளிக்கப்படும் நிதி உதவி ஜூன் 1980 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மலிவான விலையில் வழங்கப்படும் ஆடை நீக்கிய பால் பொடி (Skim Milk Powder) மற்றும் வெண்ணெய் கொழுப்பின் அளவு நவம்பர் 1977லிருந்து வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக அதிக விலையுள்ள வணிக ஆடை நீக்கிய பால் பொடி (Commercial Skim Milk Powder) வாங்கி தரப்படுத்தப்பட்ட பாலுக்காக உபயோகிக்க வேண்டியுள்ளது.

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சில வளர்ச்சித் திட்டங்களுக்கென, பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் கீழ் 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் நிதி உதவி அளிக்கப்படுகின்றது. இந்த உதவி, முதலில் 887 இலட்சம் என ஒதுக்கீடு செய்யப் பட்டு, பின்னர் 1082 லட்சம் எனவும், மாற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீண்டும் இதனை 1683 இலட்சம் என மாற்று ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிதி உதவியின் மூலம் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறிப்பிடத் தக்கதாகும்.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படவிருக்கும் நிதி ஒதுக்கீடு | 1,683 |
| இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் இதுவரை (மார்ச் - 79) கொடுத்துள்ள நிதி | 852.83 |
| தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினால் உபயோகப்படுத்தப் பட்ட தொகை (பிப்ரவரி 79) | 803.21 |

இதுவரை வழங்கப்படாத தொகை மற்றும் உபயோகப்படுத்தப்படாத மீதித் தொகையான ரூபாய் 879.79 இலட்சத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் கைவசமுள்ளன.

இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் ரூபாய் 330 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தி ஒன்றியத்தின் மூலமாகப் பால் சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder Balancing dairy)யும், கால் நடைத் தீவன ஆலையும் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளது. அதற்கென ரூபாய் 201.76 இலட்சம் இதுவரை (மார்ச்-79) இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. இந்தத் தொகை ஈரோடு மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்குத் திட்ட 'வளர்ச்சிக்காக அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக்கழகம் ரூபாய் 136 இலட்சம் செலவில் குளிர் சாதன நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும், பால் சேகரித்துச் செல்லும் வண்டிகளை வாங்குவதற்கும் ஒப்புக்கொண்டுள்ளது.

மேலும் அது, மதுரை பால் பண்ணை மற்றும் பால் பொடி ஆலை அபிவிருத்தி செய்வதற்கும் நிதி உதவி அளிக்க ஒப்புதல் தந்துள்ளது. பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் கீழ் ரூபாய் 305 இலட்சத்தில் உற்பத்தி சமப்



படுத்தும் பால் பண்ணை ஒன்றினை சேலத்தில் துவக்க முடிவு செய்யப்பட்டு அதற்கென ரூபாய் ஐம்பது இலட்சம் இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப் பட்டுள்ளது.

இதற்காக இதுவரை (மார்ச்-79) ரூபாய் 51.10 இலட்சம் சேலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

### பால் பெருக்குத் திட்டம்

முதலாவது பால் பெருக்குத் திட்டத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதும் ஒரு இலட்சம் மக்கள் தொகையுள்ள எல்லா நகரங்களிலும் பால் விநியோகம் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மூன்று அடுக்குகளாக அமைக்கப்பட்ட ஆரம்ப உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இத்திட்டத்தின் மூலம் கிராமங்களில் நிறுவப்படும். கிராம அளவில் ஆரம்பப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் மற்றும் சங்கங்களின் கூட்டமைப்புகளும் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் நம் மாநிலத்திற்குத் தேவையான உரிய பங்கினைப் பெற தக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன், இத்திட்டத்தினைச் செயல்படுத்த அமைப்பு ரீதியாகச் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்தும் தமிழ்நாடு பால்வள நிறுவனம் ஆய்ந்து வருகின்றது. பால் பண்ணைத் துறையுடன் இணைந்து மேலே குறிப்பிட்ட முறையில் ''ஆனந்த்'' பாணியில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் ஆகிய அமைக்கும் பொறுப்பினையும் தமிழ்நாடு பால் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் திறமையுடன் செயல்படும் வரை தமிழ்நாட்டில் பால் விநியோகிக்கும் பொறுப்பினைத் தமிழ்நாடு பால்வள நிறுவனமே மேற்கொள்ளும். இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் தமிழ்நாட்டின் செயற்படுத்தப்பட வேண்டியதற்கான செலவு ரூபாய் நாற்பது கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக 1,698 பால் உற்பத்தியாளர் சங்கங்கள், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் செங்கல்பட்டு, தென்ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, கோவை, மதுரை மற்றும் நீலகிரி ஆகிய எட்டு மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன.

இந்தச் சங்கங்களின் மூலம் 1,48,949 விவசாயிகள் பயன் பெறுகின்றனர். ஏழு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் சென்னை, செங்கல்பட்டு, ஈரோடு, கோவை, சேலம், தருமபுரி, நீலகிரி மற்றும் மதுரை மாநகர்களில் அமைக்கப்பட்டுள்ளன.

### சிறப்புத் திட்டங்கள் :

மலைப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் ஐந்து ஆண்டுக் கால அளவில் நீலகிரி மாவட்



டத்தில் ரூபாய் 84 இலட்சம் செலவில் பத்தாயிரம் விவசாயிகள் பயன் பெறும் வகையில் பால் பண்ணை வளர்ச்சிக்கு வழி கோலுகிறது. இதன் மூலம் தற்போது நாளொன்றுக்குக் கிடைக்கும் 15 ஆயிரம் லிட்டர் பால் 40 ஆயிரம் லிட்டராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தால் பயனடைவதற்காக நூறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதும், பால் குளிர்சாதன நிலையத்தை அதிகப்படுத்துவதும் கூட்டுறவுச் சங்கத்தாரின் கால்நடைகளைப் பராமரிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் கோத்தகிரியில் பால் குளிர் பதன நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மற்றொன்றைக் கூடலூரில் விரைவில் அமைக்க முடிவு செய்யப்பட்டு அதற்கான ஆயத்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 80 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவை மூலம், நாளொன்றுக்கு 27 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. பத்து நடமாடும் கால்நடை சிகிச்சை வண்டிகள் பத்தும் 25 கால்நடை மருத்துவப் பிரிவுகளும் தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 109,77 இலட்சம் ரூபாய் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டு அதில் ரூபாய் 73.5 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

### கால்நடைக் காப்பு - கன்று வளர்ப்பு :

25 ஆயிரம் உழவர்கள் அரசு மானியம் மற்றும் வங்கிக் கடன் மூலம், கலப்பினப் பசுக்கள் பெற்று, கன்றுகளைப் பராமரிக்க இத்திட்டம் வழிவகுக்கிறது.

சிறு உழவர்கள்-சொற்ப உழவர்கள் ஆகியோர்களுக்கு 50 சதவிகிதம் எனவும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு 66.2/3 சதவிகிதம் எனவும் அரசு மான்யம் வழங்கும். வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோவை மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இச்சிறப்புத் திட்டத்தை ஐந்தாண்டுகளில் செயல்படுத்த, மத்திய அரசு ரூபாய்

237.97 இலட்சம் ஒதுக்கீடு செய்ய இணங்கியுள்ளது.

1977-78ல் 4312 கன்றுகளும், 1978-79ல் 5664 கன்றுகளும், இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, இதற்கென ரூபாய் 90.42 இலட்சம் மானியமாக இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

**பாதிக்கும் பகுதிக்கான திட்டம் :**

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பால் பண்ணையை ஏற்படுத்துவதற்காக வகுத்துள்ள இத்திட்டத்தில் தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் பயன் பெறும.

பால் பண்ணை வளர்ச்சியில் தருமபுரி மாவட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. இதற்கென இம் மாவட்டத்திற்கு, 1977-78ல் ரூபாய் 16.27 இலட்சமும், 1978-79ல் ரூபாய் 32.87 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருட்டிணகிரியில் பால்பொடி தயாரிக்கும் ஆலை ஒன்றினை ரூபாய் 175 இலட்சம் செலவில் அமைக்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் இத்திட்டம் 1976ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரமாவது:—

| 1976—77 | 1977—78 | 1978—79 |
|---|---|---|
| (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1.89 | 1.88 | 5.925 |

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்திற்கென தருமபுரி மாவட்டம் இந்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஐம்பது கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதும், குளிர்சாதன வசதிகள், உறை விந்து தொழில் நுட்பக் கூட வசதிகள் அமைக்கவும், ரூபாய் 48.925 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 250 உறை விந்து தொழில் நுட்பக் கூடங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டு அதில் 75 கூடங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

**செயல் திட்டங்கள் :**

பால் பெருக்குத்திட்டம் முதலாவதன் கீழ் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வந்த ஆடை நீக்கிய பால்பொடி மற்றும் வெண்ணெய்க் கொழுப்பின் அளவு, நவம்பர் 1977 லிருந்து வெகுவாகக் குறைக்கப்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு பால்வள நிறுவனம் மேற்கூறியவைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதனால் நிறுவனத்தின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப் பெற்று, பாலின் விற்பனை விலையை நிலை நிறுத்த இயலாததொரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

சென்னை நகரில் நாளொன்றுக்கு 2.5 இலட்சம் லிட்டர் பால் விற்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் விற்பனைக்கு இணையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பால் கொள்முதல் தன்னிறைவு காண 1979-80ம் ஆண்டு முடிவிற்குள் 1,700 ஆரம்ப கிராம. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



**சிறப்புக் கால்கடை வளர்ச்சித் திட்டம் :**

கோழி உற்பத்தி, கோழி இளவளர்ச்சித் திட்டம், 1976-77ல் செயல்படத் துவங்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், நிலமற்ற விவசாயிகள், கோழிப் பண்ணை அமைத்துக் கணிசமான அளவில் வருமானத்தை அதிகப்படுத்தலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு அரசால், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், மதுரை ஆகிய நான்கு மாவட்டத்திற்கு 1,500 கோழிப் பண்ணைகள் வீதம், இந்திய அரசின் நிதி உதவியுடன் 6,000 குடும்பங்களுக்கு உதவ தீட்டப்பட்டதாகும் இத்திட்டம்.

ஒவ்வொரு கோழிப் பண்ணையும், நூறு கோழிகளைக் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு பண்ணைக்கும் ரூ. 5,330 முதலீடு செய்யப்படுகிறது. இதில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியமாகவும், நடுத்தர விவசாயிகளுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் அதாவது சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,330 மானியமாகவும், நடுத்தர மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு ரூ. 1,776 மானியமாகவும் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள முதலீட்டுப் பணம், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனாகப்பெற ஏற்பாடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு, முதலாண்டு முடிவில், ஒவ்வொருவருக்கும், வங்கியில் பெற்ற கடனுக்குத் திருப்பித் தந்தது போக நிகர இலாபம் ஓராண்டிற்குச் சராசரி ரூ. 958/- கிடைக்கும்.

இத்திட்டம் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் கடனுதவியுடனும், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் கூட்டு முயற்சி மூலமும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை விரைவாகச் செயலாக்கி, முழுப் பயனைப் பெற, விவசாயப் பொருளுதவிக் கழகத்தின் வங்கிகளின் திட்டம் உதவுகிறது.



மேலும், முதலீடு செய்யும், வங்கிகளில் சில, விவசாய மறுநிதி அபிவிருத்திக் கழகத்திலிருந்து மறுநிதிக் கடன் பெற்று குறைந்த வட்டி விதத்தில் கடன் வழங்குகிறது.

இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், பின்வரும் உதவிகளை அளிக்கிறது—

அங்கீகரிக்கப்பட்ட கோழிப் பண்ணைகளுக்குத் தரமான கோழிகள் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தாரால் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் கோழிகளுக்குத் தேவையான தீவனம், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தாரால் வழங்கப்படுகிறது. கோழிகளின் நலத்திற்குக்கோழி வளர்ப்பு நிறுவனம் பொறுப்பேற்றுப் பாதுகாக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்டு, பண்ணைகளில் கழிக்கப்பட்ட கோழிகளைப் பெறுதலும் மற்றும், புதிய கோழிக் குஞ்சுகள் விநியோகம் செய்தல் முதலிய பணிகளைத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் மேற்கொள்கிறது.

இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும், கோழிகளின் மூலமாகக் கிடைக்கும் முட்டைகளைச் சேகரிப்பதும், அவற்றை நியாயமான முறையில் விற்பனை செய்வதும் இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

மேலும், கோழி வீடுகள் கட்டுதல், உபகரணங்கள் வாங்குதல், முதலிய பணிகள் செவ்வனே செய்ய இந்நிறுவனம் உதவுகிறது.

கோழிகளின் நோய், இறப்பு, மற்றும் இழப்பு முதலியவற்றைக் கருத்திற் கொண்டு இத்திட்டத்திற்குப் பெரும்பாலான வங்கிகள் கடன் அளிக்க முன் வராமல் இருந்தன. ஆகவே, இத்திட்டம், சிறப்பாகச் செயல்பட விரும்பி, நாட்டிலேயே முதன் முதலாகக் கோழி பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாட்டின் கோழிப் பண்ணைகளுக்குக் கொண்டு வரப்பட்டுச் செயலாக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் செங்கற்பட்டு, வடார்க்காடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அகில இந்திய நெருப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பு நிறுவனம் கோழிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கத் திட்டம் கொண்டு வந்து செயலிலும் இறங்கியுள்ளது.

கோழிகளுக்கு அதன் வயதுக்கேற்றபடி, மதிப்பீடு செய்யப்பட்டு நோய்களின் மூலமாக இறத்தல். எதிர்பாராத விபத்து ஏற்படுதல், வேலை நிறுத்தம், இயற்கை விபத்துகள் ஆகிய காரணங்களுக்காக, தகுந்த பாதுகாப்பு நிதி வழங்கப்படுகிறது.

கோழி பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் முதல், 72 வாரக் குஞ்சுகள் வரையிலும், எட்டு வாரக் குஞ்சுகள் முதல் 72 வாரக் குஞ்சுகள் வரையிலும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. பாதுகாப்புத் திட்டம் அமலாக்கப்பட்டதன் மூலமாக வங்கிகளும், விவசாயிகளும் திருப்தி அடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் வரும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்




களுக்குப் பொருளாதார இழப்பு ஏற்படாமலிருக்கும் பொருட்டு, உயர்சாதிக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. மேலும், கோழித் தீவனம் மலிவு விலையில் வழங்கப்படுகிறது. மேலும், கோழிப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் கோழிக் குஞ்சுகளை வளர்க்க உண்டாகும் மின்சாரச் செலவும் ஐம்பது சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் சிறப்பான பயனை யாவரும் எய்த, இந்நிறுவனம் விவசாயிகளுக்குக் கோழிக் குஞ்சுகள் வளர்த்தல், பராமரித்தல், தீவனமிடல், நோய்களிடமிருந்து பாதுகாத்தல் ஆகிய பணிகளைச் செய்ய பயிற்சி அளிக்கிறது. அவ்வப்பொழுது ஏற்படும் குறைகளையும் நிவர்த்தி செய்து நோய்ப்பாதுகாப்பு முறையும், செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலமாக 327 சிறு விவசாயிகளும், 955 நடுத்தர விவசாயிகளும், 288 நிலமற்ற விவசாயிகளும் இதுவரை கோழிப் பண்ணை அமைக்கக் கடன் பெற்றுள்ளனர். இதுவரை பத்து அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், இரண்டு கூட்டுறவு வங்கிகளும், கடனுதவி வழங்கியுள்ளது.

விவசாயிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் இதுவரை 22.98 இலட்சம் மானியமாக மத்திய அரசு வழங்கியுள்ளது.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் :**

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அமல்படுத்தப்படுகிறது. இருப்பினும், கோழிக் குஞ்சுகள் விநியோகித்தல், தீவனம் விநியோகித்தல், கோழி முட்டைகள் சேகரித்தல், முட்டை விற்பனை ஆகிய பணிகளை 'டாப்கோ' நிறுவனம் மேற்கொண்டு எல்லா உதவிகளையும் அளித்து வருகிறது.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி





மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




# குடிசை மாற்று வாரியம் குவிக்கும் புகழ்!

குடிசைகள் கோபுரங்களாக உயர்ந்திட அரசு நடவடிக்கை எடுத்தது. - இன்று குடிசைப்பகுதிகளெல்லாம் அழகிய அடுக்கு மாடி வீடுகளாய்க் காட்சியளிக்கின்றன.



தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம் 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அமைக்கப்பட்டது. அதனிடம் சென்னை நகரில் உள்ள குடிசைப் பகுதிகளை அகற்றும் அல்லது மாற்றி அமைக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது.

**சமூகப் பொருளாதார ஆய்வு :**

வாரியம் அமைக்கப்பட்ட உடனே குடிசை வாழ் மக்களின் பிரச்சினைகளின் அளவை மதிப்பிடும் பொருட்டு ஒரு சமூகப் பொருளாதார ஆய்வு நடத்தப்பட்டது.

சென்னை நகரில் 1,202 குடிசைப் பகுதிகள் இருப்பதும், அவைகளில் மொத்தம் 7,37,531 மக்கள் கொண்ட 1,63,804 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றவென்றும் இவ்வாய்வுக் கணக்கெடுத்ததில் தெரியவந்தது.

குடிசை மாற்று வாரியம் அமைக்கும் முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 7384 குடியிருப்புக்களைக் கட்டி முடித்திருந்தது. 1970 முதல் 1977 வரை அடங்கியுள்ள காலத்தில் குடிசை மாற்று வாரியம் சுமார் 20,939 வீடுகள் கட்டி, 68 குடிசைப் பகுதிகளிலுள்ள மக்களைப் புதுக் குடியிருப்புகளில் அமர்த்தியது.

**விரைவான நடவடிக்கை:**

1977-78, 78-79 ஆண்டுகளில் ரூ. 1,013 இலட்சம் செலவில் 11,996 வீடுகள் கட்டிட திட்டம் தீட்டப்பட்டு, ரூ. 340 இலட்சம் மதிப்பில் 4,416 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. மீதியுள்ள வீடுகள் இவ்வாண்டு முடிவடையும். மேலும் 21 குடிசைப்பகுதிகளில் ரூ. 555.83 இலட்சம் செலவில் 6,320 குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டங்களும் உருவாகியுள்ளன.

வீடுகட்டும் திட்டங்களன்றி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், உலக வங்கியின் நிதி உதவியுடன் குடிசைப் பகுதி ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தினையும் இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்டு உள்ளது. சுமார் 6.06 கோடி செலவில் 23,000 குடும்பங்களுக்கு அவர்கள் தற்போது வசிக்கும் இடத்திலேயே சுற்றுப்புற மேம்பாடு செய்து தருவதும், சாலைகள், குளியல் அறைகள், குடி தண்ணீர் வழங்குதல், தெரு விளக்குகள், கழிவு நீர்க் கால்வாய்கள் அமைத்தல், பாலர் பள்ளிகள், குடிசைத் தொழில் பயிற்சி நிலையம் கட்டுதல், குடிசைப்பகுதிகளில் நெருக்கடி காரணமாக மாற்றப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 7,500 வீட்டு மனைகள் தயார் செய்வது-இவைகளெல்லாம் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டப் பகுதிகளிலுள்ள குடிசைகளில் தற்போது வசிப்பவர்களுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களைப் பட்டா செய்து கொடுப்பது இத்திட்டத்தின் சிறப்பான அம்சமாகும்.

**சுழல் நிதி :**

1977-78-ஆம் ஆண்டில் 4137 குடும்பங்கள் பயன் அடையும் வண்ணம் 20 குடிசைப்பகுதிகள் மேம்படுத்தப்பட்டன. 1978-1979 ஆம் ஆண்டு 8 குடிசைப் பகுதிகளில் 15,349 குடும்பங்கள் பயன் அடையும் வகையில் வேலை தொடங்கப்பட்டுள்ளது.

1979-1980ஆம் ஆண்டில் மேலும் 8 குடிசைப் பகுதிகளில் 2,320 குடும்பங்கள் பயன்பெறுமாறு வேலை எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. இத்திட்டத்திற்காக 1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய ரூ. 130 இலட்சம் செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் ரூ. 150 இலட்சம் செலவிடப்படும்.

**சமுதாய வளர்ச்சிக் குழு :**

அனுபவமிக்க சமூக நலப்பணியாளர்களைக் கொண்ட ஒரு சமுதாய வளர்ச்சிக்குழு அமைக்க குடிசை மாற்று வாரியம் தீர்மானித்துள்ளது. விரைவிலே இக்குழு செயல்படும். இச்சமூக நலப் பணியில் சென்னை மாநகராட்சி, மின்சார வாரியம், சென்னை நகர்ப்புறக் குடி நீர் வடிகால்வாரியம், பொதுப்பணித்துறை (பாசனம்) சமூகநலத்துறை மற்றும் சமூக நல நிறுவனங்கள் ஒத்துழைப்புக் கோரப்படும்.

மேலே குறிப்பிட்ட திட்டங்களில் அடங்காத குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்குதல், குளியல் அறை, கழிவறைகள் கட்டுதல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற வசதிகள் விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செய்து தரப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 72.43 இலட்சம் செலவில்125 குடிசைப்பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள் பயன் அடைந்துள்ளனர். 1979-80ஆம ஆண்டு மேலும் ரூ. 100 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வாழ்க்கைத்தரம் உயர....**

'மக்கள் நல்வாழ்வுப் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கி ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிகளிலும் முதியோர் கல்வி, குழந்தைகள் காப்பகம், சத்துஉணவுத் திட்டம், சேமிப்புத் திட்டம், மருத்துவ வசதி முதலியவற்றை அதன் சமூக நல உதவியாளர்களைக் கொண்டு செயல்படுத்தி வருகின்றது. அதற்காகக் குடிசை மாற்று வாரிய நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்ச ரூபாய் இப்பேரவைக்கு மானியம் வழங்கப்படுகிறது. செய்தித்துறை மூலம் படக்காட்சிகள் குடிசை வாழ் மக்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**காவலர் பிரிவுகள்**

சென்னையில், அரசு மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான காலியாக உள்ள இடத்தில் புதிதாக அனுமதியின்றிப் போடப்படும்திடீர்க் குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்த, இரண்டு காவலர் பிரிவுகள் வட சென்னைக்கு ஒன்றும், தென் சென்னைக்கு ஒன்றுமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வாடகை வசூலில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பான மேம்பாடு உண்டாகியுள்ளது. ஆண்டிற்கு ரூ. 31 இலட்சத்திலிருந்த வருவாய் தற்போது 44.43 இலட்சமாக அதிகரித்துள்ளது.

இதே வேகத்தோடு வாரியப் பணிகள் தொடர்ந்து நடைபெறின், சென்னை நகரில் உள்ள அனைத்துக் குடிசைப் பகுதிகளும் மேம்பாடு அடையப் பெற்றுக் குடிசைப் பகுதி மக்கள் மனநிறைவுடனும் சிறந்த சுகாதார வசதிகளுடனும் வாழ ஏதுவாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!



## தேசிய சேமிப்பில் தமிழ்நாடு சாதனை!

1978-79-ஆம் ஆண்டில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி அடங்கிய தமிழ்நாடு வட்டாரம் தேசிய சேமிப்பு வசூலில் முன் எப்போதும் கண்டிராத அளவில் சாதனை நிகழ்த்தியுள்ளது.

இந்த ஆண்டில் மொத்தச் சேமிப்பு வசூல் 144.6 கோடி ரூபாயாகவும், நிகர வசூல் 50.19 கோடி ரூபாயாகவும், இருந்தது. 1977–78-ஆம் ஆண்டில் மொத்த வசூல் 129.5 கோடி ரூபாயாகவும், நிகர வசூல் 37.2 கோடி ரூபாயாகவும் இருந்தது.

தமிழ்நாடு வட்டாரம் தன் வளர்ச்சி இலக்கைப் பல மடங்குகள் விஞ்சியுள்ளது. ஏஜென்சிகள் மூலமாக வசூல், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1.1 கோடி ரூபாய்க்கு எதிராக 4.49 கோடி ரூபாயாக உயர்ந்தது. சம்பளப் பட்டியல் சேமிப்பு, நிர்ணயிக்கப்பட்ட 9.50 கோடி ரூபாய்க்கு எதிராக 10.05 கோடி ரூபாயாக உயர்ந்தது.

மாவட்டங்களுக்குள், சென்னை நகரம் 30 கோடி ரூபாய், கோயம்புத்தூர் 4 கோடி ரூபாய், சேலம் 2.86 கோடி ரூபாய், திருநெல்வேலி 2.53 கோடி ரூபாய் சேமிப்புக்காக வழங்கியுள்ளன.





ஒரு பொதுக் கூட்டந்தில் பார்வையாளராக.....





"வணக்கம்"

காமராஜர் கைப்பட எழுதிய
சாத்தூர் தாலுகா தேசிய மாநாடு
வரவு செலவு கணக்கு விவரம்
-1923



## தமிழக முன்னேற்றத்திற்கு தொண்டு செய்த தமிழர்!



**ஆர். துரைராஜ்,**
ஓய்வு பெற்ற உதவி காவல் ஆணையர்.



கடற்கரையில் தலைவர் காமராஜுக்கு ஒரு சிலை வைத்துள்ளனர்; கறுப்பு நிறத்தில், எளிய உருவத்தில், ஒரு அரைக்கைச் சட்டை, நான்கு முழ வேட்டியுடன் ஒரு தகப்பன், தன் பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வதுபோல், ஒரு கையில் ஒரு பையனையும் மற்றொரு கையில் ஒரு சிறு பெண்ணையும் ஆர்வத்துடன் அழைத்துப் போவதுபோல் சிலை அமைத்திருக்கிறார்கள்!

சிலை திறந்த நாள் அன்று நானும் அக் கூட்டத்தில் நின்றிருந்தேன், சிலையில் உள்ள பையனின் உருவத்தைப் பார்த்ததும் என் இதய அரங்கிலே ஒரு காட்சிதான் நினைவுக்கு வந்தது. இருபது வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம்! நான் அப்போது பூவிருந்தவல்லி வட்டாரத்துக்குப் போலீஸ் அதிகாரியாய் இருந்த சமயம். சிலையில் நிற்பவர்தான் அன்றையத் தமிழக முதல்வராக இருந்தார். ஒரு பள்ளி விழாவில் கலந்து கொண்டு சென்னைக்குப் புறப்படப் போகிறார். சாயங் கால வேளை. காரில் ஏறும்பொழுது சில பிரமுகர்கள் அவரை அணுகி, பக்கத்தில் ஒரு புதிய பள்ளியைக் கட்டி இருப்பதாகவும், அதைப் பார்வையிட்டுப் போகவேண்டுமென்றும் வேண்டிக் கொள்ள, பள்ளி என்றதும் உடனே ஒத்துக்கொண்டு, பள்ளி இருக்கும் சந்திற்கு நடந்தே சென்றார். அவருக்கு வேண்டிய போலீஸ் பந்தோபஸ்தை ஏற்பாடு செய்துவிட்டு அவருடன் சென்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை உயர் அதிகாரி, மற்ற அதிகாரிகள் அவரைப் பின்தொடர்ந்தனர். பள்ளியைப் பார்வையிட்டு அவர் திரும்பி வருகையில், ஒரு ஏழைச் சிறுவன், கிழிந்த சட்டையையும் அரை நிஜாரையும் அணிந்து கொண்டு ஒரு சந்திலிருந்து முதல்வரைப் பார்க்கும் ஆர்வத்துடன் ஓடிவர, அங்கே நின்று கொண்டிருந்த வயதான போலீஸ்காரர் அந்தப் பையனைத் தடுப்பதற்கு லத்தியை ஓங்க, பையன் மிரண்டு தெருவில் வந்து விழுந்தான். விழுந்த வேகத்தில் அவன் கால் முட்டிகளில் லேசான காயம் ஏற்பட்டு, ரத்தம் கசிய ஆரம்பித்தது. அருகில் வந்துவிட்ட முதல்வர் இதைக் கவனித்து விட்டார். அவருடன் வந்த நான் அதிர்ச்சியுற்றேன். ஓடிப்போய் பையனைத் தூக்கி நிறுத்தி, அவன் காயங்களில் வழிந்த ரத்தத்தைத்துடைத்து, அவனைச் சமாதானம் செய்ய, பையன் வலியையும் மறந்து சிரித்தான். முதல்வர் அவனைத் தட்டிக் கொடுத்து, 'படிக்கிறாயா?' என்று கேட்க, அவன் 'ஆம்' என்று தலையாட்டினான். பிறகு என் தோளில் கையை வைத்து ''நீங்கள் செய்தது எனக்கு ரொம்பவும் சந்தோஷம்' என்று பாராட்டினார்.

அன்று கண்ட அந்தச் சிறுவனையே நான் இந்தச் சிலையில் கண்டமாதிரி ஒரு பிரமிப்பு எனக்கு! அந்தச் சிறுவன் இப்பொழுது வாலிபப் பருவமடைந்து, நன்கு படித்து ஒரு டாக்டராகவோ அல்லது இன்ஜினியராகவோ எங்கோ இருக்க லாம்! அவனும் அந்தச் சிலைத் திறப்பு விழாவுக்கு வந்து இருப்பான் என்றுகூட நினைத்துக் கொண்டேன்! கடற்கரையில் அந்தத் தலைவனின் சிலை நிற்கிறது! ஆயிரமாயிரம் ஆண்டு களுக்கு, கடற்காற்று வீச, நின்று கொண்டேயிருக்கும். ஆனால் அவர் இன்று நம்மிடையே இல்லை! தமிழக முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட பெருந்தலைவர் அவர். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய 'உள்ளம்'—ஏழை எளியோரைக் கண்டு குமுறிய உயர்ந்த உள்ளம் படைத்த அவர் ஒரு கர்மவீரர். பாரெல்லாம் புகழும் காமராஜரே அவர்!

# அரசின் அறிவிப்புகள்
# ஆக்கப் பணிகள்

## 16-5-79 முதல் 15-6-79 வரை

16—5—79.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெரிஞ் சலக்குடி ஊராட்சியில் ரூ. 25 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி சோமசுந்தரம் திறந்து வைத்தார்.

சென்னை மாநகரில், நகரின் அழகு கெடும் விதத்தில் புதிது புதிதாகக் குடி சைகள் உண்டாவதைத் தவிர்க்கும் வகையில், குடிசை மாற்று வாரியத்திற்கு உதவியாகத் தனிக் காவல் படை ஒன் றைத் தமிழகஅரசு வழங்கியுள்ளது.

மழை-புயலால் சென்னை பட்டினப் பாக்கம் பகுதியில் பாதிக்கப்பட்ட சாலை களைப் பழுதுபார்த்துச் செப்பனிட, சென்னை மாநகராட்சி ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளதாக மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அறிவித்தார்.

17—5—79.

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருத் துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவோ ணம், பாபநாசம், தஞ்சை ஆகிய ஊர் களோடு தொடர்புடைய 37 கிராமங் களில் பேருந்து வழித்தடங்கள் வசதி செய்யப்பட்டு, மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் தலைமையில், மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் சோழன் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளைத் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பனை மரத் தொழில் வளர்ச்சிக்கு ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும். நடப்பாண்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் சிறிய பல திட்டங்களைச் செயல்படுத்துவதற் காக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இச்செலவை மாநில அரசும் மத்திய அரசும் சமமாக ஏற்கும் என அரசு அறிவித்தது.

தீப்பெட்டிகள் தயாரித்தல், எழுதும் சாக்கட்டிகள் தயாரித்தல், கவர்கள் செய்வது போன்ற வேலைவாய்ப்புகளில் 20 ஆயிரம் பெண்களை ஈடுபடுத்த, தக்க நடவடிக்கைகளைச் சமூகநலத் துறை மேற்கொண்டிருப்பதாக மாண்பு மிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி தெரிவித்தார்.

18—5—79.

தமிழ்நாட்டில் குறுகியகால எம். பி. பி. எஸ்., மருத்துவப் பட்டப் படிப்பு முறையை அடுத்த ஆண்டு முதல் துவக்கு வது பற்றி அரசு பரிசீலித்து வருகிற தென மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சௌந்தரராசன் கூறி னார்.

19—5—79.

கடலூரில், இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில், சேரன் போக்குவரத் துக் கழகத்தால் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் திறந்து வைத்தார்.

20—5—79.

தமிழக டான்சி நிறுவனம், இத்தாலிய நிறுவனம் ஒன்றுடன் இணைந்து, மிதி யடிகள் தயாரிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழகத்தில் செயல்படுத்த இருப்பதாக மாண்புமிகு கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு கா. இராசாமுகமது அறி வித்தார்.

தமிழ்நாட்டில் மதுவிலக்கைத்தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக 145 மதுவிலக் குக் காவல் நிலையங்கள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

21—5—79.

மலைச்சாதியினர் மேம்பாட்டை உயர்த் துவதற்காக, ஒவ்வொரு மலைச்சாதி யினர் குடும்பத்திற்கும் தலா 5 ஏக்கர் நிலம் வழங்குவது பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு அரி சன நலத்துறை அமைச்சர் திரு பெ. சௌந்தரபாண்டியன் தெரிவித்தார்.

# குடிசைகள் கோபுரமாகின்றன!

வாய்மையே வெல்லும்

குடிசைவாழ் மக்கள் வாழ்வில் புத்தொளி ஒளிர செயலாற்றி வருகிறது, தமிழக அரசின் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

புரட்சித் தலைவரின் இரண்டாண்டு கால ஆட்சியில் 1,050 லட்ச ரூபாய் செலவில் ஏறத்தாழ 11,000 புதிய வீடுகள் கட்டி குடிசை மக்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன.

ஆயிரக்கணக்கானோர் விரைந்து பயன் பெற உலக வங்கி உதவியோடு, அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களிலும், சூழ்நிலை மேம்பாடு திட்டங்களிலும், 22,000 குடிசைவாழ் குடும்பங்கள் பயன்பெறுகின்றனர்: இதற்கு ஆகிய செலவு ரூபாய் 250 இலட்சங்கள்.

இந்த பகுதிகளில் கல்விக்கூடங்கள் மருத்துவ வசதி, கைத்தொழில் கல்வி மேலும் கேளிக்கை கூடங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. ஆக, குடிசைவாழ் மக்களின் வாழ்க்கையில் அடிப்படை மாற்றங்களைத் தோற்றுவித்து, அவர்களை நாகரீக மரியாதைக்குரிய குடிமக்களாக உருவாக்குகிறது குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

அன்று அண்ணன் கண்ட கனவுகளை நனவாக்க அயராது உழைக்கும் புரட்சித் தலைவர் வகுத்த பாதையில் தொடர்ந்து உழைப்போம என உறுதி கொள்வோம்.

ப. ராமபத்திரன், பி.ஏ,பி.எல்.,
தலைவர்





தமிழ்நாடு குடிசைப்பகுதி
மாற்று வாரியம்
சென்னை - 600 035.

SOBHAGYA-257


22—5—79.

''இந்தியாவிலேயே சர்க்கரைத் தொழிலாளர்களுக்கு தமிழகத்தில்தான் அதிக ஊதியம் தரப்படுகிறது. ஒவ்வொரு சர்க்கரைத் தொழிலாளிக்கும் 1—1—79 முதல் ரூ. 40.80 ஊதிய உயர்வு அளிக்கப்படும்'' என மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் கூறினார்.

23—5—79.

விவசாயிகளுக்குப் பல்வேறு இனங்களில் வழங்கப்பட்ட கடன்களை ரத்து செய்து, சிறு விவசாயிகளுக்கு ரூ. 40 கோடிக்கான சலுகைகளை அரசு அறிவித்தது. அரசு சென்ற ஆண்டு ஏற்கெனவே அறிவித்திருந்த 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பிற சலுகைகள் இதில் சேரா.

27—5—79.

விரைவில் நகரங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் சினிமா தியேட்டர்களில் 'காம்பவுண்டிங் வரி விதிப்புமுறை' அமல்படுத்தப்படும் என மாண்புமிகு முதல்வர் அறிவித்தார்.

29—5—79.

அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களில் கண்பார்வை அற்றவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் தெரிவித்தார்.

1—6—79.

தமிழகத்தில் உள்ள சமூகசேவை நிறுவனங்களுக்குத் தமிழக அரசு தொடர்ந்து எல்லா உதவிகளும் அளிக்கும் என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அறிவித்தார்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 600 குடும்பங்களுக்கு ரூ. 31.5 இலட்சம் செலவில் நெய்வேலியில் குடியிருப்புகளைக் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது.

2—6—79.

'வரும் கல்வியாண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளில் சித்தமருத்துவம் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படும்' என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அறிவித்தார்.

4—6—79.

'தமிழ்நாட்டில் இந்த ஆண்டு 130 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும்' என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் கூறினார்.

அரசு ஊழியர்களின் குறைந்த அளவு மாதாந்தர குடும்ப ஓய்வூதியத் தொகையை ரூ. 50-லிருந்து ரூ. 100 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

5—6—79.

அரசுத்துறை சம்பந்தப்பட்ட அனைத்துக் கோப்புகளும் இனிமேல் தமிழில் தான் எழுதப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட வார்த்தைகளைத் தமிழில் எழுதினால் வேறு பொருள் எழலாம் என்ற ஐயம் ஏற்படுமானால் அந்த வார்த்தைகளை மட்டுமே ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதலாம்.

7—6—79.

மறைந்த முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிபின்



மலேசியாவுக்கு சுற்றுப் பயணம் தொடங்கிய உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு (29.5.79 ல்) நடைபெற்ற வழியனுப்பு விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் கலந்து கொண்டு சுரதாவுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

வாழ்க்கை வரலாற்றைத் தமிழக அரசே வெளியிடும் என்று மாண்புமிகு கிராமக் கைத்தொழில்துறை அமைச்சர் திரு கா. ராஜாமுகமது அறிவித்தார்.

8—6—79.

காவிரி ஆற்றின் குறுக்கே குளித்தலையையும் முசிறியையும் இணைக்கும் வகையில் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட — தமிழ்நாட்டிலேயே மிக நீளமான பாலம் (1,473 மீட்டர்) மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

9—6—79.

திருச்சி தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏழை மக்கள் கறவை மாடுகள், ஆடுகள் வாங்குவதற்காக மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி ரூ. 95 ஆயிரம் கடனுதவி வழங்கினார்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே அடுத்த ஆண்டு முதல் தயாரித்துக் கொடுக்கும் என மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அறிவித்தார்.

12—6—79

அரசு ஊழியர்களின் நான்கு கோரிக்கைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவை வருமாறு: ஆண்டொன்றுக்கு 15 நாள் தற்செயல் விடுப்பு என்பதிலிருந்து 20 நாட்களாக அதிகரிக்கப்படும். கடைநிலை ஊழியர் என்ற பெயர் அடிப்படைப் பணியாளர் என்று மாற்றப்படுகிறது. இளநிலை உதவியாளர் நியமனம் 40 சதவீதம் பதிவுஅறை எழுத்தர் பதவியில் இருந்தும், 60 சதவீதம் தேர்வு ஆணைக் கழகம் மூலமும் தேர்ந்தெடுக்கப்படும். பதிவு அறை எழுத்தர், இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு பெறுவதன் பொருட்டு, வயதை 40 ஆக மீண்டும் குறைத்துவிடுவது.

10—6—79.

தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு ஆகியவை பற்றிக் கவனம் செலுத்துவதற்காக தமிழக அரசில் தனித்துறை அமைக்கப்படும். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அங்கீகாரம் பெற்ற எழுத்தாளர்கள் தமிழ்நாடு முழுவதும் பஸ்சில் பயணம் செய்வதற்குக் கட்டணச் சலுகை வழங்கப்படும். சிறந்த தமிழ் எழுத்தாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் 10 ஆயிரம் ரூபாயை அரசு வழங்கும் என மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அறிவித்தார்.

12—6—79

கதர் கிராமத் தொழில் வாரியப் பொருட்களுக்கு விற்பனை வரி கிடையாது என்று கிராமத் தொழில் அமைச்சர் திரு கா. ராஜாமுகமது அறிவித்தார்.

14—6—79.

பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்களான இலட்சிய வரலாறு, விடுதலைப் போர், திராவிடர் நிலை முதலிய புத்தகங்களுக்கும் அவற்றின் பிரதிகள், மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றுக்கும் 1949-ல் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி அரசு உத்தரவிட்டது.

**தமிழரசு - அடுத்த இதழ்**
**'வேளாண்மைச் சிறப்பிதழாக' மலருகிறது!**


CALL: 377

வலிவான பொலிவான விலைமலிவான

எல்லாவித துணிகளுக்கும் — மக்கள் ராசிக்கடை

**தமிழ்நாடு துணிக்கடை**

M. G. ரோடு, விழுப்புரம்.

* * * * * *

Phone : 244

மகளிர் ராசிக் கடை....

**பூம்புகார் சாரி செண்டர் & பூம்புகார் துணிக் கடை**

* * * * * *

புதிய ஷோ ரூம்

அனைத்து மில் துணிகள் வாங்க

**மஹாராஜா & மகாராணி சாரீஸ்,**

விழுப்புரம் Phone : 557

விரைவில் வருகிருள் **ஃபெமிஞ!**



[illegible] வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 [illegible]




"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும் கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்!"

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"



— பேரறிஞர் அண்ணா

**மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!**



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.








## தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் காட்சிகள்

தர்மபுரி



30-6-79






தோற்றம் : 27.7.1879

மறைவு : 14.12.1959

# டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் நூற்றாண்டு விழா

நாடு வாழ தான் வாழ்ந்தவர்கள், நல்வழி காட்டிகள், பொதுத் தொண்டாற்றிப் புகழ் கொண்டவர்கள், தேசியத் தலைவர்கள், தமிழ்ச் சான்றோர்களுக்கு விழா எடுப்பதன் மூலம் தமிழக அரசு பெருமை கொள்கிறது.

சுயமரியாதைச் சுடர் கொளுத்திய தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழா, கடந்த ஆண்டு செப்டம்பர் திங்கள், ஈரோட்டில் தொடக்கம் செய்யப்பட்டு, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப் பட்டு, வரும் செப்டம்பர் திங்களில், தலை நகராம் சென்னை மாநகரில் நூற்றாண்டு நிறைவு விழா சீரோடும் சிறப்போடும் நடை பெற உள்ளது.

தமிழ் வளர்த்த இன்னொரு பெரியாரின் நூற்றாண்டு பிறந்ததின விழாவும் இவ்வாண்டி லேயே வருவது இரட்டிப்பு மகிழ்ச்சி தருவ தாகும்.

'*பசுமலை பாரதியார்*' என்று பரிவுடன அழைக்கப்படும் தமிழ் வளர்த்த பெரியார் டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதி யாரின் நூறாவது பிறந்த நாள் விழா, 27.7.79 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடைபெற்றது.



# வேளாண்மைத் துறையின் வியத்தகு சாதனைகள்

“சேற்றாரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின்
தோள்கள்?''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அன்றொரு நாள் வினாவெழுப்பினார். அந்தத் தோள்கள் உழவர் பெருமக்களின் தோள்கள்-என்பதை இன்றைய தமிழக அரசு நன்கு உணர்ந்து உள்ளது. அவ்வாறு உணர்ந்துள்ளதனாலேயே கொட்டும் மழை, கொளுத்தும் வெயில், குலை நடுங்க வைக்கும் குளிர், இயற்கையின் சீற்றமான புயல், வெள்ளம், வறட்சி ஆகியவைகளைப் பொருட்படுத்தாமல், காலமெல்லாம் உழைத்து உழைத்து உருக் குலைந்து, ஓடாகி, கூனிக் குறுகிப்போன ஏழை எளிய சிறு உழவர்களை நிமிர்ந்து நடக்கச் செய்யவேண்டும்; வயிறார ஒரு வேளை கஞ்சிகூடக் குடிக்க முடியாமல் ஒட்டிய வயிற்றுடன் உள்ள உழவுத் தொழிலாளர்களின் வயிற்றுக்குச் சோறிட வழி வகை செய்ய வேண்டும்; குழி விழுந்து ஒளியிழந்து போன குறு உழவர்களின் கண்களிலே ஒளி பிறக்கச் செய்ய வேண்டும்; வயலையே பஞ்சணை மெத்தையாகவும், வரப்பையே தலையணையாகவும், வானத்தையே கூரையாகவும் கொண்டு வாழ்ந்து வரும் எண்ணற்ற உழவுத் தொழிலாளிகளின் குறைகளைத் தீர்க்க வேண்டும்; வயிற்றுக்கும், வாய்க்கும் பற்றாத நிலையிலே வாழ்ந்து வரும் எண்ணற்ற புன்செய் நில உழவர்களின் வாழ்வில் வளம் சேர்க்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் இன்றைய தமிழக அரசு பல்வேறு வேளாண்மைத் திட்டங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருவதுடன், உழவர்களின். பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்து வருகிறது.

'வேளாண்மை இந்த நாட்டின் முதுகு எலும்பு' என்பதையும் 'மேழி பிடிக்கும் கை மேதினி ஆளும் கை' என்பதையும் நாங்கள் நன்கு உணர்ந்துள்ளதாலேயே, நீண்ட நெடுங் காலமாகக் கவனிக்கப்படாமல் இருந்து வந்த உழவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற இலட்சியத்துடன் இந்தியாவிலேயே முதன் முதலாக, உயர் மட்டக்குழு ஒன்றை அமைத்துள்ளோம்.

உழவர் பெருமக்களின் கஷ்டங்களைத் தீர்க்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலே தான், வேளாண்மைக்கான மின்சாரக் கட்டணம் யூனிட்டிற்கு 16 பைசா என்றிருந்ததை, சிறு உழவர்களுக்கு 14 பைசாவாகவும் குறைத்து ஆணையிட்டுள்ளோம்.

உழவர்களின் கடன் சுமையைக் குறைக்க வேண்டும் என்ற குறிக்கோளிலேதான், உழவர்களுக்குக் கூட்டுறவு மூலம் வழங்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றி வருவதுடன், வட்டி விகிதத்தையும் 12.6 சதவிகிதத்திலிருந்து 10.5 சதவிகிதமாகக் குறைத்துள்ளோம்.

உழவர் நலன் காப்பதையே இலட்சியமாகக் கொண்டுள்ள இன்றைய அரசு, உயர் மட்டக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று உடனடியாக உழவர்களுக்கு 40 கோடி ரூபாய் அளவுக்குச் சலுகைகளை அளித்துள்ளது.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில் அளித்த சலுகைகள் காரணமாக 16 இலட்சம் உழவர்களுக்கு 27 கோடி ரூபாய் நிவாரணமும், தக்காவிக் கடன்களைப் பொறுத்த வரையில் 15 இலட்சம் விவசாயிகளுக்கு 13 கோடி ரூபாய் அளவிலும் பல நிவாரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.



இப்படிப் பல்வேறு சலுகைகளை உழவர்' பெருமக்களின் நலன் கருதியே அளித்துள்ளோம். இதனால் தமிழ்நாடு அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஆயினும் அந்த நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல், உழவர் பெருமக்களின் நலன் காக்கவே பல்வேறு சலுகைகளை அளித்துள்ளோம்.

உழவர் பெருமக்களுக்குத் தமிழக அரசு அளித்த ஊக்கம், சலுகைகள் ஆகியவற்றின் பயனாகவே—வரலாறு காணாத வகையில் வறட்சியும், புயலும் அடுத்தடுத்துத் தோன்றித் தமிழக வேளாண்மையைச் சீர் குலைத்த போதிலும், கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இதுவரை இல்லாத அளவுக்கு வேளாண்மை உற்பத்தி பெருகியுள்ளது.

இந்த அரசு உழவர் பெருமக்களுக்கு உதவாமல் இருந்திருந்தால், 1976-77 ஆம் ஆண்டில் 53 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி 1977-78-ல் 62 இலட்சம் டன்களாக உயர்ந்திருக்குமா? 1978-79-ல் 64 இலட்சம் டன்களாக உயர்ந்திருக்குமா? 1976-77 ஆம் ஆண்டில் 74 இலட்சம் டன்களாக இருந்த தமிழகத்தின் மொத்த உணவு தானிய உற்பத்தி, 1977-78-ல் 84 இலட்சம் டன்களாக உயர்ந்திருக்குமா? 1978-79-ல் 87.25 இலட்சம் டன்களாக உயர்ந்திருக்குமா?

1977-78, 1978-79 ஆகிய இரு ஆண்டுகளிலும் அரிசி உற்பத்தியைப் பெருக்குவதில் பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். பருவ நிலை சாதகமாக அமையாத இவ்விரு ஆண்டுகளிலும் அரிசி உற்பத்தியைக் குறிப்பிடத் தகுந்த அளவில் பெருக்கியுள்ளதற்குத் தமிழ்நாடு, அரசின் வேளாண்மைத் துறை மேற்கொண்ட புதிய யுக்தியே காரணமாகும்.

ஆராய்ச்சியின் அடிப்படையில் நெல் பயிர் சாகுபடிச் செலவைக் குறைத்து அதன் உற்பத்தித் திறனைப் பெருக்க, குறைந்த செலவுள்ள, அதிகத் திறன் வாய்ந்த தொழில்நுட்பத் திட்டம் ஒன்றை இந்த அரசு முதன் முதலாகப் புகுத்தியுள்ளது. இப் புதிய தொழில்நுட்பத்தில் வீரிய நாற்றுக்களை உற்பத்தி செய்தல், ''பாய்'' நாற்றங்காலை உபயோகப்படுத்துதல், நீலப் பச்சைப் பாசியைக் கொண்டு உரமிடுதல், 'சிங்க் சல்பேட்டு' இடுதல், உரங்களைப் பயிருக்கு அருகாமையில் இடுதல், பூச்சி மருந்துக் குருணைகளைப் பயிருக்கு அருகில் , இடுதல் ஆகிய ஆறு நவீன யுக்திகள் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் பயனாகவே, இதுவரை இல்லாத அளவுக்கு அரிசி உற்பத்தி சென்ற ஆண்டில் உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் 1976-77-ல் ஏக்கருக்கு சராசரி நெல் உற்பத்தி 1277 கிலோ என்று இருந்தது. அது 1978-79-ஆம் ஆண்டு 1350 கிலோ என்ற அளவிற்கு உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதுபோலவே கடந்த ஆண்டில் மற்றப் பயிர்களின் உற்பத்தியும் பெருகியுள்ளது.

சென்ற ஆண்டில் 20 இலட்சம் டன் சிறு தானியங்கள், 3.25 இலட்சம் டன் பயறு வகைகள், 14.07 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள், 19.50 இலட்சம் டன் வெல்லம் அளவில் கரும்பு, 3.75 இலட்சம் பேல் பருத்தி ஆகியவை உற்பத்தியாகியுள்ளதும் குறிப்பிடத்குந்ததாகும்.

தேங்காய்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கடந்த ஆண்டில் 14.30 இலட்சம் தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம் வல்லத்தராயன் கோட்டையில், ஆசியாவிலேயே பெரியது என்று சொல்லத்தக்க ஒரு மாபெரும் பழத் தோட்டம் அமைக்கப்பட்டு 404.08 எக்டேரில் பழக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இரசாயன உரங்களை விநியோகிப்பதற்காகச் சென்ற ஆண்டில் புதிதாக 500 விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் இரசாயன உரப் பற்றாக் குறை இல்லாததால் 2.90 இலட்சம் டன் தழைச்சத்து, 0.94 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 1.07 இலட்சம் சாம்பல் சத்துள்ள இரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர்
—பி. குழந்தைவேலு

1977-78-ல் வேளாண்மைத் துறை மூலம் 16 புதிய இரகங்கள் வெளியிடப்பட்டன. 1978-79-ஆம் ஆண்டில் 12 புதிய இரகங்களை வேளாண்மைத் துறை வெளியிட்டுள்ளது. ஆக, கடந்த 2 ஆண்டுக் காலத்தில் 28 புதிய இரகங்களை வேளாண்மைத் துறை மூலம் இந்த அரசு வெளியிட்டுள்ளது.

1977-78-ஆம் ஆண்டில் 8 புதிய இரகங்களை வெளியிட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், சென்ற ஆண்டு 13 புதிய இரகங்களைத் தமிழக உழவர்களுக்குப் பொங்கல் பரிசாக அளித்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், தமிழ்நாடு வேளாண்மைத் துறையும் சேர்ந்து கடந்த 2 ஆண்டுகளில் மொத்தம் 49 புதிய இரகங்களை வெளியிட்டுள்ளது என்றால், இன்றைய தமிழக அரசு உழவர்களின் வருவாயைப் பெருக்குவதற்கு உதவும் ரகங்களைக் கண்டுபிடிப்பதில் எவ்வளவு அக்கறை காட்டி வருகிறது என்பது தெளிவாகிறது.

உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சென்ற ஆண்டில் உதக மண்டலம், இராமநாதபுரம், சேலம் ஆகிய இடங்களில் 3 உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைத் துறை மூலம் கடந்த ஆண்டில் 4,692 குழாய்க் கிணறுகள், 2,587 வடி முனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன; 2,573 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன; 2,563 கிணறுகளில் துளையிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; 59 சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1979-ல் 42,820 எக்டேர் பரப்பளவில் மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1977-78-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக மண் மேடிட்ட நிலங்களை சீர்திருத்தும் பணி சென்ற ஆண்டு ஜூலைத் திங்கள் 31-ஆம் நாள் வரை ரூ. 94 இலட்சம் செலவில் 57,000 எக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. சென்ற ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 6,319 ஏக்கர் நிலங்களில் மண் மேடிட்டுள்ளது. 309 கிணறுகள் பாழடைந்துள்ளன, 4 வாய்க்கால்களில் மண் மூடியுள்ளது. இவைகளைச் சீர்படுத்தும் பணிகள் கடந்த மார்ச்சு 31ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டன.

நெற்பயிரில் வேருக்கு அருகாமையில் உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளைக் குறைந்த செலவில் இடுவதற்கு உதவும் 'கிராவிடர் அப்ளிகேட்டர்' என்ற கருவியைச் சென்ற ஆண்டில் வேளாண்மைத் துறை கண்டுபிடித்துள்ளது. 50 ரூபாய் விலையுள்ள இக்கருவியைக் கொண்டு 5 மணி நேரத்தில் ஒரு ஏக்கரில் உரமிடுதல், பூச்சி மருந்துக் குருணைகளை இடுதல் ஆகிய பணிகளைச் செய்திட இயலுகிறது.

மானாவாரிச் சாகுபடிக்கு உபயோகப்படக்கூடியதும், சிக்கனமானதுமான பல நோக்குக் கருவியொன்றும் சென்ற ஆண்டில் வேளாண்மைத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கருவியைப் பயன்படுத்தி ஒரு ஜோடி மாடுகளைக் கொண்டு ஒரு நாளில் 4 முதல் 5 ஏக்கர் நிலங்களில் உழுதல், விதைத்தல், உரமிடுதல் ஆகிய பணிகளை ஒருங்கிணைத்துச் செய்ய முடிகிறது. இக்கருவியின் விலை ரூ. 500தான். ஆகவே, இதை 'ஏழைகளின் டிராக்டர்' என்றுகூடச் சொல்லலாம். இவ்விரு கருவிகளும் உழவர்களின் செலவைக் குறைக்க உதவும் சிக்கனக் கருவிகள் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

கரும்பு விதைக் கரணைகள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சை, சேலம் ஆகிய 5மாவட்டங்களில் மண்டலக் கரும்பு விதைப் பண்ணைகள் துவக்கப்பட்டுள்ளன.

மாறிவரும் சூழ்நிலைக் கேற்பவும், வளர்ந்து வரும் நவீன வேளாண்மை ஆராய்ச்சிக்கேற்பவும், புதிய யுக்திகளை மேற்கொண்டு குறைந்த செலவில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த அரசு புதிய முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டுள்ளது. அவைகளில் மிகவும் குறிப்பிடத் தக்கது நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்





குரிய புதிய தொழில் நுட்பத் திட்டம். இத்திட்டத்தின் கீழ் இரசாயன உரச்செலவைக் குறைப்பதற்காக, நீலப் பச்சைப் பாசி, அசோலா போன்றவைகளை வளர்ப்பதற்கு இந்த அரசு உதவி வருகிறது. அதேபோல் 'கிராவிட்டர் அப்ளிகேட்டர்' என்ற புதிய கருவியைக் கண்டுபிடித்து நெல் உரமிடுவதிலும் குருணை மருந்துகளை இடுவதிலும் செலவைக் குறைத்து நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த அரசுதான் முதன் முதலாக முயற்சித்துள்ளது.

புன்செய் நில உழவர்களின் சாகுபடிச் செலவைக் குறைத்து அவர்களுடைய வருவாயைப் பெருக்குவதற்காக இந்த அரசு மேற்கொண்ட முயற்சியின் காரணமாக 'மல்டி பர்ப்பஸ் இம்ப்ளிமெண்ட்' எனப்படும் பல நோக்குக் கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

விதைச் சான்றிதழ் அளிப்பதற்காகச் சென்ற ஆண்டில்தான் தனித்தியங்கும் நிறுவனம் ஒன்று துவக்கப்பட்டது.

பயறு வகை விதைகளின் தேவையை ஈடு செய்வதற்காகச் சென்ற ஆண்டில்தான் புதிதாக 5 விதை மையங்கள் துவக்கப்பட்டன.

பல்வேறு பயிர்களுக்கு நுண் ஊட்டச் சத்துக்களைத் தரவல்ல இடு பொருள்களை உற்பத்தி செய்வதற்காகச் சென்ற ஆண்டில் தான் குடுமியான் மலையில் ஒரு புதிய தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்காகத் திருச்சியில் ஓர் ஆய்வுக் கூடமும், தென்னை வாடல் நோயைக் கட்டுப்படுத்துவதற்காகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் ஆய்வுக் கூடமும் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் 'பல-பயிர் ஆராய்ச்சி நிலையம்' ஒன்றை இந்த அரசுதான் முதன் முதலாகத் துவக்கியுள்ளது.

மண் வகைகளைக் காட்டும் நிலப்படம் தயாரிக்கும் பணியை விரைவுபடுத்துவதற்காகச் சென்ற ஆண்டில் புதிதாக வேலூர் மற்றும் பாளையங்கோட்டையில் கூடுதலாக இரண்டு மண் வள ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மழைத் தண்ணீரைப் பண்ணைக் குட்டைகளில் தேக்கி வைத்து மீண்டும் பயன்படுத்துவதற்கான பரிசோதனைகளைச் சென்ற ஆண்டில் முதன் முதலாக இந்த அரசு துவக்கியுள்ளது.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி உழவர்களின் வருவாயைப் பெருக்குவதற்காக இந்த ஆண்டில் பல புதிய திட்டங்களைத் தமிழக அரசு துவங்கவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'வித்தே விளைவுக்கு அடிப்படை' என்பதற்கு ஏற்ப விதை உற்பத்தியில் தரக் கட்டுப்பாட்டினைத் தீவிரமாக அமல்படுத்தி உழவர்களுக்குத் தரமான விதைகள் விநியோகம் செய்வதற்காக 1979-80 ஆம் ஆண்டில் தனியே ஒரு விதைச் சான்றிதழ் இயக்ககம் துவக்கப்படவிருக்கிறது.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் போதாது, உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஊட்டச்சத்து மிகுந்தவைகளாக இருக்க வேண்டும். அவைகள் ஏழை எளிய மக்களுக்கும் எளிதில் கிடைத்து இந்த நாட்டின் மக்கள், நல் வாழ்வு வாழவேண்டும் என்பதற்காகத் தமிழக அரசு மற்றுமொரு புதிய துறையை இந்த ஆண்டிலே துவக்கவிருக்கிறது. வயது வந்த ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு 115 கிராம் கீரை வகைகள், 85 கிராம் கிழங்குகள், 85 கிராம் காய்கறிகள், 85 கிராம் பழங்கள் ஆகியவைகளை உண்ண வேண்டும் என்று ஊட்டச் சத்து வல்லுநர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். ஊட்டச் சத்து மிகுந்த காய்கறிகள், கனி வகைகள், கிழங்கு வகைகள் ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்கித் தமிழக மக்களின் வாழ்வை வளப்படுத்தவேண்டும் என்பதற்காகத் தோட்டக் கலை இயக்ககம் என்ற புதிய துறையை 1979-80 ஆம் ஆண்டில் தமிழக அரசு துவக்கவிருக்கிறது என்ற இனிப்பான செய்தியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்திற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 12 இலட்சம் டன் பருப்பு வகைகள் தேவைப்படுகின்றன. ஆனால் நம் உற்பத்தி சென்ற ஆண்டில் 3.25 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கே இருந்துள்ளது. இந்த உற்பத்தியைப் படிப்படியாக உயர்த்த வேண்டும் என்பதிலே இந்த அரசு தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. ஏனெனில், வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 85 கிராம் பருப்பு வகைகள் கிடைக்க வேண்டும் என்று ஊட்டச் சத்து வல்லுநர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். புரதச் சத்து மிகுந்த பருப்புகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக சேலம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 2 பயறு வகைகள் செயல் விளக்கத் திட்டங்கள் இந்த ஆண்டில் புதிதாகத் துவக்கப்படும்.

தேசியப் பால்வள அபிவிருத்திக் கழக உதவியுடன் ரூ. 15 கோடி செலவில் நிறுவப்படும் மாநில எண்ணெய் வித்து மேம்பாட்டுக் கழகம் வரும் செப்டம்பர் மாதம் செயல்படத் துவங்கும். இதன் மூலம் கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் 6 இலட்சம் ஏக்கரில் தீவிர சாகுபடியின் கீழ் மணிலா பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் உற்பத்தியாகும் மணிலாவிலிருந்து எண்ணெய் எடுக்கும் பெரிய ஆலை ஒன்று ரூ. 4 கோடி செலவில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

நில நீரை வண்டல் மண் பகுதிகளிலிருந்து வெளிக் கொண்டுவர சுழல் வகைத் துளையிடும் கருவிகள் தேவைப்படுவதால், அவைகளின் எண்ணிக்கையை இந்த ஆண்டில் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவைகளை வாங்குவதற்கு அதிகச் செலவு ஆகும் என்பதால் செலவில் சிக்கனமேற்படுத்துவதற்கான புதிய யுக்தியையும் இந்த அரசு இந்த ஆண்டில் மேற்கொள்ளவிருக்கிறது. சுமார் ரூ. 10 இலட்சம் பெறுமானம் உள்ள ஒரு புதிய சுழல் வகை துளையிடும் கருவியை வாங்குவதைவிட தற்போதுள்ள 'பர்குஷன்' துளையிடும் கருவியை ரூ. 2.5 இலட்சம் செலவில் சுழல் வகை துளையிடும் கருவியாக மாற்றிட முடியும். இதனால் ரூ. 7.5 இலட்சம் மீதமாகிறது. ஆகவே இந்த அரசு எந்தெந்த வகையிலெல்லாம் செலவைக் குறைத்துச் சிக்கனமாகப் பணிகளை மேற்கொள்ள முடியுமோ அந்தந்த வகையில் பணியாற்றி அன்னியச் செலாவணியை மீதப்படுத்தவும் முயன்று வருகிறது என்பதை உழவர் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஏழைகளின் டிராக்டர்' எனப்படும் பல நோக்குக் கருவியையும், 'கிராவிட்டார் அப்ளிகேட்டர்' என்னும் கருவியையும் பெருமளவில் உற்பத்தி செய்து இந்த ஆண்டில் உழவர்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் போடுவதற்காக இந்த ஆண்டிற்கு ரூ. 150 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பழைய சாலைகளைப் பராமரிப்பதற்காக ரூ. 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

31-3-1979 உடன் முடிய வேண்டிய சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தை மேலும் தொடரவேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வந்தது. அதன் பயனாக மத்திய அரசு 1979-80 ஆம் ஆண்டிலும் தமிழகத்தில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அனுமதி அளித்து 30-3-1979-ல் தந்தி மூலம் தெரிவித்துள்ளது. ஆகவே, சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

கிராமப் புறங்களில் உள்ள சிறு உழவர்கள், குறு உழவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், குத்தகைதாரர்கள், கை வினைஞர்கள், அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அவர்களின் வாழ்வை வளப்படுத்தவும் இந்த அரசு ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டத்தை 161 வட்டாரங்களில் மத்திய அரசு நிதி உதவியுடன் நிறைவேற்ற முன்வந்துள்ளது. இத்திட்டம் நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தொடர்ந்து வறட்சிக்கு இலக்காகும் இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் வறட்சிப் பாங்கான பகுதிகள் திட்டத்தை இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மத்திய அரசின் அறிவுரைக்கேற்ப இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூ. 464 இலட்சம் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 175 இலட்சம் செலவில் பால் பவுடர் தொழிற்சாலைகள் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.



இவ்வாறு பல்வேறு புதிய முயற்சிகளையும், பல்வேறு புதிய திட்டங்களையும் மேற்கொண்டு இந்த ஆண்டில் 65 இலட்சம் டன் அரிசியையும், 20.15 இலட்சம் டன் சிறு தானியங்களையும், 3.58 இலட்சம் டன் பயறு வகைகளையும், 16.03 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களையும், 19.67 இலட்சம் டன் வெல்லம் அளவில் கரும்பையும், 4.40 இலட்சம் பேல்கள் பருத்தியையும் உற்பத்தி செய்ய தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கினை எய்துவதற்கு இந்த ஆண்டின் துவக்கம் முதலே வேளாண்மைத் துறை முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த அளவில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தமிழக உழவர் பெருமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கி, தமிழகத்தை மேலும் உபரி மாநிலமாக ஆக்குவதற்கு உறுதுணை செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா வழி நடக்கும் இன்றைய அரசு உழவர் நலன் காக்க என்றும் தயங்காது என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# அண்மையில் அடைந்த அரிய முன்னேற்றம்



**அ. வேங்கடராமன், ஐ.ஏ.எஸ்.**
**துணை வேந்தர்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.**

**"கோவை"** என்ற ஒரு புதிய விதை விதைக்கும் கருவியை அண்மையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது. புஞ்சைநிலங்களில் வேளாண்மை மகசூல் குறைவுக்குக் காரணம் பலப்பல. அவற்றுள் ஒன்று காலத்தே விதைக்க இயலாமை.

சரியான ஈரம் இருக்கும் தறுவாயில் விதைக்க முடியாத நிலையில் ஓர் ஏக்கரில் எத்தனை செடிகள் இருக்க வேண்டுமோ அத்தனை செடிகள் வளர வேண்டிய வாய்ப்பினைப் பல விவசாயிகளால் தர இயலுவதில்லை. இதனால் மகசூல் மிகவும் குறைவுபடுகிறது. நிலக்கடலை விதைக்கும் பொழுது புஞ்சைவாழ் வேளாண் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்த அனுபவத்தை அடைகிறார்கள். நிலம் பதமாக இருக்கும். விதைப்பதற்கு. ஏர் மாடோ, ஆளோ கிடைக்காது; எனவே சரியான பக்குவத்தில் விதைக்க முடிவதில்லை. இந்த இடர்ப்பாட்டை நீக்க வந்த வரப்பிரசாதம் தான் "கோவை" விதை விதைக்கும் கருவி.

நிலக்கடலை விதைப்பதற்கு 'கோவை' மிகவும் ஏற்ற கருவி. ஒரு ஜோடி மாடு எளிதாக இழுக்கும் இந்தக் கருவியைக்கொண்டு ஒரு நாளில் மூன்று ஏக்கர் கடலை விதைக்கலாம். ஒரே சமயத்தில் மூன்று வரிசைகளில் சீராக விதைக்கலாம். வேண்டிய ஆழத்தில் வேண்டிய அளவு இடைவெளியில் வரிசையாக விதைகளை விதைக்கலாம். வரிசையில் விதைப்பதால் களை எடுப்பது, கொத்திக் கொடுப்பது, மேல் உரம் இடுவது போன்ற செயல் முறைகளைத் திறம்படச் செய்திடலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, காலத்தே விதைத்திடலாம்.



இக்கருவியில் அமைந்துள்ள மூன்று விதைப் பெட்டிகளிலும் பெட்டிக்கு நான்கு கிலோ வீதம் மொத்தம் பன்னிரெண்டு கிலோ விதைகளை இடலாம். ஒவ்வொரு விதைப் பெட்டியின் அடியிலும் ஒரு மர உருளை அமைக்கப்பட்டுள்ளது. இந்த உருளை ஒவ்வொரு விதையாக எடுத்து, கலப்பையின் பின்னால் விழும்படிச் செய்கிறது. சரியான மர உருளையைத் தேர்ந்தெடுத்து மக்காச் சோளம் மற்றும் சோளம் போன்ற பயிர்களையும் விதைக்கலாம். கலப்பையின் பின்னால் விழுந்த விதைகளை, சால் மூடும் சாதனம் மண்ணைத்தள்ளி மூடுவதுடன், மண்ணை ஓரளவு அழுத்தி அழுத்தி மண்ணின் ஈரத்தையும் காக்கிறது. விதை விழுவதை விரும்பும்பொழுது தடுத்து நிறுத்த, கைப்பிடியுடன் கூடிய ஒரு 'கிளச்' சாதனம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை எளிதில் இயக்கி வயல் ஓரங்களில் கருவியைத் திருப்பும் சமயத்தில் விதை விழுவதைத் தவிர்க்கலாம்.

இந்த விதைக்கும் கருவியின் விலை ரூ. 450 ஆகும். ஒரு ஏக்கரில் நிலக்கடலை விதைக்க ரூபாய் எட்டு மட்டுமே செலவாகிறது. நடைமுறையில் உள்ள வழக்கப்படி விதைப்பதில் ஏக்கருக்கு ரூ. 23 செலவாகிறது.

இதைப் பற்றி மேலும் விவரம் வேண்டுவோர் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

விதைப்பு என்றவுடன் உரத்தைப் பற்றிய சிந்தனை எல்லோர் மனத்திலும் உடனே எழும். உரச் செலவைக் கட்டுப்படுத்த, முடிந்தால் குறைக்க, பல வழி



களில் பல்கலைக்கழகம் ஆய்வுகளை நடத்தி வருகிறது.

**'ரைசோபியம்'**

பயறுவகைச் செடிகளில் குறிப்பாக உளுந்து, பாசிப்பயறு, துவரைப் பயிர்களில் மகசூலைப் பெருக்க ஆகாயத்திலுள்ள தழைச் சத்தை எடுத்து வேர் முடிச்சுகளில் சேர்த்து வைக்கும் "ரைசோபியம்" என்னும் நுண்ணிய கிருமிகளைப் பயன்படுத்தும் ஆய்வில் வெகுவாக முன்னேற்றம் கண்டுள்ளோம். வீரியமாகச் செயல்படும் நுண்ணுயிர் கிருமிகளைக் கண்டு பிடித்து அவற்றை அதிகப்படுத்தி வருகின்றோம். இவை நிலக்கடலைப் பயிருக்கும் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றை உபயோகிப்பதன் மூலமாக, உரச்செலவைக் கணிசமாகக் குறைக்கலாம்.

இதைப்போலவே நெல் பயிருக்குப் பயன்படும் "அசோலா" என்ற ஒருவகைத் தாவர இனத்தைக் கண்டெடுத்துள்ளோம். நீரின் மேல் மிதக்கும் இப்பாசி இனத் தாவரம் தழைச்சத்தை ஈர்க்கும் நுண்ணிய உயிரினங்கள் வளர மிகவும் ஏற்றது. இவை மடியும்பொழுது நெற்பயிருக்கு வேண்டிய தழைச் சத்தைக் கொடுக்கிறது. பசுந்தழை உரமாகவும் பயன்படுகிறது. சீனா, வியட்நாம் போன்ற நாடுகளில் அதிக அளவில் பயன்படுத்தப் படும் இந்தத் தாவர இனத்தை நம் பகுதிகளில் எந்த முறையில் விரைவாக இனவிருத்தி செய்வது என்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். ஆண்டு முழுவதும் இதை வளர்க்கும் அறிவை, திறமையைப் பெற்றுவிட்டால் நெற்பயிருக்குச் செலவு செய்யும் உரச் செலவைக் கணிசமாகக் குறைத்திடலாம்.

**புதிய கேந்திரம்:**

இதே போல புஞ்சை நிலங்களில் தழைச் சத்தை ஆகாயத்திலிருந்து சேர்த்துத் தரும் "ஸ்பைரில்லம்" என்ற புதிய நுண்ணுயிரைக் கண்டெடுத்துள்ளோம். இதைப் பற்றிய விரிவான ஆய்வில் ஈடுபட்டுள்ளோம்.



'கோவை' விதை விதைக்கும் கருவி

இந்த ஆய்வுகளை விரிவுபடுத்தி விரைவில் புதிய தொழில் நுணுக்கங்களைக் கண்டு பிடித்து வேளாண் மக்களுக்கு வழங்கிட நுண்ணுயிர் ஆய்வுக்கென்று ஒரு புதிய கேந்திரத்தைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்துள்ளோம். இந்தியத் துணைக் கண்டத்திற்கு நுண்ணுயிர் ஆய்வுகளுக்கு இந்தக் கேந்திரம் தலையாய நிலையமாக விளங்கும். இதற்கு வேண்டிய பயிற்சிக்கும், வெளி நாடுகளிலிருந்து பெற்றிட வேண்டிய ஆய்வு ஆலைக் கருவிகளையும் உலக "UNDP" ஸ்தாபனமும், "ICAR" நிறுவனமும் பண உதவி செய்யும் குழுப்பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டுள்ளன.

எரிபொருள் கிடைப்பதில் தட்டுப்பாடும், விலை ஏற்றமும் அடிக்கடி நேர்வதால் தரையிலிருந்து தோண்டி எடுக்கும் கனிப் பொருளை எரிபொருளாக உபயோகிப்பதற்குப் பதில், ஏனைய வழிகளில் வேண்டிய சக்தியைப் பெற்றிட இயலுமா என்று கண்டு பிடிப்பதில் பல்வேறு நாடுகள் இப்பொழுது முனைந்துள்ளன.

விரைவாக வளர்ந்திடும் தாவரங்களைச் "சக்தி தரும்" பொருளாக மாற்றிவிட்டால் தட்டில்லாமல் வாழ்ந்திடலாம் என்ற எண்ணத்தில் விரைவாக வளரும் மரங்கள் எவை எவை, அவற்றை எவ்வாறு வேளாண்மை செய்திடலாம் என்ற ஆய்வில் பல விஞ்ஞானிகள் இன்று முனைந்துள்ளனர். வேளாண்மைப் பல்கலைக் கழகமும் இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளது. யூகலிப்டசு, சவுக்கு போன்ற இனங்களில் விஞ்ஞான ஆய்வின் மூலமாக விரைவாக வளரும் தனி இனச் செடிகளைப் பிரித்தெடுத்து அவற்றை விருத்தி செய்து வருகிறோம். இச்செடிகளை விதைகளிலிருந்து வளர்ப்பதற்குப் பதில் துளிர்களிலிருந்து வளர்க்கும் ஒரு புதிய வழியை முறைப் படுத்தியுள்ளோம். தேயிலை நாற்றுகளைத் தயார் செய்வதைப் போல, இந்த மரங்களின் நுனிப்பகுதிகளை நட்டு, அவற்றின் மேல் பாலிதீன் துணியைக் குடையாக அமைத்து, வேண்டிய அளவு தண்ணீரைத்

தெளித்து, விரைவாக அவை வேர்விட்டு வளரும் முறையைச் சீர்படுத்தியுள்ளோம்.

இந்த முறையினால் மரங்களை நடுவதற்கு வேண்டிய உயர்இரக இனங்களை விரைவாக அபிவிருத்தி செய்ய இயலும். நமது முன்னேற்றத்திற்கு இது வெகுவாகப் பயன்படும் எனத் திண்ணமாக எண்ணுகிறோம்.

எரிபொருள் சக்திப்பொருள் என்று எண்ணும்பொழுது பண்ணைக் கழிவுகளைப் பயன்படுத்தி வீட்டுக்கு வேண்டிய எரிபொருளையும், சக்தி மிகுந்த உரத்தையும் பெற்றிடும் சாணவாயுச் சாதனத்தைப் பற்றி எண்ணிடாமல் இருக்க முடியாது. தற்பொழுது நாம் உபயோகிக்கும் சாணவாயுச் சாதனத்தை அமைக்க அதிகச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இதற்கு அதிக இடமும் தேவை. உலோகத் தகடுகளை உபயோகிக்கிறோம். எனவே, கிராமங்களில் இதை அதிக அளவில் அமைக்க முடிவதில்லை. தரை மட்டத்திற்குக் கீழே, உறைக் கிணற்றைப் போல் செங்கல்லாலும், சிமெண்டாலும் கட்டப்பட்டுள்ள ஒருவகை புதிய சாணவாயுச் சாதனத்தைப் பல்கலைக் கழகத்தில் பரிசோதனைக்காக அமைத்துள்ளோம். இதற்குச் செலவு மிகவும் குறைவு. ஊரிலுள்ள கட்டிடத் தொழிலாளிகள் உதவிகொண்டே இதை அமைத்து விடலாம். இந்த ஆய்வின் முடிவில் ஒரு திறமையான, சிக்கனமான, நமது சூழ்நிலைக்கு ஏற்ற சாணவாயுச் சாதனத்தை மக்களுக்கு வழங்க முடியும் என்று எண்ணுகிறோம்.

**புதிய பயிர் இரகங்கள் :**

இச் சமயத்தில் அண்மையில் நாங்கள் வெளியிட்ட சில புதிய பயிர் இரகங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

நெல்லில் எத்தனையோ புதிய இரகங்களை வெளியிட்டுள்ளோம். இருப்பினும் பழைய ஆர்க்காடு ''கிச்சலி'' நெல்லுக்கு இன்றும ஒரு தனி ''மவுசு'' எல்லாரிடத்திலும் இருக்கிறது. கிச்சலியைப் போன்ற சன்ன ரகமும், 105 நாட்கள் வயதுமுடைய கோ41 என்ற இரகத்தையும் இப்பொழுது வெளியிட்டுள்ளோம். இந்த இரகம் ஒரு எக்டேருக்கு ஐந்து டன் நெல்லும், ஏழு டன் வைக்கோலும் சராசரியாகத் தரவல்லது. நடவுக்கும், நேரடி விதைப்புக்கும் ஏற்றது.

**புகையான் தாக்காத நெல் :**

நெல வேளாண்மைக்கு இப்பொழுது முக்கியமான விரோதி



புகையான் பூச்சி. குறிப்பிட்ட பட்டத்தில், அதிலும் தஞ்சையில் சில பகுதிகளில் மட்டும் தோன்றி வந்த இந்தப் பூச்சி தற்பொழுது எல்லாப் பட்டங்களிலும் எல்லாப் பகுதிகளிலும் ஆண்டுதோறும் தோன்றி வருகிறது. மருந்தடித்து மட்டும் இதைக் கட்டுப்படுத்துவது கடினம் என்பதைத் தெரிந்து புகையான் தாக்காத உயர்விளைச்சல் இரகத்தைக் கண்டுபிடிக்க நிபுணர்கள் முனைந்தனர். அதன் பயனாக புகையான் தாக்காத கோ. 42 என்ற நெல் இரகத்தை வெளியிட்டுள்ளோம். இந்த இரகத்தை, புகையான் அதிகமாக ஆண்டுதோறும் தாக்கும் கோபிசெட்டிப்பாளையம் பகுதியில் உழவர் கழனிகளில் பரிசோதித்துப் பார்த்துப் பின் வெளியிட்டுள்ளோம். 135-லிருந்து 140 நாட்கள் வயது கொண்ட இந்த இரகம் ஹெக்டேருக்கு சுமார் ஐந்து டன் மகசூல் தரவல்லது. சம்பா, நவரைப் பட்டத்திற்கு ஏற்ற இரகம். நல்ல சிம்பு வெடிக்கும் திறன் உள்ளது. அரிசி சற்றுப் பருமனாக உள்ளது. சன்ன இரகமும், குறுகிய கால வயதும், புகையான் தாக்காததுமான நெல் இரகத்தை உருவாக்கத் தொடர்ந்து முயன்று வருகிறோம்.

பொன்னி நெல்லையும், ஐ.ஆர்.8 நெல்லையும் ஒட்டுச் சேர்த்து 130 நாட்கள் வயது கொண்ட 'புதுவைப் பொன்னி' என்ற மற்றொரு இரகத்தையும் வெளியிட்டுள்ளோம். பொன்னியின் தன்மையையும், அதிக மகசூல் தரும் சக்தியையும் கொண்டது இந்த ரகம்.

**சோள ரகம் :**

இறவைக்கும், மானாவாரிக்கும் ஏற்ற கோ.23 என்ற ஒரு நல்ல சோள இரகத்தை ஆய்வாளர்கள் தந்துள்ளார்கள். நான்கு இனங்களை ஒருங்கிணைத்து பெற்ற பிள்ளை இந்த கோ. 23. இதன் வயது 95-லிருந்து 100 நாட்கள்; மணிகள் முத்து முத்தாக இருக்கின்றன. ''மார்க்கெட்டில்'' இந்தச் சோளத்திற்கு நல்ல ''கிராக்கி'' இருக்கும் என எண்ணுகிறோம். மானாவாரியில் ஒரு எக்டேருக்கு 2700 கிலோ மணியும், இறவையில் 5000 கிலோவும் தரவல்லது. மறுதாம்பு அல்லது கட்டைப்பயிர் சாகுபடிக்கும் ஏற்ற இரகம். புஞ்சை வாழ் வேளாண் மக்களுக்கு இது ஒரு நல்ல சோளமாக அமையும்.

பயறுவகையில் பற்றாக்குறை இன்னும் நிலவும் மாநிலம் தமிழகம். இக்குறையை விரைவில் போக்கிட வேண்டும். நமது மக்களுக்குப் புரதச்சத்து அதிகமுள்ள பயறுவகைகள் நிறையக் கிடைத்திடச் செய்ய வேண்டும். 24 சதம் புரதச்சத்துள்ள கோ. 3 என்ற புதிய இரக தட்டைப் பயிற்றை வெளியிட்டுள்ளோம். 90 நாட்களில் இறவையில் 1000 கிலோவும், மானாவாரியில் 800 கிலோ மகசூலும் தரவல்லது இந்த இரகம். மணிகள் ''பழுப்பு' நிறமாக இருப்பதால் ''மார்க்கெட்டில்'' இதற்கு நல்ல ''கிராக்கி'' உள்ளது. வறட்சியை ஓரளவுக்குத் தாங்கும் தன்மை உள்ளது. அதிகமாகப் படராமல் நேராக வளரும் தன்மை உடையதால் ஊடு பயிராகவும் இதைப் பயிர் செய்யலாம்.

எல்லாப் பட்டங்களுக்கும் ஏற்ற, 210 நாட்கள் வயதுள்ள சம்பா மிளகாய் கோ. 1 இரகம் ஒன்றையும் வெளியிட்டுள்ளோம். இந்த இரகம் அதிக விதையும், காரத் தன்மையும் கொண்டது. எக்டேருக்கு 21 குவிண்டால் வற்றல் மகசூல் தரவல்லது.

எங்களது ஆய்வுகளின் முடிவுகள் அவ்வப்போது அனைவருக்கும் கிடைத்திட மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் ''வளரும் வேளாண்மை'' என்ற எங்களது பத்திரிகையில் வெளியிட்டு வருகிறோம். இதை வாங்கிப் படிப்பதுடன் உங்களது கருத்துக்களையும் அனுபவங்களையும் எங்களுக்கு எழுதுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.



# ஏர்க்கோல் இரவிவர்மன்

கவிஞர் முத்துராமலிங்கம்



... நிலமகள் முகமதில்
வளமையை வரைகிற
ஏர்க்கோல் இரவிவர்மனே!...

... தேசப் படத்தில்
தெரிகிற கோடுகள்...
உன்—
தார்க்கோல் வரைந்ததா?
இல்லை...
ஏர்க்கோல் எழுதியதா?...

... சூரியன் நிலத்தில் ஒளிக்
காலை ஊன்றியதும்
நீயும் தார்ச் செங்
கோலை ஏந்துகிறாய்!...

... தரையைக் கீறும்
தர்ம யுத்தத்தில்...
நீ—
களங்களைக் காண்கிறும்
எமைக்—
கதிர் முடிகள் மகுடமாய்க்
கௌரவிக்கின்றன!...

... சூரியக் குளியலிடும்
சொர்ணமணிக் கதிர்கள்
உன் உப்பு நீரில்
அவதரித்த
ஒளி முத்துக்கள்!...

உன்—
வயிர மணிக்கலப்பை
வகுக்கிற கோடுகள்
நிலமங்கை தலையில்
நெளிகிற வகிடுகள்...

உன்—
நெற்றி மேடையோ
ஒரு—
நீர்த்தேக்கம்...

அதில்—
நீர்ப்பால் கசிந்தால்
நிலமகள் மார்பில்
வேர்ப்பால் துளிர்க்கும்!...

... அவை வெறும்
வியர்வைத் துளிகளோ?...
மண்மகளின்
அயர்வை அகற்றும்
அமுதத் துளிகள்!...

... என்றோ பிறந்த உலகை
என்றென்றும் இளமையாக்கும்
இயற்கை இரசாயனத்துளிகள்!...

நீ—
பொன்னேர் பூட்டிப்
புத்துலகு சமைக்க
எங்கள்—
பொன்மனச் செம்மல்
வாழ்க!... என்றும்
புரட்சிவழி வாழியவே!...



தரமான பொருட்களைத்
தயாரித்தளிக்கும் பணியில்
தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

டான்சி
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




# வளரும் வேளாண்மை


எஸ். ஏ. சுப்ரமணி, ஐ.ஏ.எஸ்.,
வேளாண்மைத்துறை இயக்குநர்


வேளாண்மை நம் நாட்டின் உயிர்த் தொழிலாகும். சுமார் 70 சதவிகித மக்களின் உயிர்நாடியாக உழவுத் தொழில் இருந்து வருகிறது. எனவே தான் உழவுத் தொழிலை இந்நாட்டின் முதுகெலும்பாகப் போற்றி ஏனைய தொழில்களைக் காட்டிலும் இதற்குப் பெருமளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு தொழில்களுக்கும் அச்சாணிபோன்று விளங்குகின்ற இப்பயிர்த் தொழிலை அறிவியலின் துணை கொண்டு ஆக்கந்தரும் வகையில் திட்டங்கள் வகுத்து, இன்று தமிழ்நாடு உணவுதானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதுடன் அண்டை மாநிலங்களுக்கு வழங்கும் நிலையையும் எய்தி உள்ளது என்றால் அதற்குத் தமிழ்நாடு அரசு செயலாற்றிய வேளாண் துறையின் பல்வேறு திட்டங்களின் பலனும், உழவர் பெருமக்களின் அயராத உழைப்பும்தான் காரணம்.

கடந்த ஆண்டுகளின் பயிர் உற்பத்தியையும், தற்போது உற்பத்தி அளவினையும் ஒப்பிட்டு நோக்குவோமேயானால் பயிர் உற்பத்தியில் வேளாண்துறையின் அரிய பணி விளங்கும்.

| | | 1970-71 | 1978-79 |
|---|---|---|---|
| நெல் | ... | 50.07 | 64.00 |
| சிறுதானியங்கள் | ... | 15.04 | 20.00 |
| பயறு வகைகள் | ... | 1.33 | 3.25 |
| எண்ணெய் வித்துக்கள். | | 10.36 | 14.07 |
| பருத்தி | ... | 3.23 | 4.96 |
| கரும்பு | ... | 10.74 | 19.50 |

மேற்கூறிய முக்கிய உணவுப் பயிர்களின் உற்பத்தியினைப் பெருக்கியதோடு காய்கறிப் பயிர்கள், பழவகைகள் மற்றும் மலர்ப் பயிர்கள் என அனைத்துப் பயிர்களின் உற்பத்தியும் கணிசமான அளவு அதிகப்படுத்தப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளின் செயல்முறை, சாதனைகளைக் கருத்திற் கொண்டும், தற்போதுள்ள நிலையினையும் வருங்காலத் தேவையினையும் கருதி 1979-'80ஆம் ஆண்டில் உணவுப் பயிர்களின் உற்பத்தி 88.73 இலட்சம் டன் என்ற அளவிலும், வர்த்தகப் பயிர்கள் உற்பத்தி 36.45 இலட்சம் டன் என்ற அளவிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரிசி மற்றும் சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவதில் கடந்த சில ஆண்டுகளில் பெருமளவு முன்னேற்றத்தை நாம் எய்தியுள்ளோம். சாதகமற்ற பருவநிலையைக் கொண்டிருந்த ஆண்டுகளிலும் அரிசி மற்றும் சிறு தானியத்தில் தன்னிறைவு அடைந்துள்ளோம். குறிப்பிட்ட பரப்பில் உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலம் மிகுதிப் பரப்பைத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்கக் கூடிய பிற பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு ஏற்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே வரும் ஆண்டில் அரிசி உற்பத்தி 64.00 இலட்சம் டன்னில் இருந்து 65.00 இலட்சம் டன்னிற்கு அதிகரிக்கப்படும். இது உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் அடையப்பெறும். அதேசமயம் தற்போது நெல் சாகுபடியாகும் 27.00 இலட்சம் எக்டேர் பரப்பில் இருந்து 26.50 இலட்சம் எக்டேர் பரப்பிற்குக் குறைக்கப்பட்டு அதன் மூலம் உபரியாகும். 50,000 எக்டேர் பரப்பு வேர்க்கடலை, பருத்தி சாகுபடிக்கு ஒதுக்கப்படும். இதன் மூலம் தேவைக்கும், உற்பத்திக்கும் உள்ள இடைவெளி குறைக்கப்படும்.

**நெல் மற்றும் சிறுதானியங்கள் :**

புதிய அமோக விளைச்சல் இரகங்களையும், வீரிய ஒட்டு இரகங்களையும் புகுத்துவதன் மூலமும் அவற்றைப் புதிய பரப்புகளில் பயிரிடுவதன் மூலமும், அரிசியில் கடந்த

ஆண்டின் உற்பத்தி அளவைவிட ஒரு இலட்சம் டன் உயர்த்தவும், சிறுதானியத்தில் 0.15 இலட்சம் டன் கூடுதலான உற்பத்தியைப் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.



**பயறு வகைகள் :**

11.00 இலட்சம் எக்டேரில் தற்போது பயிரிடப்படும் பயறுவகைகளின் பரப்பளவு 1979-80-ஆம் ஆண்டில் 11.60 இலட்சம் எக்டேர் பரப்பளவுக்கு உயர்த்தப்படும். பயறு வகைகளைத் தனிப் பயிராகவும் கலப்புப் பயிராகவும் மற்றும் நெல் தரிசுகளில் பயிரிடுவதன் மூலமும் இக்கூடுதல் பரப்பளவிற்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தரமான விதைகள், சமச்சீர் உரங்கள், நுண்ணுயிர்க் கலவை பயன்படுத்துதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரித்தல் போன்ற மேம்படுத்தப்பட்ட உற்பத்தித் தொழில் நுட்பங்களைக் கையாண்டு 3.58 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும்.

**எண்ணெய் வித்துக்கள் :**



உணவுக்குப் பயன்படும் எண்ணெயின் தேவை நாளுக்கு நாள் அதிகரிப்பதைப் பூர்த்தி செய்யும் வகையில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 14.67 இலட்சம் டன்னிலிருந்து 16.03 இலட்சம் டன்னிற்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பும் 13.37 இலட்சம் எக்டேரிலிருந்து 14.57 இலட்சம் எக்டேருக்கு அதிகரிக்கப்படும். இக்கூடுதல் பரப்பு அதிக அளவு உற்பத்தித் திறன் பெறும் வகையில் இறவையாகப் பயிரிடுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் ஜிப்சம் இடுதல் போன்ற புதிய தொழில்நுட்பத் திறன்களைத் தீவிரப்படுத்தி உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும்.

தென்னை பயிரிடப்படும் பரப்பு மற்றும் அதன் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும் பணியும் தீவிரப்படுத்தப்படும். இதற்காக நடப்பு ஆண்டில் கடந்த ஆண்டைக் காட்டிலும் 1 இலட்சம் அதாவது 13 இலட்சம் கன்றுகள் விநியோகிக்கப்படும். பெருகி வரும் நெட்டை-குட்டை-ஒட்டு இரகத் தென்னங்கன்றுகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டைப் பகுதியில் ஒரு இலட்சம் நெட்டை குட்டை ஒட்டு இரகத் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.



**பருத்தி :**

2.90 இலட்சம் எக்டேர் பரப்பில் 3.75 இலட்சம் பேல்கள் என்ற அளவில் இருந்து 1979'-80-ஆம் ஆண்டு 3.50 இலட்சம் எக்டேர் பரப்பில் 4.40 இலட்சம் பேல்கள் பருத்தி உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைச் செயலாக்க, தரமான விதைகள் உபயோகித்தல், சமச்சீர் உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட உழவியல் முறைகளை அனுசரித்தல் ஆகியவை பருத்தி பயிரிடப்படும் முழுப் பரப்பிலும் மேற்கொள்ளப்படும். மேலும் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள், மானிய விலையில் விசைத் தெளிப்பான்கள் வழங்குதல், 100 சத மானியத்துடன் செயல் விளக்கத் தளைகள் அமைத்தல், விதை விநியோகத்திற்குத் தேவையான விதைப் பண்ணைகள் அமைத்தல் ஆகியவற்றுடன் தஞ்சை மாவட்டத்திலுள்ள நீர் வசதியையும் பருத்தி பயிரிடுவதற்குள்ள வாய்ப்பினையும் கருத்தில் கொண்டு பருத்தி பயிரிடுவதற்கென ஒரு கோடைக்காலத் திட்டமும் செயல்படுத்தப்படும்.

**கரும்பு :**

1978-'79 ஆம் ஆண்டின் வெல்ல உற்பத்தி 19.50 இலட்சம் டன்கள் என எதிர் பார்க்கும் அளவில் இருந்து சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தாமல் உற்பத்தித் திறனை உயர்த்துவதன் மூலம் 1979-'80 ஆம் ஆண்டில் 19.67 இலட்சம் டன்களுக்கு உயர்த்தப்படும். தரமான விதைக்கரணைகளை அபிவிருத்தி செய்து விநியோகம் செய்வதன் மூலமும் மற்றும் திருத்திய பயிர் உற்பத்திக்கான தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலமும் கரும்பு சாகுபடியாகும் பரப்பு அனைத்தையும் அமோக விளைச்சல் இரகங்களின் கீழ்க் கொண்டு வருவதன் மூலம் இக் குறியீட்டை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

**இடுபொருட்கள் வழங்குதல் :**

விவசாயிகளுக்கு விதைகள், உரங்கள், மற்றும் பூச்சி மருந்துகளைக் காலத்தே தேவையான அளவிற்கு வழங்குவதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தரமுள்ள இடுபொருட்களை வழங்குவதற்காகத் தரக்கட்டுப்பாடு முறைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. 1979-'80-ஆம் ஆண்டில் இத்துறை 9,500 டன்கள் நெல், 275 டன் கரும்பு, 480 டன் சோளம், 160 டன் மக்காச்சோளம் மற்றும் 175 டன் கேழ்வரகு என்ற அளவில் சான்றிதழ் பெற்ற விதைகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உர அளவில் 1978-'79 ஆம் ஆண்டில் 3.00 இலட்சம் டன் தழைச்சத்து 0.80 இலட்சம் டன் மணிச்சத்து 0.80 இலட்சம் டன் சாம்பல்சத்து என்ற அளவில் இருந்தது.

1979-'80-ல் 3.40 இலட்சம் டன் தழைச்சத்து, 0.90 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.90 இலட்சம் டன் சாம்பல் சத்துள்ள உரங்கள் விநியோகிக்கப்படும். பசுந்தாள் உர விதை விநியோகம் மேற்கொள்ளப்படுவதுடன், நீலப்பச்சைப் பாசியைத் தயாரித்து அதன் உபயோகத்தை அதிகப்படுத்துவது, நுண்ஊட்டச் சத்துக்களை இடுதல் போன்ற பணிகள் தீவிரப்படுத்தப்படும்.

உணவு உற்பத்தியில் பயிர்ப் பாதுகாப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயிகள் தடை இல்லாமல் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளத் தேவையான பூச்சிமருந்துகள் அவ்வப்போது கிடைக்க, தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இத்துறையிடம் உள்ள பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளைப் பழுதுபார்த்து நல்ல முறையில் வாடகைக்கு விடும் வகையில் பழுது பார்க்கும் ஏழு நடமாடும் நிலையங்களும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பயிர்ப் பாதுகாப்புப் படையும் தொடர்ந்து செயல்படும். 1979-80ஆம் ஆண்டில் மேலும் 1000 விசைத் தெளிப்பான்கள்





வாங்கி வாடகைக்குவிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**புதிய இரகங்கள்:**



விவசாயிகளுக்குப் பல புதிய இரகங்களை வெளியிடும் இத்துறை இவ்வாண்டு நெற்பயிரில் ஆடுதுறை-33, ஆடுதுறை-34, ஆடுதுறை-35, ஐ. ஆர். 34, என்எல். ஆர். 9672, அம்பாசமுத்திரம்-14 இரகங்களும், கோவில்பட்டி-7 (கே-7) கேழ்வரகு, கோவில்பட்டி-1 (கே. 1) சாமை, கோவில்பட்டி-1 (கே-1) வரகு, திண்டிவனம்-1 (டி. எம். வி. 1) உளுந்து, ஆடுதுறை-2 (ஏ. டி. டி. 2) உளுந்து, திண்டிவனம்-6 (டி. எம். வி.-6) எள் என 12 புதிய இரகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இரகங்கள் யாவும் தனித்தனிச் சிறப்பு வாய்ந்தது. வேளாண் பெருங்குடி மக்கள் தங்கள் பகுதிக்கு ஏற்பப் பயிரிட்டுப் பலன் பெறலாம்.

**மானாவாரிச் சாகுபடி :**



பொருளாதாரத்தில் பின் தங்கிய பெரும்பான்மையான கிராம மக்களின் வளர்ச்சிக்கு மானாவாரிச் சாகுபடியில் கவனம் செலுத்துவது இன்றியமையாதது ஆகும். நவீன தொழில் நுட்பங்களின் உதவியுடன் பல்வேறு மானாவாரிச் சாகுபடி முறைகளைப் பரப்புவதன் மூலம் தீவிர சாகுபடிகளை அதிகரிக்கச் செய்வது, உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, இப்பகுதிகளை மேம்பாடு செய்யப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**நீர்பிடிப்புப் பகுதிப் பராமரிப்பு :**

நடப்பு ஆண்டில் மானாவாரிப் பகுதிகளில் நீர் பிடிப்புப் பகுதிகளைத் தெரிந்தெடுத்து 1000 ஏக்கர் பரப்பளவு கொண்ட செயல் விளக்கப் பாத்திகள் மாவட்டத்திற்கு ஒன்று முதல் இரண்டு பல்வேறு மானாவாரிச் சாகுபடி முறைகளைப் பரப்பும் வகையில் அமைக்கப்படும்.

**நில அபிவிருத்தி :**



டிராக்டர்களையும், புல்டோசர்களையும் கொண்டு 2,50,00 மணி நேரம் வேலை செய்து 7000 எக்டேர் பரப்பளவைச் சமன்படுத்தவும் 22500 எக்டேர் பரப்பளவை உழுவதற்கும் 1979-80-ல் திட்டமிடப்பட்டுள்ளது.

நிலையான மகசூல் பெற வேண்டுமென்றால் நீர்ப்பாசனமுறைகள் அவசியம். சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்கள், ஆழ் குழாய்க் கிணறுகள், கிணற்றில் துளையிடுதல், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதலின் மூலம் நிலத்தடி நீரை வெளிக் கொணர்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். 1978-79ஆம் ஆண்டு 4692 குழாய்க் கிணறுகளும் 2587 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டன. 2573 கிணறுகளும், ஆழ்ப்படுத்தப்பட்டன. மேலும் 2563 கிணறுகளில் துளையிடும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கும், கூடுதலான பரப்பைக் கொணர்வதற்கும், 1979-'80 ஆம் ஆண்டில் 4300 குழாய்க் கிணறுகள், 2500 வடிமுனைக் குழாய்க்கிணறுகள் அமைக்கவும் நீர்த் திறனை அதிகப்படுத்த 2200 கிணறுகளில் துளைகள் இடவும் திட்டமிடப்பட்டுள்ளது. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1978-'79 ஆம் ஆண்டில் 42,820 எக்டேர் பரப்பளவில் மண் அரிப்புப் பணிகள் சமவெளியிலும், மலைப்பாங்கான பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. நடப்பு ஆண்டில் 60,000 எக்டேர் பரப்பில் இப் பணி விரிவாக்கப்படும்.

**கீழ் பவானித் திட்டத்தின் கீழ், கூடுதல் எள் உற்பத்தி :**

இதுவரை இல்லாத வகையில், கீழ் பவானித் திட்டத்தின் இந்த ஆண்டில் தண்ணீர் திறந்து விடப்பட்டதால் விவசாயிகள் 3-வது பயிராக 32,000 எக்டேர்களில் எள் பயிரிட்டனர். இதன் மூலம் சுமார் 16,000 டன் எள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு சுமார் 6 கோடி ரூபாய் வருமானம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**மேட்டூர் அணை திறப்பு :**

12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு தான் ஜூன் மாதம் 12-ஆம் தேதி பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டு 2 இலட்சம் எக்டேர் நிலத்தில் தஞ்சை விவசாயிகள் குறுவை பயிரிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**பயிற்சித் திட்டம் :**

நாள்தோறும் தோன்றிவரும் புதிய வேளாண்மை விஞ்ஞான முறைகளை எளிதில் மக்களிடையே பரப்பும் நோக்குடன் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1979-'80-ஆம் ஆண்டில் சுமார் 30,000 விவசாயிகளுக்கு இந்த நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

வேளாண் நுணுக்கங்களை முதல் கட்ட அளவில் மே 21 முதல் 26 முடிய இத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் இத்துறை அலுவலர்களால் அளிக்கப்பட்டது. படிப்படியாக இப்பயிற்சி, உழவர்களுக்கும் அளிக்கப்படும்.

தமிழ்நாடு இன்று திட்டமிட்ட வேளாண்மை வளர்ச்சியை நிர்மாணித்து உற்பத்தியில் முன்னணியில் உள்ளது என்றால் அது மிகையாகாது. இது, இத்துறை மேற்கொள்ளும் ஆய்வுகளும், விரிவாக்கப் பணிகளும், பயிற்சித் திட்டங்களும், அரசின் உதவிகளும், உழவர்களின் உன்னதமான உழைப்புடன் சேர்ந்து மேலும் வளர்ச்சியடைந்து தமிழகத்தின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு வழிவகுக்கும் என்பது திண்ணம்.





## தர்மபுரியில்

# தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

சங்க காலக் கொடைவள்ளலான அதியமான் ஆட்சி புரிந்து வந்த அந்நாளில் தகடூர் என வழங்கப்பட்ட இந்நாளைய தர்மபுரியில் தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா ஜூன் 30-ஆம் நாளன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்கு அணி திரண்டு வந்திருந்த பொதுமக்களை கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பெரியசாமி வரவேற்றார். அவர், தமது உரையில் குறிப்பிட்டார்:

'தர்மபுரியில் தந்தை பெரியாரைப் பின்பற்றுபவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவரது சீர்திருத்தக் கொள்கைக்கு மிகுந்த ஆதரவை இந்த ஊர் வழங்கியிருக்கிறது. எனவே தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா இங்கே கொண்டாடப்படுவது பொருத்தமானது''.

விழாவைத் தொடங்கிவைத்த மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பெரியாரது நூல்கள் ஆங்கிலத்தில் வரவில்லை. நேரு-இங்கர்சால்-சாக்ரடீஸ் ஆகியோரின் கருத்துக்களை இன்று நாம் எடுத்துப் பேசுகின்றோமே அதற்குக் காரணம் என்ன? அவர்களது கருத்துக்கள் உலக மொழியாம் ஆங்கிலத்தில் இருப்பதனால் தான்!

''நம்முடைய தலைவர்களைக் குடத்திலிட்ட விளக்காக ஆக்கி விட்டோம் - குன்றிலிட்ட தீபமாக மாற்றவில்லை. நல்லவேளை அறிஞர் அண்ணா நாடாளுமன்றம் சென்றதால் - அங்கு ஆங்கிலத்தில் உரையாற்றியதால் இந்தியாவின் மற்ற மாநிலத்திவர் நம்மைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்டார்கள். எனவே பெரியார், அண்ணா ஆகியோரின் நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்தால் நமது தமிழகத்திற்கு நல்ல பாராட்டுக் கிடைக்கும்.''

கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம், தமது உரையில் குறிப்பிட்டார்:

''நாட்டில் எத்தனையோ தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் சீர்திருத்த இயக்கத்தில் இறங்கியதில்லை. அப்படியே இறங்கினாலும் வெற்றிபெற்றதில்லை. பெரியார் ஒருவர்தான் தன்வாழ் நாளிலேயே வெற்றி பெற்றவர்''

அடுத்து, புரட்சி 'எழுத்தாளர் பெரியார்' என்னும் தலைப்பில் பேசிய திரு எ.வே. திருவரசன் தமது உரையில் குறிப்பிட்டார்.

''பணம் சம்பாதிக்கும் வியாபாரிகள் நிறைந்த இந்த நாட்டில், சொந்தப் பணத்தில் 'பகுத்தறிவுப் பிரச்சாரப் புத்தகங்களைத் தயாரித்து வெளியிட்டு, பதினைந்து காசு, இருபது காசு என்று, குறைந்த விலைக்குக் கொடுத்தவர் பெரியார்''.

அடுத்து, 'புரட்சிப் பேச்சாளர் பெரியார்' என்னும் தலைப்பில் பேசிய திரு வே. அறிவுமணி, தமது உரையில் குறிப்பிட்டார்:

''தாழ்ந்த-தன்மானம் இழந்த தமிழகத்தைச் சீர்திருத்தப் பெரியார் கையாண்ட முறை, பேச்சு, அக்காலத்தில் மக்கள் மாக்களாக செந்நாய்களாக - ஓநாய்களாக-காட்டு மிராண்டிகளாக இருந்தார்கள். அவர்களிடத்தில் எழுத்தை வைக்கக்கூடாது-பேச்சை வைக்கவேண்டும் என்று கருதினார் பெரியார்''.

அடுத்து, 'அறப்போர் வீரர் பெரியார்' என்னும் தலைப்பில் பேசிய வழக்கறிஞர் திரு ஆர். கஸ்தூரி, தமது உரையில் குறிப்பிட்டார்.

''பெரியார் ஒரு புது மாதிரியான சிந்தனையில் வாழ்ந்து - புதுமாதிரியான சிந்தனையில் செயல்பட்டார். அவரது முயற்சியினால்தான் நம்மவர்கள் அரசுத் துறையில் பெரும்பான்மையில் பணிபுரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது''.

அடுத்து, 'பெண்ணுரிமை பேணிய பெரியார்'' என்னும் தலைப்பில் உரையாற்றிய திருமதி விசாலக்குமி சிவலிங்கம் குறிப்பிட்டார்:

''பெண்களை நாயினும் கேவலமாக நடத்தியது நமது நாடு. இந்த நிலை மாறி - மறுமலர்ச்சி காண விரும்பியவர் தந்தை பெரியார்.''

அடுத்து, 'சீர்திருத்தச் செம்மல் பெரியார்' என்னும் தலைப்பில் உரையாற்றிய சிலம்பொலி திரு சு. செல்லப்பன் குறிப்பிட்டார்:

''கண்டவாறு இருந்த சமுதாயத்தைச் சீர்திருத்தி, ஒழுங்குபடுத்தி, நிலையான சமுதாயமாக மாற்றிய பெருமை பெரியாருக்கு உண்டு. உலகத்தில் தோன்றிய பல சீர்திருத்தவாதிகள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒருதுறையில் மட்டுமே சீர்திருத்தம் செய்தார்கள். எல்லாரும் சேர்ந்து செய்ய வேண்டிய சீர்திருத்தத்தைப் பெரியார் ஒருவரே செய்தார்''.

அடுத்து, ''பெண்ணடிமை சாடிய பெரியார்'' என்னும் தலைப்பில் உரையாற்றிய பேராசிரியை திருமதி கே.எஸ். இராசமாணிக்கம் குறிப்பிட்டார்:

''பகுத்தறிவுக் கோடரியைக் கையிலேந்தி - அறிவுப் பாதையில் துணிவைத் துணையாகக் கொண்டு நடந்த பெரியார், பெண்களது அறியாமை நீங்க வேண்டும் என்று கூறினார்.''

அடுத்து, 'தொண்டிற் சிறந்தவர் பெரியார்' என்னும் தலைப்பில் உரையாற்றிய புலவர் திரு இரா.பெ. இராமச்சந்திரனார் குறிப்பிட்டார்:

''பெரியார் ஏடுகளை நடத்தித் தொண்டு செய்தார்; அறப்போர் நடத்தித் தொண்டு செய்தார்; நூல்களை வெளியிட்டுத் தொண்டு செய்தார். அரை நூற்றாண்டுக்கு முன்பே, சம தர்ம சமுதாயம் அமைய வேண்டும் என்று முழங்கிய பெரியார் ஒரு தனி மனிதரல்லர் - ஓர் இயக்கம்.''

அடுத்து, 'சிந்தனையாளர் பெரியார்' என்னும் தலைப்பில் உரையாற்றிய திருக்குறளார் திரு வீ. முனிசாமி தமது உரையில் குறிப்பிட்டார்;

''யார் புதிய புதிய கருத்துக்களைச் சொல்கிறாரோ அவர் சிந்தனையாளர்; எந்த தேசம் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கிறதோ அது சிந்தனையுள்ள நாடு என்று சொல்லலாம்.''

''மேடையில் ஒரு புதுத் திருப்பத்தை உருவாக்கியவர் பெரியார். 'என்னறிவுக்குப் பட்டதைச் சொல்கிறேன்; உன் அறிவுக்குப் பட்டால் எடுத்துக்கொள், என்று முதன் முதலில் சொல்லியவர் பெரியார்''.

பின்னர் சட்டமன்ற உறுப்பினர் திரு எச். ஜி. ஆறுமுகம் நன்றி தெரிவிக்க, கருத்தரங்கம் முடிவுற்றது.

பிற்பகல் 5 மணி அளவில் - தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கருத்து விளக்க அலங்காரவண்டிகள் கொண்ட சிறப்பு அணிவகுப்பு ஊர்வலம் தர்மபுரி ஏரிக்கரையிலிருந்து புறப்பட்டு - அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளித் திடலை அடைந்தது. என்.சி.சி. அணி-சாரணர்படை-ஊர்க்காவல்படை-மகளிர்-மாணவர் ஆகியோர் எழுச்சியுடன் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இரவு 7 மணிக்குமேல் அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளித் திடலில், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது, மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு க. இராசாராம் வரவேற்புரை நிகழ்த்தினார்: அப்போது அவர் குறிப்பிட்டார்:

''தர்மபுரிக்கும் தந்தை பெரியாருக்கும் நீண்ட காலத் தொடர்பு உண்டு! தர்மபுரி மாவட்டத்தின் 75 சதவீத கிராமத்திற்குப் பிரச்சாரம் செய்யப் பெரியார் சென்றுவந்திருக்கிறார். பெரியாரது இரண்டாவது சிலை தர்மபுரியில் தான் அமைக்கப்பட்டது. இன்று தமிழகம் எங்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் தந்தை பெரியாரின் தொண்டுதான் என்பதை நாம் மறக்கக் கூடாது''.

விழாவுக்குத் தலைமை ஏற்ற டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் தமது உரையில் குறிப்பிட்டார்:



''செயற்கரிய செய்வர் பெரியர் என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்பவர் பெரியார். அய்ந்தாம் வகுப்பு வரையில் படித்த பெரியாரை எம்.ஏ. படித்த அண்ணா தலைவராக ஏற்றுக் கொள்ளக் காரணம் என்ன? அவர் எடுத்துச் சொன்ன கருத்துக்களை வேறு எவரும் எடுத்துச் சொல்லாத காரணத்தால்!

''மதப்பற்று - இனப்பற்று - கடவுள்பற்று எனக்குக் கிடையாது. மனிதப் பற்றுத்தான் உண்டு என்று சொன்னார் பெரியார். மனிதனை மனிதனாக்குவதற்கு அவர் பெருந்தொண்டு புரிந்தார்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து குறிப்பிட்டார்:

''சமுதாய சீர்திருத்தப் பணியில் தம்மை முழுமூச்சாக ஈடுபடுத்திக் கொண்டவர் பெரியார். சீர்திருத்தச் சிப்பாயாக இறுதி மூச்சு உள்ளவரை வாழ்ந்தவர். சமுதாய சீர்திருத்தம் என்பது தேனிலே பலாச்சுளை தோய்ப்பது போன்ற இனிமையான காரியம் அல்ல - மலையிலே ஏறி மூலிகை எடுப்பது போன்ற சிரமமான பணி - அந்தப் பணியிலே பெரியார் ஆர்வமுடன் ஈடுபட்டார்''.

அடுத்துப் பேசிய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் குறிப்பிட்டார்:

''எதையும் முரட்டுத்தனமாகச் சொல்வார் தந்தை பெரியார். அவரது சமதர்மப் பிரச்சாரம் வலுவானது. நமது மக்கள், சமுதாயத்தில் சமமாகக் கருதப்படவில்லை என்றால், பயன்இல்லை என்று கருதினார். அதனால் அரசியலைத் தள்ளி வைத்துச் சுய

மரியாதைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்''.

அடுத்து உரையாற்றிய திரு. முனிவேலு குறிப்பிட்டார்:

''தந்தை பெரியார் தோன்றியிருக்காவிட்டால் நாம் தலை நிமிர்ந்திருக்க முடியாது! பெரியாருடைய லட்சியங்களை - கருத்துக்களை - எண்ணங்களை - கொள்கைகளை - நாம் உயிர்மூச்சாகக் கருத வேண்டும்.''

பின்னர் உரையாற்றிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி, தமது உரையில் குறிப்பிட்டார்:

''மற்ற அரசியல் தலைவர்களுக்கும் பெரியாருக்கும் வேறுபாடுகள் அதிகம். பெரியார் இயல்பாகவே வசதிபடைத்த தலைவராக இருந்ததால், பொது வாழ்க்கையில் மிகச் சிறந்து



விளங்கினார். 95 வயது வரை - இறுதி மூச்சு உள்ளவரை - அவர் புயல் எனச் சுற்றிப் பணிசெய்து வந்தார். 94-வது வயதில்கூட வருடத்துக்குரிய 365 நாட்களில் 360 நாட்கள் வெளியே சுற்றுப் பயணம் செய்து வந்தார்''

அடுத்து உரையாற்றிய திரு. கு. கிருஷ்ணசாமி குறிப்பிட்டார்:

''1925-ஆம் ஆண்டிலிருந்து சமுதாய சீர்திருத்தம் என்னும் போர்க் கொடியைத் தூக்கி ஒவ்வொரு போராட்டத்திலும் மாபெரும் வெற்றி பெற்றவர் தந்தை பெரியார். நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு எது தடையாக உள்ளதோ அதை ஒழிப்பதுதான் என் வேலை என அவர் கூறினார்.''

பின்னர் உரையாற்றிய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''நாடு முன்னேற வேண்டும் என்றால் பெண் இனம் அறிவு பெற வேண்டும். பெண்கள் அரசியலில் மட்டுமல்ல பல துறைகளிலும் பங்கு பெற வேண்டும் என்று கூறினார் பெரியார். நான்கு சுவர்களுக்குள் அடங்கிய பெண்கள் நான்கு பேர் தூக்கிச் செல்கின்ற நாளில்தான் வெளியே வரமுடியும் என்ற இழிநிலை இருந்தது. அந்த இழிநிலையை ஒழிக்கப் பெரியார் முன்வந்தார்.''

அடுத்துப் பேசிய மேலவை உறுப்பினர் திரு கே. எஸ். அப்துல் வகாப் தமது உரையில் குறிப்பிட்டார்:

''தந்தை பெரியார் இந்த நூற்றாண்டில் தோன்றிய சீர்திருத்தவாதிகளில் தலை சிறந்த சீர்திருத்தவாதி: அவர் சாதாரணத் தலைவர் இல்லை; அகில உலகத் தலைவர். உயர் கல்வி பெற அவருக்கு வாய்ப்பில்லை. ஆனால், அனுபவக் கல்வி இருந்தது!''

அடுத்துப் பேசிய திரு நெ.து. சுந்தரவடிவேலு, தமது உரையில் குறிப்பிட்டார்:

''தாம் வகித்திருந்த 28 பதவிகளை, சமூக சீர்திருத்தப் பணியின் காரணமாகத் துறந்து விட்டார் பெரியார். அவரைத் தேடிவந்த ராவ் பகதூர் பட்டத்தையும் அவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.''

அடுத்து உரையாற்றிய திருவாரூர் திரு கே. தங்கராசு தமது உரையில் குறிப்பிட்டார்:

''இந்த நாட்டில் மட்டுமல்ல - வெளிநாடுகளிலும் பரப்பக்கூடிய அளவுக்குத் தகுதி படைத்த அறிவுக் கொள்கைகளை அய்யா வழங்கிச் சென்றிருக்கிறார். கம்யூனிசக் கொள்கைகூட, பொருளாதாரத்தைப் பொதுவாக்குதல் என்பதுதான். ஆனால், பிறவி இழிவை ஒழிப்பதற்கு அங்கே வழிமுறை சொல்லப்படவில்லை. பிறவி உயர்வு, தாழ்வை ஒழிக்கப் பாடுபட்டவர் பெரியார் தான்''.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைத்து விழா நிறைவுச் சொற்பொழிவை ஆற்றினார். தமது சிறப்புச் சொற்பொழிவுக்கு முன்னர், தர்மபுரியிலிருந்து கிராமப்புறங்களுக்குச் செல்லும் பத்து வழித்தடங்களில் போக்குவரத்தைத் துவக்கி வைத்த முதல்வர் - கிராமப்புற மக்களுக்குப் பல்வேறு கடன் உதவிகள் - வழங்கியதுடன், கலப்புத் திருமணத்தை மேடையில் நடத்தி வைத்தார்.

சிறப்புரையில் முதல்வர் குறிப்பிட்டார்:

''அமரர் அய்யா அவர்கள் தனது கொள்கைகளைத் தெளிவாக வகுத்துத் தந்துள்ளார். கொள்கைகளை எங்கிருந்தும் அவர் இரவல் வாங்கவில்லை. **தான் எந்தப் பலனையும் பெற வேண்டும் என்பதற்காக அவர் கொள்கைகளை வலியுறுத்தவில்லை. மனித சமுதாயம் நன்மை பெற வேண்டும் என்பதற்காக வலியுறுத்தினார்.**

''சீர்திருத்தவாதிகளை அரசியல்வாதிகளாக்கியவர் தந்தை பெரியார். உள்ளத்தில் தோன்றியதை யாருக்கும் அஞ்சாமல் மக்களுக்கு எடுத்துரைத்த சீர்திருத்தவாதி அய்யா அவர்கள்.

''சிந்தித்துப் பார்க்கும் அறிவு ஒருவனுக்கு வேண்டும். அதை வலியுறுத்திச் சொன்னதால்தான் அய்யா அவர்களுக்கு ஆண்டு முழுவதும் பிறந்தநாள் விழா கொண்டாடுகிறோம்.

**''அய்யாவின் புத்தகத்துக்கு இருந்த தடையை இந்த அரசு தான் நீக்கியுளளது. தந்தை பெரியாரின் சீரிய கருத்துக்களின்படி இந்த அரசு செயல்படுகிறது''.**

விழா நிறைவுச் சொற்பொழிவிற்குப் பின்னர் மாவட்ட ஆட்சியாளர் திரு எஸ். சிவசுப்பிரமணியம் நன்றி நவின்றார். பின்னர், நடிப்பிசைப் புலவர் நாடக மன்றத்தவர் நடத்திய பேரறிஞர் அண்ணா அவர்களின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகம், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திரு சமரசம் தலைமையில் நடைபெற்றது. பின்னர் சட்டமன்ற உறுப்பினர் திரு கே. ஆர். சின்னராசு நன்றி கூறினார்.

தர்மபுரியில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழா தனி இடம் பெற்றுத் திகழ்கிறது.

**நிகழ்ச்சித்தொகுப்பு**
**— தமிழ்ப்பித்தன்.**



# தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகத்தின்
# சாதனைகள்-திட்டங்கள்

**டாக்டர் கி. வேங்கடராமன், ஐ.ஏ.எஸ்.,**
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,**
**தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், சென்னை.**

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் 1966-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக் கழகத்தின் முக்கிய நோக்கங்கள்-

வேளாண்மை, கால் நடைப் பராமரிப்பு, மீன் வளம், கோழி வளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

உணவுப் பண்டங்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

கடந்த 12 ஆண்டு காலத்தில் இக் கழகம், வரி விதிக்கப்படுவதற்கு முன் ரூ. 73.11 இலட்சம் லாபம் அடைந்துள்ளது.

போச்சம்பள்ளியில் சூரிய காந்தி எண்ணெய் எடுக்கும் ஆலை துவங்குதல், உடுமலைப்பேட்டையில் வேளாண்மைத் தொழில்கள் கூடம் துவங்குதல், சுத்திகரிக்கப்பட்ட சூரிய காந்தி எண்ணெய் (சனோலா) மற்றும் கடலை எண்ணெய் (கடேலா) விற்பனை செய்தல், எண்ணெய் எடுக்கப்பட்ட கடலைப் புண்ணாக்கு ஏற்றுமதி ஆரம்பித்தல் போன்ற பணிகள் 1978 - 79 ஆண்டில் இக் கழகத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.

**நடைபெற்று வரும் பணிகள்:—**

பொறியியல் பணிகள், டிராக்டர்கள், விசைக் கலப்பைகள் (Power Tillers) விற்பனை செய்தல்.

1973 வரை இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை விற்பனை செய்வது இக்கழகத்தின் முக்கியப் பணிகளுள் ஒன்றாக இருந்தது. டிராக்டர்கள் இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டதும் உள்நாட்டிலேயே உற்பத்தியாகும் நான்கு வகையான டிராக்டர்களை விநியோகம் செய்யும் பணியை இக்கழகம் மேற்கொண்டுள்ளது.

இதுவரை (நவம்பர் 1978 முடிய) ரூ. 550.35 லட்சம் மதிப்புள்ள 2696 டிராக்டர்களை ரொக்கத்திற்கு விற்பனை செய்துள்ளது. இதைத் தவிர 350 டிராக்டர்களை தவணைக்கொள்முதல் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.

**உதிரி பாகங்கள்**

நியாயமான விலையில் குறித்த காலத்தில் டிராக்டர்களுக்கான உதிரி பாகங்கள் வழங்குவதற்காகவும், டிராக்டர்களைச் சீரான முறையில் வைத்துக் கொள்வதை உறுதி செய்வதற்காகவும் தேவைப்படுகின்ற அளவு உதிரி பாகங்கள் இறக்குமதி செய்வதோடு மட்டுமின்றி அவற்றிற்கு இணையான உதிரி பாகங்களை உள்நாட்டிலேயே பெற்று இருப்பில் வைத்து, எட்டு விற்பனைக் கூடங்கள் வழியாக விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது.

இக் கூடங்கள் சென்னை, பொன்னேரி, மதுராந்தகம், திருச்சிராப்பள்ளி, மதுரை, பண்ருட்டி, மாயூரம், சேலம் ஆகிய இடங்களில் உள்ளன.

1978-79-ஆம் ஆண்டில் மேலும் ஒரு விற்பனைக் கூடம் திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் தேவைக்கேற்ப இவ் விற்பனைக் கூடங்கள் தமிழ்நாடு முழுவதும் திறக்கப்படும்.



1978-ஆம் ஆண்டு நவம்பர் இறுதி வரை ரூ.269.74 இலட்சம் மதிப்புள்ள உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

1978-'79, 1979-'80 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ.81.00 லட்சமும் 95.40 லட்சமும் மதிப்புள்ள உதிரி பாகங்கள் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பழுது பார்க்கும் நிலையம்**

இக்கழகம் 1971-ஆம் ஆண்டில் டிராக்டர்கள் வாடகைக்கு விடும் திட்டத்தைத் தொடங்கியது. மொத்தம் 64 டிராக்டர்களையும், 71 விசைக் கலப்பைகளையும் (Power Tillers) கொண்ட ஏழு வட்டார நிலையங்களும் பத்துத் துணை நிலையங்களும் தற்போது இயங்கி வருகின்றன.

டிராக்டர்களை வாடகைக்கு விடுவதால் கிடைக்கும் வருவாய் இதற்கான செலவை விடக் குறைவாய் இருப்பினும் இத்திட்டம் விவசாயிகளுக்குச் செய்யப்படும் இன்றியமையாப் பணியாகக் கருதப்பட்டுத் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

தனி நபர்களின் பல்வேறு நிறுவனங்களின் டிராக்டர்களை நியாயமான செலவில் பழுது பார்த்தல், பராமரித்தல் முதலிய பணிகளை இக்கழகம் தனது வட்டார நிலையங்கள் அனைத்திலும் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் டிராக்டர்களை வாடகைக்கு விடுவதன் மூலம் 1978-'79ல் ரூ. 14.02 லட்சமும் 1979-'80-ல் ரூ. 14.51 லட்சமும் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேலைவாய்ப்புப் பெறாத வேளாண் பொறியியல் பட்ட

தாரிகளுக்கு வேளாண்பணி நிலையங்களை அமைக்கப் பயிற்சி அளிக்கும் திட்டம்.

இத்திட்டத்தின் நோக்கம் வேலைவாய்ப்புப் பெறாத பொறியியல் பட்டதாரிகள், தகுதிப் பட்டயம் பெற்றவர்கள் மற்றும் வேளாண்மைப் பட்டதாரிகள் போன்ற தொழில் நுட்பப் பட்டதாரிகளுக்கும், முன்னாள் ராணுவத்தினருக்கும் பயிற்சி அளித்து கிராமப்புறங்களில் வேளாண் தொழில்கள் ஆரம்பிக்க ஊக்குவிப்பதாகும்.

இத் திட்டம் மத்திய அரசினால் துவக்கப்பட்டு, மானியமும் அளிக்கப்பட்டு 1972-ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் இயங்கி வருகிறது. இதுவரை 284 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 201 பயிற்சியாளர்கள் இம்மாநிலத்தில் பல்வேறு கிராமப் பகுதிகளில் வேளாண் பணி நிலையங்களை அமைத்துள்ளனர்.

## பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தல்

1972-ல் இக்கழகம் பிரசித்தி பெற்ற பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரித்தலை மேற்கொண்டது. இவற்றில் முக்கியமானவை பி.எச்.சி. 10 சதம், எண்டரின் 20 சதம் ஈசி முதலியன.

அண்மைக் காலம் வரையிலும் மேற்கூறிய பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தனியார் நிலையங்களில் அவர்களுடைய உற்பத்தித் தேவைக்குப் போக மிஞ்சிய நேரங்களில் இந்நிறுவனம் தயாரித்து வந்தது. இப்போது இந்நிறுவனம் தனக்குச் சொந்தமாகவே 9.79 லட்சரூபாய் மூலதனச் செலவில் ஒரு தொழிற்சாலையை அம்பத்தூரில் ஏற்படுத்தியுள்ளது.

இத்தொழிற்சாலை 1976 செப்டம்பர் முதல்,உற்பத்தியைத் தொடங்கியது. பெருகிவரும் தேவைக்கேற்ப மற்றுமொரு ஆலை ரூ. 4 லட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

பூச்சிக்கொல்லி மருந்துகள் இந்திய தர நிர்ணயக் கழகத்தின் நிர்ணயங்களை அனுசரித்து உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு, கழகத்தின் வட்டார விற்பனைக் கூடங்கள் வழியாகவோ அல்லது வேளாண்மைத் துறையினரின் விற்பனைக் கூடங்கள் வழியாகவோ விநியோகிக்கப்படுகின்றன.

1978-79, 1979-80 ஆகிய ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் தயாரிப்புக்களை ரூ. 26.82 லட்சம் மற்றும் 35.82 லட்சம் மதிப்பளவுக்கு விற்பனை செய்யத் திட்டம் இடப்பட்டு உள்ளது.

## மீன்பிடி வலை தயாரிக்கும் திட்டம்

ரூ. 30 லட்சம் முதலீட்டில் நைலானிலிருந்தும், பாலிதீனிலிருந்தும் மீன்பிடி வலை தயாரிக்கும் தொழிற்கூடத்தை இந்தக் கழகம் நிறுவியுள்ளது.

மீன்பிடி வலை தயாரிக்கும் நான்கு இயந்திரங்களைக் கொண்டு ஆண்டுக்கு 50 மெட்ரிக் டன் எடையுள்ள மீன்பிடி வலைகளை 1976 ஆகஸ்டு திங்கள் முதல் வணிக ரீதியில் தயாரிக்க ஆரம்பித்தது.

தேவையைக் கருதி மெல்லிழை நைலான் மீன்பிடி வலைகளைத் தயாரிப்பதற்காக ரூ. 10 லட்சம் செலவில் மற்றுமொரு இயந்திரம் இறக்குமதி செய்து நிறுவப்பட்டுள்ளது.

இந்த ஆலை 1978-79, 1979-80 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 20.95 லட்சம் மற்றும் ரூ. 29.64 லட்சம் மதிப்புள்ள 14 மெட்ரிக் டன் மற்றும் 20மெட்ரிக் டன் வலைகளைத் தயாரிக்கும்.

மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் பிரிவின் தயாரிப்புத் திறனை விரிவுபடுத்தும் வகையில் மெல்லிழை தயாரிக்கும் எ.என்.டி வகை 9-00 கே. கூடுதல் இயந்திரங்களை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒருபிரிவு இந்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டது.

மற்றுமொரு பிரிவு 1979-80-ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்படும்.

## மக்கரோணி திட்டம்

1976 அக்டோபரிலிருந்து 'மக்கரோணி' தயாரிக்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதற்கான இயந்திரம் மைசூரிலிருந்தும் மத்திய உணவுப் பொருள் ஆராய்ச்சிக் கூடத்திலிருந்தும் கடனாகப் பெறப்பட்டுள்ளது.

இதன் உற்பத்தித் திறன் நாளொன்றிற்கு 250 கி. கிராம் ஆகும். மக்கரோணி வியாபார ரீதியாக நன்கு முன்னேற்றம் அடைந்து வருகிறது.

1978-79-ல் ரூ. 50,000 மதிப்புள்ள 10 மெட்ரிக்டன் 1979-80-ல் ரூ.2.00 லட்சம் மதிப்புள்ள 40 மெட்ரிக் டன் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## உடுமலைப்பேட்டை வேளாண் தொழில் தொகுதி

உடுமலைப் பேட்டையில் வேளாண் தொழில் தொகுதி ஒன்று புதிதாக நிறுவப்பட்டுள்ளது.

அதில் வேளாண் செய்முறை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. விவசாயிகள் தங்களின் உற்பத்திப் பொருள்களை உடனடியாக விற்பனை செய்ய இயலக்கூடிய ஓர் ஏற்பாடாக அமையும் கருத்துடன் இந்த வசதிகள் முறைப் படுத்தப்பட்ட அங்காடிக்குத் துணை ஏற்பாடாக உள்ளன.

## கலவை உரத் தயாரிப்பில் திருச்சிக்குப் பரிசு!

கழிவு நீர் உபயோகத் திட்டத்திற்காக சென்ற ஆண்டிற்கு மத்திய அரசு ரூ. 26.68 இலட்சத்தை மானியமாக அனுமதித்துள்ளது. இந்த மானியத்தைத் தமிழ்நாடு அரசு பல்வேறு நகராட்சிகளுக்குப் பிரித்துக் கொடுத்து கடந்த 22-3-1979 ல் ஆணை பிறப்பித்துள்ளது. நகராட்சிகள், கலவை உரம் தயாரிப்பதற்கு உதவும் திட்டத்தையும் இந்த அரசு தொடர்ந்து, சென்ற ஆண்டில் செயல்படுத்தியுள்ளது. சிறந்த முறையில் கலவை உரம் தயாரிக்கும் நகராட்சிகளின் இடையில் அனைத்திந்தியப் போட்டி ஒன்றை இந்திய அரசு நடத்தி வருகிறது. 1977-78ஆம் ஆண்டிற்காக நடத்தப்பட்ட போட்டியில் திருச்சி நகராட்சி அனைத்திந்திய அளவில் சிறந்த கலவை உரம் தயாரித்து விநியோகித்ததற்காக முதல் பரிசு பெற்றுள்ளது. அதற்காகத் திருச்சி நகராட்சிக்கு ரூ. 25,000/- ரொக்கப் பரிசு கிடைத்துள்ளது.



இந்த ஏற்பாட்டினால் இடைத்தரகர்கள் அறவே நீக்கப்படுகின்றனர்; குடியானவர்கள் தங்களின் உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலையைப் பெறுகின்றனர்.

தற்போது இது இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும். முதலாவதாக முன்னதாகச் சென்னையில் நிறுவப்பட்டு முழுவதும் பயன்படுத்தப்பட முடியாமல் இருந்து வந்த மக்காச்சோளம் உடைப்புப் பிரிவு, இப்பகுதியில் மக்காச்சோளம் அதிகமாகக் கிடைப்பதாலும், மக்காச்சோளத்திலிருந்து தயாரிக்கப்படும் பொருள்களுக்கு அதிகத் தேவை இருப்பதாலும் இத்தொகுதிக்கு மாற்றப்பட்டது.

இது, நாள் ஒன்றுக்கு 3 மெட்ரிக் டன் உடைப்புத் திறன் கொண்டதாக இருக்கும். இரண்டாவதாக உடுமலைப் பேட்டையில் ஏற்கெனவே நிறுவப் பட்டுள்ள 'குதிரை மசாலா' (லுசெர்னி) மாவு ஆலை இத்தொகுதிக்கு மாற்றப்படும்.

கால்நடை மற்றும் கோழித் தீவனத்திற்கு மிகவும் அவசியமான 'லுசர்னி' மாவு தயாரிக்கப்பட்டுச் செம்மையாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போதைய உற்பத்தித் திறன் நாள் ஒன்றுக்கு 2 மெட்ரிக் டன்கள் ஆகும்.

1979-'80ஆம் ஆண்டில் அதிக சாதனங்களை அமைப்பதன் மூலம் இது இரட்டிப்பாக்கப்படும்.

## எண்ணெய் பிழிந்தெடுக்கும் திட்டம்

சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை ஒன்றை இக்கழகம் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளியில் நிறுவியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நாட்டின் பெருகி வரும் தேவைகளுக்கேற்ப எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து சூரியகாந்தி பயிர் செய்வதை ஊக்குவிப்பதாகும்.

இத்திட்டத்தின் மொத்த மூலதனம் ரூ. 56 லட்சம். கட்டட வேலைகளும் இயந்திரங்களும் அமைக்கும் பணியும் முடிவுற்று 1978-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சோதனை முறையில் உற்பத்தியைத் தொடங்கியது.

இவ்வாலை நாள் ஒன்றுக்கு சுமார் 50 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களைப் பிழிந்தெடுக்கும். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு ஆலை நாள் ஒன்றுக்கு 20 மெட்ரிக் டன்கள் திறனும் (கரைத்து) எண்ணெய் எடுக்கும் ஆலை நாள் ஒன்றுக்கு 40 மெட்ரிக் டன்கள் திறனும் கொண்டவைகளாகும்.

இம்மாநிலத்தில் உள்ள குடியானவர்கள் சூரியகாந்தி பயிரிடுவதை ஊக்குவிக்கும் வகையில் சூரியகாந்தி விதைக்குக் குறைந்த அளவு விலையை (கிலோ கிராம் ரூ. 2.25) கழகம் வழங்கி வருகிறது.

## சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய்

இக்கழகம் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய்யை விலைக்கு வாங்கி 'சனோலா' என்ற விற்பனைப் பெயரில் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் விற்பனையை ஆரம்பித்துள்ளது.

1978 மார்ச் முடிய உள்ள ஆண்டில் இக்கழகம் ரூ. 70.24 லட்சம் மதிப்புள்ள சனோலா விற்பனை செய்துள்ளது.

1978-79, 1979-80 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 173.46 லட்சம் ரூ. 155.76 லட்சம் சனோலா விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது.

## (கரைத்து) எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, நாமக்கல்.

இத்தொழிற்சாலை, கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. இது நாளொன்றுக்கு 15 மெட்ரிக் டன் அரிசி தவிடு அல்லது நாளொன்றுக்கு 25 மெட்ரிக் டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் திறன் கொண்டதாகும். இது 1977 நவம்பர் முதல் இயங்கத் தொடங்கி உள்ளது.

## கடலைப் பிண்ணாக்கு ஏற்றுமதி

1978-ஆம்ஆண்டுசெப்டம்பரில் இந்த ஆலையில் தயாரான 302






ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:** இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:** விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:** விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:** நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111



மெட்ரிக் டன் கடலைப் பிண்ணாக்கு இந்தோனேஷியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் 63.737 அமெரிக்க டாலர்கள் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது. 1978-ஆம் ஆண்டு டிசம்பரில் இந்த ஆலையில் தயாரான 504 மெட்ரிக் டன் கடலைப் பிண்ணாக்கு தாய்லாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

இதன் மூலம் 1,16,330 அமெரிக்க டாலர்கள் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது.

**சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்:**

இக்கழகம் கடலை எண்ணெய்யையும் சுத்திகரித்து 'கடோலா' என்ற பெயரில் விற்பனை செய்கிறது.

இக்கழகத்தின், கரைத்து எண்ணெய் எடுக்கும் பணிகளின் மூலம் கரைத்து எடுக்கப்பட்ட முதல் தர எண்ணெய்யும் சுத்திகரிக்கப்பட்டு மிகச் சிறந்த முறையில் விற்பனை செய்யப்படுகிறது.

**வருங்காலத் திட்டங்கள்**

இக்கழகம் தனது நடவடிக்கைகளை ஒருங்கு திரட்டுவதுடன் இனி மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் குறித்து மறுபரிசீலனையும் செய்கிறது. கீழ்க்கண்ட திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பரிசீலனையிலும் உள்ளன.

அ. புதுக்கோட்டை மாவட்டம் புணகுளத்தில் தாவர எண்ணெய்த் தொழிற்சாலை:

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள இத்தொழிற்சாலை கதர் கிராமத்தொழில் வாரியத்திடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது.

இது நாளொன்றிற்கு 100 மெட்ரிக் டன் கடலை எண்ணெய்ப் பிண்ணாக்கு அல்லது 60 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டைக் கையாளும் திறன் படைத்தது.

கட்டிட வேலைகளும் இயந்திரங்கள் அமைக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 1979-ஆம் ஆண்டு மத்தியில் சோதனை ரீதியாக உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆ. செங்கல்பட்டு மாவட்டத்தில் தாவர எண்ணெய் தொழிற்சாலை:

இந்தத் தொழிற்சாலையும் கதர் கிராமத் தொழில்வாரியத்திடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. எண்ணெய்ப் பிண்ணாக்கிலிருந்தும், அரிசித் தவிட்டிலிருந்தும், எண்ணெய் எடுப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்வாலை அமைப்பதற்குப் பொருத்தமான இடம் தேர்ந்தெடுத்தாலும் மற்ற முன்னேற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

**தகரம் தயாரிக்கும் திட்டம்**

இக்கழகம் தன்னுடைய எண்ணெய்ப் பணிகளுக்குத் தேவைப்படும் தகரங்களை அளிக்கும் வகையில் சேலத்தில் ஒரு தகரம் தயாரிக்கும் முன்னோடிப் பிரிவு ஒன்றை அமைக்கும்.

ஓர் ஆண்டுக்குத் தேவையான எண்ணெய் டப்பாக்களின் அளவு சுமார் 1,56,000 ஆகும்.

மேலும் தங்களுடைய அக்மார்க் எண்ணெய்த் தயாரிப்புகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு4 லட்சம் முதல் 5 லட்சம் வரை தேவையானதைக் கொடுக்க விற்பனை இயக்குநர் அலுவலகம் உறுதி அளித்துள்ளது.

நம்முடைய தேவையை சமாளிப்பதற்கும், விற்பனை இயக்ககத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் மேலே குறிப்பிட்டுள்ள தொழிற்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்திற்கு ஆகும் முதலீடு ரூ. 0.76 லட்சமாகும். நடைமுறை மூலதனம் ரூ. 2.09 லட்சம் ஆகும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள ஆரம்ப காலத் திறன் நாள் ஒன்றுக்கு 900 சதுர தகரங்களும், 1500 வட்டத் தகரங்களும் ஆகும். இயந்திரங்களையும் மற்ற தேவைப்படும் சாதனங்களையும் வாங்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இவ்வாலையைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஈ. பூச்சிக்கொல்லி மருந்துக்குத் தேவையான மூலப் பொருள் தயாரித்தல்:

இக்கழகம் தென் மண்டலத்திலுள்ள பிற மாநில வேளாண் தொழில் கழகங்களுடனும் டில்லியிலுள்ள இந்துஸ்தான் இன்செக்டி சைட்ஸ் என்கிற மத்திய அரசு நிறுவனத்துடனும் கூட்டு முயற்சியாக பி.எச்.டி மூலப் பொருள் பார்பரைல் மூலப் பொருள் போன்றவற்றைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

உ. பஞ்சிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் தொழில் பிரிவு:

பத்து இயந்திரங்களைக் கொண்ட பஞ்சிலிருந்து



"உயிர் வாழ உணவளித்திடும் உழவர், பண்டங்களை வாங்கி நேர்மையான வழியில் வழங்கிடும் வணிகர் இவர்கள் எனது வணக்கத்துக்குரியவர்கள்—எனது நண்பர்கள்!"

"உழவர்களுக்கு ஊறு செய்வோர், உற்பத்தி செய்கிறவர்களது வயிற்றலடிப்போர்—இவர்கள் எனக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கே விரோதிகள்."

—பேரறிஞர் அண்ணா



## தமிழகம் கண்ட தனிப்பெருந்தலைவர்கள் காட்டிய வழியில் நடந்து, இன்னல்கள்—எதிர்ப்புக் களுக்கிடையே— "அண்ணாவின் அரசு" இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றிய பணிகளில் சில.

### கல்வியில் மேம்பாடு

- பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்.
- தமிழ்க் கலை, நாகரீகம் வளர்க்க தமிழ் பண்பாட்டு மையம்.
- கிராமங்களில் கல்லூரி கல்வி பெற மேல்நிலைக் கல்வித் திட்டம்.
- கல்லூரி ஆசிரியர்களுக்கு 1.4.74 முதல் புதிய சம்பள விகிதம் அமுல்.
- மொத்த வரவு செலவுத் திட்டத்தில் கால் பகுதி கல்விக்குச் செலவு செய்யும் ஒரே அரசு.
- வயதான தமிழ் அறிஞர்களுக்கு மாதம் ரூ. 250/- உதவித் தொகை.
- ஆண்டுதோறும் சிறந்த கவிஞருக்கு பாரதிதாசன் விருது ரூ. 10,000. சிறந்த எழுத்தாளருக்கு திரு.வி.க. விருது ரூ. 10,000.

### வேளாண்மை வளர்ச்சி

- ரூ. 25 கோடி செலவில் பாசனத் திட்டங்கள்.
- கூடுதலாக 32,500 ஏக்கருக்குப் பாசன வசதி.
- 11 லட்சம் டன் கூடுதல் அரிசி உற்பத்தி.

### விவசாயிகளுக்குச் சலுகைகள்

- விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க உயர்மட்டக் குழு.
- சென்ற ஆண்டு பத்து கோடி ரூபாய் மின் கட்டண சலுகைகள்.
- இந்த ஆண்டு மேலும் ரூ. 40 கோடி கடன் வட்டி சலுகைகள்.
- கட்டாய லெவி முறை நீக்கம். சோதனைச் சாவடிகள் நீக்கம்.
- விவசாயத் தொழிலாளருக்கு கூலி உயர்வு அளிக்க சிறப்புக் குழு.

### நலம் கொழிக்கும் கிராமம்

- கிராமப்புறங்களில் 14 ஆயிரம் பலநோக்கு நியாய விலைக் கடைகள்.
- 2350 கிராமங்களில் 10 லட்சம் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்.
- புதிதாக 1325 மைல் நீள சாலைகள்.
- 920 கிராமங்களுக்கும் புதிதாகப் பேருந்து வசதிகள்
- சிறு கிராமங்களை இணைக்க மினி பஸ்கள்.
- 1000 பேர் கொண்ட ஒரு கிராமத்துக்கு மினி ஹெல்த் சென்டர், நடமாடும் மருத்துவக் குழுக்கள்.
- பட்டுத் தொழில் மூலம் கிராமங்களில் ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு.

### கைத்தறி கதர் வளர்ச்சி

- கைத்தறி நெசவாளர்களுக்கு சட்டப்படி வேலை உத்தரவாதம்—குறைந்தபட்ச ஊதியம்.
- கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் கைத்தறித் துணி கூடுதல் விற்பனை, 12 கோடி ரூபாய்.
- கதர்த் துணி விற்பனை ரூ. 2½ கோடி அதிகரிப்பு.

### காடு—கனி வளம்

- காடு வளர்ப்புக்கு 240 லட்ச ரூபாய் திட்டங்கள்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்டி ரப்பர் தொழிற்சாலை.
- ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனம்.

### மின் வளர்ச்சி

- பழைய மின் திட்டங்கள் விரிவு படுத்தப்பட்டன— புது மின் திட்டங்கள் தொடங்கப்பட்டன. 150 கோடி யூனிட் கூடுதல் மின்சக்தி உற்பத்தி.
- 83,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு.

### மருத்துவ வசதி

- சிறுநீர், மூளை, மாரடைப்பு போன்ற ஆபத்தான நோய்களுக்கான விசேஷ சிகிச்சைகள் கோவை, மதுரை போன்ற நகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளன.

### அரிசன நலன்

- அரிசன நலத்துறை தனித் துறையாக ஆக்கப் பட்டது.
- மேல்படிப்புக்கும் உபகாரச் சம்பளம் பெறவும் அரிசன-பழங்குடியானவர்களின் பெற்றோர்களது வருமான வரம்பு நீக்கப்பட்டது.

### மீனவர்கள்

- மீன் பிடிக்கும்போது மீனவர்கள் இறந்துவிட்டால் உதவி நிதி ரூ. 1000 லிருந்து 5000 ஆக அதிகரிப்பு.
- கிணறு தோண்டுவோர் - மரம் ஏறுவோர் - சாக்கடை சுத்தம் செய்வோருக்கும் இதே உதவி.

### அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள்

- 37 கோடி ரூபாய்க்கு ஊதிய உயர்வு.
- பதவிக் காலம் 55 லிருந்து 58 வயதாக உயர்வு.
- குடும்ப ஓய்வு ஊதியம் ரூ. 50 லிருந்து ரூ. 100 ஆக உயர்வு.
- பிள்ளைகள் உயர்கல்விக்கு வட்டியில்லாத கடன்.
- பேருந்துக் கழகத் தொழிலாளர்களுக்கு ரூ. 5 கோடிக்கு ஊதிய உயர்வு – பிற சலுகைகள்.

### விழாக்கள் - விருதுகள்

- மறைந்த தேசத் தலைவர்களுக்கு கட்சி வேறுபாடின்றி அரசு விழா - இராஜாஜி, பெரியார் நூற்றாண்டு விழாக்கள்.
- சிறந்த திரைப்படங்களுக்கு உதவி நிதி – கலைஞர்களுக்கு விருதுகள்.
- கேளிக்கை வரி விதிப்பில் புதிய சலுகைகள்.
- பத்திரிகையாளர் உதவி நிதித் திட்டம்.
- குமரி முனையில் வள்ளுவருக்கு உருவச் சிலை - நினைவாலயம் அமைப்பு.

### வீட்டு வசதி

- குறைந்த வருவாய் பெறுவோருக்கு ரூ. 25 கோடியில் வீடுகள் கட்டித் தர திட்டம்.
- கிராம மக்கள் பயன்பெற ரூ. 40 கோடி செலவில் ஒரு இலட்சம் வீடுகள் 5 ஆண்டுகளில் கட்ட திட்டம்.
- வீடு கட்ட வட்டியில்லாக் கடன், சுலபமான வட்டி விகித முறை, சலுகைத் தொகை.
- வீடுகள் விரைந்து கட்ட செங்கல் சூளை, செல்கிரீட் தொழிற்சாலை, மொசைக் யூனிட், மரவேலைப் பட்டறை ஆகியவற்றை வீட்டு வசதி வாரியமே அமைத்துள்ளது.

### துயர் துடைக்க

- வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 50 கிலோ அரிசி வீதம் 2,10,800 பேருக்கு அரிசி வழங்கப்பட்டது.
- மதுவிலக்குச் சட்டம் கடுமையாக்கப்பட்டது.

- சமுதாய நீதி - தூய்மையான நிர்வாகம் - மதுவிலக்கு.
- தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றம்.
- தொழில் வளர்ச்சி - தொழிலாளர் நலன் - தொழில் அமைதி.
- தமிழ் மொழி வளர்ச்சி - கல்வியில் முன்னேற்றம்.
- கிராமங்களுக்கு வசதிகள் - வேளாண்மை வளர்ச்சி - விவசாயிகளுக்குப் பாதுகாப்பு.

**இந்த திட்டங்களை அமைதியான வழியில் நிறைவேற்றுவதே "அண்ணாவின் அரசு" ஏற்றுள்ள இலட்சியம்.**




இயக்குநர்,
செய்தி—மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு

விதையைப் பிரித்தெடுக்கும் தொழில் பிரிவு ஒன்றை நிறுவ இக்கழகம் உத்தேசித்துள்ளது.

இது தஞ்சை மாவட்டத்திலுள்ள பருத்தி உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை அளித்து உயர் ரக பருத்தி பயிரிடும் பரப்பளவை அதிகரிக்கவும் வகை செய்யும்.

ஊ. கால்நடை தீவனத் தொழிற்சாலை:

இக்கழகத்திற்குச் சொந்தமான எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற் சாலைகளில் அரிசித் தவிடு-பிண்ணாக்கு போன்றவைகள் கிடைக்கின்றன.

இவற்றை மூலப்பொருளாகக் கொண்டு ஒரு நாளைக்கு 100 மெட்ரிக் டன் அளவு கால்நடை உணவு தயாரிக்கும் தொழில் பிரிவு ஒன்றை நிறுவ இக்கழகம் திட்டமிட்டுள்ளது. இதனால் கழகத்தில் உற்பத்தியாகும் துணைப் பொருள்களும் நன்கு பயன்படுத்தப்படும்.

எ. மக்காச் சோளத்திலிருந்து ஸ்டார்ச், குளுக்கோஸ் மற்றும் டெக்ஸ்ட் ரோஸ் தயாரித்தல்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்காச் சோளத்திலிருந்து கீழ்க்கண்ட பொருள்களைத் தயாரிக்க மத்திய அரசிடமிருந்து ஓர் இசைவுக் கடிதம் கிடைத்து உள்ளது.

வருடத்திற்கு 20,000 மெட்ரிக் டன்கள் ஸ்டார்ச்.

வருடத்திற்கு 3,600 மெட்ரிக் டன்கள் டெக்ஸ்ட் ரோஸ்.

வருடத்திற்கு 7,000 மெட்ரிக் டன்கள் குளுக்கோஸ்.

இதற்குத் தேவைப்படும் மூலதனம் அதிகமாக இருப்பதால் மக்காச் சோளம் கிடைக்கின்ற வசதியையும் தொழில் நுட்ப, பொருளாதார வசதியையும் பொறுத்து இச் செயற்குறிப்பு மறுபரிசீலனை செய்யப்படுகிறது.

**பழங்கள் பக்குவப்படுத்தும் ஆலை**

தக்காளி, மாம்பழம் மற்றும் அன்னாசிப்பழம் ஆகியவைகளைப் பக்குவப் படுத்துவதற்காக பழங்கள் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை மதுரை மாவட்டத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தக்காளிச்சாறு, தக்காளிக் குழம்பு, மாம்பழக்கூழ், மாம்



பழச்சாறு, மாம்பழத் துகள்கள், அன்னாசிப் பழச்சாறு, அன்னாசிப்பழத் துகள்கள் முதலியவை தயாரிக்கப்படும்.

இப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பும் உள்ளது. விற்பனை வாய்ப்புக்களைப் பொறுத்தவரை, மூலச் செயற்குறிப்பு அதிகமாக எதிர்பார்ப்புக்களைக் கொண்டது என்று கருதப்பட்டதால் சிறிய ஆலைகளுக்கான திருத்தப்பட்ட செயற்குறிப்பு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

**சவ்வரிசி ஆலை :**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கும் மரவள்ளிக் கிழங்குகளைப் பயன்படுத்தும் வகையில் நாள் ஒன்றுக்கு 5 டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இதற்குத் தேவையான மூதலீடு ரூ. 15 லட்சம் ஆகும்.

அவற்றில் ரூ. 6 முதல் 8 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்களையும் சாதனங்களையும் இலவசமாக ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் கல்வி மற்றும் நிதி நிறுவனம் ( UNICEF ) அளிக்கும். இது குறித்து ஐக்கிய நாடுகளின் குழந்தைகள், கல்வி மற்றும் நிதி நிறுவனம் மத்திய அரசின் உணவு மற்றும் ஊட்டக்குழு ஆகியவற்றுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதில் உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசியை, பள்ளிக் குழந்தைகளுக்குப் பயன்படுத்தும்படி விநியோகம் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உடுமலைப்பேட்டையில் நிறுவப்பட்டுள்ள இலைப் புரத மாவு தயாரிக்கும் பிரிவில் கிடைத்துள்ள அனுபவம் விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும் எனத் தெரிய வந்துள்ளதால் இலைப் புரதப் பயிர்கள் போதுமான அளவு வளரக்கூடிய வாய்ப்பும் வசதியும் உள்ள இடங்களில் மேலும் இரண்டு அல்லது மூன்று பிரிவுகளை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 4 மெட்ரிக் டன்கள் கையால் தயாரிக்கப்பட்ட காகிதம் உற்பத்தி செய்யும் சிறிய ஆலை ஒன்றை அமைக்க இக்கழகம் உத்தேசித்துள்ளது. இந்த ஆலைக்கு வேண்டிய முக்கிய கச்சாப் பொருள் வைக்கோலாகும்.

அது தஞ்சை மாவட்டத்தில் அதிகமாகக் கிடைக்கிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் உத்தேச மூலதனம் ரூ. 30 லட்சம் ஆகும்.

கழகம் தனது சொந்தப் பிரிவை அமைத்ததோடு மட்டுமின்றி பெருமளவிற்கு வேளாண் தொழில் முனைவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் இக்கழகத்தில் தற்போது உள்ள நிபுணர்களைக் கொண்டு செய்தி மற்றும் ஆலோசனைப் பிரிவு ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**புதிய திட்டங்கள்**

இப்பிரிவு நாளடைவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குறிப்பிட்ட வேளாண் தொழில்கள் திட்டங்களைக் கண்டறிந்து திட்ட அறிக்கைகளைத் தயார் செய்து வாய்ப்பும் வசதியும் உள்ள தொழில் முனைவர்களையும் நிதி வழங்கும் நிறுவனங்களையும் தொழில் மீது ஈடுபாடு கொள்ளச் செய்யும்.

அதன் விளைவாக ஒரு சில புதிய திட்டங்கள் உத்தேசிக்கப்பட்டும் முன்னர் பரிசீலனையில் இருந்த சில திட்டங்கள் கைவிடப்பட்டும் வருகின்றன.

தொழில் நுட்பப் பொருளாதார வாய்ப்புகளைக் கவனமாக ஆய்வு செய்த பிறகு முன்னதாகப் பரிசீலனையில் இருந்த 'டானின்' 'சென்னாலைட்' மற்றும் 'பைரீத்திரம்' எடுக்கும் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

'டிராண்டர்' மற்றும் 'எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்பேட்டை' ஆகிய மற்ற இரண்டு திட்டங்களும் அவைகளின் சாத்தியக்கூறுகள் தொடர்பாக தீவிரமாக மறு மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. தீவிரப் பரிசீலனை மற்றும் செயல்பாட்டில் உள்ள இந்தப் பன்னிரெண்டு திட்டங்களும் அடுத்த சில ஆண்டுகளில் இக்கழகத்தின் அபிவிருத்திக்குத் தேவைக்கு அதிகமான அடிப்படையை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# பயன் குவிக்கும் பலபயிர்த் திட்டம்

டாக்டர் சுப. பழனியப்பன்
இணைப்பேராசிரியர்
உழவியல்துறை
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்.

பல பயிர்த்திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் ஓராண்டில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்களைச் சாகுபடி செய்வதாகும். எந்தெந்த வட்டாரத்தில் எந்தெந்த பயிர்களை இந்தப் பல பயிர்த் திட்டத்தில் சாகுபடி செய்ய வேண்டுமென்பது அந்த வட்டாரத்தில் உள்ள மண்ணினுடைய தன்மை, மழையினுடைய அளவு, நீர்ப் பாசன வசதி, வேலையாட்கள் தொகை, விற்பனை வசதி முதலியவற்றையே பொருத்திருக்கிறது.

இந்தப் பல பயிர்த்திட்டத்தில் ஊடுபயிர், கலப்புப்பயிர், பயிர்ச் சுழற்சி, தொடர் பயிர் எல்லாம் அடங்கும். கோவைப் பகுதிக்குச் சிறந்த பல பயிர்த்திட்டம் என்ன என்பதைக் கண்டறிய அண்மையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் முடிவாகத் தோட்டக்கால் பகுதிக்கும், நன்செய் நிலத்துக்கும் சிறந்த பல பயிர்த்திட்டங்கள் என்னென்ன என்பது கண்டறியப்பட்டன.

**பருத்தி, சோளம், ராகி**

தோட்டக்கால் பகுதியிலே பருத்தி - சோளம் -ராகி பயிர்ச் சுழற்சி நல்ல வருமானத்தைத் தருபவைகளாகும். ஆடி முதல் தை (ஆகஸ்ட் முதல் பிப்ரவரி) வரை பருத்தி போடவேண்டும். பருத்தியில் ஊடுபயிராக உளுந்தோ, நாட்டு வெங்காயமோ போடலாம். பருத்தியைத் தைத் திங்கள் கடைசியிலே எடுத்துவிட்டு, மாசி முதல் வைகாசிவரை (பிப்ரவரி முதல் மே வரை) குறுகிய காலச் சோள ரகங்களான கோ. 22 அல்லது கோ.23 பயிரிட வேண்டும்.

சோளத்திலே ஊடுபயிராக உளுந்து, பாசிப்பயறு, காராமணி அல்லது அவரை போடலாம். சோளப்பயிர், நிலத்தில் இருக்கும் போதே ராகி நாற்றங்காலைத் தயார் செய்து நாற்றுவிட வேண்டும். சோளத்தை எடுத்தவுடனே நிலத்தைத் தயார் செய்து, 21 நாள் வயதுள்ள ராகி நாற்றுக்களை நடவேண்டும். ராகி, வைகாசி முதல் ஆடி வரை (ஜூன் முதல் ஆகஸ்ட் வரை) நிலத்திலே இருக்கும் ராகி அறுவடை செய்தவுடன், நிலத்தை உழுது தயார் செய்து ராகித்தாளில் பருத்தி விதைக்கலாம். இந்தப் பருத்தி சோளம் ராகிப் பயிர்ச் சுழற்சி, நிலத்திலே 345 நாள் இருக்கும். நிகரலாபம் ஆண்டுக்கு ஏக்கருக்கு 4,000 ரூபாய் வரை கிடைக்கும்.

மேலும், ஆண்டு முழுவதும் விவசாயிகளுக்கும் வேலை ஆட்களுக்கும் வேலை இருக்கும்.

**பயிர்ச் சுழற்சி**

இதே மாதிரி நன்செய் நிலத்தில், நீர்ப்பாசன வசதி நல்ல விதமாக உள்ள இடங்களில் நெல், நெல் பயிர்ச் சுழற்சியும், கோடைக்காலத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களில் நெல், நெல் உளுந்து பயிர்ச்சுழற்சியும் நல்ல பலன் தரும். வைகாசியிலிருந்து ஆவணி வரை (ஜூன் முதல் செப்டம்பர் வரை) குறுகிய கால நெல் பயிரும், ஆவணி முதல் தை வரை (அக்டோபர் முதல் பிப்ரவரி வரை) ஒரு நடுத்தர வயதுடைய நெல் பயிரும், மாசியிலிருந்து வைகாசி வரை மற்றொரு குறுகிய கால நெல் பயிரும் பயிர் செய்யலாம். கோடையில் தண்ணீர் கிடைக்காவிட்டால் நெல்லுக்குப் பதிலாக உளுந்தோ, பாசிப்பயறோ போடலாம். நெல்-நெல்-நெல் சுழற்சியைக் கடைப்பிடித்தால் ஆண்டுக்கு ஏக்கருக்கு 5000 முதல் 6000 கிலோ வரை நெல்லும், ரூ. 3000 நிகர லாபமும் கிடைக்கும். நெல்-நெல்-பயறுச் சுழற்சியைக் கடைப்பிடித்தால், ரூ. 2000 வரை நிகர லாபம் கிடைக்கும்.

**காய்கறிகளால் லாபம்**

இது போல் நிலத்தினுடைய தன்மைக்கும், மற்ற வசதிகளுக்கும் ஏற்பவும் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுக்கு ஏற்ற பல பயிர்த்திட்டத்தைக் கடைப்பிடித்துப் பலன் பெறலாம்.

நகர்ப் புறத்துக்குப் பக்கத்திலுள்ள விவசாயிகள் காய்கறிகளைப் பயிர்ச் சுழற்சியிலே சேர்த்து நல்ல லாபம் பெற முடியும். ஒரு சிறு நிலப்பகுதியைக் கூட வீணாக்காமல் ஏதாவது ஒரு பயிரைப்போட்டு நிலத்தையும் மற்ற வசதிகளையும் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# வருமானவரி செலுத்துவோர் கவனத்திற்கு

15—வருட பொதுமக்கள் பிராவிடண்ட் பண்டு கணக்கில்

[மத்திய அரசின் 1968-ம் வருட பப்ளிக் பிராவிடண்ட் பண்டு சட்டத்தின் கீழ்]

## 18% முதல் 72% வரை முதலீடு செய்து

**வருமான வரித் தள்ளுபடி பெற்றிடுவீர்.**

*அத்துடன்*

- **7.5 % வரி விதிப்பிற்கு உட்படாத கூட்டு வட்டியும் (சாதாரணமாக அனுமதிக்கப்படும் ரூபாய் 3,000-க்கும் அதிகப்படியாக) கிடைக்கும்.**
- **கணக்கிலுள்ள தொகை முழுவதற்கும் (பொதுவாக அனுமதிக்கப்படும் ரூபாய் 1.50 லட்சத்திற்கும் அதிகப்படியாக) சொத்து வரி விலக்குண்டு.**

பொதுமக்கள் பிராவிடண்ட் பண்டு கணக்கில் டிபாஸிட் செய்யப்படும் தொகைக்கு
அந்த ஆண்டின் வரிவிதிப்பிற்கான வருமானத்திலிருந்து,
அங்கீகரிக்கப்பட்ட பிராவிடண்ட் பண்டு
மற்றும் இன்ஸூரன்ஸ் பிரிமியத்திற்கு அளிக்கப்படுவது போன்ற,
வருமான வரித் தள்ளுபடி உண்டு. இத்தகைய வரித் தள்ளுபடி ஆண்டின் மொத்த சேமிப்பில்
(ரூபாய் 30,000 அல்லது வருவாயில் 30% இதில் எது குறைவோ)
முதல் ரூபாய் 5,000 க்கு 100% வரித்தள்ளுபடியும்,
அடுத்த ரூபாய் 5,000 க்கு 35% தள்ளுபடியும்,
மீதியுள்ள சேமிப்பிற்கு 20% தள்ளுபடியும் அனுமதிக்கப்படுகிறது.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா அல்லது அதன் கிளைகள் எல்லாவற்றிலும் கணக்குகள் துவக்கமுடியும்.

### 10 வருட வளரும் மாத சேமிப்புக் கணக்கு

எல்லா தபால் நிலையங்களிலும் கணக்கை ஆரம்பிக்கலாம்.
வருமான வரிக்கு உட்படாத வட்டி (ரூபாய் 3,000க்குக் கூடுதலாக).
டிபாஸிட்டுக்கு வருமான வரித் தள்ளுபடி உண்டு.
மொத்த முதலீட்டிற்கும் சொத்து வரி விலக்குண்டு. (ரூபாய் 1.5 லட்சத்திற்கும் அதிகப்படியாக).

...விபரங்களுக்கு...

| | | | |
|---|---|---|---|
| இயக்குநர், | பிராந்திய இயக்குனர். | ஸ்டேட் பாங்க் மற்றும் | மாவட்ட ஆட்சியாளர்கள் |
| சிறு சேமிப்பு, | தேசிய சேமிப்பு, | அதன் கிளைகள் | மற்றும் |
| 143, அண்ணா சாலை, | 118, அண்ணாசாலை, | அனைத்துத் | அங்கீகாரம் |
| சென்னை—600 002 | சென்னை—600 002 | தலைமை | பெற்ற சேமிப்பு |
| தொலை பேசி: 81223 | தொலை பேசி: 85962 | அஞ்சலகங்கள் | ஏஜண்டுகள் |

ஏஜண்ட்கள் தேவை:

பிராந்திய இயக்குனர்.
தேசிய சேமிப்பு,
118, அண்ணா சாலை,
சென்னை—600 002-க்கு விண்ணப்பிக்கவும்.

ADVT


# வீரிய நெல் நாற்றுக்கள் தயாரித்தல்

விவசாயிகளுக்குப் பொதுவாக நெல் சாகுபடியில் தொழில் நாற்றங்கால் தயாரித்தல், புழுதி நாற்று விடுதல் எல்லாம் தெரியும். சிலருக்கு சுருட்டுப் பாய் நாற்றங்கால் தயாரிப்பதுகூடத் தெரிந்திருக்கும். ஒரு புதுமுறை நெல் நாற்றங்கால் பற்றித் தெரியுமா? வீரிய நெல் நாற்றுக்கள் தயாரிப்பது என்பதே அப் புதுமுறையாகும். இதை ஆங்கிலத்தில் சூப்பர் சீட்லிங்ஸ் என்று சொல்வார்கள். பார்ப்பதற்கு சுருட்டுப் பாய் நாற்றங்கால் போல் தோன்றலாம். சுருட்டுப்பாய் நாற்றங்காலில் நாற்றுக்களை 2 வாரத்திற்கு மேல் வைத்திருக்க முடியாது.

புதிய முறையில் தயாரித்த நாற்றுக்களை நாற்பது நாட்கள் வரை நாற்றங்காலில் வைத்திருக்கலாம். நாற்றுக்களில் கணுக்கள் தோன்றுவதில்லை. கால்வாய்ப் பாசனப் பகுதிகளுக்கு மிகவும் ஏற்றதாகஇருக்கும். அணைக்கட்டுகளிலிருந்து தண்ணீர் விடுவதற்கு முன்பே, கடினமான தரையிலோ, மொட்டை மாடியிலோ, அல்லது இதர காலி இடங்களிலோ நாற்றுக்கள் தயாரிக்கலாம். தண்ணீர் வந்ததும் உடனே பறித்து நடவு செய்ய வசதியாயிருக்கும். தண்ணீர் வரத் தாமதமானாலும் நாற்பது நாட்கள் வரை நாற்றங்காலில் வைத்திருக்கலாம்.

நாற்றங்கால் தயாரிக்கக் குறுகிய இடம் போதுமானது. அதாவது ஒரு ஏக்கர் நடவு செய்ய அரை செண்டு நாற்றங்கால் தான் தேவை. இதைத் தயாரிப்பதும், பாதுகாப்பதும் சுலபம். செலவும் குறைவு. தொலைவில் உள்ள இடங்களுக்கும் பாய் போல் சுருட்டி எடுத்துச் செல்லமுடியும். இம்முறையில் தயாரித்த நாற்றுக்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடவு செய்து பார்த்ததில் தொழில் நாற்றுக்களை விட ஆறு சதம் அதிக மகசூல் கொடுத்தது.

### புதியமுறை நாற்றுக்களைத் தயாரிக்கும் முறை

ஒரு ஏக்கர் நடவு செய்யப் போதுமான நாற்றுக்களைத் தயாரிக்க 20 கிலோ விதையும், அரை செண்டு(20 மீ. நீளம் 1 மீ. அகலம்) இடமும் போதுமானது. இந்த இடத்தைச் சுற்றி 4 அங்குல உயரம் 4 அங்குல அகலத்திற்கு களிமண்ணால் சுவர்கட்ட வேண்டும். பின் இந்தப் பாத்தியில் கனமான பாலிதீன் பேப்பரை சுவரையும் மூடும்படியாக விரிக்க வேண்டும். பாத்தியில் 2 அங்குல உயரத்திற்குப் பொடி மணலைச் சீராகப் பரப்பி அதன் மேலே தொழு உரம் 30 கிலோ, யூரியா 304 கிராம், சூப்பர் பாஸ்பேட் 875 கிராம், பொட்டாஷ் 233 கிராம் இவைகளைக் கொட்டிக் கிளறி விட வேண்டும். பின் பூவாளி கொண்டு தண்ணீர் தெளித்து நனைக்க வேண்டும். ஆனால் தண்ணீர் தேங்கக்கூடாது. இதன் பின் முளைகட்டிய நெல் விதைகளைப் பாத்தியில் விதைத்துத் கையால் ஒரே சீராக அழுத்திவிட வேண்டும். பின் 200 கிராம் டி.டி.டி. 5 சதம் தூளை தூவ வேண்டும். பாத்திகளுக்கு ஒரு நாளைக்கு 4 தடவைகள் தண்ணீர் தெளிக்க வேண்டும. இரவு நேரங்களில் தென்னங் கீற்று கொண்டு பாத்திகளை மூடி வைப்பது மழை நேரங்களில் உதவியாயிருக்கும். நாற்றுக்கள் முளைத்து ஒரு அங்குல உயரம் வந்த பின் தண்ணீர் பாத்தியில் நிற்கும்படியாக ஊற்றவேண்டும். விதைத்த 10வது நாள் 80கிராம் பியூரடான் குருணைகளைத் தூவ வேண்டும். மேலும் 20 கிராம் பைட்டலான் மருந்தை 7 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்த பிறகு, நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்களுக்கு முன் டை-அம்மோனியம் பாஸ்பேட்டை 1 செண்டுக்கு 1 கிலோ வீதம் 50 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 25 வது நாளில் நாற்றுக்களைப் பறித்து நடவு செய்வது நல்லது. நடுவதற்கு முன் வேர் பாகத்தை ஊடுருவிப் பாயும் தன்மை கொண்ட பூச்சி மருந்து கலந்த தண்ணீரில் சுமார் 12 மணிநேரம் நனைத்து நட வேண்டும். வேர்பாகத்தை நனைக்க டர்ஸ்பான் என்ற மருந்தை ஒரு மி.லி. மருந்திற்கு 1 லிட்டர் தண்ணீர் வீதம் போதிய தண்ணீரில் கலந்து இதற்கு உபயோகிக்கலாம். மருந்து கலந்த தண்ணீர் மொத்தத்தில் 50 லிட்டர் போதுமானது.

நாற்றுக்களை மாலை நேரத்தில் பறித்து, பாத்திகளை துப்புரவு செய்யவும். பின் இதே பாத்திகளில் மருந்து கலந்த தண்ணீரை ஊற்றி நாற்று முடிகளில் வேர்ப்பாகம் தண்ணீரில் இருக்கும்படியாக வைக்கவும். காலையில் நாற்றுக்களை எடுத்து நடலாம்.

இம்முறையில் தயாரித்த நாற்றுக்களை 25 வது நாள் பறித்து நடவு செய்து பார்த்ததில் தொழில் நாற்றுக்களைவிட நல்ல மகசூல் கொடுத்தது. அதாவது எக்டேருக்கு 5000 கிலோ வரை நெல் கிடைத்தது. இம்முறையைப் பின்பற்றி நல்ல நாற்றுக்களைக் குறைந்த செலவில் தயாரித்து, அதிக மகசூல் பெறும்படி விவசாயிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.




**எஸ். சடையப்பன்,**
**உழவியல் துணைப்பேராசிரியர்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை.**



# சவுக்குச் சாகுபடி - புதிய முறை!

கு. லெ. செல்லப்பிள்ளை,
உதவிப் பேராசிரியர்,
வனவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை-3.

**ஆஸ்திரேலியாவில் தோன்றிய சவுக்கு. இந்தியாவுக்கு 1860 ஆம் ஆண்டில் கொண்டு வரப் பட்டது.!**

சூழ்நிலையியல், சக்திஅமைப்பு இயல், நிலப்பயன்பாடு ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு நோக்கும்போது, எரிசக்தி அளிக் கும் மரங்களில் சவுக்கே முதலி டம் பெறுகின்றது.

சவுக்குக்கட்டை மிகவும் சுலப மாகப் பிளவுபட்டு புகைச்சல் இன்றி எரிவதாலும், மிகக் குறை வாகவே சாம்பல் இருப்பதாலும், சாரம் கட்ட, காற்று வேகத்தைத் தடுத்து புயல், வெள்ளச்சேதம், மண் அரிப்பு, மண்குவியல் ஏற் படாவண்ணம் பாதுகாப்பதாலும் விரைவாக வளரும் தன்மை யாலும் உழவர்களின் முதல் தேர்வு மர இனமாக, சவுக்கு நடைமுறையில் இடம் பெற்றுள் ளது.

காகிதம் மற்றும் மரக்கூழ் தயாரிக்கவும், பட்டையில் உள்ள டேனின் சத்துத்தோல் பதனிட வும் உதவியாக இது உள்ளது. அலங்காரத் தோட்ட வேலைக் கும், சிறந்த வேலி அமைப்பதற் கும், குடிசைகள் கட்டவும், பந் தல்கள் போடவும் சவுக்கு மிக வும் பயன்படுகின்றது.

சவுக்கு மரம் வளர்ப்பதன் மூலம் உவர் நிலத்தைச் சீராக்க வும் முடியும்.

வேர்ப்பகுதி கூடத் தோண்டி யெடுக்கப்பட்டு நல்ல விலைக்கு விற்கப்படுகின்றது. பல எரி பொருள் மர இனங்கள் இருப்பி னும், சவுக்குக்கு அங்காடியில் நல்ல மதிப்பு உள்ளது; ஒரு கிலோ கிராம் விறகு 4950 கிலோ கலோரி எரிபொருள் திறன் தரு கின்றது.

## அங்கக உரம்

சவுக்கின் சிறப்புத்தன்மை யைப் பாராட்டியதோடு அல்லா மல், உலகத்தில் உள்ள மரங்களி லேயே சவுக்கு தான் சிறந்த எரி பொருள் மரம் என்பதை, அறிவி யல் வல்லுநர் எஸ்.ஆர்.அம்லாடி (1978) அவர்கள் குறித்துள்ளார்.

சவுக்கின் இலைகளும் அவற் றின் சிறு கிளைகளும் ஆண்டு முழு வதும் கீழே விழுந்து கொண்டிருப் தால், அங்கக உரமாகவும் இது பயன்படுகின்றது. கூடுதலாகச் சேர்ந்துள்ள மண்ணின் வளமை யைக் கருத்தில் கொண்டு, சவுக்கு மரப்பயிர் வெட்டப்பட்டதும் அந்நிலத்தில் வேளாண் பயிர் களைச் சாகுபடி செய்யலாம். தீவிர மரவளர்ப்பின் கீழ், சவுக் கைத் தொடர்ந்து வளர்த்தால் பணப்பயிர்களாகப் பயனளிக்கும்.

சாதாரணமாக - தென்னார்க் காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர், இராமநாதபுரம் போன்ற மாவட் டங்களின் கடலோரப் பகுதிகளி லும், உள்நாட்டில் திருச்சி, புதுக் கோட்டை ஆகிய மாவட்டங்களி லும் சவுக்கு பயிரிடப்படுகிறது.

காவிரிக் கரையோரங்களும் மற்றும் சிறிய ஆறுகளின் கரை யோரங்களும் சவுக்கு நன்கு வள ரத் துணை புரிகின்றன. வனத் துறையினர் சவுக்கு மரங்களை அறிமுகப் படுத்தியிருந்தாலும் தனிப்பட்ட நபர்களே அம்மரங் களை அதிக அளவில் வளர்க்கின் றனர்.

மற்ற பயிர்களைச் சாகுபடி செய்யும் பொழுது ஏற்படுகின்ற சாகுபடிச் செலவும், அந்தந்தச் சமயத்தில் தேவைப்படுகின்ற கூலி ஆட்களைச் சேகரிக்கும் பணியில் உள்ள இடர்ப்பாடுக ளும், சவுக்கு மர வளர்ப்பில் ஏற் படுவதில்லை. தென்னார்க்காடு, திருச்சி போன்ற மாவட்டங்களி லும், பாண்டிச்சேரி மாநிலத்தி லும் உள்ள வசதி உள்ள உழவர் கள் கூட, மேன்மேலும் சவுக்குச் சாகுபடி செய்ய முற்படுகின் றனர்.

## வயலிலும் சவுக்கு

சவுக்கிலிருந்து கிடைக்கும் வருமானம் உழவர்களை மிகவும் கவரக்கூடியதாக உள்ளதால், தென்னார்க்காடு, செங்கல்பட்டு, ஆகிய மாவட்டங்களிலும் பாண் டிச்சேரி பகுதியிலும் உள்ள சில உழவர்கள் தங்களுடைய நெல் வயல்களில் கூட சவுக்கு மர வளர்ப்பை மேற்கொண்டுள்ள னர்.

தமிழ்நாட்டின் கிழக்குக் கடற் கரைப் பகுதிகளில் நிலத்தை உழுது இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரை புன்செய்ப் பயிர்களைச் சாகுபடி செய்த பின், சவுக்கு நடுவார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகத்திலுள்ள வனவியல் துறையில் கீழ்க்காணும் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு நடை பெற்று வருகின்றது.

காவிரிக்கரையின் இருமருங்கி லும் உள்ள குளித்தலை, சித்தலை வாய், மகாதானபுரம், அரச ஊர், திருப்பராய்த்துறை, நத் தம் ஆகிய இடங்களில் உள்ள சவுக்குத் தோப்புக்களில் உள்ள தேர்வு செய்யப்பட்ட தனிமரங் களிலிருந்து விதைகள் தனித்தனி யாகச் சேகரம் செய்யப்பட்டு சவுக்கு நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தத் தனி மர நாற்றுக்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தின் கீழ் உள்ள முந்திரி ஆராய்ச்சி நிலையம் விருத்தாச்சலம், வன வியல் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம், குமரப்பெரு மாள் வேளாண்மை அறிவியல் நிலையம், திருச்சி ஆகிய இடங் களில் சந்ததித் தேர்வுக்காக நடப்பட்டு அவற்றின் வளர்ச்சி யும், அவை அவ்விடத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளனவா என்பதும் ஆராயப்பட்டு வரு கிறது.

## புதிய ரகம்

அவற்றுள் விரைவில் வளரும் தன்மையும், அதிக மகசூல் தரும் தன்மையும் கொண்ட மரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இம்மரங் கள் பல்கலைக்கழகத்தால் கண்டு பிடிக்கப்பட்ட புதிய ரகமாக விரைவில் வெளியிடப்படும். அம் மரங்கள் வெளியிடப்பட்டு விட் டால் அவற்றால் உழவர்களுக்கும் நல்ல பலன் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

சவுக்கில் ''கேசுரைனா ஈக்கு சிட்டிஃபோலி'' யாவில் ஆண் இன மரங்கள், பெண் இன மரங் கள், இருபால் மரங்கள் இருப்ப தால், தன் மகரந்தச் சேர்க்கை, அயல் மகரந்தச்சேர்க்கை இனத் திற்கு உள்ளும், இனத்திற்கு வெளியேயும் ஒட்டுச் சேர்க்கப் பட்டு வீரிய கலப்பு இன இரகங் கள் உற்பத்தி செய்யும் ஆய்வும் மேற்கொள்ளப்பட உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் உள்ள சவுக் குத் தோப்புகளில் உள்ள தனி மரங்களிலிருந்து விதைகள் தனித்தனியாகச் சேகரம் செய் யப்பட்டு, சவுக்கு நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்தத் தனி மர நாற்றுக்கள் சந்ததித் தேர்வுக்காக நடப்பட உள்ளன.

பல்வேறு பட்டத்திற்கும் மரத் தின் சுற்றளவிற்கும் இடையே உட்தொடர்பு உள்ளதா என்ப தைக் கண்டறிய, திருச்சி மாவட் டத்தைச் சேர்ந்த முசிறி வட்டத் திலுள்ள நத்தத்தில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள சவுக்கில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

## ஆண்மரம் பெண்மரம்

1972-ஆம் ஆண்டு 2.5×2.5 மீட்டர் இடைவெளியில் சவுக்கு நடப்பட்டது. மார்பளவு உயரத் தில், மரத்தின் சுற்றளவின் அளவை அறிவதற்காக அங்குமிங் குமாக உள்ள 1,892 மரங்கள் ஆய்வுக்காக எடுக்கப்பட்டன. அவற்றுள் 1,007 ஆண் மரங்களும் (53.2 சதம்), 705 பெண் மரங் களும் (42.0 சதம்), 90 இருபால் மரங்களும் (4.8 சதம்) இருந்தன. மார்பளவு உயரத்தில் உள்ள மரத்தின் சுற்றளவு, ஆண், பெண் பூக்கள் தனித்தனியாக உள்ள மரங்களில் உள்ளதைவிட, இரு பால் பூக்களைக் கொண்ட மரங் களில் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிக அளவு உள்ளது என்பது புள்ளியியல் பகுத்தாய்வு மூலம் தெரிய வந்தது.

புள்ளியியல் ஆய்வு செய்ததன் மூலம் ஆண் மரத்தின் சுற்றள விற்கும் பெண் மரத்தின் சுற்றள விற்கும் வேறுபாடு தெரிய வில்லை என்பது அறியப்பட்டது.

இருபால் பூக்களைக் கொண்ட மரங்கள் அனைத்தின் சுற்றளவும் மொத்த மரங்களின் சராசரியின் சுற்றளவைவிட அதிகமாகவே உள்ளது. அதுமட்டுமின்றி இரு பால் பூக்கள் மரங்கள் மட்டுமே அதிகபட்ச மகசூல் தருகின்றன.

இதற்கு அடுத்தபடியாக ஆண் மரங்களும், தொடர்ந்து பெண் மரங்களும் மகசூல் தருகின்றன.

விதை முளைக்கும் பருவத்தி லும் இளம் நாற்றுக்களின் வளர்ச் சியின் போதும் அவை இருபால் பூக்கள் மரவகையைச் சேர்ந்த வையா, அல்லவா என்பதை அறியக்கூடிய முறை கண்டுபிடிக் கப்பட்டால், அக் கண்டு பிடிப்பு முறை மூலம், இருபால் பூக்கள் மர நாற்றுக்களையே தேர்ந் தெடுத்து நட முடியும். அவ்வாறு இருபால் பூக்கள் மர நாற்றுக் களை மட்டும் நடுவதால், அதிக பட்ச மகசூல் பெற வழி ஏற்படும்.



தானே பயிரிட்டுவரும் சொந்த நிலம் தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைபோல். நமது நிலத்தை கூலிக்கோ, வாரத்திற்கோ விட்டுப் பயிர் செய்வது தாதியிடம் பால் கொடுக்கச் செய்தோ, தகர டப்பாவில் வரும் தயாரிப்புப் பால் கொடுத்தோ வளர்க்கப்படும் குழந்தை போலத்தான்; வளராது என்று அர்த்தமில்லை; வளரும்'; ஆனால் அந்தப் பாலிலே வாஞ்சை கலந்திருக்க முடியாது. அது போலவேதான், கூலிக்கோ வாரத் திற்கோ பயிரிடும் நிலத்துக்கு எவ்வளவு வளம் ஏற்பட்ட போதிலும் உடைமைக்காரனின் சொந்த உழைப் பும் பராமரிப்பும் கண்காணிப்பும் இல்லாமற் போனால் அந்த நிலம் இருபோகம் தரினும் சரியான வளம் பெற்றது என்று கூற முடியாது

—பேரறிஞர் அண்ணா


கோ ஆப்டெக்ஸ்
பாலியஸ்டர், பட்டு ஆடைகள்
புத்துலகப் படைப்பு...!
புதுமைகளின் முன்னறிவிப்பு...!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGA


படத்தின் கதை....
பார்க்க பக்கம் -36

# எள் சாகுபடி

திரு ஜி. வெங்கடேசன்,
இணைப்பேராசிரியர்
உழவியல் துறை
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

மானாவாரியாக, நெல்லை, இராமநாதபுரம், மதுரை, சேலம், தர்மபுரி, கோவை, திருச்சி மாவட்டங்களிலும் குறைவாக திருச்சி, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, செங்கை மாவட்டங்களிலும் எள் பயிரிடப்படுகிறது.

இந்த எள் சாகுபடி மூன்று பருவங்களில் செய்யப்படுகிறது. முதலாவதாக தென் மேற்குப் பருவமழையின் துவக்கத்தில் மானாவாரியாகவும், இரண்டாவதாக வடகிழக்குப் பருவக்காற்றின் போது குளிர் காலத்திலும் மூன்றாவதாகக் கோடையில் இறவைப்பயிராகவும் பயிர் செய்யப்படுகிறது. இது தவிர, நன்செய் நிலங்களில் நெல் அறுவடைக்குப் பிறகு எள் பயிரிடப் படுகிறது.

செவ்வல் பூமி, கரிசல் பூமி, வண்டல் நிறைந்த மணற்பாங்கான நிலம் இவற்றில் எள் நன்கு வரும். ஆனால் உவர் நிலமும், களர் நிலமும் இதற்கு உகந்தது அல்ல.

எள் விதைகள் மிகவும் சிறியவையாக உள்ளதால் மண்ணில் கட்டிகள் இல்லாதவாறு மூன்று நான்கு தடவை நன்கு உழுதபின் போதிய ஈரத்தில் விதைகளை விதைக்க வேண்டும். எள் பயிருக்குத் தேவையான உர அளவு ஊடுபயிர், இடைவெளி முதலியவற்றில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உழவியல் துறையில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டன.

மானாவாரிப் பயிருக்கு எக்டேருக்கு பத்து, பதினைந்து வண்டி தொழு உரம் இட வேண்டும். (ஒரு எக்டேர் என்பது சுமார் இரண்டரைஏக்கர் பூமி) தொழு உரமிட்ட பிறகு கலப்பையால் நன்கு மடக்கி மடக்கி உழுதல் வேண்டும். பிறகு 25 கிலோ தழைச்சத்து (அதாவது யூரியா சுமார் 50 கிலோ) 25 கிலோ மணிச்சத்து (சுமார் 150 கிலோ சூப்பர்) ஆகியவைகளை விதைக்கு முன் கடைசி உழவில் இட வேண்டும். இறவைப் பயிருக்கு 25 வண்டி தொழு உரத்துடன் 50 கிலோ தழைச்சத்து (சுமார் 100 கிலோ யூரியா) 25 கிலோ மணிச்சத்து (சுமார் 150 கிலோ சூப்பர் ) 25 கிலோ சாம்பல்சத்து (சுமார் 40 கிலோ பொட்டாசு) ஆகியவைகளை இட வேண்டும்.

## இடைவெளி

ஒரு எக்டேருக்கு மானாவாரியானால் ஏழு கிலோ விதையும்,

ஊடுபயிராக விதைத்த போதும், ஏறக்குறைய ரூ.500 அதிக லாபம் தந்துள்ளது. மானாவாரியில் எள்ளுடன் தட்டைப்பயறு, உளுந்து இவைகளில் எந்தப் பயிரைப் பயிரிட்டாலும் இணை வரிசை முறையில் ஊடுபயிர் செய்யும் போது 150 கிலோ அதிக மகசூலும் லாபமும் கிடைக்கிறது.

இதுபோல் இணைவரிசையில் பயிரிடுவதற்கு அரை அடி, பிறகு



இறவையானால் ஆறு கிலோ விதையும் போதுமானது.

ஒரு ஏக்கருக்கு சுமார் இரண்டரை முதல் மூன்று கிலோ விதை தேவைப்படும். விதைகளை சாம்பல் அல்லது மணலுடன் கலந்து இறவையில் சுமார் ஒன்றரை அடி சால்பிடித்து விதைக்க வேண்டும். மானாவாரியில் ஒரு அடிக்கு ஒரு அடி சால் பிடித்து விதைக்கவேண்டும். விதைக்கு முன் கேப்டான், திராம் போன்ற பூசணக்கொல்லி மருந்தை ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் வீதம் கலக்க வேண்டும். விதை நேர்த்தி செய்து விதைப்பதனால் விதை மூலம் பரவுகிற நோய் வராமல் தடுக்கலாம்.

எள் செடிகள் மிக நெருக்கமாக வளர்ந்த இடங்களில் விதைத்த 15 நாட்களுக்குப் பின் செடிகளை ஒரு அடி இடைவெளி விட்டுக் களைத்தல் வேண்டும். மறுபடியும் 10 நாட்களுக்குப் பிறகு ஒருமுறை செடிகளைக் களைக்கலாம். இச்சமயம் ஒரு தடவை களைக்கொத்து மூலம் களை எடுக்க வேண்டும்.

இறவையில் விதைத்த நாளன்று ஒரு முறையும் மூன்றாம் நாள் மறுமுறையும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு நிலத்தின் தன்மையைப் பொறுத்து 15-20 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் சமயத்திலும் காய்கள் வைக்கும் சமயத்திலும் நீர்பாய்ச்சுவது மிகவும் முக்கியமாகும்.

எள் பயிரைத் தனியாகப் பயிரிடுவதைக் காட்டிலும் பயிறு வகைகளுடன் பயிரிடலாம். இதனால் எள்ளின் மகசூல் பாதிக்காது.

மேலும், பயறு வகை தானியங்களின் மகசூல் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கிறது. பச்சைப் பயறு, தட்டைப்பயறு, உளுந்து இவைகளைப் பயிரிட்டதில் இறவையில் எள்ளும் தட்டைப்பயிறும் கலந்து விதைத்த போதும் ஒன்றரை, பிறகு அரை என்ற அளவில் இடைவெளி தந்து விதைக்க வேண்டும். இதனாலே எள்ளின் மகசூல் குறைவதில்லை.

ஊடுபயிர் சாகுபடிக்கு இந்த முறை உகந்தது.

எள் பயிர் முதிர்ச்சி அடைந்தால் செடியின் பசுமை நிறம் மாறி இலைகள் பழுத்து உதிரத் துவங்கும். காய்கள் செம்பழுப்பு நிறமாகும். இதுவே தக்க தருணம்.

ஓரிரு நாட்கள் தாமதித்தாலும் காய்கள் வெடித்துச் சிதறி விடும். எனவே இலை பழுக்க ஆரம்பித்த உடனே 5 நாட்கள் பயிர் வயதுக்கு முன்னதாகவே அறுவடை செய்ய வேண்டும். அதனால் மகசூலும் தரமும் பாதிக்கப்படுவதில்லை. முதிர்ச்சி அடைந்த செடிகளைக் களத்தில் சேர்த்து அடிப்பகுதி வெளியே தெரியுமாறு அடுக்கி வைக்க வேண்டும். அதன் மேல் சுமை வைத்து அல்லது 'தார்பா' போட்டு மூடி வைத்து விட்டால் முதிர்ச்சி அடையாத காய்களும் முதிர்ச்சி அடைந்துவிடும். நான்கைந்து நாட்கள் கழித்து, வெய்யிலில் உலர்த்த வேண்டும். பிறகு, செடிகளைத் தரையில் தட்டி விதைகளை உதிர்த்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

நல்ல விளைச்சல் கிடைக்கும். ஏக்கருக்கு மானாவாரியில் சுமார் 200 கிலோவும் இறவையில் சுமார் 300 கிலோவும் எள் மகசூல் கிடைக்கும் என்பது நிச்சயம்!





# நிலக்கடலையைத் தரம்பிரிக்க....

கே. ரங்கசாமி,
உதவிப் பேராசிரியர்,
வேளாண் பதனஞ் செய்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

விவசாய விளை பொருள்களைத் தரம் பிரித்து விற்பதன் மூலம் விவசாயிகளுக்கு. அதிக வருமானம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. அவ்வாறு தரம் பிரிக்கையில் ஒரே அளவுள்ள வீரிய விதைகள், இரண்டாம் தரமான விதைகள், மற்றும் விதைக்குப் பொருந்தாத தரம் என்று மூன்று இரகங்களாகப் பிரிக்க இயலும்.

இந்தியாவில் பஞ்சாப், அரியானா, மற்றும் இமாசலப் பிரதேசங்களில் ஆப்பிள், ஆரஞ்சு போன்ற பழவகைகளைத் தரம் பிரிக்கும் இயந்திரங்கள் பழக்கத்தில் இருந்து வருகின்றன.

தமிழ்நாட்டிலும் இது போன்ற ஒரு கருவி நிலக்கடலையைத் தரம் பிரிக்கப் பயன்படுத்தப்பட்டால், சிறந்த தரமான, பெரிய அளவுள்ள முதிர் இரகமெனவும் அடுத்தபடியாக இரண்டாவதாக ஒரு இரகத்தையும், உடைந்தவை-சிறியவை, குப்பை கூளங்கள் அடங்கியதாக மூன்றாவது இரகத்தையும் பிரிக்க இயலும்.

இதன் மூலய முதல் இரண்டு இரகங்களை விதைகளாகவும், மூன்றாம் இரகத்தை எண்ணெய் எடுக்க, அல்லது இதர தேவைகளுக்கெனவும், பயன்படுத்தலாம். இதன் மூலம் விவசாயிகள் அறுவடை முடித்த உடனோ அல்லது அறுவடை காலத்திற்குப் பின்னரோ விவசாய வேலைகளின்றி இருக்கும் காலத்தில் தங்கள் விளைபொருள்களைத் தரம்பிரித்து, பின்னர் ஒவ்வொரு இரகத்திற்கும் ஒவ்வொரு விலை நிர்ணயித்து, விற்பதன் மூலம் அதிக வருவாய் பெறமுடியும்.

இவ்வாறு தரமான விதைகள் உற்பத்தி செய்வதால் இரண்டு நன்மைகள் உள்ளன. முதலாவதாக, விற்பனை செய்யும் விவசாயி அதிக வருமானம் பெறுகிறார். இரண்டாவதாக, தரமான விதைகளை வாங்கி விதைக்கும் விவசாயி அதிக மகசூல் பெற்று அதன் மூலம் அதிக லாபம் பெறுகிறார்.

குறிப்பாக அதிக மகசூல், பெற, அடிப்படைத் தேவைகளான நல்ல விதை, நல்ல உரம், நல்ல பயிர்ப் பாதுகாப்பு என்பனவற்றில் முதலாவதாக நல்ல விதையே அமைகிறது. இந்தக் குறிக்கோளுடன் நிலக்கடலையைத் தரம் பிரிக்கும் இயந்திரம் ஒன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த வேளாண்மைப் பொறியியற் கல்லூரியில் இயங்கி வரும் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் எங்கும் எளிதில் எடுத்துச் செல்லக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தை இயக்க ஒரு குதிரைத்திறன் கொண்ட மின் மோட்டார் மட்டுமே தேவைப்படுகிறது. இதில் அமைந்துள்ள இரண்டு வகையான சல்லடைகளும், இதர அமைப்புகளும், நிலக்கடலையை முதல் தரம் இரண்டாம் தரம், மூன்றாம் தரம் என்று மூன்று தரங்களாகப் பிரிக்க உதவுகின்றன. தரம் பிரிக்க வேண்டிய நிலக்கடலையை ஒருவர் இயந்திரத்தின் பெட்டியில் இடவேண்டும். ஆடும் சல்லடைகளின் வழியாக பிரிந்து வரும் நிலக்கடலை தனித் தனியாக மூன்று கூடைகளில் நிறைக்கப்படுகின்றன.

இக்கருவியின் விவரங்கள் பின் வருமாறு:

இயந்திரத்தின் பிரிக்கும் திறன்— ஒரு மணிக்கு 375 கிலோ

இயந்திரத்தை இயக்கத் தேவையான ஆட்கள்— 2 ஆண்கள் 4 பெண்கள்.

குவிண்டால் நிலக்கடலையைத் தரம் பிரிக்க ஆகும் செலவு— ரூ. 1.30.

இக்கருவியின் விலை— ரூபாய் 3,800 (மோட்டாருடன்) ரூபாய் 2800 (மோட்டார் இல்லாமல்).

இது போன்ற கருவிகளை விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்தினால் அதிக லாபத்தைப் பெற்று வருமானத்தையும், நாட்டின் வருமான வளத்தையும் பெருக்கலாம்.



# ராமண்ணா பெற்ற சிறப்பு

மழை வளம் குன்றி, நீர்வளம் குன்றி, நிலையான வருமானம் குன்றிய நிலையில் உள்ள மாவட்டமாக அறிவிக்கப்பட்ட தர்மபுரி மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்ப்பாசன வசதியைப் பெருக்கிடவும், விவசாயிகளிடையே நவீன சாகுபடி முறையைக் கற்பித்து, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கிடவும், வாழ்வில் நலிவுற்றோர்க்கு நல் வாழ்வு வழங்கவும் பல்வேறு சீரிய திட்டங்கள் இந்த மாவட்டத்திலே சிறப்புற நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தர்மபுரி மாவட்டத்தில் இயற்கை வளம் மிகுந்த பகுதியாக ஓசூர் விளங்குகிறது. இங்குதான் மிகப்பெரிய கால்நடைப் பண்ணை இருக்கிறது.

ஓசூர் பகுதியில் பட்டு வளர்ப்பும், உருளைக்கிழங்கு, காரட், பீன்ஸ், காலிஃபிளவர் ஆகிய தோட்டப் பயிரினங்கள் மிகுதியாகப் பயிரிடப்பட்டு வருகின்றன.

ஓசூர் அருகில் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 610 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், 11 ஆயிரம் ஏக்கர் நிலம் இதன்மூலம் பாசன வசதி பெறும்.

இத்தனைப் பெரும் சிறப்புப் பெற்ற இப்பகுதியில் வாழ்பவர் தான், திரு. ராமண்ணா என்ற விவசாயி.

வேளாண்மைத் துறையின் அரிய கண்டு பிடிப்புக்களை இவர் முழுமையாக வேளாண்மைத் தொழிலில் கையாண்டு வெற்றி பெற்று வருகிறார். இவருக்கு வேளாண்மை செய்வது பரம்பரைத் தொழிலாகும். நவீன சாகுபடி முறையை இவர் வெகுவாகப் போற்றி, அதன் மூலம் அதிக மகசூலைப் பெற்று அரிய சாதனையைப் புரிந்து வருகிறார்.

ஓர் ஏக்கர் நிலத்தைத் தேர்ந்தெடுத்து அதில் 'ரொபஸ்டா' என்ற குள்ள வாழை பயிரிடத் தொடங்கினார் திரு. ராமண்ணா. அந்த நிலத்தில் 100 ரூபாய் செலவில் ஓர் அடி ஆழத்திற்கு மண் முழுதும் தோண்டியெடுத்தார். ஓர் அடி ஆழம், ஓர் அடி அகலம் ஓர் அடி நீளம் என்ற அளவில் ரூ. 120 செலவில் 1210 குழிகளைத் தோண்டினார்.

ரூ. 860 செலவிட்டு ரொபஸ்டா குள்ள வாழைக் கன்றுகளை வாங்கி அக்குழிகளில் நட்டார். முதல் இரண்டு மாதத்திற்கு ரூ. 300 செலவில் குடத்தில் நீர் மொண்டு ஊற்றச் செய்தார். மூன்றாவது மாதத்தில் ஏரி மண், நூறு வண்டியும், மாட்டு எரு முப்பது வண்டியும், ரூ. 800செலவில் போட்டார். 17:17:17 காம்ப்ளக்ஸ் 250 கிலோவும், சி. ஏ. எஸ். 500 கிலோவும், யூரியா 50 கிலோவும் ரூ. 1300 செலவிட்டு வாங்கிப் போட்டார்.

மாதம் ஒருமுறை களையெடுத்தார். இந்த வகையில் ரூ. 350 செலவிட்டார். டைத்தேன் எம். 45 என்ற மருந்தை ரூ. 20 செலவில் வாங்கித் தெளித்து வந்தார்.

வாழை கீழே சாய்ந்து விடாமல் இருக்க மூங்கில் முட்டுக்களை வாங்கி ஊன்றிய வகையில் ரூ 800- செலவாயிற்று.

வாழைக்கு நீர் பாய்ச்சிய அளவில் ரூ. 1000 செலவு; ஆக மொத்தம் குள்ள வாழைக்காக ரூ. 6,650 செலவிட்டார் இவர்.

குறைந்த உயரமே வளர்ந்த இவ்வாழை இனமானது குள்ள வாழையென்ற பெயர் பெற்றாலும் அடுக்கடுக்காக எண்ணற்ற பழங்களைத் தாங்கிய வண்ணம் தன் உயரத்தைவிட வாழைத் தாரின் உயரம் இருக்கும் அளவிற்கு வாழைகள் ஈன்று குவித்தன. ஒரே சீராக அழகுற நடப்பட்டு வளர்ந்த வாழைத் தார்களைத் தாங்கி செழிப்போடு நிற்கின்றன கன்றுகள். இக்காட்சி பார்ப்போரைக் கவர்ந்து இழுக்கிறது.

வாழைத்தார் ஒவ்வொன்றும் 4 அடி உயரம் உள்ளதாகவும், 3 அடி பருமன் உள்ளதாகவும் உள்ளது.

ஒரு தாரில் 13 சீப்பும், ஒரு சீப்பிற்கு 20 பழங்களும் இருந்தன. ஒரு தாரின் சராசரி எடை 42 கிலோ.

ஓர் ஏக்கரில் சராசரியாக 25 முதல் 30 டன் வரையே மகசூல் கிடைத்து வந்தது. ஆனால் ராமண்ணா தனது பெருமுயற்சியால் 50 டன் மகசூல் பெற்றார். இடைத்த மகசூலை விற்கத் தொடங்கினார்.

ஒரு தாரின் விலை ரூ. 29 வீதம் 750 தார்களை விற்று ரூ. 21,750ம், ரூ. 20 வீதம் 300 தார்களை விற்று ரூ. 6,000-மும், ரூ. 10 வீதம் 150 தார்களை விற்று ரூ. 1500-ம் ஆக மொத்தம் ரூ. 29,250 நிகர வருமானம் பெற்றார்.

அவர் செலவிட்ட தொகையைக் கழித்து நிகர வாபமாக ரூ. 22,700 பெற்று, தன்னிகரற்ற சாதனையைத் தர்மபுரி மாவட்டத்தில் இதன் மூலம் ஏற்படுத்தி விட்டார் திரு ராமண்ணா.

இதற்கெல்லாம் காரணம் வளமான நிலத்தைத் தேர்ந்தெடுத்து உயர் இரக - நோய் தாக்காத 'ரொபஸ்டா' வாழைக் கன்றுகளைத் தேர்ந்தெடுத்து நட்டு, தேவையான அளவு உரமிட்டு உரிய அளவில் நீர் பாய்ச்சி இதற்கெல்லாம் மேலாக, சிறந்த திட்டமிட்ட உழைப்புத் திறனாலும் திரு ராமண்ணா இத்தகு சிறப்பைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல; பின்பற்றத் தக்கதுமாகும்.





# கண்ணபிரான் காட்டிய வழி

வாழையில் உளுந்து பயிரை ஊடுபயிர் செய்து நல்ல பலன் கண்டுள்ளார், முன்னணி விவசாயியான வடஆர்க்காடு மாவட்டம், மாதனூர் திரு கண்ணபிரான் அவர்கள்.

65 நாட்கள் வயதுடைய 'டி9' உளுந்தை வாழைத் தோட்டத்தில் இடைவெளியில் ஊடு பயிராகப் பயிர் செய்வதன் மூலம் வாழைத் தோட்டத்தின் மண்வளத்தை அதிகரிப்பதுடன், குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைப்பதையும் திரு கண்ணபிரான் அனுபவ பூர்வமாக அறிந்துள்ளார்.

இந்த உளுந்து ஊடுசாகுபடியை வடஆர்க்காடு மாவட்டத்தில் வாழை பயிரிடும் விவசாயிகளிடம் வேளாண்மைத் துறையினர் எடுத்துக் கூறுகின்றனர். கண்ணபிரான் கண்ட வெற்றி மற்ற விவசாயிகளுக்கு ஓர் ஊக்கத்தையும் புது உணர்வினையும் ஊட்டியுள்ளது மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

**கண்ணபிரான் கூறுகிறார்:**

நான் சாகுபடி செய்திருந்த ரொபஸ்டா வாழையில் 'டி9' உளுந்தை ஊடுபயிராக பயிர் செய்து நல்ல பலனடைந்தேன்.

நான் கடந்த பல வருடங்களாக வாழை சாகுபடி செய்து வருகிறேன். என் தோட்டத்தில் நான் இதுவரை வாழை மட்டுமே பயிரிட்டு வந்தேன். வாழைத் தோட்ட இடைவெளியில் இலாபகரமான பயறுவகைப் பயிர்களைப் பயிர் செய்து பயன் பெற வாய்ப்பு உள்ளதாக வேளாண்மைத் துறையின் மூலம் அறிந்தேன். அதை அனுபவ ரீதியாகச் செய்து பார்க்க முற்பட்டேன்.

எனது தோட்டத்தில் உள்ள நாலரை ஏக்கர் பரப்பில் ரொபஸ்டா வாழையை மே மாதம் 13-ந் தேதி நட்டேன்.

பின்பு மே 23ந் தேதியன்று ஏக்கருக்கு 4 கிலோ வீதம் டி9 உளுந்து விதையை களைக்கொத்தியால் நிலத்தைக் கொத்தித் தயார் செய்து ஊடுபயிராக வரிசையில் விதைத்தேன்.

விதையை நுண்ணுயிர்க் கலவையுடன் கலந்து அரை மணி நேரம் நிழலில் உலர வைத்து விதைத்தேன்.

உளுந்துப் பயிருக்காக நான் தனியாக உரம் இடவில்லை. விதைத்த இரண்டு வாரங்களுக்குப் பின் களை எடுக்கப்பட்டது. பூக்கும் பருவத்தில் பூச்சி கொல்லி மருந்து கவினல் மாஸ் ஏக்கருக்கு 100 மில்லி லிட்டர் வீதம் தெளிக்கப்பட்டது.

பின்பு காய் பிடிக்கும் சமயத்தில் ஏக்கருக்கு 5 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதம் தூவப்பட்டது.

உளுந்துப் பயிருக்கெனத் தனியாக நீர் பாய்ச்சப்படவில்லை. வாழைக்குப் பாய்ச்சப் பட்ட நீரே போதுமானதாக இருந்தது.

உளுந்து செழிப்பான முறையில் வளர்ந்து நிறைய காய்கள் பிடித்து முற்றிய பின் ஜூலை 30-ந் தேதியன்று பிடுங்கி, உலர்த்தி விதைகளைப் பிரித்தெடுக்கப்பட்டது.

ஏக்கருக்கு 265 கிலோ மகசூல் கிடைத்தது. இதற்காக ஏக்கருக்கு ரூ. 104தான் செலவானது.

**அதே நேரத்தில் ஏக்கருக்கு 700 ரூபாய் இலாபம்**

68 நாட்களில் குறைந்த செலவில் ஏக்கரில் எனக்கு நிகரலாபம் ரூ. 795 மொத்த வருமானம் கிடைத்தது. அதில் சாகுபடிச் செலவு போக ரூ. 691 நிகர லாபம் அடைந்தேன். மிகக் குறைந்த செலவிலும், குறைந்த நாட்களிலும் இந்த அளவு இலாபத்தை நான் எதிர்பார்க்கவே யில்லை.

இனிமேல் நான் எப்பொழுது வாழை போட்டாலும் ஊடுபயிராக டி9 உளுந்து பயிரிடுவது என்று முடிவு செய்துவிட்டேன்.

இம் முறையினால் குறைந்த செலவில் நிறைந்த வருமானம் பெறுவதோடு மண்ணிலும் வளம் சேருகிறது.

**ஒரு ஏக்கருக்கு எனக்கு ஆகிய சாகுபடிச் செலவு:**

| | | ரூபாய் |
|---|---|---|
| 1. | விதை-4 கிலோ விலை | 12.00 |
| 2. | விதைப்புக் கூலி (2 பெண்கள்) | 5.00 |
| 3. | நுண்ணுயிர்க் கலவை (1 பாக்கெட்) | 1.50 |

| | | |
|---|---|---|
| 4. | குவினல்பாஸ் 100மி.லி. தெளிப்புச் செலவு ஏக்க ருக்கு உள்பட | 16.00 |
| 5. | பி.எச்.சி. 10 சதத் தூள் தூவுதல் | 7.00 |
| 6. | களை எடுத்தல் கூலி (10 பெண்கள்) | 25.00 |
| 7. | முதல் அறுவடை(100 பெண்கள்) | 25.00 |
| 8. | அறுவடை விதைபிரித்தல் கூலி (5பெண்கள்) | 12.50 |
| | மொத்தம் | 104.00 |

இதுபோன்ற புதிய சாகுபடி முறை நுட்பங்களைக் கையாண்டு விவசாயத்தில் வருமானத்தைப் பெருக்க முடியும் என்ற என் அனுபவம் பலருக்குப் பயன்படுவதைக் கண்டு பெருமிதம் அடைகிறேன்.

—கண்ணபிரான் காட்டிய வழியின்படி வாழையில் உளுந்துப் பயிரை ஊடுபயிர் செய்து விவசாயப் பெருமக்கள் வருமானத்தைப் பெருக்குவது பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். அதன் விளைவாகப் பயறுவகை தானியங்கள் உற்பத்தியில் புதிய நிலை ஏற்பட்டுள்ளது.

**புதிய சரித்திரம் தொடங்கியுள்ளது ஊடுபயிர் சாகுபடி.**

தமிழ்நாட்டில் பயறு வகை தானியங்கள் உற்பத்தி செய்யப்படும் மொத்த அளவு மூன்று இலட்சம் டன் மட்டுமே.

ஆனால் நமது தேவையோ ஒன்பது இலட்சம் டன் ஆகும். பயறு உற்பத்தியைப் பெருமளவில் பெருக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். அதற்கான பல திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் இத்துறையில் உருப்படியான பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதிக விளைச்சல் தருவதும், குறைந்த வயதுடையதுமான இரகங்களை விளைவிப்பதன் மூலமும், இரசாயன உரங்கள் இடுவதன் மூலமும், தக்க பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுவதன் மூலமும் தக்க புதிய பயிர் சாகுபடி முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் உற்பத்தியைப் பெருக்க நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. அப்புதிய சாகுபடி முறைகளில் ஒன்றுதான் "ஊடுபயிர் சாகுபடி" முறை.

தொன்று தொட்டு பயறு வகைப்பயிர்களைத் தனிப்பயிராகவும், நிலக்கடலை, சோளம் முதலியவற்றில் ஊடுபயிராகவும் பயிர் செய்வது மட்டுமே நமது விவசாயிகளின் பழக்கம்.

நம் விவசாயிகளின் சாகுபடி முறையில் 'ஊடுபயிர் சாகுபடிமுறை' பயறு வகை உற்பத்தியில் ஒரு புதிய சரித்திரத்தின் தொடக்கமாகும்.



## படத்தின் கதை

அச்சுத் தொழிலை நச்சுத்தொழில் என்பார்கள். இந்த நச்சுத் தொழிலில் இருந்து 'நச்சினார்க்கு இனியர்' ஒருவர் தோன்றியுள்ளார். அவர்தான் கோவை கலைமணி பிரிண்டிங் இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்டின் நிர்வாக இயக்குநர் திரு எஸ். மணி.

தொழிலாளியாக வாழ்க்கையைத் துவக்கி முதலாளி நிலையை எய்தியுள்ள திரு. மணி அவர்களைப் பேட்டி கண்ட நமது நிருபரிடம் அவர் தெரிவித்ததாவது :

"அச்சுத் தொழில் ஒரு நச்சுத் தொழிலல்ல; அறியாமை என்னும் இருளகற்றும் அறிவுத் தொழில்; அதற்கு என நமது குடியாட்சி அமைப்பில் தனிச் சலுகைகளும், சிறப்புகளும் அளிக்க வேண்டும்."

எவரும் முதலாளி நிலையை அடைந்ததும் முதலாளித்துவ மனப்பான்மையைக் கைக்கொள்வது இயல்பு. இவரோ முதலாளி நிலையை அடைந்ததும் முதலாளித்துவ மனப்பான்மையைத் தூக்கி எறிந்துவிட்டு, தொழிலாளர்களைக் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொண்டு, இலாபத்தில் பங்கு கொடுத்து, சமதர்ம ரீதியில் நிறுவனத்தை இயக்கி வருகிறார்.

1963-ஆம் ஆண்டில் கலைமணி அச்சகம் என்னும் பெயரில் சிறிதாகத் துவக்கப்பட்ட அச்சகப்பகுதி, திரு. மணியின் அயராத உழைப்பினால் வளர்ச்சியுற்றது. 1969-ல் கலைமணி பிரிண்டிங் இண்டஸ்ட்ரிஸ் என்னும் பெயரில்–இன்ஜினியரிங் பகுதி, தொழிற் பகுதி, விற்பனைப் பகுதி, அச்சுப் பகுதி எனப் பல பகுதிகள் கொண்ட நிறுவனமாக இயங்கியது. 1971 ஏப்ரலில் பிரைவேட் லிமிடெட் நிறுவனமாக மாற்றப்பட்டது. அச்சு இயந்திரங்கள்–மற்றும் அச்சுத் தொழிலில் பயன்படுத்தப்படும் பல்வேறு இயந்திரங்களை உருவாக்கி வருகிறது. வெளிநாடுகளுக்கும் அச்சு இயந்திரங்களை அனுப்பும் அளவுக்குத் திறம்படச் செயலாற்றி வரும் இந் நிறுவனம், தமிழ்நாடு அரசின் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவி பெற்று விறு நடை போட்டு வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் புது உலகத்தில் தமிழகம் தொழில் மயமாக மலர–ஆயிரக்கணக்கான 'மணி'கள் தோன்றுவார்களாக!

# புதுமைகள் புரிந்த வெள்ளைச்சாமி



உழவுத் தொழிலில் புதுமைகள் பலபுரிந்து புகழ்பெற்றோர் பலருண்டு. அவர்களில் ஒருவராகத் திகழ்பவர் திரு **ச. வெள்ளைச்சாமி.**

மதுரை மாவட்டம் லாடனேந்தல் என்ற ஊரைச் சேர்ந்தவரான இவர், உழவுத் தொழிலில் முழுமூச்சோடு முயன்று வெற்றி பெற்று வருபவராவார். தனது பெருமுயற்சியால் அதிக பட்சம் ஏக்கருக்கு 44 மெட்ரிக் டன்கள் வரை மகசூல் அடைந்திருக்கிறார்!

இந்த வட்டாரத்திலே சராசரி மகசூல் என்னவென்றால், ஏக்கருக்கு 33.4 மெட்ரிக் டன்கள் மட்டுமே!

—திரு த. சண்முகசுந்தரம்,
துணை வேளாண்மை
அலுவலர், (கரும்பு)
திருப்புவனம்.

1977-'78-ஆம் ஆண்டு புதூர் கிராமத்தில் இவருடைய வயலில் கரும்புப் பெருக்கத் திட்டத்தின் கீழ் ஓர் ஏக்கரில் முழு நிருபணம் அமைக்கப்பட்டிருந்தது. இதில் இவர் ஏக்கருக்கு 62,400 மெட்ரிக் டன் மகசூல் கண்டிருக்கிறார். இது இப்பகுதி சராசரி ஏக்கர் மகசூலைக் காட்டிலும் 50 சதவீதம், அதாவது 18.4 மெட்ரிக் டன் அதிகம் ஆகும்.

திருப்புவனம் கரும்புப் பெருக்கத்திட்டத் துணை வேளாண்மை அலுவலர் - மற்றும் பணியாளர்கள் உதவியுடன் ஒருங்கிணைந்த கரும்புச் சாகுபடி முறைகளைப் பின்பற்றி ஏக்கருக்கு 18.4 மெட்ரிக் டன்களுக்கு ரூ. 2100 அதிகமாக லாபம் அடைந்திருக்கிறார், இவர்

திரு ச. வெள்லளச்சாமியின் வேளாண்மை முறை பற்றிக் கவனிப்போம்.

"ஓர் ஏக்கரில் கோ. 6304 இரகம் பயிரிடப்பட்டது. வளமான—தேர்ந்தெடுக்கப்பட்ட விதைக் கரணைகள், அகவால் மருந்துக் கரைசலில் நனைத்து நடவு செய்யப்பட்டன. 30வது நாளில் பழுது ஏற்பட்ட இடங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டன. முதல் உரம் 45 நாளிலும், இரண்டாவது உரம் 90 நாட்களிலும் இடப்பட்டது. 70 கிலோ தழைச் சத்து, 25 கிலோ மணிச்சத்து, மற்றும் 45 கிலோ சாம்பல் சத்து என்ற விகிதத்தில் முதல் உரமாக 17:17:17 கூட்டு உரம் 150 கிலோவும் யூரியா 22 கிலோவும் சேர்த்து இடப்பட்டது. இரண்டாவது உரமாக 75 கிலோ யூரியாவும் 33 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷும் இடப்பட்டது.

## முதல் தமிழன்

**சர்க்கரை என்னும் இனிப்புப் பொருளை உருவாக்க உதவும் வாணிபப் பயிர் கரும்பு. இதனைத் தமிழ்நாட்டில் பயிரிட்ட முதல் தமிழன் யார் தெரியுமா? சங்ககால வள்ளல்களில் ஒருவனான அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் மன்னன்!**

இருமுறை களையெடுக்கப்பட்டது. மூன்று மாதத்தில் ஒரு முறையும் ஐந்தரை மாதத்தில் ஒரு முறையும் மண் அணைக்கப்பட்டது. ஐந்து மாதத்தில் ஒரு முறையும் ஏழு மாதத்தில் ஒரு முறையும் தோகை உரிக்கப்பட்டது. முப்பதாவது நாள் குருத்துப்பூச்சிக்கு மருந்து தெளிக்கப்பட்டது. ஒட்டுயிர்கள் (டிரைகோகிராமா ஆஸ்ட்டாலிசும்)குருத்துப்பூச்சி, கணுத்துளைப்பான் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தக் கரும்பு வயலில் விடப்பட்டன.

ஊடுபயிராக டி.9 இரக உளுந்து பயிரிடப்பட்டது. இதிலிருந்து 67 கிலோ உளுந்து கிடைத்தது.

ஏக்கருக்குச் செலவு ரூ. 3330 ஆகியது. மொத்த வருமானம் ரூ. 7113.60. நிகர வருமானம் ரூ. 3767.60; உளுந்திலிருந்து வருமானம் ரூ. 201; ஆக மொத்த நிகர வருமானம் ரூ. 3968.60"

'முயற்சி திருவினையாக்கும்' என்பது இதிலிருந்தே விளங்குகிறதல்லவா?

# குழந்தை இலக்கிய முன்னோடி



பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாக்கி, அந்தக் குழந்தையைப் பாராட்டி வாழ்த்தப் 'பிள்ளைத்தமிழ்' பாடிய புலவர் பெருமக்கள் பலர் தமிழகத்தில் வாழ்ந்தனர். பிள்ளைத் தமிழ் என்ற ஒரு வகை இலக்கியம் தமிழ்மொழியில்தான் பிறந்தது-தமிழ் மொழியில்தான் உள்ளது.

பின்னர், பிள்ளைக் கனியமுதைப் 'பேசும் பொற் சித்திர'மாக்கிய பெருமை மகா கவி பாரதியாரைச் சேரும். அவரைத் தொடர்ந்து பல கவிவாணர்கள் 'குழந்தை இலக்கியம்' படைத்துள்ளனர்.

செந்தமிழ் நாட்டுச் சிறுவர், சிறுமியரின் சிந்தை களி கொள்ளும் வகையில், குழந்தைகளுக்காகவே **'மலரும் மாலையும்'** தந்து, வாழ்நாளெல்லாம் குழந்தையாகவும், குழந்தைக் கவிஞராகவும் வாழ்ந்தவர் கவிமணி தேசிக விநாயகம் அவர்கள்.

**''ஓடி விளையாடு பாப்பா—நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா'**

என்ற மகாகவி பாரதியாரின் பாடலையும்,

**'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு-அங்கே**
**துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி'**

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் பாடலையும் நான் சின்னஞ்சிறு குழந்தையாக இருந்தபோது பாடிப்பாடி பரவசமடைந்தேன்'' என்று கூறுகிற குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்கள் குழந்தைகளுக்கு 'மலரும் உள்ளம்' தந்து இன்றையத் தலைமுறையின் மிகச் சிறந்த குழந்தைக் கவிஞராகத் திகழ்கிறார்.

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா, ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு மேலாகக் குழந்தை இலக்கியப் பணியைத் தொடர்ந்து சிறப்பாகச் செய்து வருகிறார். அவர் இனிய-எளிய-பழகு தமிழ்ப் பாடல்களால் குழந்தை இலக்கிய உலகின் முடிசூடா மன்னராகத் திகழ்கிறார். அக்கவிஞரின்,

**'பட்டை போடப் போடத்தான்**
**பளப ளக்கும் வைரமே.**
**மெருகு கொடுக்கக் கொடுக்கத்தான்**
**மினுமி னுக்கும் தங்கமே.**
**அரும்பு விரிய விரியத்தான்**
**அளிக்கும் மணத்தை மலருமே.**
**அன்பு பெருகப் பெருகத்தான்**
**அமைதி அடையும் உலகமே!'**

என்ற வரிகள் இளம் உள்ளங்களைக் கொள்ளை கொள்பவை.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்கிற தமிழ்க் குழந்தைகள் உள்ளங்களில் மட்டுமல்ல-உலகெங்கிலும் வாழும் தமிழ்க் குழந்தைகளின் உள்ளங்களிலும் அவர் ஒளிதரும் முழுமதியாகத் திகழ்கிறார்.

'நமக்குத் தொழில் கவிதை' என்று மகா கவி பாரதியார் கூறியதுபோல, குழந்தை இலக்கியத்திற்குப் பணியாற்றவே தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களை, அவருடைய சீரிய தொண்டிற்காக அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில் 'தமிழரசு' வாழ்த்திப் பாராட்டுகிறது.

குழந்தைக் கவிஞர் அவர்கள் எழுதியுள்ள நூல்கள்:

- மலரும் உள்ளம் முதல் தொகுதி
- மலரும் உள்ளம் 2-ஆம் தொகுதி
- பர்மா ரமணி
- எங்கள் கதையைக் கேளுங்கள்
- மணிக்கு மணி
- கதை சொன்னவர் கதை 3 தொகுதிகள்
- சின்னஞ்சிறு பாடல்கள்
- பாப்பாவுக்குப் பாட்டு
- வெளிநாட்டு விடு கதைகள்
- நேரு தந்த பொம்மை
- நீலா மாலா
- நல்ல நண்பர்கள்
- குதிரைச் சவாரி
- பாட்டிக்குப் போட்டி
- ஈசாப் கதைப் பாடல்கள் 1,2
- வேட்டைநாய்
- குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள்
- எங்கள் பாட்டி

(1963-ஆம் ஆண்டில் லக்னோவில் நடைபெற்ற அனைத்திந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில், 'தமிழில் குழந்தை இலக்கிய முன்னோடி' என்னும் பாராட்டும் பதக்கமும் இவருக்கு வழங்கப்பட்டன.)





# மரமேறும் மங்கை



வளர்ந்து வரும் தொழில் மயமான இந்த 20-ஆம் நூற்றாண்டில் பெண்ணினம் சகல துறைகளிலும் முன்னேறிக்கொண்டு வருகிறது.

'நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும்' மாதர்க்குத் தேவையென்று பாரதி பாடினானே? அப்படிப்பட்ட பெண்களில் ஒருவராக விளங்குபவர்தான் படத்திலே காணப்படும் செல்வி கே. மல்லிகா.

பொள்ளாச்சி வட்டத்திலுள்ள இருட்டுப்பள்ளம் என்றஊரைச் சேர்ந்த திரு. குப்புசாமி அவர்களின் மகளே இவர். பதினேழே வயதான செல்வி கே.மல்லிகா பள்ளி மாணவியும்கூட. 10+2 இறுதியாண்டில படிக்கிறார் இவர்.

ஆறாண்டு மரமேறும் அனுபவம் வாய்க்கப் பெற்றவரான செல்வி மல்லிகா, நாளொன்றுக்கு 25 மரங்களில் அனாயாசமாக ஏறி இறங்குகிறார். இதனால் அவர் இறக்கும் 45 லிட்டர் பதநீரிலிருந்து 10 கிலோ முதல் 12 கிலோ வரை கருப்பட்டி தயாரிக்க முடிகிறது.

நெஞ்சுரம் மிக்க இந்த வஞ்சியைப்போலவே — மரமேறும் அனுபவம் வாய்க்கப் பெற்ற கோவை மாவட்டப் பெண்கள் செல்வி குஞ்சம்மாள், செல்வி ருக்மணி, செல்வி வையக்காள் ஆகியோரும் கொண்டுள்ள இந்தத் துணிவு பாராட்டத்தக்கதல்லவா!

—'மருதம்'



# படமும் செய்தியும்





8-7-'79 அன்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட தூத்துக்குடி அனல் மின் நிலையத் துவக்க விழாவில் திட்டக் கனத் தொழிலாளர் திரு எம். சுப்பையா முதலாவது 210 மெகாவாட் மின் இயந்திரத்தை இயக்கி வைத்தார்.





அரசின் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் 15-7-79ல் நடைபெற்ற பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் விழாவில் காமராசரின் திருவுருவப்படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.



# நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் அனல்மின் நிலையம்

நம் நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் அமைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்.

பழுப்பு நிலக்கரி எடுக்கப்பட்டவுடன் அதனைப் பயன்படுத்தி அனல் மின்சாரம் உற்பத்தி தொடங்கப்பட்டது. சோவியத் நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் தொடங்கப்பட்ட நெய்வேலி அனல் மின் நிலையத்தினை 5.8.1962ல் அப்பொழுது குடியரசுத் தலைவராகவிருந்த டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அப்பொழுது முதல் கட்டமாக 50 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டதாக அமைந்திருந்தது. இன்று வளர்ந்த நிலையில் 600 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்டதாக விளங்குகிறது. இந்தியாவில் உள்ள மிகப்பெரிய அனல்மின் நிலையங்களில் இரண்டாவதாகத் திகழ்கிறது.

நெய்வேலி உரத்தொழிற்சாலை 'யூரியா' இரசாயன உரத்தை உற்பத்தி செய்கிறது. கருமகட்டித் தொழிற்சாலையில் லீகோ மற்றும் இரசாயன துணைப் பொருட்கள் சுத்திகரிக்கப்பட்ட களிமண் முதலியன உற்பத்தி செய்யப்படுகிறது.

இப்பொழுது நெய்வேலியிலுள்ள முதலாவது நிலக்கரிச் சுரங்கம் 15 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையது. இங்கிருந்துதான் பழுப்பு நிலக்கரி எடுக்கப்படுகிறது.

அண்மையில் எடுக்கப்பட்ட சோதனைகளின்படி 480 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 3000 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி எடுக்கலாம் என்று தெரிகிறது.

இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை வெட்ட வேண்டும்; நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்தை அமைக்க வேண்டும். இதனால், நாட்டுக்குக் கூடுதலான 'எரிசக்தி' கிடைக்கும் என்று தமிழக அரசும், தமிழக மக்களும் நீண்டகாலமாக விரும்பினர்.

அந்த விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் வகையில் மத்திய அரசு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டவும், இரண்டாவது அனல் மின்நிலையத்தை அமைக்கவும் அனுமதி அளித்தது.

இரண்டாவது நிலக்கரிச்சுரங்கம், இரண்டாவது அனல் மின் நிலையம் அமைக்கும் பணிகளை மேதகு குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் 4.7.1979 அன்று நெய்வேலியில் தொடங்கி வைத்தார்கள்.

''நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் தொடங்கியதிலிருந்து 5.1 கோடி டன் பழுப்பு நிலக்கரி எடுக்கப்பட்டுள்ளது. 2800 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

''இப்படி பல்லாண்டுகளாக நாட்டின் மேம்பாட்டுக்காக அரிய பணிகளை நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் ஆற்றிவருகிறது'' என்று குடியரசுத் தலைவர் விவரித்தார்.

இந்த விழாவில் வரவேற்புரை ஆற்றிய மத்திய அரசின் மாண்புமிகு எரிசக்தி அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள்



நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் பற்றிய விவரங்களை வெளியிட்டார். அவர் உரையில் குறிப்பிட்டதாவது:

1956-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த நெய்வேலித் திட்டத்தில் ஆண்டுக்கு 65 இலட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய பழுப்பு நிலக்கரிச்சுரங்கமும், 600 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஓர் அனல் மின் நிலையமும், ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 52 ஆயிரம் டன் யூரியா உற்பத்திச் செய்யக்கூடிய ஓர் இரசாயன உர ஆலையும், 3 இலட்சத்து 27 ஆயிரம் டன் கரிமக்கட்டிகள் உற்பத்திச் செய்யக்கூடிய ஓர் ஆலையும், ஆண்டுக்கு 6 ஆயிரம் டன் களிமண் சுத்தி செய்யக்கூடிய ஒரு சிறிய ஆலையும் அடங்கியிருக்கின்றன.

நெய்வேலி இப்பொழுது இரண்டாவதாகத் துவக்கவிருக்கும் புதிய அமைப்பில் ஆண்டுக்கு 47 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சுரங்கமும், 210 மெகாவாட் வீதம் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய 3 பிரிவுகளைக்கொண்ட மொத்தம் 630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு மின்சார நிலையமும் அடங்கியிருக்கும்.

இந்த இரண்டு திட்டங்களுக்குமாக மொத்த முதலீடு ஏறத்தாழ 400 கோடி ரூபாய். பழுப்பு நிலக்கரி உற்பத்தி 1982-ஆம் ஆண்டில் துவங்கும். அனல் மின்சார நிலையத்தின் இறுதி கட்டம் 1983 ஏப்ரல் திங்களில் இயக்கி வைக்கப்படும். இந்த வட்டாரத்தில் குறிப்பாக தமிழகத்தில் மொத்தம் உற்பத்தியாகும் மின்சார அளவைக்கருத்தில் கொண்டு இந்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மிகக் குறைந்த அளவு பற்றாக் குறையை எதிர்நோக்க வேண்டியிருக்கலாம். ராமகுண்டம் அனல் மின் நிலையத்திலிருந்து தமிழகம் பெற வேண்டிய மின்சக்தி பங்கையும், அண்டை மாநிலங்களிலிருந்து கிடைக்கக் கூடிய மின்சாரத்தையும் வைத்துக் கொண்டு இந்தப் பற்றாக் குறையை நிறைவு செய்ய முடியும்.

விழாவுக்குத் தலைமை வகித்த மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் குறிப்பிட்டதாவது:

''நெய்வேலியில் இப்பொழுது உள்ள அனல் மின்சார நிலையத்தையும், புதியதாக அமையவிருக்கும் அனல் மின்சார நிலையத்தையும் சேர்த்துக் கணக்கிட்டால் தமிழ்நாடு மின்சார 'கிரிட்'டில் நெய்வேலி ஒரு தலைமையான இடத்தை வகிக்கும். கிரிட்டின் மொத்த சக்தியில் 50 விழுக்காட்டை நெய்வேலி அளிக்கும்''.

இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தில் பழுப்பு நிலக்கரி எடுக்கத் தொடங்கியவுடன் ஒரு டன் பழுப்புநிலக்கரி எடுக்கும்பொழுது 20 டன் தண்ணீரை வெளியேற்ற வேண்டும். அதாவது ஒரு நிமிடத்திற்கு 40,000 காலன் தண்ணீரை வெளியேற்ற வேண்டும்.

இது குறித்து விழாவில் மலரை வெளியிட்டு உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''நெய்வேலியில் கிடைக்கும் தண்ணீரைச் சென்னைக்குக் குடிநீராகக் கொண்டு செல்லும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இதற்காக மத்திய அரசிடம் அனுமதியும், உலக வங்கியின் அனுமதியும் கோரப்படும்.

''விரைவில் தமிழ்நாடு மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெறும். கடலில் இருந்து மின்சாரம் எடுப்பதற்குத் தமிழ்நாட்டில் நிறைய வாய்ப்புகள் உள்ளன.

''அண்மையில் அமெரிக்கா சென்று வந்த தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் சொக்கலிங்கம், கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுப்பதை விவாதித்து வந்துள்ளனர். கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுப்பதுடன் அந்த நீரைச் சுத்தப்படுத்தினால் குடிநீர் கிடைக்கும். அதைப் பாசனத்திற்குப் பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கையும் உள்ளது. அதனால் இந்தத் திட்டத்தில் தமிழக அரசு மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ளது.

''நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொண்டுள்ள மத்திய அரசைப் பாராட்டுகிறேன்.''

சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில் நெய்வேலித் திட்டம் பயன்படுகிறது.

இப்பொழுதுள்ள நிலக்கரிச் சுரங்கத்திற்குத் தெற்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும், நெய்வேலி ரயில்வே நிலையத்தின் தெற்கே 2.5 கிலோ மீட்டர் தொலைவிலும் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் அமையும்.

இரண்டாவது நிலக்கரிச்சுரங்கத்திற்கு ஏறத்தாழ ரூ. 169 கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இதில் 46 கோடி அந்நியச் செலாவணியும் ஆகும்.

630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாவது அனல் மின்சார நிலையத்தினை அமைக்க 250 கோடி ரூபாய் செலவாகும். முதலாவது 210 மெகாவாட் மின்சார உற்பத்திப் பிரிவு 1983ல் இயங்கத் தொடங்கும்.

ஆசியாவிலேயே பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சக்தி உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையம் நெய்வேலி அனல்மின் நிலையம்தான். நமது நாட்டின் குறிப்பாக தமிழ்நாட்டின் 'எரி 'சக்தி'க்குப் பெருந்துணையாக விளங்கும் திட்டம் நெய்வேலித் திட்டமாகும்.

சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்கு உதவும் திட்டமாகவும் எதிர்காலத்தில் உருவாக இருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாகும்.

—மாமூலன்



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

**16—6—79**

தமிழ்நாடு மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று கல்லூரி-தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் படிக்கும் அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கு அவர்களின் படிப்புச் செலவிற்காக வட்டியில்லாக் கடன் வழங்கும் சிறப்புத் திட்டத்தை அரசு அறிவித்தது.

**17—6—79**

தந்தை பெரியார் அவர்களின் 'பொன் மொழிகள்'' என்ற புத்தகத்தின் மீது 1950-ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட தடையைத் தமிழக அரசு நீக்கியுள்ளது.

**18—6—79**

சென்னைத் துறைமுகத்தில், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பாக, முதலாவது கரும்பாறைகள் ஏற்றுமதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**20—6—79**

சென்னை மாநகரில்-பள்ளிக்குச் செல்லும் மாணவ - மாணவிகள் - குழந்தைகளின் பயண வசதிக்காக நகரில் பல பகுதிகளிலும் 23 தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன.

ரூ.35 கோடி செலவில் ஜப்பான் நாட்டுக் கூட்டுறவுடன் தமிழகத்தில் கனரகத் தொழில்கள் துவக்கப்பட உள்ளன என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாமுகமது அவர்கள் அறிவித்துள்ளார்.

**22—6—79**

மதுரையில் ரூ. 75 இலட்சம் செலவில் மாட்டுத் தீவனத் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாமுகமது அவர்கள் தெரிவித்துள்ளார்.

**23—6—79**

ஆட்டோக்களால் விபத்து ஏற்படுவதைத் தடுக்க, வேகக் கட்டுப்பாடு நிர்ணயிப்பதற்கான புதிய சட்டம் வரும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்துள்ளார்.

**24—6—79**

சேலம் மாவட்டத்தில் 100 தீப்பெட்டி தொழிற்சாலைகள் துவக்க மாவட்டத் தொழில் மையம் திட்டமிட்டுள்ளது.

**25—6—79**

சிறுதொழில் தொடங்க மனு போட்ட தேதியை அடிப்படையாக வைத்து, உடனே மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கூறியுள்ளார்.

**26—6—79**

சிறுதொழில் துறையின் மூலம் 300 சோப்புத் தொழிற்சாலைகள் நிறுவப்படும் என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு க. இராசாமுகமது அவர்கள் தெரிவித்துள்ளார்.

**28—6—79**

தமிழகத்தில் 6 மாவட்டங்களில் 77 கோடி ரூபாய்ச் செலவில் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி அவர்கள் கூறியுள்ளார்.

**29—6—79**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 35 இலட்சம் ரூபாய் செலவில் ரப்பர் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**1—7—79**

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளையொட்டி, கதர்த் துணி விற்பனை விலையில் அரசு மேலும் 10 சதவீதம் தள்ளுபடி அளித்துள்ளது.

**2—7—79**

பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பிள்ளைகளின் பெற்றோருடைய ஆண்டு வருமானம் ரூ. 9 ஆயிரத்துக்குள் மேற்படாமல் இருந்தால் மட்டுமே, அவர்கள் பிற்பட்ட வகுப்பினருக்கு அரசு வழங்கும் சலுகைகளைப் பெறத் தகுதியுடையவர்கள் என அரசு அறிவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் விரைவில் மனைப் பட்டா, நிலப்பட்டா கொடுக்க 39 தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் கூறினார்.

**4—7—69**

ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கோவில்களுக்கு3 அறங்காவலர்கள் இம்மாதத்துக்குள் நியமிக்கப்படுவார்கள் என்று செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் கூறினார்.

இன்னும் ஓரிரு ஆண்டுகளில் புறம்போக்கு நிலங்கள் அனைத்தையும் ஏழை மக்களுக்கு அளிக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் கூறினார்.

**5—7—79**

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கும், குறு நில விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், நீர்ப்பாசனவசதி செய்ய வேளாண்மைப் பண்ணைக் கருவிகள் வாங்க, உரமிட, நிலச் சீர்திருத்தம் செய்ய, கறவைமாடு, ஆடு, கால்நடை வளர்க்கவும், மீன், பட்டுப்பூச்சி வளர்க்க, கோழிப்பண்ணை வைக்க மானியத் தொகைகள் வழங்கப்படுகின்றன என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் கூறினார்.

தமிழகத்தில் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. தமிழகத்தில் விளையும் பருத்திக்கு நியாயமானவிலையையும் கிடைக்கச் செய்துள்ளோம் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார்.

**7—7—79**

நீலகிரி மலையில் உள்ள தொட்டபெட்டா சிகரத்தில் பாரதி பதிவுக்கல் நிறுவ தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

எட்டுக்கோடி ரூபாய் நட்டத்தில் இயங்கி வந்த போக்குவரத்துக் கழகங்களில், தமிழக அரசு மேற்கொண்ட நிர்வாகச் சீர்திருத்த நடவடிக்கைகள் பயனாக, ஏழரைக்கோடி ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் கூறினார்.

**8—7—79**

சிறுதொழில்களுக்கு எந்திரங்கள் வாங்க மட்டுமே தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இதுவரை நிதிஉதவி செய்து வந்தது. இனிமேல் சிறுதொழில்களுக்கு நிலம், தளவாடம் முதலியவைகளை வாங்கவும் தமிழ்நாடு அரசு உதவி செய்யும் என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாமுகமது அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழக அரசின் உதவியால் நடைபெற்று வரும் தமிழ்நாடு இயல், இசை,நாடக மன்றம் சங்கீத, நாட்டியக் கலைஞர்கள், சங்கீத சபைகள், சங்கீத நடனப் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றுக்கு உதவியளிக்கும் திட்டம் இரண்டை வெளியிட்டுள்ளது. இத்திட்டம் 1979-80ஆம் ஆண்டில் அமல் நடத்தப்படவிருக்கிறது.

**9—7—79**

கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளத்தில் இரண்டாவது அணுமின்நிலையம் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வற்புறுத்தியுள்ளார்.

**10—7—79**

தமிழ்நாட்டிலுள்ள பதின்மூன்று துணை வட்டங்களை, வட்ட அந்தஸ்துக்கு உயர்த்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

**11—7—79**

ஓட்டுநர் உரிமத்தை அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளே வழங்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் கூறினார்.

**12—7—79**

ஒசூர் கால்நடைப் பண்ணை, நாலரைக் கோடி ரூபாய் செலவில் விரிவாக்கப்படும் என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி.டி.சரஸ்வதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**13—7—79**

விடுதலைப் போராட்ட வீரர்களின் ஓய்வு ஊதியத்தை ரூ 75-லிருந்து ரூ. 100 ஆக உயர்த்தி தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த முன்னாள் பால சேனா வீரர்களுக்கும் மீண்டும் ஓய்வூதியம் வழங்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**14—7—79**

அத்தியாவசியப் பணிகளில் உள்ளோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தடை செய்து மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்துள்ளார். இது உடனடியாக அமலுக்கு வருகிறது.

அரிசன மாணவர்கள் விடுதிகளில் பிற சமுதாயத்தின் ஏழை மாணவர்களும் தங்கிப் படிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் திரு பெ. சவுந்தர பாண்டியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.



# இருபத்தொரு திங்களில் இணையற்ற பணிகள்

உழவர் பெருமக்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்கி வசதிகளைச் செய்து கொடுத்து, வேளாண்மை விளைபொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவும் அதன் மூலம் உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கவும் அவர்கள் வாழ்வைப் பெருக்கி வளப்படுத்தவும் தமிழக அரசு முனைப்பாக முயன்று வருகிறது.

சாகுபடிக்குத் தேவையான விதை, இரசாயன உரம், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள் முதலிய இடு பொருள்களின் விலை, வேளாண்மைத் தொழிலாளர்களின் கூலி, மின்சாரக் கட்டணம் ஆகியவை பல்லாண்டுகளாகவே உயர்ந்து வந்துள்ளன. ஆனால், உழவர் உற்பத்தி செய்யும் நெல், கரும்பு, பருத்தி ஆகியவற்றின் விலை உயரவில்லை. இதனால் வேளாண்மை இலாபகரமாக இல்லை; உழவர்களில் பெரும்பாலோர்-அதுவும் குறிப்பாகச் சிறு உழவர்கள் கடன்காரர்களாகவே உள்ளனர் என்பதை நன்கு உணர்ந்திருப்பதாலேயே உழவர் பெருமக்கள் உற்பத்தி செய்த விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யவேண்டும். உழவுத் தொழிலை ஆதாயம் உள்ள தொழிலாக ஆக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன், வேளாண்மை விளைபொருள் விற்பனைக்கெனத் தனியாக ஒரு துறையைத் தமிழக அரசு துவக்கியது.

கடந்த 14.10.1977 முதல் தமிழகத்தில் வேளாண்மை விளைபொருள் விற்பனைத்துறை செயலாற்றத் தொடங்கியது. இத்துறை துவக்கப்பட்டு ஒன்றே முக்கால் ஆண்டுக் காலமே ஆகியிருந்தாலும், இத்துறை வேளாண்மை விளை பொருள் விற்பனையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளதுடன், உழவர் பெருமக்களுக்கு நல்ல விலை கிடைக்க அரும்பாடுபட்டுள்ளது குறிப்பிடத் தகுந்ததாகும்.

தமிழகத்தில் உள்ள விற்பனைக் குழுக்கள் தங்கள் பணிகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும், விற்பனை வசதிகளைப் பெருக்குவதற்கும் உழவர்கள் நல்ல விலையைப் பெறுவதற்கும் இத்துறை பேருதவியாக இருந்துள்ளது. இத்துறை, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மேம்பாட்டிற்கும், விற்பனை செய்யப்படும் பொருள்களின் தரக் கட்டுப்பாட்டிற்கும் வழி வகுத்துள்ளது.

விற்பனைக் குழுக்கள் சிறந்த முறையில் செயல்படவும், ஏற்கெனவே நடைபெற்றுள்ள முறைகேடுகளைச் சீர்செய்யவும்,முன்பு அமைக்கப்பட்டிருந்த விற்பனைக் குழுக்கள் தமிழ்நாடு அரசின் ஓர் அவசரச் சட்டத்தின் மூலம் கலைக்கப்பட்டுள்ளன. விற்பனைக் குழுக்களுக்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்படவும் அவசரச் சட்டம் வழி செய்துள்ளது. அந்த அவசர ஆணையும் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாக அமலாக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், அலுவலர்கள் அடங்கிய அறிவுரைக் குழு அமைத்து, கடந்த 27.3.'79 அன்று இந்த அரசு ஓர் ஆணையைப் பிறப்பித்துள்ளது. இதனால் மாவட்ட விற்பனைக் குழுக்களில் முன்பு நடந்தது போன்ற முறைகேடுகள் நடக்காதிருக்கவும் விற்பனைப் பணிகளை ஊக்குவிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது.

வேளாண்மை விளைபொருள் துறை ஆரம்பிக்கப்பட்ட பிறகு சேலம் மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் புதிதாக இரண்டு விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1937-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு முடிய தமிழ்நாட்டில் 11 மாவட்ட விற்பனைக் குழுக்களின் நிர்வாகத்தில் 140 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களே இயங்கி வந்துள்ளன. தமிழக அரசு வேளாண்மை விளை பொருள் விற்பனைக்கென்று தனியொரு துறையைத் துவக்கியபின் கடந்த 21 மாதங்களில் புதிதாக 2 மாவட்ட விற்பனைக் குழுக்களும், 35 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் துவக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் மட்டும் 22 துணை விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டு உள்ளன.

1977-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை 53 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு மட்டுமே சொந்த இடங்களில் கட்டட வசதிகள் இருந்துள்ளன. 1977-78ஆம் ஆண்டில் மட்டும் 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குச் சொந்த இடங்கள் வாங்கப்பட்டு அலுவலகக் கட்டடம், ஏலம் நடத்தும் கொட்டகை, உலர்த்துவதற்கான களம், குடிநீர், உழவர்களுக்கு ஓய்வு விடுதி, பணப்பட்டுவாடா செய்யும் இடம் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 1978-79ஆம் ஆண்டில் 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் வாங்கி, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் 220 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பணிகளை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு உலக வங்கியிடமிருந்து ரூ. 70.2 கோடி கடன் உதவியை நாடியுள்ளது. இக்கடன் கிடைத்ததும் தமிழகத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பணி மேலும் சிறப்பாக அமைந்திடுவதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

நீலகிரி, சென்னை மாவட்டங்களில் புதிதாக இரு விற்பனைக் குழுக்களை ஏற்படுத்தவும், சென்னை மாநகரத்தில் காய்கறிகளுக்கும், கனி வகைகளுக்கும் தனியானதொரு இறுதி முனை விற்பனைக் கூடம் (டெர்மினல் மார்க்கெட்) திறக்கவும் இந்த அரசு முயன்று வருகிறது. இந்த இறுதி முனை விற்பனைக்கூடம் திறக்கப்படுவதால் காய்கறிகளையும், கருவிகளையும் உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு உயர்ந்த விலை கிடைக்கவும், வியாபாரம் பெருகவும், நுகர்வோர்க்குத் தரமான காய்கறிகளும் கனிகளும் கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படவிருக்கிறது.

உழவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களுக்கு நல்ல விலை பெற்றுத் தரவேண்டும்

## நூற்புழு ஆய்வுத் திட்டம்!

வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய இரு மாவட்டங்களில் பயிர்களைத் தாக்கும் நூற்புழு பற்றிய ஆய்வுத் திட்டம் ஒன்று இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

என்ற நல்ல எண்ணத்திலே இந்த அரசு 16 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என விற்பனைக் கூடங்களைத் துவக்குவதற்கு முனைந்து வருகிறது. இந்த ஆண்டில் புதிதாக 25 விற்பனைக் கூடங்களைத் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கோவை, திருச்சி, மதுரை, காஞ்சிபுரம், வேலூர் ஆகிய பெரிய நகரங்களில் காய்கறி விற்பனைக் கூடங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மை மூலப் பொருள்களைக் கொண்டு தொழில் தொடங்க வாய்ப்புள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலெல்லாம் 'அக்ரோ காம்ப்ளெக்ஸ்' எனப்படும் 'வேளாண் பொருள் அங்காடித் தொடர்' தொடங்கிட அரசு முயன்று வருகிறது. இதனால் உழவர்களுக்கு உயர்ந்த விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. இத்திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டில் உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் ஒரு வேளாண்பொருள் அங்காடித் தொடரைத் துவக்கியுள்ளது. வேளாண் பொருள் அங்காடித் தொடர்களைப் பல்வேறு மாவட்டங்களிலும் துவக்குவது பற்றி ஆராய்ச்சி நடந்து வருகிறது.

1977ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழ்நாட்டில் 13 'அக்மார்க்' ஆய்வுக் கூடங்கள் இருந்துள்ளன. வேளாண்மை விளை பொருள் விற்பனைத் துறை துவக்கப்பட்டவுடன் திருச்சியிலும், பண்ணுருட்டியிலும் புதிதாக இரண்டு 'அக்மார்க்' ஆய்வுக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. 45 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு 1 'அக்மார்க்' ஆய்வுக் கூடம் வீதம் தமிழகத்தில் மேலும் புதிதாக 60 'அக்மார்க்' ஆய்வுக் கூடங்களைத் திறக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற் படியாக 5 இடங்களில் ரூ. 5 இலட்சம் முதலீட்டில் ஆய்வுக் கூடங்கள் திறக்க ஆவன செய்யப்பட்டுள்ளன.

தற்பொழுது 50 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தான் பயிற்சி பெற்ற தரம் பிரிப்பாளர் உள்ளனர். அதற்கான சாதனங்களும் உள்ளன. இந்த ஆண்டில் ரூ.20 இலட்சம் செலவில் 35 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வாணிப முறையில் தரம் பிரிக்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

மத்திய அரசு சார்புத் திட்டத்தின் கீழ் சத்தியமங்கலத்தில் ரூ. 50 ஆயிரம் மானியத்தில் புதிதாகப் பருத்தி தரம் பிரிக்கும் நிலையம் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தற்பொழுது சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. இதனால் மற்ற மாநிலங்களில் இருந்தும் இங்குள்ள விற்பனைக் குழுக்கள் எவ்வாறு பணியாற்றுகின்றன என்பதைக் கண்டறிவதற்குக் குழுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. தமிழக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சிறப்பாக இயங்குவதைக் கண்டு உலக வங்கிக் குழுவினர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். தமிழக விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு ரூ. 36 இலட்சத்தை சென்ற ஆண்டில் மானியமாக வழங்கியுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ. 24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த 24 இலட்சம் ரூபாயும் 24 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே தமிழக வேளாண்மை விளைபொருள் விற்பனைத்துறையின் அலுவலர்கள் பணியாற்றி உழவர் பெருமக்கள் விற்பனை செய்யும் விளைபொருள்களைச் சரியான எடையில், நல்ல விலையில் விற்பனை செய்ய உதவ வேண்டும்.

''வாணிகம் செய்வார்க்கு
வாணிகம் பேணிப்
பிறவும் தம்போற் செயின்''

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைத் துறை செயலாற்றி, தமிழக வேளாண்மை விளை பொருள் விற்பனை சிறந்து விளங்கிடவும், அதன் மூலம் உழவர்களுக்கு நல்ல விலை கிடைத்து அவர்கள் வாழ்வு வளம் பெறவும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.



# சேலத்தில் பெரியார் நூற்றாண்டு விழா



சேலம் நகரில் தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா தமிழக அரசின் சார்பில் ஜூலை முதல் நாளன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நேரு கலையரங்கில் நடைபெற்ற விழா நாயன இசையுடன் துவக்கமாகியது. நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர் திரு இரா. அருணாசலம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்:

''அகிலத்து இருள்போக்கும் அறிவுக் கதிரவன் தந்தை பெரியார்; அச்சம் என்பதை வாழ்நாளில் ஒருபோதும் அவர் கண்டதில்லை.''

விழாவைத் தொடக்கி வைத்த மாண்புமிகு நிதி அமைச்சர் திரு இ. மனோகரன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பெரியார் காலங்களினால் விழுங்கப்பட்டாலும் காலங்களினால் விழுங்கமுடியாத கருத்துக்கள் கொண்ட சமதர்மவாதி. **ஆண்டவன் பெயரைச் சொல்லி அப்பாவி மக்களை ஏமாற்றுகின்ற பேர்வழிகளை அவர் கண்டித்தார்.**''

அடுத்து, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தலைமையில் மகளிர் அரங்கம் நடைபெற்றது. தலைமை உரையில் அமைச்சர் குறிப்பிட்டார்:

'''அரசியல் கட்சியினர் மட்டும் தான் பெரியாரைப் பின்பற்ற வேண்டும் என்பதில்லை. தமிழகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவரது கொள்கைகள் வெற்றி பெறும்.''

அடுத்து, திருமதி. ஈ.வெ., கி சுலோசனா சம்பத், திருமதி நாமகிரி தாமோதரன், திருமதி பவானி பழநியம்மாள், திருமதி சாந்தா தட்சிணாமூர்த்தி, செல்வி ஏ அருள்மொழி ஆகியோர் பேசினர்

அடுத்து, மேலவை உறுப்பினர் கவிஞர் திரு புலமைப்பித்தன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் திரு. முருகுசுந்தரம், திரு இ. முத்துராமலிங்கம், திரு தி.கு. நடராசன், திரு கோ.பெ. நாராயணசாமி, திரு பொன்னடியான் ஆகியோர் பெரியாரின் சிறப்பியல்புகளைத் தங்கள் கவிதைகளில் வடித்துத் தந்தனர்.

கவியரங்கத்தை வாழ்த்திப் பேசிய திரு என்.டி. சுந்தரவடிவேலு குறிப்பிட்டார்:

"பெரியார் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்து வந்தார்.''

நிகழ்ச்சிக்கு வந்திருந்தோர் அனைவருக்கும் நன்றி கூறினார், நாடாளுமன்ற உறுப்பினர் திரு இ.ஆர். கிருஷ்ணன்.

பிற்பகல் 5 மணியளவில் தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் அலங்கார வண்டிகளுடன் என்.சி.சி., சாரணர், ஊர்க்காவலர் படையினர், மகளிர், மாணவர் ஆகியோரின் அணிவகுப்பு செவ்வாய்ப்பேட்டையில் உள்ள சந்தைப்பேட்டையில் இருந்து புறப்பட்டு, போஸ் மைதானத்தை அடைந்தது.

இரவு 7 மணியளவில் போஸ் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த திரு ஜி. பி. சோமசுந்தரம் அரங்கில் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி.பொன்னையன், வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''மனிதரிடையே மேல் - கீழ் பாகுபடி ஏற்படுத்தி - ஒதுக்கி வைத்து - நசுக்கி வைத்து உள்ள இழிநிலை மாற்றப்பட வேண்டும் என்று பாரதபூமியில் முதன் முதலில் மிகத் துணிவாக அடியெடுத்து வைத்தவர் பெரியார்''.

விழாவுக்குத் தலைமை ஏற்ற டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் தமது உரையில் குறிப்பிட்டார்:

"வாழ்ந்த தமிழினம் பிற்காலத்தில் அறிவை இழந்து - ஆற்றலை இழந்து - ஆக்கத்தை இழந்து - ஊக்கத்தை இழந்து - பெருமையை இழந்து - வாழ்வை இழந்து அடிமைப்பட்டுக் கிடக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. **அந்தச் சமுதாயத்தை மறுபடியும் தலை தூக்கி வைக்க வந்தவர் தந்தை பெரியார்.**"

அடுத்துப் பேசிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பெரியாரின் நூல் - எழுத்து - பேச்சு குறித்து, அமெரிக்கா - சுவிட்சர்லாந்து போன்ற நாட்டினர் உட்பட இதுவரை 11 பேர் ஆய்வு செய்து டாக்டர் ஆகியுள்ளனர். இன்னும் 18 பேர் ஆய்வு செய்து வருகின்றனர் என்றால் என்ன பொருள்? பெரியாரின் வரலாறு பெருமைக்குரியது என்பது தானே!''

அடுத்து டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி ஆங்கிலத்தில் உரையாற்ற டாக்டர் திரு ஔவை நடராசன் அதைத் தமிழில் மொழி பெயர்த்தார். அது வருமாறு:

''ஆற்றலும் தீவிரமும் நிறைந்த - ஈடு இணையற்ற தலைவர் பெரியார். ஒரு காலத்தில் பத்திரிகையின் பலம்தான் ஆற்றல் வாய்ந்தது என்ற கருத்து இருந்தது. ஆனால் தந்தை பெரியார் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று, மேடையில் பேசி இளைஞர்களின் மனங்களில் இடம் பெற்றதால் மேடைப் பேச்சின் பெருமை புலப்பட்டது."

அடுத்து உரையாற்றிய திரு. எம். பி. சுப்பிரமணியம் தமது உரையில் குறிப்பிட்டார்:

"அரசியல் சுதந்தரத்துக்கு முன்னரே சமுதாயப் புரட்சி - சமுதாய மாற்றம் ஏற்பட்டால்தான்



நன்மை பயக்கும் என்று தந்தை பெரியார் நினைத்தார்.''

அடுத்துப் பேசிய திரு கே.அர்ச்சுனன், தமது உரையில் குறிப்பிட்டார்:

''பெரியார் ஒரு கட்சிக்குத் தலைவராக இருந்தபோதிலும், தமிழ்ச் சமுதாயம் அனைத்துக்கும் அவர் வேண்டியவர்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு க. இராசாராம் தமது உரையில் குறிப்பிட்டார்;

''மாக்களாக இருந்தவர்களை மக்களாக மாற்றிய பெருமை இந்தியாவிலேயே ஒரு தலைவருக்கு உண்டு என்றால் -அது தந்தை பெரியாருக்குத்தான் உண்டு.''

அடுத்து உரையாற்றிய முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இன்று பெரியார் நூற்றாண்டு விழா இந்த அளவுக்குக் கொண்டாடப்படுகிற தென்றால் அவர் தனது உள்ளத்தை உயர்த்திக் கொண்டதுதான் காரணம்.'

அடுத்து உரையாற்றிய திரு. எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் தமது உரையில் குறிப்பிட்டார்:

''சமுதாயத்தில் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுக்குக் கடவுளைக் காரணமாகக் காண்பித்தார்கள்! அதனால் தான் கடவுளைச் சாடினார் பெரியார்''.

அடுத்து உரையாற்றிய மேலவை உறுப்பினர் திரு.அப்துல் வகாப், தமது உரையில் குறிப்பிட்டார்:

''பெரியாரின் வெற்றிக்கு-முன்னேற்றத்திற்கு மூன்று அடிப்படைக் காரணங்கள் உண்டு. கடுமையான உழைப்பு-எப்போதும் நேர்மையைக் கடைப்பிடித்தல்-தியாக மனப்பான்மையோடு செயல்படுதல்-இவைதான் அந்த அடிப்படைக் காரணங்கள்.''

அடுத்துப் பேசிய திரு கு. கிருஷ்ணசாமி தமது உரையில் குறிப்பிட்டார்:

''ஜாதியை ஒழிப்பதற்கு அய்யா சொல்லிய வழிமுறைகள் ஏராளம்! அவற்றைக் கடைப்பிடித்து ஜாதியை ஒழிப்பது நமது கடமை.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி தமது உரையில் குறிப்பிட்டார்:

''தந்தை பெரியாரின் மகத்தான வெற்றிகளுக்கும் -மகோன்னதமான சாதனைகளுக்கும் அடித்தளமாக இருந்தது அவரது அஞ்சாமைதான்!''

அடுத்து உரையாற்றிய திரு ஏ. சித்தையன் தமது உரையில் குறிப்பிட்டார்:

**''புத்தருக்குப் பின்னர் வந்த மிகப் பெரும் சிந்தனையாளர் பெரியார் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.** அவர் மிகப் பெரும் மனிதாபிமானி!''

அடுத்துப் பேசிய பேராசிரியர் திரு தி.வை. சொக்கப்பா தமது உரையில் குறிப்பிட்டார்:

''கல்வி அறிவு பெற்றிருந்தும் மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்த மக்களைப் பார்த்து மனம் கொதித்தார் பெரியார். அவர் சிந்தனையாளர் மட்டுமல்ல - நம்மை எல்லாம் சிந்திக்கச் சொன்னார்; சிந்திக்க வைத்தார்.''

அடுத்துப் பேசிய திருவாரூர் திரு கே. தங்கராசு குறிப்பிட்டார்:

''இந்த நூற்றாண்டு பெரியார் மறைந்த நூற்றாண்டுதான் என்றாலும் அவரது கொள்கைப்படி உருவான அரசைத் தோற்றுவித்த அண்ணா பிறந்த நூற்றாண்டு இது. அண்ணாவின் வழியில் நடைபோடும் இந்த அரசு தந்தை பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.''

அடுத்து உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் திரு எம். ஆறுமுகம் தமது உரையில் குறிப்பிட்டார்:

''உறங்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயம் இன்று விழிப்புடன் இருப்பதற்குப் பெரியாரின் 60 ஆண்டுப் பொதுத் தொண்டுதான் காரணம்!''

பின்னர், தந்தை பெரியார் படத்தைத் திறந்து வைத்து, விழா நிறைவுச் சொற்பொழிவை நிகழ்த்தினார் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி. ஆர்.

உரையாற்றுவதற்கு முன்னர், கலப்புத் திருமணம் செய்து கொண்ட 4 தம்பதிகளுக்கு தங்கப் பதக்கத்தை வழங்கினார் முதல்வர். 6 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நகராட்சியின் சார்பில் உருவாக்கப்பட்டிருந்த பெரியார் பேரங்காடியைத் திறந்து வைத்தார்.

தமது சிறப்புரையில் முதல்வர் குறிப்பிட்டதாவது: ''அய்யா பெரியாரின் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு முழுதும் கொண்டாடப்படுகிறது. நிறைவு விழா செப்டம்பரில் சென்னையில் கொண்டாடப்பட இருக்கிறது. அது பெரியாரின் புகழை நிலைநிறுத்தத் தக்க வகையிலே அமையும். அதுமட்டுமல்ல, அய்யாவின் பிறந்தநாள் விழா இனி ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும். ஆகவே அவரது கொள்கைகளை எடுத்துரைக்க விழா எடுப்பது-இலட்சியங்களை நிறைவேற்றுவது - தொடரும். பெரியார் கனவு கண்ட சமுதாய மாறுதல் கட்டாயம் ஏற்படும்; அதை ஏற்படுத்தியே தீருவோம்.

''மக்கள் எல்லாரும் படித்து அறிவு பெற்றால் ஜாதி வேறுபாடு ஒழிந்துவிடும். படிப்பினால் தான் வேற்றுமையில்லாத வாழ்வு ஏற்படும்.

**''தத்துவத்திற்குத் தந்தையான தந்தை பெரியார் தனி மனிதருக்குச் சொந்தமானவரல்ல! மனித சமுதாயம் அனைத்துக்கும் அவர் சொந்தம்!**

''சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கத் தக்க வகையில் கல்விமுறை அமையவேண்டும். தமிழகத்தில் இனிமேல் எந்த உருவிலும் சாதிபேதம் இருக்கக்கூடாது. தமிழன் என்ற ஒரே சொல்தான் இருக்கவேண்டும்.

**''தமிழகத்தில் உள்ள தாய்மார்கள் - குழந்தைகள் - தாழ்த்தப்பட்டோர் அனைவரும் பயன்பெறத் தக்க வகையில் பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த இந்த அரசு தவறாது பாடுபடும்.''**

முதல்வரின் சிறப்புரைக்குப் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி.கண்ணன் நன்றி கூறினார்.

சிறப்புச் சொற்பொழிவிற்குப் பின்னர் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் தலைமையில், நடிப்பிசைப் புலவர் நாடக மன்றத்தார் வழங்கிய-பேரறிஞர் அண்ணா அவர்களின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சேலம் நகரில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழா சிந்தனைக்கு உரம் ஊட்டிய விழா.

**நிகழ்ச்சித்தொகுப்பு**
**— தமிழ்ப்பித்தன்.**




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




1979

# விடுதலைத் திருநாள்

— பேரறிஞர் அண்ணா



இன்று ஆகஸ்டு பதினைந்தாம் நாள்— ஆங்கில நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்று, சுதந்தரக் கொடியினைப் பெருமிதத்துடன் ஏற்றிடும் நன்னாள்—தன்னரசு பெற்ற நாள்—உரிமைப் போரிலே வெற்றி கண்ட நாள் என்று பாராட்டுவர்; பாராட்டுகின்றனர்.

வரலாற்று ஏடுகளிலே, இந்நாள் தனிச் சிறப்பையளிக்கும் நாளாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நாள் திருநாள்—ஐயமில்லை; இந்நாள் பொன்னாள்—மறுப்பார் இல்லை; இந்நாள் நமது உரிமையை உலகு ஒப்புக் கொண்டு விட்டது என்பதனை அறிவிக்கும் நாள் அறிகிறோம்; அகமகிழ்ச்சி பெறுகிறோம்

வந்தது சுதந்தரம். வாழ்கின்றோம்-நம்மை நாமே ஆள்கின்றோம் என்ற உரிமையுடன். ஆனால், ''வாழ்கின்றோமா?'' நம்மை நாமே கேட்டுக் கொள்ளவேண்டிய கேள்வி இது. வாழ்கின்றோமா?

வாழ்கின்றோம் என்பதற்கும், இருக்கின்றோம் என்பதற்கும், பொருள் வேறுபாடு மிகுதி... நம்மிலே மிகப் பெரும்பாலோர் இன்று 'ஏதோ இருக்கின்றோம்' என்று கூறிடும் நிலையிலே உள்ளோம்; 'வாழ்கின்றோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ளும் நிலையில் அல்ல.

ஏழ்மையும் அறியாமையும் ஒழிந்த நிலையே, வாழ்கின்றோம் என்று கூறிட, நாம் உரிமை பெறும் நாளாகும்.

இல்லாமையும் போதாமையும் ஒழிந்த நாளே, நாம் வாழ்வு பெற்றிடும் புதுநாளாகும்.

இந்நாள், நாட்டின் நிலையை நாம் அறிந்திடல் வேண்டும் சுதந்தரத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியும் இழைந்திட வேண்டும். அப்போதுதான், எதற்காகச் சுதந்தரம் பெற்றளித்தனரோ, பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நாடு பெற்றிடும்; சுதந்தரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

களிப்படைய மட்டுமல்ல, நண்பர்களே, இது கணக்குப் பார்க்கும் நாளுமாகும். 'நாம் சுதந்தரம் பெற்ற பிறகு, நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன, இனி என்ன தரவேண்டும். எவ்வளவு தரவேண்டும்? என்ற கணக்குப் பார்த்திடும் நாள்.

முதல் ஆகஸ்டு பதினைந்து, கணக்குத் தீர்த்த நாள் - ஏகாதிபத்தியத்துக்கும் நமக்கும் இருந்து வந்த கணக்கைத் தீர்த்த நாள். புதுக் கணக்குப் போட்ட நாள். இன்றைய ஆகஸ்ட் பதினைந்து கணக்குப் பார்க்கும் நாள் - சுதந்தரம் பெற்ற பிறகு, நமது சொல்லும் செயலும் எந்த முறையில் எந்த அளவுக்கு நமக்குச் சுகவாழ்வு பெற்றளித்தது எனக் கணக்குப் பார்க்கும் நாள்.

*[பேரறிஞர் அண்ணா அவர்கள் 15-8-1967-ல் ஆற்றிய வானொலி உரையிலிருந்து தொகுக்கப்பட்டது]*

தமிழரசு மலர்:10 இதழ்: 4
16-8-79

# தமிழரசு

பதிவு எண். M. 8676



COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
14 ஆக 1979

# தமிழரசு

16.8.1979 50காசு





ஏற்றம் கண்ட

# இன எழுச்சி இயக்கம்

இந்திய அரசியலில் தமிழகத்தில் மட்டும் திராவிட இன எழுச்சிக்காகவே ஓர் இயக்கம்உருவாகியது. அதனைப்பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி அமைக்கும் கட்டத்திற்குக் கொண்டு வந்தார்கள். அண்ணாவின் அடியொற்றி வருபவர்களே ஆட்சி செலுத்தி வரும் சூழ்நிலை உள்ளது. இது எவ்வாறு முடிந்தது என்பதை விளக்கும் வகையில் சென்னையில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது.

கனடா நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தையும் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

சாஸ்திரி இந்தோ - கனடியன் நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. இதனையொட்டி பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த திரு ஸ்டீபன் ஆர். இங்கிலிஸ் (Stephen R Inglis) தமிழ்நாடு மாநிலத்திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு கோவை செழியன் அவர்கட்குக் கடிதம் ஒன்றினை எழுதியிருந்தார். அக்கடிதத்தில், தென்னகத்தின் அரசியல் நிலைமைகளைத் தமது மாணவர்களுக்கு விளக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

மனித சமுதாயத்தின் வளர்ச்சி-இயல்பு-சட்டங்கள் ஆய்வுத் துறை (Sociology) மனித உடல், உளம் இரண்டும் சார்ந்த முழு வரலாற்று ஆராய்ச்சித் துறை (Anthropology) ஆகியவற்றில் பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் கடந்த 21.7.79 அன்று சென்னை எழிலகத்தில் உள்ள திட்டக்குழு கலந்துரையாடு அலுவலகக் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்குபெற்றனர்.

இந்தக் கருத்தரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு முனுஆதி அவர்களும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு கோவை செழியன், மின்துறை அமைச்சர், பேரவைத் தலைவர் ஆகியோர் திராவிட இன எழுச்சி ஆரம்பம் முதல் இன்றுவரை வளர்ந்துள்ள வளர்ச்சிப் படிகளையும் அதனால் உருவாகியுள்ள நிலைகளையும் விளக்கினார்கள்

தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் உருவாக்கித் தந்த அந்த மாபெரும் திராவிட இன எழுச்சிகளை-சாதனைகளை, இன்று தமிழகத்தில் முதல்வர் புரட்சித் தலைவர் எப்படிச் செயல்வடிவம் கொடுக்கிறார் என்பதை விளக்கினார்கள்.

மேலும் தமிழகத்தில் ஐந்தாண்டுத் திட்டங்கள் - மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள தொடர்புகள் - மொழிப் பிரச்சினைகள் ஆகிய பொருள்கள்பற்றியும் எடுத்துரைத்து விவாதித்த திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்கள், கனடாவிலிருந்து வந்த பிரதிநிதிகளிடம் 'கியூபெக்' பகுதியில் நடந்துவரும் மொழிப் போராட்டம் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்துகொண்டார்.

கனடா நாட்டுப் பல்கலைக் கழக மாணவர்களும் ஆசிரியர்களும் அதனைப் பற்றி விரிவான விளக்கங்களை அளித்தனர்.

சாஸ்திரி இந்தோ-கனடியன் நிறுவனத்தின் முதுவேனிற்காலத் திட்டத்தின் படி நடைபெற்ற இக்கருத்தரங்கம், தென்னகத்தின் அரசியல் வளர்ச்சியையும், இன எழுச்சி வரலாற்றையும் அறிந்துகொள்ள அரிய வாய்ப்பாக அமைந்திருந்தது.



# படமும் செய்தியும்



இந்தியாவிலுள்ள பிரெஞ்சு நாட்டுத் தூதுவர் திரு அண்டர் ரோஸ் (Andre Ross), மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி ஆர். அவர்களை 2.8.79 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய உல்லாசப் பேருந்தின் வெள்ளோட்டத்தை 22.7.79ல் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் துவக்கி வைத்தார்.



# உலகத்தமிழ் மாநாட்டுச் செயற்குழு

1980-ம் ஆண்டு சனவரி மாதம் 2-ந்தேதி முதல் 8-ந்தேதி வரை ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டினை மதுரையில் நடத்துவதென தமிழ் நாடு அரசு தீர்மானித்துள்ளது. 1968-ம் ஆண்டு நடைபெற்ற உலகத்தமிழ் மாநாடு அனைத்து நாட்டு தமிழ் ஆராய்ச்சிக் குழுவினால் நடத்தப் பெற்றது. தற்போது ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டினை தமிழ்நாடு அரசினால் சிறப்பான முறையில் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத தலைவராகக்கொண்ட 40 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு ஒன்றினை அரசு நியமித்துள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் திரு கே. மனோகரன், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு சி. அரங்கநாயகம், நீதிபதி திரு எம். எம். இஸ்மாயில், நீதிபதி திரு பி. ஆர். கோகுல கிருஷ்ணன், நீதிபதி திரு மகராஜன், முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம், முன்னாள் முதல்வர் திரு மு. கருணாநிதி, மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், முன்னாள் கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன், முன்னாள் உள்துறை அமைச்சர் திரு பி. கக்கன், ராஜா சர் முத்தையா செட்டியார், டாக்டர் மால்கம் ஆதி சேஷையா, மதுரை காமராஜ், சென்னை, அண்ணாமலை பல்கலை கழகங்களின் துணை வேந்தர்கள், மதுரை மாநகர மேயர், திரு கி. ஆ. பெ. விசுவநாதம், அரசுக் கவிஞர் திரு கண்ணதாசன் ஆகியோர்களை இக்குழுவின் துணைத் தலைவர்களாக அரசு நியமித்துள்ளது.



இக்குழுவின் இதர உறுப்பினர்களாக கல்வித் துறைச் செயலர், செய்தி - மக்கள் தொடர்புத் துறைச் செயலர், டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம், திரு ஏ. சுப்பையா, திரு கே. அப்பாத் துரை, திரு எம். வி. வேணுகோபாலபிள்ளை, டாக்டர் வ. சுப.மாணிக்கம், டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், டாக்டர் வெங்கட சுப்பிரமணியம், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாநகராட்சியின் ஆணையாளர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், தமிழ் கலாச்சார நிலைய இயக்குநர், மொழி பெயர்ப்புத்துறை இயக்குநர், அனைத்து நாட்டு தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர், சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலை, பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்கள் ஆகியோர் இருப்பார்கள்.

இச்செயற்குழுவின் சிறப்பு அலுவலர், அமைப்புச் செயலராகப்பணியாற்றுவார்.



# நாகர்கோவிலில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

அரசியல் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும், இலக்கியப் புகழும் ஒருங்கே பெற்றுத் திகழும் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். இத்தகு பல்வேறு பெருமைகளும் ஒருங்கேகொண்ட குமரி மாவட்டம் நாகர்கோவிலில் தமிழ்நாடு அரசின் சார்பில் 7.7.79 அன்று, பகுத்தறிவுப் பகலவன்-தந்தை பெரியார் விழா, நாகர்கோவில் நகராட்சி கலைவாணர் கலையரங்கில் தொடங்கப்பட்டது.

'உயர்ந்த நகைச்சுவை என்றால், அது மனிதனைச் சிரிக்க வைப்பதோடு சிந்திக்கவும் வைக்க வேண்டும்' என்னும் நகைச்சுவை இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாக விளங்கிய நகைச்சுவை மன்னர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் பிறந்த அம்மண்ணில், அவர் நினைவாக அமைக்கப்பட்ட கலையரங்கில்-இங்கர்சால், ரூசோ, சாக்ரடீஸ், லெனின் போன்ற பல்வேறு தலைவர்களின் மொத்த உருவாகத் திகழ்ந்த தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா தொடங்கப்பட்டது, மிகமிகப் பொருத்தமானதாகும். ஆமாம். ஆட்டம் ஆடிப் பாட்டுப் பாடி நாட்டைத் திருத்தவந்த அந்த நாகரிகக் கோமாளி, தன் வாழ்நாள் முழுவதும் தந்தை பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதையே இலட்சியமாக - உயிர்மூச்சாகக்கொண்டு திகழ்ந்தவரல்லவா? இதைவிட வேறென்ன பொருத்தம் வேண்டும்?

விழாவையொட்டி, முதல் நாளே நாகர்கோவில் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. வளைவுகளும் தோரணங்களும் அலங்கார விளக்குகளும் நகரை அலங்கரித்தன. இவற்றைக் காண இரவு முழுவதும் மக்கள் குடும்பம் குடும்பமாக - சாரை சாரையாக நடமாடிக் கொண்டிருந்தது, இரவே பகலாகிவிட்டதோ என்று எண்ணும்படியாக இருந்தது.

7.7.79 காலை, 9 மணியளவில் விழா தொடங்கியது. விழா அரங்கில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

சட்டமன்ற உறுப்பினர் திரு சி. கிருஷ்ணன் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்துகையில், ''இதுகாறும் தந்தை பெரியாரின் விழாவினை ஒரு குறிப்பிட்ட இயக்கத்தினரே கொண்டாடி வந்தனர். இப்போது, அரசுச் சார்பிலேயே அதனைக் கொண்டாடுகின்ற நல்லதொரு வாய்ப்பினை நமது புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்'' என்றார்.

அடுத்து திரு. திருக்குறளார் வீ.முனிசாமி அவர்கள் தொடக்க உரையாற்றினார். அவர் குறிப்பிட்டதாவது:

''மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிய வேண்டும்; பகுத்தறிவு பெருகவேண்டும் என்று பெரியார் வாழ்நாளெல்லாம் பாடுபட்டார்.

''உனக்கொரு அறிவு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்-அதைப் பயன்படுத்தி வாழு என்று சொல்லி விளங்கவைத்தவரே பெரியார்தான்.

''உலகத்திலேயே சாதி ஒழிப்புக்குப் போராடி, முதன் முதலாகச் சிறைக்குப் போனவர் பெரியார்தான்.

''சாதி மதபேதங்களை -மூடப் பழக்க வழக்கங்களை வளர்க்கின்ற கருத்துடைய பாடங்களை நமது பாடத் திட்டத்திலிருந்து நீக்கியாக வேண்டும்.

''ஒருவன் எவ்வளவுதான் படித்தவனாக இருந்தாலும், அவன் பகுத்தறிவுள்ளவனாக வாழ்ந்தாலன்றி இந்த நாட்டிற்கு நன்மை செய்ய முடியாது.''

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள் தலைமையில் மகளிர் அரங்கம் துவங்கியது. அமைச்சர் தம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது;

''இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவரான தந்தை பெரியார், தாம் வாழ்ந்த காலத்தில் பிரச்சினைக்குரியவராகவே வாழ்ந்தார்.

''பிறர் மனத்தைப் புண்படுத்துமே என்பதற்காக அவர் கவலைப்பட்டதில்லை. சொல்ல விரும்பிய கருத்துக்களை-சொல்ல வேண்டிய கருத்துக்களை வெளிப்படையாக - துணிச்சலாக-தெளிவாகச் சொன்னவர் தந்தை பெரியார்.

''தந்தை பெரியார் சிக்கனமாக வாழ்ந்தார். தனக்காக-தன் வாரிசுக்காக என்று அவர் அப்படி வாழவில்லை. வாழ்க்கையின் அடித்தளத்தில், வாழ்வோடு போராடி உழன்று கொண்டிருந்த கடைகோடி மக்களுக்காகவே அவர் பணத்தைச் சேர்த்தார். இந்த நாட்டின் ஏழை எளிய மக்களை-ஆதரவற்ற மக்களை-வாழ வைப்பதற்கென்றே அவர் சிக்கனமாக வாழ்ந்து பொருளைச் சேர்த்தார்.

''இன்று இந்த நாட்டில் பெண்கள் பலர் டாக்டர்களாகவும்,

அறிவியல் மேதைகளாகவும், பொறியியலாளராகவும், அமைச்சர்களாகவும் இன்னும் இப்படிப்பட்ட பல்வேறு பதவிகளிலும் இருக்கிறோம் என்றால் அது, தாய்க் குலத்திற்குத் தந்தை பெரியார் தந்த பிச்சை என்பதை நாம் மறுக்கவோ மறைக்கவோ முடியாது''.

அடுத்து குற்றாலம் பராசக்தி கல்லூரி முதல்வர் செல்வி பாகீரதி, பேராசிரியை திருமதி அவ்வையார் அழகப்பன், திருமதி சாந்தா பாலகிருஷ்ணன் ஆகியோர் தந்தை பெரியார் அவர்கள் மகளிர் சமுதாயத்திற்கு ஆற்றியிருக்கிற அரும்பணிகளையெல்லாம் விளக்கினார்கள்.

திருமதி அந்தோணி அம்மாள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. 'ஏற்றமிகு பேச்சாளர் பெரியார்' 'பண்புகளின் பாசறை பெரியார்', 'புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி பெரியார்', 'சீர்திருத்தச் செம்மல் பெரியார்', 'பகுத்தறிவுத்தந்தை பெரியார்' என்னும் தலைப்புகளில் முறையே கவிஞர்கள் ப. வளன் அரசு, ஈரோடு தமிழன்பன், இ. முத்துராமலிங்கம், டாக்டர் எஸ். நாகராசன், இரா. அரங்கசாமி ஆகியோர் தாம் இயற்றிய கவிதைகளை அரங்கேற்றினர். முற்பகல் நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்றது.

தந்தை பெரியாரின் சீரிய கொள்கைகளையும், அவரது வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளையும் சித்திரிக்கும் அலங்கார வண்டிகளின் சிறப்பு அணிவகுப்பு ஊர்வலம் பிற்பகல் 4-00 மணியளவில் சேது இலக்குமிபாய் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டது. நாகர்கோவில் சிறுத்ததோ, பெரியார் பெரும்படை பெருத்ததோ என்று கருதுகின்ற அளவிற்கு வெள்ளம் போல் மக்கள் கூட்டம் கலந்து கொண்ட அந்த எழுச்சிமிக்க ஊர்வலத்தினை வழியில் ஒரு மேடையில் நின்றவாறு மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் பார்வையிட்டார்.

ஊர்வலம், நகரின் முக்கியத் தெருக்களின் வழியே அண்ணா விளையாட்டரங்கம் வந்து அடைந்தது.

நிதியமைச்சரின் பேரவைச் செயலர் நாஞ்சில் திரு எம்.வின்சென்ட் அவர்கள் தமது வரவேற்புரையில், நாஞ்சில் மாவட்டத்தின் பெருமைகளை விளக்கிட்டு, ''கட்சி பேதமின்றி, எந்தக் கட்சியாக இருந்தாலும், இந்த நாட்டுக்கு நல்லனவற்றைச் சொல்லி வைத்த தலைவர்களுக்கெல்லாம் புரட்சித் தலைவரின் தலைமையில் சிறப்புற இயங்கும் இந்த அரசு விழாவெடுத்துச் சிறப்புச் செய்கிறது'' என்று கூறி அனைவரையும் வரவேற்றார்.

அடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள், தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மிகச் சிறந்ததோர்உரை நிகழ்த்தினார். அவர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

''பெரியார் அவர்களின் பகுத்தறிவுப் பிரச்சாரம் தமிழ்ச் சமுதாயத்தை விழிப்புறச் செய்திருக்கிறது.

''பெரியார், சமுதாயத்தில் எதிர்நீச்சல் போட்டே வளர்ந்தார். அவர் நடந்து வந்திருக்கிற பாதை மிகவும் கரடுமுரடானது.

''பெரியாரை நான் எண்ணிப் பார்க்கும்போது, என் மனக்கண் முன்னே பெர்னாட்ஷா தோன்றுகிறார்; மார்ட்டின் லூதர் தோன்றுகிறார்; கார்ல் மார்க்ஸ் தோன்றுகிறார்; பெட்ரண்ட் ரசல் தோன்றுகிறார்; ரூசோ தோன்றுகிறார்; சாக்ரடீஸ் தோன்றுகிறார். இளைஞர்கள், பெரியாரின் எண்ணங்களை இதயத்தில் ஏற்றுச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

பின்னர், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமது உணர்ச்சிமிக்க தலைமையுரையை நிகழ்த்தினார். அவர் உரையில் குறிப்பிட்டதாவது:

''வீழ்ச்சியுற்ற தமிழர்க்கு எழுச்சியூட்டியவர் தந்தை பெரியார். தாழ்வுற்ற சமுதாயத்தினைத் தலைநிமிரச் செய்தவர் தந்தை பெரியார்.

''எங்களையெல்லாம் ஆளாக்கிய பெருமை அறிஞர் அண்ணாவுக்கு உண்டு. அறிஞர் அண்ணாவை உருவாக்கிய பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு.

''தந்தை பெரியார், பிறக்கும்போது, வெறும் இராமசாமியாகத்தான் பிறந்தார்; இறக்கும் போதோ தந்தை பெரியாராக இறந்தார்.''

டாக்டர் நாவலர் அவர்கள் பேசுகையில் மழை தூறியது; அப்போது அவர்கள் ''செயற்கரியவற்றைச் செய்த தந்தை பெரியாரின் விழாவினை நாமும் மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறோம்; நாம் குற்றாலத்திற்குப் போகாமல் குற்றாலமே இங்கு வந்தது போல, மழையும் மகிழ்கிறது'' என்றார்.

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் மோசஸ், திரு கே.எஸ். அப்துல் வகாப் எம்.எல்.சி., திருவாரூர் திரு கே. தங்கராசு ஆகியோர் பெரியாரின் சிறப்புகளையும் அவர்தமிழினத்திற்கு ஆற்றியுள்ள அரும்பணிகளையும் பாராட்டினார்கள்.

பிறகு நல்ல மழைக்கிடையே மாண்புமிகு முதல்வர் விழா சொற்பொழிவைத் தொடங்கினார்கள். மழை 'சோ'வென்று கொட்டத் தொடங்கியது. எனினும் அறிஞர் அண்ணா விளையாட்டரங்கில் நிரம்பி வழிந்த மக்கள் கூட்டம் ஒரு சிறிதும் கலையவில்லை.

மக்கள் தாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிகளையே தலைக்குமேல் தூக்கிக் குடைபோலப் பிடித்துக் கொண்டும், துணிகளைத் தலையில் போட்டுக் கொண்டும் ஆடாமல் அசையாமல் நின்ற காட்சி காண்போரை மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது.

முதல்வர் சுமார் இரண்டு மணி நேரம் உணர்ச்சிக்க உரையாற்றினார்கள். அவர் குறிப்பிட்டதாவது:

''தாழ்த்தப் பட்டவர்களும் உயர்வு பெறவேண்டும் என்பதே நமது குறிக்கோள்: பெரியாரின் குறிக்கோளும் அதுதான்: பெரியார் சுட்டிக் காட்டிய சமூக அநீதிகளை அகற்ற நாங்கள் பாடுபட்டு வருகிறோம்.

''பெரியாருடைய சக்தியின் பல்லாயிரக் கணக்காண துளிகளில் நானும் ஒருவன்.

நாங்கள் ஐயாவின் கொள்கைகளை அண்ணாவின் வழியில் நிறைவேற்றுவதில்தான் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதில் தான் தொடர்ந்து நம்பிக்கை வைத்து வருகிறோம். பிற்பட்ட மக்களுக்கு - அதிலும் கிராமங்களில் வாழ்கிற ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு அரசின் சலுகைகள் எட்ட வேண்டும்; ஏழையென்பதால் அவர்கள் வாய்ப்பை இழந்துவிடக் கூடாது- ஏழை எளிய மக்களும் படித்துப் பட்டம் பெறவேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கம்.

''உயர்வு தாழ்வு என்பது கூடாது என்று ஐயா சொன்னார். அந்த வகையில் பல சீரிய திட்டங்களைச் சென்னையில் வருகிற செப்டம்பர் மாதத்தில் நடைபெற இருக்கிற பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் அரசு அறிவிக்கும்!''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. துரை சுந்தரேசன் அவர்கள் நன்றி கூறினார். பிற்பகல் நிகழ்ச்சி, திரு சி.எஸ்.பாண்டியன் குழுவினரின் 'பெரியாரும் கலைவாணரும்' என்னும் கலைநிகழ்ச்சியோடு தொடங்கி, திரு கே.பி. ராஜ்மோகன் குழுவினரின் 'பெரியார் ஒரு சகாப்தம்' என்னும் நாடகத்தோடு விழா நிறைவுற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு:

**சாமி பழனியப்பன்.**



# விருதுநகரில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

''**த**ந்தை பெரியாருக்குக் கொள்கை வழி விருதாகக் கொடுக்கப்பட்ட நகர்'' என்னும் சிறப்புப் பெற்ற விருதுநகரில், தமிழ்நாடு அரசின் சார்பில், (க்ஷத்திரிய) பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், 8.7.79ல் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் திரு நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் தொடங்கியது.

பாராளுமன்ற உறுப்பினர் திரு பொ. அன்பழகன், விருதுநகரில் இந்த விழா கொண்டாடப்படுவதற்குரிய சிறப்புகளை விளக்கி அனைவரையும் வரவேற்றார்.

விழாவைத் தொடங்கி வைத்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:



''தமிழக அரசு,ஒரு மாவட்டத்திற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் வைத்ததற்காக நாம் இந்த அரசைப் பாராட்டுகிறோம்; நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

'இராமநாதபுரம் மாவட்டத்தில், பெரியார் நினைவாக ஒரு கிராமத்தை உருவாக்கவேண்டும்; அதற்குப் பழைய கிராமங்கள் எதுவும் சரிவரவில்லை என்றால், 300 குடும்பங்கள் உள்ள ஒரு புதிய கிராமத்தை உருவாக்க வேண்டும். அதை, தந்தை பெரியார் நினைவுக் கிராமமாக அறிவிக்க வேண்டும். பெரியாரின் கொள்கைகள் கோட்பாடுகள் அங்கு பரவிக் கால்கொள்ளுமாறு செய்ய வேண்டும்.''

திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தமது தொடக்க உரையில் குறிப்பிட்டதாவது:

''பெரியாரின் நினைவைப் போற்றும் வகையில் பெரியார் நூற்றாண்டு விழாவை மாதந்தோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாடி வரும் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்- முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

''பெரியாரின் கொள்கைகள், தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மக்களைச் சிந்திக்கச் செய்தன. அவர்கள் மேம்பாட்டுக்குப் பெருந்துணை புரிந்தன.''

தொடர்ந்து 'பெரியாரும் தன்மான உணர்வும் என்ற தலைப்பில் திருக்குறளார் வீ.முனுசாமியும், 'பெரியாரும் புரட்சிச் சிந்தனைகளும்' என்ற தலைப்பில் டாக்டர் தமிழண்ணலும் 'பெரியாரும் கலையுலகப் புரட்சியும்' என்னும் தலைப்பில் நடிகமணி டி.வி. நாராயணசாமியும், 'பெரியாரும் போராட்டங்களும்' என்ற தலைப்பில் திரு வி.ஏ. பழனியும், 'பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும்' என்ற தலைப்பில் திரு கடம்பூர் இரா.சனார்த்தனமும், பெரியாரும் சாதி ஒழிப்பும்' என்ற தலைப்பில் திரு பழனி அரங்கசாமியும், 'பெரியாரும் சமூகச் சீர்திருத்தமும்' என்ற தலைப்பில் திருமதி விசயாமுத்து வண்ணனும்னும், 'பெரியாரும் தீண்டாமை ஒழிப்பும்' என்ற தலைப்பில் திரு செங்கோட்டை சனார்த்தனமும் தத்தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

சட்டமன்ற உறுப்பினர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் நன்றிகூற, முற்பகல் நிகழ்ச்சி முற்றுப்பெற்றது.

**அணிவகுப்பு - ஊர்வலம்**

விழாவையொட்டி நகரெங்கும் வண்ணத் தோரணங்களும், வரவேற்பு வளைவுகளும், அலங்காரப் பந்தல்களும் அணி செய்தன. மாலை 5 மணி அளவில் விருதுநகர் சுப்பையா (நாடார்) அரசு உயர்நிலைப் பள்ளியிலிருந்து மாபெரும் அணிவகுப்பு ஊர்வலம் நடைபெற்றது.

தெருக்கள், கடைவீதிகள் எங்கும் பெரியாரின் பொன்மொழிகள் எழுதி வைக்கப்பட்டிருந்தன.

ஊர்வலம், நகரின் முக்கியத் தெருக்கள் வழியாக, ஆண்கள் (க்ஷத்திரிய) மேல்நிலைப் பள்ளித் திடலை வந்தடைந்தது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா.காளிமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில், ''தந்தை பெரியார் தமிழினத்தின் தனிப் பெருந் தலைவர்; அவர் தமிழினத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமே வாழ்நாளெல்லாம் பாடுபட்டார். அவருடைய நூற்றாண்டு விழாவைத்தான் ஒராண்டு முழுவதும், $4\frac{1}{2}$ கோடி மக்களின் சார்பில் தமிழக அரசு கொண்டாடுகிறது'' என்றார்.

டாக்டர் நாவலர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்:

''தந்தை பெரியாரின் சீரிய கருத்துக்களுக்குக் கைகொடுக்க முன்வந்த நகரங்களில் மிக முக்கியமான நகர் விருதுநகர்.

''சாக்ரடீஸ் ஏதன்ஸ் நகரத்தின் வீதிகளிலும், மண்டபங்களிலும் மட்டுமே தன் கருத்துக்களைப் பரப்பி வந்தார்; கார்ல் மார்க்ஸ் லண்டனில் இருந்துதான் 'மூலதனம்' என்னும் நூலை எழுதினார். ரசல் தன் கருத்துக்களை லண்டனில்தான் வழங்கினார். இவர்களெல்லாம் தாம் இருந்த இடத்திலேயே இருந்து தம் கருத்துக்களைப் பரப்பி வந்தனர். ஆனால், தந்தை பெரியார் மட்டும், தமிழகத்தின் நகரங்களில் மட்டுமல்ல - மூலை முடுக்கிலுள்ள பட்டிதொட்டிகள் எங்கும் சென்று தன் கருத்துக்களை பரப்பினார், யாருக்கும் தோன்றாத கருத்துக்களை எடுத்துச் சொன்னார். வாழ்நாள் முழுதும் தன் கருத்துக்களை எவருக்கும் அஞ்சாமல்- தெளிவாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறினார்.''

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி சோமசுந்தரம் அவர்கள் தம் சிறப்புரையில் குறிப்பிட்டார்:

''திராவிடச் சமுதாயம் முன்னேற தந்தை பெரியார் எந்தெந்தக் கருத்துக்களைச் சிந்தித்தார்களோ, சொன்னார்களோ, அந்தக் கருத்துக்களை

யெல்லாம் மற்றவர்கள் புரட்சிக் கருத்துக்கள் - பகுத்தறிவுக் கருத்துக்கள் என்று பாராட்டினார்கள்.

''பெரியார் கொள்கைகளைப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நடைமுறைப் படுத்திவருகிறது. பெரியார் இன்று இருந்திருந்தால், புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் இந்த ஆட்சியை-இந்த அரசை நிச்சயம் ஆதரிப்பார் என்பது உறுதி''.

திருவாரூர் திரு. கே. தங்கராசு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''புரட்சித் தலைவரின் இந்த அரசு, தந்தை பெரியாரின் எந்தெந்தக் கொள்கைகளுக்குச் செயல்வடிவு - சட்டவடிவு தர முடியுமோ அந்தந்தக் கொள்கைகளுக்குச் செயல் வடிவும் சட்ட வடிவும் தந்து கொண்டிருக்கிறது.

''கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் தரப்படும் என்று முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அறிவித்தாரே, இது சாதனையா இல்லையா?''

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''பெரியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதன் மூலம் இந்த அரசு நல்லபணியை-நல்ல முறையில் செய்கிறது.

''பெரியார் ஒரு நல்ல சிந்தனையாளர். மக்களுக்குச் சிந்திக்கக் கற்றுக் கொடுத்தவர்; மக்களைச் சிந்திக்க வைத்தவர்; சிந்தனையைத் தூண்டி வளர்த்தவர். பெரியார் தோன்றியிராவிட்டால், தமிழகத்தில்-தமிழ் மக்களிடத்தில் இவ்வளவு சிந்தனையுணர்வு ஏற்பட்டிருக்காது.

''நபிகள் நாயகமும் பெரியாரும் தாம், தம் வாழ்நாளிலேயே வெற்றிகண்டு பெருமைப்பட்டவர்கள்.

''பெரியார் பெயரால், தமிழகத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று தொடங்க வேண்டும்''.

விருதுநகர் திரு. உத்தண்டன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தந்தை பெரியாருக்கும்விருதுநகருக்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு. அவரது கொள்கைகளுக்கு நல்லாதரவு தந்தது விருதுநகர்.''

மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் திரு பெ.சவுந்தரபாண்டியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''உலகில், பெரும்பாலும் நாட்டைத் திருத்த வந்த அத்தனை பேரும் வீட்டைத் துறந்தவர்கள். பெரியாரோ, நாட்டை திருத்து முன் வீட்டைத் திருத்த முன் வந்தவர்.''

சட்டமன்றத் துணைத் தலைவர் திரு எஸ்.திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டார்:

''தந்தை பெரியார் சுய சிந்தனையாளராக வாழ்ந்தார். இன்று அரசியலில்-பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் பெரியாரின் பண்புகளை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். அவரைப் போல, செயலிலும் சொல்லிலும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.''

மாண்புமிகு கிராம கைத்தொழில் அமைச்சர் திரு கா. இராசா முகமது அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சின்னஞ்சிறு வடிவத்தில் இங்கு கொடுக்கப்படும் பெரியாரின் சிலையை ஒரு சின்னஞ்சிறு உண்டியலாகச் செய்து கொடுத்தால், பெரியாரின் சிக்கனத்தையும் சேமிப்பையும் குழந்தைகளுக்கு உணர்த்தி அவர்களையும் சிக்கனமாகவும், சேமிக்கும் பழக்கத்துடனும் வாழச் செய்யலாம். பெரியாரின் சிக்கனத்திற்கும் சேமிப்பிற்கும் இது ஓர் எடுத்துக் காட்டாகவும் இருக்கும்.''

மாண்புமிகு சமுகநலத் துறை அமைச்சர் செல்வி பி.டி.சரஸ்வதி அவர்கள் பேசியதாவது:

''எதையும் சொல்வதோடு கடமை முடிந்துவிட்டது என்று கருதாமல், சொன்னதைச் செயல்படுத்திக் காட்டியவர் தந்தை பெரியார்.

''வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசுவாரே தவிர, வழவழ என்று பேசுவது அவருக்குப் பிடிக்காது.''

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ்.இராகவானந்தம் அவர்கள் பேசியதாவது:

''மனத்தில் பட்டதை ஒளிக்காமல்-மாற்றாமல் நேரடியாகச் சொன்னவர் தந்தை பெரியார். அவற்றைப் பக்குவமாகச்சொல்லி அவர் கொள்கைகளுக்கு ஆதரவு தேடி அவற்றைப் பரப்பியவர் அறிஞர் அண்ணா.''

வணக்கத்திற்குரிய மதுரை மேயர் அவர்கள் பேசியதாவது:

''தமிழகத்தைப் பொறுத்தவரை, பிற்பட்ட — தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்ந்திருக்கிறார்கள் என்றால், அதற்குத் தந்தை பெரியாரின் 60 ஆண்டுக் காலப் பெரு முயற்சிதான் காரணம்.''

தந்தை பெரியாரின் கொள்கைகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதற்கு அறிகுறியாக விழாப் பந்தலிலேயே விதவைத் திருமணங்களும், கலப்புத் திருமணங்களுமாக 10 ஜோடிகளுக்கு நடத்தி வைக்கப்பட்டன. முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள், அவர்களுக்கு மங்கல நாண்களை எடுத்துக் கொடுத்துத் திருமணங்களை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார்.

பின்னர் முதல்வர் அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

''மாற்றுக் கருத்துக்களையுடையோரும் நமது கருத்துக்களை ஏற்கும் வகையில் நமது கருத்துகளைச் சொல்லவேண்டும் என்பதை அமரர் அறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

''இந்தியாவின் மற்ற பகுதிகளும் தமிழகத்தைப் பின்பற்றும் வகையில் சில ஆண்டுகளில் தமிழகம் சிறந்த இடத்தைப் பெறும். அதற்கான அறிவு, ஆற்றல், பண்பு முதலியன தமிழக மக்களுக்கு உண்டு.

''சமுதாயத்தில் எதிர்நீச்சல் போட்டே பழக்கப்பட்டவர் ஐயா அவர்கள். எல்லாராலும் அப்படிச் செய்ய முடியாது. ஐயா அவர்களைச் சிலர் சர்வாதிகாரி என்பார்கள்; ஐயா அவர்களிடம் ஜனநாயகப் பண்பு நிறைந்திருந்தது.

''ஒழுக்கம் கடவுளை விட முக்கியம் என்றார் ஐயா. அந்த ஒழுக்கத்தை - நன்னெறியை - ஐயா ஏற்ற குறள் நெறியைத் தழைக்கச் செய்வோம்.''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ்.சுப்பிரமணியம், அனைவருக்கும் நன்றி கூறினார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு எம். சுந்தரராசன் தலைமையில் திரு கே.பி. ராஜ்மோகன் குழுவினரின் 'பெரியார் ஒரு சகாப்தம்' என்னும் நாடகம் நடைபெற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
சாமி பழனியப்பன்





## காலத்தை வென்ற கவிதை

# ஆறு

கவிமணி
தேசிக விநாயகம் பிள்ளை

கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறி வந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்;
நேய முறப்புன் செய்க்காட்டினிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில்—குழாய்
நீராகவும் சென்று பாய்ந்துவந்தேன்.

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்;
தீக்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன்.

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமம்மா!

(பாரி நிலையம் வெளியிட்டுள்ள 'மலரும் மாலையும்'
என்னும் நூலிலிருந்து)

சில கவிவாணர்களின் கவிதைகள் காலத்தையும் வென்று—நிலைத்து நிற்கும் பேராற்றல் பெற்றுத் திகழ்கின்றன. அத்தகைய கவிதைகளை இதழ் தோறும் வெளிட்டு நினைவஞ்சலி செய்யத் 'தமிழரசு' முனைந்துள்ளது. அந்தப் பணியின் தொடக்கமாக 'கவிமணி' யின் கவிதையை இங்கே வெளியிடுகிறோம்.



# ஒரு நாள் கழிந்தது!

புதுமைப்பித்தன்

"கமலம்! அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா! வெற்றிலைச் செல்லம் எங்கே? வச்சது வச்ச இடத்தில் இருந்தால்தானே!'' என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜால வித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாததால், அது நடுமத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால், முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்க வேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு, விடுதலைபெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல் இருக்க ஒரு துண்டையோ, அல்லது மனைவியின் புடவையையோ, அல்லது குழந்தையின் பாவாடையையோ எதையாவது எடுத்து மேலே விரிக்கவேண்டும்.

முருகதாசரைப் பொறுத்தவரை - அது அவரது புனைபெயர்-அது இரண்டு பேர்செய்ய வேண்டிய காரியம்.

மறுபடியும், ''கமலா!'' என்று கூப்பிட்டார்.

சமையல்+உக்ராண + ஸ்நான அறை, மூன்று நான்கு கட்டுகள் தாண்டி, துண்டாக, அலாதியாக இருப்பதால், இவருடைய பாய் விரிப்புக் கஷ்டங்கள் அந்த அம்மையாருக்கு எட்டவில்லை.

சென்னையில் 'ஒட்டுக் குடித்தனம்' என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன், குடியிருக்க வருகிறவர்கள் எல்லோரும் 'திருக்கழுக்குன்றத்துக் கழுகு' என்று நினைத்துக் கொள்ளுவானோ என்னமோ!

## சாகாவரம் பெற்ற கதைகள்

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தமிழ் இலக்கிய உலகிலே தோன்றிய மறுமலர்ச்சியில், சிறுகதைகளுக்குச் சிறப்பான இடம் உண்டு. அன்றும் இன்றும் என்றும் நின்று நிலைத்து நிற்கக்கூடிய—உலகத்துச் சிறந்த சிறு கதைகள் வரிசையிலே இடம் பெற முழுத் தகுதி படைத்த அமரத்துவம் வாய்ந்த அற்புதமான சிறுகதைகள் பல, தமிழிலே இந்தக் கால கட்டத்திலே உருவாயின. அப்படிப்பட்ட சிறந்த கதைகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, தொடர்ந்து 'தமிழரசு' இதழில் வெளியிட முடிவு செய்துள்ளோம்.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு இன்றைய புகழ்பெற்ற எழுத்தாளர் பலருக்கு முன்னோடியாகவே திகழும் அமரர் புதுமைப்பித்தனின் சிறந்த சிறுகதை ஒன்றுடன் இத் தொடரினைத் தொடங்குகிறோம்:





'குடித்தனக்காரர் குடியிருக்க இரண்டு ரூம் காலி' என்று வெளியில் போட்டிருந்த போர்டை நம்பித்தான் முருகதாசர் வீடு-வேட்டையின்போது அங்கே நுழைந்தார்.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன் பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப்புறம், எங்கோ பல கட்டுகள் தாண்டி மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையராவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலுபேர் வந்தால் பேச -இவை எல்லாவற்றிற்கும் பொது இடம். முதலில் முருகதாசர் பொருளாதாரச் சலுகையை உத்தேசித்தே அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால் தமக்கும் தம் சகதர்மிணிக்கும் இப்படி நிரந்தரமான 'பிளவு' இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை; மேலும் அவர், யோசிக்கக்கூடியவரும் அல்லர்.

பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு, அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார்.

இடைவழியில், குழாயடியில் உள்ள வழுக்குப் பிரதேசம், அடுத்த பகுதிக்காரர், விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வேயை' எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகைமயம். ''கமலம்!'' என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக்கொண்டு, உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத் திரைக்கு அப்பாலிருந்து, ''வீடோ லட்சணமோ! விறகைத்தான் பாத்துப் பாத்து வாங்கிக் கொண்டு வந்தியளே! உங்களுக்கின்னு தண்ணீலே முக்கிக் குடுத்தானா? எரியவே மாட்டுதில்லை! இங்கே என்ன இப்பொ? விறகு வாங்கின சிரைப் பார்த்து மகிழ வந்திட்டியளாக்கும்!'' என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

''தீப்பெட்டியை இப்படி எடு! அதுக்காகத்தான் வந்தேன்!'' என்று நடைப்பக்கமாகப் பின் நோக்கி நடந்தார்.

''இங்கே குச்சியுமில்லே, கிச்சியுமிலலே! அலமுவெத் தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன். மண்ணெண்ணெய் விளக்கெ நீங்கதான் துடைச்சுக் கொள்ளணும்!'' என்றாள் கமலம்.

''குழந்தையை அந்தியிலே வெளியிலே அனுப்பிச்சையே. நான் வந்தபிறகு வாங்கிக்கொள்ளப்படாதா?'' என்று அதட்டினார் முருகதாசர்.

''ஆமாம், சொல்ல மறந்தே போயிட்டுதே. செட்டியார் வந்துவிட்டுப் போனார்; நாளை விடியன்னை வருவாராம் என்றாள் கமலா.

முருகதாசர் இந்தப் பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்கவில்லை.

''வந்தா வெறுங் கையை வீசிக்கிட்டுப் போகவேண்டியதுதான்! வர்ரதுக்கு நேரம் காலம் இல்லை?'' என்று முணுமுணுத்துக் கொண்டே வெளியேற முயற்சித்தார்.

''அங்கே எங்கே போயிட்டிஹ? ஒங்களைத்தானே! கொஞ்சம் நல்லெண்ணெய் வாங்கிக்கிட்டு வாருங்களேன்!''

''எங்கிட்ட இப்போ துட்டுமில்லே, காசுமில்லை!'' என்று திரும்பி நின்று பதிலளித்தார் முருகதாசர்.

''அதுவும் அப்படியா! இன்னா இந்த* மிளவொட்டியிலே மூணு துட்டு இருக்கு; அதெ எடுத்துக் கிட்டுப் போங்க.



புதுமைப்பித்தன்

''வந்ததுக்கு ஒரு வேலையா? அங்கே ஒரு பாடு எழுதித் தொலைக்கணும். இங்கே உனக்கு இப்பத்தான் என்னெ—புண்ணாக்கு- பகலெல்லாம் என்ன செய்துக்கிட்டு இருந்தே! இருட்னம் பொறவா எண்ணை வாங்கறது! எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கலாம்!''

''சோம்பல் வந்தா சாத்திரமும் வரும், எல்லாம் வரும். ஏன், அண்ணைக்குப்போய் வாங்கிட்டு வரலியா - எல்லாம் ஒங்களுக்குத்தான். இப்பத்தான் அப்பளக்காரன் வந்து கொடுத்துட்டுப் போனான்; பிரியமா சாப்பிடுவேளென்னு சொன்னேன். பின்னே அந்த சின்னக்கொரங்கே என்ன இன்னும் காணலே! போனாப் போனதுதான்; நீங்கதான் சித்த பாருங்களேன்!''

இவ்வளவிற்கும் அவர் இருந்தால்தானே! விறகுப் பிரதேசத்தைத் தாண்டி வழுக்குப் பிரதேசத்தை எட்டிவிட்டார். புகையையும் பேச்சையும் தப்பி வந்தால் போதும் என்றாகி விட்டது. முருகதாசரின் ஆஸ்தான அறையின் ஒரு விசித்திரம் என்னவென்றால், சென்னையில் ''லைட்டிங் டைம்'' அட்டவணையைக் கூட மதிக்காமல், அது இருண்டுவிடும்.

இம்மாதிரி மண்ணெண்ணெய் நெருக்கடி ஏற்படாத காலங்களில், அந்த அறைக்குத்தான்

* மிளகுப்பெட்டி-ஐந்தறைப் பெட்டி என்பது சகஜமான பெயர்.

முதலில் இராத்திரி. ஆனால் எண்ணெய் நெருக்கடிக் காலங்களில் சிவபிரானின் ஒற்றைக்கண் போன்ற அந்த அறையின் சன்னல் எதிர்ப்பக்கம் நிற்கும் மின்சார விளக்குக் கம்பத்திலிருந்து கொஞ்சம் வெளிச்சத்தைப் பிச்சை வாங்கும், கார்ப்பொரேஷன் தயவு வரும்வரை. ஸ்ரீ முருகதாசர், வேறு வழியில்லாமல், தெருநடையில் நின்று அலமுவின் வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டியதாயிற்று.

முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமத்தர்; 'சாகா வரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு வானத்தையளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகை எடுத்துக் கொண்டது. அதனால் அவர், வீர புருஷர்களையும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டு விட்டு சோயாபீன்ஸ் முதல், மெழுகுவர்த்தி வரையிலும், வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக் கொண்டிருக்கிறார். 'டபாஸா' வீரிய மாத்திரையின் மீது பாடிய பரணியும், தேயிலைப் பானத்தின் சுயசரிதையும், அந்தத் தமிழ் தெரியாத வெள்ளைக்காரனையும் இவர்மீது அனுதாபம் காட்டும்படி செய்துவிட்டன. அதற்காகத்தான் அந்த முப்பது ரூபாய்!

வீட்டு எதிரில் நிற்கும் மின்சார விளக்கின் உதவியைக் கொண்டும் பிள்ளையவர்களால் அலமுவைக் கண்டுபிடிக்க இயலவில்லை. வெற்றிலை, வேலை, குழந்தை வராத காரணம்-எல்லாம் அவரது மனத்தில் கவலையைக் கொண்டு கொட்டின. நடையிலிருந்து கீழே இறங்கிச் சந்தின் மூலைவரை சென்று, பார்த்து வரலாமா என்று புறப்பட்டார்.

பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிறார்கள். மனம் ஒரே விஷயத்தில் லயித்துவிட்டால் போதுமாம். பிள்ளையவர்களைப் பொறுத்தவரை, அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர சிந்தை செலுத்துபவர். பணத்தை வாரிச் சேர்த்துக் குபேரனாகிவிடவேண்டும் என்ற எண்ணம் ஒன்று[illegible]லை. கவலையில்லாமல் [illegible]தா சாப்பிட்டோம், வேலை [illegible]ார்த்தோம், வந்தோம் என்று இருக்க வேண்டும் என்பதற்காக, எத்தனையோ வித்தைகளையெல்லாம் செய்துவிட்டார். அவருடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தை மட்டிலும், அவரால் எப்பொழுதும் சமன் செய்ய முடியவில்லை. நிதிமந்திரியாக இருந்தால், பட்ஜெட்டில் துண்டு விழுவதற்குப் பொருளாதாரக் காரணங்கள் காட்டிவிட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக் கேட்கலாம். கவலையில்லாமல், கொஞ்சமும் உடம்பில் பிடிக்காமல், கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா? குடும்பச் செலவு என்றால், சர்க்கார் செலவாகுமா!



கவலை இருக்கப்படாது என்ற உறுதியின் பேரில்தான் நம்பிக்கை என்ற இலட்சியத்தை மட்டும் திருப்தி செய்விக்க, 'சாகா வரம் பெற்ற' கதைகளை எழுதுவதைக் கொஞ்சம் கட்டிவைத்து விட்டு, இந்த 'லிப்டன் தேயிலை', காப்பி, கொக்கோ ஆகியவற்றின் மான்மியங்களை அவர் எழுத ஆரம்பித்தார். ஒரு பெரிய நாவல் மட்டிலும் எழுதிவிட்டால், அது ஒரு பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர இலட்சியமாகவே மாறிவிட்டது.

முன்பாவது, அதாவது நம்பிக்கைக் காலத்தில், ஏதோ நினைத்ததைக் கிறுக்கி வைக்கக் காகிதப் பஞ்சமாவது இல்லாமல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை ஆபிசில் வேலை. ஆனால், இப்பொழுது காசு கொடுத்து வாங்காவிட்டால் முதுகில்தான் எழுதிக் கொள்ளவேண்டும். முருகதாசர் நல்ல புத்திசாலி; அதனால்தான் முதுகில் எழுதிக் கொள்ளவில்லை. யாராவது ஒரு நண்பரைக் கண்டுவிட்டால் போதும்; தமது தூர இலட்சியத்தைப்பற்றி அவரிடம் ஐந்து நிமிஷமாவது பேசாமல் அவரை விட மாட்டார். நண்பர்கள் எஸ்.பி.ஸி.ஏ. (ஜீவஹிம்சை நிவாரணச் சங்கம்) யின் அங்கத்தினர்களோ என்னவோ, அத்தனையையும் சகித்துக் கொண்டிருப்பார்கள்...

சந்தில் திரும்பிப் பார்த்தால் அலமுவின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது. ''ஏட்டி, என்ன நீயோ உன் லட்சணமோ!'' என்று ஆரம்பித்தார் முருகதாசர்.

ஒரு ரிக்ஷா வண்டி. ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அலமு, ஒரு சுண்டெலி மாதிரி, ஜம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷாக்காரனுடன் ஏதோ நீண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது போலும்!

''ஏட்டி!'' என்றார் முருகதாசர் மறுபடியும்.

''இல்லையப்பா' நீ இனிமெ என்னை அலமுன்னு கூப்பிடுவேன்னியே!'' என்று சொல்லிக் கொண்டே, வண்டியிலிருந்து இறங்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

''தீப்பெட்டி எங்கடீ!?'' என்றார் முருகதாசர்.

''கடைக்காரன் குடுக்கமாட்டங்கரான், அப்பா!''

''குடுக்காதெ போனா நேர வீட்டுக்கு வாரது! இங்கெ என்ன இருப்பு?''



''அப்படிக் கேளுங்க சாமி! நம்ம கொளந்தென்னு மெரட்டாமெ சொல்லிப் பார்த்தேனுங்க. வீட்டுக்கு வண்டியிலே கொண்டாந்து வுடணுமுன்னு மொண்டி பண்ணுதுங்க. எனக்குக் காலுலே சுளுக்கு. அந்தச் சின்னாம்பயலே காணும்......'' என்று நீட்டிக் கொண்டே போனான் ரிக்ஷாக் காரன்.

''அப்பா! அவன் பங்கஜத்தை மாத்திரம் கூட்டிக்கிட்டே போறானே!'' என்றாள் அலமு. பங்கஜம் எதிர் வீட்டு சப்ரிஜிஸ்திரார் குழந்தை, அது ரிக்ஷாவிலும் போகும், மோட்டாரிலும் போகும். அந்த விஷயம் ரிக்ஷாவுக்குத் தான் புரியுமா குழந்தைக்குத்தான் புரியுமா?''

''அலமு! ராத்திரிலெ கொழந்தைகள் ரிக்ஷாவிலே போகப்படாதுடீ! எறங்கி வா!'' என்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு வாடிக்கைக் கடைக்காரனிடம் சென்றார் முருகதாசர்.

பிள்ளையவர்கள் கடையை எட்டு முன்பே, கடைக்காரன் ''சாமி! இந்த மாதிரி யிருந்தாக கட்டுமா? போன மாசத்திலே தீர்க்கலியே! நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்கெத் தீர்த்துடுங்க! எனக்குக் குடுத்துக்கட்டாது. நான் பொளைக்க வந்தவன்!'' என்றான்.

''நானும் பிழைக்க வந்தவன் தான்! எல்லாரும் சாகவா வருகிறார்கள்! மின்னெ பின்னே தான் இருக்கும். நான் என்ன கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறேனா?''

''போங்க சாமி! அது ஒண்ணு தான் பாக்கி! ரூ. 2-5-4 ஆச்சு; எப்ப வரும்?''

''தீப்பெட்டியெக் குடு சொல்றேன்!''

''பெட்டிக்கென்ன பிரமாதம்! இந்தாருங்க. எப்ப வரும்?''

''எப்பவா! சம்பளம் நாளைக்குப் போட்ருவாங்கன்னு நினைக்கிறேன்; நாளை இல்லாவிட்டால் திங்கக்கிழமை.''

'' திங்கக்கிழமே நிச்சயந் தானே! நான் சீட்டுக் கட்டணும்!'' என்றான்.

''சரி, பார்க்கிறேன்!'' என்று திரும்பினார் தாசர்.

''பார்க்கிறேன்னு சொல்ல வேண்டாம், நிச்சயமாக வேண்டும்!''

ஒரு கவலை தீர்ந்தது...அதாவது திங்கட்கிழமைவரை.

பாதி வழியில் போகையில், ''அப்பா!'' என்றது குழந்தை.

அவர் எதையோ நினைத்துக் கொண்டிருந்ததால், தன்னையறியாமல் கொஞ்சம் கடினமாக ''என்னடி!'' என்றார்.

நீதான் கோவிச்சுக்கிறியே, அப்பா! நான் சொல்லமாட்டேன் போ!''

''கோவம் என்னடி, கோவம்! சும்மா சொல்லு!''

''அதோ பார், பல்லு மாமா!''

முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள். அவை வெளியே நீண்டுகொண்டு, தமது இருப்பை அனாவசியமாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தன. அதனால் அலமு அவருக்கு இட்ட காரண இடுகுறிப் பெயர் அது.

''எங்கடி!''

''அதோ பார், வீட்டு நடேலே! என்னை எறக்கிவிடப்பா! என்று அவரது கையிலிருந்து வழுகி, விடுவித்துக் கொண்டு, வீட்டிற்கு ஓட ஆரம்பித்தது.

''மெதுவா! மெதுவா!'' என்றார் பிள்ளை; குழந்தையா கேட்கும்?

''மாட்டேன்!'' என்றது. அதற்கப்புறம் ஏக களேபரம். பாவாடை தடுக்கியதோ என்னமோ, அலமு வலுக்கட்டாயமாக அங்கப் பிரதக்ஷணம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளையவர்கள் ஓடிப்போய் குழந்தையை வாரி எடுத்தார். ஆனால் இவர் பதட்டத்திற்கு ஏற்ப, அங்கு குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

''தோளுக்கு மேலே தொண்ணூறு. தொடச்சுப் பார்த்தா ஒண்ணுமில்லே!'' என்று பாடிக் கொண்டு குழந்தை எழுந்தது.

''என்ன சார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?'' என்று சொல்லிக் கொண்டே சுப்பிரமணியம் அவர்கள் பக்கம் வந்தார்.

''என்ன சார் செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப்போயிருக்கு. வெளியிலே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக் கொண்டு பின்னோட பத்துப் பேர். இவளைக் கடைக்கனுப்பிச்சுட்டா தாயார்; இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோட தர்க்கம்-என்ன செய்கிறது! வாருங்கள் சார் உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்''



குழநதை அலமு அதறகுள வீட்டிற்குள், ''பல்லு மாமா வந்து விட்டார்'' என்று பொதுவாக உச்ச ஸ்தாயியில் விளம்பரம் செய்து கொண்டு ஓடிவிட்டாள்.

'குழந்தை துருதுருவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக் கூடாதா'' என்றார் நண்பர்.

ஆமாம் சார், தொந்தரவு சகிக்கலே. அங்கேதான் கொண்டு தள்ளணும். வயசு கொஞ்சம் ஆகட்டுமே என்று பார்க்கிறேன்'' என்றார் முருகதாசர், விளக்குத் திரியை உயர்த்திக்கொண்டே.

''நேத்து பீச்சுக்குப் போயிருந்தேன்! சுந்தரத்தைப் பார்த்தேன் ....'' என்று ஆரம்பித்தார் சுப்பிரமணியபிள்ளை.

''அந்த ராஸ்கல் வந்துட்டானா! என்றைக்கும் அவன் தொல்லைதான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே வந்தான்னா ஆபீசுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப் போயிடரது.... மின்னே வந்தப் போ, என்னஎழவு சொன்னானோ, அந்த ஆர்ட்டிஸ்ட் 'பதி' இருந்தானே, அவனுக்குச் சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்'' என்று படபடவென்று பேசிக் கொண்டேபோனார் முருகதாசர்.

''அப்படிப் பார்த்தா உலகத்திலேயே யார்தான் சார் நல்லவன்! அவன் உங்களைப் பத்தி ரொம்பப் பிரமாதமாக அல்லவா கண்ட இடத்திலெல்லாம் புகழ்ந்து கொண்டிருக்கிறான்?''

''சவத்தெத் தள்ளுங்க, சார்! பேன் பார்த்தாலும் பார்க்கும், காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம். நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள்?''

''அதுதான். உங்களெப் பத்தித் தான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

''இவ்வளவுதானா! கதையை எழுதரேன், அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன் இவனுக்கென்ன......?''

அதே சமயத்தில் வெளியிலிருந்து, ''முருகதாஸ்! முருகதாஸ்!'' என்று யாரோ கூப்பிட்டார்கள்.

''அதுதான்! அவன்தான் வந்திருக்கிறான் போலிருக்கிறது! பயலுக்கு நூறு வயசு...''

''சைத்தான் நினைக்குமுன்னால் வந்து நிற்பான் என்பது தான்! என்று முணு முணுத்தார் முருகதாசர்.

பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி ''யாரது?'' என்றார்.

''என்ன! நான்தான் சுந்தரம், இன்னும் என் குரல் தெரியவில்லையா'' என்று உரத்த குரலில் கடகடவென்று சிரித்துக்கொண்டு உள்ளே நுழைந்தார் வந்தவர். அவருடைய சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

''என்ன சுந்தரமா? வா! வா! இப்பத்தான் உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நீயும் வந்தாய்! காப்பி போடச் சொல்லட்டுமா? அலமு ! அலமு!''என்று உரக்கக் கூறினார் முருகதாசர்.

எங்கிருந்தோ, ''என்னப்பா!'' என்று அலமுவின் குரல் வந்தது.

''அம்மாவை மூணு கப் காபி போடச் சொல்லு. சீக்கிரம் ஆகணும்!''

''நீ என்ன பத்திரிகையையே விட்டுவிட்டாயாமே! இப்பத்தான் கேள்விப்பட்டேன்.''

''வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன? சிலைப்பேன் குத்துகிறதும் ஒரு 'பிஸினஸ்' ஆக இருந்து, அதில் ஒரு 'சான்ஸ்' கிடைத்தால், அதையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டுவிட்டா, கதை எழுதாமல் இருந்துவிடுவேனா? ஒரு பெரிய நாவலுக்குப் 'பிளான்' போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் 'சென்ட்ரல் ஐடியா' என்ன தெரியுமா?''

''நீங்க நேற்றுப் பொருட்காட்சிக்குப் போனீர்களாமே?''என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால், முருகதாசர்,கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி, விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்.

''அப்பா! காப்பியாயிட்டது. நீ தான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும்.சுடுது!''என்று சொல்லிக்கொண்டு நிலைப்படி இரண்டு பக்கத்தையும் தொட்ட வண்ணமாய், ஒற்றைக் காலை ஆட்டிக் கொண்டு நின்றாள் அலமு.

''அம்மா எங்கே?

''அம்மா சாதத்தெ வடிச்சிக்கிட்டிருக்கா, அப்பா!''

''சரி! இதோ வாரேன்,போ!''

''வாயேன்!''

''வர்ரேன்னா,போடிஉள்ளே''

''காப்பி ஆறிப்போயிடும், அப்பா!''



''இதோ ஒரு நிமிஷம்'' என்று சொல்லிக் கொண்டு உள்ளே சென்றார்.

''மாமா! நீ என்ன கொண்டாந்தே?'' என்று கேட்டுக் கொண்டு, சுப்பிரமணியபிள்ளை மடியில் உட்கார்ந்து கழுத்திலிருக்கும் நெக் டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

''அதெப் பிடித்து இழுக்காதே, மாமாவுக்குக் கழுத்து வலிக்கும்!' என்றார் சுந்தரம் பிள்ளை.

''வலிக்காதே!'' என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

முருகதாசரும், மேல்துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம், உள்ளே நுழைந்தார்.

''என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?''

''உனக்கென்னடி இங்கே! அம்மா கூடப் போய்ச் சாப்பிடு!''

''மாட்டேன்'' என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக்கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார். சுந்தரம் வாங்கி மடக் மடக்கென்று மருந்து குடிப்பது போல் குடித்துவிட்டு, ''காப்பி வெகு ஜோர்!'' என்று சர்டிபிகேட் கொடுத்தான்.

மற்றொரு டம்ளர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. ''மாமா! எனக்கில்லையா'' என்று அவரிடம் சென்று ஒண்டினாள் அலமு.

''வாடி, நாம் ரெண்டு பேரும் சாப்பிடுவோம்''! என்றார் முருகதாசர்.

''மாமாகூடத்தான்!'' என்றது குழந்தை. சுப்பிரமணிய பிள்ளை கையிலிருந்த டம்ளரில் அலமுவைக் குடிக்கச் செய்தார்.

பாதியானதும், ''போதும்!'' என்றது குழந்தை.

''இந்தாருங்க சார்!'' என்று மற்ற டம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

''வேண்டாம், வேண்டாம்! இதுவே போதும்!'' என்றார் சுப்பிரமணிய பிள்ளை.

"நான்சென்ஸ்" என்று சொல்லிவிட்டுக் குழந்தை எச்சிற்படுத்தியதைத் தாம் வாங்கிக் கொண்டார் தாசர்.

''நேரமாகிறது, மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும்!'' என்று எழுந்தார் சுந்தரம்.

''அதற்குள்ளாகவா? வெற்றிலை போட்டுக்கொண்டு போகலாம்!'' என்றார் முருகதாசர்.

''கையில் எடுத்துக் கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்!'' என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன், தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக் கொண்டார் சுப்பிரமணியபிள்ளை.

தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு, ''சுப்பிரமண்யம், உங்களிடம் எதாவது சேஞ்ச் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்?'' என்றார் முருகதாசர்.

''ஏது அவசரம்?''

''சம்பளம் போடலே; இங்கு கொஞ்சம் அவசியமாக வேண்டியிருக்கிறது.. திங்கட்கிழமை கொடுத்து விடுகிறேன்!''

''அதற்கென்ன..பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு, ''இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!'' என்று ஓர் எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

''இது போதாதே!'' என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக்கொண்டார் முருகதாசர்.

''அப்போ....'' என்று மீண்டும் ஏதோ ஆரம்பித்தார்.

''பார்ப்போம்! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்று சுப்பிரமணியமும் விடை பெற்றுச் சென்றார்.

முருகதாசர், தமது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப் பாயில் உட்கார்ந்து கொண்டு, அந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

''அங்கு என்ன செய்யறீங்க?'' என்ற மனைவியின் குரல்!

''நீ தான் இங்கே வாயேன்!''

கமலம் உள்ளே வந்து, ''அப்பாடா!'' என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு, ' இதேது?' என்றாள்.

''சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!''

''உங்களுக்கும் .. வேலையில்லையா?'' என்று முகத்தைச் சிணுக்கினாள் கமலம். பிறகுதிடீரென்று எதையோ எண்ணிக் கொண்டு, ''ஆமாம். இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப் பொடியில்லை; அதே வச்சு வாங்கி வாருங்களேன்!'' என்றாள்.

''அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்து விட்டால்?''

''திங்கட்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!"

''அதற்கென்ன இப்பொழுது?'

''போய்ச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்!''

''திங்கட்கிழமைக்கு?''

''திங்கட்கிழமை பார்த்துக் கொள்ளுகிறது!''

(மீனாட்சி புத்தக நிலையத்தாரின் 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற நூலிலிருந்து)





# சுற்றுலா வளர்ச்சியில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருவதில் தென்மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. பயணிகளுக்கான தங்கும் வசதி, போக்குவரத்து வசதி ஆகியவைகளைச் செய்து கொடுப்பதிலும் விளம்பரங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதிலும் தொடர்ந்து சிறந்து பணியாற்றி வருகின்ற தமிழக அரசையே இந்தப்பெருமை சாரும். இவ்வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சீரிய பணி, சுற்றுலாப் பயணிகளாலேயே பாராட்டப்படுகிறது. மாமல்லபுரத்தையும், கன்னியாகுமரியையும் முதல்தரமான சர்வதேச சுற்றுலாக் கவர்ச்சியிடமாக மாற்ற மத்திய அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று, தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறது. இது பிற தென்மாநில அரசுகளும் இம்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ளத் தூண்டுதலாக அமையும்.

சுற்றுலா வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், கர்நாடகம் தமிழ்நாட்டின் அளவுக்கு முன்னேற வேண்டுமானால் கர்நாடக அரசு இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. தென்மாநிலங்களிலேயுள்ள முக்கிய சுற்றுலா இடங்களையும், புண்ணிய இடங்களையும் இணைத்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பயணங்களை (Package Tours) நடத்தி வருவது குறிப்பிடத்தக்க சிறந்த அம்சம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாகத்தின் கீழுள்ள தங்கும் விடுதிகள் (சாப்பாடு வசதிகளுடன் அல்லது இல்லாமல்) குறைந்த செலவில் கிடைக்கின்றன; சொகுசு வண்டிகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன; பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்கள் அன்புக்கும், திறமையான பணிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர். மொத்தத்தில் அவர்களிடம் சீரிய செயல்திறன் உள்ளது எனலாம்.

['டெக்கான் ஹெரால்டு'—26.7.79 தலையங்கம்]

# இளம் ஓவியன்!

''படங்கள் நிறைந்த புத்தகங்கள் என்றால் எனக்குக் கொள்ளை ஆசை!'' என்று தன் ஆர்வத்தை வெளியிடுகிறான் இளம் ஓவியன், க. பொன்னிவளவன்.

சென்னை, தியாகராயநகர் இராம கிருஷ்ணா மிஷன் மேல்நிலைப் பள்ளியில் (மெயின்) ஒன்பதாவது வகுப்பில் படிக்கும் இம்மாணவனுக்குப் பதின்மூன்று வயதாகிறது. சித்திரம் வரைவதில் சிறந்து விளங்குகிறான். இவனுடைய தந்தை திரு எம். கலியபெருமாள் அவர்கள், நந்தனம் கலைக் கல்லூரியில், அறிவியல் துறைத் துணைப் பேராசிரியராகப பணியாற்றுகிறார்.

'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்பதற்கிணங்க, மாணவன் பொன்னிவளவன் ஆறாம் வகுப்பு முதல் தொடர்ந்து சித்திரப் பாடத்தில், முதல் மதிப் பெண்கள் பெற்று வருகிறான

ஓவியம் வரைவதில் எப்படி ஆர்வம் வந்தது?

''நான், நிறைய படங்கள் நிறைந்த புத்தகங்களை, இதழ்களை விரும்பிப் படிப்பேன். அந்தப் புத்தகங்கள் எங்கு என் கண்ணில் பட்டாலும் அதை வாங்கிவிடுவேன். சித்திரப் புத்தகங்களைப் பார்த்துப் பார்த்து அதைப்போல் படம் வரைய வேண்டும் என்ற ஆவல் வந்தது'' என்று கூறும் பொன்னிவளவன், ஒரு படத்தைப் பார்த்ததும் அதை அப்படியே வரைந்து விடுகிறான்; கற்பனையாகவும் சித்திரம் தீட்டுவதில் திறம் பெற்று விளங்குகிறான்.

''நீ வருங்காலத்தில் ஒரு பெரிய ஓவியனாக வருவாய்!'' என்று ஆசிரியர்கள் இம்மாணவனை வெகுவாகப் பாராட்டுகிறார்களாம்.

பள்ளி விழாக்களின்போது, அலங்காரம் செய்ய, ஓவிய ஆசிரியர் இம்மாணவனை உதவிக்கு அழைத்துக் கொள்வாராம்.

இளம் ஓவியன் பொன்னிவளவனை, அனைத்துலகக் குழந்தைகள் ஆண்டில் 'வளர்க!' என வாழ்த்துகிறோம்.

—பேட்டி : பி. வி. கிரி








# கீர்த்தி மிகு நார்த்தா மலை

—க. இலக்குமி நாராயணன்
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
புதுக்கோட்டை.

புதுக்கோட்டை நகருக்கு வடமேற்கே சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில் திருச்சி செல்லும் பாதையில் ஒரு சிற்றூராக நார்த்தாமலை இருக்கிறது. இன்று சிற்றூராக இருக்கும் நார்த்தாமலை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பல்லவராட்சியும் சோழர் ஆட்சியும் தமிழகத்தைப் புகழ் உலகுக்குக் கொண்டு சென்ற நாட்களில், ஒரு சிறந்த அரசியல் முக்கியத்துவம் நிறைந்த பகுதியாய், கலாச்சார கேந்திரமாய் விளங்கியது. இந்த உண்மையை இங்குக் கிடைக்கும் கல்வெட்டுக்களும், வரலாற்றுச் சின்னங்களும் நமக்குக் கூறுகின்றன.

குன்றுகள் பல சூழ அமைந்திருக்கும் நார்த்தாமலை, 'நகரத்தார் மலை' என்பதின் திரிபாக இன்று இப்பெயரில் அழைக்கப்படுகிறது. பெருங்களூர் கோயில் தல புராணம், ''நாரதர் மலை' என்று நார்த்தாமலையை அழைக்கிறது.

இங்கு இருக்கும் கிராம மக்கள் நார்த்தாமலையைச் சூழ்ந்து இருக்கும் சிறு குன்றுகளை இமய மலையின் பகுதிகள் என்று கருதுகிறார்கள். அனுமன் சஞ்சீவி மலையை இலங்கைக்குக்கொண்டு செல்கையில் இங்கு சிந்திய மலைப் பிஞ்சுகளே, இன்று நார்த்தாமலைக் கிராமத்தைச் சுற்றிக் காணுகின்ற சிறு குன்றுகள் என்பது அவர்கள் நம்பிக்கை.

சோழ மண்டலத்தின் இரட்டைபாடி கொண்ட சோழவள நாட்டில் அண்ணல்வாயில் கூற்றத்தில் தெலுங்கு குல காலபுரம் என்ற பெயரில் சோழர் காலத்தில் ஒரு சிறந்த நகரமாக நார்த்தாமலை விளங்கி இருந்ததைக் கல்வெட்டுக்களின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில், குலோத்துங்க சோழ பட்டணமாக அது செழித்திருந்தது.

நார்த்தாமலை இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முத்தரையர்கள் என்னும் குறுநில மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. முத்தரையர்கள் சுயேச்சையாகவும், பாண்டிய, பல்லவ, சோழப் பேரரசுகளுக்கு உட்பட்டும் கால நிலைமைகளுக்கு ஏற்ப ஆட்சி செய்திருக்கின்றனர். புதுக்கோட்டைப் பகுதியில், நார்த்தாமலையோடு திருமெய்யம், மலையடிப்பட்டி, பூவாலைக்குடி ஆகிய இடங்களில் முத்தரையர்கள் எழுப்பித்திருக்கும் திருக்கோயில்கள் தமிழக கோயில் கலை வரலாற்றில் மிக உன்னதமான இடத்தை இவர்களுக்குப் பெற்றுத் தந்திருக்கின்றன.

மாலிக்காபூரின் தென்னகப் படையெடுப்பை அடுத்து, சிறிது காலம் மதுரை சுல்தான்கள் ஆட்சியில் இருந்த நார்த்தாமலை விசய நகர படையெடுப்பால் முகமதியர் ஆட்சியினின்று விடுபட்டது. கி.பி. 14-15ஆம் நூற்றாண்டுகளில் பல்லவராயர்கள் ஆட்சியில் இருந்த நார்த்தாமலை புதுக்கோட்டை தொண்டைமான் மரபு வலுப்பெற்றபோது, புதுக்கோட்டைத் தனியரசின் ஆட்சிக்கு உட்பட்டது.

புதுக்கோட்டையின் ஏழு பெரிய கோவில்களில் ஒன்றாக விளங்கும் மாரியம்மன் திருக்கோயிலினால் இன்று முக்கியத்துவம் பெற்று விளங்கும் நார்த்தாமலை, பண்டை நாளில், சமணம் சைவம் வைணவம் ஆகிய சமயத் தலைவர்களாலும், இந்நகரில் வாழ்ந்த வணிகப் பெருங்குடி மக்களாலும் சிறப்புற்று விளங்கியது.

''சிலையசெட்டி'' என்னும் வணிக வகுப்பினர் பண்டைக் காலத்தில் இங்கே வசித்தனர் என்பதைச் சில கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவர்கள், சோழர் அல்லது பாண்டிய மன்னர்களின் பெயர்களைத் தங்கள் பெயர்களாகக் கொண்டிருக்கின்றனர். இதன் அடிப்படையில் இவர்கள் வணிகத் தலைவர்களின் குடும்பத்தவராக இருக்கலாம் எனக் கருதலாம். தற்போது நார்த்தாமலை கிராமத்திலும் அதன் குன்றுகளிலும் பழங்கால வரலாற்றுச் சின்னங்களாகப் பல நல்ல கோவில்களும் குடவரைகளும் இருக்கின்றன. இங்குள்ளஒன்பதுசிறு குன்றுகளில் ஆளுருட்டி மலை, மேலமலை, கோட்டை மலை ஆகியவை குறிப்பிடத்தக்கன. மேலமலை சமணர் மலை என்றும் சிவன் மலை என்றும் பல பெயர்களில் அழைக்கப்பட்டது.

பல்லவனும், பாண்டியனும் முறையே நாவுக்கரசராலும், ஆளுடைப் பிள்ளையாலும் சைவர்களாக மாற்றப்பட்டதற்குப் பிறகு அந்நாடுகளிலிருந்து அமைதி தேடிப் பெயர்ந்த சமண முனிவர்கள் புதுகையில் உள்ள குன்றுப் பகுதிகளுக்குச் சென்று வசித்தனர். இதனால் புதுக்கோட்டையின் பல பகுதிகள் சிறந்த சமணப் பகுதிகளாக விளங்கின, அவ்வாறு சமணப் பகுதியாகத் திகழ்ந்த இடங்களில் நார்த்தாமலையும் ஒன்றாக விளங்குகிறது. இங்குள்ள



விஜயாலய சோழீச்சுவரம்
நார்த்தாமலை



மகளமாா

புதுக்கோட்டை அருங்காட்சிபகத்தில் உள்ள நார்த்தாமலை சிற்பம்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

குன்றுகளில் பல சமணக் குடவரைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது அம்மாசத்திரம் மலை என்று அழைக்கப்படும் மலை, புதுக்கோட்டை சமஸ்தான காலத்தில் ஆளுருட்டி மலை என்று அழைக்கப்பட்டது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்துக்கல்வெட்டு (பு.ச. க. 474) அதைத் திருமனை மலை என்றும் திருப்பள்ளி மலை என்றும் குறிப்பிட்டுள்ளது. மற்றும் ஒரு கல்வெட்டு (பு.ச.க. 658) இதனைத் திருப்பள்ளி மலை என்றும், பொம்மை மலையைத் தென் திருப்பள்ளி மலை என்றும் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டின் மூலம் பல சமண முனிவர்கள் இவ்விரு மலைகளிலும் வசித்து வந்ததை அறிகிறோம்.

**ஆளுருட்டி மலையும், சமணர்கள் குடவரையும் :**

ஆளுருட்டி மலையின் வடக்குறத்தில் உள்ள ஒரு குகையில் சந்தன்னவாசல் ஏழடிப் பட்டத்தில் இருப்பது போன்ற நான்கு படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு இரட்டைப் படுக்கைகளாகவும்இரண்டு ஒற்றைப் படுக்கைகளாகவும் அமைந்துள்ளன. சமண முனிவர்களுக்காகப் பழங்காலத்தில் அமைக்கப்பட்ட இக் கல் படுக்கைகள் வழவழப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. மாறவர்ம சுந்தர பாண்டியன் காலத்தில் இங்கு சமண கோவில் ஒன்று இருந்தது.

மதுரையில் கனகசந்திர பண்டிதர் என்னும் சமண ஆசிரியரும் அவரது சீடர் தர்மதேவ ஆசாரியரும் சோழர் காலத்தில் வசித்து வந்ததாக அக்காலத்துக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

**மேல மலையில் இருக்கும் வரலாற்றுச் சின்னங்கள் :**

மேல மலையில் இரண்டு குடைவரைக் கோவில்கள், ஒரு கட்டுமானக் கோவில் ஆகிய மூன்று முக்கிய வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. இவை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமை உடையவை.

இந்தியத் தொல் பொருள் ஆய்வுக் கழகத்தின் நிருவாகத்தில் இருப்பவை; பாதுகாக்கப்பட்ட இந்திய வரலாற்றுச் சின்னங்கள் என்று அக்கழகத்தால் அறிவிக்கப்பட்டவை. இக்கோவில்களுக்கு அருகே பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களில் இருந்து பழங்காலத்தில் இக்கோவில்களுக்கு வழங்கி வந்த பெயர்களை அறிந்து கொள்கிறோம் இரு குடைவரைக் கோவில்களில் ஒன்று திருமாலுக்கு உரியது. மற்றொன்று சிவனுக்கு உரியது. அவை முறையே பதினெண் பூதி விண்ணகரம் என்றும், பழியிலி ஈசுவரம் என்றும் பண்டைக் காலத்தில் அழைக்கப்பட்டன. இவற்றிற்கு எதிரே கிழக்கில் மேற்கு நோக்கிய நுழைவாயிலைக் கொண்ட ஒரு கட்டுமானக் கோவில் இருக்கிறது. முழுவதும் கல்லாலேயே அமைக்கப்பட்டு இருக்கும் இக்கட்டுமானக் கோவிலே தமிழகக் கோவில் கட்டடக் கலை வரலாற்றில் மிக முக்கியப் பங்கினை வகிக்கும் விசயாலய சோழிசுவ்ரம் ஆகும்.

**சமணர் குடகு என்றும் அழைக்கப்படும் பதினெண் பூதி விண்ணகரம் :**

செவ்வகமான கருவரை, முகமண்டபம் ஆகியவற்றினைக் கொண்டுள்ள இவை வைணவக் குடவரைக் கோவில் கல்வெட்டுக்களில் பதினெண் பூதி விண்ணகரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பதினெண் பூதி என்பது ஊரின் வணிகக் குழுவைக்குறித்து எழுந்த பேராகும். அலர்மேலு மங்கை நாயகன் அமர்ந்தருளும் கோவில்களை விண்ணகர் என அழைப்பது வைணவ மரபாகும். இம்மரபுப்படி பதினெண் பூமியுடைய வணிகக் குழுவினால் அமைக்கப்பட்ட திருமால்கோவில் பதினெண் பூமி விண்ணகர்என்று அழைக்கப்பட்டது. இத்திருக்கோவில் நாயகர், கரிய மாணிக்க ஆழ்வார் என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கிறார்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் சமணர்களால் அமைக்கப்பட்ட சமணக் குடவரைக் கோவிலாக முதலில் இது வழங்கியது. பிறகு இச்சமணக் குடவரைக் கோவில் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் கி. பி. 1228-ல் வைணவக் கோவிலாக மாற்றப்பட்டது. என்று திரு கே. ஆர். வெங்கடராம அய்யர் புதுக்கோட்டை மேனுவலில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் எந்தச் சான்றுகளின் அடிப்படையில் முதலில் இது சமணக் குடவரையாக இருந்தது என்பதை அவர் கூறவில்லை.

கருவறையின் முன்பே உள்ள மண்டபத்தின் பாறைச் சுவரில் புடைச் சிற்பங்களாக நான்கு கரங்களுடன் நிற்கும் நிலையில் செதுக்கப்பட்டு இருக்கும் பன்னிரண்டு திருமால் சிலைகளைக் காணுகின்றபோது, அவை 13-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை எனத் துணிய முடியவில்லை. அவற்றின் கலைப் பாணியை நோக்குகையில் 11-ஆம் நூற்றாண்டில் வடித்த சிலைகளாகவே கருதத் தோன்றுகிறது. இதன் அடிப்படையில் நோக்குகின்றபோது சுந்தரபாண்டியன் காலத்திற்கு (கி. பி. 13-ஆம் நூற்றாண்டிற்கு) முன்பே இது வைணவக் கோவிலாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

இச்சிற்பங்கள் கருவறையின் நுழைவாயிலுக்கு இரு மருங்கும் பக்கத்திற்கு ஐந்து வீதம் பத்தும் வடக்குப் பகுதிச் சுவர், தெற்குப் பகுதிச்சுவர் ஆகியவற்றில் ஒவ்வொன்று வீதம் இரண்டும் ஆக பன்னிரண்டு திருமால் சிலைகள், நான்கு கரங்களோடு வெண்சங்கும் வெற்றி ஆழியும் தாங்கி நிற்கின்றன. முன் வலது, இடது கரங்கள் முறையே அபய அஸ்தம் காட்டியும், தொடைமீது வைத்தும் அமைந்திருக்கின்றன.

**பழியிலி ஈசுவரம் :**

பல்லவப்பேரரசன் நிருபதுங்கவர்மன் காலத்தில் குடைவித்த கோவில் இது. 2.4 மீ., .25 மீ, அளவிற்கு இரண்டு மீட்டர்கள் உயரம் கொண்டதாகக் குடைவரை அமைக்கப்பட்டுள்ளது.



குடைவரைக்கோவிலுக்கு எதிரே இருக்கும் பாறையில் கோவிசய நிருபதுங்கவர்மனின் ஏழாம் ஆட்சி ஆண்டுக்கல்வெட்டு ஒன்று இருக்கிறது. அதில் பழியிலி ஈசுவரம் என்னும்இக்குடைவரைக் கோவிலை எடுப்பித்தோரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இக்குடவரைக் கோவில் விடேல் விடுகு முத்தரையனின் மகனான சாத்தன் பழியிலி என்னும் முத்தரையர் தலைவனால் எடுக்கப்பட்டது. இவனது மகன் இக்கோவிலுக்கு முற்றத்து மாடம் (முகமண்டபம்) எருது ஊர்தி, அதை வைப்பதற்குக் கொட்டில் ஆகியவற்றை, அமைத்துக் கொடுத்தான். மீனவன் தமிழாதிரையன் என்பானின் மனைவி பழியிலி சிறிய நங்கை என்பாள். இறைவர்க்குப் பூசைகள் செய்வதற்காக மூன்று வேலி நிலம் ஊர் அவைத் தலைவனுக்கு நிவந்தமாக அளித்தாள்.

இங்குள்ள இக் கல்வெட்டின் கூற்றுப்படி இக்குடைவரைக் கோவில் கி.பி. 9ஆம் நூற்றாண்டில், அதாவது இன்றைக்கு ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டதாகும்.

**விசயாலய சோழீசுவரம் :**

பதினெண் விண்ணகரத்திற்கு எதிரே மாலையின் கிழக்குச் சரிவில் இக்கோவில் இருக்கிறது. கோவிலுக்கு எதிரே இருக்கும் மாறவர்ம சுந்தர பாண்டியனின் 12-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விசயாலய சோழீசுவரம் உடைய நாயனாருக்கு வைகாசித் திருவிழா நடத்த நகரத்தார் ஏற்படுத்திய அறக்கட்டளையைக் கூறுகிறது. இந்த 13-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டின் அடிப்படையில் இக்கோவில் விசயாலய சோழீசுவரம் எனப்படுகிறது.

திருத்தணிக்கு அருகே உள்ள விளக்கணாம்பூண்டி என்னும் கிராமத்தில் இருக்கும் விசாலீசுவரர் கோவிலும் விசயாலய சோழீசுவரம் என்றே கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதும் இங்குக் கருதத்தக்கதாகும். திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், திரு கே. ஆர். வெங்கடராம அய்யர் போன்றோர் சுந்தர பாண்டியனின் கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கும் விசயாலய சோழீசுவரம் நார்த்தாமலைக் கோவிலே என துணிந்து உரைத்துள்ளார்கள். திரு கே. வி. சௌந்தரராசன் போன்ற சில அறிஞர்கள் இதனை விசயாலய சோழீசுவரம் என அழைப்பது தவறு எனக் கருதுகிறார்கள். இக்கோவிலின் கலைப் பாணியையும் கட்டட அமைப்பையும் பார்க்குங்கால் பல்லவர் பாணி சோழர் பாணியாக உருமாறும் காலக்கட்டத்திலே இக்கோவில் படைக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு புலனாகிறது. அந்த அடிப்படையில் நோக்குகையில் இக்கோவிலை விசயாலய சோழீசுவரம் என்று அழைப்பதே பொருத்தம் எனவும் தோன்றுகிறது.

கோவில் நுழைவாயிலில் இருக்கும் துவாரபாலகர் சிலைகளில் ஒன்றில் கீழே இருக்கும் கல்வெட்டு, இக்கோவில் சாத்தன் பூதியால் கட்டப்பட்டது என்றும், இடி, மழை காரணமாகச் சிதைவுற்றது என்றும், சிதைவுற்ற கோவிலை மல்லன் விடுமன் என்னும் தென்னவன் தமிழாதிரையன், திருப்பணி செய்தான் என்றும் கூறுகிறது. இக்கோவில் பல்லவர் பாணியும் முற்காலச் சோழர்களின் பாணியும்இயைந்து மிக அழகிய கலைப்படைப்பாக வெளிப்பட்டிருக்கிறது.

விசயாலய சோழன் காலத்தில் கட்டப்பட்ட இக்கோவில் சில சிறப்பான கட்டட அமைப்புகளைக் கொண்டுள்ளது. இக்கோவில் எட்டு சிறு கோவில்களுக்கு மத்தியில் மேற்கு நோக்கியவாறு மிக அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. எட்டு சிறு கோவில்களில் தற்போது ஆறு மட்டுமே உள்ளன. ஒன்றின் அடிப்பகுதி மட்டும் எஞ்சி இருக்கிறது. மற்றொன்று அதன் சுவடே தெரியாமல் கால வெள்ளத்தில் கரைந்து விட்டிருக்கிறது. மையத்தில் அமைந்திருக்கும் கோவிலின் கருவலரை 2.6 மீட்டர் விட்டமுள்ள வட்டமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக்கருவறையைச் சுற்றி அமைந்திருக்கும் வெளிச்சுவர், சுவருக்கு உள்ளேயே கருவறையைச் சுற்றி வருவதற்கு இடம் விட்டு, சதுரமாகக் கட்டப்பட்டுள்ளது. கருவறைக்கு முன்னே, மேற்பகுதி கற்களால் மூடப்பட்ட முன் இடைக்கட்டு (அர்த்தமண்டபம்) உள்ளது. கருவறையின் மேல் அமைந்த விமானம் நான்கு தளங்களை உடையது. நான்காவதாக உச்சியில் உள்ள தளம் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கோவிலில் இருந்து சிதைந்து விழுந்த அன்னையர் எழுவரின் சிலைகளும், வீணாதர தட்சிணா மூர்த்தியின் சிலையும் தற்போது புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன. பார்த்துப் பரவசமடைய வேண்டிய பாங்கு மிக்கவையாக அவை அருங்காட்சியகத்தில் விளங்குகின்றன.

சதுரமான சுற்றுப் பாதையில் வட்டமான கருவறை அமைந்திருப்பது இக்கோவில் அமைப்பின் ஒரு சிறப்பாகும். இதன் விமானம் நான்கு தளங்களில் அமைந்திருக்கிறது. நான்காவதாக உச்சியில் இருக்கும் தளம் வட்டமாகவும், மற்ற மூன்று தளங்களும் சதுரமாகவும் உள்ளன.




புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள நார்த்தாமலை சிற்பம்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

**சுனைகள் :**

இக்கோவில்களைத் தவிர தலையருவி, சிங்கம், தளும்பு சுனை. என இரண்டு சுனைகளும் மேல் மலையில் உண்டு. முதலில் குறிப்பிட்ட சுனைக்கடியில் சிவலிங்கம் ஒன்று இருப்பதாகக் கூறப்படுகிறது. புதுக்கோட்டை ஸ்டேட் இன்ஸ்கிரிப்ஷன் (889) புதுக்கோட்டை மன்னர்இராமச்சந்திர தொண்டைமான் தலையருவி சிங்க சுனையில் உள்ள நீரை இறைத்துவிட்டு அதில் இருந்த இலிங்கத்திற்கு வழிபாடு செய்ததாகக் கூறுகிறது.

**நகரில் அமைந்த கோவில்கள் :**

கிராமத்தில் அமைந்திருக்கும் கோவில்களில் மூன்று பழம் பெருமை வாய்ந்தவை. அவற்றுள் ஒன்று கடம்பர் மலையின் அடிவாரத்தில் இராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்டது. இக்கோவிலின் இறைவர் திருக்கடம்பூர் உடைய நாயனார் என்று அழைக்கப்படுகிறார். மற்றுமொன்று கிராமத்தின்

மையத்தில் இருக்கும் திருவானைக்கா ஈசுவரமாகும். கோயிலுக்குக் கிழக்கே மற்றும் ஓர் சிவன் கோவில் இருக்கிறது. இது நகர் ஈசுவரம் என்று கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகிறது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கி. பி. 1228-ல் (பு. ச. க. 283) கட்டப்பட்டது. மூன்றும் சிவன் கோவில்கள். இவை சோழர்காலத்தில் நார்த்தாமலை நகரில் அமைந்த சிறந்த கோவில்களாக விளங்கி இருந்தன.

**கடம்பர் கோவில் :**

நார்த்தாமலையில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை இக்கோவிலின் சுவர்களிலும், கோவிலை ஒட்டியுள்ள பாறையிலும் இருக்கின்றன. கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோவிலில் உள்ளது போன்ற சில வேலைப்பாடுகள் இக்கோவிலில் காணப்படுகின்றன. எனினும் கண்ணனூர் கோவிலுக்கு இது காலத்தால் பிற்பட்டது. கோவில் விமானம் அரைவிட்டக் கற்கூடால் கவிழ்க்கப்பட்டிருக்கிறது. கோவிலின் சுற்றுப் பாதையில் உள்ள பரிவார தேவதைகளில் சிற்பங்களில் கணேசர் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்குள்ள கணேசர் தனது மேல் இரு கைகளிலும் கரும்பும், நெற்கதிரும் ஏந்திக் காட்சி தருகிறார். இரு கல்வெட்டுக்கள் (பு. ச. க. 279, 325) இங்குள்ள அம்மன் கோவில் தனியாகப் பழுதூர் உடையான் பெரியன் என்னும் பெருமகனால் கட்டப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றன. இக்கோவில் மண்டபத்தில் முற்காலத்தில் நார்த்தாமலைக் கிராமச்சபை தனது கூட்டங்களை நடத்தி வந்திருக்கிறது. (பு. ச. க. 621, 792.)

**திருவானைக்கா ஈசுவரம் :**

திருச்சியில் உள்ள புகழ்பெற்ற திருவானைக்கா கோவிலின் பெயரிலேயே நார்த்தாமலையில் இக்கோவில் விளங்குகிறது. இக்கோவிலின் நாயகர் திருவானைக்கா உடையார் என்று குறிக்கப்பட்டுள்ளார். மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் பரம்பூர் உடையான் கடம்பர் செங்குடையான் கங்கநாதர் என்னும் பெருமகனால் இக்கோவில் கட்டப்பட்டது. (பு. ச. க. 158) இக்கோவிலில் சோழர் மற்றும் பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கோவிலின் மேற்குச் சுவரில் உள்ள தேவகோட்டத்தில் இருக்கும் ''மாதொருபாகர்'' சிலை, கலைநலம் ததும்பிக் காட்சியளிக்கிறது.

மேலே கண்ட செய்திகளிலிருந்து, இன்று சிறு கிராமமாக விளங்கும் நார்த்தாமலையும், அதன் சுற்றுப்பகுதிகளும் எந்த அளவிற்குக் கீர்த்திமிகு நார்த்தாமலையாகப் பண்டையில் விளங்கி இருந்தது என்பதை நன்கு புரிந்து கொள்ளலாம்.



இந்தப் பெண்கள் வேலையில்லாமல் திண்டாடிக் [illegible] 32-ஆம் பக்கத்தில் காண்க!

# பூச்சிகளை அழிப்பதில் புதியதோர் முறை

டாக்டர் எஸ். ஜெயராஜ்,
பூச்சியியல் துறைப் பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
மதுரை.

நாம் உற்பத்தி செய்யும் பயிர்களைப் பல விதமான பூச்சிகள் தாக்கிப் பெருத்த சேதம் விளைவிக்கின்றன. உணவு உற்பத்தியில் சுமார் 40 சதம் பூச்சிகளாலும் எலிகளாலும் விரயமாக்கப்படுகிறதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றை ஒழிக்கப் பல்வேறு இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை மிகுந்த அளவில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து பயிர்ப் பாதுகாப்பு செய்து வருகிறோம்.

**பூச்சிக் கொல்லி மருந்துகளின் குறைபாடுகள் :**

பூச்சிக்கொல்லி மருந்துகளால் பொதுவாக நிரந்தரமான பயிர்ப் பாதுகாப்பு செய்ய முடிவதில்லை. திரும்பத் திரும்பப் பூச்சிக் கொல்லிகளை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இதனால் விவசாய உற்பத்திச் செலவு அதிகமாகின்றது. மேலும் பல பூச்சிகள் விரைவாகப் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு எதிர்ப்புச் சக்தி உண்டாக்குகின்றன. எனவே மாற்று நச்சுப் பொருட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

பயிரைத் தாக்கும் பூச்சிகள் மட்டுமல்லாது, நமக்கு நன்மை பயக்கும் தேனீ, ஒட்டுண்ணிகள் போன்றவற்றையும் இப்பூச்சிக் கொல்லிகள் கொல்லுவதால் பலபிரச்சினைகள் ஏற்படுகின்றன. நிலம், நீர், காற்று போன்ற சுற்றுப்புறச் சூழ்நிலைகளிலும் நச்சுத் தன்மை பரவுகிறது. இதோடு மட்டும் அல்லாமல், சில சமயங்களில் பூச்சிக் கொல்லி மருந்துச் செடிகளையும் கருகச் செய்து விடுகின்றன.

புதிய முறைகள்: மேற்கூறிய காரணங்களால் பூச்சிக் கொல்லி மருந்துகளின் உபயோகத்தை ஓரளவு குறைத்து, மற்ற புதிய முறைகளுடன் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செய்ய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில், முக்கியமானவை நோய்க்கிருமிகள் மூலம் பூச்சிகளுக்கு நோய் ஏற்படச் செய்வது, பூச்சிகள் தாக்காத புதிய பயிர் ரகங்களை உருவாக்குவது, ஊண் தடுப்பான்கள் மூலம் பூச்சிகளைப் பட்டினி போடுவது, ஒளிக்கதிர்களாலும், இரசாயனப் பொருட்களாலும் பூச்சிகளை மலடாக்குவது, ஹார்மோன்கள் மூலம் பூச்சிகளை முதிர்ச்சியடைய விடாமல் தடுப்பது, இரசாயனப் பொருட்கள் மூலம் ஆண் பூச்சிகளை மட்டும் ஈர்த்து அழித்துவிட்டு, பெண் பூச்சிகளின் இனப் பெருக்கத்தைத் தடைசெய்வது ஆகியவைகளாகும். நோய்க் கிருமிகள் மூலம் பூச்சிகளை அழிப்பது பற்றி இங்கு ஆராய்வோம்.

**பூச்சிகளின் நோய்கள் :**

மற்ற விலங்குகளுக்கு நோய் ஏற்படுவது போலவே பூச்சிகளுக்கும் நோய் உண்டாகிறது. சுமார் 250 வகை பாக்டீரியாக்கள், 350 வகை வைரஸ் கிருமிகள், 600 வகை பூஞ்சாணங்கள், 250 வகை புரோட்டோசோவாக்கள், மற்றும் 100வகை நூற் புழுக்கள் பூச்சிகளை பாதித்து, நோய்வாய்ப் படச்செய்து கொல்கின்றன. இயற்கையிலேயே இத்துணைக் கிருமிகள் பூச்சிகளைத் தாக்கினாலும், இவை எல்லாவற்றையும் ஆராய்ச்சிச்சாலையில் அதிக அளவில் உற்பத்தி செய்து பயன்படுத்துவது இயலாதது. பயிர்களின் முக்கியமான பூச்சிகளைப் பாதிக்கக்கூடிய சுமார் 50 வகைக் கிருமிகள், நூற் புழுக்கள் மட்டுமே நமக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கின்றன. மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும், நன்மை செய்யும் பூச்சிகளையும், மற்ற உயிரினங்களையும் பாதிக்காத நுண்ணுயிர்க் கிருமிகளே நமக்குத்தேவை. அவை எளிதில் உற்பத்தி செய்யக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். உற்பத்திச் செலவும் மிகவும் குறைவாக இருக்க வேண்டும். பெரும்பாலான கிருமிகள், பூச்சிகள் உற்பத்தியாகுமிடங்களில் தங்கி, தொடர்ந்து அவற்றை அழிக்கப் பயன்படுவதால், இப்பயிர்ப் பாதுகாப்பு முறை மிகவும் சிக்கனமாகவே இருக்கிறது.

**பூச்சிகளின் பாக்டீரியா கிருமிகள் :**

பேசில்லஸ் துரிஞ்சியன்ஸ் எனப்படும் பாக்டீரியா, பயிர்களைப் பாதிக்கும் இலைப் புழுக்கள் போன்றவற்றை அழிக்கும் திறம் படைத்தது. இந்த பாக்டீரியாவின் செல் ஒவ்வொன்றிலும் ஒரு ஸ்போர் விதையும், பூச்சிகளுக்கு நச்சுத் தன்மையுள்ள 8-பக்க வைரக்கல் வடிவமுள்ள படிகம் ஒன்றும் உள்ளன. இக்கிருமியை தூசி மருந்துபோல், தூவுவான் மூலம் தூவலாம். எண்ணெய்த் திரவ மருந்து போல் தண்ணீரில் கலந்தும் தெளிப்பான்கள் வைத்துத் தெளிக்கலாம். இலைகளுடன் இப் பாக்டீரியாவையும் புழுக்கள் உண்பதால் இரண்டு நாட்களுக்குள் அவை கறுப்பாகி, அழுகிச் செத்து மடிகின்றன.

இக்கிருமி செடிகளுக்கோ, மனிதர்களுக்கோ, கால்நடைகளுக்கோ அல்லது நன்மை செய்யும் பூச்சிகளுக்கோ நோய் ஏற்படுத்துவதில்லை. மாறாக, மாட்டுத் தீவனம், கோழித் தீவனத்துடன் இதைக் கலந்து கொடுத்தபோது, அவற்றின் சாணத்தில் உற்பத்தியாகும் வீட்டு ஈயின் புழுவும் நோய் வாய்ப்பட்டு இறந்துவிடுகின்றது.



செடிகளிலும் பட்டு, வியாதி விரைவாக எல்லாப் பூச்சிகளுக்கும் பரவுகிறது. ஓர் ஏக்கர் பயிருக்கு சுமார் 50-100 நோய் வாய்ப்பட்ட புழுக்களிலிருந்து கிடைத்த வைரஸ் கிருமிகள் போதுமானது. நல்ல பயனடைய இக்கிருமிகளை மாலை நேரங்களில் நல்ல தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.

**பூச்சிகளின் பூசணங்கள் :**

காப்பிச் செடியைத் தாக்கும் பூச்சியை செஃபலோஸ்போரியம் லெகானியய் என்னும் பூசணம் நல்ல முறையில் கட்டுப்படுத்தியது. இப்பூசணத்தைச் சோள தானியத்தில் உற்பத்தி செய்து அதன் ஸ்போர் விதையைத் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். ஸ்போர், பூச்சியின் மீதுபட்டு, அதன்பின் முளைத்து பூச்சிக்குள் செல்லும், நான்கு நாட்களுக்குள் பூச்சி செத்து, பின் பூசண வளர்ச்சி ஏற்பட்டு மற்ற பூச்சிகளுக்கும் நோய் பரவுகிறது. குளிர்காலங்களில், காற்றின் ஈரத்தன்மை அதிகமாக இருக்கும்போது இக்கிருமி வேசமாகப் பரவுகிறது.

இதேபோல, பேசில்லஸ் பொப்பிலியே என்னும் பாக்டீரியா, பயிர்களின் வேரைத் தாக்கும் வெள்ளைப் புழுக்களை நல்ல முறையில் அழிக்க முடியுமெனக் கண்டறியப்பட்டது.

**பூச்சிகளின் வைரஸ் கிருமிகள் :**

பூச்சிகளைத் தாக்கும் வைரஸ் கிருமிகள் மிகவும் பயனுள்ளவையாக இருப்பதற்கு, அவை குறிப்பிட்ட பூச்சியை மட்டும் அழிப்பது, மற்ற உயிரினங்களைப் பாதிக்காதது, மற்றும் வேகமாகப் பரவி பூச்சிகளை நோய் வாய்ப்படச் செய்வது ஆகியவை முக்கிய காரணங்களாகும். பருத்தி வெட்டுப்புழு புரடீனியா, நிலக்கடலை சிவப்பு கம்பளிப்புழு மற்றும் கொண்டைக் கடலைக் காய்த் துளைப்பான் ஆகியவற்றை அழிக்க மூன்றுவித வைரஸ் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வைரஸ் கிருமிகளைச் செடிகளின் மீது தெளிக்க வேண்டும். செடிகளுடன் கிருமிகளை உண்ட புழுக்கள் ஓரிரு நாட்களில் மேற்கொண்டு உணவு உட்கொள்ளும் தன்மையை இழந்துவிடுகின்றன. அடுத்த இரண்டு, மூன்று நாட்களில் புழுக்கள் அழுகி, தலைகிழாகத் தொங்கிச் சாகின்றன. புழுவின் உடலிலிருந்து கிருமிகள் ஏராளமாக வெளிப்பட்டு மற்ற

இதேபோல் குப்பையில் உற்பத்தியாகும் தென்னை மர காண்டா மிருக வண்டின் புழுவை அழிக்க மற்றுமோர் பூசணம் (மேடரைசியம் அனைசோபிலியே) நல்ல பலனளிக்கிறது. இதை காரட் கிழங்கில் உற்பத்தி செய்து, ஸ்போர் கலவையைக் குப்பையில் தெளிக்க வேண்டும்.

நோய்க்கிருமிகள் மூலம் பயிரைத் தாக்கும் பூச்சிகளை அழிப்பதில், நம் நாட்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நச்சுத்தன்மை இல்லாத, எளிய, நிரந்தரமான பயிர்ப்பாதுகாப்பு செய்ய இவ்வாராய்ச்சிகள் உறு துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுத் திட்டங்கள் !

பம்பாயிலுள்ள வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுகழகத்தின் நிதி உதவியுடன், ரூ. 1,242.62 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டில் சிறு பாசனம் அல்லாத திட்டங்களான தென்னை அபிவிருத்தி, ரப்பர் பயிரிடுதல், கோக்கோ பயிரிடுதல், திராட்சை பயிரிடுதல் ஆகிய 36 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ரூ. 765.22 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பல நிலைகளில் திட்ட உருவாக்கத்திலுள்ள சிறு பாசனம் அல்லாத 34 திட்டங்கள் இந்த ஆண்டில் வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்படும். இதே திட்டத்தின் கீழ் நீண்ட காலக் கடன் வழங்குவதற்காக ரூ. 5 கோடி செலவில் இந்த ஆண்டிற்குத் திட்டம் வகுக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.





# நஞ்சை நில வாழை

திரு பாஷ்யம்
வாழை ஆராய்ச்சி அலுவலர்
(பொறுப்பு),
வாழை ஆராய்ச்சி துணை-நிலையம்,
ஆடுதுறை;
—துணை வேளாண்மை அலுவலர்கள்.
திரு ஜோ. இராதாகிருஷ்ணன்,
திரு எஸ். சுந்தரம்பிள்ளை.

முக்கனிகளில் மூன்றாவது கனியாகவும், ஏழைகளின் ஆப்பிள் என்றும் அழைக்கப்படும் வாழையானது இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லா மாநிலங்களிலும் பயிரிடப்பட்டு வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் சுமார் 49,320 எக்டேர்நிலப் பரப்பில் பயிரிடப்பட்டு, மொத்த உற்பத்தியில் மூன்றிலொரு பங்கை தமிழகம் தருகிறது. தமிழகத்தில் குறிப்பாக மதுரை, திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர் மாவட்டங்களில் அதிகப்பரப்பில் பயிரிடப்படுகிறது.

நமது தமிழகத்தில் வெவ்வேறு மாவட்டங்களில் அந்த மாவட்டங்களின் சூழ்நிலைக்கேற்ப நஞ்சை நிலங்களிலும், தோட்டக்கால் நிலங்களிலும், மலைகளிலும் பயிரிடப்பட்டுவருகிறது.

தமிழகத்தில், மற்ற மாவட்டங்களில் பயிர் செய்வதைக்காட்டிலும் தஞ்சை மாவட்டத்தில் வாழையை பயிர் செய்வதில் ஒரு சிறப்பு உண்டு. அதாவது ஆற்றின் வேகத்தால் காலப்போக்கில் அடித்து வரப்பட்டு சேர்ந்து குறுமண் கலந்த வண்டல் மண்ணில் வாழையானது நீர் பாய்ச்சப்படாமல் பல்லாண்டுகளாக ஒரே இடத்தில் பயிர் செய்வதை வேறு எங்கும் காண முடியாது. இம்மாதிரி வாழையடி வாழையாக ,வாழை பயிர் செய்யப்படுவதுப் படுகை முறையில்வாழை பயிர் செயல் என்றழைக்கப்படுகிறது.

இத்தஞ்சைப் பகுதியில் நன்செய் நிலங்களிலும் வாழையைப் பயிர் செய்வதற்கு விவசாயிகள் அதிகமாக முன் வருகிறார்கள். மாற்றுப் பயிர் செய்வதற்கும், சிற்சிலயிடங்களில் பாசனத்திற்குத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதாலும் இவ்விதப் பயிர் மாற்றம் செய்ய இப்பகுதி வேளாண் பெருமக்கள் வாழையை நாடுகின்றனர். இவ்வித நன்செய் வாழை அதிக அளவில் திருச்சி மாவட்டத்திலும், மற்றும் மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் நேந்திரன் ரஸ்தாளிபோன்ற வாழையினங்களும், மதுரையில் நெய் வண்ணன் என்ற ரகமும் தனியாகவும், கலப்புப் பயிராகவும் நன்செய் நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது.

ஆகவே, தஞ்சையில் உள்ள நன்செய் பகுதிகளுக்கு ஏற்ற வாழையினத்தைக்கண்டறியவும், செய் நேர்த்தி ம்ற்றும் வடிகால் வசதி ஏற்படுத்தும் முறைகளை கண்டறியவும் ஆடுதுறை வாழை ஆராய்ச்சி துணை-நிலையத்தில் 1976-ஆம் ஆண்டு முதல், முக்கிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பகுதியில் ஏற்படும் கடுங்காற்று, புயல் காரணமாகவும், பாசனத் தண்ணீர் தேங்குவதாலும் வாழைகள் தீவிர பாதிப்பிற்குள்ளாகின்றன. இவ்வாராய்ச்சிப் பண்ணையில் நஞ்சை வாழை பரிசோதனையின்போதும் இவ்வித இடர்ப்பாடுகள் ஏற்பட்டன.

புதியதாக நடப்பட்ட முதல் வாழைக் கன்றுகளின் வளர்ச்சியும், அதன் விளைச்சலும் ஆய்வு செய்யப்பட்டது. இதில்சாக்கியா என்ற வாழை இனம் மற்ற பூவன், காஞ்சி, மொந்தன், கற்பூரவல்லி, ரஸ்தாளி, ரொபஸ்டா, நேந்திரன் ஆகிய வாழையினங்களை விட சிறப்பாக இருப்பது கண்டறியப்பட்டது.

| வாழையின் விளைவுத்திறன் | | ஒரு தார் (கிலோ) |
|---|---|---|
| 1. பூவன் | ... | 5.680 |
| 2. மொந்தன் | ... | 7.731 |
| 3. காஞ்சி | ... | 8.477 |
| 4. சாக்கியா | ... | 10.850 |
| 5. கற்பூரவல்லி | ... | 7.785 |
| 6. ரொபஸ்டா | ... | 5.110 |
| 7. நேந்திரன் | ... | 2.865 |
| 8. ரஸ்தாளி | ... | 5.300 |

சாக்கியா என்ற இந்த வாழையிரகம் தமிழகத்தில் கற்பகம் என்று இவ்வாராய்ச்சி நிலையத்தால் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வருகின்றது. இது புயல் கடுங்காற்றை ஓரளவு தாங்கும் சக்தி கொண்டது.

காயாகவும் பழமாகவும் உபயோகப்படுத்தக்கூடிய இந்த சாக்கியா ரகம் மதுரை மாவட்டத்தில் பயிரிடப்பட்டு வரும் நெய் வண்ணனைக் காட்டிலும் மகசூலில் சிறந்து விளங்குவதாகக் கண்டறியப்பட்டது. மேலும், இந்த ரகம் வாடல் நோய்க்கும், இலைப் புள்ளி நோய்க்கும், இளங்காய்கள் கருகும் நோய்க்கும் நெய்வண்ணனைப் போன்று இலக்காவதில்லை.

எனவே தஞ்சையில் உள்ள நஞ்சை நிலங்களில் வாழையைப் பயிரிட விரும்பும் வேளாண் பெருமக்கள் இந்த சாக்கியா இன வாழையைப் பயிரிட்டு அதிக இலாபம் பெறலாம்.







# தந்தை பெரியார் நூற்றாண்டு விழா



நாகர்கோவில்
(7-7-'79)










விருதுநகர்
(8-7-'79)





# பயறு இரகங்களின் ஊட்டத் திறன்

நமது உடல் வளர்ச்சிக்கும், நோய்களி லிருந்து நம்மைக் காப்பதற்கும் புரதச்சத்து அவசியம். நாம் அதிகமாகச் சாப்பிடும் அரிசி உணவில், புரதச் சத்து குறைவாகவே உள்ளது. பயறு, பருப்பு வகைகளில் சுமார் 16 சதம் புரதமும், அரிசியில் 8 சதம் புரதமும் உள் ளன. புரதம் என்பது 20 வகையான அமினோ அமிலங்கள் இணைந்த ஒரு கூட்டுப் பொருளாகும். ஒவ்வொரு புரதத்திலுமுள்ள அமினோ அமிலங்களின் வரிசைக் கிரமமும் அவற்றின் அளவும் வித்தியாசப்படும்.

பால், முட்டை மற்றும் மாமிச உணவுகளில் நமக்கு வேண்டிய அமினோ அமிலங்கள் அனைத்தும் உடல் நலனுக்குரிய விகிதாச்சாரத் தில் உள்ளன. பயறு வகைகளில் உள்ள புரதத் தில் மெத்தியோனின் என்ற அமினோ அமி லம் குறைவாக உள்ளது. நாம் சாப்பிடும் உணவில் ஏதாவது ஓர் அமினோ அமிலம் குறைந்தால், மற்ற அமினோ அமிலங்கள் உட் கிரகிக்கப்படுவது குறையும். எனவே மெத்தி யோனின் அதிகமுள்ள பயறு இரகங்களையே நாம் சாப்பிடுவது அவசியம்.

**மா. ஜெயப்பிரகாசம்**
**அ. கிருட்டிணவேணி**
**உயிர் வேதியல் துறை**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்**
**கோவை.**

மற்ற எல்லா இரகங்களைவிட பிபி 3 இரக உளுந்தில் மெத்தியோனின் அதிகமாக உள்ளது. அடுத்ததாக கோ 3 உளுந்திலும், கோ 2, எம். 2 பச்சைப் பயறிலும் மெத்தி யோனின் அதிகம் உள்ளது. சோயாபீன்ஸில் புரதம் அதிகமிருந்தாலும் மெத்தியோனின் மிகக் குறைவு. எனவே சோயாபீன்ஸ் உணவு டன் மெத்தியோனின் கலந்து சாப்பிட்டால் அதன் ஊட்டத் திறன் அதிகரிக்கும். இன்னும் அதிக அளவு மெத்தியோனின் உள்ள பயறு இரகங்களைக் கண்டுபிடிக்க முயற்சிகள் எடுக் கப்பட்டு வருகின்றன.



| இரகம் | புரதம் சதம் | மெத்தியோனின் கி/100 கி. புரதம் |
|---|---|---|
| **துவரை** | | |
| கோ 2 | ... 15.71 | 1.40 |
| கோ 3 | 14.95 | 1.34 |
| எஸ். 80 | 16.22 | 0.86 |
| 112—11—1 | 15.10 | 1.19 |
| **உளுந்து** | 16.85 | 1.78 |
| கோ. 4 | 17.48 | 1.49 |
| பிபி 3 | 15.62 | 1.92 |
| சி.எஸ். 61—1 | 18.49 | 1.19 |
| **பச்சைப்பயறு** | | |
| கோ 2 | 19.00 | 1.58 |
| கோ 3 | 16.85 | 1.14 |
| எம். 2 | 19.90 | 1.58 |
| **மொச்சை** | | |
| கோ 9 | 18.36 | 1.20 |
| டி. எல். 2539 | 18.24 | 1.21 |
| எம். எஸ். 9332 | 17.48 | 1.26 |
| **சுண்டக்கடலை** | | |
| கோ 1 | 16.09 | 0.87 |
| கோ 2 | 17.48 | 0.67 |
| **சோயாபீன்ஸ்** | | |
| யுஜிஎம் 20 | 27.70 | 1.08 |
| எம் 2 | 28.58 | 0.77 |
| எம் 3 | 28.08 | 0.93 |
| **தட்டைப்பயறு** | | |
| கோ 2 | 18.61 | 1.51 |
| கோ 3 | 19.62 | 1.53 |
| பிஎல்எஸ் 1 | 19.00 | 1.37 |
| பிஎல்எஸ் 370 | 16.34 | 1.35 |
| கோ பூசா 4 | 17.98 | 1.00 |
| **கொள்ளுப்பயறு** | | |
| கோ 1 | 17.61 | 1.48 |
| ஹெப்பால் 1 | 17.10 | 1.17 |
| எச்பிகே 1 | 15.46 | 1.29 |
| செட்டிபாளையம் | 15.33 | 1.30 |



# உரங்களும் அவைகளின் தேவைகளும்

(த. இராமலிங்கம், எம்.எஸ்.ஸி (விவ)
க. கமீல் அகமது, பி.எஸ்.ஸி., (விவ)
மண் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம்)

பயிர் வளர்ச்சிக்குத் தேவையான மூல கங்களை அளிக்கக் கூடிய பொருட்களை உரம் என்று கூறலாம். பயிர்களின் வளர்ச்சிக்குத் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, சுண்ணாம்புச் சத்து, மக்னீசிய சத்து, கந்தகச் சத்து, இரும்புச் சத்து, தாமிர சத்து, துத்த நாகச் சத்து, மாங்கனீசு சத்து, வெண்கார சத்து, மாலிப்டினம் சத்து ஆகியவை தேவைப் படுகின்றன. மேற்கூறிய சத்துக்களில் ஒன் றையோ அல்லது பல சத்துக்களையோ கொடுக் கக்கூடிய பொருட்களை உரங்கள் என்று கூறுவர்.

### உரத்தின் அவசியம்

பயிர்கள், தங்களுக்குத் தேவையான சத்துக்களை மண்ணிலிருந்து எடுத்துக் கொள் கின்றன. அந்தச் சத்துக்கள் மண்ணில் போதிய அளவு இருந்தால் உரங்கள் இடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மண்ணிலுள்ள சத்துக்களின் அளவு, குறிப்பாக, தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகளின் அளவு பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அளவைவிடக் குறைந்து இருப்பதால், இம் மூன்று சத்துக்களையும் அளிக்கக்கூடிய உரங் களை இடுவது அவசியமாகிறது. சுண்ணாம்புச் சத்து, மக்னீசிய சத்து, கந்தகச் சத்து ஆகிய மூன்று சத்துக்களும் மண்ணில் போதிய அளவு இருப்பதால், இச்சத்துக்களை இடவேண்டிய அவசியம் தற்பொழுது இல்லை. ஆனால் நுண்ணூட்டச் சத்துக்கள் என்று அழைக்கப் படும் சத்துக்களாகிய இரும்புச் சத்து, தாமிர சத்து, துத்தநாகச் சத்து, மாங்கனீசு சத்து, வெண்கார சத்து, மாலிப்டின் சத்து, ஆகியவைகளின் தேவைகள் தற்பொழுது இந்தியாவின் பல பகுதிகளிலும் உணரப் பட்டு வருகின்றன. சில பகுதிகளில், சில நுண்ணூட்டச் சத்துக்கள் நுண்ணூட்ட உரங் களின் மூலம் அளிக்கப்பட்டும் வருகின்றன.

கடந்த இருபது ஆண்டுகளாக, நமது நாட்டில் வேளாண்மையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதிக உரம் ஏற்று, உயர் விளைச்சல் தரக்கூடிய பயிர் வகைகள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் நம் நாட்டிலும், நமது மாநிலத்திலும் புகுத்தப் பட்டன. உயர் விளைச்சல் தரக்கூடிய பயிர் வகைகள் மண்ணிலிருந்து அதிக அளவு சத்துக் களை எடுப்பதால், மண்ணிலுள்ள சத்துக் களின் அளவு குறைந்து வருகிறது. மேலும், ஒரு போகம் செய்யப்பட்ட நிலங்களில் இரு போகமும், இரு போகங்கள் செய்யப்பட்ட நிலங்களில் முப்போகமும் செய்யப்பட்டு வரு கின்றன. அதாவது, நிலத்தில் ஆண்டு முழு வதும் பயிர் இருந்து கொண்டே இருக்கிறது. அப்பயிர்கள் தொடர்ந்து மண்ணிலுள்ள சத்துக்களை எடுத்துக்கொண்டே இருப்பதால் சமீப காலத்தில் உரத் தேவைகள் அதிக அளவு பெருகியுள்ளன. அத்துடன் உணவு உற்பத்தி அதிகரித்ததால், உரத்தேவைகளும் அதி கரித்து விட்டன.

**உரங்களின் வகைகள்:**

உரங்களை நேரடி உரங்கள் (Straight fertilizers), கலப்பு உரங்கள் (Mixed fertilizers)

தரமான பொருட்களைத்
தயாரித்தளிக்கும் பணியில்
தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயாராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல—தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

டான்சி
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


கூட்டு உரங்கள் (Complex fertilizers) என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**நேரடி உரங்கள்:**

நேரடி உரங்களை மீண்டும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது (1) தழைச் சத்து தரக்கூடிய உரங்கள (2) மணிச்சத்து தரக்கூடிய உரங்கள், (3) சாம்பல் சத்து தரக் கூடிய உரங்கள்.

***தழைச்சத்து தரக்கூடிய முக்கிய உரங்கள்***

**யூரியா:—**

இது, எளிதில் நீரில் கரையக்கூடிய வெண்மைநிறப் படிகமான உப்பு. தழைச் சத்தை 46 விழுக்காடு தன்னகத்தே கொண் டது. எளிதில் காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ் சும் தன்மை உடையதால் இவ்வுரத்தை பாலி தீன் உறையிட்ட கோணிகளில் வைத்திருக்க வேண்டும். 1828-ஆம் ஆண்டு "ஒலர்" என்ற அறிவியல் மேதைதான் யூரியா என்றபொருளை முதன் முதலில் தயாரித்துக் காண்பித்தவர். யூரியாவை நிலத்தில் இட்டவுடன், அது நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குள் அம் மோனியம் அயனிகளாக மாறி விடுகிறது. நெற்பயிர்கள் அம்மோனியம் அயனிகளை அப்படியே வேர்களின் மூலம் எடுத்துக் கொள் கின்றன. மற்ற பயிர்கள் அம்மோனியம் அயனிகள், நைட்ரேட் அயனிகளாக மாறிய பிறகு, நைட்ரேட் அயனிகளை எடுத்துக் கொள்கின்றன. இதை நீரில் கரைத்து (2சதவீத கரைசல்) இலைகளின் மேல் தெளித் தாலும், தழைச்சத்தானது பயிர்களுக்குக் கிடைக்கிறது.

யூரியாக் கரைசலை இலைகளின் மேல் தெளித்து, பயிர்களுக்குத் தழைச்சத்தை அளிக்கும் ஆராய்ச்சி கரும்புப் பயிரில் மேற் கொள்ளப்பட்டு வெற்றிகரமாக முடிந்துள் ளது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் இது குறித்து எடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள் நல்ல பலனை அளித்துள்ளன. யூரியா கரை சலைக் கரும்புப் பயிருக்குத் தெளிப்பதன் மூலம் உரச்செலவைக் குறைக்கலாம் என்று அறியப்பட்டுள்ளது.

**அம்மோனியம் சல்பேட்:—**

யூரியா முக்கியத்துவம் அடைவதற்கு முன்பு, தழைச்சத்தைக் கொடுக்கக்கூடிய உர மாக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது, அம்மோனியம் சல்பேட் ஆகும். இது வெண்மைநிறப் படிகமான உப்பு. எளிதில் நீரில் கரையக்கூடியது. இருபது சதவீதம் தழைச்சத்துக் கொண்டது. எவ்வளவு நாட்கள் வைத்திருப்பினும் தன்மை மாறாது: கெட்டுப் போகாது.

**கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்:**

இந்த உரத்தில் கால்சியம் கார்பனேட், அம்மோனியம் நைட்ரேட் என்ற இரண்டு உப்புக்கள் உள்ளன. இது உருண்டை வடிவம் கொண்டது. கால்சியம் சத்து குறைந்த நிலங் களுக்கும், அமிலத் தன்மையுடைய நிலங்களுக் கும் இது ஒரு சிறந்த உரம். நம்நாட்டில் 1972-ம் ஆண்டு வரை 20 சதவீதம் தழைச்சத்து கொண்ட கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் தயாரிக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு தயா ரிக்கப்படும் உரத்தில் 26 சதவீதம் தழைச் சத்து உள்ளது. இந்த உரத்தில் பாதி அம் மோனியம் வடிவமாகவும், மறுபாதி நைட் ரேட் வடிவமாகவும் உள்ளது.

**அம்மோனியம் சல்பேட் நைட்ரேட்:**

கணக்கிடப்பட்ட அளவு அம்மோனியம் சல்பேட், மற்றும் அம்மோனியம் நைட்ரேட்






ஆகிய இரு உப்புக்களையும் ஒரு குறிப்பிட்ட உஷ்ண நிலையில் கலந்தால் கிடைப்பதே அம்மோனியம் சல்பேட்-நைட்ரேட் எனப்படும் இரட்டை உப்பாகும். இதில் 26 சதவீதம் தழைச்சத்து உள்ளது. இவ்வுரத்தில் தழைச் சத்தானது, 73 சதவீதம் அம்மோனியம் வடிவத்திலும் 27 சதவீதம் நைட்ரேட் வடிவத்திலும் உள்ளது.

### மணிச்சத்தைத் தரக்கூடிய முக்கிய உரங்கள்:

**சூப்பர் பாஸ்பேட்:**

மணிச்சத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள இயற்கைப் பொருட்களாகிய எலும்புத் தூள், ராக் பாஸ்பேட் முதலியவற்றை விட இப்பொருள் சிறந்ததாக இருந்ததால் இதற்கு சூப்பர் பாஸ்பேட் எனப் பெயரிடப்பட்டது. ஆங்கிலத்தில் சூப்பர் என்றால் சிறந்த, மேலான என்று பொருள்: ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ''லீபிக்'' என்ற வேதியல் நிபுணர் 1840-ஆம் ஆண்டு முதன் முதலாக சூப்பர் பாஸ்பேட் என்ற உரத்தைத் தயாரித்தார். அதன் பிறகு 1842-ஆம் ஆண்டு 'லாஸ்' என்ற விஞ்ஞானி சூப்பர் பாஸ்பேட் என்ற உரத்தைப் பதிவு செய்த பொருளாக்கித் தயாரித்து விற்பனை செய்தார். அதன் மூலம் கிடைத்த ஏராளமான பணத்தைக் கொண்டு, இங்கிலாந்து நாட்டில் ஓர் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்திப் பல அரிய ஆராய்ச்சிகள் செய்து புகழ் பெற்றார். அந்த ஆராய்ச்சி நிலையம் தான் ''ரோத்தாம் ஸ்டேட் ஆராய்ச்சி நிலையம்'' என அழைக்கப்பட்டு இன்றும் உலக வேளாண்மை வேதியல் ஆராய்ச்சியில் முன்னோடியாகத் திகழ்கிறது.

மணிச்சத்து உரங்களில் சிறந்தது சூப்பர் பாஸ்பேட், 16 சதவீதம் மணிச்சத்தை உடையது. இது சற்றுச் சாம்பல் நிறமாகவும், மாவு போன்றும் இருக்கும். சூப்பர் பாஸ்பேட் என்பது தனிப்பட்ட உப்பு அல்ல. பல பொருட்களின் கலவையே சூப்பர் பாஸ்பேட் ஆகும்.

சூப்பர் பாஸ்பேட்டை எப்பொழுதும் அடியுரமாக இடவேண்டும்.

**ராக் பாஸ்பேட்:—**

ராக் பாஸ்பேட் என்பது உலகத்தின் சில பகுதிகளில் நிலத்திற்கடியில் காணப்படுகிறது. இந்தியாவில் உதயபூர், சிங்பூம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் ராக் பாஸ்பேட் காணப்படுகிறது. முப்பது முதல் நாற்பது சதவீதம் மணிச்சத்தை உடையது ராக் பாஸ்பேட். அமில நிலங்களுக்கு இடப்படும் ராக் பாஸ்பேட் நல்ல பயன்களைக் கொடுத்துள்ளது. ஆகவே மற்ற நிலங்களைக் காட்டிலும், அமில நிலத்திற்கு ராக் பாஸ்பேட் சிறந்தது. அதே போன்று அங்கம அல்லது கரிம பொருள் அதிகமாக உள்ள நிலங்களுக்கும் ராக் பாஸ்பேட் சிறந்தது. நிலத்திற்கு இடப்பட்ட ராக் பாஸ்பேட்டிலிருந்து, மணிச்சத்து சிறிய அளவில் பல ஆண்டுகளுக்குக் கிடைப்பதால் முதல் முறை இடும் பொழுது அதிக அளவில் இட வேண்டும். பின் இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இடலாம்.

### சாம்பல்சத்துத் தரக்கூடிய முக்கிய உரங்கள்:—

சாம்பல் சத்தானது ''பயிரினங்களுக்கு உயிரூட்டும் மூலகம்'' என்று அழைக்கப்படுகிறது. இச் சத்தைக் கொடுக்கக் கூடிய முக்கிய உரங்கள் இரண்டு.

**முரியேட் ஆப் பொட்டாஷ்**

இவ்வுரம் 60 சதவீதம் சாம்பல் சத்தைக் கொண்டது. தற்சமயம் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் உரமும் இதுவே. பழச் செடிகளுக்கும், காய்கறிப் பயிர்களுக்கும், மற்றும் புகையிலைப் பயிருக்கும் முரியேட் ஆப் பொட்டாஷ் பயன்படுத்துவதைத் தவிர்த்து, பொட்டாசியம் சல்பேட் பயன்படுத்துவது நல்லது. மூரியேட் ஆப் பொட்டாஷ் பயன்படுத்துவதால், பழங்களின் இனிப்புத்தன்மை குறைந்து விடுகிறது. உருளைக்கிழங்கிலுள்ள நீரில் கரையக்கூடிய மாவுப் பொருள் குறைந்து கிழங்கின் ருசி குறைந்து விடுகிறது. புகையிலை பயிருக்கு இவ்வுரத்தைப் பயன்படுத்தினால், குளோரைடு நச்சுத்தன்மை ஏற்பட்டு விடும்.

**பொட்டாசியம் சல்பேட்:**

இவ் வுரத்தில் சாம்பல் சத்து 48 முதல் 52 சதவீதம் உள்ளது. பழச் செடிகளுக்கும், காய்கறிப் பயிர்களுக்கும், மற்றும் புகையிலைப் ப்பயிருக்கும் இவ்வுரம் மிகவும் ஏற்றது.

**கலப்பு உரங்கள்**

நேரடி உரங்கள் யாவும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பயிருணவுச் சத்தை மட்டும் தான் அளிக்கக் கூடியன. கலப்பு உரங்கள் இரண்டு அல்லது மூன்று பயிருணவுச் சத்துக்களை அளிக்கக் கூடியது.

கலப்பு உரங்கள் இடுவதால், பயிருணவுகளைச் சமசீராகப் பயிர்களுக்கு அளிக்க முடிகிறது. குறிப்பிட்ட மண் வகைகளுக்கும், குறிப்பிட்ட பயிர் வகைகளுக்கும் ஏற்ற கலப்பு உரத்தைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த முடியும். தழைச்சத்து தரக்கூடிய நேரடி உரங்களாகிய யூரியா, அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்களைத் தொடர்ந்து இடுவதன் மூலம் மண்ணில் அமிலத்தன்மை ஏற்படும். கலப்பு உரங்களில் யூரியா அல்லது அம்மோனியம் சல்பேட் சேர்க்கப்படும் பொழுது, அதனால் ஏற்படக்கூடிய அமிலத் தன்மையை நீக்குவதற்குத் தேவையான சுண்ணாம்பையும் கலப்பு உரங்களில் சேர்த்து விடுவதால் நிலத்தில் அமிலத்தன்மை ஏற்பட வாய்ப்பில்லை. சில பயிர்களுக்குத் தேவையான நுண்ணுணவுச் சத்துக்களைக் கலப்பு உரத்தில் சேர்த்து விற்பனை செய்ய முடியும். உதாரணமாக நிலக்கடலைக்கு என்று தயாரிக்கப்படும் கலப்பு உரத்தில் வெண்காரத்தைச் சேர்த்து விற்பனை செய்யலாம். கலப்பு உரங்கள் நேரடி உரங்களைவிட சில விதத்தில் சிறந்ததாக இருப்பினும் கலப்பு உரங்களின் விலை அதிகம். அதாவது கலப்பு உரங்களிலுள்ள பயிருணவுச் சத்துக்களின் விலை, நேரடி உரங்களிலுள்ள பயிருணவு சத்துக்களின் விலையை விட அதிகம்.

**கூட்டு உரங்கள்**

கூட்டு உரங்களும் கலப்பு உரங்களைப் போலவே இரண்டு அல்லது மூன்று பயிருணவுச் சத்துக்களை அளிக்கக் கூடியன. ஆனால் கலப்பு உரம் என்பது, தழைச்சத்து, மணிச்

சத்து, சாம்பல் சத்துத் தரக்கூடிய நேரடி உரங்களைத் தேவையான விகிதத்தில் கலந்து தயாரிக்கப்படுபவை. கலப்பு உரம் என்பது தேவையான, குறிப்பிட்ட நேரடி உரங்களின் கலவையாகும். ஆனால் கூட்டு உரத்தில் நேரடி உரங்களைக் காணமுடியாது. கூட்டு உரம் என்பது பல மூலகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கூட்டுப் பொருளாகும். கூட்டு உரத்திலுள்ள ஒவ்வொரு குருணையிலும்அவ்வுரத்தில் இருக்க வேண்டிய சத்துக்கள் குறிப்பிட்ட அளவுப்படி இருக்கும். நம் நாட்டில் 1960-ஆம் ஆண்டில் தான் முதன் முதலாக அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட் என்ற கூட்டு உரம் தயாரிக்கப்பட்டது. கடந்த பத்து ஆண்டுகளாக, பல்வேறு கூட்டு உரங்கள் நம் நாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. அவையாவன :—

அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட், நைட்ரோ பாஸ்பேட், அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட் நைட்ரேட், அம்மோனியம் நைட்ரேட் பாஸ்பேட், யூரியா அம்மோனியம் பாஸ்பேட், என். பி. கே. காம்ப்ளெக்ஸ்.

நம் நாட்டில் வேளாண்மையில் மிகவும் முன்னேறியுள்ள பஞ்சாப் மாநிலத்தில்கூட, உரங்கள் தேவையான அளவு அளிக்கப்படுவதில்லை. அம் மாநிலத்திற்குத் தேவைப்படும் தழைச்சத்தில் 38 சதவீதமும், மணிச்சத்தில் 20 சதவீதமும், சாம்பல் சத்தில் 13 சதவீதமும்தான் அளிக்கப்படுகின்றன. மற்ற மாநிலங்களில் இடப்படும் பயிருணவுச் சத்துக்களின் அளவு இதை விடக் குறைவானது.

தொடர்ந்து உரங்களை நிலத்திற்கு இடுவதால் நிலம் கெட்டு விடும் என்ற எண்ணம் சில விவசாயிகளுக்கு இருந்து வருகிறது. இதுபற்றி விவசாயிகள் நன்கு தெளிவடைய வேண்டும். மணிச்சத்து, சாம்பல்சத்து அளிக்கக்கூடிய உரங்களை எவ்வளவு அதிகமாக நிலத்திற்கு இட்டாலும் சரி, அல்லது பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அளித்தாலும் சரி; நிலத்தின் தரம் குறைவதில்லை. ஆனால் தழைச்சத்து அளிக்கக்கூடிய உரங்களாகிய அம்மோனியம் சல்பேட், யூரியா போன்ற உரங்களை அதிக அளவிலும் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கும் அளிப்பதன் மூலம் நிலத்தில் அமிலத் தன்மை ஏற்பட்டு நிலத்தின் தரம் சிறிது குறையக் கூடும். அது போன்ற சமயங்களில், மண்ணைப் பரிசோதனை செய்து நிலத்திற்குச் சுண்ணாம்பு இடுவதன் மூலம் அமிலத் தன்மையை மாற்றி நிலத்தின் தரத்தை உயர்த்தலாம். ஆகவே உழவர் பெருமக்கள் உரங்களைத் தொடர்ந்து இடுவதன் மூலம் நிலம் கெட்டு விடும் என்ற அச்சத்திலிருந்து விடுபட்டு, ஏற்ற உரங்களை, த்குந்த அளவில்-குறித்த காலத்தில் பயிருக்கு அளித்து-உணவு உற்பத்திக்கு உறுதுணையாக நிற்பார்களாக!

## 20-ஆம் பக்கத்து வினாவுக்கு விடை



கோயம்புத்தூர் குறிச்சி தொழிற்பேட்டையில் உள்ள 'நல்ல சமாரிடன் மகளிர் பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கம், மகளிர்க்கு அளித்துள்ள வாய்ப்பினால்தான் இந்தப் பெண்கள் நல்வாழ்வு பெற்றிருக்கிறார்கள்.

1968-ல் துவக்கப்பட்ட இந் நிறுவனம் ஆண்டுதோறும் வளர்ச்சியுற்று, தற்போது 36 பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு நல்கியுள்ளது.

இதே தொழிலைத் தனியார் நிறுவனங்கள் இயந்திரங்களைக் கொண்டுதான் செய்கின்றன. இக் கூட்டுறவுச் சங்கம், 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்னும் கருத்தினை அரியணையில் ஏற்ற, இயந்திரத்தின் உதவி இல்லாமல் பெண் தொழிலாளர்களைக் கொண்டு செய்து வருகிறது. இதுபோன்ற நிறுவனங்கள் பெருகினால் தாய்க்குலத்திற்குத் தக்க வகையில் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

ஒவ்வொரு பெண் தொழிலாளியும் நாள் ஒன்றுக்கு ரூ. 3 முதல் 6 வரை சம்பாதித்து வருகின்றார். இந்த ஆண்டு முதல் இந்தப் பெண்களுக்கு 2 செட்டு சீருடைகளும் — 1977-78ஆம் ஆண்டு கிடைத்த இலாபத்தில் 75 சதவீதம் பூரிப்புத் தொகையும் வழங்குவதற்கு முடிவு செய்துள்ள நிர்வாகக் குழு, கிராமப்புற மகளிர்க்கு மென்மேலும் வேலைவாய்ப்பைத் தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.



# நெல்லைத் தரணியில் நல்லதொரு திட்டம்

வளம் கொழிக்கும் பகுதிகள் வறண்ட பாலைவனப் பூமிபோல் ஆகிவிடாமல் இருக்கவும்,மாறாக வறண்டிருக்கும் பூமியை வளம் கொழிக்கும் நிலப்பரப்பாக மாற்றவும் அரசு மேற்கொண்டு செயல்படுத்திவரும் திட்டமே ''காற்று அரிப்புத் தடுப்புத் திட்டம்''.

திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பாக திருச்செந்தூர், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், நான்குநேரி ஆகிய வட்டங்களில் பன்னெடுங்காலமாக வேளாண்மை வளத்திற்குச் சவால்விட்டு வந்த காற்று அரிப்புக் கொடுமையை ஓரிரு மாதங்களிலோ, வருடங்களிலோ நீக்கிவிட முடியாது என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு ''காற்று அரிப்புத் தடுப்புத் திட்டம்'' என்ற நல்லதொரு திட்டத்தினை 1978ல் வேளாண்மைத் துறையின் மூலம் தொடங்கியது. தற்போது அத்திட்டம் சிறப்பான முறையில் செயல்பட்டுவருகின்றது.

### காற்று அரிப்பினால் ஏற்படும் கடும் சேதம்:

நினைத்தாலே நடுக்கம் தரும் வேகம் கொண்டு மணிக்கு 70 கி.மீ. முதல் 100 கி.மீ. வரை பலத்த வேகம் கொண்டு புயல் போலக் காற்று வீசுவதால் மண் அரிப்பு ஏற்படுகிறது. பெரும்பாலும் மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில்தான் இக்காற்று அதிக வேகத்துடன் வீசுகிறது. இவ்வாறு பலமாகக் காற்று வீசுவதால் தாவர வளர்ச்சிக்கு உகந்த உரச்சத்து மிகுந்த மேல்மண் அகற்றப்படுவதுடன், மண்ணில் ஈரச்சத்தும் குறைந்துவிடுகிறது. இது தவிர, காற்றினால் அடித்துச் செல்லப்படும் மண் வேறு ஓர் இடத்தில் குவிக்கப்படுவதால் அந்த நிலங்களில் விளைச்சலும் பாதிக்கப்படுகிறது இவ்வாறு மண் குவிந்திருக்கும் பகுதிகள் 'தேரி' எனப்படுகிறது. எகிப்து நாட்டுப் பிரமிடுகளோ என எண்ணுகின்ற வகையிலே பெரிய தேரிகளை இப்பகுதிகளில் நிறையக் காண முடிகிறது. இம் மாவட்டத்தில் மொத்தம் 10 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பு, காற்று அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது.

### பயிர்களுக்கு அரணாகும் பயிர்கள் :

காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தினால் மண் அரிப்பைத் தடுத்துவிடலாம். எனவே காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்த பாதுகாப்புத் தாவரத் தடையங்

எகிப்து நாட்டுப் பிரமிடுகள்.... அல்ல. காற்று அரிப்பினால் குவிக்கப்பட்ட மண் மேடுகள் (தேரிகள்).








பெண்களுக்கு வேலைவாய்ப்பு - தாவரத் தடையங்களில் பாதுகாப்பாக வளர்க்கப்படும் தாவரங்களுக்குப் பெண்கள் தண்ணீர் ஊற்றுகிறார்கள்.

கள் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. இந்தத் தடையங்கள் காற்று வீசுகின்ற திசையின் நேர் குறுக்காக அமைக்கப்படுகின்றன. இவை 10 மீட்டர் அகலம் கொண்டதும் ஐந்து வரிசையில் பலதரப்பட்ட செடிகளைக் கொண்டதும் ஆகும். இந்த வரிசைகளில் விராலி, உடை, முந்திரி, சவுக்கு, பனை, புளி போன்ற வறட்சித் தன்மையிலும் வளரக் கூடிய உள்ளூர்த் தாவர வகைகள் வளர்க்கப்படுகின்றன.

வறட்சிப் பகுதிகளில் இத்தாவரங்களை வளர்ப்பதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது தண்ணீர். இத்தாவர வகைகள் நன்கு வளர்வதற்குத் தேவைப்படும் தண்ணீர் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள நீர் நிலைகளிலிருந்து ஆண், பெண் தொழிலாளர்கள் மூலம் கொண்டு வரப்பட்டு இத்தாவரங்களுக்கு ஊற்றப்படுகின்றன.

தாவரத் தடையங்கள் வளர்க்கப்படும் வறட்சிப் பகுதிகளில் 75 ஆழ்குழாய்க் கிணறுகளை ஆங்காங்கே அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட் டிருக்கிறது. முதற்கட்டமாக 31.3.79 முடிய ஐந்து ஆழ் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன.

## புதிய பூமி உருவாகிறது

காற்று அரிப்பைத் தடுக்க வல்ல இம்மரங்கள் 10 முதல் 15 ஆண்டுகளில் நன்கு வளர்ந்து காற்றின் வேகத்தைக் கட்டுப் படுத்தும் ஆற்றல் உடையதாகிவிடும். ஆகவே சுமார் 10 முதல் 15 ஆண்டுகளுக்குப் பின் அத் தாவரத் தடையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் காற்றினால் மண் அரிப்போ, மண் குவியலோ ஏற்பட்ட தடையமே இருக்காது. மாறாக, வளங்களை வாரி வழங்கும் மரங்கள் இருக்கும் புதிய பூமியே காணப்படும்!

## மக்கள் திட்டம்

காற்று அரிப்புத் தடுப்புத் திட்டத்தை வேலைவாய்ப்புத் தரும் திட்டம் என்றே சொல்லலாம். அந்த அளவிற்கு, இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் 70 சதவீதம் வேலை வாய்ப்பிற்காகவே செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த இலக்கான 10 ஆயிரம் எக்டேர் பரப்பில் இவ்வாண்டு இரண்டாயிரம் எக்டேர் பரப்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இரண்டு இலட்ச ரூபாய் செலவும் செய்யப்பட்டுள்ளது.

78-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் இந்த ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை ஏழே மாதங்களில் மொத்தம் 17 ஆயிரம் மனித வேலை நாட்கள் (Mandays) நடைபெற்றுள்ளன. இத்திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஆண்தொழிலாளருக்கு நாட்கூலியாக ஐந்து ரூபாயும் பெண் தொழிலாளருக்கு நாட்கூலியாக மூன்றரை ரூபாயும் வழங்கப்படுகிறது.

'காற்று அரிப்புத் தடுப்புத் திட்டம்' செயல்படுத்தப்படும் பகுதிகளைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளதைப் பெருமையாகவே கருதுகிறார்கள். திசையன்விளைக்கு அருகே உள்ள இட்டமொழி என்னும் சிற்றூரைச் சேர்ந்த திரு. ஆதிநாராயணன் என்பவர் ''நாங்கள் வழக்கமாகச் செய்கின்ற பனைமரம் ஏறும் தொழிலை விட இதில் வேலைவாய்ப்பு உறுதியாக இருப்பதால் இத்தொழிலில் நாங்கள் மகிழ்ச்சியோடு ஈடுபடுகிறோம்; மேலும் பனைமரம் ஏறுகிற தொழிலில் ஆண்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு உண்டு. ஆனால் இத்திட்டத்தில் எங்கள் குடும்பப் பெண்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது'' என முக மகிழ்ச்சியோடு கூறுவதைக் கேட்கும் நாமும் அகமகிழ்ச்சியடைகிறோம்.

அதே பகுதியில் உள்ள மற்றொரு சிற்றூரான மாதையன்குளத்தைச் சேர்ந்த திரு.பச்சைமால் என்பவர் தன் குடும்பத்தைச் சேர்ந்த 6 ஆண்களுக்கும், 3 பெண்களுக்கும் ஆக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர்களுக்கு இத்திட்டத்தினால் வேலை வாய்ப்புக் கிடைத்து வருவதாகச் சொல்கிறார். மக்கள் திட்டமே இது என்பதை இவர்களின் கூற்று உறுதி செய்கிறது அல்லவா!

'தாவரத் தடையங்கள்' என்று சொல்லப்படும் மூன்று தாவர வரிசைகள்.
(படத்தில் இடது பக்க ஓரமாக காணப்படுகின்றன)



**இர. அண்ணாத்துரை,**
**மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர்,**
**(செய்தி-மக்கள் தொடர்பு)**
**திருநெல்வேலி மாவட்டம்.**



# எட்டையபுரத்து இரட்டையர்

ஒரே பிரசவத்தில் தோன்றுகின்ற இரண்டு சகோதரக் குழந்தைகளை இரட்டையர் என்று அழைக்கிறோம். சகோதரர்களாக இல்லாவிட்டாலும் கூட- உருவ அமைப்பில் - உயர் திறமையில் ஒருவரைப் போல மற்றொருவர் விளங்கினால் அவர்கள் இருவரையும் இரட்டையர் என்று பெருமைப்படுத்தும் வழக்கம் நம்மிடம் இருந்து வருகிறது.

தமிழ் இலக்கியப் பரப்பில் இருவேறு புலவர்களால் உருவாக்கப் பெற்ற சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று வழங்கப்படுகின்றன.

வெண்பாவையும் கலித்துறையையும் அந்தாதியாய்க் கொண்ட இருபது செய்யுட்களால் முடிவுறும் நூலுக்கு 'இரட்டை மணிமாலை' என்ற பெயரைத் தமிழ் இலக்கணம் சூட்டியிருக்கிறது.

ஆகவே, சென்ற நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் எட்டையபுரத்தில் வாழ்ந்த எட்டப்பபிள்ளை - முத்தம்மாள் தம்பதியரின் மகனான நாவலர் சோமசுந்தர பாரதியாரும், சின்னச்சாமி அய்யர் -லட்சுமி அம்மாள் தம்பதியரின் மகனான கவிஞர் சுப்ரமணிய பாரதியாரும் இரட்டையர் என்று வழங்கப்படுவது நியாயமானதே!

நாவலருக்கும் கவிஞருக்கும் ஏராளமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இருவரும் பிள்ளைப் பருவத்திலிருந்தே நண்பர்கள். 'டேய் சுப்பு' என்று கவிஞரை அழைப்பார் நாவலர்; 'டேய் சோமு' என்று நாவலரை அழைப்பார் கவிஞர். இருவரும் எட்டையபுரத்துப் பள்ளியிலே பயின்றார்கள். எட்டையபுரத்து வீதிகளிலே ஓடி மகிழ்ந்தார்கள்.

ஆங்கிலக் கல்வி கற்பது பெருமையாகக் கருதப்பட்டு வந்த அந்தக் காலத்தில் நாவலரும் கவிஞரும் தமிழைக் கற்பதில் தணியாத ஆர்வம் கொண்டிருந்தார்கள். இருவரின் தந்தையர்களும் சமஸ்தானத்தில் பணிபுரிபுரிந்து வந்தார்கள் என்பது மட்டுமல்ல இருவரும் தங்கள் பிள்ளைகள் தமிழ் கற்பதை ஆதரிக்கவில்லை. எனவே நாவலரும் கவிஞரும் பெற்றோருக்குத், தெரியாத விதத்தில் தமிழ் இலக்கிய நூல்களைப் படிப்பதும்- படித்த நூல்களை வீட்டுக்குக் கொண்டு வருவதற்கு அஞ்சி- சிவன்கோவில் காளை வாகனத்தின் உள்ளே வைத்துவிட்டு வருவதும் வழக்கமான நிகழ்ச்சிகள். கோவிலில் அவ்வப்போது நடைபெறும் இராமாயண விரிவுரையையும் - மகாபாரதச் சொற்பொழிவையும் கேட்பது இருவருக்கும் பிடித்தமான செயல்கள்.

எட்டையபுரத்தில் உயர்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தால் இருவரும் உயர் கல்வி கற்க நெல்லை நகரத்துக்குச் சென்றார்கள். நாவலர் பாரதி, சர்ச் மிஷன் உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பின்னர் அதனுடன் இணைந்திருந்த கல்லூரியில் சேர்ந்து பட்டப் படிப்பு வகுப்பில் பயின்றார். கவிஞர் பாரதி இந்துக் கல்லூரியில் பயின்று- படிப்பு முற்றுப் பெறாமல் வெளி வந்து, பிற்காலத்தில்,

'நெல்லை யூர்சென்றவ்
ஊணர் கலைத்திறன்
நேரு மாறென
எந்தை பணித்தனன்''
என்றும்
''செலவு தந்தைக்கோ
ராயிரஞ் சென்றது
தீதெ னக்குப்பல்
லாயிரஞ் சேர்ந்தன.
நலமொ ரெட்டுணை
யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங்
கோயிலிற் சொல்லுவேன்''
என்றும் கவிதை பாடினார்.



நாவலரும் கவிஞரும் நெல்லையில் கல்வி கற்று வந்த காலத்தில், யாழ்ப்பாணத்தைச் சார்ந்த புலவர் ஒருவர் நெல்லைக்கு வந்திருந்தார். அவரைக் காண்பதற்கு நெல்லையில் உள்ள பல புலவர்கள் அணி திரண்டு சென்றிருந்தனர். அந்தக் கூட்டத்தில் நாவலரும் கவிஞரும் அங்கம் பெற்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்துப் புலவர், தம்மைக் காண வந்திருந்த புலவர்களிடம் அளவளாவியவாறே-ஓர் ஈற்றடியைக் கொடுத்து-செய்யுளை அமைக்கும்படி கூறினார். அங்கு வந்திருந்த புலவர்கள் அனைவரும் முயற்சியில் இறங்கினார்கள். கவிஞரும் நாவலரும் முயன்று சில நிமிடங்களில் பாடல்களை இயற்றி, யாழ்ப்பாணத்துப் புலவரிடம் வழங்கினர். புலவர், அனைவரின் செய்யுட்களையும் படித்துப் பார்த்தார்; கவிஞரின் செய்யுளும் நாவலரின் செய்யுளும் தான் அத்தனை செய்யுட்களிலும் சிறந்தவையாக - மேம்பட்டவையாக விளங்கின. யாழ்ப்பாணப் புலவர் வியப்படைந்தார்; பெரு மகிழ்வும் பெற்றார்! 'நாவலருக்கும் கவிஞருக்கும் கலை மகளின் அருள் பரிபூரணமாகக் கிடைத்திருக்கிறது' என்று அவர் கருதினார்; அந்தக் கருத்தின் விளைவாக - கலைமகளைக் குறிக்கும் 'பாரதி' என்னும் சிறப்புப் பெயரை ஒரே நேரத்தில் இருவருக்கும் சூட்டினார். அன்று முதல் சோமசுந்தரம் சோமசுந்தர பாரதி ஆனார்.

நாவலரும் கவிஞரும் நாட்டுப் பற்று மிக்கவர்களாக விளங்கினார்கள். நாட்டுப் பற்றுடைய நாவலர் மொழிப்போர் வீரராக மாறினார். நாட்டு விடுதலையைக் கண்ணால் பார்த்து அதன் பின் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார். கவிஞர், விடுதலைப் போர் வீரராகவே வாழ்ந்து - விடுதலையை மனக் கண்ணால் 'தரிசித்து' 'ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோம்' என்று பள்ளுப் பாடி விட்டு, விடுதலை கிடைப்பதற்கு முன்பே மறைந்துவிட்டார்.

நாவலர் பாரதி தமது வழக்கறிஞர் பணியை நெல்லையிலே துவக்கினாலும் பிற்காலத்தில் சங்கம் வைத்து மொழிவளர்த்த மதுரைத் திருநகரில் வந்து வாழ்க்கை நடத்தினார். கவிஞர் பாரதியும் தமது தொழிலை முன்னிட்டு, மதுரை நகருக்கு வந்து சிறிது காலம் வாழ்ந்தார்.

கவிஞர் பாரதி, மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சிறிது காலம் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். நாவலர் பாரதி, வழக்கறிஞர் தொழிலை விட்டு விட்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல்லாண்டு தமிழ்த் துறைத் தலைவராகப் பணி புரிந்தார்.

அண்ணல் காந்தியடிகளிடம் இருவருக்கும் அளவில்லாத பற்று உண்டு. இருவரும் அண்ணலைச் சந்தித்து உரையாடியிருக்கின்றனர்.

ஒருமுறை சென்னைக்கு வந்திருந்த காந்தியடிகளைச் சந்தித்து, 'மாலையில் நான் நடத்தும் பொதுக் கூட்டத்திற்கு வர முடியுமா?'' என்று கவிஞர் பாரதி கேட்க - ''ஏற்கெனவே பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஒப்புக் கொண்டு விட்டதால், வர இயலவில்லை'' என்று காந்தியடிகள் கூற - ஏமாற்றத்துடன் திரும்பினார் கவிஞர் பாரதி. ஆனால், நாவலர் பாரதி, சென்னைக்கு வந்திருந்த காந்தியடிகளைச் சந்தித்து, தூத்துக்குடியில் நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கு அழைத்துச் செல்லும் வாய்ப்பைப் பெற்றார்.

சாதியின் பெயர் சொல்லி மக்கள் ஒருவரையொருவர் தாழ்த்திக் கொள்வதை இருவரும் வெறுத்தார்கள். தாழ்த்தப்பட்டோர், நல்வாழ்வு பெற வேண்டும் என்று, இருவரும் துடித்தார்கள்.

அரிசன நண்பர் ஒருவருக்குப் பூணூல் அணிவித்து அவரை வேதியராக்கி மனமகிழ்ந்தார் கவிஞர் பாரதி. மதுரை மாவட்டத்தில் உசிலங்குளம் என்னும் ஊரில் அரிசனங்களுக்குப் பள்ளிக்கூடம் ஒன்றை உருவாக்கி மனமகிழ்ந்தார், நாவலர் பாரதி.

பிறரைப் பாராட்டும் இயல்பு நாவலரிடம் உண்டு;சுப்பிரமணிய பாரதியைப் பாராட்டியிருக்கிறார்; அண்ணல் காந்தியடிகளைப் பாராட்டியிருக்கிறார். சமூகப் புரட்சி செய்த சண்ட மாருதக் கவிஞராம் பாவேந்தர் பாரதிதாசனைப் பாராட்டியிருக்கிறார். சீர்திருத்தத்தை எடுத்துரைத்த தந்தை பெரியாரைப் பாராட்டியிருக்கிறார்; தமது மாணவர்களைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்.

கவிஞர் பாரதியும் பிறரைப் பாராட்டுவதில் பேரின்பம் கண்டிருக்கிறார். ''வாழ்க நீ எம்மான்'' என்று அண்ணல் காந்தியை வாழ்த்திப் பாடியிருக்கிறார். 'எமது பரத நாட்டுப் பெண் பல்லார் வயிற்றினுமந் நவுரோஜி போற் புதல்வர் பிறந்து வாழ்க'' என முழங்கி, தாதாபாய் நவுரோஜியை வாழ்த்தியிருக்கிறார்; ''வாழ்க திலகன் நாமம்! வாழ்க! வாழ்கவே'' என்று பால கங்காதர திலகரைப் பாராட்டியிருக்கிறார்.

கவிதை உலகில் ஒளி வீசிய கவிஞர் பாரதி, உரைநடை எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தார். உரைநடையில் மாபெரும் வெற்றி வீரராக விளங்கிய நாவலர் பாரதி கவிதை எழுதும் திறமையும் கைவரப் பெற்றிருந்தார். கவிஞர் பாரதியின் கவி நடையில் தமிழ்க் கொதிப்புக் காணப்பட்டது. நாவலர் பாரதியின் உரைநடையிலும் அதே கொதிப்பைக் காணமுடியும். நாவலர் பாரதி தமிழை அகலமாக வளர்த்தார். கவிஞர் பாரதி தமிழை ஆழமாக வளர்த்தார். எட்டையபுரத்தைச் சேர்ந்த இந்த இரட்டையரால் தமிழ் வளர்ந்தது - செழித்தது- உலகப் புகழ் அடைந்தது. .

—தமிழ்ப்பித்தன்



நாவலர் சோமசுந்தர பாரதியாரின் நூறாவது பிறந்த நாள் விழா 27.7.79 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் வணக்கத்திற்குரிய மதுரை மாநகராட்சி மேயர் திரு எஸ். முத்து அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல அறிஞர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வேண்டும்போது மட்டும்
குழந்தை பெறவேண்டும்
பிறப்பது பிறக்கட்டும்
என்றிருத்தல் பேதமை

எதிர்பாராத வகையில் மனைவி தாய்மையுற்றால் நீங்கள் போட்டத் திட்டங்கள் யாவும் நடக்காது போகலாம். பிறர் விஷயங்களில் இப்படி நடந்திருக்கிறது. இதே தவறை நீங்களும் செய்ய வேண்டாம்!

**நினைவிருக்கட்டும்!** வெள்ளம் வரும் முன்னே அணைபோட வேண்டும். நடப்பது நடக்கட்டும் என்றிருக்கக் கூடாது.

**நிரோத் உபயோகிக்கவும்**

ஆண்களுக்கானது; மிகவும் எளிதானது; சுலபமாகப் பயன்படுத்தலாம். மருந்துக் கடைகளிலும் குடும்ப நல நிலையங்களிலும் கிடைக்கின்றன.




இன்பமான இல்லற வாழ்வை விரும்பும்
தம்பதிகளுக்கு உதவும் நம்பகமான சாதனம்

davp-79/107

# கலைவாணர் கிருஷ்ணன்

முருகு. சுப்பரமணியன்

"சமீபத்தில் நாகர்கோவில் டென்னிஸ் கிளப்பில் ரஷ்யா போய் வந்ததற்காக எனக்குப் பிரமாதமான வரவேற்பு அளித்தார்கள். அந்தக் கிளப்பில் செல்வர் வீட்டுப் பிள்ளைகள் அனைவரும் மெம்பர்கள். அந்தக் கூட்டத்தில் என்னை அந்தக் கிளப்பின் நிரந்தரத் தலைவராக இருக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். எனக்குச் சிரிப்புப் பொறுக்க முடியவில்லை. ஏனென்றால் அதே டென்னிஸ் கிளப்பில் நான் சிறுவனாயிருக்கும்போது பந்து பொறுக்கிப் போட்டு மாதம் மூன்று ரூபாய் சம்பளம் வாங்கியிருக்கிறேன். இன்று அதே கிளப்புக்கு என்னை நிரந்தரத் தலைவராக வரவேண்டுமென்று கேட்டால் எனக்குப் பெருமைதானே!

"இப்பொழுதுள்ள பிள்ளைகளுக்கு என்னுடைய பழைய கதை தெரியாது. ஆனால், எனக்குச் சம்பளம் கொடுத்த மானேஜர் மட்டும் இன்றும் மானேஜராகவே அங்கு இருக்கிறார். இதை அந்தக் கூட்டத்தில் சொன்னேன். பரம்பரையாகப் பணக்காரனாக இருந்துதான் ஒருவன் முன்னுக்கு வர முடியும், அறிவாளியாக முடியும் என்பது தப்பு. முயற்சி மெய் வருந்தக் கூலிதரும் என்பது ஒருக்காலும் பொய்யல்ல. ஏழை என்ற எண்ணத்தை அகற்றிவிட்டு, விடாது முயற்சித்தால் யாரும் மேல் நிலையடையலாம் என்பது என் கருத்து. என் வாழ்க்கையே இந்த உண்மைக்குச் சரியான சான்று".

—கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களைப் பேட்டி கண்டபோது. அவர் குறிப்பிட்ட செய்திதான் மேலே தந்திருப்பது.

"இந்தத் தேர்தலில் யாருக்கு உங்கள் வாக்கை அளிக்கப்போகிறீர்கள்?"

"பெயரைக் கேட்கிறீர்களா?'

"இல்லை.....குறிப்பாக"

**ஆகஸ்டு 30 கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்களின் நினைவு நாள். சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்த அப்பெருமகனாரை நினைவுகூரும் வகையில் 'பொன்னி' ஆசிரியர், திரு முருகு சுப்பிரமணியன் 'பொன்னி' பொங்கல் மலரில் (1952) எழுதிய பேட்டிக் கட்டுரையின் சில பகுதிகளை இங்கே வெளியிடுகிறோம்.**

பேட்டி தொடர்ந்தது.

"ரொம்ப எக்கச் சக்கமான கேள்வி. இந்தக் கேள்விக்கு நான் இப்பொழுது பதில் சொல்ல முடியாது, சொல்லக்கூடாது"

"தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளில் உங்களுக்குப் பிடித்தமான கட்சி எது?"

"இந்தக் கேள்விக்கும் நான் பதில் சொல்லக்கூடாது. இருந்தாலும் பரவாயில்லை. சந்தேக



காலப்போக்கில் இந்தப் பகுதி கடலால் அழிந்து போயிருக்கிறது என்று ஆசிரியர் எர்னல்டு ஹெக்கல், ஸ்காட் எலியட், விஷர், எஸ்கார்வே, ஹெய்க்கல், சர் ஜான் ஈவன்ஸ், டபிள்யூ டபிள்யூ ஹண்டார், எட்வர்டு லான்சர் முதலிய வரலாற்று நூல் அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியில் கண்ட உண்மையை உலகுக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

'ஹிஸ்டரி ஆப் கிரியேஷன்' 'லாஸ்ட் லெமூரியா ஏ ஸ்டார்ட்லிங் புக்', 'ஆர்க்கியலாஜிகல் பைண்டிங் அண்டர் இண்டியன் ஓஷன்', 'ஹிஸ்டரி ஆப் இந்தியா' முதலிய நூல்களில் தமிழகத்தின் தொன்மையை மேலும் காணலாம்.



தென் இந்தியாவில் இருந்த மக்கள் தான் கடல் கடந்து தெற்கு ஐரோப்பா முதலியநாடுகளில் குடியேறி வாழத்தொடங்கி இருக்கிறார்கள். மெசபடோமியாவுக்கு மேற்கேயும் சென்று பிரிட்டிஷ் தீவுகளில் வாழத் தொடங்கியவர்களும் தென் இந்திய மக்களே என்று ஈராஸ் பாதிரியார் கருதுகிறார்.

பேராசிரியர் ரலே என்னும் வரலாற்றுப் பேரறிஞர் தமது 'உலக வரலாறு' என்ற நூலில் ''உலகிலேயே மனித வர்க்கம் தோன்றிய பூமி தென் இந்தியா தான்' என்று பல ஆதாரங்களுடன் மிக விரிவாக விளக்கி உள்ளார்.

பேராசிரியர் தோபிநார்டு என்ற ஆராய்ச்சியாளர் ''சௌத் இந்தியா'' என்ற தமது வரலாற்று ஆய்வு நூலில் 'உலக நிலப்பரப்பில் மிகப் பழமையானது, மூத்தது தென் இந்தியா தான்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

சர் ஜான் எட்வான்ஸ் என்னும் பேரறிஞர் தமது ''ஆர்ஜின் ஆப் மேன்'' என்ற நூலில் 'மனிதன் முதன் முதலில் தோன்றிய பூமியே தென் இந்தியாதான்' என்று தக்க சான்றுகளுடன் விளக்கமாகக் கூறி இருக்கிறார்.

இந்தத் தொன்மையான நிலப் பரப்பில் கடலால் அழிந்தது போக மீதி இருப்பதுதான் இப்போது நாம் வாழும் தமிழ்நாடு நமது தமிழ்நாட்டின் தொன்மையை எந்தக் கால அளவு கொண்டு கூறுவது? அது நாம் அறிந்திருக்கும் சரித்திரக் காலத்தையும் கடந்து நிற்பது. உலகம் பார்த்து வியக்கும் அளவிற்குத் தொன்மை வாய்ந்த தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் நாம் என்ற உண்மையைத் தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் உணரும்படி செய்ய வேண்டும்.

## தமிழர் பண்பாடு

பிற உயிர்களின் உணர்வை மதித்து அவைகளுக்கு உதவி புரிவதுதான் வாழும் முறை என்ற இலட்சியத்துடன் பழந்தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வாழ்க்கை முறைதான் தமிழ் மக்களின் செல்வமாக இருந்தது. இதுதான் தமிழ்ப் பண்பாடு. இந்தப் பண்பாட்டைப் பற்றித் தமிழ் இலக்கியங்களும் விரிவாகக் கூறுகின்றன.

சங்க இலக்கியங்களும் பழந் தமிழ் இலக்கணங்களும் இந்த நாகரிக வாழ்வைக் கவிதைகளாகவும் காட்சிகளாகவும் அற்புதமாக வடித்துக் காட்டுகின்றன.

தமிழ்நாட்டின் தென் பகுதியை ஆண்டு வந்தான் பாண்டியன். அவன் நாட்டின் பெரும் பகுதியைக் கடல் கொண்டு விட்டது. இதைக் கண்டு பாண்டிய மன்னன் சோர்ந்து போகவில்லை. தன் மக்களுக்கு உதவ முன்வந்து வடக்கே இருந்த சேர, சோழ நாடுகளின் நிலங்களின் சில பகுதிகளைத் தன் நாட்டுடன் சேர்த்துப் பாண்டிய நாட்டை விரிவுபடுத்தினான்.

இதனால் அப்பாண்டிய மன்னனுக்கு 'நிலம்தரு திருவின் நெடியோன்' என்ற புகழ்ப் பெயரும் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சியை ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கலித்தொகை 'மலிதிரை ஊர்ந்து தன் மண் கடல் வவ்வலின், மெலிவு இன்றி மேற்சென்று, மேவார் நாடு இடம்பட, புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர் கெண்டை' என்று குறிப்பிடுகிறது.

இவைகள் எல்லாம் பழந்தமிழர்களின் மன உறுதியையும், ஆண்மையினையும் விளக்கிக் காட்டுகின்றன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வாழ்ந்தவன் தமிழன். பழந்தமிழரின் பண்பாடுதான் உலகப் பண்பாடாக வளர்ந்திருக்கிறது.

## தமிழர் ஆட்சித் திறமை

இந்த நாளில் செஞ்சிலுவைச் சங்கம், போரில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பு வீரர்களுக்கு உதவி புரிவது போல், அந்த நாள் தமிழ் மன்னர்கள் போரிடும் இருதரப்பு வீரர்களுக்கும் நடுநிலை தவறாமல் உதவிப் பணி புரிந்திருக்கிறார்கள்.

''ஈரைம்ப தின்மரும்
பொருதுகளத்து ஒழிய
பெரும்சோற்று மிகுபதம்
வரையாது கொடுத்தோய்!''

என்று தமிழ் மன்னர்களின் பெருமையைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார் முரஞ்சியூர் முடிநாக அரையர்.

பாரதப்போரில் ஈடுபட்ட இருதரப்புப் போர் வீரர்களுக்கும் தமிழ்மன்னன் சோறும், மருந்து முதலிய உதவிகளையும் செய்து அவர்கள் துன்பங்களைத் துடைத்திருக்கிறான். இவ்வாறு தமிழ் மன்னன் தொண்டாற்றுவதற்குப் பாரதப் போரில் ஈடுபட்ட இருதரப்பு மன்னர்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தால்தான் முடியும். அத்துடன் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த நாளில் தமிழகத்தின் எல்லை பாரதப்போர் நடைபெற்ற குருட்சேத்திரம் வரை பரவி இருந்தது என்று எண்ணுவதற்கும் இந்த நிகழ்ச்சி இடம் தருகிறது.

குஜராத்திற்கு அப்பாலும் தமிழகம் பரவியிருந்தது என்று பேராசிரியர் ஔவை துரைசாமி அவர்கள் குஜராத் மாநிலத்தில் கிடைத்த கல்வெட்டுகளில் இருந்து நில உரிமை ஆதாரம் காட்டி நிறுவி இருக்கிறார்.

அரசர்களில் பகை அரசர், நட்பு அரசர், நொதுமல் அரசர், நடுநிலை அரசர் என நான்கு வகையினர் உண்டு.

பாரதப் போரில் சோறும், மருத்துவ உதவிகளும் அளித்த உதியஞ்சேரலாதன் என்ற தமிழ் மன்னன் ,நடுநிலை அரசனாக இந்தியா முழுவதும் செல்வாக்குப் பெற்றிருந்தான் என்பதைத் தான் மேற்குறித்த நிகழ்ச்சி நமக்கு நினைவூட்டுகிறது.



## தமிழன் கண்ட வானநூல்

தமிழ் மக்கள் வான ஆராய்ச்சியிலும் வல்லுநர்களாக இருந்திருக்கிறார்கள்.

சூரியனின் இயக்கத்தையும், அது செல்லும் பாதையையும் அந்தப் பாதையைச் சூழ்ந்த நட்சத்திரங்களையும், காற்று வீசுகின்ற திசையையும், உடம்பு நிலைத்திருக்காமல் அழிந்து கொண்டிருப்பதற்குரிய காரணத்தையும் தெளிவாக அளந்து அறிந்தவர்கள் போல எந்தச் சமயத்திலும் அவற்றின் தன்மைகளை விளக்கும் ஆற்றல் உள்ளவர்களாகத் தமிழ் மக்கள் இருந்திருக்கிறார்கள்.

''செஞ்ஞா யிற்றுச்
செலவும், அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச்
சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தருதிசையும்
வரிது நிலைஇய
காயமும் என்றிவை
சென்றனர் அறிந்தோர்
போல என்றும்
இனைத்து என்போரும்
உளரே

என்று தமிழ் மக்களின் பரந்த வான ஆராய்ச்சித் திறனை விவரிக்கிறது இந்தப் புறப்பாட்டு.

பழந்தமிழர்கள் வான சாத்திரத்தை நன்கு ஆராய்ந்து காலக் கணக்கை வகுக்கும் திறன் பெற்றிருந்தார்கள். எப்படியோ இந்தத் திறமைகள் மறைந்துபோய்க் கொண்டே வருகின்றன.

வான சாத்திரப்படி காலக் கணக்கை நிர்ணயித்துப் பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. அதையே இன்றும் பின்பற்றி வருகிறோம். அதனால் பல தவறுகள் ஏற்பட்டு வருகின்றன. திருத்தப்படாத அந்தக் காலக் கணக்குப்படியே பஞ்சாங்கங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதை உடனே மாற்றி அமைக்க வேண்டும் என்று பேராசிரியர் கே. சீனிவாசராகவன் போன்ற வானநூல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

வானநூல் அறிஞர்கள் நமது பஞ்சாங்கத்தில் இருக்கும் தவறுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்போது, தை மாதப் பிறப்பு, ஜனவரி மாதம் 14, அல்லது 15ஆம் தேதியில் வருகிறது. இந்த நாளை உத்தராயணத்தின் ஆரம்பம் என்கிறோம். இது தவறு. மார்கழி மாதம் ஏழாம் நாள், டிசம்பர் மாதம் 22ஆம் தேதி, கிறிஸ்துமஸ் விழாவுக்கு முன்னதாகவே உத்தராயணம் தொடங்கி வருகிறது. அப்போதே சூரியன் தனது தெற்கு எல்லையில் இருந்து வடக்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்து விடுகிறான்.



ஒரு காலத்தில் வானவீதியில் சூரியன் வடக்கு எல்லையில் வைகாசி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் இருந்ததாக வேதத்தின் மூலமாக அறிகிறோம். அப்போது உத்தராயணம் மாசி மாதத்தில் பிறந்திருக்கும். ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் சூரியன் வானவீதியில் வடக்கு எல்லையில் சித்திரை மாத ஆரம்பத்தில் அசுவினி நட்சத்திரத்தில் இருந்தான். அப்போது உத்தராயணம் தைமாதப் பிறப்பன்று தொடங்கிற்று. அதற்குப் பிறகு வானசாத்திரிகள் காலக் கணக்கைச் சரியாக்க் கணித்து வெளியிடத் தவறிவிட்டார்கள்.

இதனால் உத்தராயணம், தட்சணாயணம் ஆகிய இரண்டு அயணங்களும் ஒவ்வொரு வருஷமும் 20 நிமிடங்கள் முந்தியே ஏற்பட்டு வந்தன. எழுபத்து இரண்டு வருஷங்களில் இந்த இரண்டு அயணங்களும் இருபத்து நான்குமணி-ஒரு முழுநாள் முந்தியே வரத் தொடங்கிவிட்டன

பஞ்சாங்கத்தில் இந்தத் தவறு ஏற்பட்டு, அது திருத்தப்படாமலே அநேக நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இதனால் உத்தராயணம் தட்சணாயணம் முதலிய புண்ணிய காலங்கள் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருப்பதற்கு 23 நாட்கள் முன்னதாகவே வந்துவிடுகின்றன. நாம் இந்த உண்மையை அறியாமையினால் அந்தப் புண்ணிய காலங்களை 23 நாட்களுக்குப் பிறகு கொண்டாடி வருகிறோம்.

இப்போது தமிழ்நாட்டில் இருபது வகையான பஞ்சாங்கங்கள் வெளிவருகின்றன. ஒவ்வொரு மதத் தலைவரும் ஒரு பஞ்சாங்கத்தை ஆதரித்து வருகிறார்கள். இவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இருக்கின்றன. இது சமுதாய வாழ்வுக்கு நல்லது அல்ல. தனிப்பட்டவர்கள் பஞ்சாங்கம் வெளிடுவதை உடனே தடைப்படுத்தி, மத்திய அரசின் வானவெளி ஆராய்ச்சிக் கேந்திரம் வெளியிடும் பஞ்சாங்கத்தைத்தான் நாடு முழுவதும் பின்பற்ற வேண்டுமென்று ஒரு சட்டமே இயற்ற வேண்டும்.

## வானசாத்திரம் காட்டும் வரலாற்று உண்மை!

இன்று விண்வெளி விஞ்ஞானம் வேகமாக வளர்ந்திருக்கிறது. விண்வெளி ஆராய்ச்சிக்கு வேண்டிய நவீன வசதிகள் கொண்ட விஞ்ஞானக் கூடங்கள் ஆங்காங்கே ஏற்பட்டிருக்கின்றன.

மில்லாமல் நான் ஆதரிப்பது, விரும்புவது திராவிடக் கட்சி தான்.''

''காங்கிரஸ் கூட்டங்களுக்கும் தாங்கள் செல்வதாகத் தெரிகிறதே! விளக்கம் தருவீர்களா?''

''முரண்பாடுதான்! என்றாலும் என்னுடைய நடுநிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் ஒரு கட்சிக்கே ஆளாகி விட்டால் மற்ற கட்சியிலுள்ளவர்கள் நான் சொல்வது என்னவென்றே கவனிக்கமாட்டார்கள். யாரையும் நான் இழக்க விரும்பவில்லை. எனவேதான் எல்லாக் கட்சிகளின் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் கலந்துகொண்டு எனக்கு இட்ட பணியை மட்டும் நிறைவேற்றி வருகிறேன். இத்தகைய பொது நிலையை எல்லாத் தலைவர்களும் வரவேற்கிறார்கள். மற்றொன்று... எனக்கென்று தனிக்கொள்கை உண்டு. எந்தக் கட்சிக் கொள்கையும் எனக்குப் பூரணமாகப் பிடிப்பதில்லை''

''உங்கள் கொள்கை என்ன?''

''ஆதிமுதல் 'குடியரசு'', பாவலர் நடத்திய 'தேசபந்து' இரண்டு பத்திரிகைகளையும் நான் படித்து வந்தேன். அப்போது நான் சிறுவன்; நாடகக் கம்பெனியில் வேலை. பக்தி மார்க்கத்திற்கும் நாஸ்திகத்திற்கும் உள்ள வேறுபாடுகளை நான் அப்போது நன்றாகத் தெரிந்து கொண்டேன். படித்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தேன்''.

''உங்கள் முடிவு என்ன?''

''சுயமரியாதைக் கொள்கை நம் நாட்டுக்குத் தேவை என்பது தான் அந்த முடிவு''

''அதே நேரம் 'காந்திபக்தன்' என்றும் சொல்கிறீர்களே..?''

''ஆம். நான் காந்தி பக்தன் தான்! கடந்த 33 வருஷமாகக் கதர் கட்டுகிறேன். காந்தியாரின் தொண்டுகளை நான் மிகவும் போற்றுகிறேன். இந்தியாவைக் காப்பாற்றக் காந்தியமும், தமிழ் நாட்டைக் காக்கச் சுயமரியாதையும் வேண்டும். என் கதை ஒவ்வொன்றிலும் இதே அடிப்படை தான்! இந்தக் கொள்கையிலிருந்து நான் சிறிதும் மாறவில்லை. அன்று முதல் இன்றுவரை அதே கொள்கைதான்!''

''தங்கள் ரஷ்யப் பயணம் பற்றிச் சுருக்கமான விளக்கம்''

''என் வாழ்நாளில் ரஷ்யா போய் வந்தது என் பாக்கியமென்றே சொல்லுவேன். காலேஜ் புரொபசருக்கும் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவனுக்கும் உள்ள வித்தியாசம் தான் நம் நாட்டிற்கும் ரஷ்யாவிற்கும் உள்ள வித்தியாசம். நாம் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டும்.''

''தாங்கள் இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறீர்கள்?''

''92 படங்களில் நடித்திருக்கிறேன். 93-வது படம் 'அமரகவி' படப்பிடிப்பு நடக்கிறது''.

''தாங்கள் நடித்த முதல் படம்?''

''சதிலீலாவதி'' -முதல் படமென்றாலும் அந்தப் படத்திற்கும் என் சம்பந்தப்பட்டவரையில் கதை, டைரக்ஷன், சீனரியோ எல்லாம் சாட்சாத் நான்தான்!''

'' இதற்குக் காரணம் அனுபவமா?''

''இல்லை. அசாத்தியமான தைரியம். மற்றவர்களெல்லாம் மைக்கைக் கண்டால் மிரளுவார்கள். 'சவுண்டு எப்படிப் பதிவாகுமோ? ' -'உரத்துப் பேசினால் என்ன?' இப்படி அடியெடுக்கும் போது ஆயிரம் சந்தேகப்பட்டுக் கொண்டு நடிப்பார்கள். நான தனி-என் விருப்பப்படி சரியோ, தவறோ செயலில் காட்டிவிடுவேன்''

''தங்கள் வெற்றிக்கு இது மட்டும் தான் காரணமா?''

''இன்னும் எத்தனையோ காரணங்கள் உண்டு. எனக்குப் பேர் வேணும், புகழ் வேணும், பணம் வேணும் என்ற ஆசை இல்லை. பேர், புகழ், பணம் எல்லாம் சேர்ந்து வரவேண்டுமென்கிற பேராசையுமில்லை. தப்பிதம் செய்கிறோமோ என்ற அச்சமும் இல்லை. அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று ஒன்றும் செய்யாமல் மனக்கோட்டை கட்டுகிற வழக்கமுமில்லை. மேலும் இதுவரை என்ன சாதித்திருக்கிறோம் என்று கணக்குப் பார்ப்பதுமில்லை.

''உதாரணம் ஒன்று கேளுங்கள். மேட்டூர் அணைக்கட்டில் ஒரு புறத்தில் மேலே ஏறுவதற்கு உயரமான இரும்பு ஏணிப்படிகள் வரிசை வரிசையாக இருக்கின்றன. அதில் ஒருவன் ஏறுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். பாதி வரை ஏறிவிட்டுத் திரும்பி 'நாம் எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம்?'' என்று அவன் கீழே பார்த்தால் கண்டிப்பாக அவனால் மேலே ஒரு படிகூட ஏற முடியாது. இறங்க வேண்டியது தான். இது மாதிரிதான் வாழ்க்கையிலும்! என்ன நடந்தது என்று பார்க்க ஆரம்பித்துவிட்டால் ஒருக்காலும் முன்னேறமுடியாது.''

''தாங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?''

''ஐந்தாவது வகுப்புவரையில் மலையாளம் படித்திருக்கிறேன். மேலும் படிக்கப் பணம் இல்லை. வழியுமில்லை. நிறுத்திவிட்டேன். கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது என்னைப் பொறுத்த வரையில் நூற்றுக்கு நூறு உண்மை''

கலைவாணருக்கு இருமல் தொந்தரவு அதிகமாகவே பேட்டியை அரைகுறையாகவே முடித்துக் கொண்டோம். மிகக் குறைந்த நேரமே அவர்களோடு நாங்கள் பேசியிருப்பினும், அவர்கள் தம் மன இயல்பை நாங்கள் நன்கு உணர முடிந்தது. ஏழைக்கு இரங்கும் பண்பு கலைவாணரின் உயிர்நாடியான குணம் என்பதைத் தெரிந்து கொண்டோம்.

'தமிழ்ப் பெரியார்கள்' என்று மறைந்த அறிஞர் வ.ரா. ஒரு நூல் எழுதியிருக்கிறார். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களையும் அப்பெரியார்களுள் ஒருவராகக் காட்டி விளக்கம் தந்திருக்கிறார்.

என்.எஸ்.கே. சினிமா நடிகர் மட்டுமல்ல; அத்துறையில், பல ஆண்டுகள் தொடர்ந்து புகழ் மங்காமல் மக்கள் ஆதரவைப் பெற்று வரும் பெருமை மட்டுமல்ல அவரைச் சேர்ந்திருப்பது, தமிழர் பொது வாழ்விலேயே குறிப்பிடத்தக்க 'பெரியவராகக்' கலைவாணர் இடம் பெற்றுவிட்டதை யாரும் மறுக்க முடியாது.

எக்கருத்தைப் பற்றியும் அவர் கருத்தை யறியவும், எந்தப் பொது நிகழ்ச்சியிலும் அவருக்குப் பங்கு தரவும் தமிழகம் விரும்புகிறது. பெருந்திரளான கூட்டம் அவரைக் காணக் கூடுவதும் இயற்கையாகி விட்டது. அவர் நடிப்பில், சொல்லில், பாட்டில் நகைச் சுவையைக் கண்டு உளம் மகிழும் தமிழ்மக்கள் பல்லாயிரவர்!

சினிமாத் துறையில் சீர்திருத்தத்தை விளைத்து, பலத்த எதிர்ப்பினிடையேவெற்றிகண்டு, எதிர்ப்புக்குமேல் நிற்கிறார் என்.எஸ்.கே; காலட்சேபம், வில்லுப் பாட்டு முதலிய நிகழ்ச்சிகளிலும் புதுமை நடமிடச் செய்தவர் அவர்தான்! தமிழகத்தில் நாம் காணும் மறுமலர்ச்சிக்கும் சீர்திருத்த ஆர்வத்திற்கும் கலைவாணர் ஓரளவுக்குக் காரணமென்பதை யாரும் ஒப்புக்கொள்ளத்தான் செய்வர். சிரிக்க வைத்து மக்களைச் சிந்திக்க வைக்கும் கலைவாணரும் மதுரம் அம்மையாரும் தமிழகத்திற்குத் தங்கள் கலைப்பணியின் மூலம் மேலும் பல புதுமைகளை வழங்குவார்களென எதிர்பார்ப்போமாக!

**—1952 பொன்னி பொங்கல் மலரிலிருந்து]**





# தமிழரின் தொன்மைப் பெருமைகள்

இப்போது நம்முடைய தமிழ் நாடு பதினான்கு மாவட்ட அளவில் சுருங்கிக் கிடக்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாடு, கேரள நாட்டையும், ஆந்திர நாட்டின் பெரும் பகுதியையும் கொண்டிருந்தது.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தொல்காப்பியத்துக்குப் பாயிரம் பாடிய சங்ககாலப் பெரும்புலவர் பனம்பாரனார், ''வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து'' என்று தமிழ்நாட்டின் எல்லை, வடக்கே வேங்கடமலை வரை விரிந்து கிடந்ததாகக் குறிக்கிறார்.

அவர் காலத்துக்கும் முன்னால் தமிழ்நாட்டின் வடக்கு எல்லை, விந்தியம் வரை விரிந்து இருந்தது என்றும் அதற்கு அப்பாலும் பரவி இருந்தது என்றும் வரலாற்றுப் பேரறிஞர்களும் ஆட்வாளர்களும் கூறுகிறார்கள். ''வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்'' என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

தமிழ்நாட்டின் தெற்கு எல்லையாக இன்று இருக்கும் குமரி இப்போது ஒரு முனையாக இருக்கிறது. பழந்தமிழ் நூல்களில் இது ஓர் ஆற்றின் பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆற்றிற்குத் தெற்கே 'பஃறுளி' என்ற பெயருடைய ஒரு பெருநதியும் ஓடியது எனப் பழைய நூல்கள் கூறுகின்றன.

''தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்'' என்றும் ''நெடியோன் நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே ''என்றும் சங்கப் பாடல்களில் காணக்கிடக்கின்றன. ''பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'' என்று சிலப்பதிகாரமும் கூறுகிறது.

இந்த ஆறுகளால் வளம்பெற்ற செழிப்பான பெரிய நிலப்பரப்பே



**காந்தியச் செல்வர்**

**திரு. நா. மகாலிங்கம்**

பழந்தமிழ் நாட்டின் தெற்குப் பகுதி. இப்பகுதி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடலால் கொள்ளப்பட்டது. இப்போதுள்ள 'இந்துமாக்கடல்' என்னும் நீர்ப்பரப்பு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிலப்பரப்பாக இருந்தது.

இந்த நிலப்பரப்புதான் தமிழ் நூல்களில் வரும் குமரி நாடு, பழந்தமிழ் நாட்டின் தென்பகுதி. இதையே லெமூரியாக் கண்டம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டின் வரலாறு :**

பழந்தமிழ் நாட்டில், இந்தப் பகுதியிலிருந்துதான் மக்கள் முதல் முதலில் தோன்றி உலகம் முழுவதும் சென்றிருக்கிறார்கள்.

சுமேரியா பாபிலோனியா, எகிப்து முதலிய இடங்களில் சென்று குடியேறியவர்கள் பழந்தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழர்கள். இந்த நாடுகளில் பேசப்படும் மொழிகளில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றன. இந்த நாடுகளில் உள்ள ஊர்கள் பலவற்றுக்குத் தமிழ்ப் பெயர்களே நிலவுகின்றன.

எகிப்தியர்கள் தங்கள் தாய் நாடு பாண்டிய நாடு என்று தங்கள் வரலாற்று நூலில் எழுதி வைத்திருக்கிறார்கள். சுமேரியர்கள் தங்கள் தாய்நாடு சோழநாடு என்று தங்கள் சரித்திர நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முப்பத்திரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகள்வரை பழந்தமிழ் நாட்டின் தென்பகுதியான குமரி நாட்டை ஆண்ட அரசர்கள் பட்டியல், அங்கிருந்து தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கங்களின் பட்டியல், அங்கு நடைபெற்ற சமுதாய நிகழ்ச்சிகளின் பட்டியல் முதலியவற்றையும் ''இராஜாவளி'', 'மகாவம்சம்' என்ற சிங்கள நாட்டு வரலாற்று நூல்களில் விரிவாகக் காணலாம்..



மனிதன் சந்திரனுக்கும், செவ்வாய்க்கும்கூடச் செல்கிறான்.

விஞ்ஞான வசதிகள் இல்லாத அந்த நாளிலேயே தமிழன் வான வெளி ஆராய்ச்சியில் வல்லுனனாக இருந்தான். **அன்று அவன் கண்ட வான ஆராய்ச்சியின் அடிப்படையில்தான் இன்று விண்வெளி விஞ்ஞானம் விரிவடைந்து கொண்டிருக்கிறது.**

சூரியன் பரணி நட்சத்திரத்திலிருந்து மீண்டும் பரணி நட்சத்திரத்துக்கு வந்து சேருவதற்கு 27,000 ஆண்டுகள் ஆகும் என்று அன்றைய வான சாத்திர நிபுணர்கள் கணக்கிட்டிருந்தார்கள்.

வானத்தில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களை 27 நட்சத்திர மண்டலங்களாகப் பிரித்துக்கொண்டு ஒரு நட்சத்திர மண்டலத்திலிருந்து இன்னொரு நட்சத்திர மண்டலத்துக்குச் சூரியன் நகர்வதற்கு 1000 ஆண்டுகள் ஆகின்றன என்று துல்லியமாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

இந்தக் கணக்கைக் கண்டு பிடித்த வானசாத்திரிகள் வைவஸ்வத மனு அரசவையில் அமைச்சர்களாக இருந்தவர்கள். இவர் காலம் கி.மு. 8756 என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். சேக்கிழார் இவரைத் தொன்மனு என்று சிறப்பித்துப் பாடுகிறார்.

வானசாத்திரத்தின் இன்றைய நவீன விஞ்ஞான வசதிகளைக் கொண்டு ஆராயும்போது நமக்கு பல வரலாறறு உண்மைகள் தெரியவருகின்றன. ராமனும், கிருஷ்ணனும் இதிகாச-கற்பனை நாயகர்கள் அல்லர். இந்த நாட்டை ஆண்ட மன்னர்களில் மிக முக்கியமானவர்கள் என்பதையும் அறிய முடிகிறது. ராமர், கிருஷ்ணர் ஆகிய மன்னர்களின் காலத்தையும் கண்டு பிடிக்க முடிகிறது. கி.மு. 4400ஆம் ஆண்டில் ராமர் பிறந்திருக்கிறார். கி.மு. 3200 ஆம் ஆண்டில் கிருஷ்ணர் பிறந்திருக்கிறார். கி.மு. 1500 ஆம ஆண்டில் ஆதிசங்கரர் பிறந்திருக்கிறார் என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இதை எப்படித் தெரிந்து கொள்ள முடிகிறது? ராமாயணத்திலும், மகாபாரதத்திலும் ஆதிசங்கரர் வரலாற்று நூலிலும் அவர்கள் பிறந்தபோது சூரியன் எந்த நட்சத்திரத்தில் எந்தப் பாதத்தில் இருந்தான் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை வைத்து வான சாத்திரக் கணக்கைக் கொண்டு ஆராய்ந்தால் ராமர், கிருஷ்ணர் ஆதிசங்கரர் தோன்றிய காலத்தைத் திருத்தமாகக் கணக்கிட்டுக் காணமுடிகிறது.

ராமனும், கிருஷ்ணனும் ஆண்ட காலத்தில் அவர்கள், வழிபட்ட கடவுளாக சிவபெருமான் இருந்திருக்கிறார். காலத்தால் ராமனும, கிருஷ்ணனும் கடவுளானது போல ராமனும், கிருஷ்ணனும வாழ்ந்த காலத்தில் அவருக்கு முன் சக்கரவர்த்தியாக இருந்த சிவ்ன், சிவபெருமானாக வழிபடப்பட்டிருக்கிறார்.

வீர சைவம் சிவனை ஒரு சித்தர் ஏன்றே சொல்லுகிறது. சிவன் உண்டாக்கிய யோகத் துறைக்கு 'சிவயோகம்' என்றே பெயர். இது ஞானயோகத்தில் ஒரு முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது. சிவன் ஞானசித்தனாக இருந்துடன் மன்னராகவும் இருநதிருக்க வேண்டும். சக்கரவர்த்தி தட்சன் மகளைச் சிவன் திருமணம் புரிந்து கொண்டதிலிருந்து இதை உணரமுடிகிறது என்று வீரசைவ ஞானிகள் கருதுகிறார்கள். சிவன், சக்கரவர்த்தி தட்சன் மகளைத் திருமணம் செய்து கொண்ட காலத்தில் சூரியன் இந்த நட்சத்திரத்தில்-இந்த பாதத்தில் இருந்தான் என்று சமஸ்கிருத சிவபுராணத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆதைக் கொண்டு சிவன் திருமணம செய்து கொண்டது, கி.மு. 17000 ஆம் ஆண்டில் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.



மொகஞ்சோதாரோவில் கண்டு பிடிக்கப்பட்ட எழுத்துக்கள்

நம் நாட்டில் சிவ வழிபாடு இருப்பது போலவே உலகின் பல பகுதிகளிலும் சிவ வழிபாடு இருந்திருக்கிறது என்பதை ஆராய்சசியாளர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தென் இந்தியாவில் இருந்த அறிஞர்கள் உலகம் முழுவதும் சென்றிருக்கிறார்கள். அவர்கள் சென்ற நாடுகளில் தங்கள் சிவ வழிபாட்டைப் பரப்பியிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அவ்வாறு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்ற நமது அறிஞர்களின் சந்ததியினர் கி.மு. 2500ஆம் ஆண்டு அளவில் மீண்டும் தமது தாய் நாட்டுக்குத் திரும்பினார்கள். இவர்கள் எல்லாம் நம் நாட்டின் வழித்தோன்றல்களே தவிர அவர்களை வேறு நாட்டினர் என்றும், வேறு பண்பாட்டை உடையவர்கள் என்றும் கூறுவது பிழையாகும். இது நமது நாட்டின் வரலாற்றையும் பாரமபரியத்தையும புரிந்து கொள்ளாதவர்கள் பேசும் பேச்சாகும்.

வேறு நாடுகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்திருந்த நம் முன்னோர்களின் சந்ததியினர் மீண்டும் இந்தியாவிற்கு வந்தபோது அவர்கள் எந்த மொழியைப் பேசினார்கள், எப்படி எழுதினார்கள் என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.



அவர்கள் எழுதிவந்த எழுத்துக்களாய் இருக்கலாம. குஜராத்தில் பௌத்த மடாலயங்களின் அகழ் ஆராய்ச்சியில் கிடைத்த எழுத்துக்களும், ஈரான் தேசம் வரையிலும் பரவியிருந்ததையும் ஆராய்ச்சியாளர்கள் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இதே எழுத்துக்கள் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் அகழ்ந்து எடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளிலும் அவற்றில் இருந்த பொருள்களிலும் காணப்படுகின்றன.

இதை எல்லாம் பார்க்கும் போது தமிழ் மொழியின் எழுத்துக்கள்தான் அந்த நாளில் அவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி அறிஞர்கள் ஊகிக்கிறார்கள். இதை மொழி வல்லுனர்கள் மேலும் நன்கு ஆராயவேண்டும். தமிழ்ப் பண்பாட்டையும் அதன் தொன்மையையும் ஆராய்ச்சி செய்து நமது வரலாற்றைப் புதுப்பித்து நாமே எழுதவேண்டும்.

வான சாத்திரத்தின் துணையால் இராமனின் காலம் 6400 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இராமனின் வரலாற்றைக் காவியமாக்கி இருக்கிறார் வான்மீகி. இராமனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட பாரத நாட்டு அரசர்களை எல்லாம் கூட்டி தசரதர் ஆலோசனை நடத்துகிறார் என்ற செய்தி இராமாயணத்தில் வருகிறது. இந்த ஆலோசனை சபையில் தமிழ் மன்னனான பாண்டியனும் கலந்து கொள்கிறான். அவனுடைய ஆலோசனையையும் தசரதர் கேட்கிறார்.

அனுமன் சீதையைத் தேடி இலங்கைக்குப் போகிறான். அவனுக்குத் தென் திசையில் செல்லும் வழிகள் பறறி விளக்கும் போது ''தமிழ்நாட்டின் இயற்கை அழகிலும், தமிழின் இனிமையிலும், அதன் பண்பாட்டிலும் மயங்கி நின்று விடாதே'' என்று அவனை எச்சரித்து அனுப்பியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இராவணன் சபையில் கும்பகர்ணனும் இராவணனும் உரையாடுகிறார்கள். இந்த உரையாடலைப் பற்றி வான்மீகி குறிப்பிடும்போது ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இராவணனும் கும்பகர்ணனும் பேசிக்கொண்ட மொழி ''தமிழ்'' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இராமன் வாழ்ந்த காலத்திலேயே 6400 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ்ப் பண்பாடு மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்பதைப் பற்றி வான்மீகி பேச வேண்டுமானால், தமிழ்ப் பண்பாடு அந்த அளவிற்கு வளர எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அது தோன்றி இருக்க வேண்டும்?

வான்மீகியின் காலத்திற்குமுன்னால் மூவாயிரம் ஆண்டுகளாவது ஆகியிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி அறிஞர்கள் சொல்கிறார்கள். குறைந்தபட்சம் தமிழ்ப் பண்பாடு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே சிறப்பாக இருந்திருக்க வேண்டும் என்பதை இதன் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

நவீன வானசாத்திரம் நமது தமிழ்ப்பண்பாட்டின் தொன்மையை உலகம் தெரிந்துகொள்வதற்கு உதவி செய்திருக்கிறது.

வான சாத்திரத்தின் மூலமாகக் கணித்திருக்கும் இந்த உண்மைகளை யாரும் கற்பனை என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

## பழந்தமிழரின் வாழ்வும், வணிகமும்

பழந்தமிழ் மக்களின் சிற்பக் கலையைப் பற்றி, கட்டிடக் கலையைப்பற்றி விவரித்துக் கூற வேண்டியதில்லை. தமிழ்நாட்டின் பழம்பெரும் கோயில்களும், பேரூர், கிருஷ்ணாபுரம், ஆவுடையார்கோயில் முதலிய ஊர்களில் இருக்கும் கோயில்களில் காணும் சிற்ப அற்புதங்களும், இன்னும் மாமல்லபுரம் முதலிய இடங்களில் உள்ள சிற்ப நுட்பங்களும் சித்தன்னவாசல், தஞ்சை பெரிய கோயில் முதலிய இடங்களில் உள்ள ஓவிய அற்புதங்களும், பழந்தமிழ் மக்கள் உபயோகித்த நகைகளும், தமிழகத்தின் சிற்ப வேலைப்பாடுகளுக்கும் தமிழ் மக்களின் கலை ஞானத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.



உலகத்தின் பல பகுதிகளில் இருந்து வரும் சிற்ப, சித்திரக் கலை நிபுணர்கள் தமிழ் மக்களின் கலைத் திறமையைப் பார்த்து வியந்து போற்றுகிறார்கள். ''நெடுநிலை மாடத்து இடைநிலைத் திருந்துழி'' என்றும், ''நிரைநிலை மாடத்து அரமியம் ஏறி'' என்றும்''வேயா மாடமும்'' என்றும் இளங்கோ அடிகள் தமிழ் மக்கள் பல மாடிக் கட்டிடங்களைக் கட்டி அதில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி தமிழனின் கட்டடக் கலையைச் சிறப்பித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் தொழில் சிறப்பு, சிலப்பதிகாரம் இந்திர விழா எடுத்த காதையிலும, மணிமேகலை கச்சிமாநகர் புக்க காதையிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பட்டினும், மயிரிலும், பருத்தி நூலிலும் கட்டு நுண்வினையைக் கற்றவர்கள் தமிழ் மக்கள்.

கிழியினும் கிடையிலும் மிக தொழில் பல பெருக்கியவர்கள் தமிழர்கள். பாலாவி அன்ன'' மெல்லிய ஆடை நெய்தவர்கள் பண்டைய தமிழர்கள்.

தமிழ் மக்கள் அந்த நாளில் பிற நாட்டவருடன் செய்துவந்த வாணிபப் பெருக்கைப் பார்த்தால் தமிழ்நாட்டின் தொழில் முறையை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

அந்த நாளில் தமிழ் மக்கள் கப்பல் தொழிலில் சிறந்து விளங்கினார்கள். கடல் கடந்துசென்று வாணிகம் செய்தார்கள். காவல் பிரிதல், களத்தான் பிரிதல் என்று பழந்தமிழ் நூலில் இதற்குச் சான்றுகள் இருக்கின்றன.

''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்னும் பழமொழி தமிழர்களின் கடல் கடந்த வாணிபத்தைக் குறிக்கிறது.

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பாபிலோன், எகிப்து, ரோம், கிரீஸ், சிரியா முதலிய நாடுகளுடன் தமிழ் மக்கள் சிறப்பாக வாணிபம் செய்து வந்ததை இக் காலத்து சரித்திர ஆசிரியாகள்



நன்கு ஆராய்ந்து பல நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள்.

அந்த நாடுகளுக்குத் தேக்கு, சந்தனம், தந்தம், தோகை, மிளகு, ஏலம் முதலிய பொருள்கள் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்டன என்பதற்கு ஏராளமான அகச் சான்றுகள் பழந்தமிழ் நூல்களில் இருக்கின்றன.

யவன மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இருந்த உறவுகள் பற்றி நிறையச் செய்திகள் தெரிகின்றன. யவனம் முதலிய ஹிப்ரு சொற்கள் தமிழிலும், தோகை முதலிய தமிழ்ச் சொற்கள் ஹிப்ரு மொழியிலும் கலந்திருப்பதை ஆராய வேண்டும்.

**தமிழரின் கடவுள் கொள்கை:**

ஆதியில் மனிதன் இயற்கையைக் கண்டு திகைத்தான். விண்ணையும், மண்ணையும் பார்த்தான். இடியையும், மின்னலையும், மழையையும், ஆறுகளையும் பார்த்து வியந்தான். உலகத்து ஜீவராசிகள் அவனுக்குப் பயத்தையும், பிரமிப்பையும் அளித்தன.

இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? இந்தப் பேருலக இயக்கத்திற்கு மூல ஆதாரம் என்ன? என்பதைப் பற்றி மனிதன் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினான். அதன் முடிவுதான் அவன் கடவுளைப் பற்றி எண்ணியது.

பழந்தமிழ் மக்கள் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும், அவர்கள் ஒரே தெய்வத்தை வழிபட்டு வந்தார்களா என்பது ஆராய்வதற்கு உரியது. தொல்காப்பியர் காலத்தில் தமிழர்கள் உருவ அடிப்படையில் பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர் என்பதற்குச் சில செய்திகள் அதில் இருக்கின்றன. அந்தக் காலத்தில் தெய்வங்கள் பற்றிய புராண வரலாறு எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

தொல்காப்பியத்துக்குப் பின் எழுந்த சங்க இலக்கியங்களில் தொல்காப்பியத்தில் காணப்படும் தெய்வங்களே பல வடிவங்களாகக் காட்சி அளிக்கின்றன.

திருவள்ளுவர் காலத்தில் ஒரே தெய்வக் கொள்கை தமிழ் மக்களிடையே வற்புறுத்தப்பட்டது. என்றாலும், பல தெய்வ நம்பிக்கை அவர்களிடமிருந்து மறைந்து விடவில்லை. திருவள்ளுவர் காலத்துக்குப் பின் நாயன்மார், ஆழ்வார் காலங்களிலும் ஒரே தெய்வக் கொள்கை இருந்தது. ஆயினும், சமயப் பூசல்களின் காரணமாக அந்தக் கொள்கை வலுவிழந்து கிடந்தது.

நமது கலை, இலக்கியப் பண்பாட்டு நலங்களையும், நம் தமிழ் நாட்டின் தொன்மையையும் ஒரு கணம் மீண்டும் எண்ணிப் பாருங்கள். உலகில் இருக்கும் மற்ற நாடுகளையும் பாருங்கள். மற்ற நாட்டு மக்கள் எல்லாம் காடுகளில் உழன்ற காலத்தில் நாம் நாடு கண்டோம். அரசியல் உணர்ந்திருந்தோம். செங்கோல் செலுத்தினோம். இலக்கியங்கள் படைத்தோம். இலக்கணம் செய்தோம். நல்வாழ்வுக்கு உரிய எல்லாத் துறைகளிலும் ஓங்கி இருந்தோம்.

தமிழின் உயர்வும், ஒழுங்கும், வளமும், பண்பாடும், தமிழர்களை மட்டுமல்ல, தாயகத்தை மட்டுமல்ல, பாரதத்தை மட்டுமல்ல, தரணி முழுவதையும் ஒரு நாள் உயர்த்தும் என்று உறுதியாக நம்பலாம். விரிந்த மனமும், விஞ்ஞானப்போக்கும், ஒற்றுமை உணர்வும், உன்னத நோக்கும், கடமையில் விழிப்பும், கலங்காத உழைப்பும், தளராத முயற்சியும் கொண்டு தமிழினத்தை உலக அரங்கில் உயர்த்தப் பாடுபடுவோம்!

[திருச்சியில் நடைபெற்ற தமிழர் பேரவையில் 22.7.79 அன்று ஆற்றிய உரையிலிருந்து தொகுக்கப்பெற்றது].



# அரசின் அறிவிப்புகள் ஆணைகள் ஆக்கப்பணிகள்

**16-7-'79 முதல் 31-7-'79 வரை**

*16—7—'79*

விரைவில் குழலிசைக்கு அரசுச் சார்பில் ஒரு கலைஞர் நியமிக்கப்படுவார். தமிழ் நாட்டியக் கலையை உலகெங்கும் பரப்பிடவும் நாட்டியக் கலையைக் கற்றுத் தரவும், அரசின் சார்பில் ஒரு கலைஞரை நியமிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியுள்ளார்.

*17—7—'79*

தமிழகத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் ரூ. 40 கோடிச் செலவில், பால் பெருக்குத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இதையொட்டித் தமிழக அரசு தேசிய பால்வள வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது என்று மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாமுகமது அவர்கள் தெரிவித்துள்ளார்.

*18—7—'79*

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவினையொட்டி வேலூரிலுள்ள அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரியினைத் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரி எனப் பெயரிடத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தஞ்சை நகரை அழகுபடுத்த மூன்றாண்டுத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தொ. கங்கப்பா அவர்கள் தெரிவித்துள்ளார்.

*19—7—'79*

தமிழகத்தில் 4 ஆயிரத்து 100 குழந்தைகள் காப்பகங்களைத் திறக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளது. ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு குழந்தைகள் காப்பகம் இருக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

*20—7—'79*

தமிழக அரசில் கலாச்சாரத் துறை என்ற தனியான துறை ஒன்றை அமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

குடிசைவாசிகளுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அவற்றை அவர்களுக்கே சொந்தமாக்கப் புதிய திட்டம் ஒன்றை அமல்படுத்துவது பற்றித் தமிழகஅரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ்.இராகவானந்தம் அவர்கள் தெரிவித்துள்ளார்

*21—7—'79*

தமிழ்நாட்டிலிருந்து சந்தனக்கட்டைகள் கடத்தப்படுவதைத் தடுக்க, ஆயுதம் தாங்கிய விசேஷ போலீசார் நியமிக்கப்படுவர் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம்.வீரப்பன் அவர்கள் கூறியுள்ளார்.

*22—7—'79*

மதுரையில் ரூ. 50 இலட்சம் செலவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூன்று நட்சத்திர ஓட்டல் கட்டுகிறது என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு எஸ்.ஆர். ராதா அவர்கள் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டுக்காகவும், சுற்றுலாப் பயணிகள் வசதியை முன்னிட்டும், மாநிலத்தில்

 பதிவு எண். M. 8676

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

**—தந்தை பெரியார்.**



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை—சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

**—பேரறிஞர் அண்ணா.**

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!

உள்ள சுற்றுலா மையங்களை இணைத்து விமானப்போக்குவரத்து நடத்தத் தமிழக அரசு உத்தேசித்துள்ளது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

23—7—'79

விற்பனைப் பொருள்களுக்குப் பலமுனை வரி இருப்பதை அகற்றி ஒருமுனை வரி விதிப்பது குறித்து ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

24—7—'79

தமிழகப் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டத்துக்காக இந்த ஆண்டு ரூ.250 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவு இம்மாதம் வழங்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு பெ. சவுந்தரபாண்டியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

25—7—'79

தருமபுரி மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 104 பள்ளிக் கட்டடங்கள் கட்ட தமிழக அரசு ரூ. 17.20 இலட்சம் ஒதுக்க உத்தரவிட்டுள்ளது.

26—7—'79

குடிசைவாசிகளுக்கு மாதம் இரண்டரை ரூபாய் கட்டணத்தில் முன் பணமின்றி மின்சார இணைப்பு வசதி செய்து தரப்படும் என்று -மாண்புமிகு ·மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்துள்ளார்.

விவசாயிகளுக்குக் கூட்டுறவுத்துறை மூலம் ரூ. 2,141 கோடி ரூபாய் குறுகிய காலக் கடனாக இந்த ஆண்டு அளிப்பதென்று தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

27—7—'79

நீலகிரி மாவட்டத்திலுள்ள ''தசபாலஞ்சிகா'' என்னும் சாதியினரை பிற்பட்டோர் வகுப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கோவை மாவட்டத்திலுள்ள ''தசபாலஞ்சிகா'' இனத்தினர் ஏற்கெனவே பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆட்டோ ரிக்ஷாக்களில் வேகத்தைக் கட்டுப்படுத்தும் மீட்டர் பொருத்தினால் தான் புதிதாக உரிமம் வழங்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள 110 நகராட்சிகளிலும் உடனடியாக 'டவுன்பஸ்' சர்வீஸ்களை ஏற்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலமாக இந்த நகரசபைகளின் 20 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்குப் பஸ் வசதி ஏற்படும். கிராமப்புறங்களில் பஸ் வசதிகளை அதிகரிப்பதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக 476 கிராமப்புற பஸ் ரூட்களை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக சுமார் 18 இலட்சம் மக்கள் வசிக்கும் கிராம ஊராட்சிகள் பயன் பெறும். இத்தகவல்களை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்கள்.

28—7—'79

கல்வித்துறை இயக்ககத்தில் உடற்பயிற்சிக் கல்விக்காகவென்றே ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்துவதன் சாத்தியக் கூறுகள் பற்றித் தாம் ஆராய்வதாக மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கூட்டுறவுப் பணியாளர்கள் ஓய்வுபெறும் வயதை 55லிருந்து 58ஆக உயர்த்த கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் துணை விதிகளைத் திருத்த அரசு அனுமதித்துள்ளது என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்துள்ளார்.

29—7—'79

நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிவதற்கு 200 தலைமை ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் தலைமை ஆசிரியர்கள் ரூ. 450-800 சம்பள விகிதத்தில் நியமிக்கப்படுவார்கள். பி.டி.பட்டம் பெற்று அல்லது தமிழ்ப் பண்டிதர் பட்டம் பெற்று, செகண்டரி கிரேட் தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிகின்ற அனுபவம் உள்ள சீனியர் ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் நியமிக்கப்படுவார்கள்.

30—7—'79

மற்ற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளின் கிராமியக் கலை நிகழ்ச்சிகளையும், கலாச்சாரத் திருவிழாக்களையும் தமிழ்நாட்டில் நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியுள்ளார்.

31—7—'79

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழக அலுவலர்களைக் கண்காணிக்க லஞ்ச ஒழிப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு ஒன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது என்றும் போக்குவரத்துக் கழகங்களின் தலைவரின் கீழ் இவ்வமைப்பு செயல்படும் என்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

'ஊரக வளர்ச்சித் திருப்புமுனை

அடுத்த இதழ்

85367

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

